ந சுப்புரெட்டியாரின் நூற்றாண்டு விழா நினைவு பன்னாட்டு
ஆய்வுக்கருத்தரங்கில் வாசித்தளிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு

# ந சுப்புரெட்டியாரின் படைப்புகள்

## கலையும் கருத்தியலும்


பதிப்பாசிரியர்கள்

முனைவர் க முருகேசன்

முனைவர் சு இராமலிங்கம்











1916 2016

## ந சுப்பு ரெட்டியார் 100

*Centenary Committee Publications*

# ந சுப்புரெட்டியாரின் படைப்புகள்

## கலையும் கருத்தியலும்

பதிப்பாசிரியர்கள்:

முனைவர் க முருகேசன்
முனைவர் சு இராமலிங்கம்



எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று,
ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர்.
திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை
உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர்.
பல பல்கலைக்கழகங்களில்
சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி,
நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர்.
பல ஆய்வாளர்களை உருவாக்கியவர்.
வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர்.
136 [135 +1] நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015~2016)
108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும்
மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

ந சுப்புரெட்டியாரின் நூற்றாண்டு விழா நினைவு
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கில்
வாசித்தளிக்கப் பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு

ந சுப்பு ரெட்டியார் 100
*Centenary Committee Publications*

ISBN: 978-81-938927-8-7

*eBOOK* ~ *மின் நூல்*

# ந சுப்புரெட்டியாரின் படைப்புகள்

## *கலையும் கருத்தியலும்*

**ந சுப்புரெட்டியாரின் நூற்றாண்டு விழா நினைவு பன்னாட்டு**
**ஆய்வுக்கருத்தரங்கில் வாசித்தளிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு**


பதிப்பாசிரியர்கள்
முனைவர் க முருகேசன்
முனைவர் சு இராமலிங்கம்






1916 2016

**ந சுப்பு ரெட்டியார் 100**


*Centenary Committee Publications*

# ந சுப்புரெட்டியாரின் படைப்புகள்
**கலையும் கருத்தியலும்**



முதற்பதிப்பு – 2016
இரண்டாம் பதிப்பு - 2018

**PRICE: Rs.575.oo**

Published by:
**ந சுப்பு ரெட்டியார் 100**
*Centenary Committee Publications*
**AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040**

**ISBN: 978-81-938927-8-7**

9 788193 892787 >

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

[A MULTI-FACETED TAMIL SAVANT]

*Centenary Celebrations*

~~~~******~~~~

# நன்றியுரை

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை, பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு

## ந. சுப்பு ரெட்டியாரின் படைப்புகள் கலையும் கருத்தியலும்

எனும் பொருண்மையில் பன்னாட்டு ஆய்வுக்கருந்ததரங்கம் ஒன்றினை 1 சூலை 2016 அன்று நடாத்துவது குறித்து நூற்றாண்டு விழாக் குழு பேருவுகை கொள்கிறது.

கருத்தரங்கில் வரப்பெறும் ஆய்வுக்கட்டுரைகள் தமிழ்கூறும் நல்லுலகிற்கு பற்பல பலனுறு செய்திகளை வழங்கும் என எதிர்நோக்குகின்றோம்.

பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம் மிகச்சிறப்பாக நடைபெற நூற்றாண்டு விழாக் குழுவினரின் சிறுபங்கு இருப்பது குறித்து மகிழ்கின்றோம்.

பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கத்தின் அனைத்து அமைப்பாளர்களுக்கும், ஆய்வுக்கட்டுரைகள் நல்கிய பேராளர்களுக்கும், பிற பல, பிரபல ஏனைய நல்லன்பர்களுக்கும் நூற்றாண்டு விழாக் குழு மனமுவந்த வாழ்த்துகளை வழங்கி, நன்றி பாராட்டுகின்றது.

**நூற்றாண்டு விழாக் குழு**
~~~~



**டாக்டர் சி.ஏ. வாசுகி**
*செயலர் மற்றும் இயக்குநர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)*
*கோயம்புத்தூர் - 641 029*

# அணிந்துரை

தமிழன்னை செய்த தவப்பயனின் காரணமாகக் காலந்தோறும் நற்றமிழ் நாவலர்கள் பலர் தோன்றி இறவாப் புகழுடைய புது நூல்களை இயற்றி வருகின்றனர். இத்தகைய தமிழ்ச் சான்றோர் வரிசையில் ஈடும் இணையும் இல்லாதவராகத் திகழ்பவர் பேராசிரியர் முனைவர் ந. சுப்புரெட்டியார். நுணங்கிய கேள்வியராகவும் கூர்த்த மெய்ஞ்ஞானக் குரிசிலாகவும் விளங்கிய அப்பெருமகனாரின் சமயச் சார்பின்மைக்குச் சான்றாக அவர் படைத்த சைவ, வைணவ நூல்கள் திகழ்கின்றன. சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், சைவசமய விளக்கு, சைவமும் தமிழும், வைணவமும் தமிழும், வைணவ உரைவளம் ஆகிய நூல்கள் காலம் கடந்தும் அவர் புகழொளியை மண்மேல் மங்காது வீசச்செய்வன. காய்தல் உவத்தலின்றிச் செல்லும் பேராசிரியரின் நூற்கருத்துக்கள் கற்போர் மனதில் களிபேருவகையை ஏற்படுத்தும் தகையன.

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தை ஆராய்ந்து அகத்திணைக் கொள்கைகளையும் அவர் காட்டிய வாழ்வியலையும் சுவைபட எடுத்துரைத்த சொல்லின் செல்வர் பேராசிரியர் முனைவர் ந. சுப்புரெட்டியார், அமிழ்தினும் இனிய தமிழ்மொழியில் அறிவியல் துறைச் செய்திகளை ஆய்ந்துரைத்த அளப்பரும் செயலையும் ஆற்றியுள்ளார். அணுக்கரு பௌதிகம், அணுவின் ஆக்கம், அதிசய மின்னனு, அம்புலிப் பயணம், அறிவியல் தமிழ் ஆகிய நூல்கள் அவர்தம் அறிவியல் புலமைக்குக் கட்டியம் கூறுகின்றன.

உளவியல் செய்திகளை உணர்த்தும் வகையில் கல்வி உளவியல், கல்வி உளவியல் கோட்பாடுகள் ஆகிய நூல்கள் அமைந்துள்ளன. கல்வி நிலையங்களில் மாணாக்கர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளையும், கற்பித்தலில் மேற்கொள்ள வேண்டிய உத்திகளையும் இனிதாக எடுத்துரைப்பன மேற்கூறிய நூல்கள். பிற்காலப் புலவர்களான தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்க அடிகள் ஆகியோரின் வாழ்வியலையும் அருளியலையும் சுவைபட எடுத்துரைத்துள்ள பெருமகனார்.

பேராசிரியர் அவர்கள் திறனாய்வுக் கலையில் வல்லவர் என்பதைக் காட்டும் வகையில் அமைந்தன இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும், கண்ணன் பாட்டுத்திறன்,

கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி, மூவர் தேவாரம் புதிய பார்வை உள்ளிட்ட நூல்கள். இவர் மொழிபெயர்ப்புத் துறையிலும் வித்தகர் என்பதற்குச் சான்றாக வேமனர் என்ற நூல் திகழ்கின்றது.

தமிழில் அவர் தொடாத துறைகளே இல்லை என்னும் அளவிற்குத் துறைதோறும் தன் ஆய்வுப் பார்வையை ஆழச் செலுத்தி ஆழ்ந்தகன்றடங்கிய கொள்கைச் சான்றோராக விளங்கிய பேராசிரியர் முனைவர் ந. சுப்புரெட்டியாரின் படைப்புக்களை ஆராய்ந்து, அவற்றின் வழி வெளியாகும் கருத்துக்களை வருங்காலத் தலைமுறைக்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற வேட்கையின் விழைவாக **'ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள்: கலையும் கருத்தியலும்'** என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெறுகின்றது.

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தமிழ் அறிஞர்களுள் ஒருவராகத் திகழ்பவரான பேராசிரியர் முனைவர் ந. சுப்புரெட்டியாரின் பெயரும் சிறப்பும் தமிழ் உள்ளளவும் தரணியுள்ளளவும் கல்லில் எழுத்தாய்க் கங்குல் நீக்கும் கதிரவனாய் நிற்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

***"மகன் தந்தைக் காற்றும்உதவி இவன்தந்தை***
***என்நோற்றான் கொல்எனுஞ் சொல்"***

என்ற வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகையின் நான்மறைக்கு ஏற்பப் பேராசிரியரின் திருமகனார் திரு சு. இராமலிங்கம் அவர்களின் பெரும்பணி அமைவதைக் கண்டு வியப்படைகின்றேன். நூற்றாண்டு காணும் தந்தையின் தமிழ்ப்பணியையும் பெருமையையும் உலகறியச் செய்யும் வகையில் நூறு நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டு, அவற்றுள் ஒன்றை எம் கல்லூரித் தமிழ்த்துறையுடன் இணைந்து பன்னாட்டுக் கருத்தரங்கமாக நடத்த முன்வந்தமையை எண்ணி மகிழ்கின்றேன்.

தமிழகத்தில் உள்ள தலைசிறந்த கலை அறிவியல் கல்லூரிகளில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்ற கல்லூரியாக எம் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி விளங்குகின்றது. கொங்கு மண்டலத்தில் வாழும் மாணாக்கரின் அறிவை வளர்க்கும் அமுதசுரபியாகத் திகழும் எம் கல்லூரியின் தமிழ்த்துறை பன்னாட்டுக் கருத்தரங்குகளையும் தேசியக் கருத்தரங்குகளையும் பயிலரங்குகளையும் நடத்துவதில் முனைந்து செயல்பட்டு வருகின்றது எனில் அது மிகையாகாது. அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் ஆகிய நிதி நல்கை நிறுவனங்களுடன் இணைந்து சான்றோர்கள் போற்றும் வகையில் ஆண்டுதோறும் முன்னைத் தோன்றிய அன்னைத் தமிழின் அறிவுச் சுரங்கத்திலிருந்து சிந்தனைச் செம்பொன்னை அள்ளியெடுத்து ஆய்வு உரைகல்லில் தீட்டித் திக்கெட்டும் கொண்டு செல்கின்ற பணியைத் தலைமேற் கொண்டு செவ்வனே செய்து வருகின்றது. அந்த வரிசையில் ந. சுப்புரெட்டியார் 100 அறக்கட்டளையுடன் இணைந்து இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

இக்கருத்தரங்கை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்க ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறைத் தலைவருமான முனைவர் க. முருகேசன் அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். ஏற்கனவே பல கருத்தரங்குகளை நடத்திய அனுபவமும் திறமையுமுடைய அவர் இக்கருத்தரங்கையும் திட்டமிட்டு நடத்தியுள்ளார். கருத்தரங்கப் பணிகளைத் திறம்பட ஆற்றிய தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் என் பாராட்டுக்கள். பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் படைப்புகளை ஆராய்ந்து கட்டுரை வழங்கியுள்ள தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் ஆகியோருக்கு என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள். இக்கருத்தரங்க ஆய்வுக் கோவை பெரும்பேராசிரியர் அருங்கலைக்கோன் கலைமாமணி முனைவர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களின் படைப்புகளைப் பயிலத் தலைப்படுவோர்க்கு ஒரு கைவிளக்காய் அமையும் என்பது திண்ணம்.

அன்புடன்,

இடம் : கோயம்புத்தூா

நாள் : 20.06.2016

**(சி.ஏ. வாசுகி)**

**முனைவர் த. முரளீஸ்வரி**
*முதல்வர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)*
*கோயம்புத்தூர் - 641 029*



# வாழ்த்துரை

சீரிளமைத் திறம் குன்றாத தீந்தமிழ் மொழியில் தம் எண்ணங்களை எழுத்தோவியங்களாகத் தந்த எழுத்தாளர்களின் எண்ணிக்கைக்கு அளவில்லை. தம் உள்ளத் தடாகத்தில் மலர்ந்த செந்தாமரை அனைய செய்யுட்களைச் செந்தமிழ்த் தாயின் சீதளத் திருவடிகளுக்குக் காணிக்கையாக்கிய கவிஞர்கள் பலர். உணராத நுட்பத்தை உணரவைத்து, புரியாத மறைபொருளை மயக்கமின்றித் தெளிவித்த மதிமிக்க உரையாசிரியர்கள் பலர். தெவிட்டாத தமிழென்னும் தீங்கரும்பின் சாறெடுத்து அதனுடன் உவட்டாத ஆய்வென்னும் தேன்பிழிந்து கொடுத்த திறனாய்வாளர்கள் ஏராளம். இத்தகைய தமிழ் மரபில் தண்ணொளி வீசும் திங்கள் உள்ளளவும் தனக்கென ஓர் அடையாளத்தை அழுத்தமாகப் பதித்துச் சென்றுள்ளவர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்.

சமயம், தத்துவம், திறனாய்வு, உரை, மொழிபெயர்ப்பு, உளவியல், கல்வி, அறிவியல் என்று பல்வேறு துறைகளிலும் மிகச் சிறந்த நூல்களை இயற்றிய பெருமைக்கு உரியவர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். இவர் எழுதிய ஒவ்வொரு நூலும் இவரது ஆழ்ந்த புலமைக்குச் சான்றாதாரங்களாகத் திகழ்கின்றன. இத்தகைய சான்றோரின் நூற்றாண்டு விழா நினைவாகப் பன்னாட்டுக் கருத்தரங்கம் எம் கல்லூரித் தமிழ்த்துறையின் சார்பில் நடைபெறுவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. தம் தந்தையாரின் நினைவைப் போற்றும் வகையில் பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் மகன் திரு சு. இராமலிங்கம் அவர்கள் இப்பன்னாட்டுக் கருத்தரங்கை எம் கல்லூரித் தமிழ்த்துறையோடு இணைந்து நடத்துவது சிறப்பானது. அவருக்கு என் வாழ்த்துக்கள்.

பன்னாட்டுக் கருத்தரங்கம் நன்முறையில் நடைபெற திட்டமிட்டுச் செயல்களை மேற்கொண்ட தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க. முருகேசன் அவர்களையும் தமிழ்த்துறைப் பேராசிரியர்களையும் வாழ்த்துகின்றேன். தொடர்ந்து இதுபோன்ற பயனுள்ள கருத்தரங்குகளை நடத்தித் தமிழன்னைக்கு அணிசூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய பேராளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

வாழ்த்துக்களுடன்,

*இடம் : கோயம்புத்தூர்*

*நாள் : 22.06.2016*

**(த. முரளீஸ்வரி)**

**முனைவர் க. முருகேசன்**
*தமிழ்த்துறைத் தலைவர் மற்றும்*
*கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)*
*கோவை - 641 029.*



## பதிப்புரை

தமிழ் இலக்கியப் பரப்பில் தனக்கெனத் தனியிடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ள பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்களின் படைப்புக்களை மையமிட்டு **'ந.சுப்புரெட்டியாரின் படைப்புக்கள் : கலையும் கருத்தியலும்'** (International Conference on Art and Ideology of Dr.N.Subbu Reddiar) என்னும் பொருண்மையில் இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த்துறையின் செயல்பாடுகளுக்குக் கரங்கொடுக்கும் மலாயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறையுடன் இணைந்து 2013-ஆம் ஆண்டு '**தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளும் மாற்றங்களும்**' என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்திய வகையில் 445 ஆய்வுக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 4 தொகுதிகளாக வெளியிடப்பட்டன. மேலும் 2014-ஆம் ஆண்டு '**தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பாடுபொருள் மாற்றங்கள்**' என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தி 376 ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டு 3 தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 2015ஆம் ஆண்டு தமிழ்த்துறையும் மலாயாப் பல்கலைக்கழகமும், சென்னை உலகத்தமிழ் மற்றும் சோதிடவியல் ஆய்வுமையமும், முனைவர் மா.ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து '**தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்**' என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்திய வகையில் 435 கட்டுரைகள் தொகுக்கப்பட்டு 4 தொகுதிகளாக வெளியிடப்பட்டன.

மேற்கண்ட பொருண்மையில் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரைகள் நூலாக்கம் பெற்றுள்ளது. எழுதுகோலைத் திறக்க எண்ணம் இல்லாதவர்களுக்கு மத்தியில் எழுதவேண்டும் என்ற குறிக்கோளில் பங்களிப்புச் செய்துள்ள கட்டுரையாளர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்துவதற்கான அனுமதி வழங்கியும் ஊக்கசக்தியாக என்னை இயக்கியும் வருகின்ற எம் கல்லூரித் தலைவர் **முனைவர் மா.ஆறுச்சாமி** ஐயா அவர்களின் பொன்னார் திருவடிகளுக்கு என் பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தலைவர் பெருமானின் திருவுள்ளத்தில் எழுகின்ற எண்ணங்களை அப்படியே செயல்படுத்தும் எங்கள் செயலர் மற்றும் இயக்குநர் **டாக்டர் சி.ஏ. வாசுகி** அவர்கள் தமிழ்த்துறையின்மேல் தனிப்பட்ட பற்றும் நம்பிக்கையும் கொண்டு நெறிப்படுத்தி வருகிறார்கள். அணிந்துரை வழங்கியுள்ள அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் திருமகனார் **முனைவர் சு.இராமலிங்கம்** அவர்களிடம் இப்பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தலாம் என்று கருத்துத் தெரிவித்தபோது உடனே ஏற்றுக்கொண்டு தந்தையின் நூற்றாண்டு விழாவில் ஒரு நிகழ்வாக இக்கருத்தரங்கைப் பதிவுசெய்வதற்கு ஒப்புதல் அளித்து நூலாக்கத்திற்குப் பொருளுதவியும் வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கும் நூற்றாண்டு விழாக் குழுவுக்கும் என்னுடைய நன்றியை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பன்னாட்டுக் கருத்தரங்கின் ஆய்வுக்கோவைக்கு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்துள்ள இலண்டன் எழுத்தாளர் **திருமதி.ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்** அவர்களுக்கும், தொடக்க விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்துள்ள சென்னை எழுத்தாளர் **திரு.வி.மாலன்** அவர்களுக்கும் என் மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்வேறு வழிகளிலும் பெருந்துணை புரிந்து இக்கருத்தரங்கம் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்துள்ள எம் கல்லூரியின் முதல்வர் **முனைவர் த. முரளீஸ்வரி** அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்கு ஒரு பெருமை கிடைக்கிறது என்றால் அதற்கு விதையூன்றிய சிறப்புக்கு உரியவர் என்னுடைய நெறியாளர் **முனைவர் சு. ஞானப்பூங்கோதை** அக்கா அவர்கள். என் செயல்பாடுகளுக்கு உரமாகவும் நீராகவும் இருந்து உயிர்வளர்த்துக் கொண்டிருக்கும் அவர்களுக்குக் காலமெல்லாம் நான் நன்றி கூறக் கடமைப்பட்டவன்.

இப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள தமிழ்த்துறை ஆசிரியர் பெருமக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலாக்கப் பணிகளைச் சிரத்தையுடன் செய்தளித்த நண்பர் பிரடாக் பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் **திரு.யுவராஜ்** அவர்களுக்கு என் நன்றி உரியது. இப்பன்னாட்டுக் கருத்தரங்கத்திற்குக் கட்டுரைகளை வழங்கியுள்ள பேராளர்களுக்கும், என்னுடன் இருந்து உதவும் என்னுடைய உதவியாளருக்கும், மாணவர்களுக்கும், பல்வேறு நிலைகளில் தினைத்துணையளவு உதவி செய்திருப்பினும் அதைப் பனைத்துணை அளவு ஏற்றுக்கொண்டு நன்றி பாராட்டுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நன்றி.

அன்புடன்,

*இடம் : கோயம்புத்தூர்*

*நாள் : 25.06.2016*

**(க. முருகேசன்)**



1916 2016

# ந சுப்பு ரெட்டியார் 100

[A MULTI-FACETED TAMIL SAVANT]

*Centenary Celebrations*

நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நிகழ்வுறும்

## பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்

### தமிழ்த் துறை
### கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
### நடாத்தும்

### ந சுப்பு ரெட்டியாரின் படைப்புகள்
### கலையும் கருத்தியலும்

" தமிழின் துறைதோறும் தன் ஆய்வுப் பார்வையை ஆழச்செலுத்தி ஆழ்ந்தகன்று அடங்கிய கொள்கைச் சான்றோராக விளங்கிய பேராசிரியர் ந சுப்பு ரெட்டியாரின் படைப்புகளை ஆராய்ந்து, அவற்றின் வழி வெளியாகும் கருத்துக்களை வருங்காலத் தலைமுறைக்கு எடுத்துரைக்க வேண்டுமென்ற வேட்கையின் விழைவே அவர் படைப்புகள் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கிற்கு அடித்தளமாக அமைகின்றது."

பேராசிரியர் ந சுப்பு ரெட்டியாரின் 96 நூல்கள் தமிழ் இணையக் கல்விக்கழக (Tamil Virtual Academy) இணையதளத்தில் (www.tamilvu.org) நாட்டுடைமையாக்கப் பெற்ற நூல்களின் வரிசையில் இடம் பெற்றுள்ளன.

பேராளர்களின் கட்டுரை ஏதேனும் ஒரு படைப்பை மையமிட்டே அமைதல் வேண்டும்.

<u>International Conference</u>

## ART AND IDEOLOGY OF
## DR N SUBBU REDDIAR

**<u>Contact:</u>**
Prof Dr K Murugesan - Coordinator
Head - Dept of Tamil
Kongunadu Arts & Science College
Coimbatore - 641 029
Mobile: 94438 21419
Email: kavimurugu25@gmail.com

*www.nasubbureddiar100.in*

### கருத்தரங்க அமைப்புக்குழு : தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

| | |
|---|---|
| முனைவர் இரா. மணிமேகலை | முனைவர் க. பழனிவேல் |
| முனைவர் கு. முத்துக்குமார் | முனைவர் ஆ. சரவணன் |
| முனைவர் சு. சதீஷ்குமார் | முனைவர் ச. அரிச்சந்திரன் |
| முனைவர். மு. ருக்மணி | முனைவர் ந. இரஞ்சன் |
| முனைவர் மு. நாகராஜன் | முனைவர் த. பிரியா |
| | முனைவர் ஜெ. நிஷாந்தினி |

தொடர்புக்கு

| | | |
|---|---|---|
| முனைவர் கு. முத்துக்குமார் | : | 94439 34987 |
| முனைவர் ஆ. சரவணன் | : | 94884 43155 |
| முனைவர் சு. சதீஷ்குமார் | : | 98943 69079 |
| முனைவர் மு. நாகராஜன் | : | 90923 61536 |
| முனைவர் த. பிரியா | : | 99947 99191 |

குறிப்புகள் :

- கட்டுரையாளர்களுக்கு உணவு இடைவேளைக்குப் பின்பு அந்தந்த அரங்குகளில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- காந்திபுரம், இரயில்நிலையம், உக்கடம் ஆகிய பேருந்து நிலையங்களிலிருந்து துடியலூர், பெரியநாயக்கன்பாளையம் வரை செல்லும் அனைத்து நகரப் பேருந்துகளும் **கவுண்டர் மில் (G.N. Mills)** பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்லும்.

Estd 1973



## கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை
## ந. சுப்புரெட்டியார் 100 அறக்கட்டளை
## முனைவர் மா. ஆறுச்சாமி ஆராய்ச்சி நிறுவனம்
### இணைந்து நடத்தும்

### பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்

# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்

# International Conference on Art and Ideology of Dr. N. Subbu Reddiar

# அழைப்பிதழ்

| | | |
|---|---|---|
| இடம் | : | **கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,** கோயம்புத்தூர். |
| நாள் | : | 01.07.2016 வெள்ளிக்கிழமை |
| நேரம் | : | காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரை |

### கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர் க. முருகேசன்**
தமிழ்த்துறைத் தலைவர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் – 641 029
அலைபேசி : 94438 21419

**முனைவர் சு. இராமலிங்கம்**
ஒருங்கிணைப்புச் செயலாளர்
டாக்டர். ந. சுப்புரெட்டியார் 100 அறக்கட்டளை
சென்னை
அலைபேசி : 94445 42060

## தொடக்கவிழா நிகழ்ச்சி நிரல்

**இடம் : முனைவர் மா. ஆறுச்சாமி கலையரங்கம்**

**நேரம் : முற்பகல் 10.00 மணி**

இறைவணக்கம்

திருவிக்கேற்றல்

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | **முனைவர் க. முருகேசன்**<br>தமிழ்த்துறைத் தலைவர்<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை |
| தலைமையுரை | : | **டாக்டர் சீ.ஏ. வாசுகி**<br>செயலர் மற்றும் இயக்குநர்<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை |

**நூல் வெளியீடு**

கருத்தரங்க ஆய்வுக்கோவை

**ந. சுப்புரெட்டியார்: கலையும் கருத்தியலும்**

முனைவர் த. பிரியாவின் ஆய்வு நூல்

**இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் புதினங்களில் புலம்பெயர்ந்தோர் வாழ்வியல் சிக்கல்கள்**

| | | |
|---|---|---|
| போட்டிக் கட்டுரை பரிசளிப்பும், வாழ்த்துரையும் | : | **முனைவர் சு. இராமலிங்கம்**<br>ந. சுப்புரெட்டியார் 100 அறக்கட்டளை, சென்னை<br>**திரு. வி. மாலன்**<br>எழுத்தாளர், சென்னை<br>**முனைவர் த. முரளீஸ்வரி**<br>முதல்வர்<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை |
| சிறப்புரை | : | **திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**<br>எழுத்தாளர், இலண்டன் |
| நன்றியுரை | : | **முனைவர் க. பழனிவேல்**<br>துறைத்தலைவர் (சுயநிதிப்பிரிவு)<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோவை |

மொழி வாழ்த்து

**போட்டிக் கட்டுரைப் பரிசுகள்**

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.2500/- + தங்கப்பதக்கம் |
| இரண்டாம் பரிசு | ரூ.1500/- + வெள்ளிப்பதக்கம் |
| மூன்றாம் பரிசு | ரூ.1000/- + வெண்கலப்பதக்கம் |

## கருத்தரங்க அமர்வுகள்

| | | |
|---|---|---|
| தொடக்க விழா | : | 10.00 - 11.00 |
| தேநீர் இடைவேளை | : | 11.00 - 11.15 |
| அமர்வு - 1 | : | 11.15 - 1.00 |
| உணவு இடைவேளை | : | 1.00 - 2.00 |
| அமர்வு - 2 | : | 2.00 - 3.15 |
| தேநீர் இடைவேளை | : | 3.15 - 3.30 |
| அமர்வு - 3 | : | 3.30 - 5.00 |

## கருத்தரங்க அறைகள்

| | | |
|---|---|---|
| அறை எண் 1 | : | **முனைவர் மா. ஆறுச்சாமி கலையரங்கம்** |
| அறை எண் 2 | : | **கருத்தரங்க அறை** |

**மாநாட்டுக்குழுத் தலைவர்கள்**

**முனைவர் மா. ஆறுச்சாமி**
தலைவர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி

**டாக்டர் சீ.ஏ. வாசுகி**
செயலர் மற்றும் இயக்குநர்
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி

**ஆலோசனைக்குழுத் தலைவர்**

**முனைவர் த. முரளீஸ்வரி**
முதல்வர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி






# கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி

கோயம்பத்தூர் - 641 029

## தமிழ்த்துறை

ந. சுப்புரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு
விழாவினை முன்னிட்டு நடத்தும்

## பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்

ந சுப்புரெட்டியாரின் படைப்புகள்
கலையும் கருத்தியலும்

நாள்: 1 சூலை 2016







# ஆய்வுக்கோவை வெளியிடல்





ference on Art and Ideology of Dr. N. Subbu R
ADU ARTS AND SCIENCE COLLEGE









ARTS AND SCIENCE COLLEGE




கருத்தரங்கம் - 01.07.2016
படைப்புகள் : கலையும் கருத்தியலும்
Conference on Art and Ideology of Dr. N. Subbu Reddiar

# பொருளடக்கம்


1. **ம. துளசி** 1
தமிழ் இலக்கியங்களில் நீதி

2. **ந.கே. கோமதி** 7
வாழையும் வள்ளுவமும்

3. **ச. காஞ்சனா** 11
அகத்திணை பெண்கள்

4. **ஆ. சுமித்திரா** 15
களவில் பாங்கியின் மரபுகள்

5. **நா. தீபா** 20
கல்வி உளவியலில் உள்ளக் கிளர்ச்சியின்
தூண்டல்களும் கட்டுப்பாடுகளும்

6. **த. சரளாதேவி** 26
அறிவியல் நோக்கில் இலக்கியம்

7. **க. புஷ்பலதா** 31
ந.சுப்புரெட்டியாரின் நோக்கில் பழந்தமிழர்
திருமண முறைகள்

8. **மூ. சுதா** 37
அறிவுக்கு விருந்தும் கவிதை அனுபவமும்

9. **முனைவர் நயம்பு. அறிவுடைநம்பி** 42
ந.சுப்புரெட்டியாரின் வள்ளுவரின் வாழ்வியல்
சிந்தனைகள் - பன்முக ஆய்வு

10. **திருமதி அ. டெய்சி ராணி** 47
ந.சுப்புரெட்டியாரின் 'அறிவியல் நோக்கில் இலக்கியம்,
சமயம், தத்துவம்'

11. **சொ. பத்மநாபன்** 51
"வாழையடி வாழை" நூலில் கலையும் கருத்தியலும்

12. **முனைவர் கடவூர் மணிமாறன்** 57
அறிவியல் சிந்தனையாளர் அறிஞர் சுப்புரெட்டியார்

13. **முனைவர் ஆர். நிர்மலா தேவி** 63
முனைவர் ந.சுப்புரெட்டியின் நோக்கில் மானுடப்பிறப்பு

14. **லெ. கமலா** 69
பாவேந்தரின் பாட்டுத்திறன்

15. **த. சிவவிவேதா** 74
ந.சுப்புரெட்டியாரின் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை-சமூகநிலையும் பழக்க வழக்கங்களும்

16. **முனைவர் ம. வான்மதி** 78
ந.சுப்புரெட்டியார் கூறும் எண்களின் சிறப்பு

17. **ல.கு.சு. இராஜ்குமார்** 84
தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

18. **ரா. ஹேமாவதி** 89
வாய்மொழி வாசகமும் ந.சுப்புரெட்டியாரின் படைப்புகளும்

19. **ரெ. சுப்புலட்சுமி** 93
அம்புலி பயணத்தில் உவமை நயங்கள்

20. **முனைவர் சு. அட்சயா** 99
ந.சுப்புரெட்டியார் காட்டும் கற்றல் கற்பித்தல் உத்திகள்

21. **ஆ. தனுசு இராமச்சந்திரன்** 105
ந.சுப்புரெட்டியாரின் சித்தாந்தத் தெளிவு

22. **ஜோ. ஜார்ஜ்** 110
ந. சுப்புரெட்டியாரின் படைப்பியல் நோக்கில் பாஞ்சாலி சபதம்

23. **முனைவர் வெ.அ. நாகரத்தினம்** 116
ந.சுப்புரெட்டியாரின் ‘தமிழ் பயிற்றும் முறையில்’ இலக்கணம் பெறுமிடம்

24. **முனைவர் ரா. இராமச்சந்திரன்** 122
ந. சுப்புரெட்டியார் செவிமடுத்த கம்பனில் மக்கள் குரல்

25. **Dr. R. Vijayan** 127
Dr. Na.Subbu Reddiayar’s Religious Philosophical views on Saivam and Vaishnavam 127

26. **சி. அழகேசன்** 131
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் கவிதைச் செழுமையும் கவிஞர்களின் படைப்பாளுமையும்

27. **அ. ராஜி** 136
ந.சுப்புரெட்டியாரின் நூலிலிருந்து இலக்கியக் கொள்கைகளும் உத்திகளும்

28. **சே. கவிதா** 140
ந. சுப்புரெட்டியாரின் கம்பராமாயண காவியப் புலமை

29. **சு. மலர்விழி** 145
காலமும் கவிஞர்களும் கட்டுரைத் தொகுப்பில் “பாவை நோன்பு”

30. **இரா. அனுராதா** 148
ந. சுப்புரெட்டியார் பார்வையில் அறம்

31. **முனைவர் இரா. சாந்தி** 154
ந. சுப்புரெட்டியாரின் திறனாய்வுத் திறன்

32. **ப. நளினி** 159
அம்புலிப் பயணம்

33. **இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்** 164
ந. சுப்புரெட்டியாரின் ‘பாண்டி நாட்டுத் திருப்பதிகள்’ என்ற நூல் பற்றிய ஒரு சிறு குறிப்புரை

34. **முனைவர் ச. சகுந்தலை** 170
ந. சுப்புரெட்டியாரின் ஆய்வுச் சிந்தனையில் பட்டினத்தார்

35. **முனைவர் அ. இந்துமதி** 175
ந.சுப்புரெட்டியாரின் அகத்திணைக் கொள்கைகளில் அலர்

36. **த. பால்வின்சென்ட்** 180
ந. சுப்புரெட்டியாரின் ஆய்வுப் பார்வையில் கவிப்பேரரசு வைரமுத்து

37. **முனைவர் கா. இலட்சுமி** 185
ந.சுப்புரெட்டியாரின் படைப்புகள் - மின்னூலாக்கத்தின் பயன்பாடும் பரவலாக்கமும்

38. **முனைவர் லா. சார்லஸ்** 190
இராமலிங்க அடிகளாரின் பாடல்களில் ந.சுப்புரெட்டியாரின் கருத்தாக்கம்

39. **முனைவர் பா. உமாராணி** 195
ந. சுப்புரெட்டியாரின் கைக்கிளைப் பான்மை

40. **ம. மோகன் ஸ்டாலின் ராஜ்** 200
ந. சுப்புரெட்டியார் உணர்த்தும் அகப்பொருளில் அறம்

41. **து. முருகன்** 204
ந.சுப்புரெட்டியாரின் சைவநெறி

42. **ர. நித்யா** 210
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் ஆலய வழிபாட்டு முறைகள்

43. **முனைவர் இ. சேனாவரையன்** 216
ந.சுப்புரெட்டியாரின் தமிழ் மொழியமைப்பும் மொழிப்பயன்பாடும்

44. **முனைவர் மு. பழனியப்பன்** 222
கலியன் குரல் காட்டும் வைணவ முப்பொருள்களுள் ஒன்றான இதம்

*45.* **வா. காருண்யா** *228*
இலக்கண இலக்கிய நெறிகளில் ந. சுப்புரெட்டியாரின் குயில்பாட்டு

*46.* **சி. செந்தில் வடிவு** *233*
புரட்சிச் சிந்தனையும் புதுப் பார்வையும்

*47.* **அ. திலிப் ஏங்கல்ஸ்** *239*
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் கவிமணியின் திறனாயுந் திறன்

*48.* **கௌரி** *243*
அருங்கலைக்கோனின் அறிவியல் நோக்கு

*49.* **முனைவர் இரா. ஜெகதீசன்** *248*
தலைநாள் கொண்ட கோலங்கள்

*50.* **முனைவர் மு. நாகராஜன்** *252*
ந.சுப்புரெட்டியார் பார்வையில் பட்டினத்தடிகள்

*51.* **மு. பாண்டிச்செல்வி** *257*
பிரபந்தத்தில் ஆழ்வார்களின் பக்தி

*52.* **கீ.சு. தமிழரசி** *263*
ந.சுப்புரெட்டியாரின் திறனாய்வுத் திறன்

*53.* **முனைவர் வி. வசுமதி** *267*
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் கவி(ன்)மணி

*54.* **முனைவர் செ. ஆறுச்சாமி** *272*
ந. சுப்புரெட்டியார் பார்வையில் தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

*55.* **முனைவர் ந. இரஞ்சன்** *278*
ந. சுப்புரெட்டியாரின் திணைமயக்கத்தில்

*56.* **திருமதி. சு. பாத்திமா** *284*
ந.சுப்புரெட்டியாரின் ‘தமிழ்க்கடல் இராய.சொ.மயக்கநிலை

*57.* **இர. ஜோதிமீனா** *290*
வாழும் கவிஞர்கள் : ந. சுப்பு ரெட்டியார் பார்வை

*58.* **முனைவர் ம. கீதா** *295*
ந. சுப்புரெட்டியார் தமிழ் இலக்கியங்களில் காட்டும் நீதி

*59.* **ஆ. நித்யா** *301*
தொல்காப்பியம் காட்டும் திருமண முறைகளும் இல்லறவொழுக்கமும்

*60.* **முனைவர் க. பழனிவேல்** *307*
பன்முக நோக்கில் ‘என் அமெரிக்கப் பயணம்’

61. **இரா. வாணிபிரபா** 312
ந.சுப்புரெட்டியார் பார்வையில் சகோதரத்துவம்

62. **முனைவர். மு. ருக்மணி** 316
ந.சுப்புரெட்டியாரின் உணர்ச்சியின் தத்துவம்

63. **வே. அம்சவேணி** 321
ந.சுப்புரெட்டியார் "சைவ சமய விளக்கு" நூலில் சித்தாந்தக் கூறுகள்

64. **முனைவர் ச. அரிச்சந்திரன்** 326
ந. சுப்புரெட்டியார் பார்வையில் கவிதைப் படைப்பாக்கம்

65. **முனைவர் ஆ. சரவணன்** 331
ந. சுப்புரெட்டியார் பார்வையில் 'அர்ச்சிராகதி'

66. **முனைவர். நா. கீதா** 335
அர்த்த பஞ்சக ஞானம்

67. **முனைவர் எஸ். குமரன்** 340
ந. சுப்பு ரெட்டியார் உணர்த்தும் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

68. **முனைவர் த.பிரியா** 345
ந.சுப்புரெட்டியார் உள்ளத் தெருக்களில் உலா வரும் கவிதையனுபவம்

69. **மு. ஷாஜஹான்** 350
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் ஐந்திணை நெறிகளும் இடந்தலைப்பாடும்

70. **இரா. மாலினி** 354
ந.சுப்புரெட்டியார் பார்வையில் பாஞ்சாலி சபத கதை மாந்தர்கள்

71. **முனைவர் இரா. மணிமேகலை** 359
சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் - நூல் ஆய்வுரை

72. **முனைவர் ச. கவிதா** 365
பாரதி இயல் ஆய்வில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் பங்களிப்பு

73. **முனைவர் கு. முத்துக்குமார்** 370
ந. சுப்புரெட்டியாரின் மெய்யியல் பார்வை

74. **வெ. மைதிலி** 376
ந. சுப்புரெட்டியாரின் கவிதைச் சிந்தனைகள்

75. **முனைவர் சு. சதீஷ்குமார்** 379
ந.சுப்புரெட்டியார் காட்டும் திருக்கோயில் தத்துவம்

76. **முனைவர் ஜோ. சரவணன்** *385*
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் முறைமை

77. **திருமதி சே. அமலி லூசியா** *391*
ந.சுப்புரெட்டியார் காட்டும் புறங்கொடாப் போர்வீரன்

78. **முனைவர் பொருநை. க. மாரியப்பன்** *397*
ந.சுப்புரெட்டியாரின் அறிவியல் தமிழ் - பொதுப்பார்வை

79. **முனைவர் சு. ஞானப்பூங்கோதை** *403*
ந.சுப்புரெட்டியாரின் பாண்டி நாட்டுத் திருப்பதிகள் : ஒரு மீள்பார்வை

80. **முனைவர் க. முருகேசன்** *409*
ந.சுப்புரெட்டியார் காட்டும் திருநாம மகிமையும் திருவடிச் சிறப்பும்

# 1. தமிழ் இலக்கியங்களில் நீதி

**ம. துளசி**
*ஆய்வியல் நிறைஞர்*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*சேர்க்காடு.*

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில், சிறந்த தமிழ் அறிஞர்களை வரிசைப்படுத்தும் போது, அதில் நிரந்தர இடத்தில் இருப்பவர்களில் “தமிழ் செம்மல் கலைமாமணி பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியர்” அவர்களும் ஒருவர் என்றால் மிகையாகாது. அவர் தம் அறநூல்களின் தொகுதியில் இருந்து நீதியைக் கையாண்டுள்ள விதத்தைக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

அறம், பொருள் என்ற சொற்கள் ஒரு பொருள் பயப்பன போல் தோன்றுகின்றன. அவை வேறு, வேறு பொருள்களைத் தெரிவிப்பன போலவும் தோன்றுகின்றன. நுணுகி ஆராய்ந்தால் அறம் என்பது தரும சாத்திரங்களில் கூறப்பெறும் உண்மை என்பதும் நீதி என்பது நீதி சாத்திரங்களில் நுவலப்பெறும் உண்மை என்பதும் தெளிவாகும். தரும சாத்திரங்களில் நுவலப்பெறும் உண்மைகள் என்றும் மாறாதவை. நீதி சாத்திரங்களில் நுவலப்பெறும் உண்மைகள் காலத்திற்கு காலம் மாறக் கூடியவை என்றும் பொருள்படும்.

செங்கோலாட்சி செய்யும் மன்னனை வள்ளுவர் பெருமான் இறைவனோடு ஒக்க வைத்துப் பேசுவதை,

> ***“முறைசெய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்கு***
> ***இறையென்று வைக்கப் படும்”*** ***(குறள் - 388)***

என்ற குறளால் அறியமுடிகின்றது.

## அரச நீதி முறைகள்

அரசனின் இன்றியமையாமையைப் பண்டையோர் கண்டு உணர்ந்தனர். உடலாற்றல், அறிவாற்றல், காத்தற் பண்பு முதலியவற்றால் மேம்பட்டு நிற்கும் வீர வினைஞனை வேண்டினர். இத்தகுதிகள் அமைந்தவன் தான் தமக்குத் தக்க காவலன் ஆவான் என்று துணிந்தனர். “காவலன்” என்ற சொல் ஒன்றே அவர்தம் கருத்தினை அறிவுறுத்தி நிற்கும். இங்ஙனம் அரசனின் இன்றியமையாமையை உணர்ந்தனர். இதனை, மோசிகீரனார் என்ற சங்கச் சான்றோரின்,

> ***“நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே***
> ***மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்***

*அதனால், யான் உயிர் என்பது அறிகை*
*வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே'' (புறம் - 186)*

என்ற பாடலடிகள் வழி அறியலாம். இப்படித் தான் உலகில் எல்லாப் பகுதிகளிலுமுள்ள அரச பரம்பரை தோன்றி இருக்க வேண்டும். உயிரும் உடம்பும் கூடி நின்ற வழியும் உயிர்க்குயிராய் நின்றியக்கும் திருஉருவம் போல் அரசமுறை இன்றியமையாதலால், அதனைச் செலுத்தும் தானே உலகிற்கு உயிராதலை அறிகின்றான் அரசன். உயிர் தான் நிற்கும் உடம்புக்கு உளதாகும் நோயை நுகர்ந்தும் அதனைப் பேணுகின்றது. அது போலவே, அரசனும் உலகு புரத்தற்கண் உள்ள துன்பம், அனைத்தையும் தான் ஏற்று அதனைக் காக்கின்றான் இதனை அரசன் தன் கடமையாகவே கொள்கின்றான்.

மாநிலம் காக்கும் மன்னன் உண்மையான காவலனாக இருப்பின் அவன் அறம் காக்கும் அரசனாகின்றான் என்பது திருத்தக்க தேவரின் கருத்து. மனுநீதிச் சோழனைச் சிலப்பதிகாரம்,

*''வாயிற் கடைமணி நடுநா நடுங்க*
*ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்*
*அரும் பெறற் புதல்வனை ஆழியில் மடித்தோன்''*
*(சிலப் - வழக்குரை, 53-55)*

என்று நமக்கு அறிமுகப்படுத்துகின்றது. இளவரசன் தேரின் மீது உலாப் போகுங்கால் இளைய ஆண்கன்று ஒன்று தேர்க்கால் இடைப்புகுந்து இறந்துபடுகின்றது. அதற்கு அரசன் தன் மகனுக்கு விதித்த தண்டனை இது,

*''ஒருமைந்தன் தன் குலத்துக்(கு)*
*உள்ளான் என் பதும் உணரான்*
*தருமம் தன் வழிசெல்கை*
*கடனென்று கடன்மைந்தன்*
*மருமம்தன் தோழி*
*உறஊர்ந்தான் மனு வேந்தன்''*
*(பெரிய புரா - திருநகரச்சிறப்பு - 36)*

என்று சேக்கிழார் காட்டுவர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் ஆட்சியை,

*''தண்புனல் பூசல் அல்லது நொந்து*
*''களைக வாழி வளவ''! என்று நின்*
*முனைதரு பூசல் கனவினும் அறியாது*
*புலிபுறங் காக்கும் குருளை போல*
*மெலிவில் செங்கோல் நீ புறங்காப்ப*
*பெருவிறல் யாணர்த் தாகி'' (புறம் - 42)*

என்று வியந்து பாராட்டுவர் இடைக்காடனார் என்ற நல்லிசைப் புலவர். ''நின் நாட்டில் குளிர்ந்த நீர் ஓடையில் செல்லும் போது உண்டாகும்

ஒலியல்லது போர்க் காரணமாக நினது படையுண்டாகும் ஒலி கனவிலும் காண முடியாது. புலி தன் குட்டியைப் பாதுகாப்பது போல, குறைவில்லாத நின் செங்கோலால் நீ நாட்டைப் பாதுகாக்க பெரிய விசேடத்தையுடைய புது வருவாயையுடையது என்பது இப்பாடற்பகுதியின் கருத்தாகும்.

## நாட்டின் பொருள் வளம்

நீதி வழுவா நெறிமுறையில் அரசன் நாட்டு வளத்தைப் பெருக்குதல் அவனது தலையாய கடமையாகும். தமிழகத்தின் சிறந்த முக்கியத் தொழில் வேளாண்மை என்னும் பயிர்த்தொழில் ஆகும். இல்லறம், துறவறம் என்னும் இரு வகை அறமும் நாட்டில் நிலை பெறுவதற்கும், அரசன் வெற்றி பெற்று விளங்குவதற்கும் வேளாண்மை இன்றியமையாதது என்று தமிழர்கள் கண்டனர். இதனால் அக்காலத்தில் தமிழகத்தை ஆண்ட அரசர்கள் வேளாண்மைக்கு முன்னுரிமை தந்தனர். இதனால் நாட்டின் நீர்வளம், நிலவளம் சிறந்தது. சான்றோரும் உறையும் வண்ணம் உயர்ந்து நின்றது. ஒரு பெண்யானை படுத்துறங்கும் சிறிய இடத்தில் விளைந்த விளைபொருள்கள் ஏழு களிறுகட்குத் தேவைப்படும் உணவாயிற்று.

***"ஒருபிடி படியும் சீறிடம்***
***ஏழுகளிறு புரக்கும் நாடு கிழ வோயே" (புறம் - 40)***

இது சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் மீது ஆவூர் மூலங்கிழார் பாடிய பாடற் பகுதியாகும். இதனால் அக்கால நாட்டின் நலம் நன்கு விளங்குகின்றது. விளைபொருள்கள் மலிந்து "நெல்லும், நீரும் எல்லார்க்கும் எளியன" வாக நிறைந்து செழித்தமையால் வருகின்ற விருந்தினர்க்கு வேண்டும் உணவைத் தந்து அவர்கள் உண்டு மகிழ மக்கள் கண்டு மகிழ்ந்தனர்.

குழிந்த நிலத்தில் நீரை ஒன்று கூட்டினாலன்றி நெல் முதலியவற்றை விளைத்து உணவுப் பொருள்களை ஆக்கிக் கொள்ள இயலாது. ஆதலின் நீர்வளம் பெருகச் செய்தாரே கடமையுணர்ந்த அரசர்களாவர் இதனைச் செவ்வனே உணர்ந்த அரசர்கள் நீர்வளம் பெருக்கினார்.

***"புனிறுநீர் குழவிக் கிலிற்று முலை போலச்***
***சுரந்த காவிரி மரங்கொல் மலிநீர்***
***மன்பதை புரக்கும் நன்னாட்டுப் பொருநன்" (புறம்-18)***

என்று கோவூர்கிழார் சோழன் - நலங்கிள்ளியைக் குறித்த பாட்டில் கூறுவர்.

## மூவேந்தரின் ஆட்சி முறை

சேர, சோழ பாண்டியர்களின் ஆட்சிமுறை பற்றிச் சிலப்பதிகாரத்தில் குறிப்புகள் கிடைக்கின்றன. சோழ நாட்டு ஆட்சி முறையைப் பற்றி வீரபத்தினியாம் கண்ணகி வாய் மொழியாக

இளங்கோஅடிகள் பேசுகின்றார். கணவன் அநியாயமாய்க் கொலையுண்டதைக் கேட்ட கண்ணகி தலைவிரிக் கோலமாய் அழுத கண்ணீரோடும் ஏந்திய சிலம்போடும் பாண்டியன் முன்சென்று நிற்கின்றாள். அவள் நிலையைக் கண்ட மன்னன்,

*"நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்*
*யாரை யோ நீ மடக்கொடி யோய்"*
*(சிலப் - வழக்குரை - அடி - 48 -49)*

என்று வினவுகின்றான். ஊனும் உயிரும் துடிக்கத் தான் வந்த காரணத்தை இன்னும் உய்த்துணராமல் வேந்தன் விளம்பிய வெற்றுஉபசார மொழிகளைச் செவிமடுத்த வீரக்கண்ணகி,

*"தேரா மன்னா, செப்புவ துடையேன்"*

என்று பளிச்சென்று மறுமொழி தந்து பேசுகின்றாள். இந்தப் பேச்சில் சோழ நாட்டு அற வழி ஆட்சி முறைக்கு எடுத்துக்காட்டாக பின்வருவனவற்றைக் கூறுகிறார்.

திருவாரூரைத் தலைநகராக் கொண்டு ஆண்டு வந்தவன் மனுநீதிச்சோழன். ஒரு சமயம் பசுவொன்று ஆராய்ச்சி மணியைப் பற்றி அடிக்கின்றது. அதன் கன்று அரசகுமரனின் தேர்க்காலில் சிக்கி உயிர் இழந்ததை அறிகின்றான். அரசன் தன் எதிரே மகனைத் தேர்க்காலில் இட்டு தன் நீதி வழுவா நெறியினை உலகிற்கு உணர்த்துகின்றான். இந்த வரலாற்றை,

*"வாயிற் கடைமணி நடுநா நடுங்க*
*ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான் தன்*
*அரும்பெறற் புதல்வனை ஆழியில் மடித்தோன்"*
*(சிலப் - வழக்குரை காதை - அடி 53-55)*

என்று இரத்தினச் சுருக்கமாகச் சோழ நாட்டின் நீதிமுறையைத் தெரிவிக்கின்றாள் கண்ணகி. அறநெறி பிறழ்ந்த மன்னனுக்குத் தன் நாட்டின் அறமனம் கமழும் புகழை எடுத்துக் கூறுகின்றாள். மேலும் மதுராபுரித் தெய்வம் "கீரந்தை" என்ற ஓர் ஏழை அந்தணனின் வாழ்வில் நேரிட்ட நிகழ்ச்சியொன்றினைக் கூறுவாள். "இந்த அந்தணன் ஒரு சமயம் காசித் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டான். அஃதறிந்த அவனுடைய இல்லக் கிழத்தி கண்கலங்கினாள். "என் ஆருயிர்த்துணையே, அச்சம் வேண்டா, பாண்டியன் நல்லாட்சி நின்னைக் காக்கும். அதனினும் சிறந்த காவல்வேலி இல்லை" என்று ஆறுதல் கூறிச் செல்லுகின்றான். மறையோன் தன் மனையாளுக்கு மொழிந்த ஆறுதல் மொழியை நகர் சோதனைக்காக நள்ளிரவில் வேற்றுருவுடன் வந்திருந்த மன்னன் எவ்வாறோ கேட்டிருந்தான். அன்று முதல் அரசன் அப்பார்ப்பனன் இல்லத்திற்கு ஏதம் எதுவும் நேரா வகையில் கண்கணித்து வந்தான். நாட்கள் பல உருண்டோடின. ஓரிரவு நகர் சோதனைக்கு வந்த வேந்தன், கீரந்தை இல்லத்தில் பேச்சரவம் எழுந்ததைக் கவனித்தான். சற்றே ஆராயது கதவைத் தட்டினான்.

திருத்தலப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியிருந்த கீரந்தை ''கள்வனோ'' என ஐயுற்றான்'' அன்று பாண்டியன் ஆட்சி நம்மைப் பாதுகாக்கும் என்றீர்கள்! இன்று அது காவாதோ? என்றாள், அந்தணன் மனைவி. இப்படி விபரீதம் நேரும் என்பதை உணர்நத மன்னன் அக்கம் பக்கத்திலுள்ள பல வீடுகளிலும் கதவுகளையும் தட்டி விட்டு அரண்மையை அடைந்தான்.

மறுநாள் கதவு தட்டப்பெற்ற இல்லங்கட்குரியவர்கள் யாவரும் மாறன்முன் சென்று தம் இல்லத்துக் கதவினைக் கள்வன் தட்டினதாக முறையிட்டனர். மக்களின் முறையீட்டினைக் கேட்ட மன்னன், கதவைத் தட்டின கள்வனைத் தண்டிப்பேன் என்று கூறி உள்ளே சென்றான். துண்டித்த கையனாய் வெளியில் வந்து ''இதோ கதவைத் தட்டின கைக்குத் தண்டனை!'' என்று கூறினான். இதனைக் கண்டு கீரந்தையும் ஏனையோரும் பதைபதைத்தனர். ''எங்கள் வேந்தன் கையோ வெட்டுண்டது! வச்சிராயுதம் ஏந்திய இந்திரன் உச்சியில் வாளையுடைத்த எங்கள் மன்னன் கையோ துண்டாவது! என்று உயிர் துடித்தனர். ''கையிழவாக் காவலனோ கை இழப்பது!'' என்று கலங்கிக் கதறினர். மக்கள் யாவரும் ஒன்று கூடி பாண்டியனுக்குப் பொற்கைப் பூட்டினார்கள், ''பொற்கைப் பாண்டியன்'' என்று பெயர் பெற்றுத் திகழ்ந்தான் பாண்டியன். இத்தகைய மேலோர் மரபு பாண்டியர் மரபு'' என்று கூறினாள் மதுராபுரித் தெய்வம்.

இந்த வரலாறு ''பழமொழி'' என்ற நூலிலும் குறிப்பிடப் பெற்றுள்ளது.

***''எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித்***
***தனக்குக் கரியாவான் தானாயத் - தவற்றை***
***நினத்துதன் கைகுறைத்தான் தென்னவனும் காணார்***
***எனச்செய்யார் மாணா வினை'' (பழமொழி - 76)***

என்ற பாடலடிகளில் இந்த வரலாற்றைக் காணலாம்.

## நீதி வழங்குதல்

திருவள்ளுவர் காலத்திலும் அவர் காலத்திற்கு முன்பும் முடியாட்சியே நடைமுறையிலிருந்து. இந்தக் காலங்களில் நீதி வழங்குவதைச் சில சமயம் அரசனே மேற்கொண்டிருந்தான். ஆனால், நீதி வழங்குதற்கு அறங்கூறு அவையங்களும் இருந்தன என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

அரசன் நீதி வழங்கினும் அறநூல்களின் அடிப்படையைக் கொண்டே வழங்கியதாக அறியக் கிடக்கின்றது.

அரசனே நேர்நின்று நீதி வழங்கினான் என்பதைப் பழமொழியிலுள்ள ஒரு பாடலால் அறிய முடிகின்றது. பாடல் கரிகாற் பெருவளத்தான் என்ற சோழ வேந்தனைப் பற்றியது. ஒரு சமயம் முதியோர் இருவர் தம்முள் மாறுபட்டு வழக்கைத் தீர்க்கும் பொருட்டு

இவனிடம் வந்தனர். இளம் பிராயத்தானான இவனைக் கண்டு இவன் "இளையவன்" வழக்கின் முடிவை ஆராயும் அறிவு நிரம்பப் பெறாதவன்" என்று கருதினர் முதியோர். இதனைக் குறிப்பால் உணர்ந்த கரிகாலன் அவர்களை மறுநாள் வருமாறு பணித்தான். தானும் மறுநாள் முதியவன் போல் வேடம் பூண்டு நரைமுடியுடன் அவைக்கு எழுந்தருளி நீதி வழங்கினான். இதனை,

***"உரைமுடிவு காணான் இளமையோன் என்ற***
***நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்***
***சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை***
***கல்லாமல் பாகம் படும்"***
***(பழமொழி - 6 (கழகப் பதிப்பு)***

என்ற பழமொழிப் பாடலால் அறியலாம்.

முறை செய்தல் ஒருபாற்கோடாது கோலாச்சுதல் அறநூலும், நீதி நூலும் சொல்லும் நெறியின் அடிப்படையில் நீதி கூறுதல், வழக்கு தொடுத்தோர்(1) உரை முடிவு காணான் (2) இளையோன் என்ற இரண்டு குறைகளையும் (1) முதியவன் போல் கோலம் கொண்டு சொல் திறமையினாலும் (2) நரை முடித்தலாலும், இளமையை மறைத்தலாலும் நிறைவு செய்தான், சோழ வேந்தன்.

## முடிவுரை

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியர் அவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய சிறந்த தமிழ் ஆர்வலர். அவர் இலக்கியங்கள், மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை தூண்டும் வகையிலேயே இருப்பது மிகவும் சிறப்பு. அரசர்கள் நீதி வழங்கிய முறையையும், நாட்டின் பொருள் வளம் பற்றியும், மூவேந்தர்களின் ஆட்சிமுறை பற்றியும், நீதி வழங்கும் அரசர்கள் எவ்வாறெல்லாம் நேர்மையாக நடந்து கொண்டனர் என்பது பற்றியும், நீதியின் பால் அரசர்கள் கொண்டிருந்த ஊற்றத்தையும் சிறப்பாக இவரது நூலுள் ந. சுப்பு ரெட்டியார் விளக்கியிருக்கிறார் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

## துணை நூல்

- ந. சுப்புரெட்டியாரின் நூற்களஞ்சியங்கள் தொகுதி - 5
- தமிழ் இலக்கியங்களில் அறம் - நீதி - முறைமை
- அறிவுச் சுடர் பதிப்பகம்
  1, அக்ரகாரத் தெரு, திருமலை சமுத்திரம், பெத்த நாயக்கன் பாளையம் அஞ்சல், ஆத்தூர் தாலுக்கா, சேலம் மாவட்டம் - 636109. முதல் பதிப்பு - 2012.

# 2. வாழையும் வள்ளுவமும்

**ந.கே. கோமதி**
*ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*சேர்க்காடு, வேலூர்- 632 115.*

## முன்னுரை

தமிழ் மூதறிஞரும், அறிவியல் இலக்கிய ஆர்வலருமாக விளங்குகிற பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் ஆழ்ந்த தமிழறிவு படைத்தவர். விஞ்ஞான நூல்களைக் கற்றவர். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். தொன்மை எது? பழமை எது? என்ற பேதத்தைப் புரிந்தவர். தத்துவங்கள் சில நேரங்களில் நடைமுறை உண்மையோடு மோதுகின்ற சூழல்களை உணர்ந்தவர். பண்பாடு, நாகரீகம், கலை, கலாச்சாரம், இலக்கியம், அறிவியல் என்ற பல பெயர்களாலே அழைக்கப்படுகிற செயற்பாடுகளின் ஒட்டு மொத்தக் கலவைதான் மனித வாழ்க்கை என்பதிலே நம்பிக்கை உள்ளவர், பற்றுள்ளவர். இவர் இயற்றிய வாழையும் வள்ளுவமும் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்க விழைகிறது.

## வாழையும் வள்ளுவமும்

வாழை ஏனைய எல்லா உயிர்களையும் விட ஆறறிவும் அறஉணர்வும் உடைய மக்கள் இனத்திற்குப் பேருதவியாக இருத்தலால், உயர்ந்த இனத்துடன் சேரும் அருகதை உடையதாகத் திகழ்கின்றது. இயற்கையிலேயே இத்தகைய தகுதியைப் பெற்றுள்ள வாழை மரம் மக்கள் இனத்திற்கு வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருளுக்கும் உள்ளுறையாகத் திகழ்வதையும் குறிப்பாற் புலப்படுத்துகிறது. இவற்றினை “இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு” என்ற தொல்காப்பியர் நூற்பாபடி இக்கட்டுரை அமைத்துள்ளார் ஆசிரியர்.

## இன்பத்திறம்

வாழையின் தோற்றமே இன்பத்தின் உள்ளுறையாகும். அது வழுவழுப்பாய், ஒழுங்காய், நீண்ட பச்சை இலைகளை உடையதாய் மிக அழகாய் அழகிய நங்கையைப் போல் காட்சி அளிக்கிறது. அதன் அழகு கண்டார் கண்ணைக் கவரும். சிறந்ததாய்த் திகழ்கின்றது. அழகிய பெண்ணைக் காண்பவர் கண் அவள் பக்கம் திரும்புவது போல, வாழையைக் காண்பவர் கண் வாழையின் பக்கமே திரும்பும். தனிப்பட்ட வாழை மரத்தின் வனப்பினை இல்லங்களிலும் தோட்டங்களிலும் காணும்போது இன்பம் தரும். அதைப்போன்று நம் மனதில் தோன்றும் இன்பநிலையை எவ்வாறு கூறுவது, என்று நினைக்கும் போது “தகையணங்குறுத்தல்” (காமத்துப்பால்- அதி-1)

என்பதிலுள்ள குறள்களைப் படிக்கும் போது, நம்மனத்தில் எழும் காட்சி உணர்வுகளும், வாழையைக் காணும் போது உண்டாகும் உணர்வுகளும் ஏறக்குறைய ஒன்றாக இருப்பதை உணரலாம் என்று ஆசிரியர் கூறுவதை பார்க்கும் போது ஆசிரியர் வேளாண்மை துறையிலும், உளவியல் துறையிலும் சிறந்து விளங்கியது வியப்பாக உள்ளது.

## வாழையும் குழந்தையும்

வாழை தோப்பினுள் நுழையும் போது வாழையின் மட்டையை தடவுதல், விரியும் நிலையிலுள்ள குருத்தினை நீவிப் பார்த்தல் போன்ற செயல்களைச் செய்கிறோம். அதைப்போன்று மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் (குறள் - 65).

குழந்தைகள் நம் உடலைத் தொடும் போதும் நம்மை தீண்டும் போதும் இத்தகைய இன்பத்தை உணருகிறோம். வாழைமரத்தை குழந்தையோடு ஒப்பிட்டு ஆசிரியர் கூறியதைக் காணும் போது முற்றும் உணர்ந்த ஞானியாகவும் சிறந்த ஆய்வாளனாக இருப்பதை உணரமுடிகிறது.

## பொருள் திறன்

வாழையில் கிடைக்கும் தண்டு, இலை, பூ, காய், கனி முதலிய அனைத்தும் வாழையின் பொருள் அதிகாரம். வாழையின் பொருள்கள் அனைத்தும் தனக்கும், தன் கன்றுகளுக்கும் என ஒன்றும் வைத்துக் கொள்ளாமல், பிறர்க்காகவே முழுவதையும் வழங்குவது வாழையின் தனிச்சிறப்பு. அதைப்போன்று மக்கள் தான் தேடும் பொருள்களைப் பிறர்க்குப் பயன்படுவதும் இல்லை, தருவதும் இல்லை, தனக்கும் தனக்கு பின் வரும் சந்ததிகளுக்கும் என்று வாழ்கின்றனர். ஆனால் வாழை தான் தள்ளும் ஒரே குலை கூடத் தனக்குப் பயன்படும் என்று வைத்துக் கொள்ளாமல், இருக்கும் குணம் கன்றுகளும் தாய்வழியைக் கடைப்பிடிக்கின்றன.

“குலத்தளவே ஆகுமாம் குணம்” என்ற மொழிக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

***“தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு***
***வேளாண்மை செய்தற் பொருட்டு” (குறள்- 212)***

என்று வள்ளுவமே கூறும், பற்றற்ற பண்பை முற்றும் துறந்த முனிவர்கள் சிலர் பக்கம் தான் காண முடிகின்றது. ஆறறிவு படைத்த மக்கட் பிறப்பினர் அனைவரிடமும், காணப் பெறுவது மிகவும் அறிது.

***“தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி***
***வலைப்பட்டார் மற்றை யவர்” (குறள்- 348)***

என்ற பொய்யாமொழிக் கிணங்க வாழையைத் தவிர மற்றையவர் பிறவி வலைக்குள் அகப்பட்டவராகவே உள்ளனர். ஆசிரியர் உளவியல் நிபுணராக மனிதர்களின் மனதை ஆராய்ந்து கூறியுள்ளார்.

212ஆவது குறளில் "பொருளெல்லாம் வேளாண்மை செய்தற் பொருட்டு" என்பதில் "எல்லாம்" என்ற சொல் பொருள்களைக் குறிக்கும். வாழையில் பயன்படாத பொருள் எதுவுமில்லை. முற்றிலும் பயன்பட்டு வாழை இங்ஙனம் பொருள்திறனைப் புலப்படுத்துகின்றது.

## அறத்திறம்

அறத்திறன் என்பது ஒழுங்கு முறையைக் குறிக்கும். சில மரங்களில் ஒழுங்கு முறை இருப்பது இல்லை. அவை முடிச்சுகளும் மலடுகளும் உடையவை. வாழையின் ஒவ்வொரு பகுதியிலும் இவ் ஒழுங்கு சிறப்பு பெற்று திகழ்கிறது. தாய்மார்கள் தன் குழந்தைகளை அரவணைப்பது போன்று, வாழையைச் சுற்றி கன்றுகளை அரவணைத்து ஒழுங்கில் வளரச் செய்கின்றன.

## வாழை அளித்தது போல வள்ளுவனும்

வாழைப்பூ, மரத்துக்கு ஒரே பூ, அந்த ஒன்றை வள்ளுவர் பெருமான் திருக்குறள் நூல் ஒன்றை மட்டும் நன்றாய்ச் செய்தளித்தது போல், வாழையும் நன்றாய்ச செய்து வழங்குகிறது.

## மா, பலா, ஒழுங்கின்மை

"தனித்தனி முக்கனி பிழிந்து" என்ற வள்ளல் பெருமான் வாக்கில் காணும் வாழை, மா, பலா, என்னும் முக்கனிகளில் வாழையை நீக்கி ஏனைய இரண்டும் இவ்வொழுங்களில் சரியாக அமையாதிருப்பதைக் காணலாம்.

## மக்களின் ஒழுங்கு

பொதுவாக மக்கள் வாழும் இடங்களில் இல்லங்களில் சென்று பார்த்தால், அவர்கள் பேரறிஞர்களாக இருப்பினும் கூட இல்லத்தில் புழங்கும் பொருள்கள், நூல்கள் முதலியன ஒழுங்கு முறையில் இருப்பதில்லை.

## மரங்களில் ஞானமரம்

மனிதர்களில் ஞானியர் இருப்பது போல மரங்களில் ஞானமரம் வாழை என்று ஆசிரியர் அறத்திறம் கூறும் போது, அறமே அறம் கூறுவது போல் இருக்கிறது.

## வீட்டுணர்ச்சி

வீடு என்பது விடுதலை, பற்று விடுதலை என்று பொருள். இவ் விடுதலை வாழையில் அமைத்திருக்கிறது. வாழையின் எல்லாப் பொருள்களும் நன் முறையில் பயன்பட்டு விடுதலை பெறுகின்றது. மங்களத்திற்கு முன் நிற்பது வாழையே என்ற ஆசிரியர் வாழையையும் வள்ளுவரையும் ஒப்புமைப்படுத்திய தன்மை போற்றுவதற்கு உரியதாக உள்ளது.

## முடிவுரை

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கையும் வாழையில் உள்ளுறையாகச் சான்றோர் கண்டு மகிழ்கின்றனர். வள்ளுவத்திலும் அறம், பொருள், இன்பம் மூன்றும் நூலிலும் வீடு பேறு பாயிரத்திலும் உள்ளனவாகச் சான்றோர்கள் எடுத்துக்காட்டியிருத்தலையும் அறிவோம். எனவே வாழையும் வள்ளுவமும் நாற்பொருள் பயப்பனவாய் அமைகின்றன என்பதை விளக்கமாகத் தெளிவுற ஆசிரியர் இக்கட்டுரையில் எடுத்துக்காட்டிய விதம் சிறப்புற உள்ளவற்றை இக்கட்டுரையின்வழி அறியமுடிகிறது.

# 3. அகத்திணை பெண்கள்

**ச. காஞ்சனா**
*ஆய்வியல் நிறைஞர்*
*தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*சேர்க்காடு, வேலூர்- 632 115.*

## முன்னுரை

பேராசிரியர் ந சுப்பு ரெட்டியார் பல கலைகளையும் முறையாகக் கற்றவர் இருபது ஆண்டுகளுக்கு மேல் மாணவர்களுக்குப் பாடம் பயிற்றிய அநுபவத்தையுடையவர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பல்லாண்டு காலமாகப் பணிபுரிந்த அநுபவங்களைக் கொண்டவர் பயிற்றும் முறைகளின் நாடியை அறிந்தவர் உளவியல் நுட்பங்களைத் தெரிந்தவர். எனவே, தொல்காப்பியத்தின் பல நுட்பமான கருத்துகள் எவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் இவரது நூலில் தெளிவும் விளக்கமும் பெறுகின்றன.

## தொல்காப்பியரின் கருத்து

தமிழர்கள் காதலை மிகமிகத் தூய்மையானதாக வைத்துப் போற்றினர். அவர்கள் ஐந்திணை நெறியாகப் படைத்துக் காட்டும் காதல் இவ்வுலக மாந்தர்களிடையே இருக்கின்றதா? இருக்க முடியுமா? என்று நாம் ஐயப்படக் கூடியதாக உள்ளது. அகவுலகில் புலவர்கள் படைத்துக்காட்டும் நிகழ்ச்சிகள் அத்தனையும் பொய்யும் அல்ல, உண்மையும் அல்ல; என்பதுதான் தொல்காப்பியரின் கருத்து அப்படித்தான் அவர் இலக்கணமும் செய்துள்ளார்.

> ***“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்***
> ***பாடல் சான்ற புலனெறி வழக்கம்” (தொல்-1002)***

என்பது அவர் காட்டும் அகப்பொருள் புனைந்துரை. சுவைபட வருவன எல்லாவற்றையும் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதலை “நாடக வழக்கு” என்று கூறுவர். “உலக வழக்கு” என்பது உலகத்தார் ஒழுகிவரும் ஒழுக்கத்துடன் ஒத்துவரும் நிகழ்வுகள். இந்த இரண்டு வழக்கையும் கலந்து வருவதுதான் பாடல் சான்ற புலனெறி வழக்கம். புலவர்கள் படைத்துக் காட்டும் அகப்பொருள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள். இந்த இரண்டும் கலந்து வருவதைச் “செய்யுள் வழக்கு” என்று குறிப்பிடுவதும் உண்டு. அந்த வகையில் அகத்திணை மாந்தராகப் பெண்களைச் சுட்டும் “ந. சுப்புரெட்டியார்” அவர்களின் கருத்துக்களை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

## அகப்பொருள் மாந்தர்கள்

இந்த அகப்பொருள் உலகில் சிறப்பாக ஐந்திணை நெறியில், நாம் காணும் மாந்தர்களைப் பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் இன்றியமையாதது. ‘இல்லது, இனியது, நல்லது’ என்று புலவர்களால் நாட்டப்பெற்ற இந்த அகனைந்திணை ஒழுக்கத்தில் ஒழுகுபவர்கள் தலைமகனும், தலைமகளும் ஆவர். இவர்கள் ஒழுக்கம் செவ்விதாக நடைபெறுவதற்குத் துணையாக நிற்கும் பெண் மாந்தர்கள் மட்டும் பின்வருமாறு:

தலைவி, தோழி, நற்றாய், செவிலி, விறலியர், பரத்தையர்.

## தலைவி

அகப்பொருள் நூலில் தலைவியைப் பற்றி தொல்காப்பியர் பல இடங்களில் குறித்துள்ளார். அவற்றில்,

> ***“கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்***
> ***மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்***
> ***விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்” (தொல்-1096)***

என்பவை தலைமகளுடைய குணங்களாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன. கற்பு என்பது, கணவன் முதலியோர் கற்பித்த நிலையில் திரியாத நல்லொழுக்கம். அதனோடு தலைவியின் பண்புகளாக நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பவற்றை இவளது குணங்களாகக் கூறுவார், களவியலுரையாசிரியர். தலைவனைப் பிரிந்துள்ள காலங்களில், தலைவி கற்பு நெறியில் தவறாமலும் மக்கள், சுற்றம் முதலானவர்களைப் பாதுகாக்கும் கடமையிலிருந்து தவறமாட்டாள். தலைவி தலைவனுடன் களவொழுக்கத்தின் போது சென்றுவிடுவாள். இச்செயலை அகப்பொருள் இலக்கணம் “உடன்போக்கு” என்று குறிப்பிடும். இவளைப் பற்றி அகப்பொருள் நூல்கள் கூறுவனவற்றை யெல்லாம் தொகுத்துக் கூறினால் மிக விரியும்.

## தோழி

தலைவன் தலைவியின் காதல் வாழ்க்கையில் பெரும் பங்கு எடுத்துத் துணை புரிபவள் தோழி. தலைவியுடன் ஒன்றின நெஞ்சினையுடையவள் தோழி. தலைவிக்கும் தோழிக்கும் இடையே உள்ள நட்புரிமையைத் தலைவனுக்கும் பாங்கனுக்கும் இடையேயும் காண முடியாது. தலைவியினுடைய செயல்கள் யாவற்றையும் இவள் அறிவாள். இவள் தன்னலம் சிறிதும் இல்லாது, தலைவன் தலைவி நலத்தை மட்டுமே விரும்புவாள். பலவகை இடுக்கண்களுக்கிடையிலும் சாமர்த்தியமாகச் செயலாற்றும் திறனுடையவள். தலைவனைக் கண்டவுடன் மயங்கிவிடும் தலைவி போல் இல்லாமல் அவன் குண நலன்களை நன்கு அறிந்த பிறகே தலைவியைக் கூட்டுவிப்பாள். தலைவன் பிரிந்த காலத்திலும் தலைவனின் நலன்களைத் தலைவியிடம் கூறி தலைவியைத் தேற்றுவாள். நற்றாய், செவிலித்தாயருக்குத்

தலைவியின் கூட்டுறவு செய்திகளைத் திறம்படவுரைத்து அவர்களுடைய உடன்பாட்டைப் பெறுவாள். களவு, கற்பு இரு ஒழுக்கத்திலும் தோழியின் தொடர்பு இல்லாத இடங்களே இல்லை என்றும் கூறலாம் அவ்வளவு முதன்மை பெற்றவளாகத் தோழி திகழ்கின்றாள்.

***"தோழி தானே செவிலி மகளே" (தொல்-1069)***

என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி செவிலித்தாயின் மகளே தோழி என்பதை அறியமுடிகின்றது.

## செவிலித்தாய்

செவிலி என்பவள் தலைவியை வளர்ப்புத்தாய்; தலைவியின் உயிர்த்தோழியை ஈன்ற தாய். நற்றாயின் தோழியாக செவிலித்தாய் இருப்பாள் என்று இலக்கண நூல் கூறும். இவள் தலைவியை வளர்த்து, பாதுகாப்பவள். தலைவி துயிலும் நிலையிலும் காவல் புரிபவள். தலைவியின் களவு ஒழுக்கத்தை தோழி மூலம் அறிவாள், தலைவி தலைவனுடன் உடன்போகும் காலத்தில் வருந்தி அவளைத் தேடி அலைவாள். தலைவனைப் பிரிந்த காலத்தில் தலைவியின் நிலை அறியாத செவிலித்தாய் நற்றாய்க்கு அவள் நிலை உணர்த்தி குறத்தி ஒருத்தியை அழைத்து குறி பார்த்து ஆராய்வாள். நற்றாயின் அன்பை விட செவிலித்தாய் தலைவியின் மீது அதிக அன்பு கொண்டு விளங்குவாள். இதனால் இவள் களவு வரலாற்றிற்குச் சிறந்தவளாய்த் தாய் என்றே சிறப்பித்துக் கூறப்பெறுவாள்.

***"ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்***
***தாய்எனப் படுவாள் செவிலி யாகும்." (தொல்-1068)***

என்று செவிலி பற்றித் தொல்காப்பியக் களவியல் நூற்பா கூறுகிறது.

## நற்றாய்

அகப்பொருள் இலக்கியங்களில் வரும் நற்றாய் என்பவள் தலைவியைப் பெற்றெடுத்த தாய். இவள் செவிலித்தாயின் மூலம் தலைவியின் நிலை அறிந்து வருந்துவாள். தலைவியின் கரந்த ஒழுக்கத்தின் விளைவால் அவளுடைய உடலில் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்டு இவளும் செவிலித்தாயும் வெறியாடும் வேலன் கட்டுவிச்சி முதலியவர்களைச் கொண்டு அவ்வேறுபாடுகளின் காரணத்தை ஆராய்வர். அனைத்தும் அறிந்து கொண்டாலும் அறியாதவர் போல் இருப்பார்கள் தனது மகள் கடுஞ்சொல் ஆனை இட்டுள்ளாள் என்று அவர் அச்செயலை வெளிக்காட்டாமல் இருப்பர்.

## பரத்தையர்

அகப்பொருள் நூல்களில் பரத்தையர் என்று கூறப் பெறும் ஒருவகைப் பெண்டிர் உளர். இன்று செல்வர்கள் வாழும் பகுதிகளில் இத்தகையவர் அதிகம் இருப்பது போலவே அன்றும் இருந்திருத்தல் கூடும். இவர்கள் அக்காலத்தில் அறவே இல்லை என்று கூறுவது

அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை. இத்தகைய பரத்தையர்களைத் தொல்காப்பியர் "காமக்கிழத்தியர்" என்ற சொல்லால் குறிப்பிடுவர். இக்காதற்பரத்தையர் தலைவிமாரோடு எத்தகைய பகையும் கொள்ளாது நெருங்கிப் பழக முயல்வர். இவர்களுள் வயதில் மூத்தவராக இருந்தால் தலைவன் தலைவியரிடையே நிகழும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கவும் முன்வருவர் தலைவிக்கு அறிவுரைகள் கூறி, அவளைத் தலைமகனோடு கூட்டிவைத்து மகிழ்வர். இதனை,

***"காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையில்***
***தாய்போல் கழறித் தழீஇய மனைவியைக்***
***காய்வின்று அவன்வயிற் பொறுத்தற் கண்ணும்."***
***(தொல்-1095)***

என்ற கற்பியல் நூற்பாப் பகுதியால் அறிந்துகொள்ளலாம்.

## விறலியர்

விறலியர் என்பார், ஆடலும் பாடலும் நிகழ்த்தும் ஒருவகைச் சாதிப் பெண்டிர். தலைவனது பரத்தையிற்பிரிவிற்கு இவர்களும் கருவியாக இருப்பர்.

## முடிவுரை

அகத்திணையில் கூறப்படும் மாந்தர்களை 'சுட்டி ஒருவர் பெயர் கொள்ளது' கூறவேண்டும் என்று தொல்காப்பியர். அவர்கள் ஒருநாள் காலத்தில் ஓரிடத்தில் இருக்கக் கூடியவர்கள் அல்லர் என்றும் எல்லாவிடத்தும் நிரந்தரமாக இருப்பவர்கள் இருக்க வேண்டியவர்கள் அவர்களைப் பெயர்கூறிச் சுட்டுவது கூடத் தவறு என்று கருதினர் பண்டையோர். எனவே, தொல்காப்பியனாரும் இதனை,

***"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்***
***சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்."(தொல்-1003)***

என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் அகப்பொருள் ஒருவரையும் சாராது பொதுப்படவரும் என்பது பெறப்படுகின்றது. ஆதலால்தான், அகப்பொருள் பாடல்களில் சுட்டிப் பெயர் கூறும் பாத்திரங்களை நாம் சந்திப்பதே இல்லை. தூய காதல் நிலவும் எல்லைக்குள் பெயர் சுட்டும் வழக்கமே இல்லை. இது தமிழ் மொழிக்கே சிறப்பாக அமைந்த இலக்கணம். அகத்திணை மாந்தர்களான பெண்கள் தலைவன் தலைவி களவு கற்பு ஒழுக்கத்திற்கு எவ்வாறு துணை நிற்கின்றனர் என்று "அகத்திணைக் கொள்கைகள்" என்ற நூலில் ந. சுப்புரெட்டியாரால் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராயப்பெற்றுள்ளன.

## பயன்பாட்டு நூல்

ஆசிரியர்: பேராசிரியர் டக்டர் ந. சுப்புரெட்டியர்.

நூல்: தமிழ் இலக்கியங்கள். தொல்காப்பியம் (தொகுதி-17)

# 4. களவில் பாங்கியின் மரபுகள்

**ஆ. சுமித்திரா**
*ஆய்வியல் நிறைஞர்*
*தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*சேர்க்காடு, வேலூர்- 632 115.*

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில், சிறந்த தமிழ் அறிஞர்களை வரிசைப்படுத்தும் போது நிரந்தர இடத்தில் இருப்பவர்களில் குறிப்பிடத்தக்கவர் ''தமிழ் செம்மல் கலைமாமணி பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்,'' இலக்கண நூலான தொல்காப்பியத்திலிருந்து பாங்கியின் மரபாகக் கூறப்பட்டதை குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. களவொழுக்கத்தில் இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் என்ற மூன்றற்கு அடுத்து புலனெறி வழக்காகப் புலவர்களால் கூறப்படுகிறது. புலனெறி வழக்கம் என்பது, சுவைப்பட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தவனாகத் தொகுத்துக் கூறும் நாடக வழக்கும், உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்துவரும் உலகியல் வழக்கும் விரவி வருவதாகப் பாடப்பெறும் அகப்பொருள் நாடகத்தை பொறுப்புடன் நடத்தி செல்பவளான தோழி செவிலியின் மகளாகக் கூறப்பெறுகின்றாள். உலகியல் அறிவு நன்கு அறிந்தவளாகவும் எந்த உணர்வுக்கும் சிறைப்படாமல் அறிவு நிலையிலே தானும் இயங்கித் தன்னைச் சார்ந்தவர்களையும் இயக்குகின்றாள். அவளுடைய ஆளுமைத்திறன் வியத்தற்குரியது. இவளைப் பற்றுக்கோடாகக் கொண்டுதான் தலைவன் தலைவியை நிரந்தரமாகச் சந்திக்கும் வாய்ப்புகளைப் பெறுவான்

## பாங்கி மதியுடம்பாடு

மதி என்பது அறிவு; உடம்பாடு என்பது உடம்படச்செய்தல், அஃதாவது தோழியின் அறிவை ஒருப்படச்செய்தல் இளம்பூரணர் மதியுடம்படுதலை ''புணர்ச்சியுணர்தல்'' என்று கூறுகின்றார். பாங்கியின் மூலம் தன் குறையைப் போக்கிக்கொள்ளலாம் எனக் கருதும் தலைவன் தன் குறையைத் தெளிவாகக் கூறாமல் கரந்த மொழியால் கூறுவதையும், களவொழுக்கத்தால் தலைவியிடம் தோன்றும் வேறுபாட்டின் காரணம் புலப்படாததாலும் அவ்விருவர் கருத்தையும் தன் மதியுடன் ஒன்றுபடுத்தி உணர்தல் மதியுடம்படுதலாயிற்று இம்மதியுடம்பாட்டை தொல்காப்பியர்,

***''குறையுறஉணர்தல் முன்னுறஉணர்தல்***
***இருவரும் உள்வழிஅவன்வரவுணர்தலென***

*மதியுடம் படுத்தல் ஒருமூ வகைத்தே"*
*(தொல்., களவியல்-37)*

என்று மூன்று வகையினதாகக் கூறுகின்றார்.

பாங்கியின் உதவியின்றித் தலைவியைச் சந்திப்பது முடியாது என்பதை உணர்ந்த தலைவன் பாங்கியிடம் குறையுற்று நிற்க, அவன் உள்ளக் கருத்தை பாங்கி உணர்தல் குறையுற உணர்தல் என்றும்.

தலைவியிடம் இதற்கு முன்பு இல்லாத ஒழுக்க கூறுகளை, பாங்கி தலைவியிடம் மெய்யாகவும் பொய்யாகவும் இருபொருள் படும் படியான சொற்களில் பேசி உரையாடுவாள்.

தலைவியும், பாங்கியும் ஒருங்கிருந்தவழித் தலைவன் வருகின்றான். அங்ஙனம் தலைவன் குறிப்பும் தலைவி குறிப்பும் கண்டுணர்தல். தலைவியும் பாங்கியும் தினைப்புனங்காத்து நின்றவிடத்துத் தலைவன் கையுறை கொண்டுவந்து "இத்தழை நுமக்கு உடையாதற்கு ஏற்றது எனவும் இவ்வணி நிவீர் அணிதற்கு உரியது" எனவும் கூறி அவள்பாற் குறை வேண்டுவான் போல நிற்க பாங்கி அப்போது நிகழும் அவ்விருவர் மெய்ப்பாடுகளையும் உணர்தல் ஆகும்.

## மடல் விலக்கு

பாங்கி பல வகையானும் நாடி மதியுடம்பட்டதனை அறிந்த பின்பு தலைவன் பாங்கியை அணுகித் தன் குறையை முடித்துக்கொள்ள முயல்வான். தலைவன் தன்னைப் பலபடியாக வேண்டியும், தோழி எளிதில் இணக்கம் காட்டாமல் மறுத்தும், நகையாடியும், அவனைத் தம்பால் நெருங்க வொட்டாமலும் விலக்கி நிறுத்துவள். இவ்வாறு அவள் நிறுத்தி அலைக்கும் பகுதி "சேட்படை" என்று வழங்கப்பெறும். சேட்படை என்பதற்குத் தூரவிடல், அகற்றல் என்ற பொருளும் உண்டு. அகற்றல் என்பதற்கு மறுத்தல் என்பது கருத்து. இறையனார் களவியல் இதனை,

***"சிறையுறக் கிளந்துசேட்படநிறுத்தலும்"***
***(இறையனார்-களவியல் -12)***

என்று குறிப்பிடும் இதனை உரைகாரர், சிறை என்பது காப்பு, உற என்பது மிகுதி, கிளத்தல் என்பது சொல்லுதல், சேண் என்பது அகற்றல், பட என்பது நிகழ்த்தல், நிறுத்தல் என்பது தழீஇக்கோடல் எனவும் பொருள் கொண்டு பாங்கி தலைவனிடம் காப்பு மிகுதி சொல்லி அகற்றித் தடுத்தலாகும் என்கின்றார்.

## குறியிடம் சேர்தல்

தலைவியைக் கூடிப்பிரிந்த தலைவன் வேட்கை மீதூர மற்றை நாள்களிலும் வந்து பாங்கிக்குத் தன் குறிப்புணர்த்தி முன் கூடியது போல கூடவும் பெறுவான். குறியிடம் என்பது, கலவியின் பொருட்டுத் தலைவனும் தலைவியும் சந்திக்கும் இடமாகும். இது பகற்குறி என்றும் இரவுக்குறி என்றும் இரு வகைப்படும். இதனை தொல்காப்பியர்,

***“குறியெனப் படுவதிரவினும் பகலினும்
அறியக் கிளந்தஆற்றதென்ப”(தொல்., களவியல் - 40)***

என்று கூறுவர் பகற்குறி என்பது, பகலில் சந்திக்கும் இடம், இரவுக்குறி என்பது, இரவில் சந்திக்கும் இடம். இந்த குறியிடங்கள் தலைவியாலும் பாங்கியாலும் காட்டப்பெற்று அவ்விடங்களில் பகலிலும் இரவிலும் தலைவன் தலைவியைச் சந்திப்பான். தொல்காப்பியர் ஊரின் புறத்தே அமைந்திருக்கும் தலைமகள் நன்கறியப்பட்ட இடமாய் அமைந்திருப்பது பகற்குறி. இல்லகத்துள் மனையகம் புகாத இடத்தில் மனையோர் சொல் கேட்கும் அணிமைக்கண் அமைவது இரவுக்குறி. பாங்கியின் துணையால் தலைவியின் மனைக்கு அருகாமையில் உள்ள குறியிடத்தில் தலைவன் தலைவியைக் கூடி மகிழ்தல் இரவுக்குறி எனப்படும். பாங்கி இரவில் தலைவன் தலைவியை கூட உதவிபுரியினும் தலைவியைத் துயில் கொள்ள செய்து மீண்டும் தலைவன் இருக்கும் இடம் தேடி வந்து நிவீர் இவ்வாறு வந்து செல்வதை எம்மவர் அறிந்தால் பெரும் பழி வந்து சேரும் எனவே இனி இரவுப் பொழுதில் இங்கு வருவதை நினைத்துப் பார்க்க வேண்டாம் என்றும் மேலும் தலைவியின் அச்சத்தையும் எடுத்துரைக்க கூடிய பாங்கி தலைவன் தலைவியின் களவொழுக்கத்தினை அதிகமாக நீட்டிக்கவிரும்பாள். எனவே பகற்குறி, இரவுக்குறிகளிலும் அவர்கள் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தவே மாட்டாள். விரைவில் அவர்கள் ஊரார் அறியத் திருமணம் புரிந்துக்கொண்டு கற்பு நெறியில் வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற விருப்பத்தை உடையவளாகவே இருப்பாள். அதற்கு வேண்டிய திட்டங்கள் வகுப்பதில் அறிவுத்திறம் மிக்கவளாகக் காணப்பெறுகின்றாள்.

## வரைவுகடாதல்

இருவகைக் குறிகளிலும் பலகாலும் வந்தொழுகும் தலைவனிடம் பாங்கி இனியும் இவ்வாறெல்லாம் களவிலேயே வந்து தலைவியைக் கூடும் வழக்கத்தை விடுத்து விரைவில் மணம் செய்து கொள்ள வேண்டும் என்று தலைவனை வேண்டிக்கொள்வாள். இதுவே வரைவு கடாதல் தலைவன் தலைவியை மணந்து கொள்வதைப்பற்றி கூறுதல். பாங்கி வரைவுகடாவும் முறை இரண்டு வகைப்படும் என்று கூறுவர் இறையனார் களவியலுரையாசிரியர். அவை,

1. குறிப்பினால் வரைவுகடாவுதல்
2. வெளிப்படையினால் வரைவுகடாவுதல்

பாங்கி தலைமகனை நோக்கி, எம் அன்னை தலைமகளின் வேறுபாடு கண்டு, இஃது இவட்கு எதனால் வந்தது என்று ஆராய்வாளாயினள், இதனால் தலைவியை இச்செறிக்கக்கூடும் எனவும், அதற்கு முன்பு வரைந்து கொள்ளுதலே சால்புடைத்து எனவும் குறிப்பாகக் கூறி, பாங்கி வரைவுகடாவுவாள்.

வெளிப்படையினால் வரைவு கடாவுதல் என்பது, பாங்கி தலைவனிடம் அவர்கள் களவொழுக்கம் ஊராரால் அறியப்பெற்று, முதலில் ஆம்பலாக முளைத்துப் பின் அலராக வளர்ந்தது என்று கூறி இனி வரைந்து கொள்வதில் காலம் தாழ்த்தல் கூடாது என்று வெளிப்படையாகக் கூறுவாள்.

## உடன்போக்கு

தலைவனும் தலைவியும் பகற்குறியிலும் இரவுக்குறியிலும் பலகாலும் கூட்டம் நிகழ்த்திவருவதனால், அவர்களது மறைவொழுக்கம் வெளிப்பட்டு அலராகும். இதனையறிந்த தலைவன் பாங்கியின் விருப்பத்திற்கிணங்கச் சிலகாலம் அவ்வலர் அடங்குமாறு கூட்டம் நீங்கி வேறிடத்துக்குச் சென்று உறைவான். அவ்வாறு நீங்கி நிற்றலை அகப்பொருள் நூல்கள் "ஒருவழித் தணத்தல்" என்று குறிப்பிடும். அலரறிந்த தலைமகன் இவ்வாறு ஒருவழித்தணந்து நில்லானானால் அவன் தலைவியைப் பாங்கியின் துணைக்கொண்டு ஆங்கு நின்று பெயர்த்து ஒருவருக்கும் தெரியாமல் நள்ளிரவில் தன் மனையிடத்துக்கு உடன் கூட்டிக்கொண்டு செல்வான். இவ்வாறு அவன் செல்லலை "உடன்போக்கு" என்று வழங்குவர் அகப்பொருள் நூலார். இவ்வுடன் போக்கு நிகழாவிடின், பாங்கியினால் அவன் வரைவு முடுக்கப்பெற்றுத் தலைவியைத் திருமணம் செய்துகொள்வான். இதுவே வரைந்துகோடல் என்பது. எனவே, இரவுக்குறி நிகழ்ந்த பின்னர் ஒருவழித்தணத்தல், உடன்போக்கு, வரைந்துகோடல் என்னும் மூன்றனுள் யாதேனும் ஒன்று தலைவனுக்கு நிகழும் என்று கொள்ள வேண்டும்.

## உடன்போக்கின் இயல்பு

செவிலி முதலியோர், தங்குலமகள் தனக்குரிய காதல் தலைவனைக் கூடிக் கற்புக்கடம் பூண்டால் என்று அறத்தொடு நிற்கும் முறையில் அதனை உய்த்து உணர்வர்.

> ***"தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப"***
> ***(களவியல் -47)***

என்று தொல்காப்பியக் களவியல் நூற்பா இதனை வலியுறுத்தும். இங்ஙனம் உணர்ந்த பெற்றோர், அந்தத் தலைவனுக்கே அவளை மணம் புரிவிக்க முயல்வாராயின், அது பெரிதும் சிறப்பாக அமையும். அவ்வாறு அல்லாமல் வேறொருவனுக்குத் தம் மகளை மணம் பேசினாலும் அல்லது, தலைவனைக் காணாதவாறு தலைவியை இச்செறிப்புச் செய்தாலும் தலைவிக்கு ஆற்றாமையால் துயரம் பெருகும். இந்நிலையில் பாங்கி இனி இவள் இறந்துப்படவும் கூடும் என்று உணர்ந்து வேறு வழியொன்றும் தோன்றாத நிலையில் இவ்வாறு செய்வாள் என்று கூறுகின்றார்.

## முடிவுரை

பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய சிறந்த தமிழ் ஆர்வலர் ஆவர். அவர் இயற்றிய இலக்கண உரையானது மாணவர்களிடையே தமிழ் மீது ஆர்வத்தை தூண்டும் வகையில் இருப்பது சிறப்பு. களவொழுக்கத்தில் பாங்கி மதியுடம்படுதல் குறித்தும், மடல் விலக்கு, குறியிடம் சேர்தல், வரைவுகடாதல், உடன்போக்கு ஆகிய இடங்களில் பாங்கி எந்த ஒரு உணர்ச்சிக்கும் கட்டுப்படாதவளாய்த் தன் மரபு நிலையில் இருந்து சிறிதும் விலகாமல் இருப்பது குறித்து ந. சுப்புரெட்டியார் விளக்கியிருக்கிறார் என்பதை இக் கட்டுரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

## துணை நூல்

1. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை ந. சுப்புரெட்டியார்.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை.
3. தொல்காப்பியம், அகத்திணையியல், மு. அருணாசலம் பிள்ளை.
4. நாற்கவிராசநம்பி, அகப்பொருள் விளக்கம், முனைவர் ப. பூங்காவனம்

# 5. கல்வி உளவியலில் உள்ளக் கிளர்ச்சியின் தூண்டல்களும் கட்டுப்பாடுகளும்

**நா. தீபா**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோவை.*

தமிழன்னையின் தவப்பயனால் உதித்த ந. சுப்புரெட்டியார், 1916 அன்று லால்குடி என்ற ஊரில் ஞானி நல்லப்பரெட்டியார், காமாட்சி என்பவர்களுக்கு மகனாய்ப் பிறந்தார். சொல்லின் செல்வராய், பல்துறை வித்தகராய் விளங்கிய அவர் கால்தடம் பதிக்காதத் துறைகளே இல்லை எனலாம். தமிழ் என்ற ஆணிவேரைப் பிடித்துக்கொண்டு இலக்கணம், சங்ககாலம், அறிவியல், உளவியல், சித்தாந்தம், வேதாந்தம், ஆரோக்கியம், கவிதை, மானிடவியல் என அனைத்துத் துறைகளிலும் தனது கிளைகளைப் பரப்பியுள்ளார். அண்ணலின் இப்பணி நம் தமிழ் உலகிற்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம்.

கல்வியின் சிறந்த பயனே நல்ல குடிமக்களை உருவாக்குவதுதான். கற்கக் கசடறக் கற்றபின் அதற்குத் தகுந்து நிற்கும்போது அச்சமுதாயம் சிறப்புறுகிறது. ஒரு நல்ல கல்வியைக் கொடுக்க வேண்டுமெனில் மாணாக்கரின் வளர்ச்சிநிலை, அறிவுநிலை ஆகியவற்றைக் கொண்டு பாடத்திட்டம் அமைய வேண்டும் என திட்டவட்டமாக உரைக்கிறது ந.சுப்புரெட்டியாரின் "**கல்வி உளவியல்**" என்ற நூல். நல்ல செழிப்பான கல்வி அமைய பெற்றோர், ஆசிரியர், பாடத்திட்டக்குழு, மாணாக்கர் ஆகிய அனைவரும் ஒன்றுபட செயல்பட வேண்டும் என்பதே இந்நூல் மூலம் புலனாகிறது. மேலும் இந்நூல் குறித்தும், ஊக்குநிலை உள்ளக்கிளர்ச்சிக் குறித்தும் விரிவாகக் காண்போம்.

## மனிதவளர்ச்சியும் சூழ்நிலை மாற்றமும்

சமுதாய வீதியில் கட்டடங்களாகவும், மரங்களாகவும், பூக்களாகவும் எனப்பல இயங்குநிலை உயிரிகளாக விளங்குபவர்கள் மனிதர்கள். சிறந்த சமுதாயம் என்பது அங்கு வாழும் மக்களை வைத்தே மதிப்பிடப்படுகிறது.

***"நாடாகு என்றோ காடாகு என்றோ***
***அவலாகு என்றோ மிசையாகு என்றோ***

***எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி***
***நல்லை வாழிய நிலனே''***

என அன்று ஔவை பாடியது இன்று ஆண் சமூகத்திற்கு மட்டுமல்ல ஒட்டு மொத்த மனிதர்களுக்கும் பொருந்தும்.

குழந்தையாகப் பிறக்கும் போது அதற்கு அனைத்துமே புதிதுதான். பார்க்கின்ற ஒவ்வொன்றிலும் அது புதுமையை ஸ்பரிசிக்கிறது. புதுமையை உணர்கிறது. தான் வாழும் சமுதாயத்திற்கேற்றவாறு மொழி, பழக்கவழக்கம், பேச்சு, செயல் போன்றவற்றைக் கற்கிறது. பல நாட்கள் மொட்டாக இருந்து மலர்ந்த பூக்கள் ஒரு பூசாரியின் கையில் கிடைப்பதற்கும், ஒரு விலங்கின் கையில் கிடைப்பதற்கும் உள்ள வேறுபாடே, குழந்தை சூழ்நிலையை ஒட்டி வளர்வதற்கான வேறுபாடாகும். எனவேதான் கண்ணதாசன் ''எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே'' என்கிறார். சமுதாயத்தில் காலடி வைக்கும் குழந்தையின் நன்னடத்தை வளர்ச்சிக்குக் குடும்பமும், சமுதாயமும், அக்குழந்தைக் கல்வி கற்கும் பள்ளிக்கூடமும் முக்கியப் பங்காற்றுகின்றன. குழந்தையின் வளர்ச்சிநிலை மாற்றத்திற்கு பெற்றோரின் பங்கு எவ்வளவு அவசியமோ அதைவிட ஒரு மடங்கு மேலானது ஆசிரியரின் கடமை. எனவேதான் ந. சுப்புரெட்டியார்,

''குழந்தை தனித்து வாழ்வதில்லை. பிறருடன் கூடியே வாழ்கின்றது. ஆகவே அது சமூகசூழ்நிலைக்கும் பொருத்தமுற வேண்டும். பொருத்தப்பாட்டில் உடல் வளர்ச்சி, இயக்கவளர்ச்சி, உள்ளக்கிளர்ச்சி வளர்ச்சி, சமூகப் பண்புவளர்ச்சி ஆகியவற்றைக் காண்கிறோம். இச்செயல்களின் வகைகளையும் நன்கு அறிந்தால்தான் ஆசிரியர் முழுக்குழந்தையின் வளர்ச்சியில் துணைபுரியக்கூடும்'' என்கிறார்.

## உணர்ச்சிகளின் படிநிலை

***''நகையே அழுகை இளிவரல் மருட்கை***
***அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று***
***அப்பாலெட்டும் மெய்ப்பாடென்ப.'' (தொ. பொ-247)***

எனத் தொல்காப்பியர் வகுத்த உணர்ச்சிகளின் படிநிலைகள் எக்காலத்திலும் பொருந்துவதாகும். அடிப்படை உணர்ச்சிகளான இவைகள் காலத்திற்குக் காலம் மனிதனுக்கு மனிதர், மாறுபடும்போது சமூக மாறுதல்களும் ஏற்படுகின்றன.

குழந்தையாக இருக்கும்போது அச்சத்தை ஏற்படுத்திய ஒரு பொருள் அல்லது உவகையளித்த ஒரு பொருள் வளரும்போது மாற்றமடைகிறது. இது குழந்தையின் வளர்ச்சியையும் சூழ்நிலை மாற்றத்தையும் விளக்குகிறது.

அவரவருடைய உணர்ச்சிகளைச் சிறந்தமுறையில் கையாளும் வண்ணம் உள்ளத்துக் கிளர்ச்சிகளைத் தூண்ட வேண்டும் என்றும்,

அவற்றிற்கு சில படிநிலைகள் உள்ளன என்பதையும் அழகுற விளக்குகிறார் ந. சுப்புரெட்டியார். அவை:

1. **உணர்ச்சிநிலை** ஒருபொருள் அழகாக இருக்கிறது என்று அழகின் சுவையை உணரவைத்தல்.

2. **அறிதல் நிலை** ஏன் அழகு? எப்படி அழகுபட அமைந்தது எனக் குழந்தையை உணரவைத்தல்.

3. **இயற்றிநிலை** குழந்தையின் பருவத்திற்கேற்ப அவர்களையேப் படைக்கச்செய்து அதிலுள்ள அழகை உணர்தல்.

ந. சுப்புரெட்டியாரின் கருத்திற்கிணங்க இம்மூன்று படிநிலைகளில் குழந்தையின் வளர்ச்சியை உணர்வது போல, பள்ளிப்பருவத்தில் மாணவர்களிடத்தும் இம்மாற்றத்தை உரைக்கலாம். இவ்வாறு பாடபுத்தகத்திற்கும் மதிப்பெண்களுக்கும் முன்னுரிமை கொடுக்கும் இன்றைய கல்வி முறைபோலன்றி உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதம் பாடத்திட்டம் அமைதல் வேண்டும். பாடத்திட்டக் குழுவின் ஒவ்வொருவரும் கல்வி உளவியலை அறிந்து செயல்படுவது இன்றியமையாதது என்பதை ந. சுப்புரெட்டியாரின் கருத்துகளால் அறியமுடிகிறது.

## உள்ளக்கிளர்ச்சியும் கட்டுப்பாடும்

உணர்ச்சிகளைத் தூண்டும் விதமாக பயிற்சியளித்துத் திறனை வெளிக்கொண்டு வருவதைவிட மிகக் கடினமானது அதைக் கட்டுப்படுத்துவது என்பது ந. சுப்புரெட்டியாரின் கருத்தாகும்.

“உள்ளக்கிளர்ச்சிகளைத் தக்க முறையில் கட்டுப்படுத்திச் செயலை எழுப்பி நிறுத்தி, நெறிப்படுத்துவதே நாகரிகமுறையாகும். ஓரளவு கல்வி பெற்றவர்கள் உள்ளக்கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி நன்முறையில் நடந்து கொள்வார்கள் என்று பாமரர்களும் எதிர்பார்க்கின்றனர்”. (கல்வி உளவியல், ப.எண்-184) என்கிறார் ந. சுப்புரெட்டியார்.

இலக்கியங்கள் அவ்வக்கால சமூகத்தைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியெனில் ந.சுப்புரெட்டியாரின் காலகட்டத்தில் படித்தவர்கள் கட்டுக்கோப்புடைய நாகரீகம் உடையவர்களாக இருந்தனர் என்பது புலனாகிறது. ஆனால் இன்றைய சமுதாயத்தில் படித்தவர்களே, பாமரர்களைவிட மோசமாக நடந்து கொள்கின்றனர். கொள்ளையடித்தல், கொலை, பாலியல் வன்முறைகள் எனப் பல சமுதாய சீர்கேடுகளுக்கும் படித்தவர்களே காரணமாகின்றனர். அனைத்திற்குமான வாய்ப்புகள் கிடைக்கக் கிடைக்கத் தவறு செய்வதற்கானத் தூண்டுதல்களும் அதை மறைப்பதற்கான வழிமுறைகளையும் கையாள்பவர்கள் படித்தவர்களே. இங்கு ந. சுப்புரெட்டியாரின்,

“சிலர் வாழ்க்கையில் நேரிடும் உயர்வுகளையோ, வீழ்ச்சிகளையோ, கண்டு அதிர்ச்சியடையாமல் அமைதியாக உள்ளனர். அவர்கள்தாம் அறிவுள்ள மக்கள். சிந்தனையுடன் செயல்படுபவர்கள்.

அவர்கள் தன்முனைப்பால் எதிர்ப்பையும் கொள்வதில்லை. அவர்களிடம் உள்ளக்கிளர்ச்சிகள் மட்டுப்படுத்தப்படுகின்றன'' (கல்வி உளவியல், ப.எண்-184) எனும் கருத்துகள் எண்ணத்தக்கதாகும்.

இவ்வுள்ளக்கிளர்ச்சிகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதை பல படிநிலைகளில் விளக்குகிறார். இது இன்றைய சமுதாயத்திற்குத் தேவையான ஒன்றாகும்.

## முதல் படிநிலை - உள்ளக்கிளர்ச்சிகளை நசுக்கி அவற்றிற்கு இடம்தரக்கூடாது

''மிதமிஞ்சிய அடக்குமுறை, கேடான நிலைக்குக் கொண்டு செல்லும். சிறுவர்களின் உள்ளக்கிளர்ச்சிகளை நசுக்கினால் அவர்கள் வலுச்சண்டைக்காரர்களாக மாறலாம் அல்லது பிறரை வருத்தும் கொடியவர்களாக மாறலாம். அல்லது முற்றிலும் தன்னம்பிக்கை இழந்த பயனற்றப் பதர்களாகப் போகலாம் என்ற ந. சுப்புரெட்டியாரின் கருத்துகளை முன்கூட்டியே படித்திருப்பின் இன்றைய இவ்இழிநிலை சமுதாய சீர்கேட்டிற்குக் காரணம் ஆகாமல் இருந்திருக்கலாம். இங்கு

***''பிறப்பென்னும் பேதைமை நீங்க சிறப்பென்னும்***
***செம்பொருள் காண்பது அறிவு'' (குறள்-368)***

என்னும் வள்ளுவரின் கருத்து எண்ணத்தக்கதாகும்.

## இரண்டாம்நிலை

மேற்கூறியவற்றிற்கு நேர் எதிராக அமைகிறது அடுத்த படிநிலை. அதாவது உள்ளக்கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாது வெளிப்படுத்துவது. அது இன்றைய சமூக சூழ்நிலையில் கேடு விளைவிக்கும். சான்றோர் பின்னால் நடக்க இருப்பதை முன்கூட்டியே அறிவர். எனவேதான் ந.சுப்புரெட்டியார் அவர்கள் ''நடைமுறையில் இக்கொள்கை சிறிதும் பயன்படுவதில்லை. உள்ளக்கிளர்ச்சிகள் அனைத்திற்குமே அளவு கடந்து இடம் தருவதால் எல்லையற்ற தீங்குகள் நேரிடும். நமது நாகரீகத்தின் பல சிறப்பான கூறுகள் அழிந்துபடும்'' (கல்வி உளவியல், ப.எண்-185) என்கிறார்.

## மூன்றாவது படிநிலை தூய்மைப்படுத்தல் ஆகும்

உள்ளக்கிளர்ச்சிகள் எழும்போது அவற்றை தூய்மைப்படுத்தி மனதை வேறு ஒன்றில் நாட்டமுடையதாக மாற்றுதல். இதனால் பல கலைகள் தோன்றவும் வாய்ப்பிருக்கிறது என்கிறார் ந.சுப்புரெட்டியார். மேலும் அவர் சங்க இலக்கியத்திலுள்ள அகநானூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை போன்ற அகப்பொருள் நூல்கள் யாவும் காதலூக்கத்தைத் தூய்மை செய்யும் முறையில் எழுந்தவையாகும் என்கிறார்.

உளவியல் அறிஞர்களில் ஒரு சாரார் எல்லாக் கலைகளும் காதலூக்கத்தைத் தூய்மை செய்தலால் தோன்றியவையே என்று வாதிப்பர் என்கிறார்.

அன்றைய மாணவர்களும் இளைஞர்களும் பெரிய குடும்பம், அக்கம் பக்கம், நட்பு எனத் தங்கள் பொழுதைப் போக்கினர். அதனால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல், சமாதானப்படுத்தல் எனப்பல குணங்களில் தேர்ச்சியடைந்த அனுபவம் மிக்கவர்களாக இருந்தனர். இன்றைய மாணவர்கள் கூண்டில் அடைக்கப்பட்ட விலங்கிடப்பட்ட கைதிகளாகத் தங்கள் பொழுதைப் போக்குகின்றனர். அதனால் அவர்களுடைய பல நல்ல குணங்கள் அழிக்கப்பட்டுத் தீய குணங்கள் தலைதூக்குகின்றன.

தகவல் தொடர்பு சாதனங்களும், தொலைக்காட்சி போன்றவையும் மக்களைத் தவறான உள்ளக்கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றன. சிறந்த கல்வி கற்ற மாணவன் பக்குவப்படுத்தப்படுகிறான். சிறந்த கல்வி என்பது பாடபுத்தகமும் மதிப்பெண்களும் மட்டுமல்ல என்பதை விளக்கும் விதமாக அமைந்துள்ளது ந. சுப்புரெட்டியாரின் கல்வி உளவியல் என்ற நூல். இந்நூலைத் தமிழில் கிடைத்த அரிய பொக்கிஷம் எனலாம். இதைப் படித்து அதன் கருத்துகளை உள்வாங்கிக்கொண்டு பாடத்திட்டக்குழு பள்ளிப்பாடங்களை அமைக்குமேல் அது நிச்சயம் நல்ல சமுதாயமாற்றத்தைக் கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை. இந்நூல் அறிவியல் முறையையும், உளவியல் முறையையும், பகுப்பாயும் வண்ணம் இனிய தமிழில் அமைந்துள்ளது. இந்நூல் ஒவ்வொரு பெற்றோரும் இளைஞர்களும் கட்டாயம் படிக்கவேண்டிய ஒன்றாகும்.

உள்ளக்கிளர்ச்சிகளைத் தூண்டி நல்லவழியில் கொண்டுசெல்லத் தெரியாததாலும், அவற்றைச் சரியான முறையில் கட்டுப்படுத்த அறியாததாலும், ஒவ்வொரு மாணவனுக்குள்ளும் இருக்கும் திறனை வெளிக்கொண்டுவர அறியாமலிருப்பதுவுமே இன்றைய உளவியல் கௌன்சிலிங் என்ற தனித்துறை வளர்ச்சிக்குக் காரணம் எனலாம்.

தமிழில் உளவியல் மற்றும் உளவியல் கருத்துகள் என்றதும் நாம் மேலைநாட்டறிஞர்களான சிக்மென்ட்ஃப்ராய்டையும், ரூஸோவையும் தான் குறிப்பிடுகிறோமே தவிர தமிழ் உலக உளவியல் அறிஞர்கள் எவரையும் நாம் குறிப்பிடுவதில்லை. அவ்வகையில் இந்நூலைக் கற்கும்போது ந.சுப்புரெட்டியார் மேலை நாட்டு உளவியல் அறிஞர்களோடு ஒப்பிடத்தக்கவர் என்பது தெளிவாகிறது.

> ***“பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்***
> ***தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்”***

என்ற பாரதியின் கருத்தைக்கொண்டு பிறமொழி மட்டுமல்லாது, பிற துறை சார்ந்த நூல்களையும் நம் தமிழில் படிக்கும் சுவை மிக அழகு. அவ்வகையில் நா. சுப்புரெட்டியார் ஒரு மொழி பெயர்ப்பாளராக, ஒரு மொழிப்பற்றுடையவராக, ஒரு உளவியலறிஞராக, ஒரு விஞ்ஞானியாக, ஒரு மதிப்பீட்டாளராக ஒரு வழிகாட்டியாக எனப் பல உருவங்களில் நின்று உளவியலை உளவியல் நோக்கோடு விளக்கியுள்ளார்.

***"அமுதே தமிழே அழகிய மொழியே! எனதுயிரே"***

எனத் தமிழை உயிராகக் கொண்டவன் பாரதிதாசன் எனில், அத்தமிழை உயிர்மூச்சாகக் கொண்டு தமிழிற்குத் தொண்டாற்றியவர் ந. சுப்புரெட்டியார் என்பதில் ஐயமில்லை. தமிழ் எனும் அரண்மனையில் ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் பலத் தூண்களாகவும், சிம்மாசனங்களாகவும், மகுடங்களாகவும் அழகுசெய்கின்றன. காலத்திற்கும் செய்து கொண்டிருக்கும் என்பதிலும் எந்த மாற்றமுமில்லை.

# 6. அறிவியல் நோக்கில் இலக்கியம்



**த. சரளாதேவி**
*ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*வேலூர் மாவட்டம்.*

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும் ஆற்றிய பணிகள் அளவிடற்கறியது. இவர் மிகவும் கடினமான பொருள்களையும் இனிமையாகவும் எளிமையாகவும் தெளிவாகவும் மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் எழுதுவதிலும் பேசுவதிலும் தனிச்சிறப்புகள் பெற்று விளங்கியவர். இவர் பல துறைகளிலும் பல நூல்களை எழுதி பல பரிசுகளும் பட்டங்களும் விருதுகளும் பெற்றவர். இத்தனை புகழ் பெற்றும் செருக்கின்றி ஆரவார ஆடம்பர வாழ்க்கையை அறவே ஒதுக்கி எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தவர். இவருடைய தமிழ்ப் பணியில் அறிவியல் அறிவே அதிகமாக இருக்கும். இவர் சென்னை பல்கலைக்கழகத்தில் ''அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்'' என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவுகளில் நூல்வடிவத்தில் உள்ளதில் அறிவியல் நோக்கில் இலக்கியம் என்பதிலிருந்து நம் முன்னோர்களுக்கு இருந்த வானநூல், பொறியியல், உயிரியல், மருத்துவம், வானொலி, தொலைக்காட்சி இன்னும் இதுபோன்றவைகளில் அவர்கள் பெற்றிருந்த அறிவை இலக்கியங்களில் இருந்தும் காப்பியங்களில் இருந்தும் ஆராய்ந்து மொழிந்தவற்றை ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

## பண்டைய அறிவியல் அறிஞர்கள்

கல்தோன்றி மண்தோன்றா காலத்தே, வாளோடு முன்தோன்றிய மூத்தக்குடி என்பதற்கேற்ப நம் தமிழர்கள் நாகரீகத்தில் சிறப்புற்று விளங்கினர் என்பது வரலாற்று அறிஞர்கள் ஒப்புக்கொண்ட உண்மை. அவர்கள் இன்று இருப்பது போல அறிவியல் முறைகளைக் கலைகளாக வளர்த்திருந்தனர் என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லையென்றாலும் அவர்கள் அக்கலைகளைப் பற்றி ஓரளவு அறிந்திருந்தனர் என்பதற்கும், அவை அவர்களது வாழ்க்கையில் பயன்முறை அறிவியலாய் மிளிர்ந்தன என்பதற்கும் பல்வேறு இலக்கிய சான்றுகள் உள்ளன. இதனையே புறநானூறில் உரையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர் அறிவியல் அறிஞர்கள் அக்காலத்தில் திகழ்ந்தனர் என்பதை,

''***செஞ்ஞா யிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்***
***பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்***
***வளிதிரிதரு திசையும்***

*வறிது நிலைஇய காயமும் என்றிவை*
*சென்றளந்து அறிந்தோர் போல என்றும்*
*இனைத்துஎன் போரும் உளரே''* *(புறம்-30:1-7)*

கதிரவன், ஆகாயம், காற்று இயங்கும் திசை இவைகளைப் பற்றி ஆய்ந்தறிந்தவர்கள் இருந்தனர் என்ற புலவரின் கூற்றிலிருந்து பண்டைய காலத்தில் அறிவியல் அறிஞர்கள் இருந்ததைப் பற்றி பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் கூறியுள்ளமை வியந்து போற்றத்தக்கதாகும்.

## வானநூல் அறிவு

வானநூலறிவு என்பது அண்ட வெளியில் அல்லது வெற்றிடத்தில் உள்ளதை ஆராய்ந்து அறிவதாகும். கலிலியோ என்பவர் சூரியன்தான் பூமியைச் சுற்றி வருகின்றது என்றும், கோபர் நிக்கஸ் என்பவர் பூமிதான் சூரியனைச் சுற்றி வருகின்றது என்றும் கூறினார்கள். இவை பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்ட பிறகே பலரும் அதனை ஏற்றுக் கொண்டனர். ஆனால் நம் முன்னோர்கள் எந்தவிதமான ஆராய்ச்சியோ புத்தகமோ இல்லாமல் அவரவர்களின் அனுபவங்களின் மூலம் கூறியிருப்பதை தொகுத்து பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் வழங்கியுள்ளமை அறியத்தக்கதாகும். அதாவது இருபத்தேழு நட்சத்திரங்களைப் பற்றியும் அழகாகவும், தெளிவாகவும் விளக்கியுள்ளார். இதனை,

*''மதிசேர் நாண்மீன் போல்''* *(புறம்-160:8)*

என்று திங்களைச் சேர்ந்த நாளாகிய மீனைப் போல எனப் புறநானூற்று பாடலின் மூலம் கூறுவதிலிருந்து அறியத்தக்கதாகும். மேலும் இதனை,

*''மதியம் பெற்ற வானகம் போல''(பெருங்-1:57:109)*

என்று பெருங்கதையின் மூலம் அறியத்தக்கதாகும். மேலும் கோள்களின் இயக்கத்தால்தான் இயற்கையான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதை,

*''வெள்ளி தென்புலத் துறைய விளைவயல்*
*புள்ளம் வாடிய பயனில் காலை''* *(புறம்-388:1-2)*

என வெள்ளி என்பது ஒரு மழைக்கோள் என்றும் அது தெற்கே விலகியிருந்தால் மழை இல்லாமைக்கு அறிகுறி என்றும் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இதனை,

*''விளக்குறு வெள்ளி முளைத்து முன்தோன்ற*
*வடகமீக்கோள் வாளொடு களைந்து''(பெருங்-1:53:81-82)*

என்று பெருங்கதையில் வெள்ளி முளைத்தலைப் பற்றி கூறுவது அறியத்தக்கதாகும். மேலும் அகிலம் என்பது வெட்ட வெளியும் அதனுள் அடங்கியிருக்கும் அண்டங்கள் யாவும் சேர்ந்ததாகும். கோடிக்கணக்காண விண்மீண் மண்டலங்களும் அவற்றிலிருந்து விடுபெற்ற தனித்தனி

மண்டலங்களும் வால்மீன்களும் விண்கற்களும் எண்ணற்றவை கதிரவன் மண்டலத்தையே சுற்றி சுழன்று கொண்டிருக்கின்றன. இவற்றின் பிறப்பு, மூப்பு, சாக்காடு இவைகளைப் பற்றிய செய்திகளை இன்றைய வானநூல் அறிஞர்கள் ஆராய்ந்து அறிந்து வெளியிட்டுக் கொண்டிருக்கப் படுகின்றன. இதனை,

***"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்***
***அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி***
***ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்***
***நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன"***
***(திருவா-திருவண்டப்பகுதி:1-4)***

என்று மாணிக்கவாசகரின் திருவாசகத்திலிருந்து அறியத்தக்கதாகும். பண்டைக் காலத்தில் இருந்து இன்றைய காலகட்டம் வரை பல்வேறு தொழில் நுட்பங்களின் வளர்ச்சியினாலும், பல்வேறு புத்தகங்களின் அறிவினாலும் பலகோடி கணக்கான செலவில் பல அறிவியல் அறிஞர்கள் வானவியல் அறிவைப் பற்றி பல்வேறு விதமான கருத்துக்களை வழங்கி வருகின்றார்கள். ஆனால் இவற்றின் ஒட்டுமொத்த கருத்துக்களைப் பற்றியும் நம் முன்னோர்கள் கூறியிருந்ததை பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் ஆய்ந்தறிந்து தொகுத்து கூறியுள்ளது சிறப்பானதாகும்.

## பொறியியல் அறிவு

நம் முன்னோர்கள் பொறியியல் அறிவியலிலும் சிறந்து விளங்கியிருந்தனர் என்பதை,

***"பண்தவழ் விரலின் பாவை பொறிவலம் தீர்ப்பப் பொங்கி***
***விண்தமிழ் மேகம் போழ்ந்து விசும்பு இடைப்பறக்கும் வெய்ய***
***புண்தவழ் வேல்கண்பாவை பொறுஇடம்திரிப்பத்தோகை***
***கண்டவர் மகுளவீழ்ந்து கால்குவித்து இருக்கும் அன்றே"*** ***(சீவக.சிந்-239)***

சீவகசிந்தாமணியில் விசயை கவர்ந்து சென்ற மயில் பொறியும், பெருங்கதையில் குறிப்பிடப் பெறும் யூகியால் அமைக்கப்பட்ட இயந்திர யானையும், புறநானூறு கூறும்,

***"வலவன் ஏவா வானவூர்தியும்"*** ***(புறம்-27)***

இராமாயணத்தில் காட்டப்பெறும் புட்பக விமானமும் போன்றவைகள் பொறியியல் அறிவினால் அமைக்கப் பெற்ற சாதனங்கள் என்று கருதலாம். அவ்வாறு அமைக்கப் பெறாவிடினும் அமைக்கலாம் என்ற அறிவியல் கற்பனையாவது எழுந்திருக்க வேண்டும் என்று கருத இடமளிக்கின்றது என்பதை பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் இலக்கியங்கள், காப்பியங்கள் மூலம் ஆய்ந்தறிந்து கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

## உயிரியல்

உயிரினங்களின் தோற்றங்களைப் பற்றி பல்வேறு அறிவியல் அறிஞர்கள் பலவிதமான கருத்துக்களைக் கூறியிருப்பதும் அதில் டார்வின் பரிணாமக் கொள்கை வளர்ச்சியும் குறிப்பிடத்தக்கதாகும். இதனை,

***"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய்ப் மரமாகிப்***
***பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்***
***கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்***
***வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்***
***செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்***
***எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்"***
***(திருவா-சிவபு:26-31)***

என்று மாணிக்கவாசகர் பரிணாம வளர்ச்சி பற்றி கூறுவதை பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் இங்குக் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பல்வேறு விதமான மருத்துவ தொழில் நுட்ப வளர்ச்சியினால் குழந்தை பிறப்பு என்பது இல்லாத மலட்டு தன்மையுள்ள தம்பதியருக்கும் இன்று குழந்தை பிறப்பு என்பது உண்மையாக்கப் பட்டுள்ளன. அன்றே பலராமனின் பிறப்பை பற்றிக் கூறுகையில் ஏழாவது முறையாகக் கருவுற்ற தேவகி கம்சனுக்கு பயந்து கொண்டிருந்தபோது அக்கருவில் வளர்ந்த குழந்தையை வசுதேவனின் மற்றொரு மனைவியான ரோகிணியின் கருப்பைக்கு மாற்றப்பட்டுப் பலராமன் பிறந்ததை இன்றைய மருத்துவ வளர்ச்சியினால் வாடகைத் தாய் மற்றும் பரிசோதனைக்குழாய் மூலமும் குழந்தை பிறப்பு என்பது அறிவியல் முறையில் மெய்பிக்கப்பட்டுள்ளதை இதன் மூலம் அறியமுடிகின்றது.

## மருத்துவ இயல்

நம் முன்னோர்கள் இயற்கையைச் சார்ந்து வாழ்ந்து வந்தனர். அதனால் மருத்துவ குணம் கொண்ட இயற்கை மூலிகைகளைப் பற்றி அறிந்து அவற்றைப் பயன்படுத்தி வந்தனர் என்பதை நம் இலக்கியங்களின் மூலம் அறியலாம். மேலும் திருக்குறளில் மருந்து என்ற அதிகாரத்தில் நோய்கள் வருவதன் காரணங்களையும், அவை வராது தடுக்கும் முறைகளையும், அவை வந்தால் தவிர்க்கும் வழிவகைகளையும் பற்றிய செய்திகள் தரப்பட்டுள்ளன. இதனை,

***"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள்:948)***

எனத் திருவள்ளுவரும் நோயின் இயல்பையும் அதற்கான காரணத்தையும் ஆராய்ந்து அதனைப் போக்குவதற்கான வழிகளையும் ஆராய்ந்து உடலுக்கேற்றபடி மருத்துவம் பார்க்க வேண்டும் என்பது பண்டைய மருத்துவ முறையாகும் என்று கூறுவது குறிப்பிடத் தக்கதாகும். இன்றைய மருத்துவ முறையும் இதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

மேலும் இதனை,

***"உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்***
***கற்றான் கருதிச் செயல்" (குறள்-946)***

என்று நோயுற்றவனுடைய வயது, வேதனை, வலி, கால வேறுபாடுகள் முதலியவற்றையும் அறிந்து அதற்கேற்றாற் போல் சிகிச்சை செய்தல் வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளமை பற்றி மருத்துவ இயலை ஆய்ந்தறிந்து பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் இங்குக் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## வானொலியும் தொலைக்காட்சியும்

பெருகிவரும் தொழில்நுட்ப வளர்ச்சிகளினால் இன்று வீட்டில் இருந்தபடியே உலக நிகழ்வுகளை உடனுக்குடன் தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் அறிந்து கொள்கிறோம். ஆனால் இதனையே நம் முன்னோர்கள்,

***"ஒன்றைத்தின் றால்இவ் உலகமக்கள் பேசுவது***
***நன்றாகக் கேட்குமற் றொன்றவைா யில்போட்டால்***
***மண்ணுலகக் காட்சிஎலாம் மற்றிங் கிருந்தபடி***
***கண்ணுக் கெதிரிலே காணலாம்"***
***(சஞ்சீவி பர்வதத்தின் சாரல்-43-47)***

என்று பாரதிதாசன் கவிதைகளின் முதற்பகுதியில் இரண்டு மூலிகைகளைப் பற்றியும் அதில் ஒரு மூலிகை வானொலியையும் மற்றொரு மூலிகை தொலைக்காட்சியையும் குறிப்பிடுவதை நாம் அறியத்தக்கதாகும். இதன் மூலம் அவருக்குத் தோன்றிய கற்பனைதான் நாளடைவில் அறிவியல் அறிஞர்களின் ஆராய்ச்சியின் மூலம் வானொலி, தொலைக்காட்சியாய் வடிவெடுத்தது என்று கருதுவதற்கு இடமுள்ளது என்று பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் இங்குக் கூறுவது அறியத்தக்கதாகும்.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள், "பண்டைய தமிழர்களிடம் அறிவியல் அறிவு நிறைந்திருந்தது என்பதற்கும் அதனை அவர்கள் நன்கு வளர்த்தனர் என்பதற்கும் தனிநூல்களின் சான்றுகள் இல்லாது போயினும் அவர்களின் அறிவியற்கலைகள் பயன்முறை கலைகளாய் இருந்தன என்பதை பண்டைய அறிவியல் அறிஞர்கள், வானனூலறிவு, உயிரியல், மருத்துவயியல் மற்றும் வானொலியும் தொலைக்காட்சியும் என்ற தலைப்புகளில் ஆய்ந்தறிந்து கூறியதை இதன்மூலம் அறியத்தக்கதாகும்.

# 7. ந.சுப்புரெட்டியாரின் நோக்கில் பழந்தமிழர் திருமண முறைகள்



**க. புஷ்பலதா**
*முனைவர் பட்ட ஆய்வாளர் (ப.நே), தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர்.*

தொல்காப்பிய பொருளதிகாரத்தைத் தமிழ் கூறும் நல்லுலகம் மேலும் அறிய வேண்டும் என்ற நோக்கில் ந.சுப்புரெட்டியாரின் ''தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை'' என்ற நூல் எழுதப்பட்டுள்ளது.

தொல்காப்பிய மரபியலில்,

***''சூத்திரத்துட் பொருள ன்றியும் யாப்புற***
***இன்றியமையாதியைபவை யெல்லாம்***
***ஒன்ற உரைப்பது உரையெனப்படுமே''***
***(தொல். மரபியல். நூ.649)***

மற்றும்

***''தெற்றென வொரு பொரு ளொற்றுமை கொளீஇத்***
***துணிவொடு நிற்றல்'' (தொல். மரபியல். நூ.650)***

என்ற நூற்பாக்களுக்கு ஏற்ப விரிவாக ஆய்ந்துள்ளார் ந.சுப்புரெட்டியார்.

இலக்கண வடிவில் கூறப்பட்டதை பல்வேறு இலக்கியங்களை எடுத்துக் காட்டியதன் மூலம் ந. சுப்புரெட்டியாரின் தொல்காப்பியப் புலமை, சங்க இலக்கிய நுண்ணறிவு, திருக்குறள் ஈடுபாடு முதலியன வெளிப்படுவதை இந்நூலில் காண முடிகிறது. இவ்வகையில் ந.சுப்புரெட்டியாரின் திறனாய்வு அடிப்படையில் ''பழந்தமிழரின் திருமணமுறைகள்'' குறித்து அறிவதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

## திருமண முறைகள்

பழந்தமிழர்களின் வாழ்க்கை முறையில் களவுக் காலத்திலே இரு வகையான திருமண முறைகள் உண்டு. களவு வெளிப்படுவதற்கு முன் வரைதல், களவு வெளிப்பட்ட பின் வரைதல் என்பன.

## களவு வெளிப்படுவதற்கு முன் வரைதல்

தலைவன் தலைவியை உடன்கொண்டு தன்னூரில் திருமணம் செய்தல் களவு வெளிப்படுவதற்கு முன் வரைதலாகும். இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பகற்குறி, இரவுக்குறிக்குப்பின் தோழியால் வரைவுகடாதல் அனைத்தும் இம்முறையில் அடங்கும்.

இந்த வரைவினைக் குறித்து, “களவு வெளிப்படா முன்னுற வரைதல் என்பது பலராலும் சிலராலும் அறியப்பட்டது இவ்வொழுக்கம் என்னும் கருத்து எய்தா முன்னம் வரைதல் என்றவாறு..... ஈதெல்லாம் களவு வெளிப்படா முன்னுற வரைதல் விகற்பமெனக் கொள்க” இறை-களவியல் - நூற் - 24 (உரை) என்று ந. சுப்புரெட்டியார் இத்திருமண முறைக்கு இறையனார் களவியளுரையைச் சான்று காட்டுகிறார்.

களவு வெளியாவதற்கு முன் வரையும் நிகழ்ச்சியில் தலைவன் தலைவியை மணம் முடித்துத் தருமாறு தலைவியின் சுற்றத்தாரிடம் வேண்டுவான் தலைவி வீட்டார் அதிக பரியம் கேட்கும் நிலையில் வரை பொருட் பிரிவினை மேற்கொண்டு பொருள் ஈட்டி வருவான் தலைவன். இதனை,

***“வெளிப்படை தானே கற்பினோடு ஒப்பினும்***
***ஞாங்கர்கிளந்த மூன்று பொருளாக***
***வரையாது பிரிதல் கிழவோர்க் இல்லை”***
***(களவியல் - நூா 51, இளம்.)***

என்ற நூற்பாவை எடுத்தாள்கிறார் ந.சுப்புரெட்டியார்.

## களவு வெளிப்பட்ட பின் வரைதல்

தலைவி அறத்தொடு நிற்பதை எல்லாரும் ஒத்துக் கொண்ட பின் மணந்துக் கொள்ளுதலே களவு வெளிப்பட்ட பின் வரைதல் ஆகும். மற்றும் ‘உடன் போக்கின்’ இறுதியில் தலைவியின் சுற்றத்தார் தலைவியின் ‘கற்பொடு புணர்ந்த கௌவையை’ நேரில் அறிந்ததும் உடன் போக்கிற்கு ஒருப்பட்டு தம்மூர் மீள்வர். சில நாட்கள் கழித்து தலைவியின் சுற்றத்தார் தலைவியின் இருப்பிடத்திற்குச் சென்று தலைவனிடம் தம்மூரகத்தே மணம் புரிந்து கொள்ளும்படி வேண்ட தலைவனும் இசைந்து தலைவியின் ஊரில் தலைவியை வதுவை புரிந்து வாழ்வான்.

தலைவியின் சுற்றத்தார் மணம் புரிந்துக் கொள்ளுமாறு வேண்டாமல் போனால் தலைவன் தலைவியை அவன் மனையிலே “வதுவை மணம்” புரிவான்.

களவு வெளிப்பட்ட பின் தலைவியின் தமர் உடன்பட்டுக் கொடுத்தலே முற்காலத்துப் பெருவழக்காக இருந்தது.

***“மறை வெளிப்படுத்தலும் தமரிற் பெறுதலும்”***
***(செய்யுளியல், 179. இளம்.)***

என்ற நூற்பாவைச் சான்றுகாட்டுகிறார் ந.சுப்புரெட்டியார்.

## களவு வழி வாராத மணம்

இன்று தமிழர்களிடையே பெருவழக்காக இருந்து வரும் திருமணம் களவு வழி வாராத மணமாகும். இரு தலைமக்களின் பெற்றோர்கள் உடன்பட்டு கொடுக்கும் முறையாகும். இது குறித்து,

"களவொழுக்கம் இல்லாது மணம் செய்து கொள்ளுதலும் உண்டு. இது சிறுபான்மை ஒரு சிலரிடையே அன்று நிகழ்ந்து வந்தது. இது களவின் வழி வாராத மணம் என்று வழங்கப்பெறும்" (ந.சுப்புரெட்டியார் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.176) என்பர் ந.சுப்புரெட்டியார். இத்தகு வழக்கமே இன்று தமிழர்களிடையே அமைந்த திருமணமுறையாகும்.

## சிலம்பு கழி நோன்பு

முற்காலத் திருமணம் இரு கூறுகளாக நடைபெற்றுள்ளது. முதற் கூறு "சிலம்பு கழித்தல்" என்ற சடங்கினை உடையதாகவும் இரண்டாம் கூறு திருமணம் நிகழ்த்தல்" என்னும் நிகழ்வினை உடையதாகவும் நடைபெற்றுள்ளது.

திருமணத்திற்கு முன்பு தலைவிக்கு பெற்றோர் அணிவித்த சிலம்பு கன்னிமைச் சிலம்பு என்றும் திருமணத்தின் போது கணவன் அணிவிக்கும் சிலம்பு கற்புச்சிலம்பு என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

சிலம்பு கழி நோன்பினை தன் இல்லத்திலேயே நடத்தவே தலைவியின் பெற்றோர் விரும்புவர்.

திருமணத்திற்கு முன்பு தலைவியின் காலில் பெற்றோர்கள் அணிவித்த சிலம்பை நீக்குவதற்குச் செய்யப்படும் சடங்கு "சிலம்பு கழி நோன்பு" ஆகும்.

தலைவன் வீட்டில் "வதுவை மணம்" நடந்தால் தலைவனின் தாய் சிலம்பு கழி நோன்பு செய்வது பண்டைய வழக்கமாக இருந்திருக்கிறது. இத்தகு நிகழ்வை இறையனார் களவியல் உரை (நூற்பா 23-ன் வரை) ஐங்குறுநூறு(399), நற்றிணை (279) என்று சான்றுகளுடன் விளக்குகிறார் ந.சுப்புரெட்டியார்.

## பரியம் வேண்டுதல்

"வரை பொருட் பிரிவிற்கு" சென்று பொருளீட்டி வந்த தலைவன் சுற்றத்தார்கள், அறநிலை சான்ற சான்றோர்களோடு மணம் பேசுவான்.

தலைவியின் சுற்றத்தார் கேட்கும் "பரியத்தை"த்தர ஒத்துக் கொண்டால் திருமணம் நடைபெறும்.

பரியம் என்ற மணப்பரிசினை தலைவி வீட்டார் கேட்கும் அளவிற்குக் கொடுக்காவிட்டால் நாள் சகுனம் பார்த்து வர வேண்டும் மகளுக்கு இந்த ஆண்டில் திருமணம் செய்யவில்லை என்று கூறி தலைவியின் பெற்றோர் பெண் கொடுக்க மறுப்பதும் உண்டு. இக்கருத்திற்கு,

***"வரைவெதிர் கொள்ளாது தமரவன் மறுப்பினும்"***
***(இறை.களவு.நூற்பா.29-இன் உரை)***

சான்று காட்டுவார் ந.சுப்புரெட்டியார்.

## கரணம் தோன்றிய முறை

"பழங்காலத்தில் தன் வாழக்கைத் துணைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தலைவன், தலைவி இருவருக்கும் உண்டு. களவு வழிப்பட்டு கற்பு வாழ்க்கை நடத்தினர். இந்நிலையில் களவொழுக்கம் ஒழுகி வாழ்க்கை நடத்திய பிறகு தலைவியைக் கைவிட்ட தலைவனும் உண்டு. இது சமூகத்திற்குத் தவறான அணுகுமுறையை உருவாக்கிவிடும் என்றஞ்சிய பெரியோர்கள் பலர் முன்னிலையில் பெற்றோர் உடன்பட்டு பெண்ணைக் கொடுக்க வேண்டும் என்ற முறையை உருவாக்கினர். இதனை

***"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்***
***ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (தொல்.கற்பியல்.நூற்-4)***

தலைவி வீட்டில் நடைபெறும் திருமணத்திற்கு முதல் நாளே வருகைதரும் தவைன் சுற்றத்தார் வரும்போது இன்னிசைமிக்க மணமுரசுடன் வரவேற்பர் தலைவி வீட்டினர் மணமிக்க மலர்கள், பழங்கள், நறுமணக்கலவைகள், தின்பண்டங்கள் கொடுத்து வரவேற்பர், இறைவனை வணங்கிய பின்னர் திருமண சடங்குகள் நடைபெறும். இத்தகு சடங்குகளைக் "கரணம்" என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

குலப்பெரியோர்கள் ஏற்படுத்திய "மணவினையாகிய கரணத்திற்கு தலைவன் தலைவி இருவருக்கும் பத்து வகைப்பண்புகள் ஒத்திருக்க வேண்டும்" என்பதை,

***"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு***
***உருவு நிறுத்த காமவாயில்***
***நிறையே அருளே உணர்வொடு திருவென***
***முறையுறக்கிளந்த ஒப்பினது வகையே"***
***(தொல்.மெய்ப். நூற்-25)***

தொல்காப்பிய நூற்பாக் குறிப்பிடுகிறது. ஊழின்வலியாய்க் கூட்டப்பெறுவர் என்ற நம்பிக்கை பழந்தமிழரிடையே இருந்தது.

## திருமண நிகழ்ச்சி

பழந்தமிழர்களின் திருமணமுறை அகநானூற்றில் இரண்டு பாடல்களில் குறிக்கப்பெற்றமையைச் (86 136) சான்றாகக் காட்டுகிறார் ந.சுப்புரெட்டியர்.

உறவினர் வாகையின் இலையையும் அறுகின் மொட்டையும் கலந்து தொடுத்த காப்பு நூலைத் தலைவிக்குச் சூட்டி ஆடையால் அலங்கரித்து அணிகலன்கள் அணிவித்து தலைவியைத் தலைவனுக்குக் கொடுத்தனர்.

பெரிய திருமணப்பந்தலில் மணலைப் பரப்பி வீட்டில் விளக்கை ஏற்றினர். மாலைகளைத் தொங்கவிட்டனர்.

முதிய மங்கல மகளிரால் திருமணம் நடத்தப்படும். ஆண்மகனைப் பெற்ற நான்கு மகளிர் ஒன்று கூடி “நீ கற்பினின்று வழுவாது ஒழுகிப் பலவகைப் பேறுகளையும் பெற்று உன்னை மணந்து கொண்ட கணவனை விரும்பிப் போற்றும் விருப்பம் உடையவள் ஆவாள்” என்று வாழ்த்தி மலர்களை நெல்லோடு கலந்து கரிய கூந்தலில் தூவினர் என்று அகநானூற்றுப் பாடல்களைச் சான்று காட்டுகிறார் ந.சுப்புரெட்டியார்.

## அறநெறித் திருமணம்

தலைவியை ஒருவரும் அறியாமல் உடன் அழைத்துச் சென்று தலைவியின் சுற்றத்தார் இன்றி திருமணம் செய்வது தொல்காப்பிய காலத்தில் அறநெறியாகக் கருதப்பட்டுள்ளது.

***“கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே***
***புணர்ந்துடன் போகிய காலையான”***
***(தொல்.கற்பியல்.நூற்பா-2)***

என்ற தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக்காட்டுகிறார் ந.சுப்புரெட்டியார்.

## கற்பு வாழ்க்கை

கணவனையே தெய்வமாகக் கொண்டு வாழ வேண்டும் என்று தலைவிக்குப் பெற்றோர் கற்பிக்கின்றனர். அந்தணர், சான்றோர், விருந்தினர், அருந்தவத்தோர் ஆகியோரிடம் நடந்து கொள்ளும் முறைகளைத் தலைவன் தலைவிக்குக் கற்பிக்கின்றார். இதற்கு நச்சினார்க்கினியர் உரையைச் சான்று காட்டி விளக்குகின்றார் ந.சுப்புரெட்டியார்.

வள்ளுவரும் “கற்பென்னும் திண்மை” என்று கூறியதை எடுத்துக்காட்டுகிறார் ந.சுப்புரெட்டியார்.

## தொகுப்புரை

- வளர்பிறையிலேயே திருமணம் நடத்தப்பட்டுள்ளது.
- மழை, மிகுகுளிர், மிகுபனி, இல்லாத தை முதல் ஆனி வரையிலான உழவர்களுக்கு ஓய்வு கிடைக்கும் காலங்களில் திருமணம் நடைபெற்றுள்ளது.
- மணமகள் வீட்டில் திருமணம் நடைபெற்றதை உறுதிப்படுத்த “பூரண பொற்குடம் வைக்க” என்ற சிற்றம்பலக் கோவைப்பாடலை எடுத்தாள்கிறார். ந.சுப்புரெட்டியார். மேலும் மணிமேகலை, சீவகசிந்தாமணி, நைடதம், இராமாயணம், பாரதம், திருவிளையாடல் புராணம் முதலிய இலக்கியங்களில் கூறப்பட்ட திருமண நிகழ்ச்சிக் குறிப்புகளை எடுத்துக்காட்டி மணமகள் வீட்டிலே நடைபெற்றதை உறுதி செய்கிறார் ந.சுப்புரெட்டியார்.
- சந்திரன் உரோகிணியுடன் கூடிய நல்லநாளில் திருமணம் நடைபெற்றதை அகநானூற்றுப்பாடலின் மூலம் உறுதிப்படுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்.

- நச்சினார்க்கினியர் கூறும் கரணம் என்பது வடநூற் கருத்துக்களை அடியொற்றி கூறுவதால் தமிழறிஞர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது ந.சுப்புரெட்டியாரின் கருத்தாகும்.
- மணமகளுக்கு பரியம் (திருமணம் பரிசு) மணமகன் வீட்டாரால் தரப்பட்டுள்ளது.
- கற்பு வாழ்க்கையைக் களவொழுக்கத்தின் கனி அன்பின் வெற்றி என்பார் ந.சுப்புரெட்டியார்.
- கற்பிற்கு விளக்கம் தந்தவிடத்து தலைவன் தலைவி இருவரும் மனம் கலங்கா நிலையில் உறுதியுடன் வாழ வேண்டும். இந்த திண்மையை உலகிற்கு எடுத்துக் காட்டும் விதமாகப் பிரிவின்றி இணைந்த நட்புடையராக வாழ்ந்தனர் என்பது ந.சுப்புரெட்டியாரின் கருத்தாக அமைகின்றது.

# 8. அறிவுக்கு விருந்தும் கவிதை அனுபவமும்

**மூ. சுதா**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர்.*

## முன்னுரை

*அமிழ்தினும் இனியது நம் தமிழ்மொழி. அத்தமிழ் மொழியில் காலந்தோறும் நற்றமிழ் நாவலர்கள் பலர் தோன்றி புகழ் பெற்றுள்ளனர். அவ்வரிசையில் தமிழின் துறைதோறும் தன் ஆய்வை மேற்கொண்டு பல படைப்புகளைப் படைத்து தமிழ்த் தொண்டாற்றியவர் பேராசிரியர் ந.சுப்புரெட்டியர். அவர் தம் படைப்புகளில் ஒன்றான “அறிவுக்கு விருந்து” என்ற நூல் மனப் பயிற்சி வளர்ச்சிக்குத் துணை செய்யும் ஓர் சிறந்த நூலாக விளங்குகின்றது. அந்நூலில் திறனாய்வுப் பகுதியில் கவிதை பற்றிய கருத்துக்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.*

## ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணி

*துறையூர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணிபுரிந்த பத்தாண்டு காலத்தில், தமிழன்னையின் மடி மீது தவழ்ந்து தமிழ் அமிழ்தம் பருகியவர். அக்காலத்தில் எம். ஏ., வித்துவான் பட்டங்களைப் பெற்றார். அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிய பொழுது ஆசிரியம், உளவியல், அறிவியல், இலக்கிய ஆராய்ச்சி, இலக்கியத்திறனாய்வு ஆகிய துறைகளில் பல நூல்களை அணி அணியாய் இயற்றித் தமிழன்னையை மகிழ்வூட்டியவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில், நம்மாழ்வாரின் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி) பட்டம் பெற்றார். தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு அதன் விளைவாக ஆங்கிலத்தில் பல அரிய கட்டுரைகளையும், மலை நாட்டுத் திருப்பதிகள், தொண்டை நாட்டுத் திருப்பதிகள் போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். இனிமை, எளிமை, தெளிவு இவை இவருடைய நூல்களின் தனிச்சிறப்பாகும். இவை மட்டுமின்றி தமிழிழுக்கு இறவாப் புகழுடைய நூல்களை வெளியிட்டு சிறந்த தமிழ்ச் சான்றோனாக விளங்கியவர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் ஆவார்.*

## கவிதையைச் சுவைக்கும் முறை

*கவிதை அனுபவத்தைக் கூறுவது என்பது தேனின் இனிமையைப் பற்றி கூறுவது போல் இருக்கும். தேன்; உண்டு அனுபவிக்க வேண்டிய*

பொருள். அதுபோலவே கவிதையும் படித்து அனுபவிக்க வேண்டிய ஒன்று. கவிதையின் அனுபவத்தைச் சொற்களால் வரையறைப்படுத்தி அளந்து காட்ட இயலாது.

கவிதை இன்னது என்று ஓரளவு அறிந்து கொண்டு அதனைச் சுவைப்பது ஒருவகை. அதனை அறியாமலே சுவைப்பது மற்றொரு வகை. பெறும் அனுபவம் ஒரே விதமாக இருந்தாலும், அனுபவத்தின் தரத்தில் வேறுபாடு இருக்கும்.

உதாரணமாக, ஓவல்டின் என்ற பானத்தில் உள்ள சத்துக்களைப் பற்றி தெரிந்து கொண்டு பருகுபவர்களும் உண்டு, அதைப் பற்றி தெரியாமல் சுவைக்காக மட்டுமே பருகுபவர்களும் உண்டு. அதைப் போலத்தான் கவிதையும்.

## வாழ்க்கையின் திறனாய்வே கவிதை

வாழ்க்கை என்பது நிலைபேறுடையது, மானிட இனம் இவ்வுலகில் உள்ளவரைத் தொடர்ந்து நடைபெறுவது. வாழ்க்கையில் இன்பமும் உள்ளது, துன்பமும் நிறைந்திருக்கிறது. அதில் அல்லல்களும், தொல்லைகளும் காணப்படுகின்றன. ஆன்மாவை கொல்லும் பாவம் என்ற புற்றுநோய் அங்கு உண்டு. ஆழங்காண முடியாத காதல் அங்குக் காணப்படும். வாழ்வை வளமாக்கும் நம்பிக்கை, புகழ் மணக்கச் செய்யும் துணிச்சல் போன்ற பண்புகள் அதில் இடம்பெறும். இத்தனையும் பல படலங்கள் போல் கவிழ்ந்துள்ள வாழ்க்கை நம்மைக் கவர்கின்றது. ஆனால் அஃது ஒன்று மட்டும் நமக்கு மனநிறைவினைத் தருவதில்லை.

இத்தகைய வாழ்க்கையைப் பற்றிய உண்மையைக் கவிதை எடுத்துரைக்கும் போது நாம் மனநிறைவு கொள்கிறோம். இதனால் தான் ஆங்கிலத் திறனாய்வாளர் மாத்யூ ஆர்னோல்டு என்பார் “வாழ்க்கையின் திறனாய்வே கவிதையாகும்” என்று கூறவதாக ந.சுப்புரெட்டியர் குறிப்பிடுகின்றார். மேலும் கவிதை அனுபவம் வாழ்வின் அவலங்களையெல்லாம் மறக்கச் செய்யும் மாமலையிலுள்ள மருந்து போன்றது என்றும் குறிப்பிடுகின்றார்.

## கவிதைக் கூறுகள்

உள்ளத்தில் உள்ளவற்றை உணர்ச்சி பொங்கத் தெள்ளத் தெளிந்த சொற்களால் எடுத்துரைப்பது தான் கவிதை ஆகும். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

***“உள்ளத் துள்ளது கவிதை-இன்பம்***
***உருவெடுப்பது கவிதை***
***தெள்ளத் தெளிந்த தமிழில்***
***தெளிந்து ரைப்பது கவிதை”***

என்று கவிதை இன்னது என்பதைக் காட்டியுள்ளார்.

கவிதையானது பல கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றுள் மிகவும் அடிப்படையான சில கூறுகளை ந.சுப்புரெட்டியார் விளக்கியுள்ளார். அவையாவன 1.உணர்ச்சி, 2.கற்பனை, 3.சொல்லாட்சி, 4.அணிகள், 5.கவிதை உணர்த்தும் கருத்துக்கள் ஆகியவை ஆகும்.

## உணர்ச்சி

**அ)** கவிதையின் உயிர் போன்ற பகுதி அதில் பொதிந்துள்ள உணர்ச்சி. உணர்ச்சியில்லாத கவிதை வெற்றெனத் தொடுக்கப் பெற்ற ஒரு சொற்கோவையே ஆகும்.

**ஆ)** வெகுளிச் சுவை, அவலச்சுவை, மருட்கைச் சுவை போன்ற சுவைகள் உள்ள கவிதைகளைப் படிக்கும் பொழுது நமது பெருமூளையில் பல்வேறு எண்ணங்கள் எழுகின்றன. கவிதையிலுள்ள கவிஞனின் உணர்ச்சிகள் கவிதை படிப்பவனிடமும் எழுகின்றன.

**இ)** அறிவுநிலை வேறு, உணர்வுநிலை வேறு என்பது அனைவரும் அறிந்ததே. நீதி நூல்களைப் படிக்கும் போது பல கருத்துக்களை அறிந்து கொள்கிறோம். அவை மூளைக்கு விருந்தாக அமைகின்றன. ஒரு காவியத்தைப் படிக்கும் பொழுது அங்குள்ள பல்வேறு நிகழ்ச்சிகள் நம்மை உணர்ச்சி வசமாக்குகின்றன. அப்போது நம் உணர்வு நிலை செயற்படுகின்றது.

**ஈ)** கவிதையைக் கனிவித்துப் படிப்போருக்கு இன்பத்தை அளிப்பது அதில் பொதிந்துள்ள உணர்ச்சி, அவ்வுணர்ச்சியால் உள்ளம் பூரிக்கும் பொழுது பொங்கி வரும் இன்பமே சுவையாகும்.

உணர்ச்சி மேலெழும் கவிதையைப் படிப்போரும் அதன் உணர்வு நிலையை அடைவர். அப்படிப்பட்ட கவிதைகளே கவிதை உலகில் சிறந்த இடத்தைப் பிடிக்கும் என்பது ந.சுப்புரெட்டியாரின் கருத்தாகும்.

## கற்பனை

**அ)** ஒரு காலத்து அனுபவத்தை மற்றொரு காலத்தில் பெறுதலும், ஓரிடத்து அனுபவத்தை பிறிதொரு இடத்தில் உற்று உணர்தலும் மனித உள்ளத்தின் சிறப்பியல்பாக இருக்கக் காண்கிறோம். இந்தச் சிறப்பியல்பே கலைத் துறையிலும், கவிதைத் துறையிலும் வளர்ந்து பண்படுங்கால் கற்பனைத் திறனாக அமைகின்றது.

**ஆ)** கற்பனையாற்றலை இன்னது என்று சொற்களால் கூற முடியாது. ரஸ்கின் என்ற மேனாட்டு நுண்கலைத் திறனாய்வாளர். "கற்பனையின் தத்துவம் அறிவுக்கு எட்டாதது, சொற்களால் உணர்த்த முடியாதது, அதன் பலன்களை மட்டிலும் கொண்டே அஃது அறியப் பெறுவதொன்றாகும்." என்று குறிப்பிடுவதாக சுப்புரெட்டியார் கூறுகின்றார்.

**இ)** கற்பனை என்பது இல்லாததை இருப்பதாகவும், இருப்பதை இல்லாததாகவும், எண்ணும் பொறுப்பற்ற விளையாட்டன்று. உள்ளதை உள்ளவாறு கூறாமல் அதனை உள்ளம் விரும்பி

உவகை அடையுமாறும், பிறர்க்கு நேருவதைத் தனக்கு நேருவது போல் உணருமாறும் கூறவல்ல ஆற்றலே-திறமையே கற்பனையாகும்.

**ஈ)** கற்பனை ஊற்று நம்மிடம் என்றும் சுறந்து கொண்டிருந்தால் தான் கவிதைகளை நன்கு சுவைக்கலாம், நுகரலாம். கற்பனையால் தான்,

***"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்***
***விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்."***

என்று சொல்லித் திளைக்கும் அளவுக்குக் கவிதைச் சுவை நம்மிடம் வளரும், கவிதை அனுபவமும் நம்மிடம் நிலைத்து நிற்கும்.

இவ்வாறு கவிதையில் கற்பனையின் முக்கியத்துவத்தை விளக்கி எடுத்துரைக்கிறார் ந.சுப்புரெட்டியார்.

## சொல்லாட்சி

**அ)** கவிதை என்பது காணும் பொருள்களை வருணிப்பதில் இல்லை. அப்பொருள்களைக் காணும்போது கவிஞனிடம் எழும் மனநிலையில் தான் அ∴து உள்ளது. அந்த மனநிலைக்கு ஒரு வடிவம் கொடுத்து அழகிய சொற்களால் ஓவியமாக அமைப்பதே கவிதையாகும்.

**ஆ)** ஏதோ ஒரு வகையான உண்மையை அடிப்படையாகக் கொண்டு செஞ்சொற்களால் உள்ளங்கவரும் முறையில் உயர்ந்த கவிதையை உண்டாக்குபவனே கவிஞன். இளங்கோ, கம்பன், சேக்கிழார், வள்ளுவன் ஆகியோர் சிறந்த கவிஞர்களாக விளங்கியதற்கு அவர்கள் கவிதையில் மேற்கொண்ட சொல்லாட்சியே காரணம்.

**இ)** பண்டைய இலக்கியங்களில் நிரம்பப் பயிற்சியும் தன் காலத்து வழங்கும் மொழிபற்றிய மிக ஆழ்ந்த அனுபவமும், தன் ஆன்மாவுடன் ஒன்றிக் கலந்துவிட்ட தமிழ் உணர்ச்சியும், இருக்கும் கவிஞனுக்குத் தான் சொற்களின் உயிர்த் தத்துவம் நன்கு புலப்படும். இத்தகைய கவிஞனிடம் தான் அவன் நினைத்தவுடன் வேண்டும் பொழுது சொற்கள் அவனது மனக்கண் முன் தோன்றும்.

## அணிகள்

**அ)** அணிகளும் கவிதைகளை அழகு செய்வதுடன் கவிதை அனுபவத்திற்குத் துணைசெய்கின்றன. உவமை, உருவகம், உயர்வு நவிற்சி, வேற்றுப் பொருள்வைப்பு, தற்குறிப்பேற்றம் போன்ற அணிகள் மிகவும் குறிப்பிடத்தக்கன.

## கவிதை உணர்த்தும் கருத்துக்கள்

ஓர் கவிதை என்பது தன்னகத்தே பல கருத்துக்களை அதாவது இயற்கை, செயற்கை, காதல், வீரம் போன்ற பலவற்றை

உள்ளடக்கியதாக இருக்காலம். ஒரு குறிப்பிட்ட செய்தியைக் கூறுவதாகவும் இருக்கலாம். இவ்வுலக வாழ்க்கை நீதியை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதால் ந.சுப்புரெட்டியர் அவர்கள் கவிதை எடுத்துரைக்கும் நீதி பற்றி விளக்குகிறார்.

**அ)** தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தமட்டிலும், தமிழ்க் கவிஞர்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதே இலக்கியத்தின் நோக்கம், என்ற கொள்கையினை உடையவர்களாக இருந்தனர்.

**ஆ)** தமிழ்க் கவிதைகளில் பெரும்பான்மையானவை பயிலும் போது இன்பந்தருவதுடன், உள்ளத்தைத் திருத்தும் பண்பைப் பெற்றிருப்பதால், படிப்போரின் வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவனவாக இருக்கின்றன. பேரிலக்கியங்களிலிருந்து சிற்றிலக்கியங்கள் வரை இப்பண்பு ஊடுருவியிருப்பதாக ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப்பணி போற்றுதற்கு உரியதாகும். கவிதையைச் சுவைக்கும் முறைபற்றி அவர் கூறிய கருத்துக்கள் சுவைமிக்கவை.

***"கோவையில் கோடை மழை***
***மயக்கும் மண் வாசனை***
***பகிர இடம் கொடுக்காத***
***தொழில் நுட்பம்***
***கண்ணுக்கும், காதுக்கும்***
***விருந்தளித்து***
***மூக்கை மூலையில் விட்டது!"***

என்ற வரிகளை என்னையும் எழுத வைத்தது ந.சுப்புரெட்டியாரின் கவிதை அனுபவமும், கவிதை கூறுகள் பற்றி அவர் தெளிவுபடுத்திய விதமுமே காரணம் என்றால் அது மிகையாகாது.

# 9. ந.சுப்புரெட்டியாரின் வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் - பன்முக ஆய்வு



**முனைவர் நயம்பு. அறிவுடைநம்பி**
*மண்டலச் செயலாளர்*
*உலகத் திருக்குறள் பேரவை*
*நயம்பாடி, செஞ்சி வட்டம்.*

உலகச் செம்மொழிகளுள் தமிழ்மொழி காலத் தொன்மையும் இலக்கிய வளமும் கொண்டது. இருபதாம் நூற்றாண்டில் தமிழ்ப் படைப்பாளர்களுள் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் குறிப்பிடத்தகுந்தவர். இவர் ஆசிரியர், இலக்கியம், சமயம், தத்துவம், திருத்தலப்பயணம், திறனாய்வு, வரலாறு, தன் வரலாறு, அறிவியல், ஆராய்ச்சி என்னும் பொருண்மைகளில் நூற்று இருபத்து மூன்று நூல்களைப் படைத்துள்ளார். அவற்றுள் வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் என்பது ஒப்பற்ற நூலாகும். அந்நூலைப் பற்றிப் பன்முக ஆய்வாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## பெருமை யாருக்கு

“பெருமை” என்ற சொல் கடவுளுக்கா? நீத்தார்க்கா? என்ற வினாவை அவரே எழுப்பிக் கொண்டு அதற்கு விடையும், விளக்கமும் கூறியுள்ளார். “சிலர் கடவுள் மாட்சியைப் பெருமை என்று கூறுவர். அது பொருத்தமன்று. காரணம் அவர் எக்காலத்தும் ஒரே தன்மையில் இருப்பவர். சிறுமையிலிருந்து பெருமைக்கு உயர்பவர் அல்லர். ஆகவே அடியார்கட்கு மட்டுமே பெருமை கூறுவது பொருந்தும். சிறுமையிலிருந்து பெருமைக்கு உயர்பவர்கள் அவர்களே. வள்ளுவர் பெருமான் அந்த இயற்கை நிலை புலப்பட நீத்தார்க்குப் பெருமை கூறினார். அவர் பெருமை அளவுபடாதது. நீத்தார் பெருமை என்னும் தொடர் பொருளழகு மிக்கது. கருத்துப் பிழையும் அற்றது (ப.27) என்று கூறியுள்ளார். இங்ஙனம் ஒவ்வொரு சொல்லின் பொருளையும், அது எவர்க்கு ஏன் அமைந்தது என்பதையும் நுட்பமாக ஆராய்ந்து விளக்கிச் சொல்லியுள்ளார். இவர் திருக்குறளில் ஆழங்கால்பட்டவர் என்பதை இதனால் உணர்ந்துகொள்ளலாம்.

## சொல்லுக்குப் பொருத்தமான பொருள் கூறும் திறன்

திருக்குறளிலுள்ள சொற்களுக்குப் பொருத்தமான பொருள் கூறுவது இவரது நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டும்.

***சிறப்பீனும் செல்வமும் பெறினும் அறத்தினூங்கு***
***ஆக்கம் எவனோ உயிர்க்கு (குறள், 31)***

இதில் செல்வம் என்பது பொருள் குறித்து வருதலால் சிறப்பு என்பது அருளைக் குறித்து என்று கொள்ள வேண்டும் (ப.3) என்று கூறியிருப்பது பொருத்தமானது ஆகும்.

அறம் என்பது எண்ணமா, சொல்லா, செயலா அறன் வலியுறுத்தல் அதிகாரக் குறள்பாக்களை அடிப்படையாக வைத்து அறம் என்பது என்ன என்று முடிவு கூறியுள்ளார். மனத்துக்கண் மாசிலன் (34) என்பதால் அறம் எண்ணமாகிறது. இன்னாச் சொல் இழுக்கா இயன்றது அறம் (35) என்பதால் அறம் சொல்லாகிறது. அறவினை (33) என்று குறிப்பிட்டுள்ளதால் அறம் செயலாகிறது. அன்றறிவாம் என்னாது அறம் செய்க (36), செயற்பால தோரும் அறனே (40) என்பனவற்றால் செயலுக்கே வள்ளுவர் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். எனவே அறம் எண்ணத்தில், சொல்லில், செயலில் அமைய வேண்டும். இம்மூன்றுள் அறச்செயலே மிகமிக வேண்டுவது என்று முடிவும் கூறியுள்ளார் (பக்.33-36). இந்த விளக்கங்கள் தந்து திட்டவட்டமான முடிவு கூறியுள்ள பாங்கு இவரின் நடுவுநிலைமைக் கொள்கையைப் புலப்படுத்துகிறது.

## பொருள் நயம் உரைத்தல்

பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் திருக்குறள் சொற்களுக்கும், தொடர்களுக்கும் கூறும் பொருள் நயம் அருமையானது. கற்றதனால் எனத் தொடங்கும் குறளில் நற்றாள் என்ற சொல் உள்ளது. "கற்றவர் தாள்களைவிட வாலறிவன் தாள் பேரின்பம் பயப்பதால் நல்ல தாள் என்று குறிப்பிட்டார். இத்தகைய பொருள் நயங்கள் ஒவ்வொரு குறட்பாவிலும் மின்னி மின்னிக் கற்போர்க்குக் கழிபேர் உவகையை நல்குகின்றன" (ப.17) என்றது மிகப் பொருத்தமானதாகும். கடவுளை வணங்கினால் நீடுவாழலாம். வினைகள் சேரா! மனக்கவலை தீரும். "மனிதப் பிறவியின் ஒரே நோக்கமாகிய பெரிய பயன் பிறவி நீங்குதலேயாகும். அது இறைவன் திருவடி அடைவதால் மட்டுமே கிடைக்கும். வேறு எதனாலும் அடையமுடியாது. அப்படியானால் கடவுள் என்பது பிறவாமை உடையது என்பது தானேபெறப்படும். அதோடு பிறப்பு இறப்பு உடையவர்கள் யாராக இருந்தாலும் அவர் கடவுள் அல்லர் என்பது அறியப்படும் (ப.20) என்ற கருத்து ஏற்கத்தக்கது. நாட்டில் சிலர் தாமே கடவுள் என்பதும், அத்தகையோரைப் பலர் பூசை செய்து வழிபடுவதும் நம் நாட்டில் காணப்படும் மூடநம்பிக்கைகள் என்பதைத் தெளிவுபடுத்தினார்.

## அதிகாரப் பொருண்மையை விளக்கும் பாங்கு

திருக்குறளில் இரண்டாம் அதிகாரம் வான் சிறப்பு என்பதாகும். சிறப்பு என்ற முடிபு கொண்ட ஒரே அதிகாரம் இதுவாகும் என்பதை

உள்ளத்தில் நிறுத்த வேண்டும். “இந்த வான்மழையில் என்ன ஆற்றல் உள்ளது என்று நன்கு ஆராய்ந்து பார்த்து அமிழ்த ஆற்றல் உள்ளதென்று உணர்த்தினார். மழையினால் உலகம் நெடுங்காலம் நிலைபெற்று வாழ்கிறது. அமிழ்தம் என்பது எதனையும் அற்றுப் போகாமல் நீள வாழ வைக்கும் தன்மையது. அறிவியல் ஆற்றலால் செயற்கை மழை பெய்விக்கலாம். ஆனால் அச்செயற்கை மழையில் அமிழ்த ஆற்றல் கூடுவதற்கு வழி இல்லை” (ப.24, 25) என்ற விளக்கமளித்துள்ளார். அந்த அமிழ்த ஆற்றல் இருப்பதால்தான் மழைக்குச் சிறப்பு என்று விளக்கிய திறம் பாராட்டிற்குரியது.

இறுதிக் குறள் வான் இன்றி அமையாது ஒழுக்கு என அமைந்துள்ளது. “ஒரு பொருளுக்கு தலைமை கூற வேண்டுமானால் அந்தப் பொருள் இன்றி மற்றப் பொருள்களால் காரியம் ஆகாததாய் இருக்க வேண்டும். அப்பொருள் இன்றி வேறு எப்பொருளாலும் காரியம் அமையாது என்பது கருத்து” (ப.25) என்று விளக்கிய திறம் கற்று உணரத்தக்கது. எனவே அமிழ்தம், வானின்றி என்ற சொற்கள் உணர்த்தும் காரணங்களால் மழைக்குச் சிறப்பு. ஆகவேதான் வான்சிறப்பு எனத் தலைப்புக் கொடுத்துள்ளார். இவ்வாறான அதிகார விளக்கம் இதுவரை எவரும் தெளிவாக விளக்கவில்லை என்பதை உணரவேண்டும்.

## பிறர் கருத்தை மதித்தல்

கொடுப்பது அழுக்கறுப்பான் (166) என்ற குறளை விளக்க கம்பராமாயணத்தில் வாமனன் கதையை (கிட்கிந்தா காண்டம், பா.48,61,62) எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார். அக்கதையில் திருமால் மாவலி மன்னனிடம் மூன்றடி மண் கேட்க வாமன வடிவம் கொண்டு சென்றதாக கதை உள்ளது. இக்கதைக்கு அறிவியல் மேதை ஜி.டி.நாயுடு தந்த விளக்கத்தைப் பெரிதும் மதித்து பேரா. சுப்புரெட்டியார் கூறியது அயலே வருகின்றது. “என் அருமை நண்பர் கோவை ஜி.டி. நாயுடு அவர்கள் சொன்னது, திருமால் சரியான வடிவத்துடன்தான் வந்தான். யாசிக்கப் போகிறோமே என்ற எண்ணத்தால் அவன் உள்ளம் சுருங்கிற்று. அதனால் உடம்பும் சுருங்கி வாமனனான். ஏற்பது இகழ்ச்சி என்ற கருத்தினையொட்டித் திரு நாயுடு அவர்களின் கருத்து அமைந்தது என்று கருதலாம்” (ப.67). பேரா. சுப்புரெட்டியார் காட்டிய கம்பர் பாடல்களும், அறிவியல் மேதை ஜி.டி. நாயுடு அவர்கள் சொன்னதும் மிகமிகப் பொருத்தமே. இங்ஙனம் பிறர் கருத்தையும் மதித்துக் குறிப்பிட்டுக்காட்டுவது இவரது பெருந்தன்மைப் பண்பைக் காட்டுகிறது.

## இலக்கியச் சான்றுகாட்டி விளக்கும் திறம்

பல்வேறு திருக்குறள்களுக்கு இந்நூலாசிரியர் பொருத்தமான பிற இலக்கியச் சான்றுகாட்டி விளக்கிய திறம் அருமையானது.

> ***“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை***
> ***செய்ந்நன்றி கொன்ற மகற்கு”*** **(குறள், 110)**

மிகப் பெரிய அறங்களைச் சிதைத்தவர்க்கும் கழுவாய் உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்குக் கழுவாய் இல்லை. ஆன்முலை அறுத்தல், மகளிர் கருவினைச் சிதைத்தல், குரவர் தப்பிய கொடுமை முதலியவற்றைப் பரிமேலழகர் சான்று காட்டுவார். இந்நூலாசிரியர் இக்குறளுக்குப் பொருத்தமாகக் கம்பர் பாடலைக் காட்டியுள்ளார். மழைக்காலம் நீங்கியவுடன் படையுடன் வருவதாகச் சொன்ன சுக்கிரீவன் வரவில்லை. இரமன் சொற்படி, இலக்குவன் சீற்றத்துடன் வருகிறான். அவன் சீற்றத்தை அனுமன் தாரை வாயிலாகத் தடுக்கிறான். "அந்தமிழ் கேள்வி நீயும் அயர்ந்தனை ஆம் அன்றே" என்பது இலக்குவன் வினா. அதற்கு விடையாக அனுமன்,

***"சிதைவகல் காதல் தாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்***
***பதவி அந்தணரை ஆவைப் பாலரைப் பாவை மாரை***
***வதைபுரி குநர்க்கம் உண்டாம் மாற்றாம் ஆற்றல்,மாயா***
***உதவி கொன்றோர்க்கு ஒன்று ஏனும் ஒழிக்கலாம்***
***உபாயம் உண்டோ?" (கம்ப. கிட்கிந்தா. 62)***

கூறுகிறான். இப்பாடலைப் பொருத்தமாகக் காட்டி, திருக்குறள் கருத்தை உணர்த்திய நூலாசிரியர் திறம் பாராட்டத் தக்கது (ப.62). இவர் சிந்தாமணி, நளவெண்பா முதலிய பல்வேறு நூல்களையும் மற்ற குறள்களுக்குக் காட்டியிருப்பது படித்து இன்புற வேண்டும்.

## எல்லா மொழிக்குமானப் பொதுக்குறைபாடு

எல்லாப் பொருளுக்களுக்கும் நேரடியான பொருள் தரும் சொல் எந்த மொழியிலும் இல்லை. இது பொதுவாக எல்லா மொழிகளுக்கும் உள்ள பொதுவான குறைபாடாகும். தமிழில் அண்ணன், தம்பி என்கிறோம். இதற்கு நேரடியான ஆங்கிலச் சொற்கள் இல்லை. Elder Brother, younger Brother என்றுதான் கூறமுடியும். "ஒருகாலத்தில் திருச்சி மாவட்ட வாரியத் தலைவராக இருந்த திரு. இராஜா சிதம்பரம் என்ற பெரியார் பையன் என்பதற்குப் பெண்பால் சொல் என்ன என்று கேட்டார். சொல்ல முடியவில்லை. தமிழில் சொல் இல்லை (ப.39) என்பதை நூலாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். இது பொதுவாக எல்லா மொழிகளுக்கும் உள்ள ஒரு குறைபாடாகும். அதைப்போலவே இல்லாள் என்பதற்கு நேரடியான சொல் தமிழில் இல்லை என்பதும் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே மனிதனால் உண்டாக்கப்பட்ட எந்த மொழியும் ஏதேனும் ஒரு குறைபாட்டைக் கொண்டேயிருக்கும். குறையேயில்லாத மொழி உலகில் எதுவுமில்லை. இந்நூலாசிரியரின் கருத்து எம்மை மேன்மேலும் சிந்திக்கத் தூண்டியுள்ளது. இதுவரை இதனை அறியாதிருந்த எம் அறியாமை புலனாயிற்று.

## உலக வழக்கிலுள்ள உவமை கூறி விளக்கும் திறம்

திருக்குறள் கருத்தை விளக்க இந்நூலாசிரியர் இலக்கியங்கள் பலவற்றிலிருந்து பொருத்தமான மேற்கோள்காட்டி விளக்கியிருப்பது அவரது பன்னூல் புலமையை வெளிப்படுத்துகிறது. மேலும் உலகில்

நடைமுறையில் காணப்படும் பொருள்களை உவமை கூறி விளக்கியிருப்பது இவரின் பட்டறிவைப் புலப்படுத்துகிறது.

***"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்***
***என்பும் உரியர் பிறர்க்கு" (குறள், 72)***

என்ற குறளை விளக்க "வாழை நல்கும்படிப்பினை" என்ற கட்டுரை எழுதியுள்ளார். முக்கனிகளுள் வாழை முதன்மையானது. தனித்தனி முக்கனி பிழிந்து என்றார் வள்ளலார். வாழைமரம் ஞானமரம், சன்மார்க்க மரம் என்றும் அழைக்கப்படும். தன்னலமில்லாதது வாழைமரத்தின் பூ, காய், கனி, தண்டு, கிழங்கு, இலை எல்லாமே பயன்படுபவை. வாழையில் பயன்படாத பகுதி எதுவுமே இல்லை. எலும்புதான் மனித உடலை நிமர வைக்கிறது. அன்புதான் மனித உள்ளத்தை நெகிழ வைக்கிறது. எலும்பில்லாத உயிர்களைச் சூரியன் வருத்துவான். அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் வருத்துவான். அன்புடையார் தம் என்பையும் பிறர்க்குக் கொடுத்துவிட்டு உயிர்விடுவர். வாழையும் தன் எல்லாப் பொருள்களையும் தந்துவிட்டு, தான் நிற்க உதவிய தண்டையும் கொடுத்து உயிர் துறக்கிறது. அன்புடையார் என்பும் ஈவர் என்பதற்கு வாழைதரும் படிப்பினையில், உலக வழக்கு உவமைகாட்டி (ப.57-59) விளக்கிய திறம் இவரது பட்டறிவை புலப்படுத்துகின்றது. வள்ளலாரும் வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு எனப் போற்றியுள்ளார்.

## நூலாசிரியரின் அறிவியல் நோக்கு

நூலாசிரியர் பட்டம் பெற்ற அறிவியல் ஆசிரியர். திருக்குறளில் காணப்படும் அறிவியல் நுட்பங்களையும் பல இடங்களில் விளக்கியுள்ளார். நாளென ஒன்று போல் காட்டி உயிரீரும் வாள் (குறள், 334) என்பதிலுள்ள அறிவியல் கருத்தை அழகர் உரையாலும், மெய்ப்பொருள் அறிஞர் கணக்காலும், பட்டறிவாலும் விளக்கியுள்ளார். "காலம் என்பது ஓர் அருவப் பொருள். கண்ணுக்குப் புலனாகாதது. புலன்களால் உணரமுடியாதது. எந்த அளவு கருவிகளாலும் திட்ட வட்டமாகக் கூறமுடியாது (ப.81) என உணர்த்தியுள்ளார். அதற்குக் கூறியுள்ள சான்றுகள் மிகப் பொருத்தமானவையாகும்".

## முடிவுகள்

வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் என்ற நூலில் முப்பத்தைந்து கட்டுரைகள் இடம்பெற்றள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் திருக்குறளை அருமையாக உணர வைத்துள்ளது. இந்நூலால் ஆசிரியரின் திருக்குறள் ஈடுபாடும், புலமையும், நுட்பமும் விளங்கும். பல நூல்கள் மேற்கோள்களால் இவரது பன்னூல் புலமை புலப்படுகிறது. சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடின்றி வாழ்ந்த தமிழறிஞர். வள்ளுவர் வாழ்வியல் சிந்தனைகள் என்னும் நூல் வையத்துள் வாழ்வாங்கு வாழ நினைப்போர்க்கு வழிகாட்டும் ஒப்பற்ற நூலாகும். படித்து உயர வேண்டியது நம் கடமையாகும்.

# 10. ந.சுப்புரெட்டியாரின் "அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம்"

**திருமதி அ. டெய்சி ராணி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோவை - 641 029.*

## முன்னுரை

பேராசிரியர் பெரும்புலவர், அருங்கலைக்கோன், ஸ்ரீசடகோபன் பொன்னடி, கலைமாமணி, வைணவ இலக்கிய மாமணி, தமிழ்ச்செம்மல் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் பல்லாண்டுகளாகத் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் ஆற்றியுள்ள பணி வியக்கத்தக்கது.

> ***"எண்பொருள வாகச் செலச்சொல்லித்தான் பிறர்வாய்***
> ***நுண்பொருள் காண்ப தறிவு"* (424)**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப டாக்டர் சுப்புரெட்டியார் அவர்கள் மிகவும் கடினமான மறைபொருள்களையும் எளிமையாக மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் எழுதுவதில் வல்லுநர். இவர் தம் தமிழ் பணியில் அறிவியல் ஆதிக்கம் அதிகமாக இருக்கும் எனலாம். அவ்வாறே 1996-97 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகத்தில் ஆற்றிய இரண்டு சொற்பொழிவுகளை நூல் வடிவமாக தந்துள்ளார். அவற்றின் விரிவுரையை கீழ்வரும் பத்திகளில் காணலாம்.

## அறிவியலின் தோற்றமும் வளர்ச்சியும்

"சயின்ஸ்" என்னும் சொல் "அறிவு" எனப் பொருள்படும். இது கிரேக்கச் சொல்லினின்று தோன்றியது. மனிதன் வாழும் சூழ்நிலை, சுற்றியுள்ள உலகம், பிற அண்டங்கள் முதலியவற்றின் தன்மைகளைத் தாம் அறிவியல் கலைகள் உணர்த்துகின்றன. பண்டைய தமிழர்கள் இன்று இருப்பன போன்ற அறிவியல் துறைகளைத் தனித்தனி கலைகளாய் வளர்த்து வைத்திருந்தனர் என்பதற்கு உரிய சான்றுகள் இல்லாவிடினும் ஓரளவு பயன்முறை அறிவியல் (Applied science) துறைகளைப் பற்றி அறிந்திருந்தன.

கோள்களின் இயக்கத்தால் இயற்கை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. வெள்ளி என்பது ஒரு மழைக்கோள். அது தெற்கே விலகியிருப்பது மழை இல்லாமைக்கு அறிகுறியாகும் என நம்பிக்கை கொண்டிருந்தனர்.

***"வெள்ளி தென்புலத் துறைய விளைவயல்***
***பள்ளம் வாடிய பயனில் காலை"(புறம். 388,அடி(1-2))***

என்றவாறு குறிப்புகள் இடம்பெற்றுள்ளது.

## அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம்

உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர், அறிவியலறிஞர்கள் அக்காலத்தில் இருந்தனர் என்பதை,

***"செஞ்ஞா யிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்***
***பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்***
***வளிதிரிதரு திசையும்***
***வறிது நிலைஇய காயமும் என்றிவை***
***சென்றளந்து அறிந்தோர் போல என்றும்***
***இனைத்து என் போரும் உளரே" (புறம்.30;அடி-(1-7))***

ஞாயிற்றின் வீதியும், அந்த ஞாயிற்றினது இயக்கமும், அவ்வியக்கத்தால் சூழப்படும் பார் வட்டமும், காற்று இயங்கும் திசையும் ஓர் ஆதாரமின்றித் தானே நிற்கும் ஆகாயமும் என்று சொல்லப் பெற்ற இவற்றை ஆண்டாண்டு போய் அளந்தறிந்தவர் போல நாளும் இத்துணையளவையுடையன என்று சொல்லும் கல்வியுடையோரும் உளர் என்று கூறுவதோடு புறநானூற்றில் "**மதிசேர் நாண்மீன் போல**" எனும் சொற்றொடருக்கு "திங்களைச் சேர்ந்த நாளாகிய மீனையொப்ப" எனக் கூறும் உரையால் அறியலாம். இது குமணனின் வள்ளன்மையை விளக்க வந்த இடத்தில் வருவது. மணிவாசகப் பெருமான் விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தையும்,

***"பூதங்கள் ஐந்தாகிப்***
***புலனாகிப் பொருளாகிப்***
***பேதங்கள் அனைத்துமாய்ப்***
***பேதமிலாப் பெருமையனைக்***
***கேதங்கள் கெடுத்தாண்ட***
***கிளரொளியை மரகதத்தை***
***வேதங்கள் தொழுதேத்தும்***
***விளங்குதில்லை கண்டேனே"***
***(திருவாசகம் - கண்டபத்து - 10)***

என்ற பாடலில் காண்கிறார். இத்துடன் ஆதிமனிதன் அனுபவத்தின் படிப்படியாய்க் கூட்டு வாழ்க்கை, சமுதாய வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உண்டி, உடை, உறையுள், பாதுகாப்பு இவைகளை வேளாண்மை மூலமாய் நிறைவு செய்து கொண்டான் என்பதையும், அறிவியல் போக்கில் உயிரியல், மருத்துவம், கணிதம், வானியல், போக்குவரத்து முறைகள் எப்படிப் படிப்படியாக வளர்ந்தன என்பதையும் உரிய இலக்கிய பகுதியுடன் விளக்கம் கொடுத்தும், மேலும், 12 இராசிகளுக்கு உண்டான விளக்கம் மற்றும் பாடல்களும் அறிவியல் நோக்கில் இலக்கியத்தில் பெரும்பங்கு வகிக்கிறது.

வானநூலறிவுடன், பொறியியல் அறிவும் பெற்ற வல்லுநர்களாய்த் தமிழர்கள் இருந்திருத்தல் வேண்டும் என்று கூறலாம்.

புறநானூறு கூறும் வலவன் ஏவா வான ஊர்தியும், இராமாயணத்தில் காட்டப் பெறும் புட்பக விமானமும் பொறியியல் அறிவினால் உருவாக்கப் பெற்ற சாதனங்கள் எனலாம். வானியல் மற்றும் மருத்துவ இயல் பற்றிய செய்திகளையும் சிகிச்சை முறைகளையும் தமிழ் இலக்கியத்தில் காணலாம். கருவுற்ற மங்கையர், குழந்தையை நீராட்டி, மருந்தூட்டி வளர்க்கும் திறம் சீவக சிந்தாமணியில் காட்டப் பெற்றுள்ளது.

***"காடி யாட்டித் தராய்சாறும்***
***கன்னல் மணியும் நறு செய்யும்***
***கூடச் செம் பொன் கொளத் தேய்த்துக்***
***கொண்டு நாளும் வாயுறீஇ"***
***(சீவகசிந்தாமணி, முக்தி இலம்பகம், 2703 (105))***

என்ற பாடலில் குழந்தை பிறந்தவுடன் அதற்குச் செய்யும் செயல்கள் இங்குக் குறிப்பிடப் பெறுகின்றன.

## சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

இதில் டாக்டர் சுப்புரெட்டியார் அவர்கள் பல்வேறு சமயங்களைக் குறிப்பிட்டுப் பஞ்சபூதங்களாலாகியது என்பதைச் சுட்டி வைதீகச் சமயங்களாகிய வைணவம், சைவம் ஆகியவை பற்றியும், புறச்சமயங்களான சார்வாகம், சமணம், பௌத்தம் முதலியவை பற்றியும் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கி உள்ளார். வைதீகச் சமயங்கள் யாவும் இறைவன் படைப்பிற்கு இறைவனையே நிமித்த காரணமாய்க் கொள்வதையும் புறச்சமயங்கள் யாவும் அணுக்களிலிருந்துதான் உலகம் தோன்றியது என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்.

***"அறிவியல் நோக்கில் சமய தத்துவம்"***

தத்துவம் = தத் + துவம் "தத்" என்ற வடசொல் "அது" என பொருள்படும். "துவம்" என்பதற்குத் "தன்னை" என்பது பொருளாகும்.

நம்பிக்கையில் தோன்றி வளர்ந்தது சமயம். ஆன்மா, கடவுள் போன்ற கருத்துக்கள் மக்களின் வழிபாட்டு முறைகளோடு பிணைக்கப்பட்டு இருந்தன. உணர்வுகளற்ற ஆன்மாவாய் மாற முயல்வதே முக்தியாகும். மக்கள் தன் அன்றாட வாழ்க்கையை ஒழுங்குடன் நடத்துவதற்கு அமைத்துக் கொண்ட நன்னெறிகளின் தொகுதியே சமயம் என்று வழங்கப் பெறுவதாகக் கொள்ளலாம்.

அறிவியல் நோக்கில் சமயம் தத்துவம் என்னும் தலைப்பில் அணுவாற்றலே சக்தி தத்துவமாய் உருவெடுத்தது என்றும், அறிவியல் யுகத்தில் தோன்றிய பாரதியார் அறிவியல் அடிப்படையில் தம் பாடல்களைப் படைத்துள்ளார் என்று பெருமையுடன் டாக்டர்

சுப்புரெட்டியார் அவர்கள் சுட்டியுள்ளார். "அவ்வாற்றலை ஆருயிர்கள் பல்வேறு பொருள் வடிவங்களின் மூலம் நுகர்கின்றன என்பதையும் இதற்கு அறிகுறியாகத்தான்" "பொங்கல் திருநாளை உழவர்கள்", "தமிழர் திருநாளாகக்" கொண்டாடுகிறார்கள் என்பதையும் விளக்கமாகத் தெளிவாக்கியுள்ளார்.

## முடிவுரை

***"மம்மர் அறுக்கும் மருந்தாய்....."(நாலடியார் - 132)***

இருந்து கொண்டு இன்பம் பயக்கவல்ல இலக்கியங்களை நாம் கவனிக்காமல் உதாசீனம் செய்தால் நமக்கு உலகில் ஆறுதல் அளிக்கக் கூடிய பொருள்களே இல்லை என்றாகி விடும். தமிழின் பெருமையை நமக்கு எளிமையாக வெளிக்காட்டியவரும் தமிழ் ஆய்வாளர்களின் வழிகாட்டியுமாகிய டாக்டர் ந.சுப்புரெட்டியாரின் புகழ் பரவவும் அவர் தமிழுக்கு அளித்த மாபெரும் கொடையைப் பற்றியும் அறிந்து கொண்டு பல புதுமையான படைப்புகளில் அவர் காட்டிய செம்மையான பாதையில் நம் பயணத்தை தொடர்வோம்.

# 11. "வாழையடி வாழை" நூலில் கலையும் கருத்தியலும்



**சொ. பத்மநாபன்**
*தலைமை ஆசிரியர் (ஓய்வு)*
*47, நாட்டுசுப்பராயன் தெரு*
*மைலப்பூர், சென்னனை - 600 004.*

## முன்னுரை

*டாக்டர் ந.சுப்பு ரெட்டியார் எழுதிய "வாழையடி வாழை" என்னும் நூலின்கண் 33 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள், உயிரணுக்கள், நிறக் கோல்கள், ஜீன்கள் ஆகியவற்றைப் பற்றியும், 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற கால்வழி இயல் மாநாட்டுச் சிந்தனைகள் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.*

## உயிரணுக்கள்

*நமது உடலில் கோடிக்கணக்கான உயிரணுக்கள் உள்ளன. இவையாவும் ஆதியில் தோன்றிய ஒற்றை உயிரணுவிலிருந்து பெருகினவையே. இந்த உயிரணுக்கள் நமது குருதி வழியாகத் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பெற்று வளர்கின்றன. ஒரு குறிப்பிட்ட அளவு வளர்ச்சியுற்றதும், இவை தம் உட்கரு உட்பட இரண்டாகப் பிளவு படுகின்றன. ஒவ்வோர் உயிரணுவும் தனது இனத்திற்குத் தக்கபடியும், உறுப்பின் செயலுக்குத் தக்கபடியும், அமைப்பில் வேற்றுமை கொண்டதாகக் காணப்பெறும். எடுத்துக்காட்டாக, இழையங்களிலுள்ள (Tissues) உயிரணுக்கள், உழைப்பினாலும், இறுக்கத்தினாலும், அமுக்கத்தினாலும் தாக்கப்பெறுவதால், அவை கோள வடிவினவாகவும், உருளை வடிவினவாகவும், தட்டையாகவும், நூற்கும் கதிர் (Spindle) வடிவினவாகவும் இருக்கும். பெரும்பாலான நரம்பணுக்கள் நீளமான நுண்ணிய கிளைகளைக் கொண்டு இருக்கும். உயிரணுக்கள் பல்கிப் பெருகுங்கால், சில தசையணுக்களாகின்றன சில எலும்பு அணுக்களாகின்றன சில குருதி, நரம்பு அணுக்களாகின்றன. சில உயிரணுக்கள் உயிர்களின் இனப்பெருக்கத்திற்கெனவே ஒதுக்கப்பெறுகின்றன. இறுதியாகக் குறிப்பிடப்பெற்ற உயிரணுக்களே நமது மரபு வழி அற்றுப்போகாமல் காக்கின்றன.*

## நிறக்கோல்களும், ஜீன்களும்

*ஒவ்வோர் உயிரின் ஒவ்வோர் உயிரணுவிலும், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள நிறக்கோல்கள் உள்ளன. இவை ஒத்துள்ள இணைகளாக அமைந்து கிடக்கும். இவற்றுள் ஒவ்வோர் இணையிலும்*

உள்ள ஒன்று, தாயின் வழி வந்தது மற்றொன்று தந்தையின் வழி வந்தது. இதனால் தான் நிறக்கோல்களின் எண்ணிக்கை இரட்டைப்படை எண்ணாகவே உள்ளது. பெரும்பாலும் இந்த இணை நிறக்கோல்கள் வடிவத்திலும் பருமனிலும் ஒன்றற்கொன்று மாறுபடுகின்றன. ஒவ்வோர் உயிரியின், ஒவ்வோர் உயிரணுவிலும், ஒரேவகை உயிரியின் பலவற்றின் உயிரணுவிலும் இந்த நிறக்கோல்களின் எண்ணிக்கை மாறாதிருப்பதால்தான், இனம் மாறாமல் காக்கப் பெற்று வருகின்றது.

மானிட உயிரணுவில் 23 இணை நிறக்கோல்கள் உள்ளன. ஒவ்வோர் இணையையும் உற்று நோக்கினால், அவற்றிலுள்ள நிறக்கோல்கள் ஒரே மாதிரியாக இருக்கும், இறுதியில் ஓர் இணையில் உள்ள நிறக்கோல்கள் மட்டிலும், வேற்றுமையுடையனவாக இருக்கும். அவைதாம் புதிதாகத் தோன்றக்கூடிய உயிரி, ஆணா? பெண்ணா? என்று அறுதியிடுபவை. மானிட உயிரியின் ஒவ்வோர் உயிரணுவிலும் 23 இணை நிறக்கோல்கள் இருப்பது போலவே, சந்ததி பெருக்குவதற்காக ஒதுக்கப்பெற்றுள்ள உயிரணுக்களிலும் 23 இணை நிறக்கோல்கள் தாம் இருக்கும்.

இந்த அணுக்கள், விந்தணுக்களாகவும், முட்டையணுக்களாகவும் முதிராத நிலையில், இதே எண்ணிக்கையைத்தான் கொண்டிருக்கும். முதிருங்காலத்தில் இரண்டு வகை மாறுபாடுகள் அடைந்து, ஒவ்வொன்றும் 23 ஒற்றை நிறக்கோல்களுடன் வெளியாகின்றன.

## ஜீன்கள்

நெருங்கிய, குறுகிய நிலையில் உள்ள நிறக்கோல்கள் உள்ளன. சில சமயங்களில் அவை, விரிந்து நீண்ட இழைகளாகவும் இருக்கும். அப்பொழுது அவற்றில் சளி போல் ஒட்டுத் தன்மையுள்ள உருண்டை மணிகள் நெருக்கமாகக் கோக்கப் பெற்றுள்ளதைப் போலத் தெரியவரும்.

உருண்டைமணி போன்ற இவைகளே மரபுவழிப் பண்புகளைத் தாங்கி நிற்கும் ஜீன்கள் ஆகும். இவைதாம் பெற்றோரிடமிருந்து பிள்ளைகட்குக் கடத்தப் பெறுபவை. ஒவ்வொரு நிறக்கோல்களிலும் கிட்டத்தட்ட 3000 ஜீன்கள் இருப்பதாகக் கால்வழியியல் வல்லுநர்கள் ஆராய்ந்து கண்டுள்ளனர்.

ஒருவிதப் பழஈக்களை ஆராய்ந்து, ஒவ்வொரு ஜீனும் ஒரு திட்டமான பண்புக்கும், செயலுக்கும் காரணமாகின்றது என்பதை உயிரியல் அறிஞர்கள் நிலைநாட்டியுள்ளனர்.

## மரபுவழிப் பண்புகள்

மரபுவழிப் பண்புகள் அமைவதற்கு இந்த நிறக்கோல்கள் காரணமாகின்றன. ஒரு மானிட முட்டை கருவுறுவதில் முட்டையும், விந்தணுவும் பங்குபெறுகின்றன. இவ்வாறு கருவுற்ற முட்டையின் உயிரணுவில் 46 நிறக் கோல்கள் அமைகின்றன. இவற்றுள் பாதி,

தந்தை வழியாகவும் (விந்தணு மூலம்), பாதி தாய்வழியாகவும் (முட்டையணு மூலம்) வந்தவை. ஆகவே ஒரு குழந்தை தன்னுடைய பெற்றோரிடமிருந்தும் புதியவகைச் சேர்க்கை ஜீன்களைப் பெறுகின்றது. இந்த ஜீன்களை அது தனது பெற்றோர்களிடமிருந்தும் அவர்கள் தங்களது ஜீன்களைத் தமது பெற்றோர்களிடமிருந்தும் பெற்றவையாகும். எனவே ஜீன்கள் வழி வழியாகப் புதிய புதிய சேர்க்கையாகச் சந்ததியினருக்கு இறங்கிக் கொண்டுள்ளன என்பது தெளிவாகிறது.

ஆகவே ஒரு குழந்தை தன்னுடைய பெற்றோரிடமிருந்து பெறும், ஒவ்வொரு 23 நிறக்கோல்களும் தங்களுடைய இருவழிப் பாட்டன் பாட்டிமாரிடமிருந்து பெற்றவையாகும். பெற்றோர் தம் குழந்தையிடம் கடத்தும் நிறக்கோல்கள், அவர்கள் தம் பொற்றோர்கள் மூலம் பெற்றவையாகும் என்பது தெளிவாகின்றது.

## அறிவியல் அறிஞர் மெண்டல்: [Mendel]

ஆணா, பெண்ணா என்பது கர்பம் தொடங்கும் பொழுதே ஜீன்களால் அறுதியிடப் பெறுகின்றது. இது ஜீன்களால் அறுதியிடப் பெறும் பல்லாயிரக் கணக்கான பண்புகளில் ஒன்றேயாகும்.

மானிடப்பிறவி மிக உயர்ந்தது என்று கருதும் நமக்குப் பட்டாணியிலும், பழஈயிலும் உள்ள மரபு வழிப் பண்பின் பொறிநுட்பமே [Mechanism] எல்லா உயிருள்ள பொருள்களிடம் அமைந்துள்ளதைப் போலவே மனிதர்களிடமும் அமைந்துள்ளது.

பட்டாணியின் மரபுவழிபற்றிய அறிவு, மனிதர்களின் மரபுவழி பற்றியும் அறிவதற்குத் துணைபுரியும் என்று மெண்டல் [Mendel] கண்டுபிடித்தார்.

## மெண்டலின் விதிகள்

1. வழி வழியாக இறங்கிவரும் சிறப்பியல்புகள் ஜீன்களால் உண்டாக்கப் பெறுகின்றன. இவை ஒருதலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மாற்றமடையாமலேயே இறங்குகின்றன.

2. ஒவ்வொரு தாவரத்தினிடமும், இந்த ஜீன்கள் இணைகளாகவே (Pairs) காணப்பெறுகின்றன. ஓர் இணையிலுள்ள இரண்டு ஜீன்கள் வேற்றுமையுள்ள விளைவுகளை உண்டாக்கக்கூடுமாயின், ஒரு ஜீன் மற்றதை விட முனைப்பாக அமைகின்றது. இ∴து ஓங்கி நிற்கும் ஜீன் என்றும் மற்றது "பின்னிடும் ஜீன்" என்றும் வழங்கப்பெறும்.

3. ஒரு தாவரத்தினிடம் விதைகள் உண்டாகும் பொழுது. ஒவ்வோர் இணையிலுமுள்ள ஜீன்கள் தனித்தனியாகப் பிரிகின்றன் இவ்வாறு பிரிவது ஏனைய இணைகளைப் பொறுத்ததன்று இவ்வாறு பிணைந்திருக்கும் ஒவ்வொரு பெற்றோரின் இணைகளினின்றும் ஒவ்வொரு "ஜீன்" ஒவ்வொரு சேய்க்கும் போகின்றது.

1900-இல் இக்கொள்கை முடிவு புத்துயிர் பெற்றது. இவரது முடிவுகள் மனிதன் உட்பட வேறு உயிர்ப் பொருள்கட்கும் பொருந்தும் என்பதை உயிரியல் அறிஞர்கள் கண்டனர்.

“தாமஸ் ஹண்ட் மார்கன்” என்பார் 1907-இல் தம் ஆராய்ச்சியைத் தொடங்கினார். ஒருவித பழ ஈக்களைக் கொண்டு ஆய்வுசெய்து “மெண்டலின்” அடிப்படை விதிகளில் யாதொரு மாற்றமும் இல்லை என்று கண்டார்.

## பலவித நிறங்களில் குழந்தைகள்

நிறத்திற்குரிய ஜீன்கள் சரிசமமான ஆற்றலுடையனவாக இருப்பின் எல்லாக்குழந்தைகளும் பொன்னிறமும், கருமை நிறமும் சமமாகக் கலந்த மாநிறமுடையனவாக இருக்க வேண்டும் அல்லது ஏதாவது ஒரு நிறம் ஓங்கிநின்றால், அதன் படியே எல்லாக் குழந்தைகளும் இருக்க வேண்டும். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் பொன்னிறம், கருமைநிறம் இவற்றிற்கிடையே பலவிதமான கலவைகள் உள்ள நிறங்களில், குழந்தைகள் காணப்படுகின்றன.

இதற்குக் காரணம் மானிட நிறக்கோல்களில் நிறத்திற்குரிய ஜீன்கள், பலவாக உள்ளன இவையாவும் உடலில் “மெலானின்” என்ற ஒருவகை நிறமி (Pigment) வகைகளை உண்டாக்குவதில் பங்குபெறுகின்றன. இந்தவகை நிறமிகளே நிறத்தினை அறுதியிடுகின்றன. ஆதலால் அவை சேரும்பொழுது, ஒவ்வொரு தடவையும் கருவுற்ற முட்டையில் ஒரே அளவில் இருக்கும் என்பதில்லை. அவை சேருகின்ற அளவுகளுக்கு ஏற்றவாறு குழந்தைகளின் நிறங்கள் அமைகின்றன.

1983 ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற கால்வழி இயல் பற்றிய 15 ஆவது அனைத்துலக மாநாட்டில் [Fifteenth International Congress of Genetics] அறிவியல் அறிஞர்கள் தாம் கண்ட உண்மைகளையும், இனி தாம் காணவேண்டிய உண்மைகளையும் பரிமாறிக்கொண்டனர். அவைகளில் சில வருமாறு.

## புற்றுநோயை விளைவிக்கும் ஜீன்

இந்தியாவில் பிறந்து கனடாவில் ‘ஒட்டாவா’ அறிவியல் ஆய்வுப் பணியிலுள்ள டாக்டர் சரண் ஏ.நாரங்க என்பார் “துள்ளி குதிக்கும் ஜீனை” ஒரு சோதனைக் குழாயில் செயற்கை முறையில் தயாரித்தார். இந்த ஜீன் புற்றுநோயை விளைவிக்கும் ஜீன்களைப்பற்றிய தெளிவான உண்மைகளைக் காண்பதில் கொண்டு செலுத்தும் என்று விளக்கினார். மேலும் இவர், “மானிட ஜீன்” ஒன்றையும் செயற்கை முறையில் தயாரித்தவர் ஆவார். இந்த ஜீன் “இன்சுலின்” சாரத்தை விளைவிக்க உதவுவது என்பது குறிப்பிடத்தக்கது.

## இருவித மூட்டைப்பூச்சிகள்

ஆனந்த மோகன் சக்கரவர்த்தி என்ற கால்வழி இயல் ஆராய்ச்சி

அறிஞர், இருவித மூட்டைப்பூச்சிகளைக் [Super bugs] கண்டறிந்தார். இவை உயிரியல்-பொறியியல் வழியாகப் படைக்கப்பட்ட நுண்மங்கள் [Bacteria] ஆகும். இந்த இரண்டு வகை மூட்டைப் பூச்சிகளும் எண்ணெய் உற்பத்தி சாலையில் பெரிய அளவில் பயன்படுகின்றன. இந்த இருவகையுள் ஒருவகை, ஒரு புதிய பொருளை உண்டாக்குகின்றது. இப்புதிய பொருள் ஒருவகை, ஒரு புதிய பொருளை உண்டாக்குகின்றது. இப்புதிய பொருள் திடநிலையிலுள்ள பண்படா [Crude] எண்ணெயைக் குழம்பு நிலைக்கு மாற்றித் திரவ நிலைக்குக் கொணர்கின்றது. சில கைவிடப்பட்ட எண்ணெய்க் கிணறுகளிலுள்ள எண்ணெய், பம்பு வழியாக அனுப்ப முடியாத தடித்த நிலையில் உள்ளது. இதை இம்மூட்டைப் பூச்சிகளைக் கொண்டு, திரவ நிலைக்குக் கொண்டுவரப் படுகின்றது.

இரண்டாவது வகை மூட்டைப் பூச்சிகள், எண்ணெய் குழாயின் உட்புறச் சுவர்களில் ஒட்டிக் கொள்வதைத் தடுத்து, எண்ணெயின் பாகுநிலையைக் (Viscosity) குறைத்து, ஓட்டத்தை மிகுவிக்கின்றது.

## மலட்டுப்பெண் செயற்கை முறையில் கருத்தரிப்பு

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தைச் சார்ந்த இருபெண்கள் மலடிகள் என்று மெய்ப்பிக்கப் பெற்றவர்கள். அதாவது இவர்களின் சூற்பைகளில் முட்டையணுக்கள் உண்டாவதில்லை. லாஸ் ஏஞ்சல்ஸ் என்ற மருத்துவமனையின் மருத்துவர்கள், இவர்களிடம் கருத்தரிப்புச் செய்து வெற்றிகரமாகக் கருவுயிர்த்தலை நிகழ்த்தியுள்ளனர்.

இந்த உத்தியில் வெற்றிகண்ட அறிவியல் அறிஞர்கள் மேதைகளின் விந்தணுக்களைச் சேகரித்துச் சேமநிதியாகப் பாதுகாக்கலாம் என்ற வழியைச் சிந்திக்கின்றனர்.

## மாநாட்டின் முக்கியத்துவம்

அணுபற்றிய அறிவியல், அணுவியல் [Atomics] என்பதுபோல, "ஜீன்" பற்றிய அறிவியல், கால் வழியியல் [Genetics] எனப்படுகிறது. ஜீன்கள் குடிவழியே [Heredity] அறுதியிடும் கட்டடக் கற்கள் ஆகும். இத்துறை ஜீன்களின் இயல்புகள், அவை விளைவிக்கும் அற்புதப் பயன்கள் இவற்றை விளக்குவதால், கால்வழி இயல் இன்று அறிவியலின் நடுநாயகமாகத் திகழ்கிறது.

பெரும்புகழ்பெற்ற இந்திய அறிவியல் அறிஞரான டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களும், தம்முடைய தலைமையுரையில், தாவர விலங்கியல் ஜீன்களைக் காப்பது பற்றிய இன்றியமையாமையைக் குறிப்பிட்டது மிகவும் பொருத்தமாகும்.

## அணுத்திரளை உயிரியல்

எத்தனையோ விதத் தாவரவகைகள், கால மாற்றத்தையும், காலமாற்றத்தின் புரட்சியையும், மழையின்மையையும், வெயிலின்

கொடுமையையும் தாங்கிக்கொண்டு தப்பிப் பிழைத்துள்ளன. இங்ஙனம் தாக்குப் பிடித்துவந்த தாவர வகைகளின் இடத்தை, அதிகப்பயன் விளைக்கும் தாவரவகைகள் பிடித்துக்கொண்டன. பேராசிரியர் ஃ. பிராங்கெல் என்பார் இவ்வகைத்தாவர ஜீன்களைப் பாதுகாக்க வேண்டுமென்று அறிவுரை கூறியதுடன் இவ்வகைகளை அழியாமல் பாதுகாக்க வேண்டும். மேலும் இவ்வற்றோடு தொடர்புள்ள ஒவ்வொரு பயிர்வகைகளையும் [Crop varieties] பாதுகாக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். கடந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் கோதுமை, நெல், கரும்பு முதலியவற்றின் மேம்பாட்டில் மிகப்பெரிய வெற்றியைக் கண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## ஜெனிடிக் பொறியியல்

இது அண்மையில் கண்டறியப்பெற்ற ஓர் அற்புத பொறியியல் நுணுக்கத் துறையாகும். இதனால் பல்வேறு வகைப்பட்ட ஜீன்களைப் புதிதாகப் படைக்க முடிகின்றது. அணுத்திரளை உயிரியலின் பெருங்கொடையைப் பற்றி, இரண்டு ஆஸ்திரேலிய கால்வழிஇயல் விற்பன்னர்கள் அழுத்தம் கொடுத்துப் பேசினர். தாவர, விலங்கு, மானிட, பாக்டீரிய உயிர்ப்பொருளின் அமைப்பைப் பற்றிப் பேராசிரியர் சி.இ.ஸ்கவ்கிராஃட் என்பார் தெளிவாக எடுத்துரைத்தார்.

பல நாடுகள் சேர்ந்து அமைக்கப்பெற்ற கூட்டவைகள் [Multinational Corporations] உயிரியல் தொழில்நுணுக்க முறைகளை இறுக்கமாகப் பூட்டி வைத்திருக்கின்றன என்றும், இப்படிப்பட்ட நிறுவனங்கள் அமெரிக்காவில் மட்டும் 500 உள்ளன என்றும் சில அறிஞர்கள் தெரிவித்தனர்.

ஓர் இந்திய அறிவியலறிஞர் தொழில்நுணுக்க முறையிலும், பொருளாதார முறையிலும், மூன்றாவது உலக நாடுகள், முன்னேற்றமடைந்த நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை இன்னும் பல்லாண்டுகளுக்கு நீடிக்கும் என்று கூறியுள்ளார்.

## நிறைவுரை

உயிரணுக்கள், நிறக்கோல்கள், ஜீன்கள் பற்றிய அரிய உண்மைகளையும், 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்துலகக் கால்வழி இயல் மாநாட்டில் அறிஞர்கள் தெரிவித்த கருத்துகளையும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் எழுதிய ‘‘வாழையடி வாழை’’ என்னும் நூலிலிருந்து தெரிந்து கொண்டோம். இவை, இன்று மட்டுமல்ல, என்றென்றும் அறிவியல் மாணவர்களுக்கும், அறிஞர்களுக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

# 12. அறிவியல் சிந்தனையாளர் அறிஞர் சுப்புரெட்டியார்



**முனைவர் கடவூர் மணிமாறன்**
*மேனாள் தமிழ்ப்பேராசிரியர்*
*கற்பகம் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர்*

தமிழ்கூறு நல்லுலகம் நன்கறிந்த தமிழறிஞர் சுப்புரெட்டியார் அவர்கள் அறிவியல் சிந்தனையாளர். இளங்கலையில் அறிவியல்பட்டமும் முதுகலையில் தமிழும் பயின்றவர். ஆதலின் அறிவியலிலும் அருந்தமிழிலும் புலமைசான்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப்பள்ளியில் தலைமையாசிரியாராகவும் பத்தாண்டுகள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகவும், பதினேழாண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத்தலைவராகவும் இருந்து பணியாற்றியவர். ஆசிரியம், இலக்கியம், சமயம், திறனாய்வு, அறிவியல், ஆராய்ச்சி, வாழ்க்கை வரலாறு எனப் பல துறைகளிலும் ஆழங்காற்பட்டவர். 88 நூல்களின் ஆசிரியர். அவர் எழுதிய "தமிழில் அறிவியல் அன்றும் இன்றும்" நூலின்கண் இடம்பெற்றுள்ள அறிவியல் சிந்தனைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

நாடு விடுதலை பெற்றபிறகு கல்வியுலகின் சிந்தனை, அறிவியல் கல்விக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பது அதுவும் தாய்மொழியில் கற்பிப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்பது ஆயினும் இளைஞர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் அறிவியல் பசி இன்னும் சரியாக ஏற்படவில்லை. புனைகதைகளிலும் புதினங்களிலும் ஏற்பட்டுள்ள ஆர்வம் போல் இதில் இன்னும் ஏற்படாதிருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்னும் குறிப்பினைத் தமது நூலின் நூல்முகத்தில் பதிவுசெய்துள்ளார் பேராசிரியர்.

## நூலின்பகுப்பு

இந்நூலில் தமிழ்இலக்கியங்களில் அறிவியல் பற்றிய செய்திகள் ஆங்காங்கு குறிப்பிடத்தக்க வகையில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் கல்வியியல், பண்டைய அறிவியல் அறிஞர்கள், வானஇயல், வானியல், இயற்பியலும், வேதியியலும் ஆகிய பகுதிகளில் இடம்பெற்றுள்ள அறிவியல் சிந்தனைகளை இந்நூலில் விளக்கமாகப் பதிவு செய்துள்ளார் நூலாசிரியர்.

## பண்டைய அறிவியல் அறிஞர்கள்

உறையூர் முதுக்கண்ணன் சாத்தனார் என்ற புலவர் பண்டைக்காலத்தில் அறிவியல் அறிஞர்கள் இருந்தனர் என்பதை,

***"செஞ்ஞாயிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்***
***பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்***
***வளிதிரிதரு திசையும்***
***வறிதுநிலைஇய காயமும் என்றிவை***
***சென்றளந் தறிந்தோர் போல என்றும்***
***இனைத்தென்போரும் உளரே" (புறம் : 30)***

செஞ்ஞாயிற்றினது விதியும் அஞ்ஞாயிற்றினது இயக்கமும் அவ்வியக்கத்தால் சூழப்பட்ட பார்வட்டமும் காற்றியங்கும் திக்கும் ஓர் ஆதாரமும் இன்றித்தானே நிற்கின்ற வானமும் என்று சொல்லப்பட்ட இவற்றை ஆண்டாண்டுப் போய் அளந்தறிந்தவர்களைப் போல நாளும் இத்துணையளவை உடையனவென்று சொல்லும் கல்வியை உடையோரும் உளர் என்ற புலவர் கூற்றில் அத்தகைய அறிஞர்கள் இருந்தமை புலனாகிறது.

பன்னெடுங்காலமாகவே தமிழர்கள் நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கினர் என்பது வரலாற்று அறிஞர்கள் ஒப்புக்கொண்ட உண்மை. அறிவியற்கலைகள் அவர்களிடம் பயன்முறைக் கலைகளாக மிளிர்ந்தன என்பதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன. மாந்தன் வாழும் சூழ்நிலை, சுற்றியுள்ள உலகம் பிற அண்டங்கள் முதலியவற்றின் தன்மைகளைத்தான் அறிவியற்கலைகள் உணர்த்துகின்றன. வானஇயல், வானியல், கோளியல், பொறியியல் முதலிய பல்வேறு துறைகளிலும் தமிழர்கள் வல்லுநர்களாகத் திகழ்ந்தனர் என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன.

## வானஇயல்

பண்டைத்தமிழர் வானஇயல்துறையில் சிறந்து விளங்கினர் என்பதைப் புறநானூறு போன்ற சங்கஇலக்கியங்களில் அறியலாம். விண்ணில் மதிசெல்லும் வழியாகிய வட்டத்தை இருபத்தேழு பிரிவுகளாகப் பிரித்து அப்பிரிவுகளை அறிந்து கொள்ளும் அடையாளமாக,

***"எறிகடல் ஏழின் மணல் அளவாக" (திருமந்திரம் - 2297)***

உள்ள விண்மீன்களில் இருபத்தேழு விண்மீன்களைக் குறித்து அமைத்தனர் பண்டைய அறிஞர்கள்.

***"மதிசேர் நாள்மீன்போல்" (புறம் : 160)***

என்னும் புறப்பாட்டின் அடிக்கு அப்பாட்டின் உரையாசிரியர், திங்களைச் சேர்ந்த நாளாகிய மீனையொப்ப என்று கூறும் உரையாலும் இதனை அறியலாம். யாக்கை நிலையாமையை விளக்க வந்த வள்ளுவப் பெருந்தகை,

***"நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்***
***வாளது உணர்வார்ப் பெறின்" (குறள் : 334)***

என்று கூறுவர். ஈண்டு நாளை ஒருவரது வாழ்நாளை இடைவிடாது ஈரும்வாள் என்று உருவகித்துக் காட்டுவர். இதற்கு உரைகண்ட பரிமேலழகர், "காலம் என்னும் அருவப்பொருள் உலகியல் நடத்தற்பொருட்டு ஆதித்தன் முதலிய அளவைகளால் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானாகக் கூறுபடாமையின்" என்று கூறுவதால் விண்வெளியில் இயங்கும் சூரியன், சந்திரன், பூமி, முதலியவற்றில் காலம் என்னும் அருவப்பொருள் கூறுபடுத்திக் காட்டப்பெறுகின்றது என்பதை அறியலாம்.

## கோள்களின் இயக்கம்

கோள்களின் இயக்கத்தால்தான் இயற்கை நிகழ்வுகள் நடைபெறுகின்றன என்பதைப் பண்டைத்தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

"***வெள்ளி தென்புலத்துறைய விளைவயல்***
***பள்ளம் வாடிய பயனில் காலை" (புறம் : 388)***

என்னும் மதுரை அளக்கர் ஞாழார் மன்னாரின் புறநானூற்று அடிகள் மழைக்கோளாகிய வெள்ளி தெற்கே விலகியிருப்பது மழை இல்லாமைக்கு அறிகுறியாகும் என்பதைச் சுட்டுகின்றன. இக்கருத்தையே,

"***வசையில் புகழ்வயங்குவெண் மீன்***
***திசைதிரிந்து தெற்கே கினும்" (பட்டினப்பாலை : 1-2)***

என்னும் பட்டினப்பாலை அடிகளும் உணர்த்துகின்றன. வெள்ளிக்கோள் தென் திசையில் எழுதல் தீயநிமித்தம் இந்நிகழ்ச்சி மாரி பொய்ப்பதற்கும், வற்கடம் உண்டாதற்கும் காரணம் என்பர். இதைப்போலவே வால்வெள்ளி தோன்றுவதும் சனி மீன் புகைவதும், எரிகொள்ளி வீழ்தலும் தீக்குறிகளாகக் கொள்ளப் பெற்றிருந்தன என்பதை,

"***மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்***
***தென்திசை மருங்கில் வெள்ளி ஓடினும்***
***வயலகம் நிறையப் புதற்பூமலர" (புறம் : 117)***

என்னும் புறநானூற்றுப்பாடல் அடிகளால் அறியலாம்.

## மயிற்பொறி

சீவகசிந்தாமணியில் மயிற்பொறி ஒன்று குறிப்பிடப் பெறுகின்றது. சச்சந்தன் தன்னைப் பாதுகாத்தற் பொருட்டு ஓர் எந்திர ஊர்தியைப் புனையுமாறு ஒரு தச்சனை ஏவ, அவனும் ஏழுநாள்களில் "மயிற்பொறி" ஒன்று சமைக்கின்றான். இந்தப்பொறியை இயக்கும் முறைகளைச் சச்சந்தன் தன் மனைவி விசயைக்குக் கற்பிக்கின்றான். அந்த மயிற்பொறியின் இயக்கத்தை,

"***பண்தவழ்விரலில் பாவை***
***பொறிவலந் திரிப்பப் பொங்கி***

*விண்தவழ் மேகம் போழ்ந்து*
*விசும்பிடைப் பறக்கும், வெய்ய*
*புண்தவழ் வேற்காண் பாவை*
*பொறியிடந் திரிப்பத் தோகை*
*கண்டவர் மருள வீழ்ந்து*
*கால்குவித் திருக்கு மன்றே.''*

என்ற பாடலால் காட்டுவர் ஆசிரியர்.

## கதிரவன்

கதிரவனே இவ்வுலக வாழ்க்கைக்கு உயிர்நாடியாக அமைகின்றான். இந்த அறிவியல் உண்மையினைப் பட்டறிவாகக் கண்ட இளங்கோவடிகள்,

*''ஞாயிறுபோற்றுதும் ஞாயிறுபோற்றுதும்*
*காவிரிநாடன் திகிரிபோல் பொற்கோட்டு*
*மேருவலம் திரிதலான்'' (சிலம்பு-மங்கல வாழ்த்து, 4-6)*

என்று தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் மங்கல வாழ்த்துப் பாடலாக வெளியிட்டார். கை புனைந்தியற்றாக் கவின்பெறுவனப்பில் திளைத்த நக்கீரரும்,

*''உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு*
*பலர்புகழ் ஞாயிறு''. (திருமுருகாற்றுப்படை 1-2)*

என்று தம் திருமுருகாற்றுப்படை பாடலைத் தொடங்குகின்றார்.

தொல்காப்பியரும், ''நிலம் தீ நீர்வளி வீசும்போடு ஐந்தும் கலந்தமயக்கம் உலகம்'' (தொல்-பொருள்-மரபு-9) என்று கூறினார். கம்பரும்

*''பூதம் ஐந்தும்*
*விலங்கிய விகாரப் பாட்டின்*
*வேறுபாடு உற்ற வீக்கம்''(கம்ப - சுந்தர - காப்பு)*

என்று குறிப்பிடுகின்றார். இரணியவதைப் படலத்தில் இரணியனுக்கும் பிரகலாதனுக்கும் நடைபெறுகின்ற உரையாடலில் அணுபற்றிய கருத்து இடம் பெற்றுள்ளது. நீ சொல்லும் நாராயணன் எங்கு இருக்கின்றான்? என்று இரணியன் பிரகலாதனைக் கேட்க, அதற்கு அவன்,

*''சாணிலும் உளன்ஓர் தன்மை*
*அணுவினைச் சதகூறு இட்ட*
*கோணிலும் உளன்.'' (இரணியன்வதை - 124)*

என்று விடை பகருகின்றான். இங்கு அணு என்பது ஒரு சிறியநுண்பொருள் அதன் நூறில் ஒரு பகுதி கோண் என்பது என்ற கருத்துகள் குறிப்பிடப்பெறுகின்றன.

## காமம்

தொல்காப்பியரும் திருவள்ளுவரும் காமம் என்ற சொல்லைப் பல இடங்களில் உயரிய பொருள்களில் எடுத்தாண்டுள்ளனர். இன்பக்கூறான இணைவிழைச்சு ஆண், பெண் என்ற இருபாலரின்கண் நிகழும் என்ற கருத்தை ஆசிரியர் தொல்காப்பியனார்,

***"எல்லா உயிர்க்கும் இனபம் என்பது***
***தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"(தொல்-பொருள்-27)***

என்னும் நூற்பாவில் விளக்கியுள்ளார். பலவகை உயிர்கட்கும் வரும் இன்பம் இரு வகைப்படும். அவையாவன போகம்நுகர்தலும் வீடுபெறுதலும் என அவற்றுள் வீடு துறவறத்தில் நின்றாற்கல்லது எய்தல் அரிதாயிற்று. போக நுகர்தல் மனையறத்தார்க் கெய்துவது- என்ற இளம்பூரணரின் உரைப்பகுதியால் போகம் நுகர்தலில் இணைவிழைச்சும் ஒரு பகுதியாகும் என்பது பெறப்படுகின்றது. கரு உருவாகும் நிலையை அடைந்ததும் தானாக எழும் உணர்ச்சியாகிய காமத்தால் தூண்டப்பெற்ற ஆணும், பெண்ணும் ஒன்று கூடி இணைவிழைச்சு புரிகின்றனர். இந்தப்புணர்ச்சி உலகுயிர் தோற்றத்திற்கும் வாழ்க்கை நலத்திற்கும் இன்றியமையாக் காரணமாக இருத்தலாலும் அப்புணர்ச்சி நிகழும் அகவொழுக்கம் இன்றியமையாப் பொருள்களில் ஒன்றாக இருத்தலானும் அதனைப் பண்டைப் பெரியோர் அகப்பொருள் எனச் சிறப்பித்து அதனைப்பலவாறு விரித்தும் இலக்கண வரையறை செய்தும் இலக்கியத்தில் பொதிந்தும் பொன்னே போற்போற்றினர்.

## மருத்துவம்

பண்டை இலக்கியங்களில் மருத்துவம் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. திருக்குறளில் மருந்து அதிகாரத்தில் நோய்வருவதன் காரணங்களையும் அது வராது தடுக்கும் முறைகளையும், வந்தால் தீர்க்கும் வழியையும் பற்றிய பல்வேறு செய்திகள் இடம் பெற்றுள்ளன.

***"நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள் - 948)***

என்பது வள்ளுவரின் மருத்துவமுறை, நோய் வருவதன் காரணத்தையும் நோய் இன்னதென்பதையும் ஐயமறத் துணிந்து மருந்து செய்தல், உதிரம் களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய முறைகளை மேற்கொண்டு அந்நோயைப் போக்க வேண்டும் என்பது பண்டைய மருத்துவ முறையாகும்.

## உழவு

உழவுத்தொழில் பற்றிய அறிவியல் சிந்தனையைத் திருக்குறளிலும் காணலாம். அகல உழுவதினும் ஆழ உழுதல் சிறப்பு என்ற அனுபவமொழியை ஒட்டி ஒருபலம் புழுதி கால்பலம் ஆகிறவரைக்கும்

நிலத்தைக் காயவிடவேண்டும். அவ்வாறு காயவிட்டால் ஒருபிடி எருவும் இல்லாமலேயே பயிர்கள் செழித்து வளரும்.

***"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்***
***வேண்டாது சாலப் படும்" (குறள் - 1037)***

நிலம் நன்கு உழுது அடிக்கடி புரட்டும்போது ஆற்றலின் மூலமாக ஆதி மூலமாக இலங்கும் வெய்யோன் ஒளியால் வெப்பத்தில் நிலமங்கை மிக்க ஆற்றலைப் பெறுகின்றாள். ஏர் உழுவதைவிட எருஇடுதல் நல்லது: களை கட்ட பிறகு, நீர்பாய்ச்சுதலைவிடக் காவல் காத்தல் நல்லது. ஆகவே இவை எல்லாவற்றையும் விடாமல் செய்வதே உழவன் கடமையாகும் என்பதை வள்ளுவம் நன்கு உணர்த்துகிறது.

## முடிவுரை

அறிவியல் சிந்தனைகள் மனத்தைப் பற்றியவை. இலக்கியச் சிந்தனைகள் உணர்வை அடிப்படையாகக் கொண்டவை. பண்டைத் தமிழர்கள் அறிவியல் சிந்தனை மிக்கவர்களாகத் திகழ்ந்தனர் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் விரித்துரைக்கின்றன. வயிற்றில் உணவுக்காகப் பசி ஏற்படுவதுபோல மூளையில் அறிவுக்காகப் பசி ஏற்பட வேண்டும். அப்பசி அறிவியல் சிந்தனைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்பதைத் தமது நூலில் விரிவாக எடுத்துரைத்துள்ளார் அறிஞர் சுப்புரெட்டியார். தமிழர்கள் அனைத்துத் துறைகளிலும் முத்திரை பதித்தவர்கள், முன்னோடிகள், உலகுக்கே வழிகாட்டியவர்கள் எடுத்துக்காட்டாக அன்றும் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் என்ற நிலை உருவாக நாமும் ஒல்லும் வகையால் உழைத்து உயர்வினை அடைதல் வேண்டும்.

# 13. முனைவர் ந.சுப்புரெட்டியின் நோக்கில் மானுடப்பிறப்பு

**முனைவர் ஆர். நிர்மலா தேவி**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)*
*ஈரோடு - 638 012.*

*"அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி*
*அகத்திலே அன்பினோர் வெள்ளம்*
*பொறிக ளின்மீது தனியர சாணை*
*பொழுதெலாம் நினதுபே ரருளின்*
*நெறியிலே நாட்டம் கரும யோகத்தில்*
*நிலைத்திடல் என்றிவை அருளாய்*
*குறிகுணம் ஏதும் இல்லதாய் அனைத்தாய்க்*
*குலவிடும் தனிப்பரம் பொருளே"*

என்ற பாரதியாரின் கனவினை நனவாக்கியவர் முனைவர் ந.சுப்புரெட்டி அவர்கள். கல்லூரியில் பயிலும் போதே அறிவியல் கருத்துக்களைப் பரப்ப வேண்டும் என்று கனவு கண்டவர். தான் கண்ட கனவினை நனவாக்கும் விதமாக அறிவியலில், பல துறைகளில் சிறுவர்களுக்காகவும், வளர்ந்தவர்களுக்காகவும், பொது மக்களுக்காகவும் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியுள்ளார். அதில் பதினான்கு நூல்கள் அறிவியல் சார்ந்தவை. இனிமை, எளிமை, தெளிவு நிறைந்தவை இவர் தம் நூலின் சிறப்பியல்புகள்.

ஆசிரிய பயிற்சி பெறும் மாணவர்களுக்கு தமிழ் வழி அறிவியல் பரப்பும் வகையில் அறிவியல் பயிற்றும் முறை என்ற நூலையும், அணுவின் அற்புத ஆற்றலை விளக்கும் முகமாக அணுவின் ஆக்கம், அணுக்கரு பௌதிகம் ஆகிய நூல்களையும், தகவல் தொடர்பு சாதனைகளான வானொலி, தொலைக்காட்சி பற்றி இளைஞர் வானொலி, இளைஞர் தொலைக்காட்சி என்ற நூல்களையும், மின்னணுவின் அதிசயத்தை அதிசய மின்னணு என்ற தலைப்பிலும், நமது உடலின் செயல்பாடுகளை விளக்கும் முகமாக நமது உடல் நூலையும், விண்ணுலக பயணம் பற்றி இராக்கெட்டுகள், அம்புலிப் பயணம், தொலை உலகச் செலவு, வான மண்டலக் காட்சி ஆகிய நூல்களில் தெள்ளத் தெளிவாகக் காட்டியுள்ளார். அறிவியலில் தான் கண்டு அனுபவித்த சிறப்புகளையெல்லாம் அறிவியல் விருந்து என்ற தலைப்பில் படைத்துள்ளார். உயிரியலில் ஜுன்களால் விளையும் பல துறைகளை அறிவியல் கல்வி பயிலாதவர்களும் புரிந்து கொள்ளும் முறையில் வாழையடி வாழை என்ற நூலில் பதிவு செய்துள்ளார்.

இல்லற நெறி முறைகளை கடித உத்தி முறையில் எழுதியுள்ளார். மனித வாழ்வுக்குத் தேவையான அத்தனை கருத்துக்களும் இவரது படைப்புகளில் புதைந்துள்ளன.

இந்தப் பெரிய பிரபஞ்சத்தில் மனித இனத்தினுடைய பரிணாமம், தோற்றம், வளர்ச்சி, இயக்கம் எல்லாமே இயற்கையின் உச்சக் கட்டச் சிறப்புகள் ஆகும். ஒரு குழந்தையின் உற்பத்தியானது பெற்றோர்களுடைய உடல், உயிர், அறிவு இவற்றின் தரத்திற்கு ஏற்றவாறு தான் அமையும். நல்ல குழந்தை வேண்டுமானால் பெற்றோர்கள் உடலை, அறிவைச் செம்மையாகப் பேணிக் காக்க வேண்டும் என்ற வேதாத்ரி மகரிஷியின் தத்தவத்தினை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டது வாழையடி வாழை என்ற நூல்.

## வாழ்வின் தொடக்கம்

நம்முடைய பெருமையையும் புகழையும் இவ்வுலகத்தில் நிலைக்கச் செய்பவை நம் வாரிசுகளே! வழிவழியாக வரும் மரபுத் தன்மை மிகவும் நுட்பமாகவுள்ள விந்தணு, முட்டை ஆகியவற்றின் மூலமாகவே அமைதல் வேண்டும். கண்ணால் காண முடியாத இந்த உயிரணுக்களே பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் தொடர்பினை ஏற்படுத்துகின்றன. தந்தையிடமிருந்து வரும் 23 தனி நிறக்கோல்களும் தாயிடமிருந்து வரும் 23 தனி நிறக்கோல்களுடன் இணைந்து குழந்தையின் உடலில் இணை நிறக்கோல்களாக அமைகிறது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்வினை 46 நிறக்கோல்களைக் கொண்ட ஒரு கருவுற்ற முட்டையிலிருந்து தொடங்குகின்றோம். உயிரணுக்கள் இரட்டித்து பல்கிப் பல இலட்சக்கணக்கான உயிரணுக்களாக மாறி பந்து போன்ற பிழம்பாக கருப்பந்து என்று பெயர் பெற்று தாயின் கருப்பையில் ஓடி, முட்டை கருப்பையில் ஒட்டிக் கொள்ள முயலும் போது பல எதிர்ப்புகளை வென்று முட்டைச் சுவரில் பதிந்து கொண்டவுடன் முட்டையின் மேற்புறத்திலிருந்து சிம்புகள் வளர்ந்து கருப்பைச் சுவரைக் குடைந்து அதிலுள்ள குருதிக் குழல்களை அரித்துக் குருதியுடன் தொடர்பு கொண்டு தாயின் குருதியிலுள்ள ஊட்டச்சத்தினால் புல்லுருவிபோல வளர்கின்றது. இளஞ்சூலின் அடி வயிற்றையும் நஞ்சையும் இணைப்பது கொப்பூழ் கொடி. இந்த கொப்பூழ் கொடியின் வழியாக உயிரியம், நீர் சென்று, கழிவுப் பொருள்கள் சவ்வூடு பரவுதல் முறையில் வெளியேறுகின்றன. நான்காவது வாரத்தில் உயிரணுக்கள், தசையணுக்கள், தோல் அணுக்கள், குருதியணுக்கள், எலும்பு அணுக்கள், மூளை அணுக்கள் போன்ற அணுக்களாகப் பிரிந்து உடலின் பல்வேறு பகுதியாக வளர்கின்றன.

## ஆணா? பெண்ணா?

*“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு”*

என்றார் வள்ளுவர். ஒவ்வோர் உயிரணுவிலும் நிறக்கோல்கள் எனப்படும் பொருள்கள் அடங்கியுள்ளன. மானுட உயிரணுவில் இணை

நிறக்கோல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு இணையிலுமுள்ள ஒன்று தாயின் வழியாகவும், மற்றொன்று தந்தை வழியாகவும் வந்தவை. 22 இணைகள் ஒரே மாதிரியாக இருக்கும். பெண் மக்களுள் 23-வது இணையிலுள்ள நிறக்கோல்கள் இரண்டும் ஒரே மாதிரியாக இருக்கும். அவற்றை xx என்பர். ஆண் மக்களுள் 23 வது இணையில் ஒன்று பெண்மக்களுடைய x நிறக்கோலைப் போலும் மற்றது சிறிதாகவும் இருக்கும். சிறிது Y எனப்படும். ஆணின் உடலிலுள்ள உயிரணுக்களில் 22 இணைகள் +XY நிறக்கோல்களும், பெண்ணின் உடலிலுள்ள உயிரணுக்களில் 22 இணைகள் +XX நிறக்கோல்களும் உள்ளன என்று தெளிவுபடுத்துகிறார். +XX, +XY நிறக்கோல்கள் பாலை அறுதியிடும் நிறக்கோல்கள் என்றும், மற்றைய 44 நிறக்கோல்கள் ஆட்டோசோம்கள் என்றும் வேறுபடுத்தி கூறுகின்றார். இதிலிருந்து 22+X வகை விந்தணு முட்டையுணுவுடன் சேர்ந்து கருவுறுங்கால் பெண் குழவியும், 22+Y வகை விந்தணு முட்டையுணுவுடன் சேர்ந்து கருவுறுங்கால் ஆண் குழவியும் பிறக்கின்றன. ஆண் குழந்தை பிறப்பதற்கும், பெண் குழந்தை பிறப்பதற்கும் காரணமாக இருப்பவன் ஆணே!. பெண்ணைக் குறை கூறுவது தவறு.

## தோற்றப் பொலிவு

முகத் தோற்றத்தில் அழகும் அருளும் அதிர்ஷ்டமும் தருவன ஜுன்களே. மூக்கு, கண்கள், காதுகள், உதடுகள் முதலியவை ஒருங்கு சேர்ந்த முகத் தோற்றமும், மரபு வழியாகத் தோன்றும் மயிர், உண்ணும் பழக்கங்கள், தூங்கும் முறை, பேசும் முறை, எண்ணும்முறை, உள்ளக் கிளர்ச்சி, பல்வேறு நடத்தை மாறுபாடுகள், நோய்கள், கிழத்தன்மை இவை யாவும் மாற்றத்தில் பங்கு பெறுகின்றன. உடற்பருமனும் வடிவமும் கூட ஜுன்களால் தான் அறுதியிடப் பெறுகின்றன.

## உடலிலுள்ள உள்ளுறுப்புகள்

நமது உடலிலுள்ள சுரப்பிகள் என்பவை சிறப்பு வாய்ந்த உள்ளுறுப்புகளின் தொகுதியாகும். தனிப்பட்டோரிடம் காணப்பெறும் சிறப்புப் பண்புக்கு இவையே முதற்காரணம். அடித்தலைச் சுரப்பிகள் (Pituitary glands), புரிசைச் சுரப்பிகள் (Thyroid glands), மேல்தலைச் சுரப்பிகள் (Pineal glands), துணைப் புரிசைச் சுரப்பிகள் (para thyroids), மாங்காய் சுரப்பிகள் (Adrenal glands), நெஞ்சுக்குழைச் சுரப்பிகள் (Thymus glands), காமச் சுரப்பிகள் (Sex glands) முதலியவை அடங்கும். இவை குருதியினுள் ஹார்மோக்கள் எனப்படும் சாறுகளை அனுப்புகின்றன.

சுரப்பிகளுக்கு அடுத்தபடியாக நமது உடலில் மிக முக்கியமான உறுப்பு மூளை. ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையே காணப்பெறும் மூளையின் சிறு வேறுபாடுகளும் மாறுபாடுகளும் மரபு வழியாகவே அமைய வேண்டும்.

இதயம், கல்லீரல், நுரையீரல்கள், தீனிப்பை (Stomach), போன்ற ஏனைய உள்ளுறுப்புகளின் வடிவத்திலும் அமைப்பிலும் காணப்பெறும்

வேறுபாடுகளும் மரபுவழியாகவே வந்தவை. நாம் மனிதனாகப் பிறந்து வளர்வதே மரபு வழியாக ஏற்படுவதாகும்.

## இரட்டைப்பிறவிகள்

கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய உயிரணுக்களிலிருந்து மானிட உயிர் தோன்றுவதும் பல்வேறு சிக்கலான அமைப்புகளையும் பண்புகளையும் கொண்ட ஒரு மனிதன் உருப்பெறுவதும் வியப்பே. அதே சிறிய உயிரணுக்களிலிருந்தே இரண்டு, மூன்று, நான்கு என சிலசமயம் ஒரே மாதிரியான பல குழவிகள் தோன்றுவது வியப்பிலும் வியப்பு.

கருவுற்ற ஒரே முட்டையிலிருந்து இரண்டு குழந்தைகள் உண்டாகின்றன. கருவுற்ற முட்டை பிரிவுபட்டு உண்டான கருப்பத்தில் உள்ள உயிரணுக்களின் தொகுதி இரண்டு பகுதிகளாகப் பிரிந்து ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு குழந்தையாக வளரும். வளர்ச்சியின் முதல் நிலையில் எல்லா உயிரணுக்களுக்கும் குழந்தையின் எல்லாப் பகுதிகளாக வளரும் ஆற்றல் உண்டு. இவ்வாறு பிறக்கும் குழவிகளின் தோற்றம், தன்மை, உயரம், நிறம், உறுப்புகளின் அமைப்பு முதலிய மரபுவழிக்கூறுகள் அனைத்திலும் ஒரே மாதிரியாகவே இருக்கும். கருப்பையில் வளரும்பொழுது இரண்டும் ஒரே கோரியானால் மூடப்பெற்றிருக்கும். கருப்பந்தின் உட்புறத்தில் உயிரணுக்கள் ஒரு வரிசையாகவும், கருப்பந்துச் சுவருடன் சேர்ந்து அமையும் முறைக்குக் கோரியான் என்று பெயர். இது தாயின் குருதிலிருந்து உணவுச் சத்துக்களைப் பெறுவதற்குத் துணை செய்கின்றது. ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனி கொப்பூழ் கொடியும், பனிக்குடமும் உண்டு. கொப்பூழ் கொடி ஒரே நஞ்சுடன் இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அச்சு இரட்டையர்கள், சகோதர இரட்டைகள், இயல்பிகந்த இரட்டையர் எனப் பலவகையுண்டு. நம் நாட்டுப் புராணக் குசேலருக்கு இருபத்தேழு குழவிகள் இருந்ததும் அவை கஞ்சிக்காக படும்பாட்டையும் நயமாகப் புனைந்துள்ளார் புலவர்.

*ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு*
*கைநீட்டும் உந்திமேல் வீழ்ந்து*
*இருமகவும் கைநீட்டும் மும்மகவுங்*
*கைநீட்டும் என்செய் வாளால்*
*பொருமியொரு மகவழுங் கண் பிசைந்தழும்மற்*
*றொருமகவு புரண்டு வீழாப்*
*பெருநிழலத்திற் கிடந்தழுமற் றொருமகவெங்*
*ஙனஞ்சகிப்பாள் பெரிதும் பாவம்*
*அந்தோவென் வயிற்றெழுந்த பசியடங்கிற்*
*றில்லையென அழுமால் ஓர்சேய்*
*சிந்தாத கஞ்சிவார்க் கிலையெனக்கன்*
*னாயெனப்போய் செப்பும் ஓர்சேய்*
*முந்தார்வத் தொருசேய்மி சையப்புகும்போ*

*தினிலோர்சேய் முடுகி யீர்ப்ப*
*நந்தாமற் றச்சேயும் எதிரீர்ப்பச்*
*சிந்துதற்கு நயக்கும் ஓர்சேய்*
*(குசோலபாக்கியானம் - குசேலா*
*மேல்கடலை யடைந்தது-செய்: 70-71)*

## உயிர் தொழிற்சாலையின் சிறப்பு

*புனலில் வாழும் சிறுசிப்பி புரியும் விந்தை கேட்டிட்டால்*
*மனமோ வியப்பில் மூழ்குதய்யா! மாயம் மிகவும்*
*நீளுதம்மா!*
*கணவனாகி ஓராண்டு காதல் புரியும் மறுஆண்டு*
*மனைவியாகி மகவீன்று மாய வாழ்க்கை நடத்துமால்*
*சின்னஞ் சிறிய எழிற்சிப்பி சீரார்தாயாய்த் தந்தையாய்*
*மன்னும் இனிய சோதரனாய் மகிழ்சோதரியாய்*
*மாறுதம்மா!*
*இரட்டை வாழ்வைச் சிறுசிப்பி இசைத்து வாழ்தல்*
*உண்மையெனில்*
*மருட்டும் சிப்பி தன்னுணவில் மாய்ந்து போதல்*
*வியப்பாமோ!*

கருவுற்ற பின்னர் உயிரணு பிரியும் முதல் நிலைகளில் பின்னர் பெண்ணாக அமையவேண்டி கருவில் X - நிறக் கோல்களில் ஒன்று ஒழுங்கு தவறிவிடுவதாலோ அல்லது ஏதோ ஒரு முறையில் இழக்கப்பெறுவதாலோ அர்த்த நாரி உயிரி உண்டாக்கப் பெறுகின்றது.

இதற்கு மேலாக குழந்தை வளர்ச்சியைப் பற்றி மாணிக்கவாசகர் தான் எழுதிய திருவாசகத்தில் நான்காவதாக அமைந்த போற்றித் திருவகவலில் இன்றைய மருத்துவம் கூறுவது போல நுட்பமாகக் கூறியுள்ளார்.

*“மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து*
*ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்து*
*ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்*
*இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்*
*மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்*
*ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்*
*அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்*
*ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்*
*ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்*
*எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்*
*ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்*
*தக்க தசமதி தாயொடு தான்படுந்*
*துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்”*
*(போற்றித் திருஅகவல்13-25)*

பெண்ணின் கருப்பையைச் சென்று அடையும் உயிரணு எவ்வாறு ஒவ்வொரு மாதமும் வளர்ச்சியடைகிறது என்பதனைத் துல்லியமாகக் கூறியுள்ளார்.

## செயற்கை முறையில் கருத்தரிப்பு

''மலடி வயிற்றில் ஒரு மகன் போலே புதையல் எடுத்த ஒரு தனம் போலே'' என்பது திருபுகழின் அடிகள். தனம் கிடைத்தல் நடைபெறக் கூடியது. ஆனால் மலடிக்கு மகன் பிறத்தல் அரிது. இன்றைய அறிவியல் அதனையும் மெய்ப்பித்துக் காட்டியுள்ளது. அவை புராணத்தில் கதை போல் அடங்கியுள்ளது. கம்சனுக்கு பயந்து தேவகி கருவுற்றபோது அந்தக் கருவில் வளர்ந்து பிறக்கும் குழவியைக் கம்சனிடமிருந்து தப்புவிக்க வேண்டும் என்ற எம்பெருமானின் திருவுள்ளத்தினால் அக்கரு வசுதேவனின் மற்றொரு மனைவி ரோகிணியின் கருப்பைக்கு மாற்றப்பட்டுப் பலராமனாகப் பிறந்தது, கண்ணனுக்கு மூத்தவன் என்பதால் சங்க இலக்கியங்களில் நம்பி மூத்தபிரான் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை அறியலாம்.

''வாழையடி வாழையென வந்த திருக் கூட்டம் மரபினில் யான் ஒருவனன்றோ'' (திருவருட்பா- ஆறாந் திருமுறை - பிரியேனென்றல்- செய்- 4) என்ற இராமலிங்க வள்ளலார் பாடியுள்ளதை மெய்பிக்கும் வகையில் அறிவியல் தத்துவங்களை வாழையடி வாழையாக வரும் இயற்கையன்னையின் திருவிளையாடல்களின் இரகசியங்களை அனைவரும் அறிந்து நல்வழியில் நடந்து அந்நாட்டுக்கும் வீட்டுக்கும் பெருமை சேர்ப்போம்.

# 14. பாவேந்தரின் பாட்டுத்திறன்

**லெ. கமலா**
*ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

“மனிதவாழ்க்கை என்பது உணவு, உடை, உறையுள் என்பதோடு நிறைவு பெறுவதில்லை. நாகரீக வளர்ச்சியில் மனித மனம் இவற்றிற்கு மேலாக வேறுவகையில் இன்பத்தை அடைய விரும்புகின்றது. இவ்விருப்பத்தை நிறைவேற்றி இன்பம் அளிப்பவை கலைகளே! முழுமையான சுதந்திர உணர்வுடன் படைக்கப்படும் கலை உயர்வடைகின்றது. கலைகளில் இலக்கியப் படைப்பு என்பது ஒரு தனிக்கலை மட்டுமன்று” தலையாய கலையும் அதுவே. இத் தலையாய கலைகளில் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டோரில் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் அர்ப்பணிப்புணர்வு அளவிடற்கரியது. எல்லையற்றது அப்பெருமகனாரின் தமிழ்த்தொண்டு!. அவரது திறனாய்வுப் படைப்புகளுள் சீர்மிகு படைப்பே “பாவேந்தரின் பாட்டுத்திறன்”. தமிழ்க்கவிதை வானின் துருவ நட்சத்திரமாக விளங்கும் பாவேந்தரின் உணர்வுகளை, ஆளுமையைப் படம்பிடித்துக் காட்டி பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகிறார் ந. சுப்புரெட்டியார்.

## திறன் பகர்தல்

மனிதன் பெற்ற பெரும் பேறுகளுள் ஒன்று மனம். மனத்தின் ஆழமும் பரப்பும் அறிய இயலா இயல்பும் மிளிரும் களம் கவிதைக் களமே ஆகும். கவிதை நிலத்தில் ஆழ உழுது, கவிப்பயிர்களை அறுவடை செய்த பாவேந்தரின் கற்பனை, சொல்வளம், யாப்புநெறி, உவமைகள், சுவைகள், கவி கூறும் உண்மைகள் போன்றவற்றை ஆராய்ந்து அனுபவித்து நம்மையும் அற்புத அனுபவத்திற்கு இட்டுச் செல்கின்றார் ந.சுப்புரெட்டியார்.

> “***பாவின் நயமெல்லாம்***
> ***யானும் பகரவல்லேனோ***
> ***ஆவின் பாற்சுவையை நாழி***
> ***அளந்து காட்டிடுமோ?***”

என்ற கவிமணியின் வாக்கினைக் கூறி, பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் தம் கவிதை அனுபவத்திற்கு நம்மை ஆயத்தம் செய்கின்றார்.

## பொருண்மை

மக்களுக்காகவே உலகப் பொருள்கள் அனைத்தும் படைக்கப்படுகின்றது என்ற அடிப்படையில் சிந்திக்கும் பொழுது,

உலகப் பொருள்கள் அனைத்துமே இலக்கியப் பொருண்மையில் அடங்கிவிடும். கவிதைக்குப் பாடுபொருளாக இன்னதுதான் இருக்கவேண்டும் என்ற வரையறை இல்லை.

***''உள்ளத்து உள்ளது கவிதை - இன்பம்***
***உருவெடுப்பது கவிதை:***
***தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை***
***தெரிந்துரைப்பது கவிதை''***

என்று கவிமணியின் கைப்பிடிக்கின்றார். கடவுள், சமயம், இயற்கை, அன்றாட நேரங்கள், மொழி, தமிழ் வளர்ச்சி, கொள்கை, பெண்ணியம், சமத்துவம், புத்தகங்கள், மானிடம், திராவிடம், உலக ஒற்றுமை, சமூக முன்னேற்றம் எனப் பற்பலத் தளங்களில் பயணித்த பாவேந்தரை நம் கண்முன் மீண்டும் பயணிக்கவைக்கின்றார் ந.சுப்புரெட்டியார். உலகப்பொருள்கள் யாவும் கவிதைக்குரிய பொருள்களே என்ற சிந்தனைக்கு இட்டுச் செல்கின்றார்.

## உளவியல் நோக்கு

உடலும் உள்ளமும் நன்னிலையில் உறவு கொண்டிருந்தால்தான் நல்ல உணர்ச்சிகள் தோன்றி, கவிதையை அனுபவிக்கத் துணைசெய்யும் என்பதை உளவியல் நோக்கில் நிறுவுகிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார். கவிதையைப் படித்துத் துய்க்க உளவியலையும் துணைக்கு அழைக்கின்றார். தூண்டல் துலங்கல் கொள்கையையும், உளவியல் கோட்பாடுகளையும் எடுத்துக்காட்டுகிறார்.

குடும்பவிளக்கில் குழந்தைக்குப் பெயரிடும் நிகழ்வில் படைப்புக் கற்பனையையும், அழகின் சிரிப்பில் இயைபுக் கற்பனையையும், பிரிவில்லை எங்கும் பேதமில்லை என்னும் தலைப்பில் கருத்து விளக்கக் கற்பனையையும் சுட்டிக்காட்டி, ''பொதுவாகக் கற்பனை, மனதின் வளர்ச்சிக்கு உறுதுணையாகிறது'' என்ற உளவியல் கருத்திற்கு உரம் சேர்க்கின்றார்.

## ஒப்பு நோக்கல்

பாவேந்தரின் சொல்வளத்தை ''செஞ்சொற் கவியின்பம்'' என்கிறார் ந.சுப்புரெட்டியார். பாவேந்தரைக் கம்பனுடனும், பாரதியுடனும், வள்ளுவனுடனும், அதிவீரராம பாண்டியனுடனும் ஒப்பிட்டுப்பார்த்துப் பரவசமடைகின்றார்.

''ஆமை ஒருமையில் ஐந்தடக்கும்'' என்ற குறள்வழி, பாவேந்தர் பல ''ஆமை''களை இரு பாடல்களில் அடக்கிக் காதலின் பரிமாணத்தை விளக்குவதை ந.சுப்புரெட்டியார் ஒப்புநோக்கி உவப்படையச் செய்கின்றார்.

***''காமம் எனும் நறவு கண்டார்க்கு மகிழ்வைத் தரும்''***
***(குறள்: 1090)***

என்ற வள்ளுவர் கருத்தையும்,

***“உண்டாலே தேன் மலரின் தேன் - இவள்***
***கண்டாலே தித்திக்கும் தேன்”***

என்ற பாவேந்தரின் கருத்தையும் ஒப்பிடுகிறார்.

பாவேந்தரின் பாடல் அடிகள் 40,600 எனக் கணக்கிட்ட ந.சுப்புரெட்டியார், கம்பராமாயண அடிகளுடன் (41,472) ஒப்பிட்டுக் கவிச்சக்கரவர்த்திக் கம்பரின் அருகில் வரும் பாவேந்தரை “இருபதாம் நூற்றாண்டின் கவிச்சக்ரவர்த்தி” என்று பெருமைப்படுத்துகின்றார்.

## வடிவம்

சந்தம், யாப்பு, உள்ளடக்கம் ஆகிய மூன்றுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக அமைய வேண்டும். தனித்தும், இணைந்தும் மகிழ்வூட்டும் இம்மூன்றின் உயிரோட்டமான ஒருங்கிணைப்பே கவிதை என்ற கருத்திற்குப் பாவேந்தரின் கவிதைகள் மிகச் சிறந்த சான்றுகள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். பாவேந்தர் பயன்படுத்திய பா - வகைகளை 39 என்று கணக்கிட்ட ந.சுப்புரெட்டியார், சிந்துக்குத் தந்தை பாரதி எனில் அதன் புகழ் பரப்பியவர் பாவேந்தர் எனப் போற்றுகின்றார்.

## உணர்வும் உணர்ச்சியும்

உணர்வும் உணர்ச்சியும் ஒன்றல்ல. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களால் ஏற்படும் உணர்வும், மன உணர்வும், உணர்வின் பாற்படும்.

தொல்காப்பியர் மனித மன உணர்ச்சிகளை மெய்ப்பாட்டியலாக விளக்குகின்றார். பாவேந்தரின் கவிதைகளில் நகை, உவகை, வெகுளி, அழுகை, வீரம், அச்சம், மருட்கை, இளிவரல் என அனைத்துச் சுவைகளையும் பட்டியலிட்டுக் காட்டும் ந.சுப்புரெட்டியாரின் சுவைத்திறன் “ஐம்பொறிகளால் அறியவல்ல நுண்ணறிவு உடைய சான்றோர் பெருமகனார்” என்பதைக் காட்டுகின்றது.

## வெளிப்பாடு

உணர்ச்சிமிகு சொற்களே உணர்வினை, உளப்பாங்கை வெளிப்படுத்தவல்லன. ஏற்ற சொற்களும் ஒலிகளுமே இவற்றை நிர்ணயிக்கின்றன. உணர்ச்சிக்கு வடிவம் தரக்கூடிய கவிதைகளில் இவை மிக மிக இன்றியமையாதன.

***“சமூக சீர்த்திருத்தம் மற்றும் தொழிலாளர் நலனை***
***ஆதரிக்கும் கவிஞர்,***
***சாதி, மத பேதங்கள் மூட வழக்கங்கள்***
***தாங்கி நடைபெற்றுவரும் சண்டை உலகிதனை***
***ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம் - பின்***
***ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய்வோம்”***
***(பாரதியார் கவிதைத் தொகுப்பு)***

என்ற பாட்டிலும்,

***"இந்தி எதிர்ப்பை இந்திக்குக் காட்டுக கொதிப்பை வெறுப்பை
இன் நாட்டார் உணரட்டும் தமக்குள்ள பொறுப்பை
என்றும் கோபக் கனலை வெளிப்படுத்துகின்றார்."***

காதல் உணர்விலே தமிழ்ச் சொற்கள் கொஞ்சி வருகின்றன. வீர உணர்ச்சியோ,

***"செத்தனர் செத்தனர் நமை மிதித்தோர் - இனி
சீறும் புலிகள் நாம் வெல்பவர் யார்?"
(வேங்கையே எழுக)***

என வீறுகொண்டு எழச்செய்கின்றார். தமிழ் உணர்வை,

***"தமிழரின் தமிழ்க்குழந்தை
தமிழ்ப்பெயர் பெறல் வேண்டும்"***

எனத் தமிழுணர்வு ஊட்டுகின்றார்.

***"இரக்க உணர்வை, சோக உணர்வை
தமிழர் பிரான் தன்னருமைப் படைத் தலைவன்
தனையிழந்தால் சலியாதோ சலியா உள்ளம்"***

என்ற பாட்டிலும் வெளிப்படுத்திய பாவேந்தரின் பலவித உணர்வுகளைச் சுட்டிக்காட்டிப் படிப்போரிடையும், செவிமடுப்போரிடையும் உணர்வு நிலையை ஏற்படுத்துகிறார் ந.சுப்புரெட்டியார்.

நினைவாலேயே அனுபவத்தை அடையச்செய்யும் ஆற்றலே கற்பனை. கவிதையின் பிற பண்புகளுக்கெல்லாம் அடிப்படை இதுவே. கற்பனை நயம் இல்லாதோர்க்கு முழுமதிக் காட்சி எவ்வித உணர்வையும் ஏற்படுத்தாது. ஆனால் அதே காட்சியைக் கண்ட பாவேந்தரின் கற்பனைச் சொல்லோவியத்தை எடுத்தியம்பி களிப்புலகிற்குக் கூட்டிச்செல்கிறார் ந.சுப்புரெட்டியார்.

***"நீல வான ஆடைக்குள் உடல்மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை!
சோலையிலே பூத்த தனிப்பூவோ நீதான்
சொக்க வெள்ளிப் பாற்குடமோ?"***

எனக் கவிஞரின் இனிய கற்பனையை எடுத்தாள்கின்றார்.

இக்கற்பனை கனவு போன்றது. உள்ளதை உள்ளவாறு காண்பதா கனவு? உள்ளம் விழையுமாறு காண்பதுதானே கனவு என்று கனவிற்கும் கற்பனைக்கும் வடிவம் கொடுத்து உள்ளனுபவத் தூண்டுகோலாகிறார் ந.சுப்புரெட்டியார்.

## சொல்வளம்

கவிஞன் தன் சீரிய அனுபவத்தை பதிய வைக்கவேண்டுமெனின் அவன் சொல்லாட்சி உத்தியினைக் கையாள்வதில் தேர்ந்தவனாக இருக்கவேண்டும்.

சொற்கள் தனித்தனியாக இருக்கையில் தரும் பொருள் வேறு. இணையும் போது தரும் பொருள் வேறு என்பதைக் காதலியைக் கண்ட காதலன் பாடுவதாக வரும் பாட்டில் “தேன்” என்ற சொல்லிலும், பால்காரனின் அன்பு “பால்” என்ற சொல்லிலும் ஆளப்படுவதை ஆய்ந்து கூறுகின்றார் ந.சுப்புரெட்டியார்.

***“மொண்டால் குறையாதத் தேன் - நான்***
***மொய்த்தேன் பேராசை வைத்தேன்” (காதல் பாடல்)***

***“கண்ணன்பால் மிக அன்பால் - வேலைக்காரி***
***பால்செம்போடு சென்றாள்***
***வெறுப்பால் பெண்பால்***
***“சீ” என்பால் நில்லாதீர்***
***போவீர் அப்பால்” (காதல் பாடல்)***

பாவேந்தரின் சொல்லாட்சிகளை விளக்கியுரைத்த ந.சுப்புரெட்டியார் சாதாரண சொற்களும் கவிதையில் இடம்பெறும்போது தனிமதிப்பைப் பெறுவதை ஒரு திறனாய்வாக “கவிதை மதிப்பு” (poetic value) எனக் குறிப்பிட்டுக் காட்டுகிறார். இயல்பாக அமையும் சொல்வளமே கவிதையை உயர்வடையச் செய்யும் என நம்புகிறார்.

## முடிவுரை

குறுகிய காலத்தில் சிறந்த நூல்களைப் படித்துணரும் வாய்ப்பு, திறனாய்வால் மட்டுமே கிடைக்கக் கூடியது. ந.சுப்புரெட்டியார் ஐயாவின், அரிய இம்முயற்சியால் பாவேந்தர் சிம்மசொப்பனக் கவியாக உருவெடுக்கிறார்.

***“கன்னற் பொருள் தரும் தமிழே!***
***நீ ஓர் பூக்காடு***
***நான் ஓர் தும்பி”***

என்ற பாவேந்தரின் தமிழில் திளைத்த ந.சுப்புரெட்டியார் ஐயா, தமிழ் இலக்கிய களஞ்சியத்தில் கவிதைச் செல்வத்தை விட்டுச்சென்ற பாவேந்தரின் கவிச்சுவையை நம்மையும் சுவைக்கச் செய்திருக்கிறார். தமது நுண்மான் நுழைப்புலத்தால் எல்லா வகையிலும் சிறப்புற அமையுமாறு அதன் உள்ளடக்கம், சொற்கள், சிந்தனை, சொல்லும் முறை, வித்தியாசப்படுத்தும் தன்மை, இளமைப் பொலிவு, தெளிவு என இப்படிப் பலவற்றால் புதுமைப்படுத்துகின்றார் ந.சுப்புரெட்டியார். எனவேதான் அவரின் படைப்புகள் தனித்துவம் பெற்றுக் காலத்தால் அழியாத் தன்மையுடன் திகழ்கின்றது.

# 15. ந. சுப்புரெட்டியாரின் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை - சமூகநிலையும் பழக்க வழக்கங்களும்



**த. சிவவிவேதா**
*முனைவர் பட்ட மேலாய்வாளர்*
*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை*

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றிற்கும் இலக்கணம் கூறும் நூலாகும். இவற்றில், எழுத்ததிகாரம் எழுத்துக்களின் ஒலி அளவுகள் செய்யுளில் எவ்வாறு திரிபடைகின்றன என்பது குறித்து விளக்குகின்றது. சொல்லதிகாரம் பேச்சு மொழிக்கும், செய்யுள் மொழிக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை விளக்குவதாக அமைகின்றது. பொருளதிகாரம் இலக்கியங்களுக்கு உரிய கோட்பாடுகளைக் கட்டமைக்கும் தன்மையனவாக அமைகின்றது. தொல்காப்பியம் இலக்கியங்களில் அமையும் மொழிக்கூறுகளையும், கோட்பாடுகளையும் விளக்குவதாகவே அமையினும், இலக்கியங்கள் என்பவை ஒரு காலத்தின் சமூகநிலையினையும், பழக்க வழக்கங்களையும், பண்பாடுகளையும் பிரதிபலிப்பனவாகவே அமைகின்றன. ஆகவே தொல்காப்பியம் குறித்து ஆய்வு செய்யும் ந.சுப்புரெட்டியார் அவர்கள் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை எனும் தலைப்பில் நூல் ஒன்று படைத்துள்ளார்.

தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை எனும் நூலில் ந.சுப்புரெட்டியார் அவர்கள், தொல்காப்பியப் பொருளதிகாரத்தை 33 இயல்களில் ஆய்வு செய்கின்றார். ஒவ்வொரு இயலும் பொருளதிகார இயலின் முக்கியக் கூறுகளை ஆய்வதாக அமைகின்றது. இறுதியாகத் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கையை வரையறைப்படுத்துகின்றார். ந.சுப்புரெட்டியார் அவர்கள் தம்நூலில் தொல்காப்பியம் காட்டும் சமூகநிலையினையும், பழக்க வழக்கங்களையும் இனங்கண்டுள்ள முறைமையினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## சமூக வாழ்க்கை

தொல்காப்பியம் சமூகத்தில் வாழும் மக்களைக் குறித்துக் கூறும் போது உயர்ந்தோர், நால்வர் எனும் சொற்களையே பயன்படுத்துகின்றது. நால்வர் எனும் சொல்லுக்கு உரையாசிரியர்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று விளக்கம் கூறுகின்றனர். உயர்ந்தோர் என்பது ஒழுக்கம், குணம், செல்வம் ஆகியவற்றால் உயர்ந்தவர்கள்

என்று பொருள் கூறுகின்றனர். நால்வகைப் பிரிவினர் அவர்கள் செய்யும் தொழிலால் குறிக்கப்படுபவரே அல்லாமல் சாதி எனும் பெயரால் குறிக்கப்படவில்லை என ந.சுப்புரெட்டியார் விளக்குகின்றார். “நான்கு வகைப் பிரிவுகள் தொல்காப்பியர் காலத்தில் பிறப்பினால் ஏற்பட்டவை அல்ல. தொழில், ஒழுக்கம், கல்வியறிவு, திறமை காரணமாகவே இப்பிரிவுகள் அமைந்தன என்பது அறியத்தக்கது. சாதி எனும் சொல் தொல்காப்பியத்தில் காணப்பெறினும் அஃது ஓரிடத்திலேனும் மக்களைக் குறிக்கும் சொல்லாக வழங்கப்பெறவில்லை. [நீர்வாழ் சாதியும் அதுபெறற் குரிய (மர.44), நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே (மர.65)] என்ற நூற்பாக்களில் ‘சாதி’ என்னும் சொல் நீரில் வாழும் உயிர்களைக் குறித்தலை அறிக. தமிழர்களின் வாழ்வியல், அரசியல், பொருளியல் ஆகியவை முட்டின்றி நடைபெறுவான் வேண்டி நான்குவிதப் பிரிவுகளாக வகுத்த நம் முன்னையோரின் திறன் பாராட்டுக்குரியது”[1] என்று விளக்குகின்றார்.

## வழிபாட்டு முறைமை

தொல்காப்பியம், நிலப்பாகுபாடு குறித்துக் குறிப்பிடும்போது அந்நிலங்களுக்கு உரிய தெய்வங்களுடன் இணைத்துக் கூறுகின்றது. இதனை, “மாயோன், சேயோன் என்று தெய்வங்கட்கு நிறம் பற்றிப் பெயர் கூறப்பெறுவதில் இருந்து இத்தெய்வங்களுக்குத் திருவுருவமைத்து வழிபடும் வழக்கமும் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட தொன்மை உடையதாகும் என்பது நன்கு தெளியப்பெறும்.”[2] நிலப்பாகுபாடு குறித்துக் கூறும்போது, அந்நிலங்களுக்கு உரிய தெய்வங்களின் பெயர்களுடன் நிறங்களும் இணைத்துக் கூறப்பட்டுள்ளதால், அக்காலத்தில் உருவ வழிபாட்டு முறைமை வழக்கில் இருந்தமையைப் பதிவு செய்கின்றார்.

## நடுகல் வழிபாடு

இறந்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் முறையில் நடுகல் நடும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. இந்த நடுகல் வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்டே சிற்பக்கலை வளர்ந்ததாகக் கூறுகின்றார். மேலும் அழகிய உருவம் அமைத்தலும், திருக்கோயில்கள் எடுத்தலும் இதிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் எனும் கருத்தைப் பதிவு செய்கின்றார்.

## நம்பிக்கைகள்

தொல்காப்பியர் காலத்தில் உயிர், உடல், ஊழ்வினை ஆகியன குறித்த நம்பிக்கைகள் காணப்பட்டன. சமயங்கள் குறித்த பிரிவுகள் காணப்படவில்லை. ஊழ்வினை பற்றிய நம்பிக்கை பண்டைக் காலத்தில் வழக்கத்தில் இருந்தது. இல்லற வாழ்வில் இணைவதற்கு முன் ஒருவனும் ஒருத்தியும் சந்தித்து, மனம் ஒத்த அன்பு ஏற்படுவதற்கு ஊழ்வினையே உந்துதலாக இருந்துள்ளது எனும் நம்பிக்கை நிலவியது. “ஒன்றுபடுத்துவதும், வேறுபடுத்துவதும் எனப் பால் (ஊழ்) இருவகைப்படும் என்பதும், அவற்றுள் ஒன்றுவித்தலால் உயர்ந்த

பாலின்வழி நிகழும் இறைவனது ஆணையால் உருவும் திருவும் முதலிய நலங்களால் ஒத்த தலைவனும், தலைவியும் ஓரிடத்து எதிர்ப்படுவரென்பதும் இதன் பொருளாகும்."[3]

நல்ல காரியங்களைத் தொடங்கும் போது சகுனம் பார்க்கும் வழக்கம் இருந்தது. நற்சொல் கேட்டல், தெய்வத்திற்கு நேர்த்திக் கடன் செலுத்தும் வழக்கம் ஆகிய வழக்கங்கள் பண்டைத் தமிழரிடம் காணப்பட்டன. இதனை, "தான் நினைத்த காரியம் நிறைவேறினால், 'இன்னது தருவேன்' என்று தெய்வத்தை வேண்டிக்கொள்ளும் வழக்கம் அவர்களிடமிருந்தது. இக்காலத்தார் இதனைப் 'பிரார்த்தனை' என்றும், 'வேண்டுதல்' என்றும், 'நேர்த்திக்கடன்' என்றும் கூறுவர். தொல்காப்பியர் இதனை 'தெய்வக் கடம்' (கற்.9) என்று குறிப்பிடுவார்"[4] என்பதன் வழி அறியலாம்.

## உயிர் - உடல் பாகுபாடு

உயிர் - உடல் பாகுபாடு, உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு ஆகியன குறித்த ஆன்ம ஆராய்ச்சி நெறியைத் தொல்காப்பிய நூற்பாக்களில் காணலாம். இதனை ஆழ்ந்து நோக்கும் ந.சுப்புரெட்டியார் அவர்கள் அதற்கான விளக்கங்களைத் தருகின்றார். "உடல்வேறு, உயிர்வேறு என்ற நம்பிக்கை தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு முன்னரும் இருந்து வந்தது. உடம்பை நடமாடச் செய்யும் உயிர் ஒரு தனிப்பொருள் என்பதே தொல்காப்பியரின் கொள்கையாகும். எழுத்துக்களை உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள், உயிர்மெய் எழுத்துகள் என்று பிரித்திருப்பதற்கு இக்கொள்கையே அடிப்படையாகும். தாமே தனித்து ஓசை பெற்று இயங்கும் எழுத்துகள் உயிரெழுத்துகள். உயிரெழுத்தின் துணை இல்லையாயின் இயங்க முடியாத எழுத்துகள் மெய்யெழுத்துகள். உயிரும் சேர்ந்து இயங்கும் எழுத்துகள் உயிர்மெய்யெழுத்துகள்".[5]

## திருமண முறைமைகள்

திருமணப்பருவம் அடைந்த இளைஞர்கள் தங்களுக்குரிய வாழ்க்கையைத் தாங்களாகவே தேர்ந்தெடுக்கும் உரிமை இருந்தது. பெற்றோர் சம்மதிக்காதபோது, காதலர்கள் யாருக்கும் தெரியாமல் திருமணம் செய்து கொள்வதும் உண்டு. இவ்வாறு செல்வதனை 'உடன்போக்கு' எனும் சொல்லால் குறிப்பிடுவர். ஆயினும் அவர்களது வாழ்க்கையில் பொய் முதலிய குற்றங்கள் தோன்றும் போது பெற்றோர்கள் சூழ்ந்து ஐயர் முன்னிலையில் திருமணம் நடத்தப்பட்டது. ஊர் மன்றத்தில் திருமணம் அனைவர் முன்னிலையிலும் நடத்தப்பட்டது.

## பழக்க வழக்கங்கள்

கணவன் இறந்தவுடன் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்துள்ளது என்பதைப் புறத்திணையியலில் பாலைநிலை எனும் துறையின் மூலம் அறியலாம். கணவன் இறந்தவுடன் மனைவி உடன்கட்டை ஏறாது தவம் புரிவதும் உண்டு. "உடன்கட்டை ஏறாது தவம் புரியும் நிலையைத் 'தாபதநிலை' என்பர். தன் கணவன் இறந்த

பொழுதே மனைவி உடனுயிர் நீத்த நிலை மூதானந்தம் என வழங்கப்பெறும். தாபத நிலை, பாலை நிலை, மூதானந்தம் ஆகிய மூன்றும் கடையன்பு, இடையன்பு, தலையன்பு பற்றி நிகழும்."[6]

இல்லறம் சிறப்பாக நடைபெறுவதற்குப் பொருள் தேடிச் செல்வம் சேர்க்கும் பொறுப்பு ஆண்களுக்கு இருந்தது. கணவன் இறந்த நிலையில் குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருக்கும் பெண்கள் நூல் நூற்று வருவாய் தேடிக் கொண்டனர். அவ்வாறு நூல் நூற்கும் பெண்களை, பருத்திப் பெண்டிர் என அழைக்கும் வழக்கம் இருந்தது.

## போர்த்தொழில்

தமிழர்களின் போர்முறைகளைக் குறித்துத் தொல்காப்பியப் புறத்திணையியலில் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. போர்த்தொழிலில் தமிழர்கள் மேம்பட்டு இருந்தனர். தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை எனும் நால்வகைப் படைகளையும் தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

## தமிழரின் கலைகள்

கூத்தர், பாணர், பொருநர் போன்ற இசைக்கலைஞர்கள் இசையில் சிறப்புடன் திகழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது. "இசைக்கருவிகள் அமைத்தல், ஆயுதங்கள் செய்தல், அணிகள் அமைத்தல், வாகனங்கள் இயற்றுதல், நெசவு நெய்தல் முதலிய தொழில்களிலும் அக்காலத் தமிழர்கள் வல்லவர்களாக இருந்தனர். இசை, நடனம், நாடகம் ஆகியவற்றையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட கலைஞர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்தனர்."[7] இதன்வழி கலைகள் தமிழர்களின் வாழ்வியற் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் பயன்படுத்தப் பட்டுள்ளமையை அறியலாம்.

வாழ்க்கையிலிருந்து இலக்கியங்கள் தோன்றியிருந்தாலும் அவற்றை வரையறைப்படுத்திக் குறிப்பிட்ட விதிகளுக்குள் அடக்கும் இலக்கணங்கள் அவ்வாழ்க்கையைத் தெளிவுற விளக்கிக் காட்டும் பெட்டகமாகத் திகழ்கிறது. வாழ்வியலைப் பதிவு செய்யும் இலக்கியக் கோட்பாடுகளை வரையறை செய்யும் இலக்கணமாகிய தொல்காப்பியத்தை நுணுகி ஆய்ந்து விளக்கும் ந.சுப்புரெட்டியார் அவர்கள் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கையைத் தெளிவாகப் பதிவு செய்கின்றார்.

## அடிக்குறிப்புகள்

1. ந. சுப்புரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பக். 437 - 438
2. மேலது ப. 440
3. மேலது ப. 442
4. மேலது ப. 455
5. மேலது ப. 447
6. மேலது ப. 456
7. மேலது ப. 461

# 16. ந.சுப்புரெட்டியார் கூறும் எண்களின் சிறப்பு



**முனைவர் ம. வான்மதி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*காமராஜ் கல்லூரி*
*தூத்துக்குடி*

## முன்னுரை

தொல்காப்பியர் காலத்திலிருந்தே தமிழர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தனர். தலைவனுக்கும் தலைவிக்குமிடையே இருக்க வேண்டிய பத்துப் பொருத்தங்களைக் கூறிய தொல்காப்பியர், அவற்றுள் கல்வியையும் ஒன்றாகக் கூறினார். வள்ளுவர் கல்வி, கல்லாமை, வேள்வி, அறிவுடமை என நான்கு அதிகாரங்களை எழுதினார்.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது ஔவைப் பிராட்டியின் அருள்வாக்கு. அன்றாட வாழ்வில் எண்கள் முதலிடம் பெறுகின்றன. மனித உயிர்களுக்கு எண், எழுத்து ஆகிய இரண்டும் வலியுறுத்தப்படுகின்றது. இக்கட்டுரையில் முனைவர் ந. சுப்புரெட்டியார் வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகளில் கூறும் எண்களின் சிறப்பைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## எண்ணும் எழுத்தும்

***"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்***
***கண்என்ப வாழும் உயிர்க்கு"*** ***(குறள் - 392)***

மனித உயிர்களுக்கு எண்ணும் எழுத்தும் மிகமுக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. பேருந்தில் பயணம் செய்யும்போது பேருந்தின் எண்கள் கூறிக் கேட்பது, ஒருவர் வீட்டைத்தேடிச் செல்லும்போது வீட்டு நபரின் பெயர் தெரியவில்லை என்றால் வீட்டு எண்களைக் கூறுவது, காவலரின் எண்கள் கூறுவது. இவ்வாறு கற்றவர், கல்லாதவர் அனைவரும் எண்களைச் சொல்லிக் கேட்கின்றனர். இவ்வாறு பெயரை விட எண்களே முதலிடம் பெறுகின்றன.

## எண்களின் சிறப்பு

### ஒன்று

இறைவன் உருவமும் அருவமும் அருவுருவமும் ஆகி, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருள், அப்பரம்பொருள் ஒன்று என்பது கம்பனின் வாக்காகும் என்பதை ந. சுப்புரெட்டியார் எடுத்துரைக்கின்றார்.

***"ஒன்றே எண்ணின் ஒன்றே யாம்***
***பலவென் றுரைக்கிற் பலவேயாம்"***
***(கம்ப. யுத்தகாண்டம்)***

என்ற அடிகள் இறைவனை நாம் ஒன்று நினைத்தால் ஒன்றாகவும் பல என்று நினைத்தால் பலவாகவும் காட்சியளிக்கின்றான். நாம் இறைவனை அடையக்கூடிய வழிகள் பலவாக இருந்தாலும் இறைவன் ஒன்றுதான் என்பதை நாம் உணரமுடிகின்றது.

***"ஒன்றது ஆகிய தத்துவ நாயகி***
***ஒன்றது கால்கொண்டு ஊர்வகை சொல்லிடில்***
***ஒன்றது வென்றிகொள் ஆயிரம் ஆயிரம்***
***ஒன்றது காலம் எடுத்துளும் முன்னே"(திருமந்திரம் - 698)***

இப்பாடல் அடிகள் தத்துவங்கள் பலவானாலும், தோற்றங்கள் பலவாக இருந்தாலும் உலகத்தலைவியாகிய ஆதி சக்தி ஒன்றே. இந்தசக்தி உயிர்ப்புச் சக்தியாகிய பிராணனை, உள்ளத் தாமரையில் ஒன்றும் உணர்வாக, ஆன்மாக்களைப் பல ஆயிரமாண்டுகள் ஆட்சி செலுத்தி வருகின்றது. இந்த ஒரு சக்தியான ஆதி சக்தியே காலத்தைக் கடக்க உதவும் யோகத்துக்கும் ஆதாரம் முதல் துணையாகும் என்று காலத்தைக் கடக்க உதவும் ஆதாரமே ஆதிசக்தி ஒன்றுதான் என்கிறது திருமந்திரம்.

***"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி***
***பகவன் முதற்றே உலகு" (குறள் - 1)***

என்ற குறள் உலகம் கடவுளையே முதலாகக் கொண்டுள்ளது என்கிறது. அறிவுடைய உயிர்கள் உலக இயற்கையில் ஆண் பெண் என இருபாலாக எல்லா உயிர்கள் இருந்தாலும் மூலமான முதற்கடவுள் ஆண் பெண் இயல்பில் அம்மையப்பராக ஒன்றாகக் காட்சி தருகின்றார் என்று ஆசிரியர் விளக்கம் தருகின்றார்.

**இரண்டு**

வினைகள் இரண்டு நல்வினை, தீவினை. நாம் செய்கின்ற வினைகள் (செயல்கள்) நம்மைக் கட்டுகின்ற கயிறாகும். அறம் இரண்டு இல்லறம், துறவறம். நாம் உள்ளிழுத்து வெளிவிடும் மூச்சை இடப்புறம் இழுத்து வலப்புறமாக விடும் மூச்சு வடகலை என்றும் வலப்புறம் இழுத்து இடப்புறம் விடும் மூச்சு இடகலை என்று வகைப்படுத்தப் பட்டுள்ளது. இவற்றைக் கடா என்கிறார் திருமூலர். கடாவாகிய இரண்டு மூச்சுகள் திரிந்தபடி உள்ளன. இரண்டு கடாக்களுக்கும் மேய்ப்பவன் ஒருவனேதான் என்பதை,

***"இரண்டு கடாஉண்டு இவ்வூரின் உள்ளே***
***இரண்டு கடாவுக்கும் ஒன்றே தொழும்பன்"***
***(திருமந்திரம் - 2889)***

என்கிறார் திருமூலர்.

## மூன்று

படைப்புக்கடவுளான நான்முகன், அழிக்கும் கடவுளான உருத்திரன், காக்கும் கடவுளான திருமால் என்பது மும்மூர்த்திகளின் மூன்று தெய்வ நிலைகள். ஆணவம், கன்மம், மாயை என்பன மனிதனின் மனதிலுள்ள மும்மலங்கள் ஆகும். பதி, பசு, பாசம் என்பன சைவ தத்துவம். சித்து, அசித்து, ஈசுவரன் என்பன வைணவ தத்துவம். சாலோகம், சாமீம்யம், சாரூபம் என்பவை நாம் இறைவனை அடையும் நிலைமுக்தி நிலைகளாகும் என்பதை ஆசிரியர் ந. சுப்புரெட்டியார் மூன்று என்ற எண்ணின் சிறப்பைக் கூறுகிறார்.

## நான்கு

சமயக் குரவர் நால்வர் சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர். நான்கு மறைகள் ரிக், யசுர், சாமம், அதர்வணம் என்பதாகும். பொறாமை, அவா, வெகுளி, இன்னாச்சொல் இந்த நான்கையும் கடிந்து நடப்பது அறமாகும்.

''***அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்***
***இழுக்கா இயன்றது அறம்''*** ***(குறள் - 35)***

உள்ளொன்று வைத்துப் புறமொன்று இல்லாமல் இரண்டும் ஒத்திருக்க வேண்டும். அறச் செய்கை என்பது மன அழுக்கு இல்லாமல் நடந்து கொள்வது என்பதாகும். நம் வாழ்வில் நல்ல செய்கை செய்வதற்குத் தடையாக இருக்கும் மன அழுக்குகளான பொறாமை, பிறர் பொருளின் மீது நாம் படும் ஆசை, கோபம், அளவு கடந்த கோபத்தால் வரும் தீயச்சொற்கள் இவற்றை கடிந்து வாழ வேண்டும் என்கிறது குறள். இந்த நான்கு மன அழுக்கை நீக்கி வாழ்வது அறம் அதனால் ஏற்படும் விளைவு பொருள், இன்பம், வீடு, பேறு என்ற நாற்பொருளையும் அடையமுடியும் என்கிறார் ஆசிரியர்.

## ஐந்து

இந்த உலகம் அண்டம் எனவும் பிண்டம் எனவும் இயங்குகிறது. அண்டத்திலுள்ள நலங்களைப் பிண்டங்கள் பெற்று உயிர் வாழ்கின்றன. அண்டங்கள் ஒன்றோடொன்று அண்டிக் கொண்டிருப்பது போலவே பிண்டங்களும் அண்டங்களோடு தொடர்புற்றிருக்கின்றன. அண்ட பிண்டங்கள் அத்தனையும் நிலம், நீர் முதலிய ஐந்து இயற்கைப் பொருள்களாலும் அமைந்தவை.

***"புலம் ஐந்து புள் ஐந்து புன் சென்று மேயும்***
***நிலம் ஐந்து நீர் ஐந்து நீர்மையும் ஐந்து***
***குலம் ஒன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்''***
***(திருமந்திரம் - 2025)***

பிண்டமானது ஐம்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இடங்களில் உள்ள ஐம்மூலங்களான உணர்தல், பார்த்தல், கேட்டல், சுவைத்தல், தூண்டல் என்று செயல்படும். சுவை,

ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தான நுகர்ச்சியலும் திளைத்து உண்டும், கண்டும், கேட்டும், சுவைத்தும், உணர்ந்தும் திரிகின்றன. இந்த பிண்டமாகிய (உடம்பாகிய) காட்டுக்குள் ஐம்பொறிகளான ஐந்து மத யானைகள் திரிந்தபடி இருக்கின்றன. இந்த ஐந்து யானைகளையும் அடக்குகின்ற பாகன் பஞ்சாட்சரம் என்ற ஐந்தெழுத்து மந்திரமான 'சிவாய நம' என்ற நாமத்தைக் கொண்ட ஐம்பூதங்களுக்கும் தலைவனே சிவபெருமான் ஆகும். ஐம்புலங்கள் ந- உடம்பு, உணர்வு, ம- நாக்கு, சுவை, சி- கண், உருவம், வா- மூக்கு, வாசனை, ய- காது, ஒலி ஆகும். இதன்மூலம் ஐந்து என்ற எண்ணின் சிறப்பை அறிமுடிகிறது.

> ***"உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்***
> ***வரனென்னும் வைப்பிற்கோர் வித்து" (குறள் - 24)***

என்ற குறளில் ஐந்து என்பது ஐம்பொறிகளைக் குறிக்கின்றது. ஐம்பொறிகளை யானைகளாக உருவகம் செய்கின்றார் ஆசிரியர். யானைகளை அங்குசத்தால் அடக்குவது போல் ஐம்புலன்னளையும் மன உறுதியால் அடக்க வல்லவர்களே முத்தி வாழ்விற்கு வித்து ஆவார்கள். இவர்களின் பெருமையும் அளவிடற்கரியது என்று ஆசிரியர் ந. சுப்புரெட்டியார் ஐந்து என்ற எண்ணின் சிறப்பைக் குறிப்பிடுகிறார்.

## ஆறு

ஆறு என்பது தெளிந்த நீரோட்டத்தைக் குறிக்கும். நம் வாழ்க்கையும் ஆற்றின் தெளிந்த நீரோட்டத்தைப் போல் செல்லவேண்டும். ஆறு என்பது எண்ணையும் குறிக்கும். ஆறு என்பது வழிப்படுத்துதல், ஆற்றுப்படுத்துதல் என்ற பொருளிலும் வரும். இனிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு, புளிப்பு ஆகியன நம் உணவில் இருக்கும் அறுசுவை ஆகும். காமம், குரோதம், மதம், மோகம், உலோபம், மார்ச்சரியம் இவை மனிதன் உட்பகைகளாகும். இந்த உட்பகையை இறைவனின் அடியை இறுகப்பற்றிக் கொள்வதன் மூலம் வெல்லலாம். சமயங்கள் ஆறு, சிவனை வழிபடுபவர்கள் சைவ சமயம். திருமாலை வழிபடுபவர்கள் வைணச் சமயம். தத்துவங்களை சங்கியைச் செய்து கூறப்படுவது சாங்கிய மதம். சூரியனை வழிபடுவது சௌரம். கணபதியை வழிபடுவது காணபத்தியம். முருகனை வழிபடுவது சௌமாரம் என்று சமயங்கள் ஆறு ஆகும்.

உட்பகை காமம், குரோதம், மதம், மோகம், உலோபம், மார்ச்சரியம் இவை மனிதனின் உள்ளத்திலிருந்து கொல்லும் பகைகளாகும். மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை இவை புறப்படைகள் என்று ஆசிரியர் கூறுகிறார்.

## ஏழு

> ***"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு***
> ***எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள் - 398)***

என்ற குறளில் ஒருவன் ஒரு பிறப்பில் கற்ற கல்வி ஏழு பிறவிகளிலும் சென்று உதவும். கல்வி கற்பதனால் ஏற்படும் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

***"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்***
***எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள் - 126)***

ஒரு பிறப்பில் ஆமையைப் போல் ஐம்பொறிகளின் ஆசைகளையும் அடக்கினால் ஏழு பிறவிக்கும் அது நமக்குக் காவலாகும். கல்வி கற்பதனாலும், ஐம்பொறிகளின் ஆசைகளை அடக்கினாலும் அவை ஏழு பிறவிகளிலும் தொடர்ந்து வரும் என்று ஏழு என்ற எண்ணின் சிறப்பைக் கூறுகிறார். இறைவனின் தாண்டவங்கள் சப்ததாண்டவம், ஆனந்தத் தாண்டவம், சந்தியா தாண்டவம், கௌரி தாண்டவம், திரிபுர தாண்டவம், காளி தாண்டவம், முனிவர் பொருட்டு நடித்த தாண்டவம், சங்காரத் தாண்டவம் என்று இறைவன் ஆடிய தாண்டவங்கள் ஏழினைக் கூறுகிறார்.

## எட்டு

ஈரடியால் உலகளந்த உத்தமனின் பெயர் எட்டெழுத்து மந்திரமான ஓம் நமோ நாராயணாய, எட்டுத்திக்குகள், எட்டுத் திசைகளைக் காவல் காக்கும் எட்டுத்திக்குப் பாலகர்கள். சித்திகள் எட்டு (அட்டமா சித்திகள்) அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன அட்டமா சித்திகள் ஆகும். இவைகள் எட்டு என்ற எண்ணின் சிறப்பைக் குறிக்கும்.

இறைவன் எண் குணன். அதாவது தன்வயத்தனாதல், தூயவுடம்பினாதல், இயற்கையுணர்வினன்ஆதல், முற்றுணர்தல், இயல்பாய் பாசங்களிலிருந்து நீங்குதல், பொருளுடைமை, வரம்பிலின்பமுடைமை, முடிவில்லா ஆற்றலுடைமை என்ற எட்டு குணங்களுடைய இறைவனின் திருவடிகளை வணங்காதவர்களின் தலை செயலிழந்த ஐம்பொறிகளைப் போல் பயனற்றதாகும் என்பதை,

***"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்***
***தாளை வணங்காத் தலை" (குறள் - 9)***

என்கிறது குறள். எட்டுக் குணங்களையுடைய இறைவனை வணங்காதவர்கள் பயனற்றுப் போய்விடுவார்கள் என்று ஆசிரியர் கூறுகின்றார்.

## ஒன்பது

***"ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்***
***ஒன்பது நாடி உடையதோர் இடம்***
***ஒன்பது நாடி ஒடுக்கவல்லார்கட்கு***
***ஒன்பது வாசல் உலைநலமாமே" (திருமந்திரம் - 658)***

பிண்டமான நம் உடலுக்கு ஒன்பது வாசல்கள் உள்ளன. உடலின் ஒன்பது நாடிகளிலும் ஒன்பது வாயுக்கள் ஒடுகின்றன. அது இடம்

சுழுமுனை எனப்படுகிறது. இந்த இடத்தில் ஒன்பது நாடியும் வாயுவும் அடக்கி ஒடுக்கும் தவயோகப் பயிற்சி உடையவர்களுக்கு ஒன்பது வாசலைக் கொண்ட உடலாகிய உலைக் களம் நன்மை தரும் என்ற திருமந்திரம் ஒன்பது என்ற எண்ணின் சிறப்பைக் கூறுகிறது.

***"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்***
***வெள்ளி சனி பாம்பி ரண்டுடனே"***
***"ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல***
***நல்ல அடியார் அவர்க்கு மிகவே" (கோளறுபதிகம்)***

நவக்கிரகங்களான (ஒன்பது கோள்கள்) ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது இவற்றைப்பற்றி பாடுகின்றார் சமய குரவர்களுள் ஒருவரான திருஞானசம்பந்தர்.

## பத்து

பத்துப்பாடல்களைக் கொண்டது பதிகம் எனப்படும். பத்துப்பாட்டு என்பது சங்க இலக்கிய நூல்களுள் ஒன்று. தசகம் என்பது பத்துப் பதிகங்களுடைய ஒரு பகுதி. எடுத்துக்காட்டாகத் திருவாய்மொழி, திருமொழி போன்றவை ஆகும் என்று பத்தின் பெருமையைக் கூறுகின்றார் ஆசிரியர்.

## பதினாறு

"பதினாறு பெற்று பெருவாழ்வு வாழ்க" என்று பெரியோர்கள் வாழ்த்துவார்கள். பதினாறு பேறுகள் மாடு, செல்வம், மனை, மனைவி, மக்கள், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், நிலம், நீர், வயது, வாகனம், பொன், பொருள், யோகம், புகழ் என்பன. இவற்றை பெற்று வாழ்வு சிறக்க வாழவேண்டும் என்பதாகும்.

## முடிவுரை

வாழ்க்கை இலக்கணமாகத் திகழும் நூல் தொல்காப்பியம். வாழ்க்கை மறையாகத் திகழ்வது வள்ளுவர் தந்த திருக்குறள். ஆசிரியர் ந. சுப்புரெட்டியார் எண்ணும் எழுத்தும் நம் வாழ்க்கையில் இடம் பெறும் விதத்தையும் அவற்றின் சிறப்பையும் விளக்கியதை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது.

# 17. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

**ல.கு.சு. இராஜ்குமார்**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*வேலூர் - 632 115.*

## முன்னுரை

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியில் முகிழ்ந்த தமிழரின் வரலாற்றினை அறிவதற்கு இலக்கியக் கருவூலமாக நம் செந்தமிழ் மொழிக்கு ஒரு நந்தாமணி விளக்கமாய்த் திகழ்வது தொல்காப்பியம் என்னும் முழு முதல் நூலாகும். ந.சுப்புரெட்டியார் எழுதியுள்ள தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை என்னும் நூலில் தமிழர் மரபாகக் கடைப்பிடித்த வாழ்க்கை முறையை இறுதி தலைப்பாகக் கொடுத்துத் தொல்காப்பியர் வழித் தமிழரின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். வாழ்க்கை நலம், சமூக வாழ்க்கை, நம்பிக்கைகள், போர்களைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

## வாழ்க்கை நலம்

ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கை நலத்தை அறிவதற்கு அந்நாட்டு மக்களின் கருத்து வளம் அளவுகோலாக அமைகின்றது. இக்கருத்து வளத்தை அந்நாட்டு மக்களின் இலக்கியங்களில் காணலாம். வாழ்க்கை இயல்பிற்கும் இலக்கணம் கண்ட பெருமை தமிழ் மொழியிலேயன்றி வேறு எம்மொழியிலும் காணப்பெறாத சிறப்புடையதாகும். தொல்காப்பியம் மக்கள் வாழ்வினை அகவாழ்வு, புறவாழ்வு என இரு கூறிட்டுப் பேசுகின்றது. அகவாழ்வினைப் பற்றிக் கூறுவது அகத்திணை. புறவாழ்வினைப் பற்றிப் புகல்வது புறத்திணை. திணை என்பது ஒழுக்கம். அகத்திலே நிகழும் ஒழுக்கம் அகத்திணை, புறத்திலே நிகழும் ஒழுக்கம் புறத்திணை. இவற்றை அகப்பெருள் என்றும், புறப்பொருள் என்றும் வழங்குவதுண்டு.

## அகவாழ்வு

ஒத்த அன்புடைய கணவனும், மனைவியும் கலந்து வாழும் குடும்பவாழ்வே அகவாழ்வாகும். அகவொழுக்கத்தை ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை என ஏழு வகையாகப் பாகுபடுத்திப் பேசுவது மரபு.

> ***"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்***
> ***முற்படக் கிளந்த ஏழுதிணை என்ப" (அகம்.நூ.1)***

என்பது தொல்காப்பிய அகத்திணை நூற்பா. ஒத்த அன்புடைய

ஒருவனும் ஒருத்தியுமாகிய காதலர் இருவர் கருத்தொருமித்து இல்லிருந்து நல்லறஞ் செய்வதற்கு இன்றியமையாத அன்பின் வழிப்பட்ட உள்ளத்துணர்ச்சியே ஐந்திணை என்று வழங்கப் பெறும். இன்ப வாழ்வு இன்றியமையாத பெருவிசையாக இருப்பதால், இஃது அன்பின் ஐந்திணை எனச் சிறப்பிக்கப்படலாயிற்று.

## புறவாழ்வு

எல்லோரும் அறியும்படிச் சொல்லவும் செய்யவும் கூடிய செய்திகள் எல்லாம் புறப்பொருளில் அடங்கும். புறத்திலே நிகழும் ஒழுக்கம் புறத்திணையாகும். புற ஒழுக்க வரம்பு அரசியலாக உள்ளது. இதில் மன்னனே நன்கு மதிக்கத்தக்கத் தலைவனாகத் திகழ்கிறான். இதில் கல்வி, வீரம், புகழ், கொடை முதலிய பண்புகள் மன்னன் மற்றும் அனைவருக்கும் இன்றியமையாதனவாகும். அகத்திணையை ஏழாக வகுத்தது போலவே புறத்திணையையும் ஏழாக வகுத்துக் கூறுவர் தொல்காப்பியர். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்னும் இவ்வேழும் புறத்திணைகளாகும்.

காதலும் வீரமும் தமிழர்க்கு மட்டிலும் உரிய பொருள் என்று இக்காலத்தில் சிலர் கூறி வருகின்றனர். காதல் நிகழ்ச்சிகளும் வீர நிகழ்ச்சிகளும் எல்லா மொழிகளிலும் எல்லா நாட்டு இலக்கியங்களிலும் காணப்பெறும் செய்திகளே. ஆயினும், இந்த இரண்டு உணர்ச்சிகளின் அடிப்படையில் தோன்றும் நிகழ்ச்சிகட்குத் திணை, துறைகள் அமைத்து, இலக்கண வரம்புக்குள் அடக்கி, இலக்கிய மரபுகளாகச் செய்த பெருமை தமிழ் மொழிக்கே சிறப்புடையதாகும். உலக வழக்கினை நாடக வழக்காகச் செய்து கலையாக மிளிர வைத்த பெருமை தொல்காப்பியரைச் சார்ந்தது என்று கூறின் அது மிகையன்று. இங்ஙனமே செய்யுளியல், மரபியல் இவற்றில் கூறப்பெற்றுள்ளனவும் தமிழ் மொழிக்கே சிறப்பாக உடையவை. தமிழரது பண்பாட்டின் மேன்மையை அவர்களது அகவாழ்வும், புறவாழ்வும் நன்கு புலப்படுத்துகின்றன. இந்த இரண்டின் அடிப்படையில் இலக்கியங்கள் தோன்றின் அவற்றை விளக்குவதற்கு நாளடைவில் பொருளதிகாரமாகிய இலக்கணமும் அமைக்கப்பெற்றது.

## சமூக வாழ்க்கை

தொல்காப்பியத்திலிருந்து தொல்காப்பியர் காலத்தும் அவருக்கு முன்னரும் சமூக வாழ்க்கை எங்ஙனம் இருந்தது என்பதைச் சில குறிப்புகளால் அறிந்து கொள்ளலாம். அவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

## மக்கட் பிரிவு

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழ் நாட்டில் மக்களிடையே பலவிதப் பிரிவுகள் ஏற்பட்டிருந்தன. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவுகள் இருந்தன. இவையாவும் அவர்கள் செய்யும் தொழிலினால் ஏற்பட்ட பிரிவுகளாகும். இவர்களைத் தவிர பாணர்,

கூத்தர், பொருநர், அடிமை வேலை செய்வோர், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் போன்ற பல பிரிவுகளும் இருந்தன.

## அந்தணர்

அறிவு, ஆராய்ச்சி, நல்லொழுக்கம், தன்னலமற்ற தன்மை இவற்றையுடையவர்கள் யாவரும் அந்தணர் என்று வழங்கப் பெற்றனர். எல்லா உயிர்களிடத்தும் இரக்கங்காட்டி அறநெறியில் வாழ்வோர் அந்தணர். அரசர்களை அறநெறிப் படுத்தல், நாட்டு மக்கட்கு நல்லுரை வழங்கல், மக்கள் நல்வாழ்விற்காக இறைவனை வேண்டித் தவங்கிடத்தல் இவை அந்தணரது கடமையாகும். அந்தணர் வடிவத்தை,

***''நூலே கரகம் முக்கோல் மனையே***
***ஆயுங் காலை அநதணர்க் குரிய''(மரபு.நூ.71)***

என்று தொல்காப்பியம் உணர்த்துகின்றது. முப்புரிநூல், தண்ணீர் கமண்டலம், முக்கோல், ஆசனம் ஆகியவை இவர்கட்குரியவை.

## அரசர்

தமிழகத்தில் ஆட்சிமுறை ஏற்பட்ட காலத்திலிருந்து சேர, சோழ, பாண்டியர் ஆண்டனர். இவர்களே பழந்தமிழ்ப் பெருங்குடி மக்களில் மூத்த முதற்குடியினர். இவர்களை ''வண்புகழ் மூவர்'' (செய்யுள். நூ.75) என்று செய்யுளியலில் குறிப்பர் தொல்காப்பியர். படை, கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், தார், முடி போன்றவை அரசர்க்கும் சிறப்புடையனவாகும். இச்செய்தி,

***''படையும் கொடியும் முரசும்***
***நடைநவில் புரவியும் களிறும் தேரும்***
***தாரும் முடியும் நேவன பிறவும்***
***தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய''(மரபு.நூ.72)***

என்ற மரபியல் நூற்பாவால் அறியப்படும். தார் என்பது, போர்க்களத்தில் அணியப்பெறும் பூவினையும் அடையாளப் பூவினையும் குறிக்கும். வேட்டையாடுவதில் வல்லமை, பகைவர்களை எதிர்த்துப் போர் புரிந்து வெற்றி பெறும் வீரத்தன்மை, தன்னலந்துறந்து மக்களின் நல்வாழ்வுக்காக உழைக்கும் உறுதியுள்ளம், நடுநிலை தவறாத நல்லொழுக்க முடைமை, நீதி வழங்கும் நேர்மைகுணம். இவை போன்ற உயர் குணங்களையுடையவர்களே அரசர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

## வணிகர்

பழந்தமிழ் வணிகர்கள் ''கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது'' நேர்மையுடன் வணிகம் செய்யும் பண்பையுடையவர்கள். வாணிகம் செய்யும் தொழிலை வைசியன் பெறுவான் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. ''வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை'' (மரபியல்.நூ.78) என்பது தொல்காப்பிய மரபியல் நூற்பா. இவர்கள் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் பெருவாணிகமும்,

கூல் வாணிகமும் செய்து வந்தனர். கடல் கடந்து வாணிகமும் இவர்களிடமே இருந்தது.

## வேளாளர்

இவர்கள் ''தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது'' என்ற கொள்கையைக் கடைப்பிடித்து உழவுத்தொழிலைக் கொண்டு வாழ்பவர்கள்.

***''வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது***
***இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி''(மரபு.நூ.81)***

என்ற நூற்பா இதனை உணர்த்துகின்றது.

## பழக்க வழக்கங்களில் திருமணச் சடங்கு

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு பண்டைத் தமிழ் மக்களில் ஆடவரும் பெண்டிரும் ஒருவரையொருவர் எதிர்பட்டுத் தம் காட்சியும் கருத்தும் ஒன்றுபட்டுத் தமக்குள் ஒருவரையொருவர் உயிர் போல் காதலிக்கும், காதலன்பு நிகழப்பெற்றபின் தமக்குள் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தனர். இஃது ''அன்பினைந்திணைக் காமக் கூட்டம்'' என வழங்கப் பெற்றது. அதன் பின்னர் அவர் தம் பெற்றோரும் சுற்றத்தாரும் மணங்கூட்டுவர்.

***''கற்பெனப் படுவது கரணமொடு புணரக்***
***கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்***
***கொடைக்குரி மரபினோர்க் கொடுப்பக் கொள்வதுவே***
***(கற்பு.நூ.1)***

என்ற நூற்பாவால் அறியலாகும். மகளிர்க்குரியார், தம் மகளிரால் விரும்பப்பட்ட காதலர்க்குத் தம் மகளிரை மணம் செய்து கொடுக்க ஒருப்படாவழிக் காதலர் இருவர் தம் பெற்றோர் உற்றார் அறியாமல் வேற்றிடஞ் சென்று மணஞ் செய்து கொள்வர். இது,

***''கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே***
***புணர்ந்துடன் போகிய காலை யான'' (கற்பு.நூ.2)***

என்ற நூற்பாவால் அறியப்படும்.

## நம்பிக்கைகள்

தொல்காப்பிய காலத் தமிழர்கள் மந்திரத்தில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இன்றும் மக்கள் மந்திரச் சொற்களின் பொருளை அறியார். அக்காலத்தில் பெரியோர்களால் சொல்லப்பட்ட பொருள் தெரியாத சொற்களை மந்திரங்கள் என்று மக்கள் நம்பினர்.

***''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த***
***மறைமொழி தானே மந்திரம் என்ப'' (செய்யுள்.நூ.45)***

என்ற நூற்பாவால் இச்செய்தி அறியப்பெறும். எக்காரியங்களுக்கும் நல்ல நாள், கெட்ட நாள் பார்க்கும் வழக்கம் தமிழர்களிடமிருந்தது.

***"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்***
***துறந்த ஒழுக்கம் கிழவோற் கில்லை" (களவு.நூா.45)***

என்ற நூற்பாவால், களவுக்காலத்தில் கெட்ட இராசியிலும் கெட்ட நாளிலும் காதலியுடன் சேராமல் இருக்கும் ஒழுக்கம் தலைவனிடமிருந்தது என்பது தெரிகின்றது. எனவே, கற்புக் காலத்தில் காதலர்கள் தீய ஓரையிலும் தீய நாளிலும் மருவுதல் இல்லை என்பது பெறப்படுகிறது. வெட்சி வீரர்கள் நிரை கவரச் செல்லுங்கால் நற்சொல் கேட்டல் உண்டு. இதனை 'விரிச்சி' என்று வழங்குவர். போர் செய்யப் புறப்படும் வேந்தன் குறித்த நேரத்தில் புறப்படத் தாமதமானால் அந்நேரத்தில் குடையையும் வாளையும் ஊருக்குப் புறத்தே அனுப்பி வைப்பான். குடையும் வாளும் நாள்கோள் (புறம்.நூா.11) என்பதனால் இது அறியப்பெறும். சகுனம் பார்க்கும் வழக்கமும் தமிழர்களிடமிருந்தது.

## போர் முறைகளில் நால்வகைப் படைகள்

தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை என்ற நால்வகைப் படைகளும் போரில் பங்கு பெற்றன.

***"தேரும் யானையும் குதிரையும் பிறவும்***
***ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப" (பொருள்.நூா.17)***

என்ற நூற்பாவால் தமிழர்களின் ஊர்திகளை அறிகின்றோம்.

***"தானை யானை குதிரை என்ற***
***நோனன் உட்கும் மூவகை நிலையும்" (புறம்.நூா.14)***

என்ற நூற்பா காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை ஆகிய படைகள் இருந்தன என்றும்,

***"தேரோர் தோற்றிய வென்றியும், தேரோர்***
***வென்ற கோமான் முன்தேர்க் குரவைம்"(புறம்.நூா-17)***

என்ற பகுதியால் தேர்ப்படைச் சிறப்பும் அறியப் பெறுகின்றன.

## முடிவுரை

பண்டைத் தமிழரின் வாழ்வியல் நெறிகளை அறிவதற்கு இலக்கியங்கள் வழிகாட்டுகின்றன. இவ்வாறு தான் வாழ்வியல் மரபுகள் இருக்க வேண்டும் என்ற மரபை இலக்கணமே கூறுகின்றது. அந்த வகையில் தமிழில் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் வாழ்விற்கு இலக்கணம் வகுத்தார். ந.சுப்புரெட்டியார் இயற்றிய தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை நூலில் தொல்காப்பியரின் வழி மக்களின் வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதையும், அகம், புறம் வாழ்வியல் முறைகள், மக்கள் பிரிவுகள், பழக்க வழக்கங்களில் புற வாழ்வில் போர்கள் போன்றவற்றை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

# 18. வாய்மொழி வாசகமும் ந.சுப்புரெட்டியாரின் படைப்புகளும்

**ரா. ஹேமாவதி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*சேர்க்காடு, வேலூர் - 632 115.*

## முன்னுரை

பயன்படாத துறைகளே வாழ்க்கையில் இல்லை எனலாம். சமூக வாழ்வில் மக்கள் ஒருவரோடொருவர் அளவளாவித் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளவும், வாழ்க்கையின் தேவைகளையும் ஏனைய பிரச்சினைகளையும் ஒருவருக்கொருவர் அலசி எடுத்துச் செல்லவும் வாய்மொழி பயன்படுகின்றது. வாழ்வில் பேச்சில் தான் தாய்மொழி அதிகமாகப் பயன்படுகின்றது.

இன்றைய வாழ்வில் பேச்சுள்ளவர்களே உலகை ஆள்வர் என்பதை அறியவேண்டும். பொதுவாழ்வில் பேச்சுத் திறமையுள்ளவர்களே வெற்றியுடன் திகழ்வதையும் காணலாம். ‘வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும்’’ என்ற பழமொழியும் ஈண்டு சிந்தித்துப் பார்த்தற்குரியது.

## வாய்மொழிப் பயிற்சியின் நோக்கங்கள்

மொழி கற்பித்தலின் மூன்று பிரிவுகளாகிய வாய்மொழி, படிப்பு, எழுத்து ஆகியவற்றுள் வாய்மொழியே மிகவும் முக்கியமானது. மொழிப் பயிற்சியின் முதற்படியும் இதுதான். வாய்மொழிப் பயிற்சியே பேசுவதற்கு அடிப்படை. பேசுவதே படிப்பதை விடவும், எழுதுவதை விடவும் விரைவாகவும், எளிதாகவும் கைவரக்கூடியது. பேசுதல், படித்தல், எழுதுதல், பேச்சுப்பழக்கத்தால் தான் வரும். ‘செந்தமிழும் நாப்பழக்கம்’ என்ற பழமொழி ஈண்டு சிந்திக்கத்தக்கது.

ஓரளவு நல்ல பேச்சுப்பழக்கம் அமைந்திருக்கும் வீட்டில் பெற்றோர், உற்றார், உறவினர், விளையாட்டுத் தோழர்கள் முதலியவர்களுடன் பழகியிருப்பதால் இவர்கள் பேசுவதைக் கேட்டு அறிந்துக்கொள்ளவும், தமது கருத்துக்களைத் தெரிவிக்கவும் ஓரளவு வாய்மொழிப் பயிற்சியினைப் பெற்றிருப்பர்.

படித்த குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளின் சொல்வளம் செழுமையாக இருக்கும். படிக்காத குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளின் சொல்வளம் நலிந்து காணப்படும். நகர்ப்புறங்களில் வாழும் குழந்தைகளின் சொல்வளம் ஒருவிதமாகவும், நாட்டுப்புறங்களில் வாழும் குழந்தைகளின் சொல்வளம் வேறொரு விதமாகவும்

இருக்கலாம். அன்றியும் சென்ற தலைமுறைக் குழந்தைகளின் சொல்வளம் அதிகம் என்பதை அனுபவத்தில் அறிவர்.

தமிழ் மொழியில் பேச்சு வழக்கில் பல கொடுந்தமிழ்ச் சொற்கள் உள்ளன. திருத்தமற்ற தமிழ்ச்சொற்களைக் கொடுந்தமிழ்ச் சொற்கள் என்று குறிப்பிடுவர் இலக்கணநூலார்.

ழகரத்தை ளகரமாக ஒலிப்பர். ஏழு என்பதை ஏளு என்றும், 'கோழி' என்பதை 'கோளி' என்றும், 'பழம்' என்பதைப் 'பளம்' என்றும் ஒலிப்பர். சென்னையை அடுத்த இடங்களில் சிலர் ழகாரத்தை யகராமா ஒலிப்பர். குழம்பு - குயம்பு என்றும் கழுதை - கயிதே என்றும் வழங்குவதைக் காணலாம்.

மறைமலையடிகள், அறிஞர் திரு.வி.க., பண்டிதமணி கதிரேசச்செட்டியர், ந.மு. வேங்கடசாமி நாட்டார். சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை, பன்மொழிப்புலவர் வே. வேங்கடராஜிலு செட்டியார் ஆகியோரின் பேச்சும், எழுத்தும் சற்றேறத்தாழ ஒரே மாதிரியான நடையில் அமைந்திருக்கின்றன.

## மொழிப்பாடத்தில் வாய்மொழிப்பயிற்சிகள்

மொழிப்பாடத்தில் பேச்சுப் பயிற்சி பொதுவாக எல்லா வாய்மொழி வேலைகளிலும் தரக்கூடும் என்றாலும், முக்கியமாகச் சில துறைகள் வாய்மொழிப் பயிற்சிக்கு மிகவும் ஏற்றவை. தொடக்க நிலைப்பள்ளி வகுப்புகளில் குழந்தைகளுக்கு விருப்பமான பொருட்களைப் பற்றி உரையாடுதல். செவிலிப்பாட்டுகள், ஆட்டப்பாடல்கள், கதைசொல்லல், நடிப்புப்பாடல்கள் ஆகியவற்றை இதற்கு நன்கு பயன்படுத்தலாம். நடுநிலைப்பள்ளி வகுப்புகளில் நாடகமுறையில் உரையாடல் அப்போதைய ஏற்பாடாக மேற்கொள்ளப்பெறும் நடிப்பு, சிறு சொற்பொழிவுகள், கதை சொல்லுதல், வருணனை செய்தல், கலந்து ஆய்தல் முதலியவற்றில் வாய்மொழிப் பயிற்சிக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் சொற்போர், கலந்து ஆய்தல், சொற்பொழிவுகள் முதலியவற்றால் நல்ல வாய்மொழிப் பயிற்சியினைப் பெறமுடிகிறது.

## உரையாடல்

கூடியவரை நூல் உதவியின்றி, எழுதலின்றி, சொல்லாக்கம் முதலிய மொழிச் சொற்கள் குறுக்கிடாமல் ஒருவர் பேசுவதை மற்றொருவர் கேட்பதும், அதற்கு விடையளிப்பதுமே உரையாடலாகும்.

உரைலயாடல் வாயிலாகக் குழந்தைகளின் சிந்தனை ஆற்றல் தூண்டப்பெறும். சொல்லறிவு பெருகும். கருத்துக்கள் விரிவடைந்து உற்று நோக்கும் திறன், கவனிக்கும் ஆற்றல் முதலிய பண்புகள் வளரும்.

ஆசிரியருக்கும் குழந்தைக்கும் இடையே நட்பு, அன்பு, தொடர்பு, பிரிவு முதலிய நற்பண்புகள் ஏற்படும். சிறு குழந்தைகளிடம் இயல்பாகக்

காணப்பெறும் அச்சம், கூச்சம், கொச்சை மொழி ஆட்சிகள், இழிவழக்குகள் முதலிய குறைகளைக் களைய உரையாடல் பயன்படும்.

## செவிலிப் பாடல்களும் ஆடிப்பாடல்களும்

சிறுவர்களுக்கான பாப்பாப்பாட்டு, செவிலிப்பாட்டு, ஆட்டப்பாடல் சிறிய கதைப்பாடல் முதலியவற்றை நெட்டுருச் செய்து ஒப்புவித்தல் வாய்மொழிப் பயிற்சிக்கு உதவக்கூடிய ஒரு சிறந்த வழியாகும். இவற்றை நெட்டுருச் செய்யும் பொழுதும், ஒப்புவிக்கும் பொழுதும் அடிக்கடிச் சொற்களைக் கூறுவதால் சொற்களின் ஓசை பாடலின் இனிமை, புதிய சொற்களின் அறிவு முதலியவை உண்டாவதுடன் நல்ல உச்சரிப்பு, குரல் ஏற்றத்தாழ்வு ஆகிய நல்ல மொழிப் பழக்கங்களும் ஏற்படும்.

*“கைவீசம்மா கைவீசு கைவீசம்மா கைவீசு*
*கடைக்குப் போகலாம் கைவீசு*
*கண்ணால் பார்க்கலாம் கைவீசு!*
*சொக்காய் வாங்கலாம் கைவீசு*
*சொகுசாய்ப் போகலாம் கைவீசு*
*பொம்மை வாங்கலாம் கைவீசு*
*பொட்டு வைக்கலாம் கைவீசு!”*

என்ற பாட்டு முதல் வகுப்புக் குழந்தைகளுக்கு ஏற்றது. இதை அபிநயத்துடன் பாடச்செய்தால் குழந்தைகள் விருப்பத்துடன் பாடுவர்.

## கதை சொல்லுதல்

கதை சொல்லுதல் வாய்மொழிப் பயிற்சிக்கு ஓர் ஒப்பற்ற வழிமுறையாகும். குழந்தைக்குக் கதையிலிருக்கும் விருப்பம் அளவிடமுடியாதது. கதைகள் எல்லா நிலை மாணாக்கர்களுக்கும் இன்பந்தரக்கூடியவை. வளர்ந்தவர்களும், முதியவர்களும் கூட கதைகளில் மனத்தைப் பறிகொடுப்பர். எனவே, இத்தகைய பற்றுதலைத் தரவல்ல ஒரு வழிமுறையை வாய்மொழிப் பயிற்சியில் மிகத்திறமையான வகையில் கையாண்டால், நிறைந்த பயனை எதிர்ப்பார்க்கலாம்.

## குழந்தைகள் கதை சொல்லும் முறை

பிறர் சொன்ன கதைகளைக் குழந்தைகள் சொந்த நடையில் சொல்லும் வாய்ப்புகளைப் பெற்றால் சிறந்த வாய்மொழிப் பயிற்சி உண்டாகும். சொன்னதைத் திரும்பிச் சொல்லுவதில் குழந்தைகளுக்கு ஆர்வம் அதிகம் உண்டு. இதுவே இவர்களின் இயல்பும் ஆகும்.

## கதைகளின் வகைகள்

கதைகளில் பல வகைகள் உள. இயற்கைக்கதைகள், நகைச்சுவையுள்ள வேடிக்கைக் கதைகள், மோகினிக்கதைகள், வரலாற்றுக்கதைகள், புராணக்கதைகள் ஆகிய கதைகள் உள்ளன.

## நடிப்பு

நடிப்பதையும் வாய்மொழிப் பயிற்சிக்கு நன்கு பயன்படுத்தலாம். குழந்தைகளுக்கு நடிப்பதில் ஆவல் அதிகம். நடித்தல் இவர்களுக்கு இயற்கையாக அமைந்துள்ளது. நடிப்பிற்கேற்ற சிறு பாடல்களையும் கதைகளையும் தேர்ந்தெடுத்து நடிக்கக் கற்பிக்கலாம். குழந்தைகள் ஆக்கவேண்டிய பகுதியின் கருத்தையுணர்ந்து நடித்தால் நல்ல பயன்விளையும்.

## படங்கள்

வாய்மொழிப் பயிற்சியை அளிப்பதற்குப் படங்கள் பெரிதும் பயனுள்ளவையாக உள்ளன. படங்களைப் பார்த்து மகிழ்வதில் இளஞ்சிறார்களுக்கு ஆர்வம் அதிகம். எல்லா நிலையிலும் படங்கள் மொழி கற்பித்தலுக்குப் பயன்படும். படங்களை உற்று நோக்குவதன் மூலம் கூர்ந்து நோக்குந்திறன், கற்பனை ஆற்றல், ஓவியக்கலையில் ஆர்வம், அழகுணர்ச்சி ஆகியவை ஏற்படும். படங்களில் காணும் செய்திகள் மனத்தில் நன்கு பதியும்.

## கலந்து ஆய்தல்

கலந்து ஆய்தலையும் வாய்மொழிப் பயிற்சிக்கு நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். செயல்திட்ட முறையில் இதற்குப் பல வாய்ப்புகள் கிடைக்கும். தவிர ஏதாவது ஒரு சுற்றுலாவிற்கு ஆயத்தம் செய்யும் பொழுது செல்ல வேண்டிய இடங்கள், ஆங்காங்கு தங்கும் வசதிகள், உணவுமுறைகள், பயணவசதிகள், பல இடங்களிலும் பார்க்க வேண்டிய பொருள்கள் முதலியவற்றைப் பற்றி ஆராய்ந்து தெளியலாம்.

## முடிவுரை

வாய்மொழி பயிற்சி இருப்பின் அவருடைய வாக்கியம் வாசகமாக அமையும் என்பதில் ஐயமில்லை. ஒருவர் உள்ளத்தில் தோன்றிய கருத்துக்களைப் பிறருக்கு எடுத்துக்கூறும் போது மொழி திருத்தமாக இருந்தால தான் கேட்போருடைய உள்ளத்தில் பேசுவோரின் கருத்துக்கள் தெளிவாகப் புலனாகும்.

தெளிவான ஒலிப்பு, திருத்தமான உச்சரிப்பு, இடத்திற்கேற்ப குரல் எடுப்பு ஆகியவை திருந்திய பேச்சின் நல்லியல்புகளாகும். பேசும்பொழுது விரைவு, அச்சம், கூச்சம், படபடப்பு முதலானவையேயன்றித் தன்னம்பிக்கையுடனும், உணர்ச்சி ததும்பும் பேச்சினால் பேச்சு சிறக்கும் தெள்ளிய தீந்தமிழ்ச் சொற்களைக் கொண்ட சிறுசிறு வாக்கியங்கள் பேச்சில் அமைதல் மிகவும் அவசியமாகும்.

# 19. அம்புலி பயணத்தில் உவமை நயங்கள்

**ரெ. சுப்புலட்சுமி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

*தேடல் என்ற உந்து சக்தியால் ஏவப்பட்ட மனிதர்களின் அசுர வளர்ச்சிதான் இன்று வேற்றுக் கிரகங்களையும் கையாளும் துணிவினை ஏற்படுத்தியுள்ளது. இவ்வளர்ச்சி ஓரிரு நூற்றாண்டுகளில் வந்ததல்ல. ஆதியிலிருந்து படிப்படியாக வந்த ஆற்றல் மிகுவேகம் கண்டிருக்கிறது. எனவே அதன் ஆணி வேரையும் அறிந்தபின் அம்புலிப் பயணத்தின் தளர்நடையை ஆராய வேண்டியுள்ளது.*

## ஆதிமனிதனின் தேடல்

*ஆதி மனிதர்கள் விலங்குகளைப் போலவே உணவினைத் தேடி அலைந்து உண்டு உறங்கி வாழ்ந்துள்ளனர். நாளடைவில் பசியாறிய மனிதர்கள் ஆற்றோரங்களை நிலையான இருப்பிடமாகக் கொண்டுள்ளனர். பின்னரே மனிதர்களின் வளர்ச்சி வேகம் கண்டுள்ளது. பலபல கண்டுபிடிப்புகள் மூலம் பிறந்த குழந்தையின் உடல் மன வளர்ச்சியைப்போல் வாழ்க்கை நிலை மேம்பட்டுள்ளது. பிறகு புவியின் மற்ற பகுதிகளைப்பற்றி அறிய முற்பட்டுள்ளனர்.*

## புவியை அலசிய மனிதர்கள்

*கடலாலும் மலைகளாலும் சூழப்பட்ட ஒரு பகுதியில் வசிக்கும் மக்கள் கடல்களுக்கும் மலைகளுக்கும் அப்பாலும் உயிரினங்கள் வாழ்கின்றனவா? என்று அலச ஆரம்பித்துள்ளனர் அதன் விளைவாகக் கண்ணுக்கு எட்டாதக் கடலையும் கடக்க முடியுமா? என்று வியந்திருந்த காலத்தில் கொலம்பஸ், வாஸ்கோடகாமா போன்றவர்கள் கடலையும் கடந்து நாடுகளைக் கண்டுபிடித்து உலக வரலாற்றில் இடம்பெற்றுள்ளனர். புவியிலுள்ள நாடுகளைக் கண்டுபிடித்த பின் உலகை ஆளத் தலைப்பட்டுள்ளனர்.*

## கோள்கள்

*அண்ட சராசரங்களை ஆளும் இறைவன் படைத்த அண்டங்களை வானநூலார் கோள்கள் என்றழைக்கின்றனர். அத்தகைய கோள்களின் ஆதிக்கத்தில் மனிதர்கள் இருப்பதால் நம்முன்னோர்கள் கோள்களையும் மனிதர்களையும் பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு ஒரு பிணைப்பினை ஏற்படுத்தியுள்ளனர். எவ்வாறெனில் தின வார மாத*

வருட நட்சத்திர நாட்களைக் கணக்கிட்டு அவற்றிற்குப் பெயரிட்டுள்ளதைக் கொண்டு அதிலுள்ள எதார்த்த உண்மையைக் காண முடிகிறது.

## மனிதர்களுக்கு நெருக்ககமான கோள்கள்

சூரியன், சந்திரன், பூமி ஆகியன மனிதகுலத்திற்கு நெருக்கமான கோள்கள் எனலாம். ஏனெனில் நாம் பிறப்பதற்கு முன்பே நம்மை வரவேற்கும் கோள்களாகவும் நாம் அறியும் முன்னே நம்மை அறிந்த கோள்களாகவும் உள்ளன. உலகைப் பார்க்கத் தொடங்கும்போது கண்களால் கண்டு உறவாடி மகிழும் கோள்களாகும். பூமியின் இயக்கத்திற்கு அடிப்படையாகிறது. இந்நிலையில் பூமியில் வாழ்ந்து மகிழ்ந்த மனிதர்கள் சூரியனை நெருங்கி வாழ முடியாததை புரிந்து கொண்டு சந்திரனில் காலடி எடுத்து வைக்க தொடங்கியுள்ளனர்.

## அம்புலிப்பயணத்திற்கு வித்திட்ட புதினம்

அறிவயலைக் கண்ட பாரதியாரும் சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம் என்று பாடியுள்ளார். அறிவியல் புதின ஆசிரியர் ஜுல்ஸ் வெர்ன் என்பவர் 1986இல் வெளியிட்ட சந்திரனைச் சுற்றி என்ற புதினம் பிற்காலத்தில் சந்திர மண்டலப்பயணத்திற்கு வித்திட்டுள்ளது. அம்புலிப் பயண நூலில் காணமுடிகிறது. அம்புலிப் பயணத்திற்கு வித்திட்டுள்ளதற்கு எடுத்துக்காட்ட புதினத்தில் சந்திரனைச் சுற்றும் அம்புலி ஊர்தியும் அப்போலோ - 2 விண்கலமும் ஒன்றுபட்டுள்ளதை விளக்கி சான்று காட்டப்பட்டுள்ளது எழுத்தாளர்களின் தொலைநோக்குப்பார்வை செயல்வடிவம் பெற்றதற்கு இக்கதை சான்றாகிறது.

## அம்புலி பயண முயற்சி

அம்புலி பயண முயற்சியில் இரஷ்யா 1957இல் செயற்கைச் சந்திரனை அனுப்பி வெற்றி கண்டுள்ளது. இரஷ்யாவின் வெற்றியைக் கண்ட அமெரிக்காவும் தொடர்முயற்சியில் ஈடுபட்டு முதன்முதலில் சந்திரனில் காலடி வைத்த நாடு என்ற புகழைப் பெற்றுள்ளது. இரஷ்யா அமெரிக்கா ஆகிய இருநாடுகளும் அம்புலியில் பயணம் செய்த சாதனைகளை விளக்குவதே அம்புலிப் பயணம் என்ற நூலாகும். இதனை யாத்தவர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்.

பூமியிலிருந்து சந்திரனுக்குச் செல்லலா என்று மூக்கின் மேல் விரல் வைத்துக் கேட்கும் மக்களுக்கும் புரியும் வகையில் அன்றைய வழக்கிலிருந்த உவமைகளைக் கையாண்டு அம்புலிப் பயணத்தை விளக்கிய செய்திகளையும், பிறவற்றையும் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

***"வினை பயன்மெய் உரு என்ற நான்கே***
***வகைபெற வந்த உவமைத் தோற்றம்"***

என்பது தொல்காப்பியச் சூத்திரம். இதனடிப்படையில் அம்புலிப்பயண நூலில் கையாளப்பட்ட உவமைகள்.

## மும்மூர்த்திகள்

உலக மக்கள் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய தெய்வங்களை மும்மூர்த்திகள் என்று அழைப்பர். இதைப்போவே கோள்களில் சூரியன், சந்திரன், பூமியையும் சேர்த்து வானத்து மும்மூர்த்திகள் என்று அழைக்கலாம். மனதால் உணரும் வகையிருப்பதால் மெய்யுவமையாகக் கருதலாம்.

## தாயும் சேயும்

சூரியனை பூமியும் பூமியைச் சந்திரனும் சுற்றி வருகின்றன. இதனை அரசமரத்து விநாயகனைத் தாய் சுற்றிவரும்போது தாயைப் பிரிந்தறியாத இரண்டுவயது குழந்தை தாயைச் சுற்றிக் கொண்டு வரும் செயலுடன் உவமிக்கப்பட்டுள்ளதால் வினை உவமைக்குப் பயன்படுத்தியுள்ளதை அறியலாம்.

## காற்று மண்டலம்

பூமியைச் சுற்றிலும் போர்வைபோல் காற்றுமண்டலம் சூழ்நது பூமியைப் பாதுகாக்கிறது. பயனைக் கருதி போர்வை என்ற உவமை பயன்படுத்தப்பட்டுள்ளதால் பயன் உவமையாகக் கருதலாம்.

## வெற்றிடம் திரிசங்கு சுவர்க்கம்

பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலுள்ள வெற்றிடத்திற்கு திரிசங்கு சுவர்க்கம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது பூலோகத்திற்கும் சுவர்க்கத்திற்கும் இடையில் இராமரின் மூதாதையரான சூரிய வம்சத்தில் புகழ்பெற்ற சந்தியவரதன் என்ற அரசனுக்காக விசுமாமித்திரன் தவ வலிமையால் ஏற்படுத்திய இடம் திரிசங்கு சுவர்க்கம். அதைப் போலவே வெற்றிடம் தனித்தன்மை வாய்ந்ததாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். எனவே இதனை உருவுவமையாகவும், தனித்தன்மையைக் கருதி பண்புவமையாகவும் எண்ணலாம்.

## இராக்கெட்டு

இராக்கெட்டு விடும் கலையை சீனர்கள் முன்னரே அறிந்திருந்தனர் என்றும், திப்பு சுல்தான் வெள்ளையர்களுடன் போரிடும்போது இராக்கெட்டு பயன்படுத்தினார் என்ற செய்திகள் நிலவுக்குப்போவோம் என்ற நூலில் இடம்பெற்றுள்ளன.

## இராக்கெட்டு வடிவம்

இராக்கெட்டின் அமைப்பில் மூன்று அடுக்குகள் ஒன்றன்மேல் ஒன்றாக உணவு கொண்டு செல்லும் பாத்திரத்தில் அடுக்குகள் செங்குத்தாகச் செருகி நிறுத்தப் பெற்றிருப்பதுபோல் இந்த இராக்கெட்டுகளும் ஓர் உயர்ந்த தாங்கியுடன் பொருத்தப்பெற்று நிறுத்தப் பெற்றிருக்கும். உச்சியிலுள்ள மூன்றாவது இராக்கெட்டின் நுனியில்தான் விண்கலம் பொருத்தப் பெற்றிருக்கும். இராக்கெட்டின் அமைப்பினை விளக்கும் உருவுவமையாகும்.

## இராக்கெட்டினை சுமந்து செல்லும் வண்டி

இராக்கெட்டினை சுமந்து செல்லும் வண்டியின் மேல்தளம் கால்பந்து விளையாடும் மைதானத்தில் பாதி அளவினைக் கொண்டதாக இருக்கும் என்று இடப்பரப்பு அளவினைக் குறிப்பதால் உருவுவமையாகும். இவ்வண்டி ஆமைபோல் நகர்ந்து செல்லும் என்று வண்டியின் வேகத்திற்கு ஆமையின் வேகத்தை குறிப்பிட்டுள்ளதால் வினைவுவமையாகக் கருதலாம்.

## புவிக்கவர்சி ஆற்றலும் மலையேறும் மனிதனும்

சாதாரணமாக, பூமியில் நடக்கும் நாம் நேர்செங்குத்தாக உள்ள மலையில் ஏறும்பொழுது அதிக ஆற்றலைப் பயன்படுத்தி ஏதிர்நீச்சல் போட்டு மலையுச்சியை அடைய வேண்டியுள்ளது. அதைப்போலவே இராக்கெட்டு இயந்திரம் விண்கலத்தினைத் தாங்கிக் கொண்டு புவிஈர்ப்பு விசையை எதிர்த்து செல்வதற்கு அதிகமான எரிபொருள் தேவைப்படுகிறது. செயலுக்குவமையாகக் கூறும்பொழுது வினைவுவமையாகவும், ஆற்றலினை உணர்வது மனமாக இருப்பதால் மெய்யுவமையாவும் கருதலாம்.

## விண்கலமும் துப்பாக்கி குண்டும்

சந்திரனை நோக்கி ஒரு விண்கலத்தை அனுப்பும் செயல் 16 கி.மீ தொலைவிலுள்ள ஊசியினை இங்கிருந்தபடியே ஒரு துப்பாக்கிக் குண்டினால் குறிதவறாமல் தாக்குவதற்கு ஒப்பிட்டுள்ளதால் வினைவுமையாகும்.

## சந்திரனுக்குள் விண்கலம்

அகப்பற்றையும், புறப்பற்றையும் நீக்கிய ஆன்மா வீட்டுலகத்தை நோக்கி விரைவதுபோல மூன்று அடுக்கு இராக்கெட்டு கவசங்களையும் மூக்குப் பகுதியையும் நீக்கிய விண்கலம் விரைந்து சென்றதற்கு அடிப்படையாவதால் வினைவுமையாகக் கொள்ளலாம்.

## குகை

விண்கலத்தில் இரு பகுதிகளில் ஒன்று தாய்க்கலம், சேய்க்கலம் தாய்க்கலத்திலிருந்து சேய்க்கலத்தினுள் நுழையும் குகை போல் இருப்பதற்கு ஒப்பிட்டுள்ளதால் உருவுவமையாகும்.

## கங்காரு நடை

பூமியிலுள்ள ஈர்ப்பு விசையில் ஆறில் ஒரு பங்கு அளவே சந்திரனில் இருப்பதால் சந்திரனுக்குச் செல்லும் விண்வெளி வீரர்கள் கங்காருபோல் எழும்பி எழும்பி குதித்து நடக்கும் வினையைக் குறிப்பதால் வினைவுவமையாகும்.

## கைம்மண் அளவு

சந்திரனில் குறுகிய காலமே தங்கியிருந்த விணவெளி வீரர்கள் சேகரித்த அறிவியல் தகவல் அந்த சந்திரனில் அடங்கிக் கிடக்கும்

அறிவுக்களஞ்சியத்தின் கைம்மண் அளவே என்று குறிப்பிடுவதால் பயன் உருவுவமைகளாகக் கருதலாம்.

## வெற்றாறு

சந்திரனில் மூன்று புறமும் மலைகளும் ஒரு புறம் 96 கி.மீ நீளத்தில் ஆற்றுப்படுகையைப் போல் ஒரு வெற்றாறு உள்ளது என்று குறிப்பிடுவதால் உருவுவமையாகும். அங்குள்ள பெரிய பெரிய பாறைக்குள் சில மோட்டார்கார் அளவு பருமனுள்ளவை என்று குறிப்பிட்டுருப்பதால் உருவுவமையாகும்.

## வானவேடிக்கையும் மத்தாப்பும்

சந்திரனிலிருந்து பூமிக்குத் திரும்பும்போது அம்புலி ஊர்தியின் அடியிலிருந்து கிளம்பிய புழுதிப்படலம் வான வேடிக்கைபோல் தொலைக்காட்சியில் தெரிந்ததையும் ஊர்தி கிளம்பும்போது ஒளிப்பொறிகள் நாலாப்பக்கங்களிலும் மத்தாப்பு போல் செரிந்தன என்று கூறப்பட்டுப்பதால் மெய்யுவமையாகும்.

## மொர்க்குரி - ஜெமினி - அப்போலோ

மொர்குரி, அப்போலோ என்பவை விண்கலங்களின் பெயர்களாகும். மொர்க்குரி என்பது தமிழில் புதன் கிரகம் என்று பெயராகும்.

அப்போலோ என்பது கிரேக்க நாட்டுச் சூரியக் கடவுளின் பெயர். கிரேக்கப் புராணங்களின்படி அப்போலோ மிகவும் சக்தி வாய்ந்த கடவுள். எனவே மொர்க்குரி, ஜெமினி விண்கலங்களுக்கு அடுத்து வலிமையிலும் வடிவத்திலும் பெரிய விண்கலத்தை உருவாக்கியுள்ளனர். இதில் மூவர் பயணம் செய்யலாம். வலிமைவாய்ந்த விண்கலத்திற்கு சக்தி வாய்ந்த கடவுளின் பெயரான அப்போலோ என்ற பெயரைச் சூட்டியுள்ளனர். இச்செய்திகள் நிலவுக்குப் போவோம் என்ற நூலில் இடம்பெற்றுள்ளன.

## எண் 13

அப்போலோ - 13 விண்கலப்பயணம் தோல்வியடைந்துள்ளது. இதற்கு காரணம் பதிமூன்று எண்ணே ஆகும் என்று கருதுகின்றனர். விண்கலத்தின் எண் 13, மின்சார சீர்குலைவு ஏப்ரல் - 13, விண்கலம் ஏவப்பெற்ற நேரம் 13-13 மணியாகும். தீங்கினைப் பயக்கும் என்று நம்பியதால் அமெரிக்கப் பொறிநுட்ப வல்லுநர்கள் விண்வெளிக்கலம் இறங்கும் நேரத்தை 17-13 மணிக்குப் பதிலாக 17-18 மணி என்று அறிவித்துள்ளனர். எண்ணின்மீது கொண்ட நம்பிக்கைப் புலனாகிறது.

## கண்களின் இமைகள்

விண்வெளிக்குச் சென்ற வீரர்களின் பாதுகாப்பினையும் உடல்நிலையையும் பூமிக்கு அடியிலுள்ள பிளாக் ஹவுஸ் என்ற கட்டுப்பாட்டு நிலையிலிருந்து கண்டு கொண்டிருந்த விண்வெளி ஆய்வு நிபுணர்களைக் கண்ணினைக் காக்கின்ற இமைகள் என்ற உவமை வினையுவமையாகக் கருதலாம்.

## மும்மணிகள்

ஆம்ஸ்ட்ராங்க், ஆல்டரின், காலின்ஸ் ஆகிய மூவரும் விண்வெளிக்குச் சென்ற மும்மணிகள் என்ற அழைக்கப்படுவது பண்புவுவமையாகக் கருதலாம்.

## சாட்டர்ன்

சாட்டர்ன் என்பது இராக்கெட்டின் பெயராகும், தமிழில் சனிக்கிரம் என்பது பொருள். சனிக்கிரகம் மிக வலிமை வாய்ந்த கிரகம். கிரகங்களுக்குப் பயணம் செய்யும் விண்வெளி கலங்களைத் தாங்கிக் கொண்டு செல்வது இராக்கெட்டு எனவே வலிமையைக் கருதி சார்ட்டர்ன் என்று இராக்கெட்டுக்கு பெயரிட்டதன் மூலம் சனிக்கிரகத்தின்மேல் உள்ள நம்பிக்கை புலனாகிறது.

## துணைபுரிந்த நூல்கள்

நிலவுக்குப் போவோம் - சந்தானலஷ்மி

தொல்காப்பியப் தெளிவுரை - முனைவர் ச.வே. சுப்பிரமணியன்

நாலடியார்.

# 20. ந.சுப்புரெட்டியார் காட்டும் கற்றல் கற்பித்தல் உத்திகள்

**முனைவர் சு. அட்சயா**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 035*

## முன்னுரை

நம் தமிழ்மொழி கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்துப் பிறந்த மொழி - பழமையும் பெருமையும் நிறைந்த மொழி, புதுமையும் பொருந்தி இன்று வழக்கழியாது என்றும் நின்று நிலவுகிறது. நம் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழியாகும். தமிழ்தெய்வ வணக்கம் கூற வந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ்மொழிக்குப் "பரம்பொருளை" உவமையாகக் கூறினார். இலக்கியங்களின் சுவைகளை நாம் நுகரவேண்டுமென்றால் நாம் முதலில் தமிழ் மொழியைக் கற்கவேண்டும். பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியாரின் தமிழ்ப் பயிற்றும் முறை என்ற நூலின் வாயிலாகக் குறிப்பிட்டுள்ள ஒரு சில உத்திகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தாய்மொழியைப் பயிற்றும் நோக்கங்கள்

ஒருவர் பிறந்தது முதல் இறக்கும் வரை பேசி வருவது தாய்மொழி. பொதுவாக நாம் நமது எண்ணங்களைப் பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வெளியிடுவதற்குத் தாய்மொழி சிறந்த கருவியாகப் பயன்படுகிறது. உயர்ந்த மனவெழுச்சிகளையும், கற்பனையாற்றலையும் கொண்ட தாய்மொழி இலக்கியங்களைச் சுவைப்பதுபோல் அயல்மொழி இலக்கியங்களைச் சுவைக்க முடியாது. தாய்மொழி எழிலுணர் திறனையும் கற்பனையாற்றலையும் வளர்க்கின்றது. வழி வழியாக வரும் சமூக இயலையும் பண்பாட்டை அறியும் திறவுகோலாகவும் பயன்படுகிறது. வாழ்க்கையை வளப்படுத்தி நீதியை இனியமுறையில் புகட்டுகின்றது. தாய்மொழி மூலம் கல்வி பெறுங்கால் காலச்செலவு, பணச்செலவு, முயற்சி ஆகியவை குறைகின்றன. தாய்மொழி பயில்வதால் மொழிப்பற்றும் நாட்டுப் பற்றுங்கூட நன்முறையில் அமையும் என்று பேராசிரியர் ந.சுப்பு ரெட்டியார் குறிப்பிட்டுள்ளார்.

தாய்மொழி இலக்கியத்தைப் படிக்கும் பொழுதுதான் அந்நாட்டு வரலாற்றைப் பற்றித் தெளிவாக அறிய முடிகின்றது. "இலக்கியம் வாழ்க்கையின் கண்ணாடி" என்றும் வாழ்க்கையே மொழியில்

இலக்கியமாக அமைகின்றது என்றும் மேனாட்டுத் திறனாய்வாளர்கள் கூறுவர். எடுத்துக்காட்டாக, புறநானூறு போன்ற சங்க இலக்கியங்கள் தான் பண்டைத் தமிழகத்தின் வரலாறு, பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை முறை, அவர்களின் ஆட்சிமுறை, சமய நிலைகள், கலைகள் முதலியவற்றை அறிய உதவுகின்றன. வரலாற்றுப் படிப்பு, கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், அயல்நாட்டினர் எழுதிவைத்த குறிப்புகள் முதலியவற்றால் அறிய முடியாத உண்மைகளையெல்லாம் இலக்கியங்களால் அறிய முடியும். கல்லிலும், செம்பிலும் எழுதி வைக்க முடியாத இதய பாவங்களையெல்லாம் இலக்கியம் தான் நுட்பமாக விரித்துக்காட்டும். எதிர்கால வாழ்வை அமைக்கக் கடந்தகால வாழ்வு பெரிதும் துணைபுரியுமாதலால், தாய்மொழி இலக்கியங்களின் மூலம் இதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும் என்று பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகின்றது (டாக்டர் ந.சுப்புரெட்டியார், தமிழ்ப் பயிற்றும் முறை, ப.16).

## கற்றல் என்பதன் பொருள்

கற்றல் என்பது ஒருவன் தன் வாழ்வில் அறிவு, பழக்க வழக்கங்கள், மனப் பான்மைகள், செய்திறன்கள் ஆகியவற்றைப் பெறுகின்ற நிலையினைக் குறிக்கும். மனித நடத்தைக்கு அடிப்படையாகக் கற்றல் அமைகிறது.

''கற்றல் என்பது பயிற்சி, அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருவனிடம் ஏற்படக்கூடிய ஓரளவு நிலையான நடத்தை மாற்றத்தைக் குறிப்பதாகும் என்று உளவியல் அறிஞர்கள் கற்றலை வரையறுக்கின்றனர்.

1. கற்றலின் விளைவாக நடத்தை மாற்றம் ஏற்படுகின்றது.
2. இத்தகைய நடத்தை மாற்றம், உயிரி (Organism) முயன்று பெறும் பயிற்சி, அனுபவங்கள் ஆகியவற்றின் காரணமாக ஏற்படுகின்றது. எனவே இயல்பூக்கங்கள் (Instincts) வயது முதிர்ச்சி (maturation) ஆகியவற்றின் காரணமாக ஒருவரது நடத்தையில் ஏற்படும் மாற்றங்கள் கற்றலின் கீழ் வராது.
3. ஒருவரது நடத்தையில் ஏற்படும் மாற்றம் ஓரளவாவது நிலைத்த தன்மையுடையதாக இருந்தால்தான் அதைக் கற்றலின் பால் என்று கூறமுடியும். எனவே களைப்பு, நோய் மருந்துப் பொருட்கள் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய குறுகிய கால நடத்தை மாற்றங்கள் கற்றலின் விளைவு என்று ஏற்பதில்லை.

எனவே கற்றல் என்பதற்கான எளிமையான வரையறை : கற்றல் என்பது நமது அனுபவங்களில் இருந்து நாம் பெறும் படிப்பினை அல்லது விளை பயன்கள் ஆகும்.

## மனித வாழ்வில் கற்றலின் முக்கியத்துவம்

மனித நடத்தைக்கு அடிப்படையாக அமைவது கற்றலே. நாம்

பேசும் மொழி, நமது பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், மனப்பான்மைகள், இலட்சியங்கள், கொள்கைகள், ஆளுமை குணங்கள், புலன்காட்சி ஆகிய அனைத்திலும் கற்றல் முக்கியப்பங்கு வகிக்கின்றது. சுவாசித்தல், கண்சிமிட்டுதல், தாயிடம் பால் அருந்துதல், கால் கைகளை உதைத்து ஒலியெழுப்புதல் போன்ற மிகச்சில இயல்பூக்கங்களைக் கொண்டு பிறக்கும் மனிதக் குழந்தையானது கற்றலின் காரணமாகவே, தனது சுற்றுச்சூழலைக் கையாள்வதில் மேம்பட்ட நடத்தையை வெளிப்படுத்த முடிகிறது. இதன் காரணமாகவே அக் குழந்தை தனித்து இயங்குவதிலும் சமயச் சார்புடையதாக மாறுவதிலும் வெற்றி பெறுகிறது. மற்ற உயிரினங்களைக் காட்டிலும் மனிதக் குழந்தை தான் அதிக காலம் பெற்றோரின் பராமரிப்பில் வளர்கின்றது. இது ஒரு விதத்தில் வரப்பிரசாதமாகவே அமைந்து, கற்பதற்குரிய பொன்னான காலமாகத் திகழ்கிறது. எனவே தனது கற்றல் ஆற்றலால் மனிதக் குழந்தை பிற உயிர்களை விட சிறப்புற்று வலிமை மிக்கதாகத் திகழ முடிகிறது. பேச்சு, சிரிப்பு, நுண்திறன்கள், கலை வளர்ச்சி, உயர்வகை பொழுதுபோக்கின் நாட்டம் போன்றவை மனிதர்களுக்கு மட்டுமே உரியவை. இவற்றைக் கற்றலின் காரணமாகவே மனிதக் குழந்தை தனதாக்கிக் கொண்டது.

## கற்றலின் தன்மைகள்

### கற்றலின் முக்கிய இயல்புகளாவன:

1. கற்றல் அனைத்து உயிர்களிடமும் காணப்படுவது.
2. கற்றல் தொடர்ச்சியானது கருவறை முதல் கல்லறை வரை தொடர்ச்சியாக நிகழ்வது.
3. கற்றலால் நடத்தை செம்மையுறுகிறது.
4. கற்றல் நோக்கத்தோடு கூடியது. ஒரு குழந்தை பள்ளியிலும், பள்ளிக்கு வெளியேயும் கற்கக் கூடியவை. அதனுடைய குறிக்கோள்கள் மனநிறைவு ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடையவை ஏதோ ஒரு நோக்கமுமில்லால் யாரும் எதையும் கற்பதில்லை.
5. கற்றல் பன்முகம் கொண்டது. (Learning is multiple) நமது பல்வேறு கற்றல்கள் ஒருங்கிணைந்தவை (integrative). ஆய்வு நோக்கங்களுக்காக உளவியலாளர்கள் பல்வகைக் கற்றல்களைச் சொல் சார்ந்த கற்றல், புலன்காட்சி கற்றல், உடலியக்க கற்றல், கருத்தமைக்கற்றல், பிரச்சனையைத் தீர்க்கக் கற்றல் என வேறுபடுத்திக் காட்டுகின்றனர். இவ்வாறு வேறுபடுத்திக் காட்டுதல் செயற்கைத் தனமாக இருந்த போதிலும், கற்றலைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. உதாரணமாக, சுருக்கெழுத்துப் பயிலும் ஒரு மாணவி, செய்திறன் ஒன்றை மட்டும் கற்றுக் கொள்ளவில்லை. வெவ்வேறு குறியீடுகளையும் அவற்றை எப்போது எவ்வித ஒலிகளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் அறிந்து

கொள்கிறாள். இங்குச் சொற்களை அறிதல், செயல்திறன், தொடர்புபடுத்துதல் போன்ற பல்வகைக் கற்றல்கள் நிகழ்கின்றன. அதே சமயம் சுருக்கெழுத்துப் பற்றிய மனப்பான்மை, வணிகஉலகம், அதில் தான் வகிக்கக் கூடிய பங்கு போன்ற மனவெழுச்சிக் கற்றலும் அம்மாணவியினிடத்தில் உருவாகின்றது.

6. கற்றல் அனுபவங்களால் விளைவது எனவே, கற்றல் என்பது பிறரால் அளிப்பது அன்று - சுய அனுபவங்கள் வாயிலாக ஒவ்வொருவரும் முயன்று அடைவது.

## பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப் பயிற்றும் முறை நூலின் சிறப்புகளாகப் பேராசிரியர் எஸ். வேங்கடச்சாரி அவர்களின் கருத்துக்கள்

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் தமிழ்க் கற்பித்தல் பற்றி மேலும் ஒரு நூலை எழுதி இருப்பதன் மூலம் அரிய சாதனையைப் படைத்துள்ளார். தமிழ்க் கற்பித்தல் பற்றி ஏற்கனவே வெளிவந்துள்ள நூல்கள் அனைத்தும் தாய்மொழியான தமிழைக் கற்பித்தலுக்குப் பொருந்தாத நுட்பங்களையும், வழிமுறைகளையும் கூறுவனவாக உள்ளன. அத்தகைய நூல்கள் வெளிநாட்டு மொழிகளைக் கற்பித்தலுக்குப் பொருந்தக்கூடிய எண்ணங்களின் அடிப்படையாக அமைந்துள்ளன. தாய் மொழியாம் தமிழைக் கற்பித்தலுக்கு மிக மிகப் பொருத்தமான கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ள முதல் நூலை எழுதி வெளியிடுகின்ற பெருமை ந.சுப்புரெட்டியார் பெற்றுள்ளார். பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் தமிழ் இலக்கணம் மற்றும் தமிழ் யாப்பு இலக்கணம் பற்றிய தன்னுடைய ஆழ்ந்த கற்றல்களின் அடிப்படையில் இத்தகைய பல கொள்கைகளைத் தனது சிந்தனைகளின் வெளிப்படாக அமைத்துள்ளார் என்று நான் அறிகிறேன். பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் தமிழ்க் கற்பித்தலுக்குரிய பலவித பயனுள்ள கருத்துக்களை உள்ளடக்கி ஒரு கருத்துச் சுரங்கமாக இருந்த போதிலும் அக்கருத்துக்களை எடுத்தாளாமல் காலத்தால் முற்பட்ட எழுத்தாளர் பலர் விட்டு விட்டமை கழிவிரக்கத்திற்குரியது.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் முந்தைய எழுத்தாளர்கள் எந்த சபலத்திற்கு முற்றிலும் இணக்கமாகத் தொடர் கற்பித்தல் என்ற திட்ட அலகுக்கு இன்றும் பொருந்தக் கூடியதாக, பழந்தமிழ் இலக்கியத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள தமிழ்க்கற்பித்தல் பற்றிய வழிமுறைகளையும் முழுமையாகப் பின்பற்றக்கூடிய மயக்க நிலையைத் தெளிவிக்கும் வகையில் அவற்றை எதிர்க்கக்கூடிய புதிய அடித்தளத்தை அமைத்துள்ளார். பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் இந்த நூலில் அவரால் கையாளப்பட்டுள்ள கொள்கைகள் தமிழ் இலக்கியத்தில் உள்ள பொருத்தமான பல எடுத்துக்காட்டுகளை மேற்கோள் காட்டுவதாக அமைந்துள்ளன. என்னுடைய முன்னுரையினுடைய நீளவிரிவு பற்றிய தற்சார்புத் தீர்மான முன்னெச்சரிக்கையை எனக்குப் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் தமிழ்க்

கற்பித்தலுக்கு வழங்கியுள்ள மூலக் கொடையினைப் பகுப்பாய்வு செய்வதற்கு நான் முயற்சி மேற்கொள்கிறேன் என்பதை உறுதியாகத் தெரிவிக்கிறேன். தமிழ்மொழியினைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் இந்தியாவின் பிற மொழிகளைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களும் புதிய ஆற்றல்மிக்க அணுகுமுறைகளைத் தங்களுடைய மொழிக் கற்பித்தல் தொடர்பாக மொழியாசிரியர்களுக்கு உதவிட வேண்டும் என்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்நூலைப் பேராசிரியர் ந.சுப்பு ரெட்டியார் வெளியிட்டுள்ளார் என்று பேராசிரியர் எஸ். வேங்கடாச்சாரி அவர்கள் தமிழ்ப் பயிற்றும் முறை என்ற நூலின் சிறப்புக்களைக் கூறியுள்ளார்.

பேராசிரியர் எஸ். வேங்கடச்சாரி அவர்கள் கூறியிருக்கின்ற இந்நூலின் சிறப்புகளைப் பற்றியும், நூலாசிரியரின் சிறப்புக்களைப் பற்றியும் அறிய முடிகின்றது. தமிழ்க் கற்பித்தலுக்கு எவ்வளவோ நூல்கள் தோன்றியிருப்பினும், அந்த நூல்களுக்கெல்லாம் இல்லாத சிறப்பு பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப் பயிற்றும் முறை என்ற நூலிற்குச் சிறப்பினைச் சேர்த்துள்ளது என்பதை அறிய முடிகின்றது.

## பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் குறிப்பிடும் பயிற்று முறை உத்திகள்

கற்பித்தலில் கையாள வேண்டிய ஒரு சில உத்திகளைப் பற்றி (Divices) ஆராய்வோம். பெரும்பாலும் இவ்வுத்திகள் கற்கும் மாணாக்கர்களின் கவனத்தை ஈர்க்கவும், புலன்களின் வாயிலாக இவர்களுக்குப் பல கருத்துக்களைப் புகட்டிக் கற்கும் பாடங்களில் அழுத்தமான அறிவைப் பெறச் செய்யவும் பயன்படுகின்றன. வினாக்கள், விளக்கம் தருதல், துணைக்கருவிகள், மாணாக்கர் கட்டுத் தரப்பெறும் வீட்டு வேலை ஆகிய உத்திகள் பெரிதும் பயன்படக் கூடியவை.

## வாய்மொழி வினாக்கள்

கற்பித்தலில் வாய்மொழி வினாக்கள் பல்வேறு விதமாகப் பயன்படுகின்றன. வினாக்ககளைத் தக்க முறையில் கையாளுதலில் இளம் ஆசிரியர்கள் நல்ல பயிற்சியைப் பெறவேண்டும். இந்த உத்தியால் தான் மாணாக்கர்களும் ஆசிரியர்களும் மனநிலையில் ஒன்றாகப் பிணைக்கப்படுகின்றனர். வினாக்களை விடுக்கும் திறன் கைவரப்பெற்ற ஆசிரியர்கள் ஓரளவு கற்பிப்பதில் வல்லுநராகவும் இருப்பர் என்று கூறலாம். ஆனால், வினாக்களை விடுவிக்கத் தெரியாதவர் சிறந்த ஆசிரியராகத் திகழ முடியாது என்று துணிந்து கூறிவிடலாம். வினவுதல் கற்பித்தலில் கைவரப்பெற வேண்டிய ஒரு முக்கிய திறனாகும். வினவுதலைக் குறித்து கிப்லிங் என்ற கவிஞர்,

***“தப்பிலாது எனக்குத் தொண்டைச்***
***சால்புடன் இயற்று வோர்கள்***

*ஒப்பிலார் அறுவர் உள்ளார்;*
*உவந்(து) என(து) உள்ளத்(து) என்றும்*
*இப்பெரு ஞானம் எல்லாம்*
*இவர்தந்தார், இவர்கள் நற்பேர்*
*எப்படி? எப்போ(து)? எங்கே?*
*யார்? ஏன் என் என்ப வாகும்"*

என்று கூறியுள்ளார். என்ன? ஏன்? எப்பொழுது? எப்படி? எங்கே? யார்? என்ற அறுவகை வினாக்களும் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் துணையாக இருப்பதைப் பட்டறிவால் அறியலாம். ஈண்டு நன்னூலார் கூறும் அறுவகை வினாவை,

*"அறிவறி யாமை ஐயுறல் கொளல்கொடை*
*ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார்"*
*(நன்னூல், நூற்., 385)*

ஒப்பிட்டுப் பார்த்தாலும் இன்றியமையதது (ந.சுப்புரெட்டியார், தமிழ் பயிற்றும் முறை, பக்.135, 136).

## தொகுப்புரை

இக்கட்டுரையின் வாயிலாகத் தமிழ்மொழியின் சிறப்பினையும், தாய்மொழி விளக்கத்தையும், தாய்மொழியைப் பயிற்றும் நோக்கங்களையும் அறிய முடிகின்றது. கற்றல் என்பதன் பொருளையும் கற்றலின் தன்மைகளையும் அறிய முடிகின்றது. தமிழ்ப் பயிற்றும் நூலின் அமைப்பையும், பயிற்றலின் உத்திகளையும் அறிய முடிகின்றது. இந்நூல் பற்றிப் பேராசிரியர்கள் எஸ். வேங்கடாச்சாரியார் சிறப்பித்து கூறியுள்ளதையும், நூலாசிரியர் ந.சுப்புரெட்டியாரின் சிறப்புக்களையும் அறிய முடிகின்றது.

# 21. ந.சுப்புரெட்டியாரின் சித்தாந்தத் தெளிவு



**ஆ. தனுசு இராமச்சந்திரன்**
*சொற்பொழிவாளர்*
*1/334, அருள்சோதி நகர்*
*வடமதுரை அஞ்சல்*
*கோயம்புத்தூர் - 641 107.*

## முன்னுரை

தமிழ் அன்னைக்கு நூலின் வாயிலாக அர்ச்சித்த கொடையாளர்கள் பலர். அவர்களுள் முனைவர் ந.சுப்புரெட்டியாரின் பங்கு மிகவும் அருமை. அவரின் 'சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்' என்னும் நூலில் அவர் எவ்வளவு எளிதாக சித்தாந்த சாரத்தை நமக்கு அளித்துள்ளார் என்பதை இக்கட்டுரை காட்ட முற்படுகின்றது.

## சித்தாந்தத்தில் இறைவன்

சைவ சித்தாந்தத்தில் ''முடிந்த முடிபாகக்'' கொள்ளப்படும் பொருள்கள் பதி, பசு, பாசம் என்பனவாகும். இவை என்றும் உள்ள பொருள்கள் இவற்றை,

> ***"பதி பசு பாசம் எனப் பகர்மூன்றில்***
> ***பதியினைப் போற் பசு பாசம் அநாதி"***
> ***(திருமந்திரம் உபதேசம்-3)***

என்று தெளிவுபடுத்துவார் திருமூலர்.

பதியாகிய கடவுள் என்று உண்டோ அன்றே பசுவாகிய உயிர்கள் உண்டு. அன்றே அவ்வுயிர்களைப் பிணித்துள்ள பாசமும் உண்டு என்பது சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபாகும். பதி உண்மையை சித்தாந்திகள் 'சற்காரியவாதம்' கொள்கையின் அடிப்படையில் மெய்ப்பிப்பர். ஒவ்வொரு காரியத்திற்கும் காரணம் இருந்தே ஆக வேண்டும். காரியம் எங்கிருந்தோ திடீரென்று புதிதாகத் தோன்றுவது அல்ல. அ∴து உற்பத்திக்கு முன்னரும் உள்ளது. இதுவே 'சற்காரிய வாதம்' எனப்படும். காணப்படாத நுண்ணிலையில் இருந்த உலகம் காணப்படும் பருநிலையை அடையும் பொழுதுதான் பயன் உண்டு. ஆதலால் நுண்ணிலையில் இருந்த உலகத்தைப் பரு நிலைக்கு கொணர்ந்தவன் இறைவன். ஆதலின் இவ்வுலகத்தைப் படைத்தவன் ஒருவன் உளன் என்பது பொருந்துவதாகின்றது. இதனால் நாம் தெளியும் பொருள் இது. 'தோற்றம்' என்பது காணப்படாத நுண்ணிலையின் நீங்கிக் காணப்படும் பருநிலையை அடைவது. 'நிலை' என்பது காணப்படும் நிலையில் இருத்தல் ஆகும். 'அழிவு' என்பது

காணப்பட்ட பருநிலையின் நீங்கி முன்போலக் காணப்படாத நுண்ணிலையை அடைதல் ஆகும். இதனைச் சுருக்கமாக இல்லது தோன்றாது; உள்ளது அழியாது என்றும் கூறலாம். இதுவே சற்காரியவாதத்தின் சுருக்கமாகும்.

## பதியின் இருநிலைகள்

பதியின் சிறப்பியல்பை 'சொரூப இலக்கணம்' என்றும் பொது இயல்பைத் 'தடத்த இலக்கணம்' என்றும் சித்தாந்தம் பேசும் முப்பொருள்களில் பதி ஏனையவற்றைவிடப் பேராற்றல் வாய்ந்தது. சுதந்திரம் உடையது; எந்தப் பொருளின் சார்பினாலும் மாறுபடாமல் என்றும் ஒரே பெற்றியதாய் இருப்பது. இது பற்றியே பதியை வடமொழியில் 'சித்' என்றும் அருந்தமிழில் 'மெய்ப்பொருள்', 'செம்பொருள்' என்றும் வழங்குவர். 'சத்' என்பதை 'உள்ளது' என்று மொழி பெயர்த்துப் பேசுவர் சித்தாந்திகள். 'உள்ளது' என்பதை என்றும் ஒரு பெற்றியதாய் உள்ளது என்று கொளல் வேண்டும். ஆகவே பிறிதொரு பொருளின் சார்பினால் மாறுபடாத தன்னையே தான் நோக்கி நிற்கும் நிலையில் காணப்பெறும் இயல்புகளே பதியின் சொரூப இலக்கணமாகும். பதி உலகத்தை நோக்கி நிற்கும் நிலையில் காணப்பெறும் இயல்புகள் தடத்த இலக்கணமாகும். உயிர்களும் 'உலகம்' என்பதனுள் அடங்கும்.

## பதியின் சொரூப இலக்கணம்

இது குணம் குறிகளைக் கடந்த நிலை பதி ஒன்றே, அதாவது அஃது ஏகமாய் இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலானது. அது காணப்படும் உருவமற்றது; காலம், இடம் இவற்றால் அளவுபடுத்தப் பெறாதது. குணங்களும் இல்லை; மலமற்றது; என்றும் அழியாதிருப்பது; ஆன்மாக்களுக்கு அறிவாய் நிற்பது; சலிப்பற்றது; அளவுபடாததால் போக்குவரவாகிய அசைவு இல்லாதது; காட்சிக்கும், கருத்துக்கும் அப்பாற்பட்டது.

***"குணம்இ லான்குணம் குறி இலான்***
***குறைவிலான் கொடிதாம்***
***புலம் இலான் தனக் கென்ன ஓர்***
***பற்றிலான் பொருந்தும்***
***இனம் இலான் மைந்தர் மனைவி இல***
***லான் எவன்? அவன் சஞ்***
***சலம் இலான், முத்தி தரும்பர***
***சிவன் எனத் தகுமே" (தா.பா.ஆசைபெறும், 30)***

என்று தாயுமான அடிகள் 'சிவன் எனத்தகுவோன்' எனக் கூறும் பாடல்களில் பதியின் சொரூப இலக்கணம் அமைந்திருப்பதைக் காணலாம்.

சைவாகமங்கள் அளவை முறையில் எடுத்துக்காட்டும் சிறப்பியல்புகள் எண் குணங்களாகும். அவை : 1. தன்வயம், 2.

தூய உடம்பு, 3. இயற்கை உணர்வு, 4. முற்றுணர்வு, 5. இயல்பாகவே பாசநீக்கம், 6. முடிவில் ஆற்றல், 7. பேரருள் உடைமை, 8. வரம்பிலின்பம் உடைமை இவையே வடமொழியில் சுதந்திரம், விசுத்ததேகம், அனாதி போதம், சர்வஞ்ஞன், நிராமயம், அனந்த சத்தி, அலுத்த சக்தி, திருப்தி என்று வழங்கப் பெறும். இந்தச் சிறப்பியல்புகள் சொல்லப்படும் இடத்தில் சிவம், 'பரசிவம்' என்று வழங்கப்பெறும், தாயுமான அடிகளின் 'பரசிவ வணக்கம்' முதற் பாடலில் 'சிவத்தின் சொரூப இயல்பு' பற்றி எடுத்துரைத்துள்ளார்.

***"அங்கிங்கெனாதபடி" (முதற் பாடல்)***

எ.காட்டு திருக்குறள் 9-ல் "எண்குணத்தான்" என்பதற்கு இவற்றையே காட்டுவார் பரிமேலழகர்.

***"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்***
***தாளை வணங்கத் தலை" (அறத்துப்பால்-1, குறள். 9)***

## பதியின் தடத்த இலக்கணம்

இது குணம் குறிகளோடு கூடிய நிலை, தன்னையே நோக்கி நிற்கும் 'பரசிவம்' அந்நிலையினின்றும் நீங்கி உலகத்தை நோக்குங்கால் தனது சிறப்பியல்புகளில் ஒன்றாகிய பெருங்கருணை காரணமாக உயிர்களின் பொருட்டுத்தானே தனது விருப்பதால் தனது ஆற்றலை (சக்தியை)க் கொண்டு பல்வேறு நிலைகளை உடையதாக இருக்கும். இந்த நிலைகளே பதியின் தடத்த நிலைகள் யாவும் அதன் சக்தியினால் ஆவனவாகும். ஆனால் சொரூப நிலையில் பதி சிவம் என்றும், தடத்த நிலையில் 'சக்தி' என்றும் பேசப்படும் சொரூப நிலையில் சக்தி செயற்படாது அடங்கியிருத்தலால் பதி 'சிவம்' என்று ஒன்றாக இருக்கும். சக்தி செயற்படும் தடத்த நிலையில் சிவம் அதனோடு அச் செயலையெல்லாம் உடன் இயைந்து இயற்றி நிற்றலால் சிவமும் சக்தியும் இரண்டாய் அம்மை-அப்பனாய், மாதொருபாகனாய்-இரண்டாய்த் தோற்றம் அளிக்கும். இந்நிலையை ஆளுடைய பிள்ளையார்,

***"ஓர் உரு ஆயினை; மானாங்காரத்து***
***ஈர் இயல்பாய். . . . . . . ."***
***(சம்பந்தர் தேவாரம் 1- 128, அடி1-2)***

என்று தமது திருவெழுகூற்றிருக்கையில் அருளிச் செய்துள்ளார். தடத்த நிலையில் பதி சக்தியினால் பல நிலைகளை உடையது. இந்த நிலையில் அதற்கு உருவம் உண்டு; தொழில் உண்டு; அவற்றிற்கு ஏற்பப் பலப்பல பெயர்களும் உண்டு. ஆயினும் இவையனைத்தும், இறைவனின் அருள் காரணமாக உண்மையாற் கொண்டனவேயாகும். சொரூப இலக்கணம் எப்படி உண்மையோ அப்படியே தடத்த இலக்கணமும் உண்மை ஆகும்.

தடத்த நிலையில் சிலவற்றை இங்கே விளக்குதல் பொருத்தம் உடையதாக இருக்கும். சொரூப நிலையில் பதி 'பரசிவம்' என நிற்குங்கால் அதன் சக்தி 'பராசக்தி' என வழங்கப் பெறும். அஃது

உயிர்களின் அறிவை விளக்கி நிற்கும் அறிவு வடிவமானது. அந்த அறிவே சக்தியின் சொரூபம் பாரதியாரின் சக்திவழிபாடெல்லாம் இந்தச் சக்தியை நோக்கியே ஆகும்.

பதி உலகத்தை நோக்குங்கால் மேற்குறிப்பிட்ட பராசக்தியில் ஒரு சிறுகூறு உலகத்தைத் தொழில்பட முற்படும்; அதனை 'ஆதி சக்தி' என வழங்குவர். இது சிவம் தோன்றாது உலகமே தோன்றுமாறு பிறப்பு இறப்புகளில் செலுத்தி நிற்றலால் 'திரோதானசக்தி' என்ற திருப்பெயரையும் உடையது. திரோதானம் மறைப்பது இந்தச் சக்தியையே பாரதியார்,

***"பரிதியென்னும், பொருளிடைமேய்ந்தனை;***
***பரவும் வெய்ய கதிரெனக் காய்ந்தனை;***
***கரிய மேகத் திரளெனச் செல்லுவை,***
***காலுமின்னென வந்துயிர் கொல்லுவை" (மேலது)***
***". . . . . . . . . . . . . . . .***
***விரியும் நீள்கடலென்ன நிறைந்தனை***
***வெல்க காளியென தம்மை வெல்கவே"***
***(மகாசக்தி வாழ்த்து, 3)***

என்ற பாடலில் விளக்குவார்.

## சக்தி வகைகள்

திரோதான சக்தி உலகத்தைத் தொழிற்படுத்த வேண்டும் என இச்சித்தலால் அது இச்சாசக்தி எனப்பெயர் பெறுகின்றது. அதற்குரிய வழிகளை அறிதலால் 'ஞானசக்தி' என்ற திருநாமத்தையும் ஏற்கின்றது. அவ்வழியே தொழிற்படுத்த நிற்றலால் கிரியாசக்தி என்ற திருப்பெயரையும் கொள்கிறது. எனவே, பராசக்தி, ஆதி சக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்று இவை 'பஞ்ச சக்திகள்' ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இச்சா சக்தி எப்பொழுதும் செயற்பாட்டுக்குத் துணையாய் நிற்கும். மற்றைய இரண்டும், ஒவ்வொன்றும் தனித்தனியாகவும், இணைந்தும், ஏறியும் குறைந்தும் செயற்படும். இதனால் தடத்த நிலைகள் பெரும்பான்மையாக ஐந்து வகைப்பட்டு நிற்கும். ஞான சக்தி மாத்திரம் தொழிற்படும் நிலையில் பதி 'சிவம்' என நிற்கும். கிரியாசக்தி மாத்திரம் தொழிற்படும் நிலையில் பதி 'சக்தி' என நிற்கும். இரண்டும் ஒப்பத் தொழிற்படும் நிலையில் பதி 'சதாசிவம்' என நிற்கும். ஞானசக்தி குறைந்து நிற்க; கிரியாசக்தி மிக்குத் தொழிற்படும் நிலையில் பதி 'மகேசுவரன்' என நிற்கும். கிரியாசக்தி குறைந்து நிற்க, ஞானசக்தி மிக்குத் தொழிற்படும் நிலையில் பதி 'வித்தை' என நிற்கும்.

சொரூப நிலையில் இறைவன் தனக்கென்று ஓர் உருவும், தொழிலும், பெயரும் இல்லாதவனாயினும் தடத்த நிலையில் உயிர்களின் பொருட்டுப் பலப்பல உருவும், தொழிலும், பெயரும் உடையவன் ஆகின்றான் என்பதை அறிய முடிகிறது. இதனை அனுபூதி நிலையில் தெளிந்த மாணிக்கவாசகர்,

***"ஒரு நாமம் ஓருவரும் ஒன்றுமில்லார்க் காயிரம்***
***திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ?"***
***(திருவாசகம், திருத்தெள்ளேணம்-1)***

என்று அருளிச் செய்ததை ஈண்டு நினைத்தல் தகும். இவை தடத்த நிலையே அன்றிக் கற்பனை அன்று என்பது தெளிவாகிறது.

## உருவ வகைகள்

இறைவனுடைய திருமேனிகளை மூன்று வகையாகப் பிரித்துப் பேசும் சைவ சித்தாந்தம். இறைவன் தன் பொருட்டு யாதொரு வடிவத்தையும் வேண்டாதவன். ஆருயிர்களின் பயன் கருதியே இந்த மூவகை வடிவங்களையும் மேற்கொள்கிறான். 1. அருவம், 2. உருவம், 3. அருவுருவம். 1. அருவம் - சொரூப இலக்கணம், 2. உருவம் - தடத்த இலக்கணம், 3. அருவுருவம் - இறைவன் அருளிச் சதாசிவனாய் நின்று செய்யும் பொழுது அவனது சக்தி மனோன்மணியாய் நிற்கும் சிவலிங்கத் திருமேனியாகும்.

## உருவத்திருமேனிகள்

மூன்று வகைப்படும். 1. போகவடிவம், 2. யோகவடிவம், 3. வேகவடிவம். உலக இன்பத்தைத் தருதற்பொருட்டு மணக்கோலம் கொள்ளுதல், யோகவடிவம் ஞானத்தைத் தருதற் பொருட்டுக் குருமூர்த்தியாய் எழுந்தருளியிருத்தல் போன்றவை. வேகவடிவம் உலகத்தார்க்கு உண்டாகும் துன்பத்தைப் போக்கப் போர்க் கோலம் கொள்ளுதல் போன்றவை ஆகும். மணிவாசகப் பெருமான் 'கோகழியாண்ட குருமணி' (திருவாசகம் சிவ.பு.அடி-3) என்று பேசுவார். நவந்தருபேதம் - சிவம், சக்தி, நாதம், விந்து என்ற நான்கும் அருவத்திருமேனிகள். மகேசுவரன், உருத்திரன், திருமால், அயன் என்ற நான்கும் உருவத் திருமேனிகள். இடையிலுள்ள சதாசிவன் அருவுருவத் திருமேனி.

## முடிவுரை

சாத்திர நூல்களின் சாரத்தைப் பிழிந்து, நாம் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் நூலாசிரியர் எழுதி உள்ளார். மேலும் இதனை ஓர் ஆய்வு நூலாகவே வடிவாக்கம் செய்துள்ளார். நாம் எதற்காக இந்த உலகில் பிறந்தோம்? நம் பிறவி என்னும் பிணி வராமல் இருக்க செம்பொருளாக உள்ள சிவனிடத்தில் பக்தி செலுத்துவதே நாம் செய்யும் கடமை என்பதை அடியவர்கள், அருளாளர்களின் இலக்கியங்கள் வாயிலாக எடுத்துக் காட்டி நம்மை அருள் உலகிற்கு அழைத்துச் செல்கிறார்.

***"பல்கலை ஆகமவேதம் யாவையினும் கருத்துப்***
***பதிபசு பாசம் தெளிதல் பதி பரமே"***
***(சிவப்பிரகாசம் - 13)***

# 22. ந.சுப்புரெட்டியாரின் படைப்பியல் நோக்கில் பாஞ்சாலி சபதம்

**ஜோ. ஜார்ஜ்**
*ஆய்வியல் நிறைஞர் (பகுதிநேரம்), தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது மக்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியம் ஒன்று தந்து தாய்மொழிக்குப் புத்துயிர் தர விழைந்து பாரதியின் உணர்ச்சிக் காவியம் தான் பாஞ்சாலி சபதம். ஓரிரண்டு வருடத்து நூற்பழக்கம் உள்ள தமிழ் மக்கள் எல்லாருக்கும் பொருள் நன்கு விளங்க வேண்டும். அதே நேரத்தில் காவியத்துக்குள்ள நயங்கள் குறையக் கூடாது. இந்த வேட்கையுடன் ஆதர்சமாக அன்று, வழிகாட்டியாக இந்தக் காவியத்தை இயற்றியுள்ளதாகப் பாரதி சொல்கிறார்.

பாஞ்சாலி சபதம் வியாசர் எழுதிய மகாபாரதத்தை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது. திருதராட்டிரன் உயர்ந்த குணங்கள் உள்ளவன். சூதில் விருப்பமில்லாதவன். துரியோதனனிடத்தில் வெறுப்புள்ளவன் என்றெல்லாம் பாரதி சித்திரிப்பது வியாச பாரதத்தின் அடிப்படையிலேயே. பருந்துப் பார்வையில் பாஞ்சாலி சபதத்தின் பின்புலமான வியாசபாரதத்தை அடிப்படையாகக் கொண்டு ந.சு. அவர்கள் படைத்த காவிய நோக்கினை இக்கட்டுரையின் வாயிலாகக் காண முற்படுவது தேவையாகின்றது.

## காவியத் தலைவி திரௌபதி

சிலப்பதிகாரத்திற்குக் கண்ணகி காவியத் தலைவியாக அமைவது போல், திரௌபதி இச்சிறு காவியமாகிய பாஞ்சாலி சபதத்திற்குக் காவியத் தலைவியாக அமைகின்றாள்.

‘உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்’ என்ற உண்மை சிலம்பில் அமைந்து கிடப்பதை நாம் அறிவோம். இக்காவியத்திலோ அல்லது பாரதத்திலோ திரௌபதிக்குக் கோயில் எடுத்த செய்தியைக் கவிஞர்கள் குறிப்பிடாவிடினும் நாமெங்கும் பலவிடங்களில் ‘திரௌபதி அம்மன் கோயில்’ என்றிருப்பதைக் காண்கிறோம். சில இடங்களில் ‘தீ மிதித்தல்’ என்ற விழாவும் இத்திருக் கோயில்களில் நடைபெற்று வருவதையும் காணமுடிவதாகப் பேரா.ந.சு. விளக்கியுள்ளார்.

***"படிமிசை இசையுறவே - நடை***
***பயின்றிடும் தெய்வீக மலர்க்கொடி"***
***(பா. சபதம், 52: 243)***

என்ற தொடர் நாடு முழுவதும் இப்பெருமாட்டிக்குக் கோயில் அமைந்துள்ள செய்தியைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

பஞ்சமியின் ஆசிரியர் டாக்டர் சி.ஆர். ரெட்டியவர்கட்குத் தெலுங்கு மகாபாரதத்தில் தனி ஈடுபாடு உண்டு. பஞ்சமி என்ற தம்முடைய ஐந்து கட்டுரைகள் கொண்ட நூலில் சீதையையும், திரௌபதியையும் அறிவுக் கூர்மையுடன் ஒப்பிட்டு ஆய்ந்துள்ளார்.

பற்றுறுதி, பொறுமை, குடிப்பண்பு, துன்பத்தை அனுபவிக்கும் திறன் போன்ற சீதையின் நற்குணங்களில் தனி ஈடுபாட்டைக் காட்டுகின்றார். ஆனால் திரௌபதி தான் தன்னுடைய துணிவாலும், விரைந்து மாறும் இயல்பாலும் உலகோரின் இதயத்தைக் கவர்ந்துள்ளாள். ஆனால், இக்கால அமெரிக்கப் பெண் தலைவர்களும் இவளுடன் ஒப்பிடும் பொழுது அவர்கள் தம்மை அடிமைகளாகவே உணர்வர். இவளுடைய அறிவுத்திறனும் பாகுபடுத்திப் பார்க்குந் திறனும், பொது அறிவுத் திறனும், கூரிய அரசியலறிவும், துணிவும் உயர் பண்பும், தனிப்பட்ட சொந்தக் கவர்ச்சியும் இவளுடைய சுதந்திர உணர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தன என்பதை பேரா. ந.சு. அவர்கள் கோடிட்டுக் காட்டுகிறார்.

வாதம் புரிவதிலும், நீதிகளை எடுத்துக் காட்டுவதிலும் அவையில் துணிவாகப் பேசுவதிலும் இவளையொத்த பாத்திரம் கண்ணகியைத் தவிர, தமிழ்க் காவியங்களில் வேறொருவரைக் காண்டல் அரிது. துரியோதனன் ஆணையினால் முதலில் இவளை அழைத்துச் செல்ல வந்த தேர்ப்பாகன் சபையில் நிகழ்ந்ததைச் சொல்லி அழைக்கும் போது இவள் கூறுவாள்.

***" . . . . யார் சொன்ன வார்த்தையடா***
***யார் பணியால் என்னை அழைக்கின்றாய்?"***

என்று துணிவோடு பேசுவதைப் பேரா. ந.சு. விளக்கியுள்ளார்.

## பிற கதை மாந்தர்கள்

கதையில் வரும் நிகழ்ச்சிகளின் உயர்வு காவிய மாந்தர்களும் தகுதியால் சிறப்படையக் கூடியதாக அமையும்.

## திருதராட்டிரன்

வில்லி திருதராட்டிரனை ஓர் அயோக்கியனவாகவே காட்டுகின்றார் என்று சொல்ல வேண்டும். 'விரகினுக்கோர் வீடு போல்வான்' என்பது வில்லி காட்டிடும் திருதராட்டிரனைப் பற்றிய சொல்லோவியம். ஆனால் பாரதியார் காட்டும் திருதராட்டினோ ஓர் உத்தமன்.

***"வெற்றி வேற்கைப் பரதர்தங் கோமான்***
***மேன்மை கொண்ட விழியகத் துள்ளோன்"***

என்பது பேரா. ந.சு. அவர்கள் புறக்கண் செயற்படாவினும் சிந்தித்து உணரும் அகக்கண் இவனுக்கு உண்டென்பது கவிஞரின் மதிப்பீடு. மற்றொரு கண் விதுரனின் அறிவு, விதுரரைக் கலந்து நன்கு சிந்தித்துதான் செயற்படுவான் என்று கவிஞர் நமக்கு இவனை அறிமுகப்படுத்துகிறார். தன் தம்பி மக்கள் மீது கொண்ட அன்பையும், பரிவையும் கூட 'தம் உயிராகக்' கொண்ட பெருமையினையும் பேரா. ந.சு. அவர்கள் சிறப்பித்துக் காட்டியுள்ளார்.

## தருமன்

இவன் பாண்டவர் ஐவர்களில் மூத்தவன். வில்லிபாரதத்தில் இவன் 'ஞானக் கஞ்சுகன்' என்று போற்றப் பெறுவன். பாரதியார் இவனை,

***"நூல்வ கைபல தேர்ந்து தெளிந்தோன்***
***செய்ய றிந்தவர் தம்மு ளுயர்ந்தோன்"***

என்றும்,

***"தாமரைக் கண்ணன் யுதிட்டிரன்"***

என்றும் புண்ணியம் மிக்க தருமன் என்றும் காட்டுவார்.

***"குன்றிலே ஏற்றி வைத்த விளக்கைப் போலக்***
***குவலயத்திற் கறம் காட்டத் தோன்றினாய்!" (பா. ச.)***

சகுனி கூட இவனை 'அறத்தோன்றல்' என்று விளிக்கின்றான்.

வில்லிபாரதம் 'நச்சுப் பொய்கைச் சருக்கத்தில் யமனே இவனது அற உணர்வைச் சோதித்து உலகிற்கு உணர்த்துகின்றார். 'அறத்திற்கோர் உருவம் போல்வான்' தனக்குக் கேடு இழைப்பதைப் பற்றிக் கவலை கொள்ளாதவன் உலக நியதியும், நாட்டு நீதியும் நான்மறை உண்மையும், சீரழிவதற்குக் கவலை கொள்கிறான். நல்லரசையும் அதனை ஆள்வோரையும் அழிப்பதால் நாட்டிற்கேற்படும் நலிவுகளைக் காட்டும் தருமன் பேச்சில் நல்லாட்சி கொண்ட பாரதம் பிறர்க் கடிமையுற்று (ஆங்கிலேயருக்கு) அடைந்த அல்லல்களை மறைமுகமாகக் கவிஞர் புலனாக்குவதைக் காணலாம்.

எவ்வளவு அறவுணர்வு மிக்கோனாயினும் தவறான வழியில் இறங்கி விட்டால் தடம் மாறாமல் போக வேண்டியதுதான் என்பதற்குத் தருமன் ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றான். குடிவெறியும் காம வெறியும் மேலும் மேலும் அப்பாதையை விட்டு விலக முடியாமல் செய்வது போலவே சூதுப் பழக்கமும் அந்நெறியிலே கொண்டு செலுத்தும்.

***"இழந் தொறூஉங் காதலிக்கும் சூது"***

என்பார் வள்ளுவப் பெருந்தகை.

***"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்***
***தகுதியான் வென்று விடல்" (குறள். 158)***

என்று வள்ளுவர் கூறும் வாய்மொழிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவன் என்பதற்கு எள்ளளவும் ஐயம் இல்லை.

## விதுரன்

இவன் திருதராட்டிரன் அமைச்சரவையில் இருந்த நல்லவர்களுள் ஒருவன். கண்ணிலானின் கடைசித் தம்பி. இவனை வில்லி 'வென்றிறல் விதுரன்' என்று கூறுவார். பாரதியார் இவனை, 'மெய்ந்நெறி யுணர் விதுரன்' என்று காட்டுவதாகப் பேரா. ந.சு. குறிப்பிடுகின்றார்.

பாண்டவர்களைப் பாஞ்சாலியுடன் மறு விருந்திற்கழைத்து வர தூதாகச் சென்றவன். சென்றவன்,

***"போச்சுது! போச்சுது! பாரத நாடு!***
***போச்சுது நல்லறம்! போச்சுது வேதம்!***
***ஆச்சரியங் கொடுங் கோலங்கள் காண்போம்***
***ஐய இதனைத் தடுத்தல் அரிதோ?"***

என்று பெருந்துயர் கொள்வதைக் காண்கின்றோம். இக்கூற்றில் 'மெய்ந்நெறியுணர் விதுரன்' நமக்குக் காட்சி தருகின்றான்.

***"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்***
***மேற்சென்று இடித்தற் பொருட்டு" (குறள்.784)***

என்று சுறுவது உறவுடையோர் இடித்துக் கூறி அன்பு காட்டுவதற்கும் பொருந்தும். பேரா. ந.சு. அவர்கள் விதுரன் பாண்டவர்களின் வளமும் செழிப்பும் மிக்க காடும், கழனியும் அழியப் போவதை எண்ணி வருந்துவதை எளிதில் படம்பிடித்துக் காட்டியுள்ளார். இது ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு பாரதநாடு அழிந்து கொண்டிருக்கும் இழி நிலையைக் கண்டு வெகுண்டு எழுந்த பாரதியின் விடுதலை வேட்கையுணர்வை நம் மனதின் கண்முன் நின்று காட்டுவது புலனாகிறது.

## அருச்சுனன்

'வில்லுக்கு விசயன்' என்று புகழ் பெற்ற இவன் தான் தன்னுடைய விற்றொழில் திறனால் மச்சக் குறியை வீழ்த்தி திரௌபதியைக் கைப்பிடித்தவன்.

***"சிங்க மறவர் தமக்குள்ளே - வில்லுத்***
***தேர்ச்சி யிலேறிக ஏற்றவன் - எண்ணில்***
***இங்குப் புவித்தலம் ஏழையும் - விலை***
***யீடெனக் கொள்ளத் தகாதவன்"***

'கண்ணனுக்கு ஆருயிர்த் தோழனாம்' என்ற தொடரால் இவர்கள் நர, நாராயணர்களாகத் தோன்றிச் சீடனும் ஆசாரியனுமாக நின்று இவ்வுலகிற்கு வைணவர்களின் மூலமந்திரமாகிய 'திருமந்திரம்' தந்த வரலாற்றையும், பாரதப் போர் தொடங்குவதற்கு முன்னர்க் கண்ணன் சாரதியாக அருச்சுனனின் தேர்த்தட்டிலிருந்து கொண்டு கீதை உரைத்த வரலாற்றையும் குறிப்பாக நமக்கு அறிய வைக்கின்றார் கவிஞர்,

***"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்***
***. . . . . . . . . . . . . . . . . . . . . .***
***தனு உண்டு காண்டிவம் அதன் பேர்"***

என்ற நெருக்கடி நிலையிலும் மனஅமைதி குலையாதிருக்கும் விசயனைப் பேரா. ந.சு. விளக்குகின்றார்.

## சகுனி

"சூதும் பொய்யும் உருவெனக் கொண்ட துட்ட மாமன்" என்று இவனை அறிமுகம் செய்து வைக்கின்றார். இன்னும் 'ஈன மாமன்', 'திருகு நெஞ்சச் சகுனி', 'தீய சகுனி', 'கள்ளச் சகுனி' என்றும் சுட்டி உரைக்கின்றார்.

பேரா. ந.சு. அவர்கள் சகுனியைப் பலவாறு பேச்சில் சதுரனென்றும், வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல் தன் கருத்தைப் பிறர் மனம் நோகாதபடி அவரிடம் உரைக்க வல்லவன் என்றும் காட்டுகின்றார். இந்த உலகில் மந்திரவாதிகளும், தந்திரவாதிகளும், வல்லவர்களாக இருப்பர். சகுனி ஒரு தந்திரவாதி, பேச்சில் திறமை மிக்கவன் என்றும் பேரா.ந.சு.அவர்கள் உவமித்துக் காட்டுகிறார்.

***'பேசவும் தோன்று இல்லை - உயிர் மாமனே!***
***பேரின்பம் கூட்டி விட்டாய்!"***

என்று துரியோதனன் மகிழத் தக்க வகையில் சகுனி பாரதப் போருக்கு வித்திடுகின்றதை விளக்குகிறார்.

## தெய்வீகக் கூறுகள்

தெய்வீக சம்பந்தமான செயல்கள் கலந்து வருவது பெருங்காப்பியங்களின் ஒரு முக்கியக் கூறாக அமைந்திருப்பதைக் காணலாம். சிலம்பு முதல் பாஞ்சாலி சபதம் ஈறாகவுள்ள எல்லாக் காப்பியக் கவிஞர்களும் இந்தக் கூற்றினைக் கலக்காமல் காவியத்தை இயற்றவில்லை. மேனாட்டுக் காப்பியங்களில் கூட பெரும்பாலானவற்றில் இந்தத் தெய்வீகக் கூறுகள் கலந்தே (Supernatural elements) உள்ளன.

இராமாயணத்தில் காவிய நாயகன் இராமனே திருமாலின் அவதாரமாகவும், சீதாப்பிராட்டி பூமிப் பிராட்டியின் அவதாரமாகவும் கருதப் பெறுகின்றனர். சீவக சிந்தாமணியிலும் இந்தத் தெய்வீகக் கூறுகள் காணப் பெறுகின்றன. காந்தர்வ தத்தையார் இலம்பகத்தில் மக்களுடன் விஞ்சையர் தொடர்பு ஏற்படுகின்றது. பெரியபுராணத்திலும், திருவிளையாடற் புராணத்திலும் இறைவன் சம்பந்தப் படாத நிகழ்ச்சிகள் இல்லை.

பாஞ்சாலி சபதத்தில் கண்ணன் இத்தெய்வீகச் சக்தியாகக் காட்சி அளிக்கின்றான். 'கோவிந்த' நாமத்தின் மகிமையால் திரௌபதியின் துகில் முடிவின்றி வளர்வது அற்புதமாகக் காட்டப் பெறுகின்றது. பாரதிக்குப் பாஞ்சாலியே ஒரு தெய்வக் கூறாகத் தென்படுகின்றாள்.

## காவியம் உணர்த்தும் உண்மை

வாழ்க்கையிலும் மனிதப் பண்பிலும் உள்ள பொதுத் தன்மையை எடுத்துக் கூறுவதே கவிதையின் நோக்கமாகும். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற உயர்ந்த குறிக்கோள் கவிதைத் துறையில் எளிதாக நிறைவேறி விடுகின்றது. கவிஞரின் மனத்தில் தோன்றிய அனுபவமே கவிதையாக முடிகின்றது. வடிவம் கொள்ளுகின்றது. கவிதையைப் படிக்கும் நாமும் அக்கவிஞன் பெற்ற அனுபவத்தைப் பெற முடிகின்றது.

வேற்றுச் சமயத்தைச் சார்ந்த வேற்று நாட்டினராகிய ஜி.யு.போப் இதன் பக்திச் சுவையில் ஈடுபட்டு இதனையொத்த பக்தி நூல் யாண்டும் இல்லையென்று கூறினார்.

***"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்***
***தீயுழி யுய்த்து விடும்"*** ***(குறள். 165)***

சிலம்பில் 'விதி' வெல்வதைக் காண்பதைப் போல் பாஞ்சாலி சபதத்திலும் 'விதி' வெல்வதைக் காண முடிகின்றது. பாஞ்சாலிக்கு கண்ணனின் துணை இருந்ததால் இவளால் தப்பித்துக் கொள்ள முடிகின்றது. இந்தப் பெண் பாவம் தான் 'பாரதப் போருக்கு வித்திட்டது, கௌரவர்களும் பூண்டோடு அழிந்து பட்டனர். இங்ஙனம் காவியம் உணர்த்தும் உண்மைகள் பலவாகும். 'பெண் பாவம் பொல்லாதது' என்பதையும் அறிய முடிகின்றது.

## முடிவுரை

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை கவிதையின் சிறப்புக்கு ஓசை, சொல்லடுக்கு முதலியவை இன்றியமையாதவையாக இருப்பினும் கவிதையின் பொருளமைப்பே முக்கியமாகக் கொள்ளப் பெறுகின்றது. தமிழர்கள் இன்பம் என்ற சொல்லுக்குக் கண்ட பொருள் சற்று ஆழமுடையது. தொல்காப்பியரும்,

***'இழுமென் மொழியால் விழுமியது நுவலல்'***

என்று கூறிப் போனார். தமிழ்க் கவிதைகள் பெரும்பாலும் அறங்கூறும் இயல்பும் கவிதை இயல்பும் கொண்டே திகழ்கின்றன.

பேரா. ந. சுப்புரெட்டியார் அவர்களின் பார்வையில் 'பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு' என்ற நூலின் வழியாகப் பாஞ்சாலி சபதத்தை எளியோரும் புரிந்து அறிந்து கொள்ளும் வகையில் நமக்கு இந்நூலை அளித்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

# 23. ந.சுப்புரெட்டியாரின் “தமிழ் பயிற்றும் முறையில்” இலக்கணம் பெறுமிடம்

**முனைவர் வெ.அ. நாகரத்தினம்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*அரசு கலைக் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 018.*

கற்பித்தல் என்பது காலங்காலமாகத் தொடர்ந்து இயங்கிவரும் செயல்முறைகளில் ஒன்று. குருகுலம், திண்ணை போன்றவற்றிலிருந்து இன்றுவரை அதன் படிவளர்ச்சி நிலைகளை நாம் கண்டுகொண்டு இருக்கிறோம். கல்வி என்பது உளவியல் நோக்கும் சமுதாயச் சிந்தனையும் கொண்ட தொலைநோக்குச் சிந்தனை உடையதாக விளங்கிக் கொண்டு வருகிறது. இதற்குக் கற்றறிந்த நற்சான்றோர்களின் உயர் மனப்பான்மையே காரணமாகும். கற்பித்தல் என்பது ஏதோ ஆசிரியர் தனக்குத் தெரிந்ததைச் சொல்லித் தருவது என்பதன்று. மாணவர்களின் மனப்போக்கையும் அவர்களின் பட்டறிவையும் தெரிந்துகொண்டு, அதன் மூலம் தாய் மொழியான நம் தமிழ் மொழியை எப்படி வளர்ப்பது என்பதுந்தான். கற்கும் மாணவர்கள் படிக்கமுடியாமல் போனால் அதற்கு ஆசிரியர்தாம் காரணம் என்பதால் ஆசிரியர்கள் கற்றுத்தரும் பாடத்தை முழுமனதுடன் மாணவர்களின் நன்மை கருதித் திறமையுடன் செயல்பட வேண்டும். தாய்மொழிப் பாடம் நடத்துபவர்கள் பொறுப்புடையவர்களாக விளங்க வேண்டும். தாய்மொழியின் மூலமே ஒரு மாணவன் நல்ல குடிமகனாக உருவாகமுடியும். அதனால் மொழிப்பாடம் கற்பிப்பவர்கள் தாய்மொழியாகிய நம் தமிழ் மொழியில் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்களாக இருப்பது அவசியம். இதனை நன்குணர்ந்து சொல்லித் தருபவர்கள் எத்தனையோ பேர் இருப்பர். ‘தமிழ் பயிற்றுவித்தல்’ என்ற கருத்தை மையமாகக் கொண்டுள்ள ந.சுப்புரெட்டியாரின் நூல்முழுக்க ஆசிரியர் எவ்வாறு கற்பித்தல் வேண்டும் என்பதுதான். இன்றைய நாளில் ஊடகங்களில் ஆசிரியர்கள் மாணாக்கர்களிடம் நடந்துகொள்வதையும் கற்பித்துத் தருவதையும் குறித்துக் கருத்து முரண்பாடுகள் வந்தவண்ணம் இருப்பது நாடு அறிந்த ஒன்று. குற்றங்களைக் களைந்து நன்மை தரக்கூடியவற்றை மட்டுமே எடுத்துக் கொண்டு நன்கு கற்பித்தலை மேற்கொண்டாலே பல சிக்கல்களைத் தவிர்க்கலாம் என்ற கருத்தை அடிக் கருத்தாகக் கொண்டுள்ள அவரின் சிந்தனைகள் இன்றைய ஆசிரியர்களுக்கு மீட்டுருவாக்கமாக இருப்பினும் வளரும் சமுதாயத்திற்குத் தேவையானதாக உள்ளது.

“நீண்ட நாளாகவே நவீன முறையில் தமிழ்க் கற்பிப்பதைப் பற்றி ஒரு நூலை எழுதி வெளியிட எண்ணியிருந்தேன். ஒன்பது ஆண்டுகள் உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியனாக இருந்தபொழுது நேரில் கவனித்த பல்வேறு அனுபவங்களைக் கொண்டும், எட்டு ஆண்டுகள் பி.டி. மாணாக்கர்கட்குத் தமிழ்க் கற்பிப்பதைப் பற்றிப் போதித்துவந்த அநுபவத்தைக் கொண்டும் இந்நூல் எழுதப்பெற்றுள்ளது.” என்று அவர் தமது நூல் முன்னுரையில் குறிப்பிடுகிறார். (தமிழ் பயிற்றும் முறை ப: xvi). கற்பித்தலைப் பற்றிய அவரது சிந்தனைகள் மொழிமேல் அதுவும் தாய்மொழி மேல் எழுந்த பற்றால் வந்ததாகும். தாய்மொழிக்கு இணையாக எதுவும் ஈடில்லை என்ற உண்மையை உணர்ந்துகொண்டால் தாய்மொழிமேல் ஈடுபாடு வரும். அதுவே மொழிவளர்ச்சிக்கு, வளத்திற்கு இழுத்துச் செல்லும். அத்தகைய திறத்தினை ந.சுப்புரெட்டியார் கொண்டிருந்தார் என்பது கருத்து. தமிழ் மொழியின் ஆழ அகலங்களைத் தெள்ளிதின் உணர்ந்ததுடன் மாணவர்கட்கும் உணர்த்தவேண்டும் என்ற நோக்கில் தாய்மொழியில் பயிற்றுவித்தலின் அவசியத்தையும் நோக்கத்தையும் குறித்து 17 இயல்களில் விரிவாகவும் விளக்கமாகவும் தாம் கொண்ட பட்டறிவு, பகுத்தறிவு, பல்துறைகளில் அவர் கொண்ட ஈடுபாடு ஆகியவற்றின் மூலம் நுண்ணறிவுடன் எழுதியுள்ளார். பயிற்றுவித்தலின் நோக்கத்தை மட்டுமல்லாமல் அதை எப்படிக் கற்றுத்தருவது என்பதைத் தெளிவாக விளக்கமாகச் சொல்கிறார். அதற்கு ஜார்ஜ் சாம்சன் என்பவரின் கருத்தினைக் கோடிட்டுக் காட்டுவது கற்பித்துத் தருகின்றவர்களுக்கு இன்றியமையாததாக உள்ளது. அதனைப் பின்வருமாறு கூறுகிறார். (1) எளிய முறையில் ஒரு பொருளைக் குறித்துத் தெளிவாகப் பேசவும், (2) தெளிவான முறையில் ஒருவர் ஒரு பொருளைப் பற்றிக் கேட்கவும் கேட்டுப் பொருள் உணரவும், (3) ஒரு பொருளைத் தெளிவான முறையில் படிக்கவும் படித்துப் பொருளுணரவும், (4) ஒரு பொருளைப் பற்றித் தெளிவான எளிய முறையில் எழுதவுமான ஆற்றல்களை உண்டு பண்ணுவதாகும். பிறருக்குக் கற்பிக்கும் ஆசிரியரிடம் இப்பண்புகள் அமையவேண்டும் (மேலது:ப:3). இத்தகைய கருத்து எப்பாடம் நடத்துவதற்கும் அடிப்படையானதாகும். இலக்கியத்திற்கு மட்டுமல்லாமல் இலக்கணம் நடத்துவதற்கு மேற்கண்ட கருத்துத் தேவையானதாக உள்ளது என்பது விளங்கும். அவ்வகையில் இலக்கணம் பயிற்றுவித்தல் குறித்து அவர் குறிப்பிடுவதை இக்கட்டுரை ஆராய்கிறது.

இலக்கணத்தைக் கற்றுத்தரும் ஆசிரியர்கள் அகத்தியம், தொல்காப்பியம், அவிநயம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், நன்னூல், முத்துவீரியம் போன்ற இலக்கண நூல்களைப் பற்றி ஓரளவாவது அறிந்திருக்கவேண்டும் என்கிறார். அவிநயம் கிடைக்கவில்லை என்பதை நன்னூல் மயிலைநாதருரையால் அறிகிறோம். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கண நூல்களை அறிந்தால்தான் இலக்கியங்களைச்

சுவைக்கமுடியும். அதனால் அவை தொடர்பான நன்னூல், அகப்பொருள் விளக்கம், இறையனார் அகப்பொருளுரை, வெண்பாபாட்டியல், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் போன்ற நூல்களைக் கற்றிருத்தல் நல்லது என்று கூறுகிறார். (மேலது :ப:402)

“டாக்டர் ஸ்வீட் என்ற ஆங்கிலப் பேராசிரியர் இலக்கணம் என்பது மொழியின் பல்வேறு கூறுகளை இயம்பும் பகுதி” என்று கூறி, தமிழ் மொழியைப் பொருத்தவரை இலக்கண அறிவு இருந்தால்தான் இலக்கியத்தின் பல நுட்பமான கருத்துக்களைக் கூர்ந்து உணர்ந்து சுவைக்க முடியும்” (மேலது) பேச்சிலும் எழுத்திலும் நேரிடும் பிழைகளைத் திருத்திக் கொள்வதற்கும், செய்யுள்களைப் பிரித்துப் பொருள் காணவும், சிலேடைப் பொருள்கண்டு மகிழவும், செய்யுள்களில் வரும் இலக்கண அமைதிகள், அரிய சொல்லாட்சிகள் முதலியவற்றை அறியவும் அவற்றில் காணப்பெறும் இறைச்சிப்பொருள், உள்ளுறை உவமம் போன்ற அரிய கருத்துக்களை அறிந்து இலக்கிய இன்பத்தை நுகரவும் இலக்கணம் பயன்படுகிறது. இலக்கணத்தின் உண்மை இயல்புகளைக் கண்டறிவதற்கும் இலக்கண ஆசிரியர்கள் அதனை ஆழ்ந்து பயிலுகின்றனர். இப்படி இலக்கணத்தின் சிறப்பைச் சொல்வதுடன், அதை அறியும் ஆசிரியர்கள் என்ன செய்யவேண்டும் என்ற கேள்வி எழுப்பி அதற்கு விடையாக, அவர்கள் அதில் காணும் விதிகளை அப்பாடத்துடன் மட்டும் கற்பித்துவிடாது மொழிப் பாடத்தோடும் கட்டுரையோடும் பொருத்திக் கற்பித்தால் அவ்விதிகளும் அவற்றின் ஆட்சிகளும் மாணாக்கர்கட்கு நன்றாக விளக்கம் அடைந்து நல்லமுறையிலும் நன்கு பயன்படும் என்கிறார் சுப்புரெட்டியார் (மேலது:ப:403).

இலக்கணம் பயிற்றுவதில் மொழிவல்லுனர்களிடையே எழுந்த கருத்து வேற்றுமைகளை எடுத்துச் சொல்லி முடிவாக, இலக்கணம் மொழியைத் திருத்தமுறப் பேசவும் எழுதவும் துணைபுரியும் சாதனமாதலின் அதை நடைமுறைக்கு வேண்டிய அளவில் ஒரு சில விதிகளை இலக்கியப்பாடத்துடன் சேர்த்து அறிந்தால் போதுமென்றும், இலக்கண விதிகளைத் தனியாகப் படித்து நெட்டுருச் செய்யவேண்டியதில்லையென்றும் ‘தென்காசி வழக்காகத்’ தீர்ப்புக் கூறுவர் என்று கூறி, (மேலது:) இம்முறைதான் இன்று பெரும்பாலான கல்வியறிஞர்களால் சரியான முறையென ஒப்புக்கொள்ளப் பெற்றுள்ளது என்கிறார். பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர்களுக்கு இத்தகைய முறை போதும் என்பதும் ஈண்டு விளங்கும்.

பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர்களை மூன்று வகையாகத் தொடக்கம், நடுநிலை அல்லது இடைநிலை, உயர்நிலை என்று பிரித்து அவர்களுக்குத் தக்க வகையில் இலக்கணப் பாட விதிகளை அமைக்கவேண்டும் என்கிறார் சுப்புரெட்டியார்.

## தொடக்கநிலைப் பள்ளிகளில் இலக்கணம்

தொடக்கநிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இலக்கணம் கற்பிக்கவேண்டிய அவசியமில்லை என்கிறார்.மொழியில்

தேர்ச்சிபெறாத மாணவர்கட்கு மொழியைச் சொல்லித் தருவதால் பயனில்லை. தொடக்கநிலையில் தூய்மையான பேச்சைக் கேட்பதாலும், நல்ல நூல்களைப் படிப்பதாலும் மட்டுமே மொழித் திறமை அடையமுடியும். சொற்றொடர்களின் அமைப்பினாலும் ஓசையினாலும் அவை பிழையா, சரியா என்று அறிய முடியுமேயன்றி, தனியான இலக்கண அறிவால் இளம் மாணாக்கர்கள் மொழியின் நயத்தை அறியமுடியாது. எனவே தொடக்கமுறையில் இலக்கணம் கற்பிப்பதைக் காட்டிலும் அதிகமாகப் படிக்கவும் பிறர் பேசக் கேட்கவும் வாய்ப்புகளை நல்குவதே சிறந்த முறையாகும் என்கிறார்.

## நடுநிலைப்பள்ளி வகுப்புகளில் இலக்கணப்பாடம்

நடுநிலைப் பள்ளிமாணாக்கர்கள் விதிகளின்படி ஓரளவு பேசவும் எழுதவும் தெரிந்திருப்பர். அவர்களுக்கு இலக்கணத்தைத் தனிப்பாடமாகச் சொல்லித் தரலாம் என்கிறார் சுப்புரெட்டியார். படிப்படியாகச் சொல்லின் வகைகள், அவற்றின் பயன்பாடு ஆகியவற்றை இம்மாணவர்கள் அறிந்திருப்பர் என்பதால் அவர்களுக்குக் குற்றியலிகரம், குற்றியலுகரம், முற்றியலுகரம், பெயர்களின் வகைகள், குறிப்பாகத் தொழிற்பெயர்கள், ஆகுபெயர், வினையாலணையும் பெயர், காரணப்பெயர் போன்ற பலவற்றையும் அறியுமாறு செய்யலாம் என்கிறார் ஆசிரியர். மாணவர்களின் பட்டறிவிற்குப் பொருந்தக் கூடிய பல இலக்கணக் குறியீடுகளைச் சொல்லலாம் என்கிறார்.

## உயர்நிலை மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் இலக்கணம்

'நடுநிலைப் பள்ளியில் கற்ற இலக்கணத்தை இன்னும் உறுதியடையச் செய்வதுடன் இப்பகுதிகளை இன்னும் சற்று விரிவாகவும் கற்பர். அத்துடன் அகப்பொருள், புறப்பொருள் பாகுபாடுகளையும் முதல் கரு உரிப்பொருள் பிரிவுகளையும், புறத்திணைப் பற்றியும் சுருக்கமாக மாணாக்கர்கள் இவ்வகுப்புகளில் அறிந்துகொள்வர்' (மேலது:ப:413) இங்கும் கூடிய வரை விதிவருத்தல் முறையிலேயே கற்பித்தல் வேண்டும். எல்லாப் பகுதிகளையும் இம்முறையில் கற்பித்தல் இயலாது. சில பகுதிகளை விதிவருவித்தல் முறையிலும் கற்பிக்க வேண்டும். மேலும் சில எடுத்துக்காட்டுகளை மாணாக்கர்களிடமிருந்து வருவித்துக் கற்பித்தவற்றை வலியுறச் செய்தல் வேண்டும். எந்த முறையைக் கற்பித்தாலும் வினா-விடை முறையைத் தக்கவாறு பயன்படுத்தினால் மாணவர்கள் உற்சாகமாகக் கற்பர் என்று கூறிவிட்டு ஐந்தாம் படிவ மாணவர்களுக்கு நான்காம் வேற்றுமைப் பொருள்களைக் கற்பிப்பதில் விதிவருவித்தல் முறை, விதிவிளக்கமுறைகளை எவ்வாறு கையாளலாம் என்பதைத் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறார். அவர் கூறும் முறையிலிருந்து, கற்பித்தல் என்பது மாணாக்கர்களை எளிதாகச் சென்று அடைவதுதான் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. நான்காம் வேற்றுமைப் பொருள்களை கரும்பலகையில் எழுதி மாணவர்களை

வாய்விட்டுப் படிக்கும்படிச் செய்தல். எ-டு சொற்களைப் படிக்கச் செய்யும்போது, அவற்றின் பொருளை ஆசிரியர் விளக்கிக் காட்டவேண்டும். அவ்வாறு காட்டும் பொழுது, நான்காம் வேற்றுமை உருபு, கொடைபொருளில், பகைப்பொருளில், நட்புப்பொருளில், தகுதிப் பொருளில் காரணகாரியப் பொருளில், பொருட்டுப் பொருளில் (நிமித்த காரணகாரியப் பொருள்), முறைப் பொருள் ஆகியவற்றிற்கு வரும். இதனை மாணாக்கர்களிடமிருந்தே வருவிக்கலாம். இதன்மூலம் நான்காம் வேற்றுமை உருபு 'கு' கொடை, பகை, நட்பு, தகுதி, அது ஆதல், பொருட்டு, முறை முதலியனவாம்' என்ற விதியை மாணாக்கர்களையே உண்டாக்கும்படிச் செய்யலாம். பிறகு ஆசிரியர் நினைவில் வைத்துக் கொள்ளும் இவ்விதியை நூற்பாவாகச் செய்துள்ளனர் என்பதை எடுத்துக் கூறி,

***"நான்கா வதற்குரு பாகுங் குவ்வே***
***கொடை பகை நேர்ச்சி தகவது ஆதல்***
***பொருட்டுமுறை ஆதியின் இதற்கிதெனல் பொருளே"***

என்பதைக் கரும்பலகையில் எழுதிக் காட்டி அதைத் தம் இலக்கணக் குறிப்பேட்டில் குறித்துக்கொள்ளுமாறு செய்யலாம்' என்று (மேலது:ப:414-415) கூறும் அவரின் கற்பித்தல் சிந்தனை மாணவர்களுக்கு நல்ல பலனைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

அடுத்து, தொடர் மொழிகளையும், மரபுச் சொற்களையும் வாக்கியங்களில் அமைத்து அவற்றின் பொருள் உணருமாறு செய்தல் குறித்துப் பேசுகிறார். முதலில் தொடர்மொழி பற்றிச் சொல்லும் போது 'எழுவாயும், பயனிலையும் அமையாத' அதன் தன்மையைக் குறித்துச் சொல்கிறார். 'அழுத வாயும் சிந்திய மூக்கும்', 'கண்ணுங்கருத்துமாய்' என்று ஏராளமான தொடர்மொழிகள் இருப்பதை எடுத்துக் காட்டி அவற்றை வாக்கியங்களில் எவ்வாறு அமைப்பது என்பதை எடுத்துச் சொல்கிறார். எடுத்துக் காட்டாக, 'இராமன் படிப்பதில் கண்ணுங் கருத்துமாயிருக்கிறான்' என்பதிலுள்ள சொற்களைத் தனித்தனியே எடுத்துப் பொருள்கொள்ளாமல், சேர்த்துப்படித்துப் பொருள்கொள்ள வேண்டும். தனித்தனியாகச் சொற்களைப் பிரித்துப் படித்தால் தொடர்மொழி வேறாகவும், வாக்கியம் வேறாகவும் அமையும். தொடர் மொழிக்கு அர்த்தமில்லாமல் போய்விடும் என்பதைத் தெளிவாக்குகிறார். அத்துடன் இத்தொடர்மொழிகள் தொடக்கப் பள்ளியிலிருந்தே பயன்பாட்டிலிருப்பவை. அவற்றை மாணாக்கர்கள் எளிதாகப் புரிந்து கொள்வர் என்பதையும் தெளிவாக்குகிறார்.

மரபுச் சொல்லைக் குறிப்பிடும்போது நன்னூலாரின் நூற்பாவைக் குறிப்பிட்டு அதன் பொருளை விளக்கி, சங்ககாலத்திலிருந்து இன்று வரைக்குமுள்ள மரபுச் சொற்களைச் சுட்டிக்காட்டி, அவற்றின் பயன்பாடு, தமிழ்ச் சொற்களின் தனித்துவம் அவற்றின் விதிமுறை இப்படி தமிழ்மொழியிலுள்ள சொற்களை எடுத்துக்காட்டித் தமிழ்மொழி வளமானது என்பதை உணர்த்துவது கற்பித்தலின் அவசியம் என்பதை

ஆசிரியர்களுக்குப் புரியவைக்கிறார். எடுத்துக்காட்டாக, குட்டி, குஞ்சு, கன்று, பிள்ளை, மந்தி, பெடை, பேடை, மறி, பிடி, பிணை போன்ற இத்தகைய சொற்களை எப்பெயர்களுக்கெல்லாம் தமிழர் பயன்படுத்தியுள்ளனர் என்பதை மாணாக்கர்களுக்குக் கற்பித்துத்தர வேண்டும் என்பதை உணர்த்துகிறார். அப்படிச் சொல்லும்போது பிராணிகள் என்றால், யானை, குதிரை, ஆடு, மான் போன்றவற்றையும், பறவைகளென்றால் கோழி, புறா, காக்கை போன்றவற்றையும் வகைப் படுத்திக் காட்டவேண்டும். அதனால் மாணவர்கள் இதை இப்படித்தான் சொல்லவேண்டும் என்பதில் கவனத்தைச் செலுத்துவர் என்பதை உணர்த்துகிறார்.

இதுபோலவே வழக்குவகைகள், பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், ஒருபொருட் பலசொற்கள் போன்ற பலவற்றையும் பல எடுத்துக்காட்டுகள் தந்தும் அவற்றை கட்டுரையோடு பொருத்தியும் எழுதச்செய்தால் மாணவர்கள் பயனுறுவார்கள். பாடநூல்களைக் கற்பிக்கும்போது மேற்கண்ட சொற்கள் வழங்கும் இடங்களைக் கண்டறிந்து மாணவர்களுக்கு விளக்கியும், பயிற்சியை அளித்தும் தமிழ்மொழியை வளர்க்க வேண்டும். இதற்கு ஆசிரியர்கள் தகுந்த பயிற்சிகளை எடுத்துக்கொண்டு செயல்படவேண்டும் என்கிறார் சுப்புரெட்டியார்.

இவருடைய எண்ணங்கள் எல்லாம் தொன்றுதொட்டு வாழ்ந்து வளர்ந்து வரும் நம் தமிழ்மொழி மேலும்மேலும் வளர்ந்து செல்லவேண்டும். அதற்கு தொடக்கப்பள்ளி மாணாக்கப் பருவத்திலிருந்தே தமிழ் மொழியில் நன்கு பேசுவதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதன் பின்னர் எழுதவும் படிக்கவும் மேற்சொன்னவாறு காட்சிப்படங்கள், கருத்துப்படங்கள், விளையாட்டு ஆகியவற்றின் மூலமாகத் தமிழ் மொழியை வளப்படுத்தி, முறைப்படுத்தி இலக்கண விதிகளை மேற்கொள்ளச் செய்து இலக்கணம் என்பது கடினமானது அன்று என்பதைத் தெளிவுபடுத்தவேண்டும். அதற்கு வினா விடையின் மூலமாக விதிவருவித்தல் முறையைப் பெறும்பாலும் மேற்கொள்ளச் செய்வது சிறந்தது என்பதை நமக்கு உணர்த்தும் அவரின் சிந்தனைகள் வருங்காலத்தில் பிழைகள் இல்லாமல் எழுதுவதற்கும், இலக்கியங்களைச் சுவைப்பதற்கும், பிறமொழியிலிருந்து நம் தமிழ்மொழியை வேறுபடுத்திக் காட்டுவதற்கும், மொழியின் வரலாற்றை அறிவதற்கும் இலக்கணம் என்பது இன்றியமையாதது என்பதை கற்பித்தல் மூலமாக நமக்கு எடுத்துச் சொல்கிறார்.

# 24. ந. சுப்புரெட்டியார் செவிமடுத்த கம்பனில் மக்கள் குரல்

**முனைவர் ரா. இராமச்சந்திரன்**
*முதுகலை ஆசிரியர் (பொருளியல்)*
*அரசு மேல்நிலைப்பள்ளி, சிறுமுகைப்புதூர்,*
*கோயம்புத்தூர் மாவட்டம் - 641 302.*

## முன்னுரை

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் தம் அறுபத்தாறாவது அகவையின் நிறைவில் கம்பனில் மக்கள் குரல் என்னும் நூலை எழுதி வெளியிட்டார். இந்நூல் புதுவைக் கம்பன் விழாவில் 18.5.1983-இல் முதல் பதிப்பாக வெளியிடப் பெற்றது. இதற்குச் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் சு.இரத்தினவேல் பாண்டியன் அணிந்துரை நல்கியுள்ளார். பதினோரு கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன. முதலாவது கட்டுரையே கம்பனில் மக்கள் குரல் என்பதாகும்.

## மக்கள் குரல்

***"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே***
***மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"*** **(புறம் -186)**

என்று புறநானூறு வகுத்த கொள்கையின்படி கம்பன் ஒன்பதாம் நூற்றாண்டில் மக்கள் குரலுக்கு மதிப்புக் கொடுத்தான். அக்கால மக்கள் மன்னனை உயிரைப் போல நேசித்தனர். கம்பனிடம் ஏற்பட்ட மாற்றம் காலப்போக்கால் ஏற்பட்டதொன்றாகும்.

***"வயிரவான்பூண்அணிமடங்கல் மொய்ம்பினான்***
***உயிரெலாம் தன்னுயிர்ஒப்பஓம்பலால்***
***செயிரிலா உலகினில் சென்றுநின்றுவாழ்***
***உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்."***
**(கம்ப, அயோத்தியா, மந்தரை-17)**

அரசனை உடலாகவும், மக்களை உயிராகவும் கம்பன் கூறியிருப்பது எண்ணி மகிழத்தக்கது. யாவரும் போற்றிக் கொண்டாடும் காலஞ்சென்ற அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ஆபிரகாம் லிங்கன் 'மக்களால், மக்களுக்காக, மக்களே' ஆளுகின்ற ஆட்சியென்னும் குடியரசுத் தத்துவத்தைப் பற்றிச் சிறப்பாக உரைக்கின்றார். இதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர்க் கம்பன் மக்களே நாட்டின் உயிர்நாடி என்பதைத் தம் காவியத்தின் வழியாகப் பறைசாற்றிவிட்டான். உயிர் இல்லாதவழி உடலுக்கு மதிப்பில்லாதது போலவே மக்கள் இல்லாத நிலையில் அரசனுக்கு எத்துணையும் மதிப்பில்லை என்பதை மக்களாட்சித் தத்துவத்தில் வாழும் நாம் உணர்ந்துகொள்கின்றோம்.

## கோனாட்சிகள்

கம்பன் தமது காவியத்தில் நான்கு அரசுகளைக் காட்டுகின்றார். நான்கு அரசுகளிலும் கோனாட்சியே நிலவுகின்றது. மன்னன் பற்றிய நடவடிக்கைகளை மக்கள் திறனாய்வு செய்யும் கோணத்தை ந.சுப்புரெட்டியார் கம்பன் வழியாகக் காட்டுகின்றார். "கோனாட்சியாக இருந்தாலும், அரசனும் தான் மக்களுக்காகவே இருப்பதாக உணர்வதையும் மக்களும் தமது நிலையை ஓரளவு நன்கு உணர்ந்திருப்பதையும் கம்பன் நமக்கு இலைமறைகாய்கள் போன்று ஆங்காங்குச் சுட்டியுரைக்கின்றான்" என்று ந. சுப்புரெட்டியார் தமது கட்டுரையில் விளக்கியுரைக்கின்றார்.

## அயோத்தியில் மக்கள் குரல்

***"தாயொக்கும் அன்பில்; தவம் ஒக்கும் நலம் பயப்பில்;***
***சேயொக்கும் முன்னின்(று) ஒருசெல்கதியுய்க்கும் நீரால்;***
***நோயொக்கும் என்னில் மருந்துஒக்கும்;நுணங்குகேள்வி;***
***ஆயப்புகுங்கால் அறிவுஒக்கும் எவர்க்கும் அன்னான்"***
**(கம்ப, பாலகாண்டம், அரசியற்படலம்-171)**

என்பதன் மூலம் தயரதன் குடிமக்களிடம் காட்டிய அன்பு தாயன்பினை ஒக்கும். மக்களுக்கு அவன் செய்துவரும் எண்ணற்ற நன்மைகளின் மூலம் தவத்தையொத்துக் காணப்படுகின்றான். மக்களை நல்ல கதியில் செலுத்துவதில் பெற்ற மக்களையொத்துக் காணப்படுகின்றான். மக்களைத் தண்ணளி செய்தலில் மருந்தையும் ஒத்துக் காணப்படுகின்றான். நுட்பமான நூல்களை ஆராய்கின்றபொழுது ஐயங்களை நீக்குகின்ற அறிவினையொத்துக் காணப்படுகின்றான் என்று கம்பன் உரைக்கின்றான்.

முதலீடு இல்லாத ஒரு உழவன் தனக்குரித்தான சிறுநிலத்தை எவ்வாறு மிகக் கருத்துடனும் பொறுப்புணர்வுடனும் பாதுகாத்து வருகின்றானோ, அதைப் போன்று உலகம் முழுதையும் தயரதன் காத்துவருவதாகக் கம்பன் கூறுகின்றான்.

***"..... கற்றவர் கற்றிலாதவரும்***
***உண்ணும் நீரினும் அவனையே உவப்பர்"***
**(கம்ப, பாலகாண்டம், மந்திரப்படலம்-1352)**

என்று கம்பன் உரைப்பதாக ந. சுப்புரெட்டியார் நமக்குக் காட்டுகின்றார்.

## மிதிலையில் மக்கள் குரல்

சனகனின் அரசாகிய மிதிலையில் மக்களின் குரல் அதிர்ந்து ஒலிக்கின்றது. சீதையின் திருமணத்தை முடித்து வைக்கின்ற கடமையை சிவதனுசு ஏற்றிருக்கின்றது. சீதையின் திருமணம் தள்ளிக்கொண்டே போவதற்குப் பல்வேறு காரணங்களை மக்கள் பேசிக்கொள்கின்றனர். 'சீதையின் திருமணத்தில் தம் நாட்டு வேந்தன் மகளது திருமணத்தில் அதிக அக்கறை கொண்டிருந்தவர்களுக்குச் சனகன் வில்லைப்

பணயமாக வைத்தது பிடிக்கவில்லை. வில்லே சீதையின் திருமணத்திற்குப் பெருந்தடையாக இருக்கின்றது என்று எண்ணுகின்றனர். ஓரிடத்தில் 'இந்தவில்லைக் கொண்டு வருக என்று எதற்காகச் சொன்னான் அரசன்?' என்பர் சிலர்" என்று உரைக்கின்றார் ந. சுப்புரெட்டியார் (கம்பனில் மக்கள் குரல்,ப-12). முற்பிறவியில் செய்த ஊழ்வினைப் பயனால் ஒருவேளை இது கைகூடினாலும் கைகூடும். இது ஒருசிலர் கருத்து. ஒருவேளை சீதாப்பிராட்டியாவது இதனைப் பார்த்திருக்கக்கூடுமோ? இது மற்றொரு சாரார் கருத்து. மக்கள் பேசிக் கொள்கின்ற கருத்துக்களாகக் கம்பன்,

***"இச்சிலை யுதைத்தகோற் கிலக்கமியா தென்பார்***
***நச்சிலை நங்கை மேனாட்டும்வேந்னென்பார்***
***நிச்சய மெடுக்குங் கொய் நேமியானென்பார்;***
***சிற்சிலர் விதிசெய்த தீமைதான் என்பார்"***

**(கம்ப, பாலகாண்டம், கார்முகப்படலம்-674)**

கூறுகின்றான். பேச்சிற்கென்றே பிறந்த பெண்களின் கூட்டத்தில் இப்பேச்சுப் பெரும்பேச்சாக இருக்கின்றது. சனகனுக்கு உண்மையில் அக்கறை இல்லையென்றே தெரிகின்றது. இல்லையென்றால் சீதையின் திருமணத்திற்கு மிகப்பெருந் தடையாக இந்தவில்லைக் கொண்டு வந்துபோடுவானா? அல்லது சனகன் தன்வசமிழந்தவனாக இருக்கவேண்டும். விசுவாமித்திரனுக்காவது மதிவேண்டும். அவன் அனுமதி வழங்கிவிட்டால் இந்த அரசனைக் காட்டிலும் கொடியவன் இந்த உலகில் யாருமில்லை. இராமன் வில்லை வளையானாகில் சீதைக்கு வாழ்வே இல்லை. இவ்வாறு மிதிலையில் மக்களின் பேச்சு நிகழ்கின்றது எனச் சுட்டுகின்றார் (ந.சுப்புரெட்டியார், கம்பனில் மக்கள் குரல், ப-14). இதனை,

***"வள்ளல் மணத்தை ......***
***வெள்ளைமணைத்தவன் வில்லைஎடுத்துஇப்***
***பிள்ளைமுன் இட்டதுபேதைமைஎன்பார்;"***

**(கம்ப, பாலகாண்டம், கார்முகப்படலம்-695)**

***"ஞானமுனிக் கொரு நாண்இலை என்பார்;***
***கோனிவனிற் கொடியோ னிலை என்பார்;***
***மானவன் இச்சிலைகால் வளையானேல்***
***பீனதனத்தவள் பேறிலள் என்பார்."***

**(கம்ப, பாலகாண்டம், கார்முகப்படலம்-696)**

என்று கம்பன் வழியில் நூலாசிரியர் விளக்குகின்றார்.

## கிட்கிந்தையில் மக்கள் குரல்

சுக்கிரீவனுக்கு மகுடம் தரித்துவிட்டு இன்றியமையாத சில அரசநீதிகளை உரைத்து வருமாறு இலக்குவனிடம் இராமன் கூறி அனுப்புகின்றான். குடிமக்களின் குரலுக்கு மதிப்புத் தரவேண்டும். மக்கள் கொதித்தெழுந்தால் பெரிய வல்லரசும் கவிழ்ந்துவிடும் என்பதனை நினைவுறுத்துமாறு இராமன் இலக்குவனிடம் நினைவுறுத்துகின்றான்.

*"வாய்மைசால் அறிவின் வாய்த்தமந்திர மாந்தரோடும்*
*தீமைதீர் ஒழுக்கின் வந்ததிறத் தொழின் மறவரோடும்*
*தூய்மைசால் புணர்ச்சிபேணித் துகளறு தொழிலையாகி*
*சேய்மையொடு அணிமையின்றித் தேவரில் தெரியநிற்றி"*
**(கம்ப, கிட்கிந்தாகாண்டம், அரசியற்படலம்-4122)**

மக்களுக்காக ஏற்பட்டுள்ள ஆட்சியில் இயன்றவரை மக்களுடன் பகைமை ஏற்படுத்திக் கொள்ளலாகாது. அற்பப் பகையென்று எண்ணிச் சிறிய பகைக்கும் இடந்தரலாகாது. அத்தகைய சிறிய பகை சிறுவயதில் இராமனிடத்தில் கூனிக்கு ஏற்பட்டதால் வாழ்க்கையில் பல்வகைத் துன்பங்களுக்குதான் ஆளானதாகச் சுக்கிரீவனிடத்தில் இராமன் பேசுகின்றான்.

*"சிறியரென் றிகழ்ந்துநோவு செய்வனசெய்யன் மற்றிந்*
*நெறியிகந் தியானோர்தீமை இழைத்தலால்*
*உணர்ச்சிநீண்டு*
*குறியதாமேனி யாய கூனியாற் குவவுத் தோளாய்*
*வெறியனவெய்திநொய்தின் வெந்துயர்க் கடலின்*
*வீழ்ந்தேன்."*
**(கம்ப, கிட்கிந்தாகாண்டம், அரசியற்படலம்-4126)**

மக்களைத் தாய் போல் பேணவேண்டும் என்பது மக்களாட்சியின் தத்துவம். இங்ஙனம் சிறந்த முறையில் நடைபெறும் ஆட்சிக்கு ஊறு விளைவிக்க வருவோரை அறநூல்களில் கூறுப்பட்டுள்ளவாறு தண்டிக்கவேண்டும். அந்நிலையில் குடிமக்களுக்குத் தலைவன் அல்ல; தாய் என்பதாக இருக்கவேண்டும்.

*"நாயகன் அல்லன் நம்மைநனிபயந்துஎடுத்துநல்கும்*
*தாய் என இனிதுபேணத் தாங்குதி தாங்குவாரை*
*ஆயது தன்மையேனும் அறம்வரம்பு இகவாவண்ணம்*
*தீயனவந்தபோதுசுடுதியால்தீமையோரை"*
**(கம்ப, கிட்கிந்தாகாண்டம், அரசியற்படலம்-4128)**

ஒருநாட்டு அரசனுக்கு அறநூற் கருத்துகள் மிகவும் இன்றியமையாதவை என்று ந.சுப்புரெட்டியார் கம்பன் வழியாகக் காட்டுகின்றார்.

எல்லா வகைத் திறனும் நிரம்பிய ஒருவன் எந்தவிதக் குறையுமின்றி மக்களை வழிநடத்திக் கொண்டிருக்கும்போது திடீரென்று அவ்வகைத் திறன்களில் குறைபாடுள்ள ஒருவன் ஆட்சியினை வலிதிற் கொண்டால் மக்கள் குழப்பம் விளைவிக்கக்கூடும்; ஆகவே ஆட்சியை நேர்த்தியாக நடத்திச் செல்லவேண்டும் என்பது பற்றிக் கம்பன் சிந்தித்திருப்பதை ந. சுப்புரெட்டியார் நமக்கு விளக்கியுரைக்கின்றார்.

## இலங்கையில் மக்கள் குரல்

இலங்கையின் வீதிகளின் வழியாகச் சூர்ப்பணகை இலக்குவனால் உடலுறுப்புகள் சிதைக்கப்பட்டவளாக வருகின்றாள். இலங்கையின்

மக்களாகிய அரக்கர்கள் பல்வேறுவிதமாகப் பேசிக் கொள்கின்றனர். சூர்ப்பணகையைப் பற்றிய உரையாடல்களைக் கம்பன் பதிவுசெய்கின்றான். ஆண்மக்கள் அனைவரும் ஒன்றும் செய்வதறியாது உதடுகளைக் கடித்தவாறு கடுங்கோபம் கொண்டு காணப்பட்டனர். அவமானம் நேர்ந்ததற்குத் தேவேந்திரன் காரணமாக அமைந்தானா? உலகையெல்லாம் படைத்த மலரவன் காரணமாக அமைந்தானா? ஆழியான் காரணமாக அமைந்தானா? சந்திரனைச் சடைமுடியில் தரித்த சிவபெருமான் காரணமாக அமைந்தானா? ஒவ்வொரு கூற்றாக அரக்கர் கூட்டம் பேசிக்கொள்கின்றது. பூலோகம் முதலாக எவ்வுலகத்திலும் இராவணனுக்குப் பகையென்பது துளியும் கிடையாதே. எங்கிருந்து எழுந்தது இப்பகை? என்கின்ற விதத்தில் இலங்கையின் வீதிகளில் அரக்கர்களின் பேச்சொலி அமைந்தது.

***"என்னையே இராவணன் தங்கை என்றபின்***
***அன்னையே என்றடி வணங்கல் அன்றியே***
***உன்னவே யொண்ணுமோ ஒருவரால் இவள்***
***தன்னையே அரிந்தனள் தான்என் றார்சிலர்."***

**(கம்ப, ஆரணியகாண்டம், சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம்-3096)**

இவள் தானாகவே இச்செயலைச் செய்திருப்பாள் என்று மக்களில் சிலர் கூறுகின்றனர்.

## முடிவுரை

நான்கு ஆட்சிகளிலும் குடிமக்களின் கருத்துகளைக் கம்பன் வாயிலாகச் செவிமடுப்பதன் மூலமாக நாட்டின் மக்கள் தங்களது சிந்தனைகளை ஒவ்வொன்றாகப் பதிவுசெய்வதால் தங்களது கருத்துச் சுதந்திரத்தை வெகுவாகப் பயன்படுத்தினர் என்பதைத் தெள்ளத் தெளிவாக ந. சுப்புரெட்டியார் நமக்கு விளக்கியுரைக்கின்றார்.

# 25. Dr. Na.Subbu Reddiayar's Religious Philosophical views on Saivam and Vaishnavam

**Dr. R. Vijayan**
(Tamil Scholar) No:2 Balaji Street
Godavari Nagar, Navavoor
Bharathaiar University (po)
Coimbatore - 641 046.

## Introduction

Professor's contribution to the development of Tamil literature and language, & education is noteworthy. He is a prolific writer and authored more than 130 books, in a wide variety of topics ranging from Tamil language, Tamil literature, space science , to education, educational psychology, literarycriticism, religion, philosophy, genetics, biography, pedagogy, autobiography.

Professor had converted his knowledge and experience into books; as a headmaster he was teaching science and mathematics, culminating the arrival of some books on physics, chemistry, genetics, popular science, etc; When he was a Professor in the Department of Tamil in a Training College, he produced several books on pedagogy and educational technology.

Professor's versatility made it possible to venture writing more than 130 book in a wide range of topics, viz., literature, science, genetics, religion, philosophy, pedagogy, educational technology, literary criticism, travelogue, etc. Four of his books are considered as "masterpieces" by the learned circle. A very brief sketch of these works illustrates breadth, width and depth of Professor's rich scholarship.

Professor's style is unique in the sense that it matches seamlessly scientific, literary, religious, philosophical, and biographical works. His style is a blend of simplicity, grace and clarity.

This paper has main object to study Dr. Na.Subbu Reddiayar's (Professor) religious and philosophical views on Saivam and Vaishnavam.

## SAIVAM

During the early period of Tamil Nadu the original form of Saivaism with the "God Supreme" represented in the form of "Siva & Sakthi", and the forms of their worship as evolved in the northern region were well known.

With the passage of time the original Saivaism gradually underwent further developments in Tamil Nadu - with the evolution of new

religious concepts on the special attributes and glories of “God Siva” & “Goddess Sakthi”, and “their new forms of representation in relation to these special attributes and glories” too cameforth in Tamil Nadu with God Siva as Lingeswarar (God Siva represented in the form of Lingam), Thenmukakkadavul (Thetchanamoorththy), Maathorupaakan (Arthanaatheeswarar), Kalyaanasunderar, Uma-Maheswarar, Somaskandar, and as Aadavallaan (Nadarajar), and with Goddess Sakthi as Malaimahal (Parvathi), Alaimahal (Lakshmi), Kalaimahal (Saraswathi), and Kaali (Durga).

Professor has taken himself to width and depth of saiva thirumuraigal. after the impact of Thirumuraigal he expressed his thoughts on saivam through his book “*Saiva Samaya Vilakku*”.

professor finds, The concept of God Siva being represented in five element forms of the universe too developed in Tamil Nadu as fire, water, air, earth, and space, and was represented in his symbolic forms as Panchalingams (five Lingams) with each Lingam representing an element. Further concepts that these five elements were associated with five important Siva-Temple Shrines all being within Tamil Nadu too developed, and were known as Panchabootha Thalams (shrines). These Temple Shrines were Thiruvannaamalai, Thiruvaanaikkaa, Thirukkaalaththi, Kanchipuram, and Chithambaram respectively. (However very unfortunately the Thirukkaalaththi temple which has been a part of Tamil Nadu, has been included into Andhra Pradesh during the formation of States on linguistic basis within India in A.D.1956)

Professor elaborates his view on saivan by his book “*Saivasiddhantham - Or Arimugam*” .he culminate the siddantham finds The new concept that God Siva having performed eight Thaandavams (Dances - Nadanam) for the welfare of all living beings of the Universe at eight Thandava Thalams, namely the Aanantha Thaandavam at Ponnambalam in Thillai (Chithambaram), Santhiyaa Thaandavam at Velliambalam in Thiruaalavaai (Mathurai), Gowri Thaandavam at Chittrambalam in Thirupputhoor (Paandiya Nadu), Thiripura Thaandavam at Chiththiraaambalam at Thirukuttraalam, Kaali Thaandavam at Raththinaambalam at Thiruvaalankadu, Muni Thaandavam at Thaamiraambalam in Thirunelveli. All these eight Temple Shrines were all located within Tamil Nadu.

Expersssing his philosophical on saivasim that the new concepts of God Siva’s eight deeds with mythological stories relating to them too developed in Tamil Nadu, and these deeds were associated with further eight Siva-Temple shrines which too were all within Tamil Nadu, and were known as Atta Viratta Thalams. These Temple Shrines were namely, Thirukkandiyoor, Thirukkovilur, Thiruvathikai, Thiruppariyaloor, Thiruvirtkudi, Thiruvaluvoor, Thirukkurukkai, and Thirukkadavur.

## Vaishnavam

Major traditions within Hinduism along with Shaivism, Shaktism, and Smartism. It is also called Vishnuism, its followers are called Vaishnavas, and it considers Vishnu as the Supreme Lord. Vaishnavism originates in the latest centuries BC and the early centuries , as an amalgam of the heroic Krishna Vasudeva, the "divine child" Bala Krishna of the Gopala traditions, and syncretism of these non-Vedic traditions with the Mahabharata canon, thus affiliating itself with Vedism in order to become acceptable to the orthodox establishment. Krishnaism becomes associated with bhakti yoga in the medieval peiod.

According to Hardy there is evidence of early "southern Krishnaism," despite the tendency to allocate the Krishna-traditions to the Northern traditions. South Indian texts show close parallel with the Sanskrit traditions of Krishna and his gopi companions, so ubiquitous in later North Indian text and imagery. Early writings in Dravidian culture such as Manimekalai and the Cilappatikaram present Krishna, his brother, and favourite female companions in the similar terms. Hardy argues that the Sanskrit Bhagavata Purana is essentially a Sanskrit "translation" of the bhakti of the Tamil alvars.

In his book" *Vainavamum Thamizhum*" Professor has expressed the facts of vaishnavam. Devotion to southern Indian Mal (Tirumal) may be an early form of Krishnaism, since Mal appears as a divine figure, largely like Krishna with some elements of Vishnu. TheAlvars, whose name can be translated "sages" or "saints", were devotees of Mal. Their poems show a pronounced orientation to the Vaishnava, and often Krishna, side of Mal. But they do not make the distinction between Krishna and Vishnu on the basis of the concept of the Avatars. Yet, according to Hardy the term "Mayonism" should be used instead of "Krishnaism" when referring to Mal or Mayon.

Though by birth a Saivite, Professor had chosen "Vaishnavism" as the thematic topic for his research [PhD], conducted a very elaborate and comprehensive research and submitted his thesis in 1969, 'Religion and Philosophy of Nalayira Divya Prabhandham with special reference to Nammalvar', which was later [1977] published as a book with a Foreword from Dr M Ananthasayanam Iyengar, Ex-Governor of Bihar and Ex-Speaker of Lok Sabha. Dr Iyengar observes in his Foreword that the book is Professor's *magnum opus*. Most of the books written after 1969, are based either on religious theme or received religious treatment.

Professor excels himself when the theme is either religion or philosophy. He profoundly uses the hymns of Alvars whenever the subject matter deserves religious touch or he himself decides to give a religious/ philosophical treatment. One can see, here and there, the scientific touch

though the theme is religious or philosophical. Giving religious/philosophical treatment to science topics and giving scientific treatment to religious/ philosophical topics is unique to Professor himself. He speaks about his own experiences [as he visited personally 102 Vaishnavite shrines] whenever/ wherever he handles Vaishnavism or other allied fields. Students doing research either on religion or philosophy or Tamil literature find many of his books, under this category, are very appealing and useful.

He has written noteworthy Research books on Vaishnavism "*Vainava Uraivalam" ,"Vainava Selvam", "Vainava Puraanangal",* " *Thirup-paavai Vilakkam*" and his master piece of vaishnavism is *"Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar*"

## Conclusion

Professor had chosen some prominent saints/leaders, such as Ramalinga Adigal, Thaayumanavar, Thanthai Periyar etc., to try his hand in writing biographical books. His approach and treatment to the life of selected personalities is entirely different and Professor gave a new dimension to biographical works. One can easily observe the Professor's typical religious/ philosophical treatment throughout the book - a biography of a selected person. In fact, Sahitya Akademi offered an assignment of translating three of its books into Tamil, which Professor did with his typical style.

During the 90 long years of Professor's life, so many happenings had occurred in his childhood, education, career and his interaction with other academicians, educational administrators, Tamil scholars, friends and associates. Professor has lived blessed life with the grace of almighty.

# 26. ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் கவிதைச் செழுமையும் கவிஞர்களின் படைப்பாளுமையும்

**சி. அழகேசன்**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*அரசு கலைக் கல்லூரி*
*உடுமலைப்பேட்டை.*

## முகவுரை

இனிமையும் தொன்மையும் வாய்ந்த தமிழ் மொழியை ஏற்றம் பெறச் செய்தோர் பலர். ஒவ்வொரு கால கட்டத்திலும் தமிழன்னைக்குத் தொண்டு செய்தோர் பலர். அவர்களுள் ஒருவர்தான் ந.சுப்புரெட்டியார். இவர் தமிழுக்கு எண்ணற்ற நூல்களை அருளிச் செய்துள்ளார். பல இலக்கியங்களின் மீது பன்முகப் பார்வையைச் செலுத்தி அதன் விளைவாகப் பல நூல்களைப் படைத்துள்ளார். இவர் கவிதையின் மீது எத்தகைய பார்வையைக் கொண்டிருக்கிறார், கவிஞர்களை எவ்வாறு அணுகுகிறார், கவிதைக்குரிய கூறுகள் எவையெவை என்பதை ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு எல்லை

ந. சுப்புரெட்டியார் வாழும் கவிஞர்கள் மற்றும் காலமும் கவிஞர்களும், கவிதையனுபவம் இவ்விரு நூல்களில் உள்ள சில கூறுகளை மட்டுமே கொண்டு இவ்வாய்வுக் கட்டுரையின் எல்லையாகக் கொண்டுள்ளது.

## நூல் அறிமுகம்

“வாழும் கவிஞர்கள் மற்றும் காலமும் கவிஞர்களும்” என்னும் நூலைக் கொண்டு இவ் ஆய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்நூல் ஈஸ்வரி பதிப்பகத்தால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலின் முதல் பகுதியில் கவிதைக்கு இலக்கணம் கொடுக்கப்பட்டுப் பின்னர், முடியரசன் முதல் வைரமுத்து வரையிலான பதினாறு கவிஞர்களைப் பற்றியும், கவிதை பற்றியும் ஆசிரியர் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

## ந. சுப்புரெட்டியாரின் பார்வையில் கவிதை இலக்கணம்

ஏனைய அறிஞர்களைப் போன்று இவரது கவிதைக்குரிய இலக்கணம் பொது நோக்கில் அமைகிறது. கவிதைக்குரிய இலக்கணம் இன்னதென்று எவராலும் வரையறுக்க இயலாது என்பதே இவரது வாதம். ஒவ்வொரு கவிதையை எத்தகைய கட்டுக்குள்ளும் அடக்கிவிட இயலாது என்று குறிப்பிடுகின்றார்.

‘‘ஒலிநயம் அமைந்த சொற்களின் கட்டுக்கோப்பு, அ∴து உண்மையுடன் இணைப்பது, அறிவுக்குத் துணையாகக் கற்பனையைக் கொண்டிருப்பது’’ என்பது ஜான்சன் என்பாரின் கூற்று.

கார்லைலி என்பார் “இசை தழுவிய எண்ணமே கவிதை’’ என்று வரையறுப்பார்.

இதுபோன்று ஆங்கிலத் திறனாய்வாளர்கள் எண்ணற்றோர் கவிதைக்கு இலக்கணம் கண்டுள்ளதைப் போன்றே தமிழ்க்கவிஞர்களும் கவிதைக்கு இலக்கணங்களை வகுத்துள்ளார்கள்.

உள்ளத்தில் உள்ளவற்றை உணர்ச்சி பொங்கத் தெள்ளத் தெளிந்த சொற்களால் எடுத்துரைப்பது தான் கவிதையாகும். ந.சுப்புரெட்டியார் கவிஞர் கண்ணதாசன் சொற்பொழிவு ஒன்றில் கவிதைக்குரிய இலக்கணம் கூறியதை நினைவூட்டுகிறார்.

‘‘கவிதை என்பது உணர்ச்சியின் பிரவாகம், கட்டவிழ்த்து துள்ளிவரும் சிந்தனைகள். சொற்கோலமாக வருவதே கவிதை’’ என்ற கூற்றை கண்ணதாசன் வழி ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

## கவிதைக் குறித்த பொருள் மீதான பார்வை

ந.சுப்புரெட்டியாரைப் பொறுத்தவரை கவிதைக்குரிய பொருளின் மீதான பார்வை பரந்துபட்டதாக அமைகிறது. எந்தப் பொருளைப் பற்றி வேண்டுமானாலும் கவிதை தோன்றும். கவிதைக்குரிய பொருள் பற்றி கவிமணியின் கூற்று பின்வருமாறு அமைகிறது.

***“அலகில் சோதியான - ஈசன்***
***அருளினாலே அமையும்***
***உலகில் எந்த பொருளும் கவிக்கு***
***உரிய பொருளா மையா’’***

கவிதைக்குரிய பொருள் எதுவேண்டுமானாலும் இருக்கும் என்று இச்செய்யுளின் மூலம் அறியலாம்.

## ஆசிரியரின் கவிதைக்குரிய பொருள் பற்றிய கூற்று

“ஒரே பொருள் பற்றிச் சிறந்த கவிதையும் தோன்றலாம், மிக மட்டமான செய்யுளும் தோன்றலாம், தாழ்ந்த பொருள்பற்றி உயர்ந்த கவிதையும் தோன்றக் கூடும். உயர்ந்த பொருள் பற்றித் தாழ்ந்த கவிதையும் தோன்றக் கூடும்’’ என்பதாகும். கவிதைக்குரிய பொருளுக்கு வரையறையே இல்லை என்பதை இக்கூற்று மெய்ப்பிக்கிறது. மேலும் இவரது கூற்றுப்படி,

“பொருளின் பெருமைக்கும் சிறுமைக்கும் ஏற்ப கவிதையின் பெருமையும், சிறுமையும் என்று கூறுதல் முற்றும் பொருந்தாது. கவிதை சிறப்பது அதனைப் படைக்கும் கவிஞரின் அனுபவத்தினைப் பொறுத்து வருவது, அவன் அனுபவத்தைக் கூறும் முறையையும் பொறுத்தது’’ என்ற கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது.

எனவே கவிதை என்பது ஒரு பொருளினால் அமையும் என்பதை விடக் கவிஞனின் அனுபவத்தாலேயே அக்கவிதை சிறப்புறும். ஒரு கவிதையைப் படைக்கும் கவிஞன் அக்கவிதையின் சொற்களையோ பொருளையோ அடுக்கிக் கூறலாம். ஆனால் அவரது அனுபவம் எத்தகையது என்பதைப் பொறுத்தே கவிதை அமையும். கற்பனை, உணர்ச்சி, கருத்தை வெளிப்படுத்தும் திறன், கவிஞரது அனுபவம், யாப்புநலம், அணிநலம் போன்ற எண்ணற்ற கூறுகளை உள்ளடக்கியதுதான் கவிதை. இது எத்தகைய கட்டுக்குள்ளும் அடங்காது.

## ந. சுப்புரெட்டியாரின் பார்வையில் கவிஞர்கள்

இவர் கவிஞர்களை உயர்ந்த சிந்தனையாளர்களாகக் காண்கிறார். கவிஞர்கள் தம் கவிதையில் நல்லனவற்றையே கூறவேண்டும் என்பதே இவரது கருத்து. இவர் தேர்ந்தெடுத்த பதினாறு கவிஞர்களும் மரபுக் கவிஞர்கள். இவர்களுள் முடியரசன் முதல் வைரமுத்து வரை அடங்குவார். சில கவிஞர்களை வெகுஜனத்திற்கு வெளிச்சமிட்டு காட்டுகிறார். அனைத்துக் கவிஞர்களையும் தனது நண்பர்களாகப் பாவித்து உயர்வு படுத்திக் கூறுகிறார். கவிஞர்களது கவிதைகளை எடுத்தாளும்போது கவிதைகளின் ஆழ்ந்த நுட்பங்களையும், விளக்கங்களையும் படிப்பவர்களுக்குப் பரிசளிக்கிறார்.

## கவிஞர்களை அணுகும் விதம்

ஆசிரியர், முடியரசன் கவிதையின் யாப்புக் கட்டமைப்பை பாரதிதாசன் கவிதையின் யாப்புக் கட்டமைப்போடு ஒப்பிட்டு நோக்குகிறார். முடியரசன் இலக்கண பண்பை மீறாதவர் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காக ஒரு கவிதையைச் சான்று காட்டுகிறார்.

***“அவளுடன் நான் கற்பனையில் மிதந்து சென்றேன்***
***அத்தான் ஓர் ஐயமுண்டு, செய்யுள் யாக்கக்***
***கவலைதரும் இலக்கணம் ஏன் வேண்டும் என்றாள்.***
***‘காரிகையே’ ஆற்றுக்குக் கரையேன் வேண்டும்?***
***சுவர்போலும் கரையில் லையேல் ஆற்றின் தன்மை***
***என்னாகும் சொல்லிடுக ஊர்பாழ் அன்றோ?***
***அவமின்றி மொழி விளக்கக் கவிதை என்றும்***
***ஆற்றுக்கும் இலக்கணமோர் கரையே யாகும்”***

என்ற பாடலைக் கொண்டு ஒரு கவிதைக்கு இலக்கணம் என்பது ஆற்றின் கரைப் போன்றதாகும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

கவிஞர் எஸ். கே. இராமராசன் அவர்களை குமரகுருபரன் அடிகளுடனும், சிவப்பிரகாச அடிகளுடனும் ஒப்பிட்டுக் காண்கிறார். கவிஞர் சௌந்தரா கைலாசம் அவர்களை திரு.வி.க. வைப்போல் தமிழ்த் தென்றல் என்றும், இந்தியக் கவிக்குயில் சரோஜினி அம்மையாரைப்போல் தமிழ்க் குயில் என்றும் புகழ்கிறார்.

டாக்டர் முத்து கணேசனாரின் இயற்கையைப்பற்றிய பாடல்கள் பாவேந்தரின் “அழகின் சிரிப்பு” போல் அமைந்துள்ளது என்று ஆசிரியர்

ந.சுப்புரெட்டியார் பாராட்டுகின்றார். வா.செ.குழந்தைசாமியின் மரபுக் கவிதை மற்றும் புதுக்கவிதை பற்றிய கவிதை இங்குச் சிந்திக்க தக்கதாக உள்ளது. ''கலைவானில் வானம்'' என்ற தலைப்பில் இக்கவிதை அமைந்துள்ளது.

***''மாடிக்குப் படியமைத்த வண்ணம்போல***
***வார்த்தை ஒரு வரியாக்கி அடுக்கி வைத்தல்***
***வேடிக்கை யன்றுபுதுக் கவிதை முற்றும்***
***விளங்காத தெனின்நன்று மேதைச்சின்னம்,***
***மரபுவழிக் கவிதையின் வாழ தென்போர்***
***மழலைமொழி ஒரு சிலரை வருத்தக் கண்டோம்.***
***பரவுமணற் கடற்கரையில் ஊற்றெடுப்போர்***
***பரவையிளி வற்று மெனில் பகைப்பதுண்டோ''***

என்ற கவிதையை அடித்தளமாகக் கொண்டு தகுதியான படைப்புகள் மட்டுமே இவ்வுலகில் வாழும் என்பதே மெய்ப்பிக்கிறார் ஆசிரியர்.

கவிஞர் திருமுருகனார் மரபுக் கவிதையின் மேன்மை குறித்துக் கூறும்போது,

***''நானும் ஒருகால் நம்பி இருந்தேன்,***
***மின்னுவ தெல்லாம் பொன்னாய் விடுமா***
***பறப்பதெல்லாம் பறவையாய் விடுமா?***
***யாப்பு டைத்தெல்லாம் யாப்பாய் விடுமா?''***

என்றவாறு யாப்புடைய கவிதையெலாம் கவிதையாகிவிடாது. இக்கவிதைப் பற்றிய கூற்றுடன், ந.சுப்புரெட்டியாரின் கருத்தும், இரசிகமணி டி.கே.சி அவர்களின் கருத்துடனும் ஒத்திசைந்து செல்கிறது. கவிஞர் ஆ. பழிநியையும், முடியரசனையும் இரட்டைக் கவிஞர் என்று கூறுகிறார்.

கவிஞர் வேழவேந்தன், ஒரு கவிஞன் தான் உலகிற்கு பலதை அடையாளம் காட்டுகின்றார். ஒரு கவிஞனால் தான் வரலாறு உருவானது என்பதை வழுவுடன் எடுத்தியம்புகிறார்.

***''கவிதை என்றால் என்ன கவிதை? அறிவுத் தோட்டம்***
***கழனிவிதை அவையன்றோ? உழும்பாட் டாளி***
***புவிமண்ணில் விளைவிக்கும் நெல்லாம் இங்கே***
***புயப்பசிதான் பறந்தோடும்! கவிபாட்டாளி***
***சுவை சுவையாய் விளைவிக்கும் கவிதைச் சொல்லால்***
***சுடர் மூளைப் பசியன்றோ நீங்கும்! நாட்டில்***
***அவையேறிப் பாடிவந்த புலவர் இன்றேல்***
***அன்றிருந்த வரலாறும் தெரிவ துண்டா?''***

என்ற கருத்தை முன்வைத்துக் கவிஞர்கள் இல்லையென்றால் பல உயர்ந்தோர்கள் வரலாற்றைப் பற்றி அறிந்திருக்க இயலாது என்ற உண்மையை உணர்த்துகின்றார்.

ந.சுப்புரெட்டியார் ஒவ்வொரு கவிஞரின் கவிதைகளை எடுத்தியம்பும்போது சமுதாய விழிப்புணர்வு சார்ந்த கவிதைகளை

விட்டு வருவதில்லை அதனையும் பதிவு செய்கிறார். ‘கவிஞர், குழ. கதிரேசனின்’ அரசியல் விழிப்புணர்வு கவிதைதான் இது,

***“நதிகள் எல்லாம் இணைந்தால் நாட்டில்***
***நெல்மணி வயிறை முட்டாதோ?***
***தலைவர் எல்லாம் இணைந்தால் நாட்டில்***
***தவறுகள் ஓடி ஒளியாதோ?***
***தனியாய் ஓடும் நதிகளைப் போலே***
***தலைவர் எல்லாம் ஓடுகிறார்***
***உண்மைத் தலைவர் எங்கே எங்கே***
***ஒவ்வொரு மனிதனும் தேடுகின்றான்.”***

என்ற கவிதைகள் இன்று தடுமாற்றத்துடன் இயங்கும் அரசியலைப்பற்றி ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கின்றான் என்பதைக் காட்டுகின்றார் கவிஞர் என்று ஆசிரியர் கூறுகிறார்.

புதுக்கவிதை என்னும் ஆற்றல் ஒருபோதும் மரபுக் கவிதை அழிக்கமுடியாது என்கிற வைரமுத்துவின் சிந்தனையை இங்கே அறிஞர் முன்னிறுத்துகிறார்.

“மரபுக் கவிதை சாகும் சங்கதி அன்று, அது மார்க்கண்டேய வரம் பெற்ற பெருமை கொண்டது” ஈராயிரம் ஆண்டுகளாய் விழுதிறங்கிய ஆலமரம் அதுவோ கரையான்கள் அரிக்க முடியாத ஆழத்தில் உள்ளது.

இந்தச் சிந்தனையை முன்னிறுத்துவதன் மூலம் மரபுக் கவிதையின் கவிதைச் செழுமையும் புதுக்கவிதையின் பாடுபொருள் தன்மையும் ஒன்றிலிருந்து மற்றொன்று கிளைத்து வெளிவரும் என்ற வாழ்வியல் உண்மை உணர்த்தப்பட்டுள்ளது.

## தொகுப்புரை

அறிஞர் பெருமகனார் கவிதைகளை இரு வகைகளாகப் பகுக்கிறார். ஒன்று உருவத்தையும் மற்றொன்று உள்ளடக்கத்தையும் கொண்டு கவிதையை வகைமைப் படுத்துகிறார். இவரது கவிஞர்களின் மீதான பார்வை ஆழமானதாகவும் வலிமையானதாகவும் இலக்கணத்தை ஒட்டியதாகவும் உள்ளது. ஒவ்வொரு கவிஞரது பின்புலத்தைக்கூறி அவரது கவிதைகளை எடுத்தாண்டுள்ளார். பல்வேறு வகைப்பட்ட பாடுபொருள் சார்ந்த கவிதைகளையும் இங்கு வகைப்படுத்திக் காட்டியுள்ளார். பிற கவிஞர்களுடன் ஒப்பிட்டும் கவிதை நூல்களின் பதிப்பு வரலாற்றையும் இங்குப்பதிவு செய்துள்ளார். ஒவ்வொரு கவிதைக்கும் எளிய வடிவில் தனது விளக்கத்தை அளித்துள்ளமை சிறப்பிற்குரியதாக உள்ளது. இவரது கவிதை குறித்த நோக்கு தூண்டல் துலங்கல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒரு படைப்பு முக்காலத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பிற்கு இந்நூல் தக்க சான்றாக விளங்குவதை இக்கட்டுரை புலப்படுத்திக் காட்டுகின்றது.

# 27. ந.சுப்புரெட்டியாரின் நூலிலிருந்து இலக்கியக் கொள்கைகளும் உத்திகளும்

**அ. ராஜி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

தமிழின் துறைதோறும் தனது பன்முகப் பார்வையினைச் செலுத்தித் திறம்பட்ட படைப்புகளைப் படைத்தளித்துள்ள பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியாரின் நூல்களில் ‘இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்’ என்னும் பொருண்மையில் அமைந்த படைப்பில் பல்வேறு வகை உத்திகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. அவற்றுள் புதினங்களில் இடம்பெறும் நனவோடை உத்தியானது செயகாந்தனின் புதினங்களில் பொருந்தும் பாங்கை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## சில இலக்கியக் கொள்கைகள்

மேனாடுகளில் கருத்து வளர்ச்சியின் வேகத்தில் சில இயக்கங்கள் இலக்கியக் கொள்கைகளாக மலர்ந்தன. இதனடிப்படையில் எஸ்ரா பவுண்டு, டி.எஸ். எலியட், வாலட் விட்மென், எட்வர்ட், கார்பீபெண்டர் போன்ற அமெரிக்க, ஐரோப்பிய, ஆங்கிலப் படைப்பாளர்களும், மாயாகோவெஸ்கி போன்ற இரஷ்யப் படைப்பாளியும் தங்கள் படைப்புகளைப் படைத்தனர். இவர்களைப் பின்பற்றி நமது நாட்டுப் படைப்பாளர்களும் தங்களது படைப்புகளைக் கொடுத்தனர். அவற்றுள் சில கொள்கைகளாவன,

1. படிமக் கோட்பாடு
2. குறியீட்டியல்
3. மீ மெய்ம்மையியல்
4. நனவோடை
5. இருப்பியல் கொள்கை
6. இருண்மை வாதம்

இவற்றுள் நனவோடை உத்தியைப் பற்றி ந. சுப்புரெட்டியாரின் விளக்கமாவது, “ஃபிராய்டின் மூலத் தத்துவத்திலிருந்து காலப் போக்கிற்கு ஏற்ற சில மாறுதல்களோடு கிளைத்து எழுந்தது தான் இந்த நனவோடைத் தத்துவம். இஃது இலக்கியத்தில் உத்தி பற்றிய ஒரு கொள்கையாகப் பயன்படுத்தப் பெறுகின்றது. பெரும்பாலும்

இவ்வுத்தி புதினங்களில் தான் இடம் பெறுகின்றது. புதினத்தில் இடம் பெறும் ஒரு கதை மாந்தரின் புலனுணர்வுக் காட்சிகளும், எண்ணங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பின்றித் தோன்றுவதை எழுதிக்காட்டும் ஒரு வகை உத்தியே நனவோடை. உறக்க நிலை, விழிப்பு நிலை போன்ற வேறுபட்ட உண்மை நிலைகளைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் காரண காரிய இயைபுப் பொருத்தமின்றி வெளிப்படுத்துவது இவ்வுத்தியின் போக்காகும் என்கிறார்.

## நனவோடை - ஒரு பார்வை

நனவோடையை 'அனுபவங்களின் ஆற்றொழுக்கு' (Flow of Inner Experience) என்று முதன் முதலில் குறிப்பிட்டவர் 'வில்லியம் ஜேம்ஸ்' *(1890)* என்பவராவர்.

ஒரு நீண்ட தனி மொழியின் வழி கதாபாத்திரத்தின் நினைவுகள் மற்றும் உணர்வுகளின் தொடர்ச்சியைப் புலப்படுத்தும் ஓர் இலக்கிய உத்தி என்பதாகக் கூறப்படும் நனவோடை என்பது நனவைப் புனை கதைகளில் தருவதற்குரிய உத்தியாகும். க.நா.சு., சி.சு.செல்லப்பா, அநுத்தமா, செயகாந்தன், சு.ரத்னம் முதலானோரின் படைப்புகளில் இவ்வுத்தியின் தாக்கம் காணப்படுகிறது.

ஒரு மனிதன் நிகழ்காலத்தில் இறந்த கால நினைவுகள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு அசை போடப்படும் போது நனவோடை பிறக்கிறது. நனவோடையில் நிகழ்காலம் உறைந்து நிற்க, பாத்திரத்தின் உளம் சார்ந்த இறந்த காலம் நனவோடையில் உளம் சார்ந்த நிகழ் காலமாகிறது (psychological present).

இந்த அடிப்படையில் நனவோடை உத்திகளையும், உளவியல் கூறுகளையும் பொறுத்தி ஆய்வு செய்யும் பொது செயகாந்தனின் அனுபவமே இலக்கியமாக மலர்ந்து இருப்பதையும், புதின மாந்தர்கள் அனைவருமே அக முக மாந்தர்களாக அவரையே பிரதிபலிப்பதாக அவரே கூறி இருப்பதையும் நினைவு கூற முடிகிறது.

## நனவோடையினால் புதிய மாற்றம்

நனவோடை உத்தியினால் கிடைத்த புதிய தோற்றமும், மனித மனமும், காலமும் இணைந்து புதினத்திற்குக் கிடைத்த புதிய அமைப்புப் பற்றி 'டேவிட் டெய்ச்சஸின்' கூற்று மேற்கோள் விளக்கமாக அமைகிறது. அக் கூற்றானது,

'பழைய வகைப் புதினங்கள், பாத்திரங்களை வைத்துக் கொண்டு, கதைகளை முன்னோக்கி நகர்த்திச் சென்றன. அந்த வகையான அமைப்புக்கு மாறாக, முன்னும் பின்னுமாகச் செல்லும் கதை அமைப்புப் பின்பற்றப்பட்டது. இதனால் கட்டுப்பாட்டிலிருந்து விலகிப் புதின ஆசிரியர்கள் தன் மன விருப்பப்படிப் புதினத்தை அமைத்துக் கொள்ள முடிந்தது. ஜேம்ஸ் ஜாய்சின், 'யுலிசஸ்' புதினத்தில் இவ்வுத்தி சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது.

## செயகாந்தனின் புதினங்களில் நனவோடை உத்தி

செயகாந்தனின் 'அப்புவுக்கு அப்பா சொன்ன கதைகள்' புதினத்தில் நனவோடை உத்தி செயல்பட்டு இருக்கும் விதத்தை ஆராயும் விதமாக, 'ஏதேனும் ஒரு நிகழ்வு அது நிகழ்ந்த காலத்தில் சொல்லப்படுவதை விட பல ஆண்டுகள் கழித்து நனவோட்டங்களின் மூலம் விவரிக்கப்படும் பொழுது, நிகழ்ச்சியின் இயல்பான தன்மை நிதானமாக வெளிப்படும்' என்ற மா. இராமலிங்கத்தின் கருத்தையும் நினைவில் கொள்ள முடிகிறது. நனவோட்ட உத்தியைப் புதின ஆசிரியர்கள் பல வழிகளில் கையாளுகின்றனர். கதை மாந்தர்கள் பிறரிடம் கூற இயலாதவற்றைத் தனக்குள்ளேயே அசை போட்டுக் கொள்ளும் பாங்கினை விளக்கும் தனி மொழி வகையும், கால வரிசையின்றி அமையும் கடந்த கால நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்கும் வகையும், மனத்தில் தோன்றிய நினைவுகளைத் தோன்றிய விதத்திலேயே சொல்லும் வகையும், ஒரு எண்ணம் அல்லது ஒரு காட்சி வேறொரு நிகழ்ச்சியை நினைவு படுத்தும்போது அதனை வெளிப்படுத்தும் புதினங்கள் நினைவுகளையும், அது தோன்றும் களன்களையும் சுட்டிக் காட்டும் வகையும், புறக்காட்சியினின்று விடுபட்டு அடிமன உணர்வுகளை மட்டும் கூறும் வகையும் எனப் பல வகைகளில் நனவோடைக் கூறுகள் வகைப்படுத்தப்பட்டு உள்ளன. இக் கூறுகளில் ஒரு கூறோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கூறுகளோ நனவோடைப் புதினங்களில் அமைக்கப்பட்டிருக்கும்,

***"இந்த நேரத்தில் இவள்***
***பாட்டி மார்களும் பேத்தி மார்களும்"***

அப்புவுக்கு அப்பா சொன்ன கதைகள் - ஆகிய மூன்று புதினங்களும் ஒன்றுக்கொன்று தொடர்ச்சியான நீண்ட வருடங்களில் நடந்த நிகழ்வு எனினும் கதையை இடையறவு இல்லாமல் படைத்து இருப்பதற்கும், கதைப் பின்னலை, பாத்திரத்தின் மன உணர்வுகளை விவரிக்கும் முறையில் அமைத்துத் தெளிவுபட விளங்க வைப்பதற்கு நனவோடை உத்தியே காரணமாக அமைவதுடன் மரபு வழியாகக் கதைகளை வரிசைப் படுத்திக் கூறும் புதின உலகத்திலிருந்து மாற்றம் பெற்று ஏற்றம் பெறுவதற்கான வழி வகையும் ஏற்பட்டுள்ள போக்கைப் புரிந்து கொள்ள முடிகிறது.

'சிங்காரம் என்னும் தனி மனிதன் ஒருவனின் மனதினை மையப்படுத்திப் படைக்கப்பட்டுள்ள இப்புதினங்களில் மூன்று தலைமுறை உறவுகளும் அவர்களின் வாழ்க்கை முறையும் காட்டப்பட்டுள்ளது.

'சிங்காரம் தான் இதுவரை வாழ்ந்த காலத்தில் நடந்தவற்றைத் தன் மனதில் பதிவு செய்து கொண்டிருப்பதைப் பின் குறுகிய கால நெருக்கடியில் மனதில் பதிந்து விட்ட சில நிகழ்ச்சிகளைத் தன்னுணர்வுடன் இணைத்துத் தனது 12 வயது மகன் அப்புவுடன் கடந்த கால நினைவுகளை நிகழ்காலத்தில் பகிர்ந்து கொள்ளும்

அப்புவுக்கு அப்பா சொன்ன கதைகள்' புதினப் படைப்பில் நனவோடை உத்தி கையாளப்பட்டிருப்பதால் உணர்வுகளும், உறவுகளும் முழுமையாக வெளிப்பட்டுக் கடந்த காலத்தை நிகழ்காலத்தில் சுவைக்க முடிகிறது.

## முடிவுரை

கடந்த காலப் பாதிப்பை நிகழ்கால அனுபவங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பார்வையைப் புதினத்தில் காட்ட நினைவின் காலமும், கதை நிகழ்ந்து கொண்டிருக்கும் காலமும் மாறி மாறி அமைக்கப்படும் நனவோட்ட உத்தியால் பாத்திரங்களின் மன உணர்வுகள் அப்பட்டமாக வெளிப்படுகின்றன.

## முதன்மை ஆதாரங்கள்

1. ந. சுப்புரெட்டியாரின் 'இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்'
2. செயகாந்தனின் 'அப்புவுக்கு அப்பா சொன்ன கதைகள்'

## துணைமை ஆதாரங்கள்

1. மா. இராமலிங்கம், நாவல் இலக்கியம், ப.78
2. செயகாந்தன் முன்னுரை, 'சில நேரங்களில் சில மனிதர்கள்'
3. நீல பத்மநாபன் புதினங்களில் நனவோடை உத்தியும், திணைக் கோட்பாட்டு மரபுகளும் (சூலை - 2010)

# 28. ந. சுப்புரெட்டியாரின் கம்பராமாயண காவியப் புலமை

**சே. கவிதா**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

பண்டைக் காலந்தொட்டுத் தமிழ்ப் புலவர்கள் தமிழ்மொழியையும், தமிழ்ச்சமுதாயத்தையும் முன்னேற்றுவதற்காக அறம்பாடிய தன்மையைத் தமிழ் இலக்கியங்கள் புலம்படுத்திக் காட்டுகின்றன. 20-ஆம் நூற்றாண்டில் தமிழ் ஆர்வலராகவும், திறனாய்வாளராகவும் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட ந.சுப்புரெட்டியார் சைவத்தையும், வைணவத்தையும் இரு கண்களாகப் போற்றினார். ஆழ்வார் பாடல்களிலும், ஆச்சாரியார்களின் ஞானப் பனுவல்களிலும் மூழ்கித் திளைத்துச் சுவைத்துத் தெளிந்து, அத்தெளிவின் வெளிப்பாடாகப் பல்வேறு நூல்களைப் படைத்தளித்துள்ளார். அவ்வகையில் கம்ப இராமாயணத்தில் இன்றியமையாத பாத்திரமாகக் கருதப்படும் அனுமனின் பன்முக ஆற்றல்களை 'அண்ணல் அநுமன்' என்னும் நூலில் பதிவாக்கிக் காட்டியுள்ள திறத்தை இக்கட்டுரை எடுத்துரைக்க முற்படுகின்றது.

## கவிக்கு நாயகன்

இராமபிரானது புகழ் அமிழ்தம், கேட்பவர் செவிகளுக்கு இனிமை தரும்; தேனாக இனிக்கும். இராம காதையில் வரும் கதை மாந்தர்களுள் ஈடும் எடுப்பும் உடையவன் அநுமன். வீடுபேற்றையும் வேண்டாத விறலினன். இராமபிரானின் புகழ் பாடி, இராம நாமத்தை உச்சரித்துக் கொண்டு சிரஞ்சீவியாக நம்மிடையே இன்றும் இருப்பவன் என்றும் இருந்து கொண்டிருப்பவன் அநுமன் ஆவான்.

கவிக்கு நாயகனான அநுமன் இராமசரிதம் நடைபெறும் முறையில் பக்கபலமாக இருந்து கதை மங்களகரமாக முடியக் காரணமாக இருந்தவன் என்பதை உணர முடிகின்றது. சுக்கிரீவன் இருப்பிடத்தில் இராமனையும், இலட்சுமணனையும் கண்ட அநுமன் அவர்களிடம் அணுகி அவர்களுடன் விநயமாகப் பேசியும் மீண்டு வந்து சுக்கிரீவனுடன் தெளிவாகக் கூறி இருவரிடமும் பாசத்தையும் நேசத்தையும் உண்டாக்கி விடுகின்றான். இஃது அநுமனின் செயற்கருஞ்செயல். இதனால் இராமகாதை இனிதாக நடைபெற வழி அமைகின்றது என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார். இராமனுடைய பார்வையில் சுக்கிரீவனுடைய மனைவியைக் காணாததால் அவன்மீது கொண்ட அன்பினால் வினவுகிறான். அதற்கு அநுமன் விடை கூறத் தொடங்கியவன் "வாலி யென்றுளான் வரம்பிலாற்றலான்" என்ற வாலியின் வரலாற்றைக்

கூறித் தொடங்கினான் பேச்சின் இறுதியில்,

***"உருமை யென்று இவற்கு***
***உரிய தாரமாம்***
***அரும ருந்தையும்***
***அவன்வி ரும்பினான்***
***இருமை யுந்துறந்து***
***இவன்இ ருந்தனன்"***

என்று கூற இராமன் வாலியின்மீது சினங்கொண்டு, இராமபிரான் வாலியைக் கொல்வதாகவும் உறுதி கூறுகின்றான்.

***"தலைமை யோடுநின் தாரமும்***
***உனக்கின்று தருவென்"***

என்பது இராமனது திருவாக்கு, உறுதிமொழி இங்ஙனம் அநுமன் வாலி வதத்திற்கு வழியமைத்ததால் அநுமன் பங்கு இராமகாதையில் பெரும் பங்கை வகிக்கிறது. அதுமட்டும் அல்லாமல் இருமுறை அநுமனால் மருந்துமலை கொணரப் பெறுகின்றது. மகரக் கண்ணன் முதலியோரின் வதைக்குப் பிறகு இந்திரசித்தின் போர்க்களம் புகுகின்றான. இலட்சுமணனுக்கும், இந்திரசித்துக்கும் கடுமையான போர் நிகழ்கின்றது. ஒரு நிலையில் இந்திரசித்து எவரும் உணராதவாறு வானத்தில் மறைந்து இலட்சுமணன் மீது நான்முகன் கணையை விடுகின்றான். அதனால் இலட்சுமணனும் அநுமனும் சோர்ந்து விழுகின்றனர். வானர சேனை முழுவதற்கும் இதே நிலைதான். உணவு கொண்டுவரச் சென்ற வீடணன் திரும்பிய போது இந்நிலைக்குக் காரணம் நான்முகன் கணையின் விளைவு என்பதை உணர்ந்து சாம்பவானைக் கண்டால் வழி பிறக்கும் என்று கருதி அநுமனும், வீடணனும் அவனிடம் வருகின்றனர். அநுமனைக் கண்ட சாம்பவான் "இனி யாவரும் உய்ந்தோம்" என்று கூறி மகிழ்கின்றான். மருந்து கொணரும் பொறுப்பு அநுமனால்தான் முடியும் எனக் கூறி மருந்துமலை உள்ள இடத்திற்கு வழிவிவரங்களைத் தருகின்றான்.

அநுமன் பேருருவம் கொண்டு புறப்படுகின்றான். பல இடங்களைக் கடந்து இறுதியில் மருந்துமலையை அடைகின்றான். அதனை வேருடன் பெயர்த்தெடுத்துக் கையிலேந்திக் கொண்டு விரைந்து திரும்புகின்றான்.

***"இங்குநின்று இன்னன***
***மருந்தென்று எண்ணினால்***
***சிங்குமால் காலம் என்று***
***உணர்ந்த சிந்தையான்***
***அங்கது வேரொடும்***
***அங்கை தாங்கினான்***
***பொங்கிய விசும்பிடைக்***
***கடிது போக்குவான்"*** ***(19)***

என்ற பாடலின்படி வாயு பகவான் அநுமன் கொண்டுவரும் மலையின் மீதுள்ள மருந்தைக்கொண்டு அனைவரையும் ஆர்த்தெழுமாறு செய்து

விடுகின்றான். இவற்றையெல்லாம் கருதியே கம்ப நாடன் 'செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்' என்று அநுமனைப் போற்றியுள்ளார் என்று உணர முடிகிறது.

***"மாணியாம் வேடம் தாங்கி***
***மலர் அயற்கு அறிவு மாண்டோர்***
***ஆணியாய் உலகுக்கு எல்லாம்***
***அறம் பொருள் நிரப்பும் அண்ணல்"*** ***(29)***

என்று கூறினானோ என்றுகூட நம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

## சொல்லின் செல்வன்

தாம் சொல்லும்போது பிறர் விரும்புமாறு சொல்ல வேண்டும். பிறர் சொல்லும்போது அச்சொல்லின் பயனை ஆராய்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். இது மாசற்ற சிறப்புடையவரின் கொள்கையாகும். இங்ஙனம் வள்ளுவர் பெருமான் சொல்லின் சிறப்பைப் பேசுவர். இதற்கு எல்லா வகையிலும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவன் "தன் பெருங்குணத்தால் தன்னைத் தானலாது ஒப்பிலாதான்'' என்று கம்பனால் போற்றப்பெறும் அநுமன். இவனே 'சொல்லின் செல்வன்' ஆகின்றான். இதற்குப் பொருள் நயமாக, அநயமாக, நா நயம்படப் பேசப் பெறும் சொற்கள் கலந்த பேச்சே ஆகும். அத்தகைய பேச்சை இயல்பாக உடையவன் அநுமன். முதல் சந்திப்பிலேயே அவன் பேச்சில் மயங்கிய இராமன் இவனை அறுதியிட்டு இவனது திறமையைக் கண்டு இலட்சுமணனிடம்,

***"மாணியாம் படிவம் அன்று***
***மற்று இவன் வடிவம் மைந்த!***
***ஆணிஇவ் வுலகுக்கு எல்லாம்***
***என்னலாம் ஆற்றற்கு ஏற்ற***
***சேணுயர் பெருமை தன்னைச்***
***சிக்கறத் தெளிந்தேன்''*** ***(3)***

என்று சொல்வதை ந.சுப்புரெட்டியார் நயமாகக் காட்டுகின்றார். உருவத்தைக் கண்டு ஒருவரை எடை போடக்கூடாது என்று வள்ளுவர் கூறும் உண்மையை,

***"உருவுகண்டு எள்ளாமை வேண்டும்***
***உருள்பெருந்தேர்க்கு***
***அச்சாணி அன்னார் உடைத்து"*** ***(குறள். 667)***

என்னும் குறள் மூலம் ஈண்டு எண்ணல் தகும். உருளுகின்ற பெரிய தேரில் அச்சில் நின்று தாங்கும் சிறிய ஆணி போன்றவர்கள் உலகில் உள்ளனர் என்று கருதுவதைப்போல் அநுமனையும் அவ்வாறு போற்றிப் பாடி ந.சுப்புரெட்டியார் தமது படைப்பில் அநுமனின் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் சொல்லின் செல்வன் என்ற விருதையும் வழங்கி 'இவன் நான் முகனோ? உருத்திரனோ?' என்று அவர்களோடு ஒப்பிட்டும் பேசுகின்றார்.

சீதாப்பிராட்டியைத் தேடும் பணியில் அநுமன் ஒரே சமயத்தில் உலகங்கள் எல்லாவற்றிலும் சென்று பரவிப் பிராட்டியிருக்கும்

இடத்தைத் தேடி அறிய வேண்டும் அங்ஙனமன்றி ஒவ்வோரிடமாகத் தேடுவதால் சிரமம் உண்டாகும். எம்மிடத்து எழுபது வெள்ளம் வானரச் சேனை உள்ளது. கடல்போல உலகம் முழுவதும் பரந்து மூடவல்லது. ஆழியை அருந்த வேண்டுமானாலும், அயன் படைத்த அண்டத்தைக் கீழே பிடித்து எடுக்க வேண்டு என்றாலும் தமக்கு நேர்ந்த கட்டளையைத் தவறாமல் செய்யும் இஃது அநுமனது முத்தான, முத்தாய்ப்பான பேச்சு சோர்வுற்ற இராமனுக்குக் கிளர்ச்சியும் உற்சாகமும் ஊட்டும் விதமாக அவனுடைய சொற்கள் அமைந்தது என்று மதிப்பீடு செய்கின்றார் ந.சுப்புரெட்டியார்.

பிராட்டியைக் கண்டு திரும்பிய அநுமன் இராமனிடம் செய்தியைக் கூறும்போது இலங்கையில் பிராட்டி குற்றமற்ற நிலையில் இருப்பதைத் தெரிவித்தற்காக ஈண்டு பேசாத பேச்சிலும் சொல்லின் செல்வனைக் காணமுடிகின்றது. முதலில் பேச்சைத் தொடங்கும்போதே,

***“கண்டெனன் கற்பினுக்கு***
***அணியைக் கண்களால்***
***தென்திரை அலைகடல்***
***இலங்கைத் தென்னகர்***
***அண்டர்நா யகஇனித்***
***துறத்தியால் ஐயமும்” (22)***

என்று இரத்தினச் சுருக்கமாகப் பொருள் பொதிந்த சொற்களால் அற்புதமாகத் தொடங்குகின்றான். பயனிலையில் தொடங்கி எழுவாயில் முடிக்கின்றான். எழுவாயில் தொடங்கினால் பயனிலையால் முடிப்பதற்குள் ஆயிரம் ஐயங்கள் தோன்றுமல்லவா? அவற்றைத் தவிர்த்தற் பொருட்டே ‘கண்டெனன்’ என்று தொடங்கினான் என்பது சிந்தித்து அனுபவிக்கத்தக்கது என்று அநுமனை ஆசிரியர் நம் உள்ளத்தில் சிரஞ்சீவியாய்ப் போற்றிப் பாடுகிறார். கவிக்கு நாயகன் அநுமனே என்றும் வர்ணித்துக் கூறுகின்றார்.

## சிந்தனைச் செம்மல்

***“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்***
***எண்ணுவம் என்பது இழுக்கு” (குறள். 467)***

நன்றாக எண்ணிய பிறகே ஒரு செயலைத் துணிந்து தொடங்க வேண்டும். ‘துணிந்தபின் எண்ணுவோம்’ என்று கருதுவது குற்றமாகும். சிந்திக்கும் ஆற்றல் மனிதன் ஒருவனுக்கே இறைவனால் வழங்கப்பெற்ற ஓர் அற்புத ஆற்றல். அதனை வளர்த்துக் கொண்டு அதனைச் செயற்படுத்துவது ஒவ்வொருவரின் கடமையும், பொறுப்பும் ஆகும். கவிநாயகனான அநுமனிடம் இவ்வாற்றல் அற்புதமாகச் செயற்பட்டுத் திகழ்வதை ஆசிரியர் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

அநுமன் இராம, இலட்சுமணனை முதன் முதலில் கண்டபோது அவர்களைக் கூர்ந்து நோக்குகிறான். இவர்கள் துன்பத்தினால் வருந்தி அயர்ந்தவர்கள் போல் காணப்பெறுகின்றனர். மேலும் அறத்தையும், ஒழுக்கத்தையும் செல்வமாக எண்ணுபவர்கள். இவர்கள் சினம் என்னும் தன்மை சிறிதும் இல்லாதவர்கள். கருணைக் கடலாகத் திகழ்பவர்கள்.

இவர்கள் சுக்கிரீவனுக்கு எதிரிகள் இல்லையென்று உணர்ந்து சிந்தனையைச் செயல்படுத்துகிறான். மேலும் பிராட்டியைத் தேடிக் கொண்டு அணுவின் மேருவின் ஆழியான் எனச் சொல்லும் அநுமன் இலங்கை நகர் முழுவதும் தேடிக் கொண்டு வருகின்றான். கும்பகர்ணன், வீடணன், இந்திரச்சித்து, மண்டோதரி, இராவணன் முதலியவர்களைக் காணும் போது, அநுமன் நமக்கு ஒரு சிந்தனைச் செம்மலாகக் காட்சி தருகிறான்.

அசோக வனத்தில் சீதா பிராட்டியைக் கண்டு பேசிய இச்சிறு செயலோடு திரும்புதல் தனது ஆண்மைக்கு இழுக்காகும். தனது ஆண்மையைப் பகைவர் மதிக்குமாறு பெருங்காரியத்தைச் செய்து போதலே தகுதி என எண்ணி அசோக வனமாகிய இச்சோலையை அழித்தால் அக்காரணம் பற்றித் தன் மேல் சினம் கொண்டு போருக்கு வருகின்ற அரக்கர்களையும், இராவணனையும், அவன் பத்துத் தலைகளையும் பனங்காய்போல் உருட்டினால் தன் மனத்துயர் தணியும் என்று சோலையை அழிக்கத் தொடங்குகின்றான். அவன் கருதியபடியே இந்திரசித்தால் பாசத்தால் கட்டப்பெற்று, இராவணன் முன் நிறுத்தப் பெறுகின்றான். இங்கு அவன் சிந்தனையுடன் செயல்பட்டுச் செய்ததை நயம்பட எடுத்துரைக்கின்றார் ந.சுப்புரெட்டியார்.

## நிறைவுரை

கம்பராமாயணக் காப்பியத்தில் இராமன் மீது அநுமன் கொண்டுள்ள பக்தி, காப்பியம் முழுவதும் தேனாகப் பாய்ந்து செவிக்கு இன்பம் ஊட்டுகிறது. அநுமன் இராமனை நோக்கி நீ எல்லா உலகங்களையும் காக்கும் முழுமுதற் கடவுளின் அம்சமாதலால் நீரே எமக்குப் புகழ் உம்மைச் சரணம் அடைவதே எமக்கு பாக்கியம் என்று கூறுவதன் மூலம் அநுமனது பக்தியின் ஆற்றலை உணர முடிகிறது. சீதா பிராட்டியைத் தேடும் பணியில் அநுமனது வீர உணர்வும், இலங்கையைக் கடந்து இராவணனை வதைசெய்ய வழிகாட்டியமையும், இராமன் மீது கொண்ட பக்தியாலேதான். இராமனின் மீது அநுமன் வைத்த மட்டற்ற பக்தி வெள்ளம் கம்ப காவியத்தில் தடையின்றிப் பாய்ந்தோடிக் கரைகாண முடியாத பேரின்பத்தைத் தோற்றுவிப்பதைக் கம்பரின் கவிதை வரிகளைக் கொண்டே நூலாசிரியர் தெளிவுபடுத்திக் காட்டியிருப்பது சுவைத்து இன்புறத்தக்கது. இராமனின் நெஞ்சில் குடிகொள்ளும் வாய்ப்பைப் பெற்ற பாத்திரங்களில் அநுமன் உயர்ந்தோங்கி நிற்கிறான் என்பதையும், மற்ற பாத்திரங்கள் இராமனைத் தொழுது நிற்கும்போது, அநுமனை நோக்கித் தன்னைப் 'பொருந்துறப் புல்லுக' என இராமனை விளித்துத் தழுவிக் கைப்பிடிக்குள் ஆண்டவன் பள்ளி கொண்டுள்ள சிறப்பினைப் புலப்படுத்துகின்றது என்பதையும் ந.சுப்புரெட்டியார் திறம்பட எடுத்துரைத்துள்ள திறனாய்வு நெறியை இக்கட்டுரை தெள்ளிதின் உணர்த்தி நிற்கின்றது.

## துணை நூற்பட்டியல்

1. கம்ப இராமாயணம் - வரதமணி
2. திருக்குறள் - மு. வரதராசனார்.

# 29. காலமும் கவிஞர்களும் கட்டுரைத் தொகுப்பில் "பாவை நோன்பு"

**சு. மலர்விழி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

தமிழ்ப் படைப்பிலக்கிய வரலாற்றில் தமிழர்களின் அறிவுச் செல்வங்கள் எல்லாம் கவிதை வடிவில் காட்சியளிக்கின்றன. இலக்கியங்கள் மட்டுமல்லாது இலக்கணங்கள், நிகண்டுகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், நூலின் முகவுரைகள், மருத்துவ ஜோதிட நூல்கள் யாவையும் கவிதை வடிவிலேயே எழுந்துள்ளன. தமிழில் உரைநடை, உரையாசிரியர்களின் காலத்தில் அரும்பி, ஐரோப்பியர் வருகையில் போதாகி, அச்சுப் பொருள் வளர்ச்சியால் மலர்ந்து, நவீன வாழ்க்கைத் தேவைகளை ஒட்டி மணம் வீசத் தொடங்கியுள்ளது. உரைநடைச் செல்வத்தின் பல வடிவங்களில் ஒன்று கட்டுரை. ஒரு பொருள் குறித்துப் பல்வேறு கருத்துக்களைத் தொகுத்து வரையப்படும் சொற்பெருக்கே கட்டுரையாகும். காலமும் கவிஞர்களும் என்னும் கட்டுரைத் தொகுப்பு பல்வேறு மலர்களில் வெளிவந்த கட்டுரைகளாகும். அதில் 'பாவை நோன்பு' என்னும் தலைப்புக் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

## பாவை நோன்பு

இல்லறத்தார் கடைபிடிக்கும் வழிபாட்டு நெறியில் பாவை நோன்பும் ஒன்று. பண்டைக்காலத்தில் பெரும்பாலும் சிறுபெண்கள் கொண்டாடி வந்தனர். அதிகாலையில் எழுந்து ஆற்றுக்குச் சென்று குளித்து விளையாடியபின் நீர்த்துறையில் படிந்துள்ள வண்டலைக் கொண்டு பாவை செய்து வழிபடுதல் வழக்கமாக இருந்து வந்தது. இவ்வாறு இளமகளிர் தொடங்கி விளையாடும் பாவையாடலுக்கு முதுமகளிரும் உடனிருந்து செய்ய வேண்டிய முறைகளை வழியுறுத்துவர். சங்க இலக்கியங்கள் இதனைத் 'தைநீராடல்' என்றும் பிற்கால இலக்கியங்கள் 'மார்கழி நீராடல்' என்றும் குறிப்பிடுகின்றன. பரிபாடல் இதனை 'அம்பா ஆடல்' என்றும் சுட்டும். பாவையை வைத்து ஆடப்படுதலால் அம்பாவையாடல் என்று வழங்கி 'அம்பாவாடல்' என்று மருவியுள்ளது. மார்கழி மாதத்தில் கொண்டாடுவதால் இது மார்கழி நோன்பு என்று வழங்கி வருகின்றது.

## திருப்பாவை

இப்பாவை நோன்புக்கு நல்ல சான்றுகளாக இருப்பவை ஆண்டாள்

அருளிச் செய்த திருப்பாவையும், மணிவாசகர் திருவாய் மலர்ந்தருளிய திருவெம்பாவையும் ஆகும். திருப்பாவை சந்தம் பொலியும் பாமாலையாகத் தமிழ் இலக்கியத்தை அலங்கரித்து நிற்கின்றது. சிறந்த இசைத்தமிழ் பாசுரங்களை நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்ற நூலில் முதலாயிரத்தில் இரண்டாவது திவ்வியப் பிரபந்தமாகச் சேர்த்திருக்கின்றனர். இதில் முப்பது பாசுரங்கள் உள்ளன. வைணவர்கள் இதனை,

***"பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடிகாட்டும் வேதம்***
***அனைத்துக்கும் வித்தாகும்!"***

என்று பாராட்டிப் புகழ்ந்திருக்கின்றனர்.

சிறுவயது முதல் கண்ணன் வரலாற்றினையும், அவனின் லீலைகளையும் கேட்டறிந்த ஆண்டாள் கண்ணனையே தன் நாயகனாக அடைய வேண்டும் என்ற நோக்கில் தன் பாவனா சக்தியின் மூலம் தான் வாழும் இடத்தைக் கோகுலமாகவும், தன்னைக் கோபிகையாகவும் எண்ணிப் பாடுகிறாள் என்றும் கருத்துக்கள் மூலம் திருப்பாவையையும் ஆண்டாளின் கண்ணன் மேல் கொண்ட காதலும் இவர் எழுத்துகள் மூலம் அறிய முடிகிறது.

## திருவெம்பாவை

திருவெம்பாவையும் தமிழ் இலக்கியத்தை அணிசெய்து நிற்கும் ஓர் இசைத் தமிழ்ச் செல்வமே. இதில் இருபது பாடல்கள் உள்ளன. இப்பிரபந்தம் மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் அருளிச் செய்தார். இப்பாடல்களை மார்கழி மாதம் திருவாதிரைக்கு முன் பத்துத் தினங்களும் ஓதுவித்துத் தீபாராதனை நடத்தி வரும் வழக்கம் இன்றும் இருந்து வருகின்றது. முதல் நாள் பன்னிரு திருமுறைகளையும் முறையே ஓதுவித்துத் திருக்காப்பிடுவர். இறுதியில் பன்னிரு திருமுறைகளையும் ஓதச் செய்து தீபாராதனை நடத்துவர். இவ்வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

## பொதுக்கருத்துக்கள்

இரண்டு பிரபந்தங்களும் வெவ்வேறு தெய்வ வழிபாடுடையாருக்கு உரியவைகளாக இருந்த போதிலும் இரண்டும் ஒரே பொதுக்குறிப்பு உடையவைகளாக உள்ளன என்பதை ஆசிரியர், இரண்டு பிரபந்தங்களும் 'என்பாவாய்' என்றே முடிவதைக் கொண்டும், மார்கழி மாதத்தில் மாதர்கள் வைகறையில் நீராடுவர் என்ற செய்தியைத் திருப்பாவையின் முதற் பாசுரம்,

***"மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்***
***நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரியிழையீர்!"***

என்ற வரிகள் மூலமும் திருவெம்பாவையின்,

*"போற்றியாம் மார்கழி நீராடல்"*

என்ற வரிகள் மூலமும் நிறுவுகிறார்.

இரண்டு பிரபந்தங்களும் மகளிர் ஒருவரை ஒருவர் துயிலெழுப்புவதன் மூலமும் இரண்டும் நோன்பின் பயன்களைக் கிட்டத்தட்ட ஒரே விதமாகவே குறிப்பதன் மூலமும் இரண்டு பிரபந்தங்களும் சமய வேறுபாடுகளால் மாறுபட்டு நின்றாலும் அருள் தன்மையில் இரண்டும் ஒன்று போலவே விளங்குகின்றன என்பதைச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

## முடிவுரை

பாவை நோன்பு என்னும் கட்டுரையின் மூலம் திருப்பாவை மற்றும் திருவெம்பாவையின் சிறப்புகளையும் பாவைநோன்பின் சிறப்பையும் மிகவும் எளிமையாகவும் கருத்துச் செறிவுடன் ந.சுப்புரெட்டியார் விளக்கியுள்ளார்.

# 30. ந. சுப்புரெட்டியார் பார்வையில் அறம்

**இரா. அனுராதா**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

மனித இனம் காட்டுமிராண்டிகளாகக் காடுகளிலும் மலைகளிலும் சுற்றித் திரிந்த பின் ஒரு சமுதாயமாக வாழத்தொடங்கியது. சமுதாயக் கட்டமைப்பிற்குப் பிறகுப் பல்வேறு வகையான தடுமாற்றங்களையும், முயற்சிகளையும் மேற்கொண்டு திருந்திய நாகரிக வாழ்க்கையை வாழத் தொடங்கியது. மனித இனம் எண்ணிப்பார்க்க இயலாத பரிணாமவளர்ச்சியை அடைந்து புதிய புதிய மாற்றங்களை ஏற்றுக் கொண்டது. அந்நிலையில் தங்களுக்குள் புதிய கட்டமைப்புகளையும், கடமைகளையும், பொறுப்புகளையும் உருவாக்கி மரபு, பண்பாடு, கலாச்சாரம் என்று பல நியதிகளை வகுத்துக்கொண்டது. அவற்றில் அறம் சார்ந்த கருத்துகளைக் காலந்தோறும் கடைபிடித்துவர வழிமுறைகளையும் வகுத்தளித்தது. தங்களின் பொருள் பொதிந்த அறம் சார்ந்த வாழ்க்கையின் உட்பொருளை இலக்கியங்களையும் வெளிப்படுத்தும்படி வாழ்ந்து காட்டியது தமிழ்ச்சமுதாயம்.

பேராசிரியர் முனைவர் ந.சுப்புரெட்டியாரின் தமிழ் இலக்கியங்களில் அறம்-நீதி-முறைமை என்ற நூலின் கண் உள்ள அறம் சார்ந்த கருத்துகளை "ந.சுப்புரெட்டியார் பார்வையில் அறம்" என்ற தலைப்பில் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது. இதில் அறம்-விளக்கம், நூலின் அமைப்பு, உறுதிப்பொருள்கள், புறம்பொருளில் அறம், அறம் வகையும் தொகையும் என்ற தலைப்பில் கருத்துகளை முன்வைக்கிறது.

"அறம் என்ற சொல்லும், முறை அல்லது முறைமை என்ற சொல்லும், கோல் அல்லது செங்கோண்மை என்ற சொல்லும் சங்க இலக்கியங்களிலே காணப்படுகின்ற சொற்கள். முதன் முதலில் தமிழில் "தமிழ் இலக்கியக் கலைக் களஞ்சியத்தை அபிதான சிந்தாமணி என்னும் பெயரில் உருவாக்கிய ஆ.சிங்காரவேலு முதலியார் "அறம்" என்ற சொல்லைக் கீழ்க்கண்டவாறு விரிக்கிறார். இல்லறம், துறவறம் என இருவகை. இல்லறம், கொடுத்தலும், அளித்தலும், கோடலும், இன்மையும், ஒழுக்கம், புணர்தல், புணர்ந்தோர்ப் பேணல் மற்றவையுமாம்.

துறவறமாவது துறவும், அடக்கமும், தூய்மையும், தவமும் அறவினையோம்பலும், மறவினை மறுத்தலும் பிறவுமாம் (வீரசோழியம்).

அறம் முப்பத்திரண்டு ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தோர்க்குண்டி, பசுவிற்கு வாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணஞ்சுடல், அறவைத் தூரியம், சுண்ணம், நோய் மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காசோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், கா, ஆவுறுஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுதல், விலை கொடுத்துயிர் காத்தல், கன்னிதானம் முதலியனவாம்.

சென்னைப் பல்கலைக் கழகம் *1982*-ல் வெளியிட்ட தமிழ்ச் சொல்லகராதி (தமிழ் லெக்சிகன்) அறம் என்ற சொல்லுக்குக் கீழ்க்கண்டவாறு பொருளுரைக்கிறது.

"அறம் - *1.* Moral or religious duty, virtue, performance of good works according to the sastras, duties to be practised by each caste.

தருமம் (பிங்) *2.* Merit புண்ணியம், அறம் பாவமென்னு மருங்கயிற்றாற் கட்டி (திருவாசகம் *1, 52*)

3. That which is fitting, excellent, தகுதியானது (இறை *29*, ப.*136*)
4. Religious fault (சீவக *544*) சமயம்
5. Wisdom, ஞானம், அறத்தின் விருப்புச் சிறப்பொரு நுந்த (ஞானா, பாயி. *5*)
6. Feeding house - அறச்சாலை அறத்துக்கும் புறத்தன் (T.A. *819*)
7. Fasting - நோன்பு (சீவக. *386*)
8. Letters or words in a verse which cause harm தீப்பயனுண்டாக்குஞ் சொல்" (கம்பனில் சட்டமும் நீதியும், நீதியரசர், வெ.இராமசுப்பிரமணியன், ப.*12*)

## புறப்பொருள் - விளக்கம்

***"அறம் பொருள் இன்பம்வீடு அடைதல்***
***நூற்பயனே (நன்னூல்-10)***

என்றும் நன்னூல் விதி. வழி வழியாகத் தமிழர்கள் பால் மரபாக வழங்கிவந்த கருத்தே இலக்கணத்தில் நூற்பா வடிவில் காணப் பெறுகின்றது. வடமொழி வாணர்கள் இக்கருத்தையே தர்மம் அர்த்தம், காமம், மோட்சம் என்று கூறுவர். இந்த நான்கு பொருள்கள் இன்பம் ஒன்று நீங்கலாக ஏனைய மூன்றையும் முன்னோர் 'புறப்பொருள்' என்று வழங்கினர். சுருங்கக்கூறின் இன்பம் 'அறம்' என்றும் பொருள் 'புறம்' என்றும் கூறி விடலாம். பொருளை ஒழுங்காகப் பயன்படுத்துவதனால் பொருளை நுகரும் இன்பத்தினும் சிறந்த பேரின்பமாகிய வீடுபேறு உண்டாதலின் ஒழுங்குமுறை என்னும் அறமும் அதன் பயனாகிய வீடும் பொருளோடு சேர்த்துப் 'புறப்பொருள்' என வழங்கலாயின.

## அறம் - விளக்கம்

'அறம்' என்ற சொல் விரிந்த பொருளுடையது. மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தையும் இதில் அடக்கிக் கூறலாம். தமிழர் வாழ்க்கையில் - அக வாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் அறம் - கடைப்பிடிக்கப்பட்டு வருதலைத் தமிழ் இலக்கியங்களில் குறிப்பாகவும் தெளிவாகவும் புலப்படுத்தியிருக்கிறது.

'அறம்' என்ற சொல் நீதியைக் குறிக்கும். அதற்கு மேலும் பல பொருள்களைத் தரும். அறம் என்ற சொல் இடத்திற்கேற்பப் பல பொருள்களில் வழங்கப்படுகின்றது.

கருத்துப் பொருள் இப்படிப் பலவகையில் இருந்தாலும் அவையெல்லாவற்றுக்கும், அடிப்படையாக உள்ள அதன் சொற்பொருள் 'அற்றது' என்பதாகும். அது பற்றற்ற நிலை; தன்னலப்பற்று அற்ற தூய்மை; நுட்பமும் ஆற்றலும் கொண்ட அந்நிலையை 'உண்மை' என வழங்கலாம். 'நன்மை' என்றும் 'நேர்மை' என்றும், 'குணம்' என்றும் 'நல்லூழ்' என்றும் 'கடமை' என்றும் பிறவாறும் கருதலாம். ஆகவே தொல் ஆசிரியர்கள் 'அறம்' என்பதைப் பல்வேறு கருத்துக்களிலும் ஆள்வர்.

பொதுவாக நல்ல கருத்துகளையெல்லாம் 'சிவம்' என்ற சொல்லால் நம் பண்டையோர் உணர்த்துவது போல் 'அறம்' என்ற சொல்லும் பல நல்ல கருத்துகளையெல்லாம் தன்னுள் அடக்கியுள்ளது எனலாம். எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளைச் 'சிவம்' என்று வழங்கினால் அதன் இயக்கத்தைச் செயலை, செயலாற்றலை அருளை 'அறம்' எனலாம்.

இக்காரணத்தால் அறம் அம்மையைக் குறிக்கும். அதாவது சிவத்தின் ஆற்றலை நெறிமுறையை, எதிரற்ற இயக்க வல்லமையைக் குறிக்கும். அம்மை அப்பன் வேறு என்பது பொருந்தாததைப் போலவே, அறமும் சிவமும் வேறு அல்ல என்பது போதரும்.

அறம் என்ற சொல் இடத்திற்கேற்பப் பல பொருள்களைத் தரும். இருப்பினும் அதன் சொற்பொருள் 'அற்றது' என்ற பொருளையே தருகிறது என்பதை அறியமுடிகிறது.

மேலும் 'சிவம்' என்ற சொல் கடவுளை உணர்த்தினால் அதன் இயக்கத்தை 'அறம்' என்று குறிப்பிடுவதையும், அறத்தை அம்மையாகக் குறித்து அம்மை அப்பனும், அறமும் சிவனும் வேறு வேறு அல்ல என்ற கருத்துகளைப் பெற முடிகிறது.

## புறப்பொருளில்

பொய்யாமொழியார், 'அறமே' வாழ்க்கைக்கு வேண்டிய சிறப்பைத்தரும்; செல்வத்தையும் தரும்; ஆகையால் அறத்தைவிட உயிருக்கு ஆக்கமானது வேறு எது என்று வினவுவார்.

***"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு***
***ஆக்கம் எவனோ உயிர்க்கு" (குறள். 31)***

என்பது அவர்தம் வாய்மொழி; திருவாய்மொழி; அறத்தை விட ஆக்கமும் இல்லை; அதனை மறந்து கைவிடுவதைவிடக் கெடுதியும் இல்லை என்று தாம் வகுத்த வினாவுக்கு விடையும் தருவார்.

***"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை***
***மறத்தலின் ஊங்கில்லை கேடு" (குறள். 32)***

என்பது அவர் வாக்கில் அவர் தந்த விடை இங்ஙனம் அறத்தின் சிறப்பை வற்புறுத்திய பெருமான் ஆகையால் அறச்செயல்களை இயலும் வகையால் ஓயாமல் செய்ய வேண்டும்; செய்யத்தக்க வழியால் எல்லாம் செய்தல் வேண்டும் என்கின்றார்.

***"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே***
***செல்லும்வாய் எல்லாம் செயல்" (குறள். 33)***

சிலர் இப்போது இளமைப்பருவம் தானே - ஆகையால் 'அறத்தைப் பற்றி இப்போது கவலை வேண்டா. பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று அறம் செய்வதைத் தள்ளிப் போடுவார்கள்; காலதாமதம் செய்வார்கள் இது தவறு; இளமை முதற்கொண்டே அறம் செய்ய வேண்டும்; அவ்வாறு செய்யப்படும் அறமே அழிவு வருங்காலத்தில் அழியாத் துணையாக நின்று காக்கும் என்று கூறுவார். அப்பெருந்தகை,

***"அன்றறிவாம் என்னாது அறம்செய்க; மற்றது***
***பொன்றுங்கால் பொன்றாத் துணை" (குறள். 36)***

என்பது அவருடைய திருவாக்கு. 'செய்த உடம்பு அழியவும், உயிரோடு ஒன்றி ஏனைய உடம்பினும் சேறலின், பொன்றாத் துணை என்றார் என்று உரை கூறுவர் பரிமேலழகர். இத்தன்மையுடைய அறத்தினை நிலையற்ற யாக்கை நிலைத்து நிற்கும்பொழுதே செய்ய வேண்டும் என்று இக்குறளில் வற்புறுத்துவதைக் கண்டு மகிழ்ந்ததாகத் திருக்குறளில் உள்ள அனைத்து அறக்கருத்துகளையும் பதிவு செய்கிறார்.

சமண முனிவரின் பாடல் ஒன்றினால் விரைந்து அறஞ்செய்யுமாறு ஆற்றுப்படுத்துதலை,

***"வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்***
***வைகலும் வைகலை வைகும் என்(று) இன்புறுவர்***
***வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்***
***வைகலை வைத்துண ராதார்" (நாலடியார்- 39)***

"நாடோறும் பொழுது கழிதலைத் தமது ஆயுள்நாளிலே கழிதலாக வைத்து நாள் கழிதலின் உண்மை நிலைமையை அறியாதவர்கள். நாள்தோறும் நாள்கழிதல் வந்துகொண்டே இருக்க, அதனை நேரில் கண்டிருந்தும் அதன் உண்மையை அறிந்து அறஞ்செய்தவர்களாய்

நாள்தோறும் ஆயுள்கழிதலை மேன்மேல் இருக்கின்றதென்று எண்ணி மகிழ்ச்சியடையவர்" என்பது இப்பாடலது கருத்து இதில் மக்களின் அறியாமைக்கு இரங்குவது காணத்தக்கது.

இளமை நிலையாமையை உணர்த்திக் காலதாமதமின்றி விரைந்து அறஞ்செய்யுமாறு உணர்த்தும் பல பாடல்கள் 'அறநெறிச்சாரம்' என்ற நூலில் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று,

***"மின்னும் இளமை உளதாம் எனமகிழ்ந்து***
***பின்னை அறிவென்என்றல் பேதைமை தன்னைத்***
***துணிந்தானும் தூங்கா அறஞ்செய்க கூற்றம்***
***அணித்தாய் வருதலும் உண்டு (அறநெறிச்சாரம் - 21)***

என்பது 'மின்னல் போலும் இளமைப் பருவமானது நிலைத்திருக்கும் என மகிழ்ந்து முதுமையில் அறத்தினைப் பற்றிக் கருதுதல் அறியாமையாகும். எமன் இளமையிலும் வருதல் உண்டு. ஆதலால் தனது உடலை வருந்தியேனும் ஒவ்வொருவரும் காலதாமதமின்றி அறம் செய்தல் வேண்டும் என்பதை அறியலாம்.

***"முற்றியிருந்த கனியொழிந் தீவளியான்***
***நற்காய் உதிர்தலும் உண்டு***
***முற்றியிருந்த கனியொழியத் தீவளியான்***
***நற்காய் உதிர்தலும் உண்டு" (நாலடியார் - 19)***

என்ற பாடற் பகுதியில் 'பருவம் முதிர்ந்த கிழவர்கள் மாத்திரமேயன்றி உடம்பு வலிய இளையவர்களும் இரக்கமற்ற எமனால் இறத்தலும் உண்டு' என்ற 'கடுங்காற்றினால் முதிர்ந்துள்ள பழங்கள் மாத்திரமேயன்றி நல்ல காய்களும் உதிர்தலும் உண்டு' என்ற உவமையால் பெற வைக்கும் நேர்த்தி கண்டு இன்புறற்பாலது.

சிலப்பதிகாரத்தில் ஓரிடத்தில் அறம் வற்புறுத்திப் பேசப்பெறுகின்றது. மாடல மறையோன் சீறி எழுந்த செங்குட்டுவன் சீற்றத்தைத் தணிக்கும் முறையில் இதனை எடுத்தோதுகின்றான். யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை முதலியவற்றை ஏதுக்களால் எடுத்துக்காட்டி உயிரின் தன்மையை விளக்கி, 'இன்றே வேள்வி செயல் வேண்டும்' என்று தூண்டும் முறையில்,

***"வானவர் போற்றும் வழிநினக்கு அளிக்கும்***
***நான்மறை மருங்கில் வேள்விப் பார்ப்பான்***
***அருமறை மருங்கின் அரசர்க் கோங்கிய***
***பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்***
***'நாளைச்செய்குவம் அறம்' எனின் இன்றே***
***கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்ஞு***
***இதுஎன விரைந்து வாழுநாள் உணர்ந்தோர்***
***முதுநீர் உலகில் முழுவதும் இல்லை"***
***(சிலப்பதிகாரம், நடுகல் காதை - 175-182)***

என்று கூறுவதைக் காணலாம். ‘இதுநாள் வரை வாழும் நாளை வரையறுத்தவர் உலகெங்கினும் இலர்’ என்று காட்டிய உண்மை நம் சிந்தனைக்குரியது.

திருக்குறள், நாலடியார், அறநெறிச்சாரம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களின் வழியாக அறத்தின் சிறப்பையும் ஓயாமல் இயலும் வகையால் அறம் செய்ய வேண்டும் என்பதையும், யாக்கை நிலையற்றது, ஆயுள் கழிதலை உணர வேண்டும், முதுமையில் அறத்தைப் பற்றி எண்ணுவது அறியாமை, வாழும் நாளை வரையறுத்தவர் இவ்வுலகில் இல்லை அதனால் இளமை நிலைத்திருக்கும் போதே அறம் செய்ய வேண்டும் என்ற உண்மையைப் பெறமுடிகிறது (ந.சுப்புரெட்டியாரின் எழுத்துக்களிலிருந்து).

## தொகுப்புரை

மனித இனம் இன்ப வாழ்க்கை வாழ்வதற்குத் தூய்மையான மனமும், யாருக்கும் தீங்கு நினைக்காத எண்ணமும், பிற உயிர்களிடத்துக் காட்டப்படும் அன்பும் இன்றியமையாது வேண்டப் படுகிறது. மக்கள் அறம் சார்ந்த வாழ்க்கைக்குத் தங்களை ஈடுபடுத்தும் போது தன்னலம் கருதாது பிறர்நலம் பேணிப் பயன் எதிர்பாராது வாழ்வது மேம்பட்ட வாழ்விற்குத் தங்களை உயர்த்தும் என்பதை உணரமுடிகிறது. அறத்தைவிட சிறந்த செல்வம் இல்லை. அச்செல்வத்தை வேண்டி விரும்பிப் பெற வேண்டும். இளமை இருக்கும்போதே அறம் செய்யவேண்டும். முதுமையில் அறம் செய்யலாம் என்பது அறிவுடைமை அன்று. யாக்கையும், நமது வாழ்நாள்களும் நிலையற்றது. நமது வாழ்நாள்களைத் தீர்மானிக்கின்ற வல்லமை இறையாற்றலுக்கே உண்டு எனக் கருதி அறம் செய்வதை இடைவிடாமல் செய்யவேண்டும் என்ற அறம் சார்ந்த கருத்துகளை நூலாசிரியர் ந.சுப்புரெட்டியார் எடுத்துரைத்த பாங்கினை இக்கட்டுரை புலப்படுத்துகின்றது.

# 31. ந. சுப்புரெட்டியாரின் திறனாய்வுத் திறன்

**முனைவர் இரா. சாந்தி**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*பூ. சா. கோ. அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி*
*பீளமேடு, கோயம்புத்தூர் - 641 004.*

வாழும் கவிஞர்களின் கவிதைகளைத் திறனாய்ந்து அக் கவிதைகளின் அற்புதங்களைக் கற்போர் நெஞ்சில் நிலைக்கும் வண்ணம் தொகுத்த நாடறிந்த தமிழறிஞர் ந. சுப்புரெட்டியாரின் திறனாய்வுப் பாங்கினை எண்ணி எண்ணி அகம் மகிழ்ந்தேன். அன்னாருடைய 'வாழும் கவிஞர்கள்' என்ற நூலிலிருந்து, கவிஞர் முடியரசன், நாரா.நாச்சியப்பன், கவிச்செம்மல் டாக்டர் ரெ.முத்துக்கணேசன், டாக்டர் வா.செ.குழந்தைசாமி, கவிவேந்தர், கா.வேழவேந்தன் ஆகியோர் கவிதைகளில் காணலாம். புதியவகை உவமைகள், அவர்களின் மொழிப்பற்று, சமுதாயத்தின் மீதான அவர்களின் பார்வை, சான்றோர்களிடம் அவர்கள் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பு, மரியாதை போன்ற பண்புகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கவிஞர் முடியரசன்

இவருடைய கவிதைகள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சூழ்நிலைகளில் எழுதப் பெற்றிருந்தாலும், பாவேந்தரின் வழி வந்தவராதலால் புதிய உவமைகளை வெளிப்படுத்துவதில் தனித்திறன் பெற்றவராக விளங்குவதை அவரின் அனைத்துக் கவிதைகளிலும் காணலாம்.

'முகிலிடைநிலா' எனும் கவிதையில் நிலவு வெளிப்பட்டதனை இரண்டு உவமைகளாலும், வடமொழியால் தமிழ் கெடுகிறது என்பதனைக் குறிப்பாகப் புலப்படுத்துவதோடு தன்னுடைய தூயத் தமிழ்க் கொள்கையையும் வெளிப்படுத்துவதாகக் கட்டுரை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

***"ஆரியத்தால் ஒளியிழிந்ததமிழர் போல***
***அழகிழந்தாய் உனையடைந்த மேகத்தாலே***
***நாரியரின் முகங்கொண்டு நாணியுள்ளே ...."***

எனவரும் அடிகளில் நிலவினை இருவேறு உவமைகளால் சுட்டிக் காட்டுகிறார்.

கோழியின் பின்னே செல்லும் குஞ்சுகளின் உருவத்திற்குக் கால் முளைத்த தாமரையின் மொக்கு போலக் காட்சிதரும் குஞ்சுகள் என்பார்.

மற்றொரு கவிதையில் மலர்தோறும் சென்று தேனை உறிஞ்சும் வண்டுக்குக் கடைதோறும் வட்டிவாங்கும் கணக்கப்பிள்ளையை உவமையாக அமைகின்றார்.

***"கடன் பட்டமாந்தரிடம் வட்டிகேட்கக்***
***கடைதோறும் புகுந்துவரும் கணக்கனைப் போல்***
***இடம் விட்டுமலர் தோறும் சென்றுதேனை***
***இனிதுறிஞ்சி இசைபாடிச் செல்லும் தும்பி"***

என்று வண்டு, கணக்கப்பிள்ளையோடு ஒப்பிட்டுக் கூறும் நயம் இனிமையானது.

குழந்தைச் செல்வத்தைப் பற்றி குறிப்பிடும் போது,

***"விண்மதியும் தரும் இன்பம் என்றன் பிள்ளை***
***விளையாடும் காட்சிதரும் இன்பம் ஆமோ!***
***பாந்தளிக்கும் இன்பமெலாம் என்றன் பிள்ளை***
***பரிந்துனறும் மழலைதரும் இன்பம் ஆமோ!***
***என் குழந்தைமெய்யில் தாவி***
***இளங்கையால் தொடுகின்ற இன்பம் ஆமோ!"***

என்று மழலைச் செல்வத்தின் இன்பத்தை வள்ளுவத்தையும், பாண்டியனின் புறப்பாடலையும் இங்கு நமக்கு நினைவுகூர்கிறார்.

## கவிஞர் நாச்சியப்பன்

கவிதைகளில் இடம்பெறும் மொழிப்பற்றுக் கவிஞர்களிடமும் காணலாகும். மொழிப் பற்றினை, ந.சுப்புரெட்டியார் அவர்கள் எடுத்துக்காட்டும் பாங்கு மேன்மையானது.

'சொற்சுவையும் சொல்லின் பொருட்சுவையும் சொக்கும் கவிச்சுவையும் சேர்ந்திருக்கும் கற்பனையைக் காட்டும் சுவையமுதே தித்திக்கும் சொல்லோவியமே' என்று கவிஞரின் தமிழ்ப் பற்றினை வெளிப்படுத்துகிறார். மற்றோரிடத்தில், 'பிழையில்லாச் செந்தமிழைப் பெருக்கவேண்டும், பேருலகில் தமிழ் முழக்கம் எழுப்ப வேண்டும்' என்ற கவிதையிலும், இலக்கணத்தும் இலக்கியத்தும் பெரும்புலமை எய்தி எழிற்றமிழைக் கொழிக்கின்ற வல்லமையைப் பெற்று எனவரும் கவிதையிலும், மொழி ஆர்வத்தைப் பெருக்கவேண்டும் என்ற கவிஞரின் ஆர்வத்தினைக் கட்டுரை ஆசிரியர் எடுத்தியம்புகின்றார்.

## கவிச்செம்மல் டாக்டர் ரெ. முத்துக் கணேசன்

தமிழ் இலக்கியங்களில் கவிஞர் கொண்டிருக்கும் அதிகமான ஈடுபாட்டிற்குச் சான்றாக இவர்தம் 'தமிழ்த்தொகை' என்ற நூல் அமைகின்றது.

***"கடல்வாய்ப் புகுந்தாய் கறையான் வாய்த்தப்பி***
***ஞாலத்தவர் மயக்கோநன்று . . . . ."***

என்று பல மொழிகட்கும் தாயாக விளங்கும் தமிழ்மொழியை இவ்வுலக

மக்கள் மயக்கத்தால் கன்னி கன்னி என்றே வழங்குவதாக விளக்கம் தருகிறார். தமிழை மற்றொரு இடத்தில் தாயாக உருவகிக்கிறார்.

***"முத்துப் பல்வரிசை முகங்காட்டும் இச் செல்வி***
***இசைத்ததுவும் நல்லுரைவெண் பாவோ அம்மானை"***

என்றும்,

***"கலையாகிக் கருத்தாகி ஒலியாகி***
***எழுத்தாகிக் கவியுமாகித்***
***சிலையாகி அறமாகி ஒளிர்கின்ற***
***தமிழ்த்தாய் . . . . ."***

என்பார்.

## உவமைகள்

***"நிலம் பூத்தமலர்க் கூட்டம் சிதைவுறாமல்***
***நிளுறுப்பால் தேனெடுக்கும் தேனிபோலக்***
***குலம் பூத்தவாழ்விருக்க வளமைஉண்ணும்***
***குள்ளநரி தந்திரத்தார்"***

எனவரும் கவிதையடிகளில் உவமைகளின் சிறப்பையும் நரித் தந்திரமுடைய அமைச்சர்கள், பொம்மை அரசர்கள், கையாலாகாத மன்னர்கள் இவர்களைக் குறிப்பிட்டு வாசகனைச் சிந்திக்க வைக்கும் கவிஞனின் திறத்தைக் கட்டுரையாசிரியர் சுட்டிக் காட்டுகின்றார்.

## டாக்டர் வா.செ. குழந்தைசாமி

பொறியியல் அறிஞர். நீர்வளத்துறையில் முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர், பல்வேறு பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர் பதவிகளை அலங்கரித்தவர். இவரின் கவிதைகளில் உள்ள தமிழ்ச் சுவையை, தமிழர்கள் அல்லாதவரும் அனுபவிக்க வேண்டும். தமிழரின் பண்டைப் புகழ் உலகிடைப் பரவவேண்டும் என்ற ஏக்கத்தையும், ஆர்வத்துடிப்பை ஏற்படுத்துவதையும் காணமுடிகிறது.

***"சங்கம் கட்டிஉண்மைஆய்ந்த***
***தமிழர் வாழ்வின் தகைமை இடையில்***
***மங்கநேர்ந்தகொடுமைஎண்ணி***
***வாடும் நெஞ்சே. . . . . . . . ."***

எனவரும் அடிகள், ஆசிரியரின் மொழி வளர்ச்சியடைய வேண்டும் என்ற ஏக்கத்தைக் காணமுடிகிறது. தமிழ் மொழிக்குத் தேவையானவை எவை எவை என்பதனை,

***"ஊசிசெயும் சிறுதொழிலின் நுட்பம் கூற***
***ஒருகோ நூல் வேண்டும் தமிழில் இந்தக்***
***காசினியில் இன்றுவரை அறிவின் மன்னர்***
***கண்டுள்ள கலைகளெலாம் தமிழில் எண்ணி***
***பேசி மகிழ்நிலை வேண்டும். . . . . . . . ."***

என்று பண்டைத் தமிழின் பெருமை, தமிழர்களின் பெருமைகளைப் புதிய சிந்தனைகளோடு பட்டியலிடுகிறார்.

## உருவகம்

பெண்மையைப் பல்வேறு உருவகக் காட்சிகளாக வெளிப்படுத்துகிறார்.

***". . . . . . இம்பர் வாழ்வில்***
***அன்புமது, ஆற்றலது, உயர்வுதேடும்***
***ஆசையது, அடிப்படைகள் அனைத்தும் பெண்மை"***

என்பார்.

## கவிவேந்தர் கா.வேழவேந்தன்

தம்முடைய தமிழ்ப்பற்றைப் பல்வேறு இடங்களில் பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

***"நடனம் ஆடுதற்கே நட்டுவனார் ஆடுகின்ற ஞானத்தமிழ்"*** என்று தமிழைப் பாராட்டுகின்றார்.

***"தமிழ்க் கவிதை நமக்கென்றும் தெவிட்டாத பொங்கல்"*** என்பார்.

## படிமம்

வானம் குறித்த கவிதைகளில்,

***"வானகமே! வெளியரங்கே கட்டணத்தை***
***வாங்காமல் காட்சிகள் ஏன் காட்டுகின்றாய்?***
***பொத்தலுள்ளகுடையாநீ? தூற்றலாலே***
***பூ மண்ணைக் குளிரவைத்துச் சிரிக்கவைத்தாய்!***
***உண்டான இவ்வுலகம் உடுக்களைப் போல்***
***ஓர் நாளில் வீழுமென்றா உணர்த்துகின்றாய்?"***

என்று சொல்நயமும், பொருள் நயமும் இவருடைய கவிதைகளில் கை கோர்த்துச் சிறப்புசெய்வதனைக் கட்டுரையாசிரியர் நயம்பட எடுத்துரைக்கின்றார்.

சான்றோர்களைக் குறித்தக் கருத்துக்களைப் பார்க்கும்போது அனைத்துக் கவிஞர்களும் பெருமிதமாகக் கவிதை படைத்துள்ளனர்.

கவிஞர் முடியரசன் அவர்கள், கவிமணி, பாரதிதாசன், திரு.வி.க., கா. அப்பாத்துரை, மணிலைசிவமுத்து, சொ.முருகப்பா, அண்ணா, காந்தியடிகள், தந்தைப் பெரியார் போன்றோர்களை நினைவு கூர்கிறார்.

நாரா. நாச்சியப்பன் - மறைமலையடிகள், அண்ணா, கலைஞர், பெரியார், நாவலர் நெடுஞ்செழியன் போன்றவர்களைக் குறிப்பிடுகிறார்.

ரெ. முத்துக்கணேசன் அவர்கள் கவிமணி போல் பலரைப்பற்றி இரங்கற்பாவால் பாடியுள்ளார். கவியரசு கண்ணதாசன், கம்பன் அடிப்பொடி சா. கணேசன், புலவர் இராய. சொ. போன்றோர்கள். வா.செ.குழந்தைசாமி அவர்கள் - தந்தைப் பெரியார், பாரதிதாசன்,

பாரதி, நேரு, குன்றக்குடி அடிகளார் இவர்களைக் குறிப்பிடுகின்றார். இச் செய்திகளைத் தொகுத்துப் பார்க்கும்பொழுது கவிஞர்களின் பண்பு ஒன்று போலவே உள்ளது.

## சமுதாயம்

கை புனைந்தியற்றிய கவின்பெறு வனப்புச் செயற்கை. அத்தகைய செயற்கைத் தொழிலாளர்களின் கைவண்ணத்தில் உருவான கிருட்டிணராஜ சாகர் நீர்த்தேக்கத்திற்கு அருகிலுள்ள பிருந்தாவனம் பற்றி அற்புதமான கவிதை வடிக்கின்றார். படைத்த தொழிலாளர்களை வாழ்த்துகின்றார். தொழிலாளர்கள் மீது இரக்கம் காட்டி முதலாளி சமூகத்தின் மீது சீற்றம் காட்டுகின்றார். பொதுவுடைமைக் கொள்கையில் பற்றுடையவரான கவிஞர் இளைஞர்களைக் களங்காண வருமாறு தட்டி எழுப்புகின்றார்.

***"ஆடையிலே அழுக்ககற்றித் தூய்மைஆக்கி
அழகுசெய்து தருகின்றான்
தொடக்கூடாச் சாதியென்றால் தொலைக வையம்"***

என்று சீற்றம் கொள்வர்.

வா.செ.குழந்தைசாமி அவர்கள் சமுதாயத்தில் நிலவும் சாதிப் பிரிவினை எடுத்தியம்புகின்றார். சாதிப் பிரிவினையைத் தமிழ்ச் சமுதாயத்தைச் சீரழிக்கும் புற்றுநோய் என்றும் சாதியின் கொடுமையைப் பற்றிக் கூறும்போது, ஓரரசு ஆணையால் தெருப் பெயரில் உள்ள சாதியினை நீக்கியது. மற்றோர் அரசு பேருந்துகளில் உள்ள பெயர்களை நீக்கியது. இஃதெல்லாம் சாதிபேதத்தால் விளைந்த வரலாற்றினை இடித்துரைக்கின்றார்.

***"சாதியின் குலத்தின் சகதியில் நெளிந்து
ஊதியம் தேடிஊண் வளர்க்கின்ற
சிறியரில் சிறியர் . . . . . . . .
சமந்திப் பாற்கடலை மீண்டும் மீண்டும்
சாதியெனும் கயிறிட்டுக் கடைந்தீர்"***

என்பார்.

***"வேதியர் சாதியை விடுப்பினும் அரசியல்
வாதியர் சாதியை வரமெனத் தாங்குவர்"***

எனச் சாடுகின்றார்.

கட்டுரை ஆசிரியர் பல்வேறு கவிஞர்களில் பன்முகத் தன்மைகளைத் திறனாய்வு செய்து வெளியிட்டு மக்கள் சமுதாயத்திற்கு அளப்பரும் பணியை ஆற்றியுள்ளார்.

# 32. அம்புலிப் பயணம்



**ப. நளினி**
*ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

அம்புவியில் வாழும் மனிதன் அம்புலியை எட்டிப்பிடிக்க இயலாது என்றிருந்த காலம் மாறி அமெரிக்கா, ரஷ்யா அறிவியலறிஞர்களின் அயரா உழைப்பினால் இன்று அம்புலியில் அடிவைக்கத் தொடங்கிவிட்டார்கள். அது மட்டுமன்றி அம்புலிக்குப் பயணம் செய்வது அதனால் ஏற்படும் பயன்களை ஆராய்வது என்று இன்னபிற ஆராய்ச்சிகள் விரைந்து நடைபெறுகின்றன.

திங்கள் மண்டலம் பற்றிய ஆராய்ச்சிகள் வளர்ந்து வருவது போலவே, அது பற்றிய நூல்களும் பெருகலாயின. 'இளைஞர்கள் வானொலி', 'இராக்கெட்டுகள்' 'அதிசய மின்னணு', இளைஞர் தொலைக்காட்டி ஆகிய அறிவியல் நூல்களை இயற்றிய பேராசிரியர் டாக்டர் ந.சுப்பு ரெட்டியார் அவர்கள் 'அம்புலிப்பயணம்' என்றும் நூலினையும் எழுதியுள்ளார். **(அமுதளிக்கும் அம்புலி)**

நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலமாகவே இரவு நேரத்தில் ஒளியை அளித்து மக்களுக்குக் களிப்பினை ஊட்டி வரும் சந்திரன் அவர்கள் கவனத்தைக் கவர்ந்து வந்திருக்கின்றான். பால்மணம் மாறாப் பச்சிளங்குழவிகளும், வான்மதியின் அழகில் ஈடுபட்டுக் களிப்படைவதை நாம் இன்றும் காணலாம். இளவேனிற் காலத்தில் மப்பு மந்தாரம் இல்லாத இரவு நேரத்தில் தாய்மார்கள் தங்கள் குழவிகளை ஏந்திக் கொண்டு அம்புலியைக் காட்டி அகமகிழச் செய்வது இன்றும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்து வருகின்றது. அவர்கள் குழவிகட்கு விசும்பில் தகதக என்று ஒளிவிட்டுத் திகழும் நிலவினைக் காட்டி,

***"நிலா நிலா ஓடி வா***
***நில்லாமல் ஓடி வா***
***மலைமீது ஏறிவா***
***மல்லிகைப் பூ கொண்டு வா" (குழந்தைப் பாடல்)***

என்ற பாடலால் மகிழ்வித்துக் கொண்டு வருவது இன்றும் நாம் நாள்தோறும் காணும் காட்சியாகும்.

எல்லா நாட்டுக் கவிஞர்களும் சந்திரனின் வனப்பில் தம் உள்ளத்தைப் பறி கொடுத்து இனிய பாடல்களைப் பாடியுள்ளனர். தமிழ் மொழியில் 'பிள்ளைக்கவி' என்று வழங்கப் பெறும் பாடல்கள்

மிகவும் பெயர்போனவை. இத்தகைய பாடல்களுக்கு முதன் முதலில் வித்திட்டவர் தாயுள்ளம் படைத்த பெரியாழ்வார் என்ற வைணவ பெரியார். ஒரு நாள் மாலை நேரத்தில் புழுதியில் விளையாடிக் கொண்டிருந்த தன் குழந்தையுடன் விளையாட, சந்திரனை அழைக்கிறாள் அந்த சமயத்தில் சந்திரன் மேகத்தினுள் மறைந்துப் போகிறான் உடனே யாசோதை,

***"மஞ்சில் மறையாதே மாமதி!***
***மகிழந்து ஓடி வா" (பெரியாழ்வார் திருமொழி 14:2)***

என்று வேண்டுகின்றாள்.

மேற்கூறியவாறு கவிஞர்கள் சந்திரனின் அழகில் ஒரு வகையில் ஈடுபட்டு மகிழ்ந்து கொண்டிருக்க மற்றொரு வகையில், அறிவியல் அறிஞர்கள் தொலைநோக்கிகளாலும், பிற வகையாலும் அதனை ஆராய்ந்த வண்ணம் உள்ளனர். இவ்வாறாகத்தான் 'வானநூல்' வளர்ந்தது. சந்திரனுடைய அமைப்பு, அங்குள்ள நீர்வளம், நிலவளம், உயிர்வாழ் பிராணிகள் முதலியவைப் பற்றி அறிந்து கூறினார்கள்.

## வானத்தின் மும்மூர்த்திகள்

வானத்தில் கோடான கோடி அண்டங்கள் அந்தரத்தில் தொங்கிக் கொண்டுள்ளன. இவற்றுள் பூமியில் வாழும் நமக்குப் பெரியவையாகத் தோன்றுபவை சூரியனும், சந்திரனும் ஆகும். எனவே சூரியனும், சந்திரனும், பூமியையும் சேர்த்து மும்மூர்த்திகள் என்போம். வானத்தில் உலவும் ஏனைய அண்டங்களுள் ஒரு சில இவற்றைவிட மிகப் பெரியவை என்றாலும், நமது ஊனக்கண்ணுக்குப் பெரியவையாகத் தோன்றுபவை இவை மூன்றேயாகும். நமது பூமியையும் சேர்த்து ஒன்பது அண்டங்கள் இங்ஙனம் வட்டமிட்டுச் சுற்றி வருகின்றன. இவையெல்லாம் ஒன்று சேர்ந்த கூட்டமே சூரியக் குடும்பம் என்று வழங்கப் பெறுவது

## தாயும் சேயும்

பூமி தோன்றின காலத்திலேயே சந்திரனும் தோன்றிவிட்டதாக அறிஞர்கள் கூறி வருகின்றனர். பூமியைத் தாய் எனக் கொண்டால், சந்திரனை அதன் சேய் எனலாம். இதையும் ரெட்டியார் அவர்கள் ஒரு கதையின் மூலமாக அறிவியலோடு இணைத்துக் கூறுகிறார்.

மேலும் சந்திரனின் அமைப்பு, தன்மை, செல்லும் பாதை, சந்திரனை அடைதல், மீண்டும் திரும்புதல் போன்ற ஒவ்வொரு செய்தியையும், தானே சென்று பார்த்தவாறு விளக்குகிறார்.

## பயணத்திற்கேற்ற ஊர்தி

சந்திர மண்டலத்திற்குச் செல்வதற்கேற்ற ஊர்தி இராக்கெட்டு விமானம் ஆகும். இராக்கெட்டு விமானத்தை அமைத்துப் பூமியைச் சூழ்ந்து கொண்டுள்ள காற்று மண்டலத்தை ஊடுருவிச் சென்று விண்வெளி மண்டலத்தில் பயணம் செய்யலாம் என்று அறிவியல்

அறிஞர்கள் கண்டறிந்தனர். விமானத்தில் அமைப்பு அ∴து இயங்கும் முறை, இயக்குவதன் அடிப்படைத் தத்துவம் பற்றி அறிந்து, முதன் முதல் அடி எடுத்து வைத்த நாடு இரஷ்ய நாடு. ஸ்பூட்னிக் - 1 விண்கலத்தை அனுப்பினார்கள். இராக்கெட்டானது மூன்று அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு அடுக்கிற்கும் பணிகள் பிரிக்கப்பட்டு விண்ணில் ஏவப்படும். ஒவ்வொரு அடுக்கின் செயல்பாட்டையும், ரெட்டியார் அவர்கள் வாழ்வின் அன்றாட செயல்களோடு ஒப்பிட்டுக் கூறுவதால், எளிதில் புரிந்து கொள்ளலாம்.

## திட்டமிட்ட வெற்றிச் செயல்கள்

***“சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்”***
***(பாரதி கவிதை, பாரத தேசம்)***

என்று கனவு கண்டான் நம் நாட்டுக் கவிஞன் பாரதி. இக்கனவை நனவாக்க ரஷ்யாவும் அமெரிக்காவும் திட்டங்களை வகுத்துக்கொண்டு அவற்றைப் படிப்படியாக வெற்றியுடன் நிறைவேற்றி வருகின்றன.

அமெரிக்காவில் நாசா (NASA) National Aeronautics and Space Administration இயக்கத்தைச் சேர்ந்த அறிவியல் அறிஞர்கள் மூன்று திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தி வருகின்றனர்.

## 1. மெர்க்குரித் திட்டம்

ஜான் கிளென், ஸ்காட் கார்ப்பெண்டர், வால்ட்டர் ஸ்கிர்ரா மற்றும் கர்டான் கூப்பர் ஆகியோர் வரிசையாகச் சென்று வந்தனர்.

## 2. ஜெமினித் திட்டம்

இத்திட்டத்திலும் ஜெமினி 1 முதல் ஜெமினி 12 விண்கலங்களை அனுப்பி வெற்றிகண்டனர். இத்திட்டத்தின் நோக்கங்களாகக் குறிப்பிட்ட இடத்தில விண்வெளி வீரர்கள் சந்தித்தல், இரு விண்வெளிக் கலங்களை இணைத்தல், மனிதன் தொடர்ந்து நீண்ட காலம் விண்வெளியில் இருத்தல் போன்றவையாகும்.

## 3. அப்போலோ திட்டம்

நாசா இயக்கத்தினர் வகுத்த மூன்று திட்டங்களுள் மூன்றாவது திட்டமாகும். இத்திட்டத்தின் படி ஒரு மனிதனைப் பாதுகாப்பான விண்வெளிக் காலத்தில் சந்திரமண்டலத்திற்கு அனுப்பி மீட்க வேண்டும். இச் சோதனைகளை முதலில் பூமியின் சுற்றுவழியில் செய்து பார்த்தல் வேண்டும். பிறகு மூன்று விண்வெளி வீரர்களைக் கொண்டும் இச் சோதனைகள் செய்யப் பெறுதல் வேண்டும்.

அப்போலோ 1 முதல் அப்பேலோ 10 வரையுள்ள திட்டங்களில் ஒவ்வொரு செயல்களையும் எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் ரெட்டியார் வரையறுத்து எழுதியுள்ளார். விளக்க வரைப்படங்களும், பூமியைப் பற்றிய காட்சிகளாகத் தொடர்களும் கண்முன் காட்சிகளாகத் தோன்றின.

## அம்புலியில் முதல் மனிதன்

இதுகாறும் எந்த மனிதனும் அம்புலியில் காலடி எடுத்து வைத்ததில்லை. நானூறு கோடி ஆண்டுகளாகச் சந்திரன் விண்வெளியில் உலவி வருகிறான். எனினும் மனிதனேயன்றி வேறு எந்த உயிரியும் அங்கு இருந்ததில்லை. உயிருள்ள ஒரு பொருள் 'பாக்டீரியா' கிருமிகூட அங்கு இல்லை' நமது பொருள்களைத் தூய்மைப்படுத்துவதற்கேற்ற இடம் அம்புலி என நகைச்சுவையுணர்வோடு கூறுகிறார்.

மனித வரலாற்றிலேயே மாபெரும் சிறப்புமிக்க இந்த விண்வெளிப்பயண ஏற்பாட்டினை உலகெங்குமுள்ள மக்கள் தொலைக்காட்சி மூலம் கண்டும், வானொலி மூலம் கேட்டும் களித்தனர். பூமியிலிருந்து மனிதர்கள் இன்னொரு விண்கோளுக்குச் செல்லும் இணையற்ற அருஞ்செயலைச் செய்தவர்கள் நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் எட்வின் ஆல்டிரின்.

இவர்கள் 'அம்புலிக்கு ஒரு கடிதம்' கொண்டு சென்றனர். அதிலுள்ள அஞ்சல் தலையில் அம்புலிமீது (இறங்கிய) முதல் மனிதன் என்ற சொற்கள் பொறிக்கப் பெற்றிருந்தது. (ஜீலை 20, 1969). அனைத்து மக்களும் காணும் விதமாக அந்த குறிப்புப் பலகையையும் நூலில் வெளியிட்டது ரெட்டியாரின் தனிச் சிறப்பாகும்.

அப்புலியைச் சென்றடைவது என்பது ஒரு தொடக்க நிலைச் செயலேயாகும். மனிதன் எதிர்காலத்தில் அம்புலிக்கும் அப்பாலும் செல்வான் வழிவழிவரும் வருங்கால சந்ததியினர் அறிவியலாரின் அறிவாற்றலையும், அறிவியல் வளர்ச்சியினையும் நினைத்துப் போற்றுவர். மேலும்,

***"சாட்டிநிற்கும் அண்டமெலாம்***
***சாட்டையிலாப் பம்பரம்போல்***
***ஆட்டுவிக்கும் குற்றாலத்து அண்ணலார்"***
***(குற்றாலக்குறவஞ்சி, 107)***

என்று கவிஞன் போற்றிப் புகழ்ந்துரைப்பது போலவே அவர்களும் இந்த அகிலத்தின் இயக்கத்துடன் 'அண்டம், பேரண்டம், எல்லையற்ற பிரம்மாண்டம் இவற்றின் இயக்கத்திற்கே அதிபதியாக விளங்கும் ஆண்டவனின் 'அலகிலா விளையாட்டுக்களை' எண்ணி எண்ணி அடக்கமும் பெறுவர் என்பதன் மூலம் ரெட்டியாரின் தெய்வநம்பிக்கை புலப்படுகிறது.

## எதிர்கால திட்டங்கள்

அம்புலியில் கால்வைத்தபிறகு தொடர்ந்து அப்போலோ 12 முதல் அப்போலே 17 வரை பல விண்வெளி கலங்கள் அனுப்பப்பட்டன. இதன் மூலம் அம்புலியைப் பற்றிப் பல்வேறு தகவல்கள் கிடைத்தன. அங்கு நிறுவப்பட உள்ள விண்வெளி ஆய்வகம் மற்றும் விண்வெளி ஓடம் போன்றவையும், அதன்மூலம் செயல்படுத்தப்படும் எதிர்கால

திட்டங்களையும் குறிப்பிடுவதன் மூலம் தமது ஆசையையும் வெளிப்படுத்தியுள்ளார் ரெட்டியார்.

## முடிவுரை

விண்வெளியை வெற்றி கொள்வதில்தான் நவீனகால மனிதன் பெருமிதத்துடனும் பயனுள்ள வகையிலும் ஈடுபட முடியும். நாடுகளை வெற்றி கொள்வதில் அல்ல. இந்தப் போராட்டத்தில் மனித குலம் முழுவதுமே நேச நாடுகளைச் சேர்ந்தவர்களாகின்றனர். அவர்களின் ஒரே எதிரி பகைமை பாராட்டும் விண்வெளிச் சூழலே. இந்த எதிரியை வென்று வாகை சூடினால் அந்த வெற்றி உலகம் முழுவதற்கும் சொந்தாகும் என்று கூறி அனைத்துப் புதிய அறிவியல் ஆராய்ச்சியாளர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டுகிறார்.

ரெட்டியார் எழுதிய 'அம்புலிப் பயணம்' புத்தகத்தின் மூலம் அவரின் அறிவியல் அறிவு நகைச் சுவையுணர்வு, கலையுணர்வு, ஒப்பீட்டுத்திறன் தெய்வ நம்பிக்கை மற்றும் எதிர்கால கனவு தெள்ளத் தெளிவாகப் புலப்படுகிறது. மேலும் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மட்டும் புரிந்து கொள்ளும் வகையில் அமையாமல், சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் அமைந்திருந்தது.

# 33. ந. சுப்புரெட்டியாரின் 'பாண்டி நாட்டுத் திருப்பதிகள்' என்ற நூல் பற்றிய ஒரு சிறு குறிப்புரை



**இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம்**
*எழுத்தாளர்- லண்டன்*
**M.A(Medical anthropolgy).**
**B.A (Hons,film &Video), Cert in health Ed,RGN, RSCN,RM.**

டாக்டர் ந. சுப்பரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழா மலருக்கு ஒரு சிறு குறிப்புரை எழுதச் சொல்லி என்னைக் கேட்ட திரு க.முருகேசன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். எத்தனையோ பல பெரிய விடயங்களைப் பற்றி எழுதிய அந்த அறிவுஜீவியைப் பற்றி என்னைப் போன்ற சாதாரண எழுத்தாழப் பெண்கள் ஆய்வுக் கட்டுரை எழுதத் தகுதியுண்டா? என நினைத்துத் திணறி விட்டேன்.

அமரத்துவமடைந்த தமிழ் மேதையான டாக்டர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் எழுதிய, பல அற்புதமான நூல்கள் அவர் வாழ்ந்த காலத்திலும், அவர் மறைந்த பின்பும் பல்லாயிரம் தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவியாயிருக்கின்றன. அவருக்காக எடுக்கப்படும் நூற்றாண்டு விழா ஆய்வுக் கோவைக்கு அவரின் "பாண்டி நாட்டுத் திருப்பதிகள்" என்ற நூலைப் பற்றி இங்கு எழுதியிருக்கிறேன். அவர் தமிழகத்தில், பலராலும் போற்றப்பட்ட தமிழ் வித்தகர், வைணவ மதத்தைப் பற்றித் தனது, "திருப்பதிகள்" பற்றிய நூலில் பிரமாண்டமாக எழுதியிருக்கிறார்.

அவர் கால் பதித்த தலங்களுடன் எம்பெருமானுக்குள்ள தொடர்பை வலியுறுத்தி மிகவும் விளக்கமாகவும், அழகாகவும் வாசகர்களைப் புத்தகத்துடன் இணையும்படியான விறுவிறுப்புடனும் எழுதியிருக்கிறார். அவர் தரிசித்த தலங்களைப் பற்றிய புராண வரலாறுகள், ஆழ்வார்களின் பாசுரங்கள், சொல்வழிக் கதைகள் (செவிமடு கதைகள்), சரித்திரக் குறிப்புகள், கல்வெட்டுகள் என்ற பல தரப்பட்ட விளக்கங்களை அவர் தனது நூலில் தருகிறார். அத்தலங்கள், இறைவனால் உண்டாக்கப்பட்டவை அல்லது இறைவனின் தூண்டுதலால், இறைவனுக்கு முக்கிய இடம் அவ்விடத்தில் கொடுக்கவேண்டும் என்ற காரணத்தால் மனிதர்களால் எழுப்பப்பட்டவை என எழுதுகிறார்.

"நம் நாட்டுப் பாமர மக்கள், சாத்திர உண்மைகளை அறிந்து கொள்வதற்கு கருவூலம்போல் திகழ்பவை புராணங்களும் இதிகாசங்களுமே, அதுவே இந்தப் பேராய்வுக்குக் கை கொடுத்து உதவுகின்றன" என்று "திருமோகூர்க் காளமேகத் திருப்பதி" பற்றிச் சொல்லும்போது குறிப்பிடுகிறார்(பக்71). பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பற்றிய அவரின் பயணக் கட்டுரைகள் மூலம், அவரின் ஆழமான சமயம் பற்றிய அறிவு தெளிவாக விளங்குகிறது.

அவர் ஒரு சைவசமயவாதி, ஆனாலும் வைணவம் பற்றிய அவர் ஆய்வு, ஒரு சாதாரண மனிதனையும், வைணவம் பற்றிய பல விடயங்களை அறிய வேண்டும் என்ற தூண்டுதலைக் கொடுக்கிறது. ந. சுப்புரெட்டியாரின் மிகச் சிறந்த, செறிந்த சமய அறிவு எனக்கில்லை. அவர், புராணங்கள், இதிகாசங்கள், பழைய பூர்வீகக் கதைகள் மூலம் அவரின் நூலைப் படிப்பவர்களை இன்னொரு உயர் மட்டத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

நான், ஒரு மானுட மருத்துவ வரலாற்று முதுகலைப்பட்டதாரி. மக்களின் வாழ்வியலை, சாதி மத, பேதங்களைத் தாண்டிய அவர்களின், கல்வி, கலை, கலாச்சாரம், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் என்பவற்றின் அடிப்படையில் ஆய்வு செய்பவள். எனவே, இக்கட்டுரை, எனது படிப்பின் மரபிலமைந்த விதத்தில் எழுதப் பட்டிருக்கிறது என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ந. சுப்புரெட்டியவர்கள் திருப்பதிகளைத் தரிசிக்கச் சென்ற தனது பயணத்தை எப்படித் தொடர்கிறார் என்பதை மிகவும் விரிவாக எழுதியிருக்கிறார். இந்நூல் திருப்பதி தலங்கள் சம்பந்தமான ஒரு பயணநூல் என்ற பரிமாணத்தில் எனது ஆய்வைத் தொடர்கின்றேன்.

பயணக் கட்டுரை எழுதுவது ஒரு தனிப்பட்ட கலையாகும். மனிதரைப் பற்றிய கதைகள், காவியங்கள், எழுதுபவரின் அனுபவம், அத்துடன் கற்பனை சார்ந்த உள்ளார்ந்த இலக்கியக் கலைப் படைப்புக்களாகும் (Indoor literature).

பயணக் கட்டுரைகள் அதை எழுதுபவரின் உண்மையான வெளியுலக அனுபவத்தின் அடித்தளத்துடன் எழுதப்படுவதால், வெளியுலகு சார்ந்த இலக்கியப் (Out door literature) படைப்பாகவும், பயணக்கலைப் படைப்பாகவும் (travel literature), பயண ஞாபகப் (Memoire) படைப்பாகவும் பேசப்படுகிறது.

மனித நாகரிக வளர்ச்சியின் முக்கிய இடம் பெறும், கிரேக்க நாட்டிலிருந்து, பாசானியஸ் (Pausanias) என்பவரால் கி.பி இரண்டாம் நூற்றாண்டுக் கால கட்டத்தில் பயணக் கட்டுரைப் படைப்பிலக்கியம் ஆரம்பமாகியிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. சீனாவில், சுகி என்பவர் (sughi, 1037-1101) கல் வெட்டுகளில் பதித்த, "ஒரு நாள் வெளியில் சென்ற அனுபவங்கள்" (Day trip essay) என்ற பதிவில் அவரின் பயண அனுபவத்தில் அவர் கண்ட மனிதர்களிடமிருந்து வந்த

தத்துவார்த்த சிந்தனைகள், ஒழுக்கமுறைகள் பற்றிய குறிப்பை விட்டுச் சென்றிருக்கிறார்.

"பாண்டி நாட்டுத் திருப்பதிகள் நூலை ஒரு புண்ணியதலங்கள் பற்றிய பயண நூலா, அல்லது பாண்டி நாட்டிலுள்ள வைணவக் கோயில்கள் பற்றிய சரித்திரம் பற்றிய குறிப்பேடா அல்லது திருப்பதிகளின் பயணத்துடன் பாண்டி நாட்டு அரசியல், திருப்பதிகளுடன் அரசுகளுக்கிருந்த சரித்திர வரலாறுகளா என்று பலர் திகைக்கும்படி பல விடயங்களைத் தனது நூலிற் கூறியிருக்கிறார். கிரேக்க வான நூலறிஞரான தொலமி திருமோகூர் காளமேகத் திருப்பதிபற்றித் தனது புவிநூற் படத்தில் குறிப்பிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது (பக்88-89).

பயணக் கட்டுரைகள், பலவிதமானவர்களால் படைக்கப் பட்டிருக்கின்றன. அதாவது, ஆரய்ச்சியாளர்கள், (சார்ல்ஸ் டார்வின்) இராணுவத்தினர், வைத்தியர்கள், சரித்திர ஆராய்ச்சியாளர்கள், மற்ற நாடுகளைக் கண்டுபிடிக்க உந்தப்பட்டவர்கள் (மார்க்கோ போலோ, கப்டன் ஜேம்ஸ் குக் போன்றவர்கள்), சமயத்தைப் பரப்புவர்கள், எழுத்தாளர்கள் என்று பலராலும் பிரயாணக் கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவர்கள் எதை ஆராயவேண்டும் என்று சென்றார்களோ அதை விரிவாகப் பல பரிமாணங்களில் விளக்கியிருக்கிறார்கள்.

ஆங்கில நாவல்கள் படிப்பவர்கள், ஜோசப் கொன்ட்ராட் என்பவர் எழுதிய ஹார்ட் ஒவ் டார்க்னெஸ் ('Heart of Darkness by Joseph Contrad) என்ற நாவலைப் படித்தால் ஆப்பிரிக்காவின் கொங்கோ நதிக் கரையில் வாழும் கறுப்பு இனமக்கள் பற்றிய வெள்ளையரின் இனவாதக் கருத்துக்கள் மிகத் தெளிவாகத் தெரியும். இந்நாவல் ஒரு பயணக் கட்டுரை மாதிரி எழுதப்பட்ட நாவல். இதில், ஆப்பிரிக்க மக்கள் பற்றி வெள்ளை இனவாதம் வைத்திருந்த எண்ணங்கள் பதிவாக்கப் பட்டிருக்கின்றன. பக்தியுள்ள கடவுள் தொண்டர்களைக் கண்டு பூரித்த டாக்டரின் நூலுக்கு எதிர்மாறானது இந்நூல்.

கடந்த சில நூற்றாண்டுகளில், இங்கிலாந்து போன்ற நாடுகளில் வேகமாகப் பரவிய, பயணக் கட்டுரைகளின் தாக்கம் டாக்டர் சுப்புரெட்டியாரின் கட்டுரை வடிவில் பிரதிபலிப்பது தெளிவாகத் தெரிகிறது. அதாவது, மேற்கத்தியர், தாங்கள் காணுமிடங்களை அழகாகவும், பார்த்த இடங்களில் வாழும் மக்களைப் பற்றிய பல விபரங்களையும் ஆழமாக வர்ணிப்பதுண்டு. அதே மாதிரி டாக்டரால் எழுதப்பட்ட திருப்பதிகளின் பயணக் கட்டுரையிலும், அவர் இரசித்து எழுதிய சுற்றாடல் சூழ்நிலைகளின் அழகிய விபரங்கள், ("தேன் மொய்த்த பூம்பொழில் தன்பணைசூழ் தென் திருப்பேரெயில்" பக். 183) என்று தொடங்கும் வரிகளைப் படிப்போருக்கு, அந்தத் திருத்தலங்களை எப்படியும் தரிசிக்க வேண்டும் என்ற உணர்வைத் தருகின்றது. திருப்புல்லாணி திருப்பதியைப் பற்றிச் சொல்லும்போது நெய்தல் நிலப் பாங்கையும் மிக அழகாக விபரிக்கிறார் (பக் 43).

காலமாற்றத்தால், பல தலங்களிலும் ஏற்பட்ட மாறுதல்களை, 1965ஆம் ஆண்டுகளில் பாண்டிநாட்டுத் திருப்பதிகளுக்கு அவர் பிரயாணம் செய்தபோது அவர் கண்ட மாற்றங்களை, புராணகாலத்து வரலாறுகளுடன் சேர்த்து அளவிடுகிறார். ஆங்கிலேயர் பல நாடுகளைத் தங்கள் வசமாக்கியபோது, தங்களுக்கு விருப்பம்போல் அவ்விடங்களின் பெயர்களையும் மாற்றினார்கள். திருப்பதிகள் பற்றி நூலிலும் பழைய பெயர்கள் காலக் கிராமத்தில் மாற்றப்பட்டிருப்பதை அல்லது மாறுபட்டிருப்பதை அல்லது மருவி வந்ததைப் பல இடங்களில் காணலாம் (இதற்கும் ஆங்கிலேயர்களுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது).

மதிப்புக்குரிய டாக்டர் ந. சுப்புரெட்டியார் தனது "பாண்டி நாட்டுத் திருப்பதிகள் மூலம்" அதைப் படிக்கும் வாசகனைப் பன்முக ஆராய்ச்சிக்குள் நுழையப் பண்ணுகிறார் என்று நினைக்கிறேன். சிற்பக்கலையை விபரிக்கும் அழகு, பக்திக் கலையை விளக்கும் பவ்யம், சரித்திச் சான்றாக, சங்ககால கட்டத்தைக் கொண்டுவந்து தரும் விளக்கங்கள் (மதுரைக் கூடல் அழகர் பக் 53), ரோமா புரியுடன் தமிழகத்திற்கு இருந்த வணிக உறவு (பக்5) என்பன போன்ற விடயங்கள், இக்கோயில்களைப் பற்றிப் படிப்போருக்கு பல விடயங்களை ஆராயவேண்டும் என்ற உந்துதலைத் தருகிறது

மக்களின் சரித்திரங்களை எடுத்துக் கொண்டால், அவர்களின் சரித்திரத்தின் வளர்ச்சி அவர்கள் நம்பிய கடவுளர்களோடு ஒட்டியிணைந்திருப்பதை, இந்திய சரித்திரம் மட்டுமல்ல, கிரேக்க ரோம சரித்திரங்களைப் படிப்பவர்கள் நன்கு புரிந்து கொள்வார்கள்.

ஆதிகாலத்தில் மக்களையும், அவர்கள் வாழும் இடங்களையும் பாதுகாக்கும் தெய்வங்கள் பெண் தெய்வமாகவிருந்தார்கள்.

நதிகள் மனித வாழ்வுக்கு அத்தியாவசமான நதிகள் என்பன பெண்கள் பெயரிலேயே இருந்தன. பட்டணங்கள் பெண்கள் பெயரில் உருவாகின பாரிஸ், அதென்ஸ் போன்ற நகர்களும், கங்கா, யமுனா, காவேரி, சரஸ்வதி போன்ற நதிகளையும் இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ரோம நாட்டுக் காட்டில் வாழும் வேட்டை மனிதர்களின் தெய்வமாக "டையானா" வணங்கப்பட்டாள்.

மக்கள் வாழும் இடங்களின் பெயர்கள் அந்தக் கடவுளரோடு இணைந்திருப்பது, கிரேக்க நாட்டுத் தலைநகரான "அதன்ஸ்"க்கு அவர்களின் பெண்தெய்வமான "அதென்னா" என்பவள் பாதுகாவலாளியாக இருப்பதாக நம்புவதிலிருந்து உருவானது. அதேபோல உரோம நாட்டை அவர்களின் பெண் தெய்வமான, "வெஸ்ரா" என்பவள் பாதுகாக்கிறாள் என்பது அவர்களின் நம்பிக்கை. கால வளர்ச்சியில் ஆண் தெய்வங்களின் வணக்கமுறை பரந்தது.

பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பற்றிய நூலில் உள்ள பதினெட்டுத் தலங்களையும், எம்பெருமான் மட்டும் பலபெயர்களுடன் எழுந்தருளி

அங்குள்ள மக்களைக் காத்து வருகிறார். அவரின் பெயருடன் அந்த ஊர்களின் வாழ்வும் வரலாறும் வளர்கின்றன. பெரும்பாலான கோயில்களில் எம்பெருமான் தனியாகவே அமர்ந்திருக்கிறார். அவரை ஏங்கி வாடும் தொண்டர்களாகப் பாசுரப் பாடல்களில் பெண்கள் அதிக இடம் பெறுகிறார்கள்.

''பாண்டிநாட்டுத் திருப்பதிகள்'' நூல், ஒரு பயண நூலுக்கான அத்தனை அம்சங்களும் நிறைந்ததாகவிருக்கிறது. ஒருமனிதனின் அறிவு, அவனின் தாய் தகப்பன், உற்றார் உறவினர் போன்றோரிடமிருந்து அவன் பெறும் ஆரம்ப போதனைகளிற் தொடங்கி, பாடசாலைகளின் கல்வியால் பரந்து பட்டுப் பின்னர் அவனின் வாழ்க்கையனுபவங்களால் மிகவும் இறுக்கமாக வரையறுக்கப் படுகின்றன. வாழ்க்கை அனுபவங்களிலொன்று ஒரு மனிதன், ஒரு இடத்திலிருந்து, இன்னொரு இடத்திற்குப் போகும்போது, அவன் அந்த இடத்திலுள்ள பன்முக அனுபவங்களுக்கு முகம் கொடுக்கிறான். தனக்குத் தெரியாத, இயற்கைச் சூழ்நிலை, மொழி வழக்கு, உணவு வகைகள், கலாச்சாரப் பண்பாடுகள் மட்டுமல்லாது, அவன் சந்திக்கும் மக்களின் அரசியல், ஆன்மீக உணர்வுகளையும் தெரிந்து கொள்கிறான்.

ஆதிகாலத்திலிருந்து, பலகாரணங்களால் வேறு இடங்களுக்குச் செல்ல ஆரம்பித்த மனித இனத்தின் வளர்ச்சி, சமய நம்பிக்கைகள் என்பன இன்று மனித உலகம் கற்பனை செய்யமுடியாதவாறு மாறு பட்டிருக்கின்றன. ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கின்றன. இதன் பிரதிபலிப்பு, பாண்டி நாட்டுத் திருப்பதிகள் நூலைப் படிக்கும்போது துல்லியமாக விளங்கியது.

இத்திருப்பதிகளுக்கும் இலங்கைக்குமுள்ள தொடர்பு சில இடங்களிற் காட்டப்படுகின்றன. தென் இந்தியாவுக்கும் வட இந்தியாவுக்குமுள்ள தொடர்புகள் காட்டப்படுகின்றன.

நூலின் ஆரம்பத்திலிருந்தே, இத்திருப்பதிகளுடன் இலங்கைக்கு இருந்த தொடர்பு சொல்லப்பட்டு வருகிறது. இதனால், இந்நூலை ஆவலுடன் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. திருக்கோட்டியூர் திருப்பதிக்கு, இலங்கையைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர். வயி. கரு. சௌமியமூர்த்தி தொண்டைமான் கட்டிட வேலைக்கு 10,000மும் அட்டாங்க விமான மின்சார விளக்குகளுக்கு 10,000மும் கொடுத்த தகவல் சொல்லப்படுகிறது (திருக்கோட்டியூர் திருப்பதி-பக் 15).

திருப்புல்லாணி எம்பெருமான் தலத்தை விபரிக்கும்போது, இராமர் அங்கிருந்து இலங்கைக்குச் செல்லச் சேது கட்டத் திர்மானித்தது சொல்லப் படுகிறது (பக்.39). அதனால் இத்தலம் ஆதிசேது என்றும் சொல்லப்படுகிறது. இத்தலத்தில் சிவபெருமான் இலங்கைக்குப் போகும் இராமருக்கு வில் ஒன்றைக் கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது (பக் 43). அத்துடன் இலங்கைக்குப் போகும் முன். இராமர் தருப்பையைச் (புல்லை) சயனமாக்கி அதிலிருந்து தவம் செய்ததாகக் கூறப்படுகிறது. அத்துடன் இத்திருப்பதிக்குச் சொந்தமான உப்பளங்கள் மன்னாரிலும் (இலங்கை) இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

"திருப்பேரெயில் மகரநெடுங்குழைக்காதன்" திருப்பதி பற்றிச் சொல்லும்போது, "இலங்கையை நீறாக்கியழித்த எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பேரெயில்" என்று பாடியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார் (பக். 194).

பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பற்றிய நூலில் பலவிதமான நாச்சிமார் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இலங்கையின் முதலரசனான விஜயன் 2500 வருடங்களுக்கு முன் வந்த கொஞ்ச காலத்தில், பாண்டிய இளவரசியைத் திருமணம் செய்த சரித்திரமும் அதையொட்டிப் பல பாண்டிய இளவரசிகள் இலங்கைக்கு வந்ததும் வரலாறு. ஆனால், 3000 வருடச் சரித்திரத்தைக் கொண்ட "தான் தோன்றிஸ்வரர்" கோயில் கொக்கட்டிச்சோலை என்ற இடத்திலுள்ளது. அதன்மூலம், இலங்கைத் தமிழர்களின் வாழ்வும் வழிபாடுகளும் மிகப் புராதனமானவை என்று தெரிகிறது.

இலங்கையின் கிழக்குப் பகுதி மண்முனையில் உலக நாச்சியார் என்பவர் அரசியாகவும் ஏறாவூரில் வன்னி நாச்சியார் என்பவர் அரசியாக இருந்த சரித்திரமுண்டு. இலங்கையின் கிழக்குப் பகுதியை ஆண்ட மன்னர்களின் அடையாளமாகப் பிரித்தானிய மியூசியத்தில் தமிழ் எழுத்துக்கள் பதித்த கி.பி. முதலாம் நூற்றாண்டுத் தங்க நாணயங்கள் உள்ளன. இந்த நாச்சிமார் எக்கால கட்டத்தில் இலங்கை அரச பாரம்பரியத்துடன் இணைந்தார்கள் என்ற கேள்வியும் எனக்குள் உண்டாகியிருக்கிறது. எனவே, இந்த அரசிகளின் சரித்திரத்தை ஆய்வு செய்யும் ஆவலை டாக்டரின் நூல் எனக்கு உண்டாக்கியிருக்கிறது.

இந்தியாவிலிருந்து பல மன்னர்கள் இலங்கைக்குப் படையெடுத்திருக்கிறார்கள். இந்திய மன்னர்களின் கடைசிப் படையெடுப்பு இலங்கையுடன் 1564ல் புத்தளம் என்ற இடத்தில் நடந்தது.போர் புரிந்து வெற்றி பெற்ற மதுரை நாயக்கரின், அரசவாரிசுகளும், அதன்பின், சேரநாட்டை அரசபரம்பரையும் இலங்கையின் கண்டிப் பகுதியைப் பிரித்தானியர் 1815ல் பற்றும் வரை ஆண்டவர்கள். அதுவரையும் இலங்கையின் கிழக்குப் பகுதி முழுக்க முழுக்க ஒரு தமிழ் இராசதானியாகத்தானிருந்திருக்கிறது.

டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நூலை ஆய்வு செய்ய ஆரம்பித்ததால், கிழக்கிலங்கைப் பண்டைய வாழ்வும் வரலாறும் பற்றிய உந்துதல் கிடைத்திருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட சிலநாட்களுக்குள் என்னால் முடிந்தவரையும், மாமேதையான டாக்டர் ந. சுப்புரெட்டியார் பற்றி ஒரு சிறு ஆய்வு செய்திருக்கிறேன். தற்காலத்து மாணவர்கள், இப்படியான, நூல்களைப் படிப்பதும் ஆய்வு செய்வதும், தென்னாட்டிலுள்ள கோயில்கள், அவையின், புராண, சரித்திர, சமூக, மனித, அரசியல் தொடர்புகள் பற்றி ஆராய்வதற்கான "தேடல்"களுக்கு மிக இன்றியமையாத விடயமாக இருக்குமென்று நினைக்கின்றேன்.

# 34. ந. சுப்புரெட்டியாரின் ஆய்வுச் சிந்தனையில் பட்டினத்தார்



**முனைவர் ச. சகுந்தலை**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*காமதேனு கலை அறிவியல் கல்லூரி*
*சத்தியமங்கலம்*

## முன்னுரை

அமிழ்தினும் இனிய தமிழைத் துறைதோறும் ஆய்ந்து தமிழுக்கு அருந்தொண்டாற்றியுள்ள பெருந்தகை சுப்புரெட்டியார் அவர் படைப்பிலக்கியங்களில் 87ஆம் வயதில் அருளாசிரியர்களின் அருளிச் செயல்களில் உள்ளுணர்வோடு நெஞ்சுருகி இயற்றிய பட்டினத்தடிகள் என்னும் படைப்பில் இடம்பெறும் இறையருள் சிந்தனையை இறையருளால் ஈண்டு சிந்திப்போம்.

நம்பியாண்டார் நம்பியால், குறிப்பிடப்பட்ட பட்டினத்தார் திரு ஐந்தெழுத்தினை நினைவூட்டும் வகையில்,

பட்டினத்தார்
1. கோயில் நான்மணிமாலை
2. திருக்கழுமல மும்மணிக்கோவை
3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
4. திருஏகம்பமுடையார் திருவந்தாதி
5. திருஒற்றியூர் ஒருபா ஒருபது

என ஐந்து பிரபந்தங்களைப் பாடியருளியுள்ளார். இவ்வைந்து வகை நூல்களிலும் உள்ள இறையருள் சிந்தனையைச் சுப்புரெட்டியார் உணர்ந்து உணர்த்துகின்றார்.

## கோயில் நான்மணிமாலை

இதில் கோயில் என்பது தில்லையம்பதி. சைவர்கள் சிதம்பரத்தை இவ்வாறு வழங்குதல் மரபு. தில்லைப் பெருமான் திருநடனம் புரியுங்கள் அப்பெருமான் நிலத்தே ஊன்றிய திருவடி கீழுலகம் ஏழினையும் கடந்து சென்றது. அவரது திருமுடி எல்லா உலகங்களையும் கடந்து சென்று அண்டத்திற்கு அப்பால் விளங்கியது. இறைவன் வீசியாடும் தோள்கள் எட்டுத் திசைகளின் புறத்தன. இவ்வழகிய தோற்றத்தை மானசீகமாக அனுபவித்த அடிகள்,

***"அடியொன்று பாதம் ஏழிற்கும்,***
***அப்புறம் பட்டதிப்பால்***

***முடியொன்று இவ்வண்டங்கள் எல்லாம்***
***கடந்தது முற்றும் வெள்ளைப்***
***பொடியொன்று தோள் எட்டுத்திக்கின்***
***புறத்தன பூங்கரும்பின்***
***செடியொன்று தில்லைச் சிற்றம்பலத்***
***தான் தன் திருநடமே" (6)***

என்பதில் இறைவன் ஆடும் திருநடனத்தைப் பொறுத்துக் கொள்ளும் நோன்மை இவ்வுலகிற்கு இல்லை என்றவாறு உணர்த்துகின்றார். இத்திருப்பாடல் காரைக்கால் அம்மையாரின்,

***"அடி பேரிற் பாதாளம் பேரும் அடிகள்***
***முடி பேரின் மாமுகடு பேரும் கடகம்***
***மறின் நாடு கைபேரின் வான் திசைகள் பேரும்***
***அறிந்தாடும் ஆற்றாது அரங்கு"***
***(அற்புதத்திருவந்தாதி -77)***

என்ற திருப்பாடலையொட்டி அமைந்திருக்க வேண்டும் எனச் சுப்புரெட்டியார் உணர்த்துகின்றார்.

## திருக்கழுமல மும்மணிக்கோவை

பிரமபுரம், வேணுபுரம், புகலி, புறவம், வெங்குரு, பூந்தராய், கழுமலம், காழி, கொச்சைவயம், கழுமலம், சண்பை, தோணிபுரம் எனப் பன்னிரண்டு பெயர்களுடைய திருக்கழுமலத்து மும்மணிக் கோவையில் "***அருள் பழுத்தளித்த***" என்ற பாடலில் திருஐந்தெழுத்தினை உணர்ந்து ஓதும் அருள் நூல்களைப் பயின்றவனும் அல்லேன். இந்நூல்களைப் பயின்ற ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்தவனும் அல்லேன். நாயேன் இங்ஙனம் நின்னை வழிபடுதற்குரிய தகுதியற்றவனாயினும் அடியேனுக்கு ஓய்வான காலத்தில் அடியேன் நின்னை நினைத்து இட்டது பச்சிலையாயினும் அதனை நறுமலராகவும், அடியேன் நின்னை நினைந்து சொல்வது பிழை மலிந்த சொல்லாயினும் நின்னை வழிபடுவதற்குரிய மந்திரமாகவும் கொண்டு எளியேனைப் பிறவிப் பெருங்கடலில் மூழ்காதவாறு நின் திருவடியாகிய நெடுங்கரையில் சேர்த்துக் காத்தல் அருளாளனாகிய நின் கடமையாகும் என வேண்டிக் கொள்வதாக அமைந்தது இப்பாடல்

***"போதும் பெறாவிடில் பச்சிலை உண்டு புனல் உண்டு எங்கும்***
***ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன்றே இணையாகச் செப்பும்***
***சூதும் பெறா முலைபங்கர்தென் தோணிபுரேசர் வண்டின்***
***தாதும் பெறாத அடித்தாமரை சென்று சார்வதற்கே" (12)***

என்ற திருப்பாடல்

***"யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை***
***யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை***
***யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி***
***யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"***
***(திருமந்திரம் - 252)***

என்ற திருமந்திரப் பொருளையொட்டி இறைவனடி சேர்வதற்கென யாவரும் மேற்கொள்வதற்குரிய எளிய வழிபாட்டு முறையைத் தெளிவாக ஆசிரியப் பெருந்தகை விளக்குதலைக் கண்டு மகிழலாம்.

## திருவிடை மருதூர் மும்மணிக்கோவை

"***ஒன்றினோடொன்று***" எனத் தொடங்கும் நான்காவது பாடலில் இறைவனை நினைந்து போற்றுவதற்கும் ***"அவனருளாலே அவன்தாள் வணங்கி***" என்ற மணிவாசகப் பெருமான் கருதிய வண்ணம் அவன் அருள் வேண்டும் என்ற உண்மயை அறிவுறுத்துவதாக அமைகின்றது. இப்பாடலில்,

***"எந்தையே அடியேன் பிறவிப் பெருஞ்சுழியில்***
***சிக்கித் தடுமாறும்போது அடியேன் உற்ற துன்பத்தையும்***
***அடியேனை ஈன்ற போது தாய் உற்ற***
***துன்பத்தையும் உள்ளவாறு அறிவார் நின்னைத் தவிர***
***யாருளர்?"***

பெருகிய துன்பம் தருவதாகிய இப்பிறவிச் சூழலில் பட்டு அடியேன் இனி பிறக்கும் வலிமை இல்லை. நின்னைப் பற்றி வழிபடும் ஒரு நெறியைத் தவிர பிறவிப்பிணி களைவதற்குப் பிறிதொரு வழியும் இல்லை. மீண்டு வாரா வழி அருளும் நின் திருவருள் நெறியில் ஒழுகுவதற்கு விருப்பு வெறுப்பற்ற ஒருமை மனம் வேண்டும்.

***"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்***
***இறைவன் அடி சேராதார்" (குறள்- 10)***

எனத் திருவள்ளுவர் அருளியது போன்று பிறப்பு என்னும் பெருங்கடலை அடியேன் கடக்க நின்னை நினைந்து, நினைந்து போற்றும் வண்ணம் அடியேன் மனத்தை திருத்தியருளல் வேண்டும் என விண்ணப்பிக்கும் நிலையை ஆசிரியர் தெளிவாக்கிக் காட்டுகின்றார். எவ்வுயிர்களையும் தம் மக்களெனக் கருதி யாவரிடத்தும் ஒப்ப அன்பு செய்தல் அருட் செல்வர்களாகிய கடவுள் தொண்டர்களின் உயர்ந்த வாழ்வாகும் என்பதனைச் சுப்புரெட்டியார் அவர்கள் உறுதியிட்டுக் கூறுகிறார்.

## திருஏகம்பமுடையார் திருவந்தாதி

காஞ்சி மாநகரில் திருஏகம்பம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் போற்றிப் பட்டினத்தார் பாடியருளியது இத்திருவந்தாதியாகும். அதில் 32ஆவது பாடலில் சீலமன்றி அறிவின்றிக் கொலை, களவு முதலிய தீமை புரிந்தொழுகும்,

கீழ்ச்சாதி மக்களாயினும் ஏகம்பநாதராகிய இறைவனுடைய திருவடிக்கு அன்புடைய தொண்டராயின் அவர்களே யாவர்க்கும் மேலான உத்தமராகப் போற்றத்தக்கவர்களாவர் இக்கருத்தினை அடிகள்,

***"படையால் உயிர்கொன்று தின்று பசுக்களைப் போலச் சொல்லும்***
***நடையால் அறிவின்றி நட்டைப் பொய்த்துக் குலங்களினும்***
***கடையாய்ப் பிறக்கினும் கச்சியுள் ஏகம்பத்து எங்களை ஆள்***
***உடையான் கழற்கு அன்பரேல் அவர் யாவர்க்கும் உத்தமரே"***
***(ஏகம்பமுடையார் திருவந்தாதி- 32)***

என்ற பாடலில் பெய்து காட்டுவர். இறைவன் அடிக்குத் தொண்டு பூண்டு ஒழுகுபவர் முன்னர் எத்தகைய குற்றம் உடையவராயினும் அவர்கள் இறைவனுக்கு ஆட்பட்ட பின்னர் அக்குற்றங்களை எல்லாம் எரிமுன்னர்ப் பஞ்சு போலத் தீய்ந்து நீறாக எல்லா நற்பண்புகளும் பெற்று மேம்படுவராதலின் ஆளுடையான் அடிக்கு அன்பரேல் அவர் யாவர்க்கும் உத்தமரே என்றருளினார். இத்திருப்பாடல்,

***"அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்***
***ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்***
***கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்***
***அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே" (6-95-10)***

என்று அப்பர் பெருமான் அருளிய பொன்னுரையைத் தன்னகத்துக் கொண்டு திகழ்வதை ஆசிரியப் பெருந்தகை சுப்புரெட்டியார் அவர்கள் தெளிவாக உணர்த்துகின்றார்.

## திருவொற்றியூர் ஒருபா ஒருபது

திருவொற்றியூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானது சிறப்பை விரித்து உரைக்கும் பனுவலாக அந்தாதி தொடையில் பாடியருளியுள்ளார்.

திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள பெருமானே நின்னைத் திருமால் என்றும் நான்முகன் என்றும் அருகன் என்றும் புத்தன் என்றும் பல்வேறு பெயர்களால் சமயவாதிகள் பலர் மாறுபடக் கூறினாலும் யாவர்க்கும் மேலாம் இறைவனாகிய நீர் அவரவர் நினைந்த திருமேனி கொண்டு தோன்றி அருள் புரியும் தன்மையைப் பட்டினத்தார்,

***"அணங்கிய அவ்வவர்க் கவ்வவை ஆகி அடையப்***
***பற்றியக பளிங்கு போலும்***
***ஒற்றி மாநகர் உடையோய் உருவே" (2)***

என்றருளியுள்ளார். இப்பாடல் திருஞானசம்பந்தப் பெருமான் திரு முதுகுன்றத்தில் பாடியருளிய,

***"மெய்த்தாறு சுவையும் ஏழிசையும்***
***எண்குணங்களும் விரும்புநால்***
***வேதத்தாலும் அறியவொண்ணா நடைதெளியப்***
***பளிங்கே போல் அரிவை பாகம்***
***ஒத்தாறு சமயங்கட்கு ஒருதலைவன்" (1-131:-1)***

என்ற திருப்பாடலின் பொருள் விரித்துரைக்கப்பட்டுள்ளதை உணர்ந்து மகிழுமாறு ஆசிரியப் பெருந்தகை சுப்புரெட்டியார் உணர்த்துகின்றார்

## முடிவுரை

உலகமே பொய் என்பதுணர்ந்து, உலகையே துறந்த பட்டினத்தாரைப் போன்று எவராலும் துறக்க இயலாது என்று தாயுமானவரால் போற்றப்பட்டவர் ***'பட்டினத்தார்", "சிவாய நம என்று சிந்தித்து இருப்பார்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை"*** என்று ***ஔவைத்தாய்*** அருளியது போன்று, அவர் சிவபெருமானையே சிந்தையில் நிறுத்திப் பற்றற்ற வாழ்வு வாழ்வதே வீடுபேறு அடையும் வழி என்று அருளியுள்ளதை ஆசிரியப் பெருந்தகை அழுத்தமாகப் பதிய வைத்துள்ளார். பட்டினத்தார் பாடியருளிய பாடல்கள் மிக எளிமையான கருத்துவளமும், அனுபவ முதிர்வும் நிரம்பிய பாடல்களாகப் படிப்பவர் உள்ளத்தே நேரடியாகச் சென்று உணர்வை ஊட்டுவதாக மிளிர்கின்றன. அதனால்தான் பட்டினத்தார் பாடல்கள் மக்களை ஈர்க்கச் செய்வதாகத் திகழ்வதை ***ஆசிரியப் பெருந்தகை சுப்புரெட்டியார்*** தாம் உணர்ந்ததை அனுபவரீதியாகக் காட்டியருளியது போற்றத்தக்கது.

## உதவிய நூல்கள்

1. பட்டினத்து அடிகள் - ந.சுப்புரெட்டியார், கலைஞன் பதிப்பகம்-2003.

2. பன்னிருதிருமுறை வரலாறு I,II - க. வெள்ளைவாரணன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்-1963.

3. பதினோராம் திருமுறை ஆய்வுமாலை - காசித்திருமடம், வாரணாசி-2008.

# 35. ந.சுப்புரெட்டியாரின் அகத்திணைக் கொள்கைகளில் அலர்



**முனைவர் அ. இந்துமதி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி*
*கோவை - 641 035.*

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை அகப்பொருள் கூறுகள் அமைந்த இலக்கியங்கள் பெருகி உள்ளன. அவற்றின் பெருமையை இன்றளவும் உலகிற்கு உணர்த்துபவை இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் ஆகும் இத்தகைய சிறப்பு மிக்க இலக்கிய ஆய்வாளரான **பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்** பலதுறைகளில் வல்லவர். ஐம்பூத நுட்பவியலை அழகான தமிழில் ஆற்றலுடன் எழுதிய எழுத்தாளர். இவரது அகத்திணைக் கொள்கைகள் என்னும் நூலானது கோவையின் சாயலோடு, புதிதாக அகத்திணை உலகில் புகுவோருக்கு அகத்திணைக் கூறுகளை அறிந்து கொள்வதற்குத் துணை செய்யும் வகையில் அமைந்துள்ளது.

***அகத்திணைக் கொள்கைகள்*** என்னும் நூலில் அகஇலக்கியங்களில் களவினை நீட்டிக்கும் தலைவனைத் தோழி வரைவு கடாவ மேற்கொள்ளும் உத்திகளுள் ஒன்றான அலர் பற்றிய கருத்துக்களை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## அலர்

ஐந்திணை ஒழுக்கத்தில் களவு நெறியிலிருந்து கற்புநெறிக்குச் செல்லத் துணைபுரிவது அலர் என்பதாகும். காதலரின் மறை ஒழுக்கம் குறித்து ஊரவர் சொல்லும் பழிச்சொல் மூவகைப்படும். (1) அம்பல் - இது ஒருவருக்கொருவர் மறைமுகமாகச் சைகை வழி தூற்றும் பழி. (2) அலர் - இது சொல் வழியே மறைமுகமாகத் தூற்றும் பழிச்சொல் (3) கௌவை - இது வெளிப்படையாகத் தூற்றும் பழிச்சொல். அம்பல் என்பது அலரின் முகிழ்நிலை. கௌவை என்பது அலரின் முதிர்நிலை ஆகும்.

***"சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி***
***மூக்கின் உச்சி சுட்டுவிரல் சேர்த்தி***
***மறுகின் பெண்டிர் அம்பல் தூற்ற"*** ***(நற்றிணை.149)***

என்பது நற்றிணை காட்டும் அலரோவியம்.

களவில் தலைவன்வரத் தடை இருப்பதாலும், தாய் அறிய வாய்ப்பு ஏற்படுவதாலும், இற்செறிப்பு நிகழ்வதாலும் தலைவியாலும், தோழியாலும் சங்க இலக்கியங்களில் அலர் வெறுக்கப்படுகின்றது.

நாணுடைய மகளிர் அவர்களது களவைப் பிறர் அறிவதாலும், அவ்வாறு அறிந்தோர் அவர்களைத் தூற்றுவதாலும் அதை எவரும் விரும்பாததாலும் அலரை வெறுப்பது இயல்பாகின்றது **(குறுந்தொகையும் திருக்குறளும் ஒப்பாய்வு,ப.70).**

அலர் தூற்றும் மக்களை ''ஏதின் மாக்கள்'' என்றும் ஊராரை ''அழுங்கலூர்'', ''பேதையூர்'' ''மையலூர்'' என்றும் குறுந்தொகை பழிக்கின்றது. மேலும் குறுந்தொகையில் அலர், கௌவை ஆகிய சொற்கள் ஆளப்பட்டுள்ளன. தொல்காப்பியம் ''அலரின் தோன்றும் காமத்து மிகுதி'' என அலரின் நன்மையைக் குறிக்கின்றது. ஆனால் அலரால் தலைவனுக்கோ அல்லது தலைவிக்கோ காமம் சிறப்பதாகச் சங்க இலக்கியங்களில் பாடல்கள் கிடைக்கவில்லை. அலரைப் பற்றிய தன் கருத்தைத் தலைவன் கூறுவதும் இல்லை, அதனை விரும்புவதோ அல்லது வெறுப்பதோ இல்லை. ஆனால் அகவாழ்வில் அலரைப் பொறுத்தவரையில் அது மகளிருக்கு உரியதாகவே அமைகின்றது.

இறையனார் களவியல் உரையாசிரியர், ''அம்பல் என்பது சொல் நிகழாதே முகிழ்முகிழ்த்துச் சொல்லதாயிற்று; இன்னதின் கண்ணது என்பது அறியலாகாது. அலர் என்பது இன்னானோடு இன்னானிடை இதுபோலும் பட்டதென விளங்கிச் சொல்லி நிற்பது. அம்பல் என்பது பெரும்போதாய்ச் சிறிது நிற்க அலரும் என நிற்பது. அலர் என்பது அப்பெரும் போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற் போல நிற்கும் நிலைமையென வேற்றுமை சொல்லப்பட்டதாம்'' என்று விளக்குவார் ***(இறையனார் களவியலுரை, உரை.ப. 22).***

இந்த அம்பலும் அலரும் பெரும்பாலும் ஊரில் உள்ள பெண்களாலேயே நிகழும். இவர்கள் இல்லையேல் அகத்திணை இலக்கியம் உப்பில்லாத உணவு போல் தோன்றும். தலைவன் தலைவியர் களவொழுக்கத்தில் இவர்கள் செய்வது நன்றல்லதாயினும், சமுதாய நெறிக்கு நல்லது என்ற கருத்தினால் தமிழ்ச் சான்றோர் இவ்வூர்ப் பெண்டிரையும் அகத்திணை இலக்கியத்தில் போற்றுகின்றனர்.

வீட்டகத்துச் செய்திகளை அட்டில் அறைப் புகை போல் நுழைந்து காணும் ஆசையும், கூடியிருந்து முணுமுணுத்துப் பேசும் தன்மையும் பெண் சமுதாயத்திற்குப் பிறவி குணம் போல் அமைந்து விட்டது. இவர்களை, ''வெவ்வாய்ப்பெண்டிர்'', ''அலர்வாய்ப் பெண்டிர்'' என்று அகத்திணைப் புலவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஊர்ப்பெண்டிர் பரப்பும் அலரால் காதலர்களின் காதல் நோய் பெருகி வளரும். என்பதனை,

> ***''களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்***
> ***வெளிப்படுந் தோறும் இனிது'' (திருக்குறள்-1145)***

என்ற குறளின் மூலம் தலைவன், கள்ளுண்பார்க்குக் களிக்குந் தோறும் கள்ளுண்டல் இனிதாவது போலத் தலைவனின் காதல் அலரால் வெளிப்பட்டதால் அவனுக்கு அது இனிதாகி நிற்பதாக வள்ளுவர் புலப்படுத்துகின்றார். அவர்படைத்த தலைவியும்,

***"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்" (திருக்குறள்-1147)***

என்ற குறளின் மூலம், ஊராரின் பழிச்சொற்களை எருவாகவும், அன்னையின் கடுஞ்சொற்களை நீராகவும் கொண்டு எங்களது காதல் வளருமே அன்றி கருகிவிடாது என்று கூறுகின்றாள். இங்கு ஊராரின் கௌவையை எருவாகவும், அன்னையின் சொல்லை நீராகவும் உருவகம் செய்து காட்டிய வள்ளுவரின் நுண்ணறிவினைப் போற்றுகின்றார் சுப்புரெட்டியார் அவர்கள்.

முல்லை நிலத் தாயொருத்தி தன்மகளைச் சிறிது கடிந்துரைக்கின்றாள். இதை அறிந்த அக்கம் பக்கத்தில் உள்ள பெண்கள் அவளுக்கும் ஒரு தலைவனுக்கும் தொடர்புண்டு என்று அலர் தூற்றுகின்றனர். இவ்வலரை அறிந்த தலைவி வருந்தவில்லை அவளைத் தலைவனுடன் இணைத்துப் பேசியதில் அவளுக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஊருக்கு உண்மை தெரிந்து விட்டதை எண்ணிக் களிப்படைகின்றாள், இனித் தன் வீட்டார் அந்தத் தலைவனுக்கே தன்னைத் திருமணம் செய்து வைப்பர் என்று எண்ணுகின்றாள். இதனை,

***"ஒண்ணுதால்,
இன்ன உவகை பிறிதியாது யாயென்னக்
கண்ணிடைக் கோலள் அலைத்தற் கென்னை
மலரணி கண்ணிப் பொதுவனோ டெண்றண்ணி
அலர் செய்து விட்டதிவ் வூர்" (கலித்தொகை-105)***

என்ற கலித்தொகைப்பாடல் விளக்குகின்றது. இப்பாடலில் தலைவியானவள் உற்றவரே தூற்றினால் ஊரார் தூற்றுவது இயல்பேயாகும். அவர்கள் அவ்வாறு தூற்றியதால், தான் பேருவகை அடைந்து உயிர் தாங்கி இருக்கின்றேன் என்று தோழியிடம் கூறுவதாகப் பேராசிரியர் சுப்புரெட்டியார் விளக்குகின்றார்.

குறுந்தொகைத் தலைவி ஒருத்தி அலர் எழுந்தமையால் அஞ்சுகின்றாள். அவளது தோழி அவளை,

***"நிலம்புடை பெயரினும் நீர்தீப் பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லை தோன்றினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை அஞ்சிக்
கேடெவன் உடைத்தோ தோழி?" (குறுந்தொகை,ப. 373)***

என்ற பாடலின் மூலம், உலகு பிறழ்ந்தாலும் ஊழ் வழியால் அமைந்த தொடர்பு கெடாது என்று உறுதி கூறித் தலைவியைத் தேற்றுவது விளக்கப்பட்டுள்ளது.

அலரைத் தவிர்க்கவும் முடியாது, ஊர் வாயை மூடவும் முடியாது என்ற எண்ணத்தால் காதலர்களுக்குத் திருமண நினைவு பெருகுகின்றது. மணப்பது உறுதி என்ற துணிவாலும், இனிமேல் களவொழுக்கத்திற்கு வாய்ப்பில்லை என்பதாலும் திருமணத்திற்கு விழைகின்றனர். அலரைத் தலைவியும் தோழியும் விரும்பாமையைத் தலைவனுக்குப் புலப்படுத்தி,

தலைவன் விரைவில் திருமணத்தை மேற்கொள்ளும் உத்தியாக்குகின்றாள் தோழி.

மற்றொரு பாடலில், தலைவன் சிறைப்புறத்தானாக இருக்க, தலைவி ஊரவர் அலர் தூற்றலைக் கூறித் தலைவன் விரைவில் மணம் முடிக்க வேண்டும் என்று நினைக்கின்றாள். இதனை,

***"எக்கர்தொறும் பரிக்குந் துறைவனொடு ஒருநாள்***
***நக்கதோர் பழியும் இலமே போதுஅவிழ்***
***பொன் இணர் மரீஇய புள்ளிமிழ் பொங்கப்***
***புன்னைஅம் சேரி இவ்வூர்***
***கொன்னலர் தூற்றும்தன் கொடுமை யானே"***
***(குறுந்தொகை-320)***

என்ற பாடல் புலப்படுத்துகின்றது.

கொல்லிப்பாவை அன்ன தலைவி, தன் தலைவனின் சிறப்புக்களைப் பாடிக் கொண்டு நெல்லைக் குற்றுவதாக அமைந்துள்ள பரணரின்,

***"பாவடி உரல பகுவாய் வள்ளை***
***ஏதில் மாக்கள் நுவறலு நுவல்ப***
***அழிவது எவன்கொலிப் பேதை ஊர்க்கே***
***பெரும்பூண் பொறையன் பேஎம்முதிர் கொல்லிக்***
***கருங்கட் தெய்வம் குடவரை எழுதிய***
***நல்லியற் பாவை யன்னஇம்***
***மெல்லியல் குறுமகள் பாடினாள் குறினே"***
***(குறுந்தொகை-89)***

என்னும் பாட்டில் அலர் எழுந்ததாகக் கூறித் தோழி கூறித் தலைவனை வரைந்து கொள்ளத் தூண்டுகின்றாள். அலரைத் தானும் தலைவியும் விரும்பாமையைப் புலப்படுத்தித் தலைவன் விரைவில் திருமணத்தை மேற்கொள்ள அலரை உத்தியாகக் கையாள்கின்றாள் தோழி.

ஊரலரை வெறுக்கும் ஐந்திணை மாந்தர் இருவர். ஒருத்தி நற்றாய், மற்றொருத்தி செவிலித்தாய். எவ்வகையானும் அம்பலையோ, அலரையோ இவர்கள் விரும்புவதில்லை. தன் குடும்பத்தையும் தன் மகளின் நடத்தையையும் ஊரார் பேசுவது கண்டு அவள் மனம் கொதிக்கின்றது.

***"கௌவை மேவல ராகி இவ்வூர்***
***நிரையப் பெண்டிர் இன்னா கூறுவ***
***புரைய அல்ல வென் மகட்கு" (அகநானூறு-95)***

என்ற அகப்பாட்டில் ஒரு தாயின் மனநிலையைக் காண்கின்றோம்.

"என் மகள் மேல் இடுதோளிட்டாற் போல் பழி பரப்பும் இவ்வூர்ப் பெண்கள் இல்லை, அவர்கள் நரகப் பெண்களே!" என்று கூறுவதனால் அவளது ஆறாத சினத்தை அறியமுடிகின்றது.

தலைவிக்கும் தோழிக்கும் தலைவனுக்கும் அன்னை கொடியவளாகவும் காதலுக்குப் பகையானவளாகவும் தோற்றம் அளித்தாலும் தன் மகளது இளமை வேகத்தால் தன் பழமையான குடி ஒழுக்கத்திலிருந்து வழுப்படுதல் கூடாது; ஊரார் வாய்ப்படுதல் கூடாது என்ற விழிப்புணர்வே அன்னையின் கடமைக்கும், அடக்குமுறைக்கும் காரணம் என்பதை அறிகின்றோம்

## தொகுப்புரை

அலர் எழுச்சி காதலர்க்குப் புதுநெறி வகுக்கின்றது. அலர் எழுந்ததனால் தலைமகன் தெளிந்த உள்ளத்தினனாய்த் தலைவியை மணந்து கொண்டு கற்பு நெறியில் ஒழுகுகின்றான்.

அலர் அறிவுறுத்தி வரைவு கடாவும் தோழி கூற்றுப் பாடல்களில் அலரை வரவேற்பது போலத் தோன்றிடினும் அலர் எழுந்தமைக்காக வருந்தும் நிலையே காணப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் அலர் என்பது உத்திமுறையாகவும் தோழியினால் கையாளப்படுவதையும் அறிய இயலுகின்றது.

ந.சுப்புரெட்டியாரின் அகத்திணைக் கொள்கைகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள அலர் குறித்த கருத்துக்களின் மூலம் அலர் என்பது காதலர்களுக்கு மனவருத்தத்தைக் கொடுத்தாலும் அது களவு வாழ்க்கையிலிருந்து கற்பு வாழ்க்கையை மேற்கொள்ள வழி கோலுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகின்றது.

அகத்திணையை ஆழ்ந்து கற்பவர்களுக்கும் அவற்றில் ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கும் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் அகத்திணைக் கொள்கைகள் என்னும் இந்நூலானது புதிய தடங்களை அறிமுகப்படுத்துவதோடு பல அக இலக்கியங்களிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ள சான்றுகளின் மூலம் அந்த இலக்கியங்களைப் பயிலும் ஆர்வத்தையும் தூண்டுகின்றது.

# 36. ந. சுப்புரெட்டியாரின் ஆய்வுப் பார்வையில் கவிப்பேரரசு வைரமுத்து

**த. பால்வின்சென்ட்**
*ஆய்வியல் நிறைஞர் (பகுதிநேரம்), தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர்.*

## முன்னுரை

பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் சுந்தரத் தமிழுக்குச் சொந்தக்காரர். தமிழைக் கற்பவர் சிலர், கற்றவழி நிற்பவர் சிலரில் சிலர் கற்றவழி நின்றதோடு, நானிலத்தை நல்வழிப்படுத்த சமூகம் மேம்பாடடைய வழிகாட்டுவோர் வெகுசிலர். தமிழால் தரணியில் உயர்பீடத்தில் நிற்பவர் பலர். தமக்காய்த் தமிழை விற்பவர் பலர். தமக்கெனத் தமிழைப் பயன்படுத்தி, மலரின் மகரந்தத்தில் தேனை நுகர்ந்து, மரப்பொதியில் மனித சமூகத்திற்குச் சேர்த்து வைக்கின்ற தேனீயைப் போலத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு உழைத்த நற்றமிழறிஞர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் கவிதைகளை ஆய்வு செய்து சிறப்புச் செய்துள்ளார்.

திரை உலகில் கவிஞர் கண்ணதாசனுக்குப் பிறகு கவிஞர் வைரமுத்துவும் கவிஞர் சிலவற்றை ஈண்டுக் காட்டுவேன். "விடுதலை வீரன்" என்ற தலைப்பில் 09.07.1971இல் சென்னை மாவட்ட நூலகத்தில் அரங்கேற்றப் பெற்ற கவிதை.

***"பாட்டெழுதிப் பாட்டெழுதிப் பாரதத்தின் விடுதலையைத்***
***தீட்டிவைத்த நாயகனைத் தேனமுதப் பாவலனை***
***எலுமிச்சைப் பழிரண்டை இருத்தும் அளவுக்குக்***
***கொழுத்த மீசையொடு கொள்கை வளர்த்தவனைப்***
***பாடிக் களிக்கின்றோம், பாட்டாலே புகழ்மாலை***
***சூடிக் கொடுத்துச் சுகக்கவிதை சொல்கின்றோம்"***

இப்படி முன்னுரையாகப் பாடிய கவிஞர்

***"சந்தையிலே தவித்தமிழ்க் கவியை நாட்டில்***
***சரஞ்சரமாய்த் தொகுத்திங்கே தமிழைக் காத்த***
***செந்தமிழன் பாரதியைப் போல நாட்டில்***
***தேனமுதப் பாவலன்யார் . . . .***
***காசுக்குச் சிலகவிதை புனைவர் மாயக்***
***கண்ணாலே கதைசொல்லித் தன்னை விற்கும்***
***வேசைக்குச் சிலர்கவிதை புனைவார் நாட்டு***
***விடுதலைக்குக் கவிபுனைந்த புலவன் யார் யார்?"***

பாரதியை அருமையான எண் சீரால் அடையாளம் காட்டினார்.

அடுத்துக் காவடிச் சிந்து மெட்டில்,

***"சொல்லெல்லாம் கவியாகப் பெய்தான் பாட்டுச்***
***சுடராலே பகைவர்தலை கொய்தான் நாட்டில்***
***வல்லவர்க்கே உணர்வூட்டி***
***வாள் கொண்டு பகையறுக்கச் செய்தான்***
***எல்லாம் மெய்தான்"***

என்று கவிதைகளைக் கொட்டிக் குவித்துப் பாரதி பற்றிய கவிதையை நிறைவு செய்தார்.

விடுதலை வீரன் என்ற தலைப்பில் உள்ள கவிதை சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர் கவிதைப் போட்டியில் இலயோலாக் கல்லூரியில் அரங்கேற்றப் பெற்று முதற் பரிசு பெற்றதாகவும் அதன் சில பகுதிகளையும் ஆசிரியர் இங்கே சுட்டிக்காட்டுகின்றார்.

***"என்னாடு பொன்னாடு பகைவர் கையில்***
***இப்போது பலியாடு இருட்டு வீடு***
***கண்ணோடு நரம்போடு கலந்த நாடு***
***கருவாடு போலிங்கே இளைத்த தோடு***
***பொன்னோடு பொருளோடு புகழி னோடு***
***போக்கிவிட்டு ஏந்தியதே கையில் ஓடு***
***உன்னோடு முன்பாடு முடிந்திடாது***
***உதைத்தாடு துண்டாடு பகையைச் சாடு. . ."***

இக்கவிதையில் கவிஞரின் அறிவு முதிர்ச்சியையும், சிந்தனைத் தெளிவையும் மின்வெட்டுப் போன்ற கருத்துச் செறிவையும் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

அமைதி என்ற தலைப்பில் அமைதி எங்கே இருக்கிறது. எதைத் தேடியபோது அது தன்னுள்ளே இருக்கிறது எனத் தெரிந்து கொண்டதாகப்பாடுவது அவரவர் அனுபவத்திற்கும் பொருந்தவதாகும்.

***"அன்பினைத் தேடிச் சென்றேன்.***
***அன்னையால் கண்டு கொண்டேன்***
***பொன்னினைத் தேடிச் சென்றேன்***
***புதையலால் பெற்றேன் கொஞ்சம்"***

இக்கவிதையில் அமைதியின் இருப்பிடத்தைக் கண்டு விடுகின்றார். இறப்பிலே அதைக் காணலாம் என்று கூறும் கவிஞரின் கருத்தில் அவர் மனம் தத்துவத்தை நோக்கி செல்கின்றது என்பதை அறிய முடிகிறது. வாமனமாக இருந்த அவர் கவிதைப் பாங்கு திரிவிக்கிரமமாக வளரத் தொடங்குவதாக ஆசிரியர் காண்கிறார்.

இவர்தம் மரபுக் கவிதைகள் புதுக்கவிதைகளைப் போல் அதிகம் இல்லை என்றாலும் இருக்கும் வரை பிறருடைய கவிதைகளை விடச் சற்று வேறுபட்ட போக்காக அமைந்துள்ளன என்பதைக் காண்கிறோம். இவர்தம் கவிதை பற்றிப் பொன்மணி வைரமுத்துவின் வாக்கால்

உணரலாம். மதுரைக் கோயில் சுற்றுப் பிரகாரங்களில் காணப் பெறும் விமான வேலைப்பாடுகளைப் போன்றதொரு தெய்வீகச் சிங்காரம் இவருடைய மரபுக் கவிதைகளில் கலைப் பொலிவோடு நின்று கவிதை நெஞ்சங்களை ஆட்கொண்டு விடுவதாகக் கூறுவது சிறப்பாக அமைந்துள்ளது.

எழுதியநாள் தெரியாத ''எதிர்காலம்'' பற்றிய கவிதைகள் அருமையானவையாக கூறும் ஆசிரியர்,

***''முக்கால மவற்றுள் என்றும்***
***முக்கிய மான காலம்***
***எக்காலம் என்று கேட்டால்***
***எதிர்காலம் என்று சொல்வோம்***
***அக்காலம் நாடித் தானே***
***அவனியே வாழும்? ஈது***
***முக்காலும் உண்மை, கால்கள்***
***மூன்றுதாம் முக்கா லிக்கு''***

என்பது எதிர்காலம் குறித்த அவரது கருத்தாகும்.

காதல் என்பது இறைவனால் ஆண் பெண் இருவருக்கும் வழங்கப் பெற்று ஓர் அற்புதமான தெய்வீகப் பண்பு இது எல்லா உயிர்களிடத்தும் காணப் பெறும் பண்புமாகும். ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியரின்

***''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது***
***தான் அமாந்துவரூஉம் மேவற் றாகும்''***

என்ற நூற்பா இக்கருத்தினையே உணர்த்துவதாகக் கொள்ளுதல் தவறாகாது, குமரப்பருவத்தில் முகிழ்ந்த இக்காதல் உணர்வு கட்டைக்குப் போகும் வரை கட்டவிழ்த்துக் கொண்டு நிற்கிறது. கவியரசு வைரமுத்து துறவி அல்லர், ஆதலால் காதலைப் பற்றிப் பாடுகின்றார். துறவியர் கூடப் பெண்ணை நாக்காலும் உதட்டாலும் உச்சரித்து வெறுப்பதாகத் தோன்றினாலும் அவர்கள் பெண்ணை நினைந்து மனப்பால் குடித்துக் கொண்டுதானே உள்ளனர்? தீயிலே கருகிய தேன்மலர் என்ற தலைப்பில்,

***''மோகச் சிலையொன்று மூடிய காதலெனும்***
***வேகத்தில் சிக்கி விழியிழந்து - சோகத்தில்***
***வீழ்ந்த துயரத்தால் வெம்பித் துடிக்குமது***
***பாழ்பட்ட நெஞ்சத்தின் பாட்டு''***

எனக்காதல், வெண்பாவில் வெடிக்கிறது. பின்னர்க் கலிவெண்பாவில் விறுவிறுப்படைகிறது.

## கவியரசரின் ஒரு கருத்து பற்றிய ஆசிரியரின் எண்ணங்கள்

மரபுக் கவிதை மறைந்துவிடும் என்று சிலர் அஞ்சுகின்றனர். இவ்வச்சம் புதுக்கவிதை பரவிவரும் வேகத்தால் ஏற்பட்டது. இது

தவறான கருத்து. மரபுக் கவிதை சாகும் சங்கதி அன்று. அது மார்க்கண்டேய வரம் பெற்ற பெருமை கொண்டது. ஈராயிரம் ஆண்டுகளாய் விழுதிறங்கிய ஆலமரம். அதுவோ கரையான்கள் அரிக்க முடியாத ஆழத்தில் உள்ளது.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் அசையாதிருக்கும் மரபு மாளிகையைப் புதுக்கவிதை என்னும் ஐம்பதாண்டு ஆற்றலா அழித்து விட முடியும்? கவியரசும் பிறரும் புதுக்கவிதைக்கு அங்கீகாரம் பெறவே போராட்டம் நடத்தியதாகவும், மரபை மாய்த்து விட அன்று எனவும் தம் நிலையை விளக்குகின்றார்

புதுக்கவிதையின் மின்சார அலைகள் மரபுக் கவிதைக்குள் பாய்ச்சப் படவேண்டும். புதுக்கவிதையின் புதுக்குருதி மரபுக் கவிதைக்குள் பீச்சப்பட வேண்டும். மரபுக்காக உயிர் விடுவதாக மார்தட்டும் கவிஞர்களில் பலர் கற்பனையிலும், சிந்தனையிலும் பாலைவனமாக்கி விட்டனர். இலக்கண தெளிவும், கற்பனை வளமும் உள்ள பலர் மரபைக் கைவிட்டு விட்டது மிகவும் பரிதாபம். கோளாறு மரபில் இல்லை. அதனைக் கையாளும் முறையில்தான் உள்ளது.

மரபுத் தந்தியில் புதிய சுரங்கள் புக வேண்டும். தமிழ்க் கவிதை இனி ஒரு புதிய தொனியில் பேசுமாறு அமைக்க வேண்டும். மரபுக்கவிதை ஒரு பூவனமாய்த் திகழ வழிவகுக்க வேண்டும். இளங்கவிஞர்கள் இக்களத்தில் இறங்க வேண்டும். இனிமேல் தளிர்க்க இருக்கும் மரபுக் கவிதைகளை மொழி பெயர்த்தால் சமகால இந்திய மொழிகளின் எந்த கவிதைக்கும் கருத்திலும், கருத்துப் போக்கிலும் தாழாததாய் அமைதல் வேண்டும். “பத்தாம் பசலியைப்” பாடுதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துக் கவிதையின் உள்ளடக்கம் புதியதாய் அமையுமாறு செய்ய வேண்டும். கவிஞர்களும் திறனாய்வாளர்களாக இருந்தால் அவர்தம் படைப்புப் புதிய பதத்தில் அமையும், இவற்றையெல்லாம் ஒரு மனிதத் தவத்தால் வரம்பெற்றுச் சீர்படுத்த நினைப்பது முயற்கொம்பு. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. இளங்கவிஞர்கள் ஒன்று திரண்டு தேர் இழுத்தால் நிலையான முடிவைப் பெறலாம், மரபுக் கவிதை இனிச் சூடாய் சூல் கொள்ளும் என்பதை எதிர் பார்ப்போம். மரபும் புதுமையும் மாலை மாற்றிக் கொள்ளட்டும் - இவ்வாறு வைரமுத்துவின் கவிதை பற்றிய சிறப்பை நிறைவு செய்கின்றார் ஆசிரியர்.

## கவிப்பேரரசின் சிறந்த படைப்பும், விருதுகளும்

ஆசிரியரின் மரபும் புதுமையும் மாலை மாற்றிக் கொள்ளட்டும் எனும் வாழ்த்து நனைவாகி வருவதை கவிப்பேரரசு அவர்களின் உலகப் புகழ் பெற்ற கவிதைத் தொகுப்புகளின் மூலம் அறியலாம்.

- வைகறை மேகங்கள்
- சிகரங்களை நோக்கி
- திருத்தி எழுதிய தீர்ப்புகள்

- தமிழுக்கு நிறமுண்டு
- இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல
- இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்
- சிற்பியே உன்னைச் செதுக்குகிறேன்
- இதனால் சகலமானவர்களுக்கும்
- இதுவரை நான்
- கொஞ்சம் தேனீர் நிறைய வானம்
- பெய்யென பெய்யும் மழை
- நேற்று போட்ட கோலம்
- ஒரு போர்களமும் இரண்டு பூக்களும்
- ஒரு மௌனத்தின் சப்தங்கள்

## கவிப்பேரரசு அவர்கள் பெற்ற விருதுகள்

- கலைமாமணி விருது *(1990)*
- சாகித்ய அகாடமி *(2003)*
- பத்மஸ்ரீ *(2003)*
- தேசிய விருது (ஆறு முறை)
- பத்மபூசன் விருது

போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

## முடிவுரை

கவிப்பேரரசு அவர்களின் எண்ணச் சிதறல்களை எடுத்துச் சிறந்த ஆய்வு செய்து விளக்கம் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. புதுக்கவிதையின் மின்சார அலைகள் மரபுக் கவிதைக்குள் பாய்ச்சப் படவேண்டும் என்ற ஆசிரியரின் எண்ணங்களை நிறைவு செய்யும் விதமாகத் தற்போது புதுக்கவிதையின் புதுக்குருதி மரபுக் கவிதைக்குள் பீச்சப்பட கவிப்பேரரசு அவர்களின் தமிழ்ப்பணியும் அமைந்துள்ளது.

உணவிற்கு உப்பு போல, தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் படைப்புகள் இனிவரும் தமிழுலகிற்குத் தவிர்க்க முடியாதவையாகவும் சிம்ம சொப்பனமாகவும் திகழ்கின்றது என்பதை இதன் மூலம் அறியமுடிகின்றது.

# 37. ந.சுப்புரெட்டியாரின் படைப்புகள் - மின்னூலாக்கத்தின் பயன்பாடும் பரவலாக்கமும்

**முனைவர் கா. இலட்சுமி**
*முதுமுனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை*
*காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்*
*திண்டுக்ககல்.*

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் இன்றியமையாத இலக்கியப் பயன்பாட்டு ஊடகமாய்த் திகழ்வன இணைய ஊடகங்கள் ஆகும். இணைய ஊடகங்கள் மொழி இயங்குதற்குரிய தளமாய் இலங்குவதோடு மொழியைப் பரப்புவதற்கும் மொழியைக் காப்பதற்கும் களமாய் விளங்குகின்றன. இவ்விணைய ஊடகத்தின் வாயிலாக உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து தாய்த்தமிழைப் பயன்பாட்டு மொழியாகவும் பல்லூடக மொழியாகவும் விளங்குவதற்குத் துணை நிற்கின்றனர். அவ்வகையில் காலத்திற்கேற்ற களமான இணைய ஊடகத்தில் நூல்களை மின்னாக்கம் செய்வது இன்றியமையாத தாகின்றது. தமிழறிஞர் ந.சுப்புரெட்டியார் அறிவியல் சிந்தனைகளை இலக்கியத்தில் கொணர வேண்டும் என்ற நோக்கம் உடையவர். காலத்திற்கேற்ற வளர்ச்சியை மொழி பெறுதல் வேண்டும் என்ற கருத்தாக்கம் மிக்கவர். அவ்வறிவியல் சிந்தனையாளரின் படைப்புகள் மின்னூல்களாய் வலம்வருகின்றன. அவற்றின் பயன்பாடு குறித்தும் பரவலாக்கம் குறித்தும் ஆய்ந்து நோக்கும் வகையில் இக்கட்டுரை “ந.சுப்புரெட்டியாரின் படைப்புகள் - மின்னூலாக்கத்தின் பயன்பாடும் பரவலாக்கமும்” என்னும் தலைப்பில் ஆக்கம் பெற்றுள்ளது.

## ந.சுப்புரெட்டியார் படைப்புகள்

ந.சுப்புரெட்டியார் தமிழ் இலக்கியத்தின் மீது மாறா பற்றுடையவர். இலக்கியங்களை அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகும் சிந்தனையாளர். அவருடைய நூல்களில் அறிவியல் தமிழ் பற்றிய கருத்தாக்கங்கள் ஆழ்ந்து காணப்படும். பள்ளித் தலைமையாசிரியராகவும் பல்கலைக்கழகப் பேராசிரியராகவும் பணியாற்றியவர். தமது வாழ்நாள் முழுமையும் தமிழ்ப்பணிக்காக அர்ப்பணித்தவர். இவருடைய தமிழாற்றல் கண்டும் ஆற்றிய தமிழ்த்தொண்டிற்கும் பெருமை சேர்க்கும்வண்ணம், திருவண்ணாமலை ஆதினம் “அருங்கலைக்கோன்” என்னும் பட்டத்தையும் வைணவசபை “ஸ்ரீசடகோபன் பொன்னடி” என்னும் பட்டத்தையும் வழங்கியுள்ளன. மேலும் ரெட்டியாரின் தமிழ்ப்பணியைப் பறைசாற்றும் நோக்கில் தமிழக

அரசு "திரு.வி.க" பட்டத்தை நல்கியதோடு அவர்தம் படைப்புகளை நாட்டுடமையாக்கிப் பெருமைபடுத்தியுள்ளது.

தமிழ் மற்றும் ஆங்கிலப் புலமை மிக்க மொழி வல்லுனராவார். தமிழ் மொழியின் திறம் பன்மொழியறிஞர்களைச் சென்று சேர்வதற்கும் பன்னாட்டு அறிஞர்களின் திறம் தமிழ்மொழிக்குச் சென்று சேர்வதற்கும் மொழிபெயர்ப்பு முக்கியம் என்று வலியுறுத்தியவர். மேலும் மொழிபெயர்ப்பின் நுட்பம் குறித்தும் கலைச்சொல்லாக்கத்தின் அவசியம் குறித்தும் தமது படைப்புகளில் திறம்பட விளக்கியுள்ளார். காலத்திற்கேற்ற மாற்றம் மொழியில் தோன்றுதல் வேண்டும் என்று மொழிபெயர்ப்பு, அறிவியல் சிந்தனைகளைத் தமிழில் பெரிதும் உட்புகுத்தியவர். இதனை எடுத்துரைக்கும் வண்ணம் அறிஞரது அறிவியல் தமிழ் என்னும் பெயரிய நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரை ஆக்கம்பெற்றுள்ளது. "அறிவியல் விரைந்து வளரும் இன்றைய சூழலில் தமிழில் உருவாக்கப் பெறும் நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்களாயினும் சரி, முதல் நூல்களாயினும் சரி, அவை அண்மைக் கால வளர்ச்சி வரை எடுத்துக்காட்டுவனவாக இருத்தல் வேண்டும்" (ந.சுப்புரெட்டியார் - அறிவியல் தமிழ், ப.99) என்று கூறியுள்ளார்.

அறிவியலின் வளர்ச்சிக்கேற்ப மொழியின் வளர்ச்சிப் பெருகுதல் வேண்டும் என்றார். அன்னாரின் தொலைநோக்கு சிந்தனைக்கு வித்திடும் வகையில் அறிவியல் வளர்ச்சிக்கிணங்க அறிவியல் தமிழின் வளர்நிலை பல்கிப்பெருகிக் கொண்டிருக்கின்றது. அறிவியல் தமிழ் என்னும் புத்திலக்கியக் களம் வலுப்பெற்றுவருகின்றது. மொழி இயங்கும் ஊடகங்களிலும் காலத்திற்கேற்ற மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மின்னாக்கம் பெற்ற இலக்கிய வடிவங்களும் கலைச்செல்வங்களே அடுத்த தலைமுறையினரைச் சென்று சேரும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இளைய சமுதாயத்தினரின் இயங்குதளமாய் இணையம் விளங்குகின்றது. அவ்வகையில் அருங்கலைக்கோன் ந.சுப்புரெட்டியாரின் படைப்புகள் தமிழக அரசின் இணையக் கல்விக் கழகத்தினரால் மின்னாக்கம் செய்யப் பெற்று விளங்குவது போற்றத்தக்கது.

## தமிழ் மின் நூலகம்

உலக மொழிகளில் மிகத் தொன்மை மொழியான தமிழ் மொழி கல்வடிவம், ஓலைவடிவம், செப்புப்பட்டய வடிவம் என்று பல்வேறு நிலையில் கால மாற்றத்திற்கேற்பப் பரிணமித்துக் கொண்டிருக்கின்றது. தொன்மை வடிவங்களில் இருந்துத் தமிழைக் காகித வடிவில் அச்சாக்கம் செய்து, பதிப்பித்த பெருமை தமிழ்த்தாத்தா உ.வே.சா அடியொற்றி எழுந்த சி.வை.தாமோதரம்பிள்ளை உள்ளிட்ட உரையாசிரியர்களைச் சாரும். அத்தமிழர்களின் அரும்பணியாலேயே அரிய படைப்புகளைப் பெற்றவர்களாய் உலகில் தலைநிமிர்ந்து வாழத் தலைப்பட்டனர் தமிழர்கள். அத்தகைய சூழல் மீண்டும் எழுந்துள்ளது எனலாம். ஏனெனில் பதிப்பாக்கம் செய்து அச்சேற்றிய நூல்களை மின்னாக்கம் செய்து பாதுகாக்க வேண்டிய சூழல் ஒவ்வொரு மொழிக்கும் ஏற்பட்டுள்ளது.

“ஒரு நூலகத்தைக் கணினியின் 50GBயில் அடக்கி விடலாம்” என்னும் கணினிச் சொல்லாடலுக்கு இணங்க, மின் நூலகத்தின் தோற்றத்தால் நூலகங்களைத் தேடித்தேடி செலவாகிய காலம், பயணம், உடல் உழைப்பு, நூலகரின் ஒத்துழையாமை முதலானவற்றை விடுத்து, கையடக்கத் திறன்பேசியில் நடந்து கொண்டே வீட்டில் இருந்து கொண்டே நூல்களை நாடலாம். நூலகத்தின் விதிகளுக்கேற்ப இயங்கிய காலம் மாறிப் படிப்போரின் கால வசதிக்கேற்ப நூலகத்தை இயக்கும் நிலை மின் நூலகத்தால் ஏற்பட்டுவிட்டது.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் அவ்வினத்தின் மொழியை அழித்தாலே இனம் தானாகவே அழிந்துவிடும் என்பது உண்மை. மொழியின் உயிர்நாடியே நூல்கள். எனவே ஒரு இனத்தை அதன் பண்பாட்டைத் தொன்மையைப் பாதுகாக்க விரும்பினால் முதலில் பாதுகாக்க வேண்டியவை அவ்வினம் சார்ந்த மொழியை மொழியின் நூல்களையே. அச்செயற்கரிய பணியைச் செய்வதற்குத் தமிழர்கள் தொடங்கிவிட்டார்கள் என்பதன் சான்றாதாரமே தமிழில் இயங்கிக் கொண்டிருக்கும் மின் நூலகங்கள் ஆகும்.

தமிழில் அச்சு வடிவாகவோ வேறு எவ்வித வடிவாகவோ உள்ள நூல்களை மின்னியல் வடிவில் ஆக்கம் செய்து பாதுகாக்கும் நூலகமே தமிழ் மின் நூலகமாகும். தமிழில் மதுரைத் திட்ட நூலகம், தமிழ் மரபு அறக்கட்டளை நூலகம், இந்திய மின்நூலகம், சென்னை நூலகம், பிரித்தானியா கலைக் களஞ்சிய நூலகம், தமிழ் இணையக் கல்விக் கழக மின் நூலகம் முதலான எண்மிய நூலகங்கள் தமிழ்த் தொண்டாற்றி வருகின்றன.

மதுரைத் திட்டம் மின் நூலகம் 1998லிருந்து இயங்கி வருகின்றது. தமிழ் இலக்கியங்களை மின்னாக்கம் செய்து உலகத் தமிழர்கள் அனைவரும் எளிதில் பயன்படுத்தும் வகையில் செயலாற்றி வரும் இத்திட்டம் பழந்தமிழ் நூல்களைப் பெருவாரியாக மின்னாக்கம் செய்துவிட்டது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் இயங்கித் தற்போது தமிழ் இணைய கல்விக் கழகம் என்ற பெயரில் இயங்கி வரும் இந்நிறுவனத்தின் மின்நூலகம் உலகத் தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் மொழி கற்பிக்கும் நோக்கில் மாணவர்களின் பயன்பாட்டிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ் மரபு அறக்கட்டளை அமைப்பினரின் மின் நூலகம் சிதையும் நிலையில் உள்ள ஓலைச்சுவடிகளையும் பழந்தழிழ் நூல்களையும் காக்கும் அரிய பணியைச் செய்து வரும் நூலகமாகும். இந்நிறுவனத்தின் மற்றொரு நூலகப் பணியால் இயங்குவதே பிரித்தானியா கலைக் களஞ்சிய நூலகமாகும். ஆய்வாளர்களைக் கவரும் வகையில் செயல்படும் மின் நூலகமான இந்திய மின்நூலகம் உலகத் தமிழ் தகவல் தொழில் நுட்ப மன்றமான “உத்தமம்” குழுவினரால் இயக்கப்பட்டுவருகின்றது.

ஈழத் தமிழர்களின் உழைப்பால் உருவாக்கம் பெற்ற மின்நூலகம் நூலகம்.நெட் ஆகும். தி.கோபிநாத், மு.மயூரன் இருவரின்

தன்னார்வத்தினால் எழுந்த நூலகமாகும். ஒரு வாரம் ஒரு நூல் என்று மின்னாக்கம் செய்து வருகின்றது. தனிமனிதனின் தொண்டாக இயங்கி வருவது சென்னை நூலகம் ஆகும். இம்மின் நூலகங்களன்றி உலகப் பல்கலைக்கழகங்கள், உலகளாவிய பொது நூலகங்கள் தங்களது நூலகங்களை மின் நூலகங்களாகத் தரம் உயர்த்தி வருவன வணக்கத்திற்குரிய செயலாகும். பலரது கடின உழைப்பால், அயராத முயற்சியால் மின் நூலகங்கள் பெருகலாயின. இம்மின் நூலகங்கள் உலகின் எந்த ஒரு ஓரத்தில் வசித்தாலும் இணைய இணைப்பை மட்டும் பெற்றிருந்தால் போதும், பயன்படுத்துதல் எளிது. இம்மின்னூலகத்தின் பயனால் பல்வேறு தமிழறிஞர்களின் பெருமையைத் தரணியறியச் செய்தல் சாத்தியமாகும்.

## பயன்பாடும் பரவலாக்கமும்

தமிழர்கள் நாடு, எல்லை, கடற்பரப்பு முதலியன கடந்து இணையத்தால் இணைந்து இருந்தமிழை ஈடில்லா மொழியாக வளர்த்து வருகின்றனர். அவ்வகையில் மொழியைத் தொழில்நுட்பத் திறத்தால் பாதுகாக்கவும் மொழி பரப்பவும் எழுந்த நல்லதொரு ஊடகமாய் விளங்கும் எண்மிய நூலகம், செந்தமிழ் நூல்களைச் செல்லரிக்காது காக்குகின்றது. அவ்வமயம் சிற்சில இடர்பாடுகளும் இந்நூலகத்தில் உள்ளன. நூல்களின் மின்னாக்க வடிவம் உருப்பட வடிவமாகவோ நிலைத்த வடிவமாகவோ இருக்கின்றன. அவை பதிவிறக்கம் செய்வதற்கும் பயன்பாட்டிற்கும் கடினமாகவே உள்ளன. மின் நூலாக்கம் செய்த நூல்களை மீண்டும் மின் நூலாக்கம் செய்வதன் காரணம் எண்மிய நூலகங்கள் தனித்தனியாய் இயங்குவதே. எனவே இவை தமக்குள் இணைந்து எண்மிய நூலகத்திற்கென பொது அமைப்பினை உருவாக்கி, இலக்கியப் பணிகளைப் பகிர்ந்து திட்டமிட்டுச் செயல்பட்டால் சிறப்பாக அமையும்.

மேலும் பல்வேறு அறிஞர்களின் அரிய எழுத்துக்களை மின்னாக்கம் செய்து வரும் மின்நூலக அமைப்பாளர்கள் வணக்கத்திற்குரியவர்கள். அவ்வகையில் ந.சுப்புரெட்டியாரின் நூல்கள் மின்னாக்கம் பெற்று இணைய தளத்தில் கிடைக்கின்றன. மேலும் அறிவியல் தமிழ் அறிஞருக்கென www.nasubbureddiar100.in இணையதளம் வலைச்சேவை செய்துவருகின்றது. இவ்வலைதளத்தோடு நாட்டுடமையாக்கப் பெற்ற அறிஞர்களின் வரிசையில் இணையக்கல்விக் கழக வலைதளத்திலும் கிடைப்பதால் பயன்பாட்டிற்கு எளிதாகின்றன. நூலகங்கள் தேடி காலம், பொருட் செலவு முதலியனவற்றைத் தவிர்க்கச் செய்வன மின்னூல்கள். அணுகுதற்கு எளிமையும் பயன்பாட்டிற்கு வசதியாகவும் விளங்குவன. இம்மின்னூல்கள் மேலும் வளப்படுத்தினால் நன்மை பயக்கும்.

## சான்றாக ந.சுப்புரெட்டியார் என்று தட்டச்சு செய்தால்,

- ந.சுப்புரெட்டியாரின் படங்கள், வரலாறு, தமிழில் ரெட்டியாரின் பங்களிப்பு, நூல்கள் ஒலி, ஒளி காட்சிப் படங்களுடன், அறிவியல்

தமிழுக்கான படைப்புகள், சமயம், திறனாய்வு, இலக்கியம் தொடர்பான படைப்புகள் என்று படைப்புகளின் பகுப்பாய்வு முறை, ந.சுப்புரெட்டியார் குறித்த ஆய்வு நூல்கள், ந.சுப்புரெட்டியார் பற்றிய ஆய்வேடுகள், இதழ்களின் செய்திகள் என்று எண்ணிம நூலகத்தில் தொடர்ச்சியாய் வலம் வரச் செய்தால் அறிவியல் தமிழுக்கு வித்திட்ட அறிஞர் பற்றிய ஆய்வுகள் தமிழாய்வு மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயனள்ளதாய் விளங்கும்.

- ந.சுப்புரெட்டியார் பற்றிய குறுஞ்செயலியையும் உருவாக்கினால் சிறப்பாய் இதற்குத் தொழில் நுட்பமும் தமிழறிவும் மிகுந்த மென்பொருள்கள் உருவாக்கம் பெறல் வேண்டும். இவ்வாறு தமிழின் எண்ணிம நூலகம் மிகுந்த தரத்துடன் மெருகேற்றம் செய்யப்பட்டால் தமிழுக்குத் தொண்டு செய்த அருங்கலைக்கோனின் படைப்புகள் பரவலாக்கம் செய்யப்பெற்று எதிர்வரும் தலைமுறைக்கு ஏதுவாய் அமையும். அறிஞரின் அரிய சிந்தனைகளை மையப்படுத்தும் நோக்கில் பன்னாட்டுக் கருத்தரங்க நூலையும் மின்னாக்கம் செய்தால் சிறப்பாக இருக்கும்.

## சான்றாதாரங்கள்


1. www.chennailibrary.com
2. www.dli.iit.ac.in
3. www.nasubbureddiar100.in
4. www.noolagam.net
5. www.tamil.net/projectmadurai
6. www.tamiheritage.org
7. www.tamilvu.org
8. www.ulakathamizh.org

# 38. இராமலிங்க அடிகளாரின் பாடல்களில் ந.சுப்புரெட்டியாரின் கருத்தாக்கம்

**முனைவர் லா. சார்லஸ்**
*கௌரவ விரிவுரையாளர்*
*தமிழ்த்துறை*
*பாரதியார் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர் - 46.*

திருவருட் பிரகாச வள்ளலார் என்றழைக்கப்படும் இராமலிங்க அடிகள் (1823-1874) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் அருளாளர். இறைவனால் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டவர். நாமெல்லாம் நமது வினையினைத் தீர்ப்பதற்காக இவ்வுலகில் பிறக்கிறோம். அவர் அப்படிப் பிறந்தவர் அல்லர் என்பதனை அவர் பாடிய ஆறாம் திருமுறையில் கூறுகிறார். இறைவனால் அனுப்பப்பட்டு அவதரித்தவர் என்ற காரணத்தினால் தான், யாரிடமும் கல்வி கற்காமல், பள்ளிக்குச் செல்லாமல், ஒன்பது வயதுச் சிறுவனாக இருந்தபோதே புராணப் பிரசங்கம் செய்துள்ளார். தெய்வப் பிறவியாக இவர் வளர்ந்து ஐம்பது ஆண்டுகாலம் வாழ்ந்து, பல அற்புதங்களை எல்லாம் நிகழ்த்தி, ஆறாயிரம் தெய்வீகப் பாடல்களை இயற்றி, பல புதிய தத்துவங்களை இவ்வுலகுக்கு அறிவுறுத்தி, இறுதியாக வடலூரை அடுத்த மேட்டுக் குப்பம் என்னுமிடத்தில் அருட்பெருஞ் ஜோதியாக இறைவனுடன் கலந்தார். உடல் மண்ணுக்கோ, நெருப்புக்கோ தரப்படாமல் மாபெரும் அற்புதம் புரிந்தவர்.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் தன் வாழ்வின் நடுப்பகுதியில் சைவத் திருமுறைகள் பற்றியும், ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் பற்றியும் சில விளக்க நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். தன் வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் பிற்கால அருளாசிரியர்கள் பற்றி எழுதி வெளியிடும் பேறு இருந்தமையால் தாயமானவர் பற்றி எழுதவும் திருவருள் கூடியது. தொடர்ந்து "இராமலிங்க அடிகள்" பற்றி எழுதவும் இறையருள் கிட்டியதாகக் குறிப்பிடுகின்றார். சுப்புரெட்டியார் இராமலிங்க அடிகளாரின் பாடல்களில் அதிகமாக ஈடுபட்டுப் பாடி அநுபவித்த பாடல்களில் சிலவற்றைத் திருமுறைகள் தோறும் தேர்ந்தெடுத்த தொகுப்பும் பதிகந்தோறும் அவரது குறிப்பும் கொண்டவையாக அமைந்துள்ளன. எனவே இராமலிங்க அடிகளின் பாடல்களுக்குச் சுப்புரெட்டியாரின் கருத்தாக்கம் எவ்வாறு அமைந்துள்ளன என்பது பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## உருவகத்தின் வழியிலான கருத்தாக்கம்

"குடும்ப கோரம்" என்ற பாடல், சைவ சித்தாந்தக் கருத்துகள் நிரம்பிய உருவகமாகப் பாடியுள்ளார். அதன் சுருக்கமாக,

என் பெயர் "ஏழை". எனது முதல் மனைவி "ஆணவம்". அவளது மகன் "அஞ்ஞாமை". இரண்டாவது மனைவி "மாயை". இவள் பெற்ற பிள்ளைகள் நால்வர். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பது அவர்கள் பெயர். மூன்றாவது மனைவி "காமியம்". அவளுக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் பெயர் சத்துவம், இராசசம், தாமசம் என்பது. இந்த மூன்று மனைவிகளோடும், எட்டுப் பிள்ளைகளோடும் ஏழையாகிய நான், ஒன்பது ஓட்டைகள் உள்ள ஒரு வாடகை வீட்டில் வாழ்கிறேன். இந்த வீட்டின் உரிமையாளர்கள் மூவர். வாதம், பித்தம், கபம் என்ற பெயர் கொண்ட அவர்களுக்கு நான் தினந்தோறும் மூன்றுமுறை வாடகை கொடுக்க வேண்டும். சற்றே தவறினால் அவர்கள் துன்புறுத்துவர் என்று சைவ சமய நெறிகளைக் கூறும் இராமலிங்கரது பாடலுக்கு மிக எளிதானக் கருத்தாக்கம் செய்திருப்பதைக் காணமுடிகின்றது.

## ஆணையிட்டு அருள் கூறல்

அம்பலத்துள் ஆடுகின்ற சிவபெருமானே எல்லாம் வல்லான் தன்னை ஏத்தின் எல்லாம் செயல்கூடும் என்று தன்மேல் ஆணையிட்டு அருளியுள்ளார்.

***"எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே***
***எல்லாம்வல் லான்தனையே ஏத்து".***

என்று அடிகள் ஆணையிட்டுக் கூறிய இக்குறள் வெண்பா அடிகளது திருவாயிற் பிறந்தது முதல் இன்றுவரை சன்மார்க்கிகளால் மந்திர மொழியாகப் பெரிதும் பயிலப் பெற்று வருகிறது.

***"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த***
***மறைமொழி தானே மந்திரம் என்ப".***

என்பது தொல்காப்பியம். அடிகள் நிறைமொழி மாந்தர். அவர்களது ஆணையிற்கிளந்தது இம்மறைமொழி. ஆகவே, இது மந்திரம். இவ்வாறு ஆணையிட்டுக் கூறும் வழக்கம் அடிகளிடத்துப் பெருவழக்காகக் காணப் பெறுகின்றது. இது ஞானசம்பந்தப் பெருமானிடமிருந்து அடிகட்கு அமைந்திருத்தல் வேண்டும் என்கிறார் சுப்பரெட்டியார். இதேபோல் நான்கு இடங்களில் சம்பந்தர் "ஆணைநமதே" என ஆணையிட்டுரைக்கின்ற பாடல்கள் அமைந்திருப்பதையும் காணமுடிகின்றது.

***"ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஐயா***
***அரைக்கணமும் நினைப்பிரிந்தே இனித்தரிக்க மாட்டேன்***
***கோணைநிலத் தவர்பேசக் கேட்பதுபோல் இன்னும்***

*குறும்புமொழி செவிகள்உறக் கொண்டிடவும் மாட்டேன்*
*ஊணைஉறக் கத்தையும்நான் விடுகின்றேன் நீதான்*
*உவந்துவராய் எனில்என்றன் உயிரையும்விட் டிடுவேன்*
*மாணைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்நீ எனது*
*மனம்அறிவாய் இனம்உனக்கு வகுத்துரைப்ப தென்னே''.*

என்று ஆறாம் திருமுறையில், ''பிரியேன் என்றல்'' பகுதியில் அடிகள் இறைவன்மீது ஆணையிட்டு விண்ணப்பித்ததைக் குறிப்பிடுகின்றார்.

## புன்மை நினைந்திரங்கல்

இப்பதிகம் பெண்களை இழிவுபடுத்திப் பேசுவதாக அமைகின்றது. பாடல்கள் சிறப்பிற்குரியது என்றாலும் பெண் சமூகத்தை இழிவுபடுத்திப் பேசும் பாங்கு நமக்கு மிக்க வருத்தத்தைத் தருகின்றது. அடிகளாரின் வாழ்க்கையில் எந்தப் பெண்ணும் அவரை மயக்கியதில்லை. அடிகளாரும் சிற்றின்பத்தை வெறுத்தொதுக்கியவர். இவரது பாடலில்,

*''மஞ்சட் பூச்சின் மினுக்கில்இ ளைஞர்கள்*
*மயங்க வேசெயும் வாள்விழி மாதர்பால்*
*கெஞ்சிக் கொஞ்சி நிறைஅழிந் துன்அருட்*
*கிச்சை நீத்துக் கிடந்தனன் ஆயினேன்*
*மஞ்சுற் றோங்கும் பொழில்தணி காசல*
*வள்ளல் என்வினை மாற்றுதல் நீதியே*
*தஞ்சத் தால்வந் தடைந்திடும் அன்பர்கள்*
*தம்மைக் காக்கும் தனிஅருட் குன்றமே''*

எனப் பாடுகின்றார். இதற்குச் சுப்புரெட்டியார் கருத்தாக்கமாக, பெண்களுக்கு அழகு இறைவனால் நல்கப்பட்டது. வமிசம் தழைப்பதற்காக ஆணைக் கவர்வதற்கு இந்த ஏற்பாடு. இதனை ஆழ்ந்து நோக்கினால் பெண்ணினத்தைக் குறைத்துப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படாது. பெரும்பாலான ஆண் புலவர்கள்தாம் இங்ஙனம் பாடுகின்றனர். பெண்பாற் புலவர்கள் ஆண்களின் அட்டூழியத்தைப் பாடத் தொடங்கிவிட்டார்களானால், ஆணுலகம் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாது. இறைவனது படைப்பிலேயே பெண்ணுக்கு ஆசை கட்டுப்பாட்டில் இருக்குமாறு அமைந்துள்ளது. மயங்கிச் செயலில் ஈடுபட்டால் விளைவு உடனே செயலைப் பறையறைவிக்கும். பெண்ணினத்தை இழிவுபடுத்திப் பேசும் அடிகளாரின் போக்கு சிந்திக்கும் அறிஞர்கட்கு உகந்ததாக இல்லை என்பது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும் என்கிறார்.

## திருமுல்லைவாயில் பற்றிய குறிப்பு

இத்தலம் பற்றி ஆசிரியர் கூறும்போது, பழங்காலத்தில் இத்தலம் முல்லைக் காடாக இருந்தது. தொண்டை நாட்டைச் சேர்ந்த மன்னன் ஒருவன் இவ்வழியாக ஏகினபோது அவனது யானையின் காலில் முல்லைக் கொடிகள் சிக்கி யானை நின்றது. மன்னன் இறங்கி, கொடிகளை வெட்டினான். வெட்டுண்ட இடத்திலிருந்து இரத்தம்

பீறிட்டது. அகழ்ந்து பார்க்கையில் சிவலிங்கம் ஒன்று தென்பட்டது. வெட்டுப்பட்ட லிங்கத்திலிருந்து குருதி வழிந்தது. மன்னன் காடு வெட்டி நாடாக்கிக் கோயில் கட்டினான். இதனால் இத்தலத்து இறைவனுக்கு "வெட்டுத் தாங்கி ஈசுவரர்" என்ற காரணத் திருநாமமும் ஏற்பட்டது. திருக்கோயிலின் அர்த்த மண்டபத் தூண்கள் இரண்டும் எருக்க மரத்தாலானவை. இது தலத்தின் சிறப்பாகும். இத்தலம் குறித்து அடிகள் பாடும்போது,

***"தாயின் மேவிய தற்பர மேமுல்லை***
***வாயின் மேவிய மாமணி யேஉன்தன்***
***கோயின் மேவிநின் கோமலர்த் தாள்தொழா***
***தேயின் மேவி இருந்தனன் என்னையே"***

என்று பாடி இப்பதிகத்தில் திருவிண்ணப்பம் செய்திருப்பதை ஆசிரியர் உணர்த்துகின்றார்.

## காதல் விண்ணப்பம்

அகத்துறை போல் காட்சி அளிக்கும் இப்பதிகம் அகத்துறையின்பாற் பட்டதன்று. இங்குக் காதல் என்பது "பக்தி" என்னும் பொருளில் அமைந்துள்ளது. இது திருவொற்றியூரில் வீற்றிருக்கும் சிவபெருமானை நோக்கி விண்ணப்பிப்பதாக அமைகின்றது. எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்துள்ளது.

***"வஞ்சக வினைக்கோர் கொள்கலம் அனைய***
***மனத்தினேன் அனைத்தினும் கொடியேன்***
***தஞ்சம்என் றடைந்தே நின்திருக் கோயில்***
***சந்நிதி முன்னர்நிற் கின்றேன்***
***எஞ்சலில் அடங்காப் பாவிஎன் றெனைநீ***
***இகழ்ந்திடில் என்செய்வேன் சிவனே***
***கஞ்சன்மால் புகழும் ஒற்றியங் கரும்பே***
***கதிதரும் கருணையங் கடலே"***

என அடிகளின் பக்திப் பெருக்கு இறைவன் மீது கரை புரண்டோடுகின்றதை இப்பதிகத்தில் காணமுடிகின்றது.

## நிலையாமைச் சிந்தனைகள்

மனித மனம் மண்ணின்மீது கொண்டுள்ள ஆசை சொல்லும் தரமன்று. இதனை அடிகள் பாடும்போது,

***"மண்ணாசை கொண்டனைநீ மண்ணாளும் மன்னரெலாம்***
***மண்ணால் அழிதல் மதித்திலையே - எண்ணாது***
***மண்கொண்டார் மாண்டார்தம் மாய்ந்தவுடல்வைக்கவயல்***
***மண்கொண்டார் தம்இருப்பில், வைத்திலரே -***
***திண்கொண்ட***
***விண்ணேகுங் கால்அங்கு வேண்டுமென ஈண்டுபிடி***
***மண்ணேனும் கொண்டேக வல்லாரோ" (418 - 420)***

என்று மனத்தை நோக்கிப் பேசுகின்றார். பூமித்தாய் தான் மறைத்து வைத்திருக்கும் நிலக்கரி, எண்ணெய் வளங்கள் முதலிய பல செல்வங்களை மன்பதைக்கு நல்கி உதவுகின்றாள். கையூட்டு வாங்குவோர், கறுப்புச் சந்தைக்காரர்கள், அரசியல் எத்தர்கள் தாம் தகாத வழியில் ஈட்டிய செல்வத்தை மண் வாங்கி மறைக்கின்றனர். இது பற்றிய அன்றாட நீதிமன்ற வழக்குகள் நமக்குப் பறைசாற்றுகின்றன. ஐம்பெரும் பூதங்களில் மண் ஒன்றே திண்ணியது. மறைப்பதற்கு ஏற்ற வகையில் அமைந்தது. மண்ணால் தன் உடல் அழிந்து போவதை உணராத மனிதன் இவ்வாறெல்லாம் செயல்படுவதை உணர்த்துகின்றார். மேலும் பல பாடல்களில் நிலையாமை குறித்து நம் நெஞ்சத்திற்கு அறிவுறுத்தி வாழ வேண்டும் என்பதை உணர்த்தியுள்ளார்.

## தொகுப்புரை

தில்லை சிற்றம்பலவன் திருவருள் இவருக்கு நிறைய இருந்தமையால் ஆடலரனைப் பற்றிய பாடல்கள் இவர்தம் அருளிச்செயல்களில் அதிகமாகவே காணப்படுகின்றன. திருமந்திரப் பயிற்சி இவர்தம் உள்ளொளியைப் பெருக்கி இருக்க வேண்டும். இறையருள்தான் இவரைச் சமரச சுத்த சன்மார்க்கத்தைக் காணவைத்தது. இத்தகு சிறப்புமிக்கப் பாடல்களைப் பாடிய இராமலிங்க அடிகளாரது வாழ்க்கை வரலாற்றினையும், அவர்தம் பாடல்களையும் முழுமையாக தம் உள்ளத்தில் ஏற்றி, தமிழ்மொழி வளர்ச்சிக்கு உந்துசக்தியாகத் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தவர் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் ஆவார். தம் வாழ்நாளின் இறுதிக் காலப்பகுதியில் எழுதப்பெற்ற இந்நூல் இராமலிங்க அடிகளாரின் பக்திநெறியை முழுமையாக அறிய உதவுவனவாக இருப்பதை அறியமுடிகின்றது.

## பார்வை நூல்கள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பா.176.

2. இராமலிங்க அடிகள், ந.சுப்புரெட்டியார், கலைஞன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை - 17.

# 39. ந. சுப்புரெட்டியாரின் கைக்கிளைப் பான்மை

**முனைவர் பா. உமாராணி**
*கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை*
*பாரதியார் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர் - 46.*

*இலக்கியங்கள் மனித வாழ்க்கையை வேரிலிருந்து இனம் கண்டு அதனை அழகுற வெளிப்படுத்துபவையாகும். மனித வாழ்க்கையின் அன்றாட அனுபவங்களை, உணர்வு அடிப்படையிலான மன ஓட்டங்களை ஒழுங்குபடுத்தி, வரையறை செய்து மனிதனை நெறிப்படுத்தும் பணியினை இவ்விலக்கியங்கள் செய்கின்றன. சமூகத்திலிருந்து தோன்றிய இலக்கியம் அச்சமூகத்தைக் கட்டமைப்பதில், பண்பாட்டை உருவாக்குவதில், ஒழுக்க விதிகளை வரையறுப்பதில் முன்னிற்கிறது. அத்தகையதொரு இலக்கியப் பண்பாட்டை நமக்கு உருவாக்கியதன் விளைவுதான் அகத்திணைத் தோற்றுவாய்க்கான காரணமாக அமைந்திருக்க வேண்டும்.*

*அகத்திணைப் பண்பாடு என்பது புறத்தார்க்கு இது இத்தகையது எனக் கூறவியலாததான அக உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். தமிழர்களின் மிகச் சிறந்த பண்பாடும் இதுதான். தொல்காப்பியம் கைக்கிளை தொடங்கிப் பெருந்திணை இறுதியாக அகத்திணைகள் ஏழு எனக் குறிப்பிடுகின்றது. இதில் கைக்கிளை முதலாக எனக் குறிப்பிட்ட தொல்காப்பியர் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணையை மட்டும் அன்பின் ஐந்திணை அல்லது அகன் ஐந்திணை எனக் குறிப்பிடுகின்றார். முன்னர்க் குறிப்பிடப்பட்ட கைக்கிளைச் சிறப்பற்றுப் போனதன் காரணம் என்ன? அதனை அகத்திணையாகப் பார்க்க இயலாத மனோநிலை தோற்றம் பெற்றது ஏன்? கைக்கிளையை அகத்திணையாக வைத்து அதிகமான பாடல்கள் பாடப்பெறாமையின் காரணம் எதுவாக அமைந்திருக்கும்? எனப்பல வினாக்கள் கைக்கிளையைப் பற்றிப் படிக்கும்போது எழுகிறது. இதற்கு விளக்கம் கூறும்முகமாக சுப்புரெட்டியாரின் அகத்திணைக் கொள்கைகள் நூல் இடம்பெற்றுள்ளது.*

## கைக்கிளை

*தொல்காப்பியரின் அகத்திணை என்னும் பெருந்தலைப்பினுள் உள்ள உட்பகுப்பே கைக்கிளையாகும். இது அகத்திணையுள் முதலாவதாக எண்ணப்படுவதும், காதல் வாழ்க்கைக்கு முன்னர் நிகழும் நிகழ்வினைக் குறிப்பதாலும் முதலாவதாக வைத்து எண்ணப்படுகிறது. இங்கு ஒத்த தலைவனும், தலைவியும் கொள்ளும் காதல் வாழ்க்கைக்கு*

முன்னர் நிகழும் நிகழ்வினைக் குறிப்பதாலும் முதலாவதாக வைத்து எண்ணப்படுகிறது எனலாம். இங்கு ஒத்த தலைவனும் தலைவியும் கொள்ளும் காதல் வாழ்க்கைக்கு முன்னர் ஒருவரிடத்து தோன்றும் ஈர்ப்பு நிலையே கைக்கிளை எனலாம். இது நீண்டு நிற்பதில்லை. அதனால்தான் சிறு குறிப்பு எனக் குறிக்கின்றார் தொல்காப்பியர். கைக்கிளையைப் பற்றிக் குறிக்க வேண்டுமாயின், காமம் தோன்றும் பருவம் அடையத இளையோளிடத்தில் தலைமகனுக்குத் தோன்றும் காமக் குறிப்பு என்றே கொள்ள வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். இதனை,

***“காமஞ் சாலா இளமை யோள்வயின்***
***ஏமஞ் சாலா இடும்பை யெய்தி***
***நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்***
***தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்***
***சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்***
***புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே”***
***(தொல்.பொருள். அகத், நூ.எ.53)***

என்னும் நூற்பாவில் விளக்குகின்றார். “கைக்கிளைக் குறிப்பு” என்பதினால் குறுகிய காலம் மட்டுமே தோன்றும் நிலையது எனக்கொள்ளலாம். இந்நூற்பாவிற்கு விளக்கம் கூறும்போது “காமம் அமையாத இளையாள்மாட்டு ஏமம் அமையாத இடும்பையெய்தி, புகழ்தலும் பழித்தலுமாகிய இரு திறத்தால், தனக்கும் அவட்கும் ஒத்தன புணர்ந்து சொல் எதிர் பெறானாய்த் தானே சொல்லி இன்புறுதல் பொருந்தித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு என்கிறார். அத்துடன் “பொருந்தித் தோன்றும்” என்றதனால் அகத்தொடு பொருந்துதல் கொள்க. என்னை? “காமஞ்சாலா” என்றதனால் தலைமைக்குக் குற்றம் வாராததாயிற்று. “புல்லித்தோன்றும்” என்றதனால், புல்லாமற்றோன்றும் கைக்கிளையும் கொள்ளப்படும். அ∴தாவது, காமஞ்சான்ற தலைமகள் மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி.” (இதனைப் புறத்திணையாகப் பின்னர்க் கைக்கொண்டனர்) எனக் குறிப்பிடுகின்றார். இதனால் தலைமகட்கு அவனுடைய தலைமைக்குக் குற்றம் நிகழாவண்ணம் தோன்றும் ஒரு சிறு மனநிலையே கைக்கிளைக் குறிப்பு என்கிறார் இளம்பூரணார். இங்குத் தலைவனுக்குக் காமம் விளைவித்த பெண்ணும் அறிவதில்லை, புறத்தாரும் தலைவனின் நிலைதனை அறிவதில்லை. இது ஆண்களுக்குப் பருவ வயதில் தோன்றும் அன்புடை நிலையின் தோற்ற நிலையே எனலாம். அதனால் தான் தொல்காப்பியர் இதனை முதற்திணையாக வைக்கின்றார்.

கைக்கிளைப் பொருண்மையைப் பற்றிப் பேசுமிடத்து தொல்காப்பியர் “புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு” என்கிறார். அதனால் கைக்கிளை விரிவற்றது என்பதும், பல துறையாக விரித்து ஓதுதல் இல்லையென்பதும் பெறப்படுகிறது. இது ஒரு துறை மட்டும் கொண்ட அகத்திணையாகும். மேலும் “காமஞ் சாலா இளமையோள்” என்று குறிப்பிடுவதன் மூலம் இதில் காதல் வயப்படுபவன்

தலைவனாகவே இருக்கின்றான். கைக்கிளைக் குறிப்பு இருபாலரிடத்தும் நிகழும் எனினும் இங்கு ஆண்பாற் தன்மையே குறிப்பாகச் சுட்டப்படுகின்றது. இத்தன்மையைச் சுட்டுமிடத்துச் சுப்புரெட்டியார் அவர்கள்,

"காமஞ்சாலா இளமையோள்" என்ற தொடரின் பொருள் சிந்திக்கத் தக்கது. இத்தொடர் இருவகையான கருத்து எழுவதற்கு இடந்தருகின்றது. **ஒன்று:** ஒருவன் பெண்ணொருத்தியைக் கண்டு காம உணர்வு கொண்டான். ஆனால், அவளிடத்து யாதொரு குறிப்பும் புலனாகவில்லை. அதனால் இப்பெண் காமம் எழுவதற்குரிய பருவம் நிரம்பாத பெண் எனத் தெரிந்து கொண்டான். குமரி என எண்ணித் தன் காதலை அப்பெண்ணிடம் புலப்படுத்தினான் எனவும், அவளிடம் உடன்பாட்டிலோ எதிர் மறையிலோ யாதொரு எதிர்வினையும் (Reaction) தோன்றாததால் இவள் பக்குவப் படாத கன்னி எனத் தன் காதல் ஓட்டத்தை நிறுத்திக் கொண்டான் எனவும் இதனால் தெளியப்படும். **இரண்டு :** வயதிற்கு வராத பெதும்பை எனத் தெரிந்தே ஒருத்தியை ஒருவன் காதலித்தான். அவள்பால் காதல் உணர்ச்சி எழாததால் தன் உணர்ச்சியைத் தடுத்து நிறுத்திக் கொண்டான் என்பது. இப்பொருளையே எல்லோரும் கருதி எழுதியும் வருகின்றனர். வயதுக்கு வராதவள் என்று தெரிந்திருந்தும் வேண்டுமென்றே காதல் விளையாட்டுப் புரிந்தான் என்ற கருத்து நூற்பாவில் வரும் பின்வரும் தொடர்களுடன் பொருந்தவில்லை. ஆகவே முதற்பொருளைக் கொள்வதே ஏற்புடைத்து" (அகத்திணைக் கொள்கைகள், ப.271) எனக் குறிப்பிடுகின்றார்.

எனவே காமம் சால இளமையோள் என்பது பருவத்தினை அடையாத பெண்ணாவள். எனின் அண்மையில் பருவத்தை அடையக் காத்திருப்பவளாகவே இருக்க வேண்டும் என்பதைப் பரிபாடல் அடிகள் வழி அறியமுடிகிறது.

> "***மின்னிழை நறுநுதல் மகள்மேம் பட்ட***
> ***கன்னிமை கழியாக் கைக்கிளைக் காமம்***"
> ***(பரிபாடல், 135-136)***

என்ற அடிகள் காமப்பருவத்தினை அடையாத ஆனால், பார்வைக்கு அடைந்தவள் போல் காணப்படுபவளைக் குறிக்கின்றது. எனவே கைக்கிளை என்பது உள்ளத்து மனநிலையேயாகும். உள்ளப் புணர்ச்சிக்கு உடற்பருவத்தின் தகுதி இன்றியமையாதது என்பதைக் காட்டுவதே கைக்கிளையின் குறிக்கோளாகும். இன்றும் இத்தகு தன்மை இளைஞர்களிடத்து தோன்றுதல் உண்டு. இங்ஙனம் அகவுணர்வு வெளிப்பாட்டின் முதற்பகுதியாக விளங்கும் கைக்கிளைப் பாடல்கள் சங்க இலக்கியத்தில் பெரிதும் இடம்பெறவில்லை என்பது வியப்பே. மிக நுண்ணிதான மன உணர்வுகளை ஆராய்ந்த சங்கச் சான்றோர்கள் அன்பின் ஐந்திணைத் தோற்றத்திற்கான முந்திய நிகழ்வாகக் கைக்கிளையைக் கொண்டனர். எனினும் இது உலகோர் ஒப்ப

நிகழாதது, ஆதலினால் சங்கச் சான்றோர்கள் ஐந்திணைப் பாடல்களையே மிகுதியும் பாடினர். சங்க இலக்கியம் முழுவதும் ஆராயின் அகத்திணையில் தோன்றும் கைக்கிளைப் பாடல்கள் நான்கே. அவையும் கலித்தொகையில் அமைந்த பாடல்களாகும். இப்பாடல்கள் தொல்காப்பிய இலக்கணத்திற்கு அரண்செய்வதாக அமைந்துள்ளன.

தோற்றத்தால் பருவ வயதை அடைந்தவள்போல் காணப்படும் பெண்ணொருத்தியின் மீது பருவம் எய்திய இளைஞன் இவள் பருவம் அடைந்தவள் என எண்ணி தன் உள்ளக்குறிப்பை வெளிப்படுத்துகிறான். அவளுக்கு அவனின் உள்ளக்கிடக்கையை அறிய இயலவில்லை. அதனால் தலைவன் தன் காதல் எண்ணத்தைத் தனக்குத்தானே மொழிந்து இன்புறுகின்றான். இதனை,

***“முதிர்கோங்கின் முகை என, முகம் செய்த குரும்பை என,***
***பெயல்துளி முகிழ் என, பெருத்த நின் இளமுலை***
***மயிர் வார்ந்த வரிமுன்கை மட நல்லாய்! - நிற்***
***கண்டார்***
***உயிர் வாங்கும் என்பதை உணர்தியோ? உணராயோ?***
***என ஆங்கு,***
***பேதுற்றாய் போலப் பிறர் எவ்வம் நீ அறியாய்***
***பாது ஒன்றும் வாய் வாளாது இறந்தீவாய்! கேள், இனி***
***நீயும் தவறிலை, நின்னைப் புறங்கடைப்***
***போதர விட்ட நுமரும், தவறு இலர்***
***நிறை அழி கொல் யானை நீர்க்கு விட்டாங்கு***
***பறை அறைந்தல்லது செல்லற்க! என்னா***
***இறையே தவறு உடையான்” (கலித்தொகை, 56:23-34)***

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. இளையோளானவள் எழில் நலமும் தடமென்தோளும், இளமுலையும் கண்டவர்கள் துன்பம் அடைந்தார்களே அன்றி அவள் தன்னைக் கண்டவர்களைக் கண்டு துன்பம் எய்தவில்லை. அவர்களின் துன்பத்தினையும் உணரவில்லை. அதனால் தலைவியின் அழகு நலன்களைத் தன்னோடு பொருத்தி தலைவன் தனக்குத்தானே இன்புறுகின்றான். எனவே இது காமம் சால இளைமையோளாகிய அகத்திணைக் கைக்கிளைப் பாற்பட்டதாகும்.

தலைவனின் காதல் மொழிகளைக் கேட்டபின்பும் தலைவியின் உள்ளத்திலும், மெய்ப்பாட்டிலும் எவ்வித மாற்றத்தினையும் அறியாதவனாய்த் தலைவன் வருந்துதலை,

***“வேய்எனத் திரண்ட தோள் வெறிகமழ் வணர் ஐம்பால்***
***மாவென்ற மடநோக்கின் மயில்இயல் தளர்புஒல்கி***
***ஆய்சிலம்பு அரி ஆர்ப்ப, அவிர் ஒளி இழைஇமைப்ப***
***கொடி என, மின்என, அணங்கு என, யாது ஒன்றும்***
***தெரிகல்லா இடையின் கண் கண் கவர்பு ஒருங்கு ஓட***

***இனைபன கூற இறைஞ்சுபு நிலம் நோக்கி***
***நினையுபு நெடிது ஒன்று நினைப்பால் போல் மற்று ஆங்கே***
***துணைஅமை தோழியர்க்கு அமர்த்த கண்ணள்''***
***(கலித்தொகை, 56:1-6,26-29)***

என்று கூறித் தலைவன் ஏமாஞ்சால இடும்பை எய்தினான் என்பதை இப்பாடல் விளக்குகின்றது. இங்ஙனம் கைக்கிளைத் தன்மையானது இருபாலருக்கு உரியது என்ற போதும் அது தலைவன் மாட்டே விளக்குதல் முறையெனக் கருதியே தொல்காப்பியரும் ''சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்'' என ஆண்பாலைச் சுட்டுதலைக் காணலாம். பெண்ணுக்கு இத்தன்மை இருப்பினும், அவள் தன்னுடைய உள்ளக்கிடக்கையைத் தானே தலைவனிடம் மொழியும் இயல்பு இல்லாததினால் அகத்திணைக் கைக்கிளையானது தலைவனுக்குரியதாகவே கொள்ளப்படும்.

கைக்கிளைக் குறித்தான ந.சுப்புரெட்டியாரின் பரந்துபட்ட பார்வையானது அகத்திணைகளைக் கற்க முனைவோருக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. திணை என்பதனை எங்ஙனம் கட்டமைத்துக் கொண்டு சங்கச் சான்றோர்கள் வாழ்ந்தார்கள் என்பதனையும், திணை கூறும் பண்பாடு எது என்பதனையும் இவரின் அகத்திணைக் கொள்கைகள் நூல் தெளிவுற விளக்குகின்றது. தொல்காப்பியம் நுவலிய பொருளைப் பிற ஆசிரியர்களும், உரையாசிரியர்களும் உள்வாங்கிக் கொண்ட தன்மையினை உடன்பட்டும், சில பொழுது மறுத்தும் தம் கருத்தைத் தெளிவுற இந்நூலில் பதிவுசெய்கின்றார். பல்வேறு ஆசிரியர்கள் அகத்திணைக் குறித்தான செய்திகளை எங்ஙனம் கையாண்டுள்ளனர் என்பதைச் சான்றுகளுடன் மொழிந்துள்ளமை ஆய்வுச் சிந்தனைக்குப் பேருதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## பயன்பட்ட நூற்கள்

1. தொல்காப்பியம், இளம்பூரணம், கழக வெளியீடு.
2. ந. சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள்.
3. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல்.

# 40. ந. சுப்புரெட்டியார் உணர்த்தும் அகப்பொருளில் அறம்

**ம. மோகன் ஸ்டாலின் ராஜ்**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*பார்க்ஸ் கல்லூரி*
*திருப்பூர் - 5.*

## முன்னுரை

'அறம்' என்ற சொல் விரிந்த பொருளையுடையது. மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தையும் இதில் அடக்கிக் கூறலாம். தமிழர் வாழ்க்கையில் அகவாழ்கையிலும் புற வாழ்க்கையிலும் அறம் கடைப்பிடிக்கப்பட்டு வருதலை தமிழ் இலக்கியங்களில் குறிப்பாகவும் தெளிவாகவும் புலப்படுத்தியிருப்பதைக் கண்டு மகிழலாம். 'அறம்' என்ற சொல் நீதியைக் குறிக்கும் அதற்கு மேலும் பல பொருள்களைத் தருவதோடு, இடத்திற்கு ஏற்பப் பல பொருள்களில் வழங்கப் படுகின்றது. இந்த அறத்தினை வள்ளுவர்,

***"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்***
***அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு"***[1]

மறந்தும் பிறர்க்குத் தீங்கு பயப்பனவற்றை எண்ணக்கூடாது. அவ்வாறு எண்ணினால் எண்ணியவனுக்கே கெடுதிவிளையும். அவ்வாறு விளையாது அறமே செய்துவிடும் என்று அறத்தினது தன்மையினை எடுத்துரைக்கிறார் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார். "பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அறம், நீதி, முறைமை" என்னும் நூலில் அகப்பொருளில் அறமாவது 'அறத்தொடு நிற்றல்' என்ற பொருளில் எடுத்துக் கொள்ளப்பட்டுப் பின்வரும் கருத்துக்களை வெளிக் கொணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## அறத்தொடு நிற்றல்

ஊழ் வினையின் காரணமாகக் களவு முறையில் இணைந்த தலைவனும் தலைவியும் வாழ்வில் கற்று நிலைக்கு வரும் வரையில் அவர்களுக்கு உதவியாகப் பாங்கன், தோழி, செலித்தாய் முதலியோர் பங்கு பெறுவதை அக இலக்கியங்கள் காட்டுகின்றன. இங்ஙனம் பங்கு பெறுங்கால் பாங்கன் தலைவியைச் சந்திக்கும் வாய்ப்புகள் உள்ளன. இந்நிலையில் பாங்கனும் தலைவியும் காதலர்களாக மாறுவதில்லை. தோழியும் தலைவனும் சந்திக்கும் வாய்ப்புகளும் உள்ளன. இந்நிலையில் இவர்களும் காதலர்களாக மாறுவதில்லை. தம் மகளைத் தேடித் திரியும் செவிலி வழியில் கண்டோரைக் காணும் வாய்ப்புகள் இருக்கும். இந்நிலையில் இவர்களும் பெருந்திணை

ஒழுக்கத்தில் இறங்குவதில்லை. அக இலக்கிய மாந்தர்கள், ஓட்டப் பந்தயத்தில் ஓடும் போட்டியாளர்களைப் போல், ஒரு வரையறைக்குள்தான் இயங்குவார்கள். இந்த வரையறையைத் தாண்டி, இந்த மரபுகளை மீறி அகத்திணை மாந்தர்கள் ஒழுகுவதில்லை.

உலகில் எந்தமொழி இலக்கியங்களிலும் காணப்படாத ஓர் உயர்ந்த தத்துவம் இது. இந்த அயந்த ஒழுக்க நெறியில் உள்ள ஒரு கூறுதான் ‘‘அறத்தொடு நிற்றல்’’ என்பதாகும்.

## அறத்தொடு நிற்கும் முறை

அறத்தொடு நிற்கும் முறையும் ஒருவித ஒழுங்கிலே நடைபெறுவதாக அகத்துறை இலக்கணமும், அகத்துறைப் பாடல்களும் உணர்த்துகின்றன.

***‘‘தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்***
***பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்கும்***
***செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்***
***நற்றாய் தந்தை தனையர்க் கறத்தொடு***
***நிற்கும் என்ப நெறியறிந் தோரே’’***[2]

என்பது நாற்கவிராச நம்பியார் கூறும் விதி. களவொழுக்கத்தை யார்யார் யாருக்கு வெளிப்படுத்தலாம் என்று ஏணி வைத்தாற்போன்றே மனநிலைகளையுடையது என்பது இதனால் தெளியப்படும். தோழியும் அறியாத மறைந்தொழுகிய தலைவி தன் களவினை அவளுக்குக் கூறி அறத்தொடு நிற்பாள். பின்னர்த் தோழி தன் தாயாகிய செவிலிக்கும், செவிலி தலைவியின் தாயாகிய நற்றாய்க்கும் களவைக் கூறுவர். இதுவே வயதுக்கும் உறவுக்கும் ஒத்த முறையாகும். நற்றாயோ தலைவியின் தந்தைக்கும் உடன் பிறந்தோர்களுக்கும் சொல்லால் கூறாது அவர்கள் அறிந்து கொள்ளுமாறு குறிப்பில் தெரிவிப்பாள்.

***‘‘தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப’’***[3]

என்னும் உள்நயம் நினையத்தகும். தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகிய நால்வரும் பெண்பாலர். ஆதலின் சொல்லால் சொல்லிக் கொள்ளலாம் எனவும், தந்தையும் அண்ணனும் நெருங்கிய கேளிரேனும் ஆண்பாலர் ஆதலின் ஒரு குமரியின் களவினைக் குறிப்பால் உணரச் செய்வது நல்லதாகும் என அகத்திணை இலக்கணம் வகுத்துக் காட்டுகிறது.

## அறத்தொடு நிற்றலின் நோக்கம்

பிறவழிகளில் யாவும் பயனற்றுப் போனபிறகு அறத்தொடு நிற்றல் என்னும் நேர்வழியைத் தலைவியும், தோழியும் மேற்கொள்வர். நாணமும், கற்பும் உயிரனைய இருபேரொழுக்கங்களாகும். ஒருவர்தம் காத்துப் போற்றத் தக்கவையுமாகும். ஆயினும், நாணத்தை விட கற்பைத் தலையாகப் போற்றிக் காக்க வேண்டும் என்பது பண்டைத் தமிழர் கண்ட வாழ்க்கை நெறி.

*"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்*
*செயிர்தீர்க் காட்சிக் கற்புச் சிறந்தன்று"[4]*

என்பது தொல்காப்பியம். அறத்தொடு நிற்பது என்பது பெற்றோர்க்கு முன்னதாக இருப்பினும் நாணத்தை விட்டொழிக்க வேண்டுமாதலால் தோழி அறத்தோடு நில்லாத முறையொன்றினால் திருமணம் முடிக்க களவுச்சுவடு தெரியாமல் பல தீமைகள் முளைப்பதற்கு முன்னரே தலைவன் வரைந்து கொள்ள வேண்டும் என்பது தோழியின் நோக்கம். அகநானூற்றுத் தோழியிடம் இந்த ஆசையைக் காணலாம்.

*"வரையின் எவனோ வான்தோய் வெற்ப*
*கணகலை இருக்கும் கறியவர் சிலம்பின்*
*மணப்பருங் காமம் புணர்ந்தமை அறியார்*
*தொன்றியல் மரபின் மன்றல் அயரப்*
*பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி*
*நொதுமல் விருந்தினம் போல இவள்*
*புதுநாண் ஒழுக்கமும் காண்குவம் யாமே"[5]*

வெற்பனே மான் கூட்டமும் மிளகுக்கொடியும் படரும் மலைப் பகுதியில் நீ நிகழ்த்திய களவொழுக்கத்தை எம் உறவினர் அறியாரன்றோ? அவர் அறியாத நிலையில் மரபு மணம் செய்து கொள்க. கொள்வையாயின் நின்னை முன்பின் அறியாதார் போல் நடந்து கொள்வோம். இவளும் முதன்முதல் நின்னைக் காண்பவள் போல நாணம் அடைவாள். அவள் பொய்யாக நாணி நிற்பதைக் கண்டு நாங்கள் மகிழ்வோம்'' என்று தன் ஆசையைச் சொல்வதுபோல் அறிவு கொளுத்துவதையும் கண்டு மகிழலாம்.

## அறத்தோடு நிற்கும் காலங்கள்

*"காப்பு கைமிக்கும் காமம் பெருகினும்*
*நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்*
*வரைவெதிர் கொள்ளாது தமரவர் மறுப்பினும்*
*அவன்உணர அஞ்சும் காலம் ஆயினும்*
*அந்நால் இடத்தும் மெய்ந்நாண் ஒரீஇ*
*அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்து"[6]*

என்று இறையனார் களவியலாசிரியர் தொகுத்துக் கூறுவார். தலைவியின் களவொழுக்கத்தைக் குறிப்பால் உணர்ந்து பெற்றோர்கள் அவளை இற்செறிக்கும் போதும், பிறர் தலைவியை மணம் பேச வருங்காலத்திலும், தலைமகனுடைய பெற்றோர் பரிசத்தோடு தலைவியை வரைவதற்கு வருங்கால் தலைவியின் பெற்றோர் பரிசம் குறைவு என்று கூறியோ, பிறவாறோ மணத்தை மறுத்தபோதும் தலைவன் இரவுக் காலத்தில் தலைவியை நாடிவருங்கள் அவனுக்கு யானை, பாம்பு முதலியவற்றால் துன்பம் நேரிடும் என்று எண்ணித் தலைவி வருந்தும்போதும் தோழி அறத்தொடு நிற்பாள். தோழி நிற்கவே ஏனையோரும் நிற்பர். தலைவியின் உரிமையையும் செயலையும்

தன்னுடையனவாகவே கொண்டு செயல்படும் உறவினையுடையவள் தோழி. எனினும், தலைவியின் இசைவின்றி அறத்தொடு நிற்றல் மட்டும் இல்லை என்பதை,

> ***"அறத்தொடு நிற்கும் காலத் தன்றி***
> ***அறத்தியல் மரபிலள் தோழி என்ப"***[7]

என்று தொல்காப்பிய நூற்பா அறிவிக்கின்றது. அறத்தொடு நிற்றல் நாணத்திற்கு இழுக்கு வரும். அந்த நாண் இழுக்கு உரியவள் தலைவி. கற்பின் பொருட்டு நாணம் குறைவு வரினும் வருக என்று துணிய வேண்டியவள் தலைவி, அத்துணிவை அறிந்த பின்னரே தோழி அறத்தொடு நிற்றல் வேண்டும். மேலும் நொதுமலர் வரைவும், வெறியாட்டு எடுத்தலும் போன்ற அரிய பெரிய தொல்லைகள் நிகழும் காலமே அறத்தொடு நிற்பதற்குரிய காலமாகும்.

அறத்தொடு நிற்றலை அகப்பொருள் நூல்கள் பலப்பல வகையாகக் கூறுகின்றன. இவ்வாறு அறத்தொடு கூறும் வரையறைகளில் எல்லாம் இவ்வொழுக்க நிகழ்ச்சியை எவரும் எவரிடத்தும் முன்னம் காணா வகையாகத்தான் கூறப்படுகின்றது. மேலும், வெறியாட்டில் அறத்தொடு நிற்பதற்கு வழிவகுப்பதோடு அல்லாமல் வரைவிற்கும் அடித்தளமாகின்றது. இந்த வரைவு களவு நெறியாகவும், தமர் கொடுப்பக் கொள்ளும் மரபு நெறியாகவும் அமையப்பெறுகின்றது என்பதனை இதன் மூலம் உணரலாம்.

## அடிக்குறிப்புகள்

1. திருக்குறள் எண். 204
2. நம்பி அகப்பொருள், நூற்பா எண். 48
3. இறையனார் களவியல், 47
4. தொல்காப்பியம். களவியல் - இளம்பூரணம், 13
5. அகநானூறு, பாடல்.எண். 112
6. இறையனார் களவியல், 29
7. தொல்காப்பியம். பொருளியல் - இளம்பூரணம், 11.

# 41. ந.சுப்புரெட்டியாரின் சைவநெறி

**து. முருகன்**
*ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோவை-641 029.*

## முன்னுரை

உலகம் தோன்றிய நாள் தொன்று தொட்டு மக்களிடையே சமயம் என்ற ஒன்று உலவி வருகின்றது. கதிரவனையும், கதிர்களையும் தனித்தனியே பிரித்தற்கியலாதது போலவே சமயத்தையும், மக்களையும் தனித்தனியாகப் பிரித்தற்கியலாது. சமயம் உயிரோடும், உடலோடும் ஒன்றி இருக்கிறது.

***"ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழ விளங்கி***
***ஏங்கொலி நீர் ஞாலத்து இருள்கடியும், ஆங்கவற்றுள்***
***மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று, ஏனையது***
***தன்னேர் இலாத தமிழ்!" (தண்டியலங்காரம்)***

என்ற நூலின் பாடல்வரி சமயத்தையும், தமிழையும் உணர்த்துகிறது என்று பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

## சைவமும் தமிழும்

மக்கள் தொடர்புற்றிருக்கும் சமயங்களில் சைவமும் ஒன்று. இது சிவபெருமானை முதற்கடவுளாகக் கொண்டுள்ளது. சிவ பெருமானுடன் தமிழை இயைபுபடுத்திப் பேசும் வழக்கமுண்டு. இதனை,

***"கண்ணு தற்பெருங் கடவுளும்***
***கழகமோ டமர்ந்து***
***பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த***
***பசுந்தமிழ்"***

எனும் திருவிளையாடல் புராணப் பாடல் வழி அறியமுடிகிறது. மேலும் சிவபெருமானே தமிழ் ஆய்ந்த பெருமையை "நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி" என்ற தேவாரப் பாடல் வரிமூலம் எடுத்துக்காட்டுகிறார் பேராசிரியர் ந.சுப்பு ரெட்டியார்.

## பண்டைய தமிழ் நூல்களில் சைவம்

உலகின் நிலையாமையை அறிவுறுத்துவதற்கு நெடுஞ்செழியனுக்கு மாங்குடி மருதனார் பாடியது. இப்பாடலில் மதுரையில் நடைபெறும் அந்தி விழாவினைக் குறிப்பிடுவதிலிருந்து சிவபெருமானின் முழுமுதற்தன்மை குறிப்பிடப்பெறுகின்றது.

***"நீரும் நிலனும் தீயும் வளியும்***
***மாக விசும்போ டைந்துடன் இயற்றிய"***

என்ற பாடல் அடிகளின் மூலம் சிவபெருமான் முழுமுதற் கடவுளாகக் குறிப்பிடப்படுகிறார் என்று பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

எட்டுத்தொகை நூல்களில் மிகவும் சொற்சுவை, பொருட்சுவைகளில் சிறந்த ஐங்குறுநூறு என்ற நூலில் கடவுள் வாழ்த்தானது சிவபெருமானைப் பற்றியது. இதனை,

***"நீல மேனி வாலிழை பாகத்து***
***ஒருவன் இரு தாள் நிழற்கீழ்***
***மூவகை உலகு முகிழ்த்தன முறையே"***

என்ற பாடல் வரியானது சக்தியை முதலிலும் சிவனை அடுத்தும் கூறுவதாகப் பேராசிரியர் ந.சுப்பு ரெட்டியார் அவர்கள் குறிப்பிடுகிறார்.

கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகையானது சிவபெருமானை "ஈர்ஞ்சடை அந்தணன்" என்று குறிப்பிடுவதை,

***"இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்***
***உமையமர்ந்து உயர்மலை இருந்தனனாகக்"***

என்ற பாடல்வரியானது குறிப்பிடுவதாகப் பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

சிலப்பதிகாரத்தில் மக்கள் நெற்றியினிடத்து விழித்த கண்ணை உடைய சிவபெருமானின் கோயிலிலும், கோழியின் சேவலாகிய கொடியையுடைய முருகனது கோயிலிலும் வழிபாடு செய்து வழிப்பட்டனர் என்பதை,

***"நுதல் விழி நாட்டத் திறையோன் கோவிலும்"***
***"கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்"***

என்ற அடிகளின் மூலம் பேராசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

சிவபெருமான் வெள்ளியம்பலக் கூத்து ஆடுவதுப் பற்றி பதிகங்களில் குறிக்கப்பட்டதைக் கீழ்க்கண்டப் பாடல்வரி எடுத்துரைப்பதாகப் பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

***"அதிகாரச் சிறப்பின் மதுரை மூதூர்க்***
***கொன்றையஞ் சடைமுடி மன்ற பொதியிலில்***
***வெள்ளியம்பலத்து".***

பூம்புகார் நகரத்தில் சிவபெருமான், ஆறுமுகச்செவ்வேள், பல தேவன், திருமால், இந்திரன் ஆகிய கடவுள்களுக்குக் கோயில்கள் இருந்தன என்பதைப் பின்வரும் பாடல்வரி மூலம் அறிந்து கொள்ளலாம்.

***"பிறவா யாக்கை பெரியோன் கோவிலும்,***
***ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்,***
***வால்வளை மேனி வாலியோன் கோயிலும்"***

## சிலப்பதிகாரம்

அந்தக் காலத்தில் சிவபெருமான் பற்றியும் அவர்தம் திருவிளையாடல்கள் பற்றியுமான செய்தி மக்களிடையே

பெருவழக்காக இருந்ததை திருத்தக்கத்தேவர் சீவகசிந்தாமணியில் குறிப்பிட்டுள்ளதைக் கீழ்க்கண்ட பாடல் பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

***"போகம் ஈன்ற புண்ணியன்***
***ஏய்த கணையே போல"***

என்ற அடிகள் சிவபெருமான் திரிபுரம் எரித்த வரலாற்றைக் கூறுகின்றன. என்பதை தெளிவுப்படுத்தியிருக்கிறார்.

மேலும் கம்பர், சிவபெருமான் அகத்தியருக்குத் தமிழ் உரைத்ததாகவும், அகத்தியனோ தமிழுக்கு இலக்கணம் வகுத்தான் என்பதைப் பின்வரும் பாடல் மூலம் பேராசிரியர் விளக்குகிறார். இதனை,

***"தழற்புரை சுடர்க்கடவுள்***
***தந்தமிழ் தந்தான்"***

என்பதனால் அறியமுடிகின்றது.

## புராண இலக்கியங்களில் சைவம்

திருக்குறள் போன்ற நூல்கள் மக்களை நல்வழிப்படுத்துதல் போலவே புராணங்களும் மக்களுக்குத் தெய்வப் பக்தியை ஊட்டித் தமிழ்ச்சுவை மூலமாகவும், தலக்கதைகள் மூலமாகவும் மக்களை நல்வழிப்படுத்தி வந்துள்ளன.

திருவாசகத்திற்கு முதல் அகவல் சிவபுராணம் என்பதை,

***"சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை***
***முந்தை வினை முழுவதும் ஓய உரைப்பன யான்"***

என்ற அடிகளின் மூலம் அறியலாம் என்று பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

திருவாலவாயுடையார் திருவிளையாடலானது மதுரையின் பெயர்களான கூடல், ஆலவாய் என்று சிலப்படலங்களில் துதிப்பாடல்களாக அமைத்துள்ளார். நடுவில் சில இடங்களில் பாத்திரங்களின் கூற்றாகச் சிவசின்னங்கள் மூன்றையும் இவர் போற்றி உரைத்துள்ளதை,

***"பவங்கள் நீக்கும் வெம்பாதகம் ஆற்றும் நல்***
***தவங்கள் நல்கும், தலைமை தரும், தொழும்"***

என்று கூறி வெண்ணீற்றையும் ஐந்தெழுத்து மந்திரத்தையும் குறிப்பிடுகின்றார்.

கடவுள் மாமுனிவர் சிவபெருமானின் திருவிளையாடல் பற்றி,

***"தென் பொதிய மாமுனி சிறக்க அருள் எண்ணென்***
***இன்ப விளையாடல் தெனுங்கடவுள் நாயேன்"***

என்ற வரியானது அகத்தியர் கூறிய 64 திருவிளையாடல்களுள் சில கூறுகிறேன் என்கிறார். இதனால் 64 திருவிளையாடல் என்ற வழக்கு ஏற்பட்டபின் இவர் புராணம் பாடினார் என்பது தெளிவாகிறது என்று பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

சிவபரம்பொருள் என்பது மும்மூர்த்திகளையும் கடந்த நிலையிலுள்ளது என்பதை வரதுங்கராமன் பிரமோத்தரகாண்டத்தில் மிகவும் அழகுபடக் கூறுகின்றார்.

***"யாவ னொருவன் எவ்வுயிரும்***
***யானொருவன் கடவுளுக்குக்***
***கெல்லா முறைமை பூண்டுள்ளான்"***

மார்க்கண்டனுக்காகச் சிவபெருமான் நடனமாடுவதைக் கூறும் பாடலின் சந்தமே படிப்போரை ஆடச் செய்யவல்லது

***"தடவுறு மண்டத்துலவிய***
***அம்பொற் சடையாடத்***
***தொடரொளி பம்பிச் சுழல் தரு***
***கொன்றைத் தொடையாட"***

என்ற பாட்டைப் படிக்கும் போது பரமன் நடித்தக் காட்சியை மனக்கண்ணால் காண முடியும் என்று பேராசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## பிரபந்த இலக்கியங்களில் சைவம்

சிவபெருமானுக்கு அவதாரம் இல்லை என்பதை அருணகிரி அந்தாதியில் காணப்படுவதனைப் பேராசிரியர் ந.சுப்பு ரெட்டியார் குறிப்பிடுகிறார். இதனை,

***"எல்லார் பிறப்பும் இறப்பும் இயற்பாவலர் தம்***
***சொல்லால் தெளிந்தோம், நம் சோணேசர் - இல்லிற்"***

என்ற பாடல் மூலம் அறியலாம். தமிழ்ப் பிரபந்தங்களின் வரிசையில் கோவை என்பது மிகவும் பழமையானது. பாண்டிக்கோவை என்ற நூல் ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தர் அப்பர் காலத்திலிருந்த நெல்வேலி வென்ற சீர் நெடுமாறனைப் புகழ்வது, இறையனார் களவியல் உரையில் எடுத்துக்காட்டுச் செய்யுட்களாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. பிரபந்தக் கோவைகளில் சைவத்தைச் சார்ந்தவைகள் அதிகமானவையாகும். அவற்றுள் திருவாரூர் கோவை மிகவும் சிறப்பானது. இது பக்தி சுவையும், அகப்பொருள் சுவையும் மிக்கது.

அண்ணாமலை புராணமும் அந்தாதியும் பாடிய நினைவினால் ஆரூர் தியாகராசரைக் கூறும் போது அண்ணாமலையாரை ஆரூர்தியாகா என்று கூறுவர். அதனை,

***"மற்றிடங் கொண்ட புயபூ***
***தரனெல்லன் மாநிலத்தில்***
***உற்றிடங் கொண்ட தென் ஆரூர்த்***
***தியாகருக் கும்பர் தொழும்***
***புற்றிடம் கொண்ட வருக்கருட்***
***கோவை புகன்றன னே"***

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம் என்று பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

மூவர் அம்மானை என்னும் நூலில் திருவாரூரில் ஈசன் பசுவாகவும், கன்று யமதர்ம ராசனாகவும் வீதியில் வந்தார் என்று குறிப்பிடுவதாகப் பேராசிரியர் சுட்டிக் காட்டுகிறார். அதனை

***“ஈசன் பசுவாய் எமன் இளங்கன்றாகி***
***வீசு புகழ் ஆரூரில் வீதி வந்தார் அம்மானை”***

என்ற பாடல் அடிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

மேலும் திருவாசகத்தில் எட்டாம் பதிகமாகத் திருவம்மானை என்ற பெயரில் மாணிக்கவாசகர் இருபது பாடல்கள் பாடியுள்ளார். பாடல் ஒவ்வொன்றும் இறுதியில் “அம்மானாய்” என்ற சொல்லைப் பெற்றுச் சிவபெருமானைத் துதிப்பதாக மட்டும் உள்ளது என்று பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் சுட்டிக் காட்டுகிறார்.

## சித்தர் இலக்கியங்களில் சைவம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர் இலக்கியத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. சிவபெருமானையே எல்லாவல்ல சித்தராக்கித் திருவிளையாடல் புராணம் காட்டியுள்ள கதைகளைக் கொண்டு சித்தர்களின் பெருமையை அறியலாம் என்று பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

பொது மக்கள் சித்தர் வாழ்ந்த மலைகளைத் தம் நினைவில் வைத்து போற்றி வருகின்றனர். சித்தர்களோடு தொடர்புடைய இருப்பிடங்களையும் காணமுடிகிறது. இதனை அறிய சில இருப்பிடங்களைக் குறிப்பிடுகிறார். அகத்தியர்- பொதிய மலையிலும், திருமூலர் சிதம்பரத்திலும், அகப்பேய்சித்தர் விருதாச்சலத்திலும், நந்திதேவர் சீர்காழியிலும், தன்வந்திரி வைத்தீசுவரன் கோயிலிலும், கமலமுனி திருவாரூரிலும், பாம்பாட்டிசித்தர் திருக்கடவூரிலும் (மருதமலை) போகர் பழநியிலும், இராமதேவர் அழகர் மலையிலும் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிவவாக்கியர், திருமூலர் போன்றோர் உருவ வழிபாடு இருப்பதைப் பலப்பாடல்கள் மூலம் தெளிவுப்படுத்துகிறார்கள் என்பதைப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். அதனை,

***“கோயிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?***
***கோயிலும் மனத்துளே, குளங்களும் மனத்துள்ளே***
***செங்கடலும் கருங்கலும் சிவந்த சாதிலிங்கமும்***
***சிவந்த சாதிலிங்கமும் செம்பிலும், தராவிலும்***
***சிவன் இருப்பன் என்கிறீர்”***

என்று உருவ வழிபாடு இருப்பதைச் சித்தர் பாடல்கள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

“ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற திருமூலர் கருத்து

எடுப்பாகத் திகழ்வதையும் காணலாம். "தில்லை நாயகனும் அவன், திருவரங்கனும் அவன்" என்று குறிப்பிடுகிறார்.

சிவாயம் பற்றிப் பல பாடல்கள் உள்ளன. எடுத்துக்காட்டாகச் சில பாடல்களைக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர்.

***"இன்ப மற்ற யோகியை இருளும் வந்து அணுகுமோ!***
***செம்பொன் அம்பலத்துளே தெளிந்த சிவாயமே" (43)***
***"ஆதி அந்த மூலவிந்து நாதம் மேவி நின்றதும்***
***ஆதி அந்த மூலவிந்து நாதமே சிவாயமே" (189)***

மேலும் ஐந்தெழுத்து மந்திரம் சைவர்களுக்குரியது "நமசிவாய" என்பது பல பாடல்களில் காணப்படுகிறது.

***"சிவாயம் என்ற அட்சரம் சிவன் இருக்கும் அட்சரம்***
***உபாயம் என்று நம்புதற்கு உண்மையான அட்சரம்" (72)***
***"நமச்சிவாய அஞ்செழுத்து நம்முள இருக்கவே***
***நமச்சிவாய உண்மையை நன்கு உரை செய் நாதனே"***
***(104)***
***"மூலம் என்ற மந்திரம் முளைத்த அஞ்செழுத்துளே***
***நாலு வேதம் நாவுளே நவின்ற ஞான மெய்யுளே"(305)***

என்பன போன்ற ஏராளமான பாடல்கள் ஐந்தெழுத்து மந்திரத்தை அம்பலப்படுத்தி நிற்கும் என்று பேராசிரியர் குறிப்பிடுகிறார்.

சிவபெருமானை சில பாடல்களில் குறிப்பிட்டுப் பேசுகிறார் சிவவாக்கியர். இதனை,

***"சத்தியாவது உன்னுடல் தயங்குவேன் உட்சிவம்***
***பித்தர்கள் இதற்கு மேல் பிதற்றுகின்றது இல்லையே"***
***(397)***

என்ற பாடல் அடிகள்மூலம் அறிந்து கொள்ளலாம்.

மேலும் சிவபெருமானை எங்கும் இருப்பதாகவும், கோயில் குளம் முதலியவற்றைத் தேடிப் போக வேண்டா, அவன் நம்முளே இருக்கின்றான் என்று சிவவாக்கியர் குறிப்பிடுவதாகப் பேராசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

***"தீர்த்தலிங்க மூர்த்தி என்று தேடி ஓடும் சீதரே***
***தீர்த்தலிங்கம் தான் அதாயச் சிறந்ததே சிவாயமே"***
***(479)***

## முடிவுரை

பண்டைய தமிழ்நூல்களிலும், புராண இலக்கியங்களிலும், பிரபந்த இலக்கியங்களிலும், சித்தர் இலக்கியங்களிலும், சிவபெருமானைப் பற்றியும், கோயில்கள் பற்றியும், சிவனை உச்சரிக்கும் மந்திரங்கள் பற்றியும் அறிந்து கொள்ளலாம். இதனை ந.சுப்புரெட்டியார் திறம்பட எடுத்துரைத்துள்ள பாங்கினை இக்கட்டுரை புலப்படுத்திக் காட்டுகின்றது.

# 42. ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் ஆலய வழிபாட்டு முறைகள்



**ர. நித்யா**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 600105.*

இந்துசமயம் என்பது உண்மையில் சைவம், வைணவம், சாக்தம் முதலிய பல்வேறு உட்பிரிவுகளின் தொகுப்பாகும். பல்வேறு வேறுபாடுகளுக்கிடையேயும் இவ்வுட்சமயங்களுள் சில ஒற்றுமைகளைக் காணலாம். அவற்றுள் தலையாயது ஆலய வழிபாடு. இதுவே இந்திய சமயங்களின் தனித்தன்மை எனலாம். இதுவே உலகின் பிற சமயங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதாகும். வேதங்களின் முற்பகுதியில் வழிபாட்டு முறைகள் தெளிவாகச் சொல்லப்படவில்லை. ஆனால் அதன் கடைசிப்பகுதியில் இது முழுமையாக ஏற்கப்படுகிறது. கடவுள் கொள்கையையும், பிறவழிபாடுகளையும் தீவிரமாக எதிர்த்த சமணமும் பௌத்தமும் கூட ஆன்மீக வளர்ச்சிக்கு வழிபாடுகளின் இன்றியமையாமையை ஏற்க வேண்டியதாயிற்று. எந்தவொரு மதத்திற்கும் இரண்டு எதிர்பார்ப்புகள் உண்டு. ஒன்று உடல் மற்றும் அன்றாட உலக வாழ்க்கை சம்பந்தப்பட்டது. நோய் நீக்கம், மழை வேண்டல், பயிர்-பசுக்கள், மக்கள் முதலியன பல்கிப்பெருகுதல், தீய சக்திகள் அண்டாமை, குடும்ப நல்லிணக்கம் முதலியன இதில் அடங்கும். சமயச்சடங்குகள் பலவும் இதனடிப்படையில் உருவானவையேயாகும். மற்றொன்று மரணத்திற்குப் பின் உயிர் மோட்சம் அடைதல், முந்தையது இகசுகம், பிந்தையது பரசுகம். பாமரர் தங்கள் கிராம தேவதைகளை இகசுகம் வேண்டி அணுகுவர். சமணம், பௌத்தம், அத்வைத வேதாந்தம் முதலிய பரசுகத்தை மட்டுமே நாடின. இந்து மதத்தில் இவ்விரண்டின் கலப்பில் தோன்றிய சைவம், வைணவம் முதலிய மேல்மட்ட வழிபாட்டுச் சமயங்கள் தங்கள் தெய்வமே முழுமுதற் கடவுள் என்றும், இகபரசுகம் இரண்டையும் அருளவல்லவர் அவர் ஒருவரே என்றும், இவற்றைப் பெற அத்தெய்வத்தின் அருளே வேண்டப்படுவது என்றும், அவ்வருளைப்பெற சரியை, கிரியை, யோகம், ஞானம், பக்தி, பஜனை போன்றவை வழிமுறைகள் என்றும் கூறும். இவற்றுள் கோயில் வழிபாட்டில் சரியையும், கிரியையும் மேலிடம் பெறும். பிற அவற்றிற்குத் துணை நிற்பவையே. பக்தி இயக்க காலத்தில் சிவனும், திருமாலும் ஏற்றம் பெறவே, அந்தணரின் நியம வழிபாடும், வேத காலத்திற்கு முன்பிருந்தே நிலவியிருந்த ஆகம வழிபாடும் இணைந்து கோயில் வழிபாடுகளாகி மறைந்தன. ஆகம வழிபாட்டில் பூஜையே முதலிடம் பெறும். இதில் இறைவனுக்குச்

செய்யப்படும் 16 வகை உபசாரங்களும், தரிசனம், பிரசாதம் எனும் கொள்கைகளும் மிக முக்கியமானவை பல்வேறு திருமஞ்சனங்களுக்குப் பின் வண்ண ஆடை, அணிகலன்கள், மாலைகள் முதலோடு அழகுற இலங்கும் இறைவனைக் காண்பதே தரிசனம் எனப்படும். நாம் தந்த நிவேதனங்களை ஏற்று அவற்றையே நமக்கும் பிரசாதமாகத் திருப்பித் தரும் இறையருளே இவ்வழிபாட்டின் முக்கிய அம்சம் எனலாம்.

## தொல்காப்பியர் காலத்தில் தெய்வ வழிபாடு

மக்கள் வாழும் நிலத்திற்கும் உணவுப் பொருளுக்கும் வாழ்க்கை முறைகளுக்கும் ஏற்றவாறு அவர்களுடைய மனத்தியல்பாகிய தெய்வக் கோட்பாடுகளும் வழிபாட்டு முறைகளும் பல்வேறாகவே அமையும். இக்காரணம் பற்றியே தொல்காப்பியர் தெய்வத்தைக் கருப்பொருள்களில் ஒன்றாகச் சேர்த்திருக்கிறார். அவற்றில் சிறப்புக் கருதித் தெய்வத்தை முதலில் வைத்து இலணக்கம் செய்தார். இவ்வாறு கருப்பொருள்களில் முதலிடம் பெற்ற தெய்வத்தை நான்காகப் பிரித்து முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய திணைகளில் அமைத்துக் காட்டுகிறார்.

***“மாயோன் மேய காடுறை உலகமும்***
***சேயோன் மேய மைவரை உலகமும்***
***வேந்தன் மேய தீம்புனல் உலகமும்***
***முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்***
***சொல்லிய முறையால் சொல்லவும் படுமே”***
***(தொல்.அகத்.5)***

மேற்கண்ட நூற்பாவின் மூலம் தொல்காப்பியர் வழிபாட்டு முறைகளைத் தெளிவுறுத்துகிறார்.

## சங்க நூல்களில் தெய்வ வழிபாடுகள்

முருக வழிபாடு பண்டைத் தமிழ் நூல்களில் சிறப்பாகக் கூறப்படுகிறது. நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை முருக வழிபாட்டின் பல்வேறு வகைப்பட்ட முறைகளையும் எடுத்தோதுகிறது. முருகனின் அழகிய திருவுருவம் மனம் கவரும் விதமாய் வருணிக்கப்படுகிறது. குறிஞ்சி நில மக்களான மலைவாழ் குறவர்களும், நானிலங்களும் உரியோரான நான்மறையாளர்களும் முருகக் கடவுளைத் தாம் தாம் அறிந்த முறைகளிலே வழிபட்டனர். ஊர் விழாக்களில் முருகனுக்கு எதிரில் கோழிக் கொடியினை நிறுத்தித் தினை அரிசியில் மலரைக் கலந்து தூவி ஆட்டுக்கிடாயை அறுத்துப் பலி கொடுத்து வழிபட்டனர். திருக்கோயில் வழிபாடுகளில் பண்டைய காலந்தொட்டே வேள்விக் சடங்குகளும் இடம் பெற்றிருந்தன. அதற்குக் காரணம் பண்டைய பேரரசர்கள் வேத வேள்விகளை இயற்றி வைதீக நெறிக்குப் புரவலராகி விளங்கியதுதான்.

***“அறுதொழில் அந்தணர் அறம்புரிந் தெடுத்த***
***தீயொடு விளங்கும் நாடன்” (புறம்-397)***

என்று சோழன் குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைத் தாயங்கண்ணனார் சிறப்பிக்கிறார்.

## ந.சுப்புரெட்டியார் பார்வையில் வழிபாட்டு முறைகள்

*"அங்கையொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப*
*அன்பினால் உருகிவழி நீர்*
*ஆறாக வாராத முத்தியின தாவேச*
*ஆசைக் கடற்குள் மூழ்கிச்*
*சங்கர சுயம்புவே சம்புவே எனவும்மொழி*
*தழுதழுத் திடவணங்கும்*
*சன்மார்க்க நெறி"* *(தா.பா.சின்மயானந்த குரு-1)*

என்று அடிகளார் கூறும் இந்நெறியே இறைவனை வணங்கும் நெறி. இந்நெறியில் நிற்பவர்கள் ஆலயவழிபாடு, பூசை முறைகள், பூசை விதிமுறைகள் இவற்றை அறிந்து கொண்டு அவற்றின்படி ஒழுக வேண்டுமென்று ந.சுப்புரெட்டியார் அறிவுறுத்துகிறார்.

## பூசை என்பதன் பொருள்

பரந்த உலகில் இறைவனைப் போற்றாதார் சிலர். சிலர் இறைவனை உணர்ந்து வணங்குகின்றனர். வேறு சிலர் அத்தகைய உணர்ச்சியின்றியே வணங்குகின்றனர். தெய்வத் தன்மையை உடையதைப் பார்த்து மெச்சுதல் மாந்தர் இயல்பு. உயர் தன்மையை மெச்சும்போது மெச்சுபவரே உயர்தன்மையை எய்துகின்றனர்.

1) மெய்ப்பொருளின் மகத்துவத்தை உணர்வதால் உண்டாகும் அதிசயமே பூசையாகின்றது.

2) அச்சத்தை தவிர்த்தலும், அடிபணிதலும் பூசையின் பகுதிகளாகின்றன.

3) மனங்கசிந்து போற்றுதலும், வழுத்தலும், பூசையின் கூறுபாடுகளாகின்றன.

4) இறைவனை பாவிப்பதும் பூசையாகின்றது.

மனிதன் மனநிலையை மேன்மையுறச் செய்யும் உபாயங்களெல்லாம் பூசையாகின்றன என்று எடுத்துரைக்கிறார்.

## பூசை முறைகள்

திருக்கோயிலின் எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்குப் பலவிதமான உபசாரங்களுடன் ஆராதனை நடைபெறுகின்றனது. இத்தகைய ஆராதனைகள் யாவும் ஆன்ம சாதகன் (பக்தன்) அடைந்து வரும் மனப்பரிபாகத்தின் புறச்செயல்களாகும். ஆராதனை செய்கின்றவர்கள் சதாசரமே வடிவெடுத்தவர்களாகி இருத்தல் வேண்டும். நல்லொழுக்கம் அவர்களிடம் ஓங்குமாயின் வழிபாடும் மேம்பாடுடையதாகிறது என்று பூசை முறைகள் குறித்து விளக்கம் அளிக்கிறார்.

### 1) அபிடேகம்

தெய்வத்தின் திருமுழுக்கு நன் மனத்தில் அன்பை வளர்ப்பதற்கான அறிகுறியாகவே புறத்தே நிகழும் செயலாகும். பால், தயிர், நெய் முதலியவற்றைச் சொரிந்தும் அபிடேகம் செய்வது வழக்கமாகும். இவையனைத்தும் உடலை வளர்ப்பதற்கு ஏற்ற நல்லுணவு. நல்லுணவு படைத்து உடலை வளர்ப்பது போன்று நல்லெண்ணங்களை எண்ணி உள்ளத்தை வளர்க்க வேண்டும் என்பது கோட்பாடு.

### 2) அலங்காரம்

மூர்த்தியை முழுக்காட்டிய பிறகு அவரை ஆடை ஆபரணங்களினாலும் அலங்கரிக்கின்றோம். நம் உடல் வாழ்க்கை எங்ஙனம் ஓம்புகின்றோமோ அதே கோட்பாட்டைத் தெய்வத்தின் கண் காண அன்பர்கள் முயலுகின்றனர் என்பது கோட்பாடு.

### 3) நைவேத்தியம்

மூர்த்திக்கு அலங்காரம் ஆன பிறகு அவருக்கு இனிய உணவு நைவேத்தியமாகப் படைக்கப் பெறுகின்றது. இறைவன் இதனை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளுகின்றான் என்றே அன்பன் உணர்கின்றான். ஈசுவரப் பிரசாதமாக பக்தன் அதனை ஏற்றுக் கொள்ளும் பொழுது அவனுடைய அந்தக்கரணத் தூய்மைக்கு அது பேருதவி புரிகின்றது என்பது கோட்பாடு. மனப்பான்மை மேன்மையடைவதற்குப் பொருளைக் கடவுளுக்கு நைவேத்தியமாகப் படைப்பதும், உண்டியல் போடுவதும் சிறந்த வழிபாடாகும்.

## தீப ஆராதனை

திருக்கோயில்களில் நடைபெறும் கிரியைகள் யாவும் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்தவையாகும். அஞ்ஞான இருளினின்று ஞானபூமிக்கும் பிரவேசிக்கும் பக்தன் ஒரே ஒளிப்பிழம்பைக் காண்கிறான். அந்த ஒளிபிழம்பினை அவன் ஒன்றித்து விடுவதற்குச் சிறிது நேரமாகிறது. பரம்பொருள் என்றைக்கும் அணையாத ஆன்மப் பிரகாசமாக உள்ளது என்று ந.சுப்புரெட்டியார் அவர்கள் விவரிக்கிறார்.

## பூசை விதிமுறைகள்

தெய்வத்தன்மை எய்துவதே தெய்வத்தை வணங்குதற்கு உபாயமாகின்றது. ‘‘சார்ந்ததன் வண்ணமாதல்’’ என்பது சித்தாந்தக் கொள்கை. இறைவன் வாழும் இடம் நம் உடம்பில் இது நிலை குலைந்து போயின் அவன் இதில் கோயில் கொள்ள இசையான். அவனுக்கு ஏற்றதாக இதனைச் செய்வித்தலே நம் தலையாய கடமை. இதனை யாண்டும் ஈசுவரனுடைய ஆலயமாகச் செய்தல் செயற்கரிய செயலாகின்றது.

***‘‘நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம்: அன்பே***
***மஞ்சனநீர்: பூசைகொள்ள வாராய் பராபரமே’’***

***(தாயு.பா - பராபரகண்ணி-15)***

என்பது தாயுமான அடிகளின் திருவாக்கு உற்றுநோக்கத்தக்கது.

## பூசை வகைகள்

பூசையை மேற்கொள்ளுவதில் இருவகை உண்டு. அவை (1)மாசை பூசை (2) பாகிய பூசை என்பவையாகும்.

### 1) மானச பூசை

உடலை வளர்க்கவும், தூய்மையாக்கவும் நாம் கடமைப்பட்டிருப்பது போன்று உள்ளத்தைப் பண்படுத்துவதிலும் அறிவுடையே கடமைப்பட்டுள்ளனர். மானச பூசையே அதற்கு உற்ற வழியாக அமைகின்றது. மனத்தை ஒருமைப்படுத்திக் கொண்டு உலகில் உள்ளோர் அனைவரும் இன்புற்றிருக்க வேண்டுமென்ற மனமாற வாழ்த்துவது இறைவழிபாட்டில் முதற்படியாகும். அடுத்தபடியாக மேற்கொள்ளப் பெறுவது நியாசம் என்பது. உடலின் பல்வேறு உறுப்புகளைப் பலப்படுத்துவது என்பது இதன்பொருள். இதனைச் செய்யும்போது உடலுக்கு இன்றியமையாதனவாக இருக்கும் ஐம்பொறிகள் தூய்மை அடைந்து, கண்கள் ஒளியுடையவை ஆகும். இறைவன் "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வம்" என்று வழங்கப் பெறுகின்றான். இமைப்பொழுதும் நீங்காது உள்ளத்தில் உறைகின்ற அவனது சான்னியத்தியத்தை நினைவுபடுத்திக் கொள்ளுதலே "ஆவாகனம் அல்லது வரவேற்பு" ஆகின்றது. இறைவனுக்கு உள்ளம் எனும் ஆசனம் அளிக்கப்பெறுகிறது. அதே அன்பு நீர் மீண்டும் ஆசமனம் பண்ணுவதற்குத் தரப்பெறுகின்றது. நீரைக் கொண்டு முகம் துடைப்பதற்கும் அதனைத் துளி அளவு உட்கொள்ளுவதற்கும் "ஆசமனம் பண்ணுதல்" என்று பெயர். அடுத்தபடி இறைவன் அணிவதற்கு ஆடை வேண்டும். சிதாகாசம் அல்லது உள்ளப் பெருவளியே அவனுக்கு ஆடையாகின்றது. பாவனை அல்லது மனக்கண்ணால் உணர்தல் வலிவும் தெளிவும் பெறுதற்கேற்ப மானச பூசையும் அவற்றிற்கேற்ப முழு நிறைவு பெறுகின்றது. பூசையின் ஒவ்வொரு பகுதியையும் ஆழ்ந்து பாவித்துக் கொண்டே போனால் "பரிபூரண பிரம்மானந்த அனுபவம்" என்பதைத் தெளிவாக உணரலாம்.

### 2) பாகிய பூசை

வழிபாடுகளுள் மானச பூசையே மேலானது. அப்பர், ஞானசம்பந்தர், நம்மாழ்வார் போன்ற ஞானச்செல்வர்கள் கண்ட வழியல்லவா? ஆனால் இதனை முழு நிறைவுடன் செய்வதற்கு எல்லோராலும் இயலுவதில்லை. சூக்குமப் பார்வையும், சூக்குமப் பாவனையும் உண்டாகும் வரை தூலப் பொருள்களின் உதவியை நாடுதலே முறை. ஆன்ம சாதனத்தில் முதிர்ச்சி பெறுவதற்கு முன்பு மூர்த்தி வழிபாடு பெரிதும் பயன்படுகிறது. இல்லத்தில் பூசை அறையில் எழுந்தருளச் செய்யப் பெற்றிருக்கும் தெய்வத் திருவுருவத்தின் முன்பு இந்த வழிபாட்டை பாகிய பூசையை மேற்கொள்ளலாம்.

## மன்னிப்பு கோருதல்

மூர்த்தியின் மூலம் பாகிய பூசையை முடித்த பிறகு பக்தன் இறைவனிடம் மன்னிப்பு கோருகிறான். ஈசுவரத்துவம் தனக்கு முற்றிலும் தெளிவாகவில்லை என்றும், தன் சிற்றறிவுக்கு எட்டியவாறே ஆராதனை செய்யப்பெற்றது என்றும், அத்தகைய ஆராதனையில் குற்றம் குறைகள் இருப்பின் மன்னித்தருள வேண்டும் என்றும் வேண்டுகின்றான்.

உடலைப் பேண விரும்புபவன் தானே உண்பது போலவும், கல்வி கற்பவன் தானே முயன்று கற்பது போலவும் ஆன்ம சாதனமும் சுய முயற்சியால் நடைபெறுதல் வேண்டும். துணை செய்வதுடன் பிறர் பங்கு நின்று விடுகின்றது. அறிவு தன்னூடு வளர்ந்து வர வேண்டிய பூசா தத்துவம் முழுவதும் ஆன்ம சாதனத்தை ஒட்டியது. ஆதலால் சாதகன் தன் இயல்புக்கு ஏற்றவாறு அதைத் தனக்குத் தானே செய்து கொள்ள வேண்டும். பொருளை வாரி இறைத்து பெருமிதமாகச் செலவிடுவதால் பூசை பெரியதாகி விடாது என்பது உளங்கொள்ளப்படும்.

மனிதன் நாடோறும் இறைவனைப் போற்றக் கடமைப்பட்டவன். போற்றும் அளவு புனிதம் அவன்பால் வந்து எய்துகின்றது. அதனால் வாழ்க்கையே ஓயாது புதுப்பிக்கப் பெறுகிறது. இவ்வுலகம் உண்மையில் இருள் சூழ்ந்ததன்று. ஆன்மா உய்வதற்கென்றே அஃது இறைவனால் படைக்கப்பெற்றது. அதனால் அருளே வடிவெடுத்ததென்பதை அவன் உணர்கின்றான். பூசை செய்வது புனிதம் அடைபவர் தங்கட்கு மட்டும் பயன்படுத்துபவர் அல்லர். அவர்களுடைய வாழ்வு உலகுக்கே அருள் விருந்தாகும் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக டாக்டர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் மக்களுக்கு அறிவுறுத்துகிறார்.

# 43. ந.சுப்புரெட்டியாரின் தமிழ் மொழியமைப்பும் மொழிப்பயன்பாடும்

**முனைவர் இ. சேனாவரையன்**
*தமிழ் உதவிப்பேராசிரியர்*
*அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)*
*கோயம்புத்தூர் - 641 018.*

ந. சுப்புரெட்டியார் தமிழுக்கு ஆற்றியுள்ள பணி அளவிடற்கரியது. அத்தகைய தமிழ்ப்பணியானது அவர் எழுதியுள்ள ஏராளமான நூல்களின் வழி அறிந்துகொள்ளலாம். அவருடைய நூல்களில் பயன்படுத்தியுள்ள தமிழ்மொழியமைப்பு (Language structure) மற்றும் மொழிப்பயன்பாடு (Language use) ஆகியவற்றைக் கொண்டு பல்வேறு சமுதாயப் பணிகளுக்கு ஏற்றவகையில் கருத்தாக்கங்கள் அமைந்துள்ளது என்பதை மெய்ப்பிப்பதாக இக்கட்டுரை அமையவுள்ளது.

தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையிலும், சமுதாயப் பின்னணிக்கேற்ப எளிமை (Simplification), ஆற்றல், (Energy) பொதுமை (Generalisation) போன்றவற்றோடு அனைவருக்கும் பயன்படும் வகையில் பயனாக்கமுறையில் கருத்தாக்கங்கள் இடம்பெறுகின்றன. ஆய்வு எல்லையாக அறிவுக்கு விருந்து என்னும் அவருடைய நூல் எடுத்தாளப்பெறுகின்றது.

ஒரு மொழியில் காணப்படும் பல்வேறு மொழிக்கூறுகள் மொழியமைப்பில் இடம் பெற்று எவ்வாறெல்லாம் மொழிப்பயன்பாட்டில் அமைந்துள்ளன என்பதும், அத்தகைய நிலைப்பாடானது சமுதாயத்திற்கு எந்த அளவிற்கு உதவும் மொழிப்பயன்பாடாக அமைந்துள்ளது என்பதும் ந.சுப்புரெட்டியாரின் தமிழ் மொழிநடையைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

''**அறிவுக்கு விருந்து**'' என்னும் இந்நூலானது செப்டம்பர் 1962-ல் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட் சென்னை-1 நிறுவனத்தினரால் வெளியிடப்பெற்றுள்ளது. இந்நூல் பக்குவம் மெய்ஞானி, பாரதிக்குத் தாசன், சைவத்தமிழ் சான்றோன், திருவாசகத்தை ஓதி பணிந்திடுவார், எங்கள் ராய சொக்கலிங்கன் என்னும் தமிழ்க் கடலுக்குச் சொல்விருந்தாம் இந்நூலை எழுதிப் படையலாகச் சமர்ப்பித்திருக்கிறார்.

தன் நூல்முகக் கருத்தாக்கத்தில் தனி மனித ஆளுமை மேம்பாடு என்னும் நிலைப்பாட்டை வலியுறுத்திக் கூறியுள்ளார். அதன் விளக்கமாக, ''உளவியலார் மனத்தினைப் பல நிலைகளாகப் பிரித்து ஆய்ந்து பல உண்மைகளை வெளியிட்டுள்ளனர். ஒரு வகையில்

அவர்கள் அறிதல் நிலை, உணர்தல் நிலை, இயற்றிநிலை என்று முந்நிலைகளாகப் பகுத்துப் பேசுவர். தனியொரு மனிதனுடைய ஆளுமை சிறந்த முறையில் வளர்ச்சியும் துலக்கமும் அடைய வேண்டுமாயின் இம்மூன்று நிலைகளிலும் அம்மனிதன் பயிற்சி பெறுதல் வேண்டும்.'' என்று கூறியுள்ளதில் அப்பக்கத்தின் கீழ்ப்பகுதியில், ''அறிதல்நிலை-Cognition, உணர்தல் நிலை-Affection, இயற்றிநிலை-Conation, ஆளுமை-Personality, துலக்கம்-Development என்று சொற்பயன்பாட்டுக்கு நிகரான ஆங்கிலச்சொற்கள் கொடுத்துள்ளமைப் பயில்பவர்களுக்கு எளிதில் புரிந்து, அறிவு வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் வழிகாட்டியுள்ளார். ஒரு நூல் எழுதும்போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய மொழிப்பயன்பாட்டில் ஒரு புதுமையாக்கத்தைப் பின்பற்றியுள்ளமையை நாம் பின்பற்றத்தக்கவாறு வழிகாட்டியுள்ளார்.

## கலிங்கத்துபரணியும், கருத்தமைவும்

இந்நூலில் தெய்வப்பரணி எனப்பெயரிட்டுள்ளதற்கானக் காரணங்கள் ஆராயும்போது, இருண்டகாலத்திற்குப் பின் புத்துணர்ச்சியுடன் பிரபந்தங்கள் படைக்கப்பட்டதைச் சுட்டுகிறார். மேலும், ''பக்தி இயக்கத்தின் விளைவாக எழுந்த பாடல்கள் பொதுமக்கள் மனத்தைக் கௌவும் நிலையில் அமைந்தன. வெற்றித் திறத்தால் நாட்டுப் பரப்பைப் பெருக்கிய அரசர்களையும், கொடையாலும் பிறவற்றாலும் புகழ் எய்திய வள்ளல்கள், வேளிர்கள் போன்றவர்களையும் கவிதையில் அமைத்துப் போற்றினர்'' என்று குறிப்பிட்டுள்ளதில் தலைப்புப் பொருத்தம் நன்கு விளங்கும். இவ்வாக்கியத்தொடரில் ''கௌவும்'' என்னும் சொல் ''கவர்ந்தது'' என்னும் பொருளில் அமைத்துள்ளார். எழுத்து பயன்பாட்டில் இன்று ''கௌ'' என்னும் எழுத்து, ''கவு'' என்னும் புதுமையாக்கம் பெற்றுள்ளதைக் கவனத்திற்கொள்தல் அவசியமாகும்.

அடுத்து, ''பிரபந்தம் தொண்ணூற்றாறு என்று சொல்லுதல் ஒரு வகை மரபே தவிர பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கணவிளக்கப்பாட்டியல் ஆகிய நூல்களில் ஒன்றிலாயினும் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்ற வரையறை காட்டப்பெறவில்லை. அவற்றிற்கு இலக்கணமும் கூறப்பெறவில்லை. மாறுபட்ட கருத்துக்கள் மிளிர்கின்றன. தொண்ணூற்றாறு என்ற வரையறைக்குள் அடங்காத நொண்டிநாடகம், கப்பற்பாட்டு, வில்லுப்பாட்டு, கும்மிப்பாட்டு, கோலாட்டப்பாட்டு, ஆனந்தக்களிப்பு, கிளிக்கண்ணி, விலாசம், புலம்பல், உந்திப்பறத்தல், சாழல், தெள்ளேணம், வள்ளைப்பாட்டு, கவசம், ஓடப்பாட்டு, காதல், ஏற்றப்பாட்டு முதலான பிரபந்தங்களையும் காண்கின்றோம்'' என்னும் கருத்தாக்கத்தில் அனைத்து இலக்கிய வகைமைகளைக் கூறியுள்ளமைச் சிந்தித்தற்பாலது. இக்கட்டுரையில் கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி, இரணியவதைப்பரணி, கஞ்சவதைப்பரணி, அஞ்ஞவதைப்பரணி,

மோகவதைப்பரணி, பாசவதைப்பரணி எனக்கூறியுள்ளமையும், இப்பரணி இலக்கியம் படைப்போர் கொச்சகக்கலி என்னும் பாட்டின் உறுப்பாகிய ஈரடிக் கழித்தாழிசை என்ற உறுப்பை மேற்கொள்வது வழக்கம் எனக்குறிப்பிட்டிருப்பதும், மக்கள் உலகம், பேய்கள் உலகம், என வகைப்படுத்தியமையும், பக்திச்சுவை, உவகை (சிருங்காரச்) சுவை, காதல் சுவை, வியப்புச் சுவை,கற்பனை சுவை, மருட்கைச்சுவை, நகை, அழுகை, இளிவரல், அச்சம், மருட்கை, பெருமிதம், வெகுளி, உவகை என்னும் தொல்காப்பியர் சுட்டியுள்ள மெய்ப்பாடுகளைக் கொண்டு சான்று பகர்ந்துள்ளத் திறம் போற்றுதற்குரியது. சான்றாக, வாயினுள் மாற்றார் விட்டவேல்கள் பாய்ந்த நிலையில் அவற்றினைத் தம் வலக்கையினால் பற்றிக் கொண்டு சில வீரர்கள் போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கின்றனர். இக்காட்சி ஊது கொம்பு ஊதுவோரின் காட்சியைப் போன்றுள்ளது என்பதைக்கூறி,

> “***வாயி னில்புகு வேல்கள் பற்று***
> ***வலக்கை யொடுநி லந்திடைச்***
> ***சாயு மற்றவர் காளம் ஊதிகள்***
> ***தம்மை ஒத்தமை காண்மினோ***”

(வாய்-தம்வாய், காளம்-ஊதுகொம்பு) என்ற தாழிசையினால் இதனை அறியலாகும். மற்றொரு இடத்தில் தம் நெஞ்சில் பாய்ந்துள்ள பகைவர் விட்ட வேல்களைப் பறித்து அவற்றினை நிலத்தில் ஊன்றிக் கம்பு தாண்டுதல் ( Pole vault ) விளையாடுவோர்போலப் பகைவர்களின் தேர்த்தட்டில் பாய்ந்து நிற்கின்றனர் எனக்குறிப்பிட்டுள்ளதில் சுவைத் தன்மையும், விளையாட்டுப் பெயரை ஆங்கிலத்தில் குறிப்பிட்டுள்ளமைச் சிறந்த மொழிப்பயன்பாடாகும். மொழி ஆற்றல் (Language Efficiency) என்ற கொள்கையும், செய்திபரிமாற்றத்தின் ஆற்றல் (Communicative Efficiency) என்ற கொள்கையும், சொற்கள் எளிமையாகவும், பிறமொழிச் சொற்கள், கலைச் சொற்கள் ஆகியவை பயன்படுத்தியுள்ளமைக் காணமுடிகின்றது.

## ஊசல் இலக்கியமும் கருத்துப்புலப்பாடும்

ஊசல் இலக்கியம் தனிப்பிரபந்தம், கலம்பகத்தில் ஒரு செய்யுள் உறுப்பு என்றும், ஆடீரூசல், ஆடாமோ ஊசல், ஆடுக ஊசல் என ஏதாவதொன்றால் முடிவு பெறுமாறு ஆசிரிய விருத்தத்தாலாவது கலித்தாழிசையாலாவது பாடப்படுவதை ஊசல் என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுவர். வச்சணந்திமாலை என்னும் பாட்டியல் நூல் இதனை, “ஆங்கவிருத் தத்தால் அறைந்தகலித் தாழிசையால் ஓங்கியசுற் றத்தளவாய் ஊசலாம்” என்று கூறுகின்றது. இலக்கண விளக்கம் என்னும் நூல், “அகவல் விருத்தம் கலித்தாழிசையால் பொலிதரு கிளையொடும் புகலுவ தூசல்” என்று விளக்கம் தெரிவிக்கின்றது என்று ஊசல் இலக்கியத்திற்கான விளக்கம் தந்துள்ள ஆசிரியர், தமிழர்கள் ஆண்டவனைப் பலவிதமாகத் தொழுதுப் பரவியிருக்கின்றனர். தங்கள் தங்கள் மனோபாவத்திற்குத்

தக்கபடியெல்லாம் கவிதைகளால் பாடிப் போற்றியிருக்கின்றனர். தமிழின்பால் ஏக்கங்கொண்டு சென்ற திருமால் திருவேங்கடத்தில் நின்ற கோலத்தையும், திருவரங்கத்தில் அறிதுயில் கொண்டுள்ள வண்ணத்தையும் பாடிப் பரவிய பக்தர்கள் அவர் ஊஞ்சலில் ஆடியக்கோலத்தையும் பாடியிருக்கின்றனர் என அறிமுக கருத்தாக்கத்தினைக் கொடுத்துள்ளப்பாங்கு செய்திபரிமாற்றத்தின் ஆற்றலாக மிளிர்கின்றது.

ஊஞ்சல் இலக்கியத்தின் சிறப்பை எடுத்துக்கூறி நம்மிடம் அதைப் படிக்கத்தூண்டும் ஆர்வத்தைக் கீழ்க்காணும் விளக்கம் உணர்த்துகின்றது. ‘‘ஆண்டவன் ஊஞ்சல் ஆடுவதைப் பலவிதமாகப் பாராட்டிப் பாடும் பக்தரின் தத்துவம்தான் என்ன என்று தெரிந்தகொள்ள எவரும் விரும்புவர். இதனை விளக்கும் தனிப்பாடல் ஒன்று’’ ‘‘தனியன்’’ - இத்தத்துவத்தை - உட்பொருளை - விளக்கி நிற்கின்றது.

***‘‘அண்டப்பந் தரிற்பற்றுக் கால்க ளாக***
***அறிவுவிட்டங் காணஞ்சங் கிலிக ளாக***
***கொண்டபிறப் பேபலகை வினைய சைப்போர்***
***கொடுநாக சுவர்க்கப்பூ வெளிகள் தம்மில்***
***தண்டலிலேற் றம்மிறக்கந் தங்க லாகத்***
***தடுமாறி யிடருழக்கும் ஊசல் மாற’’***

(அண்டம்-உலகம்,விட்டம்-உத்தரம், கரணம்-இந்திரியங்கள், பிறப்பு-பிறவி, வினை-இருவினைகள், அசைப்போர்-ஆட்டுபவர்,பூ-பூமி, வெளிகள்-வெளியிடங்கள், இறக்கம்-இறங்குதல், தண்டல்இல் ஏற்றம்-தடையின்றி ஏறுதல், தங்கல்-நிலைபெறுதல், தடுமாறி- அலைந்து, இடர் உழக்கும்-துன்பம் அனுபவிக்கும், மாற-நீங்கும்படி)

பொருள் விளக்கத்துடன் தந்துள்ளபாங்கு எளிமையாக அனைவரும் புரிந்து வாழ்க்கையைச் செம்மையாக்கிக் கொள்ளவேண்டும் என்னும் உணர்வை ந.சுப்புரெட்டியாரிடத்தில் காணமுடிகின்றது.

மேலும், ஊசல் இலக்கியத்தை எளிமையாக அறிந்துணர்ந்து இன்பம் அடையும் வகையில், ‘‘ஒரு பெரிய பந்தல் போன்ற இவ்வுலகில் மக்கள் எடுக்கும் பிறவி ஓர் ஊஞ்சல் போன்றது. பிறவி ஊஞ்சற்பலகைக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றது. மக்களுடைய இந்திரியங்கள் ஊஞ்சற் பலகையிலுள்ள சங்கிலிகளைப் போன்றவை. மக்கள் பெற்றுள்ள அறிவு ஊஞ்சற்சங்கிலிகளை மாட்டுவதற்குரிய விட்டம் போன்றது. இந்த விட்டத்தை மக்கள் உலக விவகாரங்களில் கொண்டுள்ள பற்று-பாசம்-தூண்களாக நின்று தாங்குகின்றது. பிறவிதோறும் மக்கள் சம்பாதிக்கும் நல்வினை, தீவினை ஆகிய இரண்டு வினைகளும் ஊஞ்சலை ஆட்டுபவராக இருந்து ஆட்டுவிக்கின்றன. இவ்வினைப் பயன்களுக்குத் தக்கவாறு மக்கள் கொடிய நரகமாகிய வெளியில் இறங்குகின்றனர். சிறிதும் தடையின்றி துறக்கத்திற்கும் ஏறுகின்றனர். இப்பூவுலகில் தங்கவும் செய்கின்றனர். இவ்வாறு ஆன்மாக்கள் பல பிறவிகளால் தடுமாறித் துன்பம்

அனுபவிக்கும் இவ்வூசலாட்டம் நீங்கி சாயுச்சிய பதவியை அடைவதாகப் பக்தர்கள் பகவானை ஊசல்பாடியிருக்கின்றனர் என்பது இத்தத்துவம். இவ்வாறு கொள்வதில் தவறு இல்லையல்லவா? இத்தகைய நம்பிக்கைகைய ஒவ்வொருவரும் ஆன்மவளர்ச்சிக்கு அவசியமாகக் கொள்ளவேண்டும் என்பதற்கு என்ன தடை?'' என்று கூறியுள்ளமைக் கொண்டு ந.சுப்புரெட்டியாரின் கருத்தாக்கம் நம் அறிவுக்கு விருந்தாக அமைந்த மொழியமைப்பாகும்.

உலக இயக்கத்தை எளிமையாகப் புரிந்து கொண்டு வாழ்க்கையை இன்பமாக அனுபவித்து வாழும் வகையில் சிற்றிலக்கியங்கள் வழிகாட்டுகின்றன என்பதை உணரவைக்கின்றார் ந.சுப்புரெட்டியார்.

## தூதும் புகையிலையும்

புகையிலை விடுதூது என்னும் சிற்றிலக்கியத்தைத் தழுவி எழுதியக் கட்டுரையில், நயம்பட புகையிலையின் கதை, வெள்ளைக்காரர்களால் நமக்கு அறிமுகமாகி இன்று வாழ்க்கையைச் சீரழிக்கும் பண்பாய், வழக்கமாய் அமைந்திட்ட நிலையை எளிமையான சொற்றொடர்கள் மூலம் உணரவைத்துள்ளார்.

புகையிலையின் பல்வேறு அவதாரங்களையே கொட்டகைக்குக் கொண்டு வந்து விடுகின்றன. பீடி, சிறுசுருட்டு (சிகரெட்) சுருட்டு வகையறாக்களின் தரிசனம் படக்காட்சிக் கொட்டகையில் நட்சத்திரங்கள் போல் காட்சியளிக்கின்றன. என்றும், நாகரிகம் வாய்ந்த மக்கள் பெரும்பாலும் பாடம் பண்ணின புகையிலை வகையறாக்களை உபயோகித்தாலும், ஏழை மக்கள் வெறும் புகையிலைக் காம்பை மட்டிலும் வாயில் அடக்கிக்கொண்டு காலங்கழிக்கின்றனரல்லவா? ''வகைதொகை இல்லாத கணக்கும் புகையிலை இல்லாத பாக்கும் வழவழ கொழகொழ'' என்ற பழமொழியையும் நாம் கேள்விப்பட்டுத்தானே இருக்கின்றோம்?

திருமூக்கமுது (மூக்குப்பொடி), சுருட்டு, சிறுசுருட்டு, பீடி முதலிய அவதாரங்களாகப் புகையிலை எடுக்கும்போதுதான் அதன் மகத்துவம் மிகுகின்றது. வெள்ளைக்கார நாகரிகத்தை அப்படியே நகல் எடுக்கும் நபர்கள் தாம் இந்த அவதாரங்களின் பக்தகோடி சிகாமணிகள். வெள்ளைக்காரர்களிடம் கற்றுக்கொள்ளவேண்டிய நல்ல பண்புகளையெல்லாம் விட்டு விட்டு, அவர்களைப்போல் உண்ணுதல், உடுத்தல், குடித்தல், புகைபிடித்தல் போன்ற வேண்டாத - நம் நாட்டின் தட்பவெப்ப நிலைகளுக்குச் சிறிதும் பொருந்தாத - பழக்கங்களை மக்கள் கைக்கொண்டிருக்கின்றனர். முதலாவது நமக்குப் புகைபிடித்தல் அவசியமா? காலை காபி அருந்தாமலோ புகைசுருட்டுப் பிடிக்காமலோ மலங்கழிக்க முடியாத நிலையிலும் மக்கள் துன்பப்படுகின்ற அளவுக்குப் பழக்கம் அவர்களை அடிமைப்படுத்தியிருக்கின்றது'' என்று சமுதாயத்தின் சீரழிவைத் தன் எளிமையான சொற்றொடர்கள் மூலம் உணரவைத்துள்ளார்.

## மொழியமைப்பும் பயன்பாடும்

தொடர்களில் காணப்படும் சொற்களின் வரிசைநிலை, சொற்களின் இலக்கண இணக்கநிலை, சொற்றொடர்களின் இலக்கணக் கிளை அமைப்பு வடிவம், சொற்றொடர்களில் பங்கு பெறுகின்ற பெரிய மற்றும் சிறிய இலக்கணக்கூறுகள் ந.சுப்புரெட்டியாரின் நடையியலில் அமைந்திருக்கக் காணலாம். எளிய வழக்குச் சொற்களே அதிகம் பயன்படுத்தியுள்ளார். ஒரு சில வேற்றுமொழிச் சொற்களே சொற்றொடர்களில் அமைந்துள்ளன. சான்று - சாயுச்சியம். குணத்தைக் குறிக்கும் அடைச்சொற்கள், எண்ணிக்கையினைக் குறிக்கும் அடைச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ் சொற்களுக்கு நிகரான ஆங்கிலச் சொற்கள், ஒவ்வொரு பாடலை மேற்கொள் காட்டி அப்பாடலின் கீழ் சொற்பொருள் விளக்கம் தந்துள்ளமை படிப்போருக்கு எளிமையாகப் புரிந்து அதை நடைமுறைபடுத்தும் வகையில் அமைத்துள்ளமைப் போற்றுதற்குரியது. மாணவர்கள், ஓரளவு படிக்கக்கற்றவர்கள், கல்வியில் வல்லவர்கள் என எத்தரப்பினரும் படித்துப் புரிந்துகொண்டு ஆளுமையை மேம்படுத்திக்கொள்ளும் மொழியமைப்பையும், மொழிப்பயன்பாட்டையும் அறிவுக்கு விருந்து என்னும் நூல் வழி ந.சுப்புரெட்டியார் வெளிப்படுத்தியுள்ளார்.

## நிறைவுரை

அறிவுக்கு விருந்து என்னும் நூலில் ந.சுப்புரெட்டியார் பயன்படுத்தியுள்ள தமிழ்மொழியமைப்பு (Language structure) மற்றும் மொழிப்பயன்பாடு (Language use) ஆகியவற்றைக் கொண்டு பல்வேறு சமுதாயப் பணிகளுக்கு ஏற்றவகையில் கருத்தாக்கங்களாக அமைந்துள்ளது என்பதை மெய்ப்பிக்கின்றது. சமுதாயம் அறிதல் நிலையிலும், உணர்தல் நிலையிலும், செயல்படுதல் நிலையிலும் எண்ணங்களை வளமாக்குகின்ற கருத்தாக்கங்களை இந்நூலின் வழியாக உணர்த்தியுள்ளார். ந.சுப்புரெட்டியாரின் நூல்களின் வழி வெளிப் படுத்தியுள்ள கருத்துப்புலப்பாடு சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும், ஏற்படுத்தியுள்ளன என்றால் மிகையாகாது. அதற்கு மொழியாளுமையே துணைநிற்கும். அதனை ந.சுப்புரெட்டியார் செவ்வனே தமிழ்மொழியை ஆளுமையுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

# 44. கலியன் குரல் காட்டும் வைணவ முப்பொருள்களுள் ஒன்றான இதம்



**முனைவர் மு. பழனியப்பன்**
*தமிழ்த்துறைத் தலைவர்,*
*அரசு கலை அறிவியல் கல்லூரி,*
*திருவாடானை.*

வைணவத் தத்துவங்களில் ஆழங்கால்பட்டு, அதனில் கரைந்து, அதனில் தோய்ந்து அத்தத்துவங்களை எளிமையான முறையில் எடுத்துரைத்த தமிழறிஞர்களுள் குறிக்கத்தக்கவர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் ஆவார். காரைக்குடிக்குக் கம்பன் அடிப்பொடி ச. கணேசன் அவர்களால் வரவழைக்கப் பெற்றவர். காரைக்குடி கல்வியியல் கல்லூரியில் ஏற்பட்ட தமிழ்ப்பேராசிரியர் பணியிடத்திற்கு உரியவராக பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அமைந்தார். சிலகாலம் இங்குப் பணிபுரிந்த பேராசிரியர் இதன்பின்னர் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்திற்குத் தமிழ்த்துறைத்தலைவராகப் பொறுப்பேற்றார். இதுமுதல் வைணவ இலக்கியத்தின்பால் பேராசிரியரின் நோக்கு ஆழம் பெற்றது. இவர் வைணவம் தவிர பல்வேறு துறை சார்ந்த நூல்களைப் படைத்தளித்தவர். அடிப்படையில் அறிவியல் மாணாக்கர் என்ற போதும் தமிழின்மீது விருப்பம் ஏற்பட்டுக் கற்றவர். இவர் அறிவியல் தமிழின் முன்னோடியாகக் கருதப்பெறுகிறார். இவரின் நூல்களில் காணப்படும் எளிமையான தமிழ் நடை கற்போரைத் தெளிவடையச் செய்கிறது. மேலும் கற்கத் தூண்டுகிறது. இவரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இப்பொழுதில் இவரின் ‘கலியன் குரல்’ என்ற நூலில் அடங்கியுள்ள வைணவ முப்பொருளில் ஒன்றான இதம் பற்றிய கருத்துகளைத் தொகுத்தும் பகுத்தும் உரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## கலியன் குரல்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வைணவ இலக்கியம் தத்துவம் பற்றிப் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் நிகழ்த்திய அறக்கட்டளைப் பொழிவு ‘கலியன் குரல்’’ என்னும் தலைப்பில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு நூல்வடிவம் பெற்றது. திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்களில் காணப்படும் இலக்கிய இன்பம், தத்துவ ஆழம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் அமைப்பில் இந்தப் பொழிவுகள் அமைந்தன. திருமங்கை ஆழ்வாரை மையப்படுத்தி இப்பொழிவை அமைத்ததற்குப் பல காரணங்களை மொழிகிறார் பேராசிரியர். குறிப்பாக சிதம்பரம் அண்ணாமலைப் பலைக்கலைக்கழகம்

திருமங்கை ஆழ்வார் ஆண்ட. பிறந்த பகுதிகளுக்கு அருகில் இருப்பது முக்கிய காரணம் என்பது அவர் தரும் முதற்காரணம் ஆகும். தேர்ந்து ஒரு செயலைச் செய்யும் வல்லமையைத் தனக்குள் கொண்டவர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் என்பதற்கு இச்சொற்பொழிவு சான்றாகிறது.

## வைணவ முப்பொருள்

திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்களுள் காணலாகும் வைணவ தத்துவக் கருத்துகளை எளிமைபட தம் பொழிவில் எடுத்துரைத்துள்ளார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். வைணவ தத்துவங்களில் மூன்று அடிப்படைக் கருத்துகள் அமைந்துள்ளன. அவை தத்துவம், இதம், புருஷார்த்தம் என்பனவாகும். இவை துவைதம், அத்துவைதம், விசிஷ்டாத்வைதம் என்ற தத்துவங்களுக்கு முற்பட்ட பழமை உடையவை.

இவற்றுள் தத்துவம் என்பது மூன்றாக அமைவது. சித்து. அசித்து, ஈசுவரன் ஆகியன கொண்டது. இதனை தத்துவத்திரயம் என்பர். இதம் என்பது வீடுபேற்றிற்காக கடைபிடிக்கப்படும் வழியாகும். இது இருவகைப்படும். பக்தி, பிரபக்தி என்பன அவையிரண்டும் ஆகும். புருஷார்த்தம் என்பது பரமபதநாதனுக்கு அடிமைத் தொழில் புரிவது, அதன் காரணமாக எம்பெருமான் மகிழ்தல் ஆகியன கொண்டதாகும்.

வைணவ தத்துவங்களில் மூன்றில் நடுநாயகமாக விளங்குவது 'இதம்' என்பதாகும். "இதம்" என்பது உயிர்கள் கடைத்தேற வழிகாட்டுவது. இறைவனைப் பக்தி வழியில் அணுகுவது, அல்லது சரணாகதி அடைந்து பெறுவது என்பதாகும். இப்பொருள் பற்றி கலியன் குரலில் காட்டப்பெற்றுள்ள செய்திகளை வகுத்துரைப்பது என்பது இக்கட்டுரையின் அமைப்பாகும்.

## பக்தி நெறி

'இதம்' என்பதின் இருநிலைகளில் ஒன்றாக அமைவது பக்தி நெறியாகும். இப்பக்தி நெறியின் இயல்பினைப் பின்வருமாறு பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் காட்டுகிறார். 'பக்தி நெறி- இதில் பல படிகள் உண்டு. இதனை வீடுபேறு அடையும் வரையில் அநுட்டித்துக்கொண்டே இருத்தல் வேண்டும். பலன்பெற நெடுங்காலம் கழிய வேண்டும். இதனை அங்கங்களுடன் அநுட்டிக்கும் முறை மிகக் கடினமானது. இக்கால்தில் பக்தி நெறியை அநுட்டிப்பதற்கு அதிகாரிகள் இலர் என்று கூடக் கூறலாம். நாதமுனிகள் போன்ற யோகமுறை தெரிந்தவர்கள் தாம் இதற்கு அதிகாரிகளாவர்' (கலியன் குரல், ப.174) என்று குறிப்பிடுகிறார் பேராசிரியர். இக்கருத்தின் வாயிலாக பக்திநெறி வழி எம்பெருமானை அணுகுவது என்பது காலஅளவில் நீண்டது என்பதை உணரமுடிகின்றது.

## பிரபக்தி நெறி

பிரபக்தி நெறி என்பது உயிர்கள் தாமாக முன்வந்து தம்மைப் பரம்பொருளிடம் அடைக்கலப்படுத்திக்கொள்ளும் நிலை ஆகும்.

பிரபக்திநெறி பற்றி பின்வருமாறு குறிக்கிறார் பேராசிரியர். ‘பிரபக்தி நெறி- இதுவே சரணாகதி நெறியாகும். எல்லோரும் எளிதாக அநுட்டிக்கக் கூடியது. சுக்கிரீவன், வீடணன், காகம் (காகாசுரன்) போன்றோர் இந்நெறியைக் கடைபிடித்தே உயந்தவர்கள். இந்த பிரபக்தி நெறியை உபதேசித்தவர் நம்மாழ்வார். இவரைப் ‘பிரபந்த ஜன கூடஸ்தர்’ என்று வழங்குவதும் உண்டு. பிரபக்தி நெறியைக் கடைபிடிக்கும் வைணவர்கள் யாவர்க்கும் தலைவர் என்பது இதன் பொருள். திருமங்கை ஆழ்வார் கடைப்பிடித்த நெறியும் இதுவே” (கலியன் குரல், ப. 114) என்பது பிரபக்தி நெறி பற்றிப் பேராசிரியர் தரும் விளக்கம் ஆகும்.

இக்கருத்தின்வழி வைணவ சம்பிரதாயங்களில் சரணாகதி என்பது முக்கியமானது. அனைவராலும் எளிமைபடக் கைக்கொள்ளத்தக்கது என்பது தெரியவருகிறது. எனவே உயிர்கள் அனைத்தும் சரணாகதியாக ஆண்டவனைப் பெற்றால் கடைத்தேறுவது எளிது என்பது உறுதியாகின்றது.

திருமங்கை ஆழ்வார் பிரபக்தி நெறியில் நின்றமைக்கு பெரிய திருமொழியில் உள்ள ஒன்பதாம் திருமொழியைப் பேராசிரியர் எடுத்துக்காட்டுகிறார். திருமங்கை ஆழ்வார் ஒன்பது முறை தன்னை இத்திருமொழியில் அடைக்கலப்படுத்திக்கொண்டுள்ளார்.

***“தாயேதந்தை என்றும் தாரமே கிளை மக்கள் என்றும்***
***நோயே பட்டொழிந்தேன் உன்னைக் காண்பது ஓர் ஆசையினால்***
***வேயேய் பூம்பொழில்சூழ் விரையார் திருவேங்கடவா***
***நாயேன் வந்தடைந்தேன் நல்கியாள் என்னைக் கொண்டருளே”***
***(பெரியதிருமொழி-1028)***

என்ற பாடலின் ஒருபகுதியை எடுத்துரைத்துப் பேராசிரியர் திருமங்கையாழ்வார் அடைக்கலப்படுத்திக்கொண்டமையை அடையாளப்படுத்தியுள்ளார். ‘ஆனாய் வந்தமைடந்தேன், அன்றே வந்தடைந்தேன், அலந்தேன் வந்தடைந்தேன், அப்பா, வந்தடைந்தேன், அண்ணா, வந்தடைந்தேன், அரிய வந்தடைந்தேன், ஆற்றேன் வந்தடைந்தேன், அற்றேன் வந்தடைந்தான் என்று ஒன்பது பாடல்களில் தன்னை அடைக்கலப்படுத்திக்கொண்டுள்ளார் திருமங்கை ஆழ்வார். மேற்பாடலில் தாய், தந்தை, தாரம், கிளை, மக்கள் ஆகியோரின் தொடர்பினைக் கொண்டதால் நோயே பற்றியது. அவற்றை விடுத்து, எம்பெருமானே உன்னை அடைந்தேன் என்று ஆழ்வார் குறிப்பிடுகிறார். இது அடைக்கலப்படுத்துவதில் முதல்நிலையாகும். மேலும் இவரின் அடைக்கலப்படுத்தியத்தன்மைக்கு

***“துறந்தேன் ஆர்வச் செற்றச் சுற்றம், துறந்தமையால்***
***சிறந்தேன் நின் அடிக்கே அடிமை திருமாலே***
***அறம்தான் ஆய்த்திரிவாய் உன்னைஎன மனத்தகத்தே***
***திறம்பாமல் கொண்டேன் திரு விண்ணகரானே”***
***(பெரிய திருமொழி. 1469)***

என்ற மூன்றாம் பெரிய திருமொழிப்பாடலையும் காட்டுகிறார் பேராசிரியர். இதற்கு காஞ்சி பிரதிவாதி அண்ணங்கராசாரியார் எழுதிய உரை பின்வருமாறு. ''ப்ராக்கருதர்களான அநுகூலரிடத்தில் அநுராகமும், ப்ரதிகூலரிடத்தில் பகையும் ஆபாஸபந்துக்களிடத்தில் உறவும் உள்ளவரையில் எம்பெருமாள் திருவடிகளில் அன்பு நிலை நிற்கமாட்டாதாதலால் அம்மூன்றும் தமக்கு ஒழிந்தமையை அருளிச் செய்து தேவரீர் திருவடிகட்கே அடியேன் தகுந்தவனாயினேன் என்கிறார். ''ப்ரித்யக்தா மாய லங்கா'' (விட்டொழித்தேன் இலங்கையை) என்ற விபீஷணாழ்வானைப்போல் அருளிச்செய்கிறார் காண்மின்'' என்ற கருத்தும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

அடைக்கலமாகின்றபோது, நண்பர்கள், பகைவர்கள், உறவுகள் ஆகியோர்களின் உறவுகளை விட்டொழித்துக் கடவுளைச் சரணடையவேண்டும் என்பது இத்திருமொழி வாயிலாகப் பெறப்படும் கருத்தாகும். அடைக்கலப்படுத்திக்கொள்வதில் இது இரண்டாம் படிநிலையாகும். அடுத்து,

***''வேறாய் யான் இரந்தேன் வெகுளாது***
***மனக்கொள்எந்தாய்***
***ஆறா வெந்நகரத்து அடியேனை இடக்கருதி***
***கூறா ஐவர்வந்து குமைக்க குடிவிட்டவரைத்***
***தேறா துன் அடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே''***
***(1464)***

என்ற பாடலில் ஐம்புலன் ஆசைகள் விடுத்து வந்த உன்னை அடைந்தேன் என்று பாடுகிறார் திருமங்கை ஆழ்வார். இதன்வழியாக அடைக்கலம் புகுமுன் ஐம்புல வேட்கையினை விட்டொழிக்கவேண்டும் என்று தெரிகிறது. ''படைப்புக்காலத்தில் என் நன்மைக்காக என்னிடத்தில் குடியேறியுள்ள ஐம்புலன்களும் என்னை மிகவும் துன்புறுத்துகின்றன. அவற்றை நம்பாமல் உன்னிடம் சரண் புகுகின்றேன் காத்தருள்க'' என்று இப்பாசுரத்திற்கு விளக்கம் தருகிறார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். இது மூன்றாம் படிநிலையாகும்.

நைமிசாரண்யத்து எம்பெருமானைப் பாடும்போதும் 'திருவடி அடைந்தேன்' என்று குறிப்பிட்டுப் பாடுகிறார் திருமங்கை ஆழ்வார்.

***''வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து***
***பிறர்ப்பொருள்தாரம் என்றிவற்றை***
***நம்பினார் இறந்தால் நமன் தமர்ப்பற்ற எற்றி வைத்து***
***எரியெழுகின்ற***
***செம்பினாலியன்ற பாவையைப் பாவீ தழுவென***
***மொழிவதர்க்கஞ்சி***
***நம்பனே வந்துத் திருவடியடைந்தேன்***
***நைமிசாரணியத்துள் எந்தாய்''***

என்ற பாடலில் இழிவான செயல்களில் இருந்து மீண்டு பரம்பொருளை

வந்தடைந்தேன் என்று ஆழ்வார் குறிப்பிடுகிறார். தம் மனைவியைத் துறந்து, பிறன் மனைவி, பொருள் இவற்றை விரும்பும் ஒருவன் இறந்தால் அவனை எமதூதர்கள் வந்து இழுத்துச்சென்று, செம்பின் குழம்பினால் செய்யப்பெற்ற தீப்பற்றி எரிகின்ற பொம்மையைக் கொடுத்துத் தழுவச் சொல்வார்கள் என்று தண்டனை அளிக்கப்பெறும் என்று ஆழ்வார் குறிக்கிறார். அதற்கு அஞ்சி நம்பன் திருவடி அடைந்தேன் என்று குறிக்கிறார் ஆழ்வார். இது நான்காம் படிநிலையாகும். பாவச்செயல்களைச் செய்பவன் பாவி. அவனை அழுத்திக் குறிக்க இப்பாசுரத்தில் பாவீ என்று நீட்டல் விகாரம் அளிக்கப்பெற்றுள்ளது. பாவங்களில் இருந்து நீங்கி நிற்பது என்பது அடைக்கலப்படுத்துவதில் நான்காம் நிலையாகும்.

ஆழ்வாரின் பாடல்களை, தாய், தந்தை, மக்கள், நண்பர், எதிரிகள், சுற்றம், ஐம்புலன்கள் ஆகிய தொடர்பினை அறுத்துக் கொண்டால் அடைக்கலம் பற்றுவது எளிது என்ற நிலையில் பேராசிரியர் வரிசைப் படுத்தித் தந்துள்ளார். மேலும் பாவச் செயல்களைப் புரியாது அதிலிருந்து மீண்டு ஆண்டவனை அடைக்கலமாக வேண்டும் என்ற நிலையையும் ஆழ்வார் காட்டுவதை வெளிப்படுத்தியுள்ளார் பேராசிரியர். மேற்சுட்டப்பெற்ற நான்கு படிநிலைகளைக் கடந்தால் பரம்பொருளை அடைக்கலமாகலாம்.

## நம்மாழ்வாரின் அடைக்கலநிலை

திருமங்கை ஆழ்வாரின் அடைக்கல நிலையை எடுத்துரைக்க வந்த பேராசிரியர், அதனுடன் நம்மாழ்வார் தம்மை அடைக்கலப்படுத்திக் கொண்ட நிலையையும் எடுத்துரைக்கிறார். பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் உள்ளம் நம்மாழ்வார் பாடல்களில் தோய்ந்தது என்பதற்கு இப்பகுதி சான்றாகிறது. “சரணாகதித் தத்துவத்தின் தந்தை போன்றவர் பிரபந்தர்களின் தலைவராக விளங்கும் நம்மாழ்வார். அவர் தம்முடைய திருவாய்மொழியில் ‘நம்பெருமான் அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச்சடகோபன்’, (5.9.11) என்றும், கழல்கள் அவையே சரணாகக் கொண்ட குருகூர்ச்சடகோபன் (5.8.11) என்றும், தம்மை அறிமுகப்படுத்திக்கொள்கிறார். ‘எனக்கு நின் பாதமே சரணாகத் தெந்தொழித்தேன்” (5.8.11) என்று எம்பெருமான் தமக்குச் சரணாக அமைந்தமையையும் ‘உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே’ (6.10.10) என்று தாம் எம்பெருமானின் கழலிணைகளில் சரணாகப் புகுந்தமையையும் புலப்படுத்துகின்றார்” (கலியன் குரல், ப. 177) என்ற குறிப்பு நம்மாழ்வாரின் சரணாகதி நிலையை எடுத்துரைப்பதாக உள்ளது. வைணவத்தில் மிக முக்கியமான பக்தி நிலை பிரபக்தி நிலை என்பதை இக்கருத்துகள் உணர்த்துகின்றன. இவ்வாறு சரணாகதி நிலையின் பெருமை பற்றியும் அதனை அடைய உயிர்கள் தொடர்பற்று இருக்கவேண்டிய நிலையையும் திருமங்கை ஆழ்வாரின் வாக்கின் வழியாக எடுத்துரைக்கிறார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்.

## பிரபத்தி செய்வோருக்கு வேண்டப்பெறுவன

பிரபத்தி செய்வோருக்கு இரு நிலைகள் வேண்டப் பெறுகின்றன. அவை. 1. ஆகிஞ்சந்யம், 2. அநன்னியகதித்துவம் என்பனவாகும்.

## ஆகிஞ்சநயம்

ஆகிஞ்சநயம் என்பது, கன்ம ஞான பக்திகளாகின்ற மற்ற உபாயங்களின் தொடர்பற்று இருக்கை. அதாவது முன்னர் சொன்ன தாய், தந்தை, பிள்ளைகள், உறவுகள். ஐம்புலன்கள் தொடர்பற்று இருத்தல். இவை திருமங்கை ஆழ்வார் வாக்கின் வழியாகவே இக்கட்டுரையில் விவரிக்கப் பெற்றுள்ளன.

## அநன்னியகதித்துவம்

அநன்னியகதித்துவம் என்பது ஆன்மா பதிகாப்பிற்கு எம்பெருமாளைத் தவிர வேறொரு காக்கும் பொருள் அற்றிருக்கை. இதற்கு திருமங்கை ஆழ்வாரின் ஒரு பாடலைச் சான்றாக்குகிறார் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார்.

***குலந்தானெத்தனையும் பிறந்தே இறந்து***
***எய்த்தொழிந்தேன்***
***நலந்தானொன்றுமிலேன் நல்லதோர் அறம்***
***செய்துமிலேன்***
***நிலம்தோய் நீள முகில்சேர் நெறியார் திருவேங்கடவா***
***அலந்தேன் வந்தடைந்தேன் அடியேனை***
***ஆட்கொண்டருளே (1031)***

என்ற பாடலில் எம்பெருமானைத் தவிர வேறுயாரும் என்னை ஆட்கொண்டருள இயலாது என்று தெளிந்து உரைக்கிறார் திருமங்கையாழ்வார்.

இவ்வகையில் கலிகாலத்தில் கலியன் குரல் கொண்டு எம்பெருமானை அடைய சரணாகதியே சிறந்தவழி என்று காட்டுகிறார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்.

# 45. இலக்கண இலக்கிய நெறிகளில் ந. சுப்புரெட்டியாரின் குயில்பாட்டு

**வா. காருண்யா**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர்.*

காலம் காலமாக வளர்ந்து வரும் தமிழ்த் தொல்லுலகில் காதலும், வீரமும் சமபங்கு வகிக்கின்றன. இக்காதலுணர்வு பண்டைய தமிழ் இலக்கியங்களில் மானிடப்பிறவிக்கு மட்டுமின்றி, அ∴றிணை உயிர்களுக்கும் பொருந்தும் வகையில் அமைகின்றது. ஆசிரியர் கவிஞரின் குயில்பாட்டின் காதல் நிலையை இலக்கண இலக்கிய நெறிகளோடு பொருத்தியமையை இக்கட்டுரையின் வழியாக அறியலாம்.

## காதல்

குயில்பாட்டு ஓர் அருமையான காதல் காவியம் என்பதை யாராலும் மறுக்க இயலாது. 'இக்காலத்தில் எழுதப்பெறும் காதல் பாட்டுகள், அகத்துறை மரபுகளைப் பின்பற்றாது தற்காலப் பண்களுடன் இருக்க வேண்டியது அவசியம்' என்று கூறிய சுப்பிரமணிய அய்யரின் கருத்தும், குயில்பாட்டு இவ்வகையில் அமைந்த ஒரு காதல் பாட்டு என்ற ந.சுப்புரெட்டியாரின் கருத்தும் ஒப்புநோக்கத்தக்கது.

***"காதலைவேண்டிக் கரைகின்றேன் இல்லையெனில்***
***சாதலைவேண்டித் தவிக்கின்றேன்"***

என்று காதலுக்காக ஏங்கி குயில் தவிக்கிறது.

***"காதல் போயிற்காதல் போயிற்***
***சாதல் சாதல் சாதல்"***

என்ற பாரதியின் காதல் தத்துவம் எக்காலத்துக்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது. காதல் என்பது அன்பின் மறுஉருவம். 'அன்பு' அருள் - இரக்கம் - கருணை - பாசம் - நேசம் - காதல் - பக்தி இவை அனைத்தும் உணர்த்துவது அன்பின் வெளிப்பாடாகும். பாரதி தம் காதல் காவியத்தில் காதல் என்னும் இன்பத்தில் திளைத்து, அக்காதல் தோல்வியுறும் நிலையில் அதை ஏற்க இயலாத போது இறப்பு என்ற வாழ்வின் இறுதி நிலையினை அடைவதே இன்றைய இளையோர்களின் முடிவாக அமைவது போல் நேரடிப் பொருளில் பாடினாலும், உண்மையில் உலகம் அன்புவட்டம் இல்லாமல் போகும் போது இங்குள்ள உயிர்கள் யாவும் இறந்து இறுதியில் உலகமே அழிந்து போகும் என்பதன் வெளிப்பாடாகவே உள்ளது.

குலசேகராழ்வார் பெருமாள் மீதுகொண்டுள்ள காதலையும் விளக்கியுள்ளார். திருமலையில் உள்ள மீன், குருகு, பொன்வட்டில், செண்பகம், கானாறு, மலை மேலுள்ள வழி, கருவறையிலுள்ள படி இவற்றுள் ஏதேனும் ஒருபொருளாக இருக்கும் நிலை தனக்கு கிடைத்தால் போதும் என்று சிந்திக்கும் ஆழ்வாரின் ஆழமான காதலை - பக்தியைப் புலப்படுத்துகிறது.

பாரதி கண்ணன் - என் காதலன், கண்ணம்மா என் காதலி என்ற நூல்களிலும் காதல் பற்றிய கருத்துக்களை உள்ளடக்கியுள்ளார். காதலை தவறாகக் கருதும் சில மூடர்களையும் ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். நாடகத்திலும், காவியத்திலும் இடம்பெறும் காதல் நிகழ்வு என்ற நிலையில் நல்ல செய்தி என்றும், அதே காதல் ஊரிலோ, வீட்டிலோ வாழும் சக மனிதர்களிடையே இருந்தால் அதற்குப் பாடைகட்டிக் கொல்ல வழி செய்கின்றனர். இவ்வுலகத்தில் 'காதல்' என்னும் பயிரை அழிக்க மூடர்கள் எல்லோரும் பொறாமையினால் முறைதவறி துன்பம் இழைக்கின்றனர். இந்நிலை இருப்பின் பாரதியின் காதல் தத்துவம் நிலைக்குமா? தழைக்குமா? என்ற சிந்தனையைத் தூண்டுகிறார்.

பண்டையோர் பருவம் வந்த இளையோர்களுக்குள் எழும் இன்ப உணர்ச்சியை காதல் என்றும் காமம் என்றும் இரண்டு பெயர்களில் குறிப்பிடுகின்றனர். சங்க இலக்கியத்திலும், திருக்குறளிலும் (இன்பத்துப்பால்) காதலைக் காமக்கூட்டம், காமநோய் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. நாளடைவில் 'காமம்' என்றசொல் தாழ்ந்த பொருளையே குறிப்பதாக உள்ளது. தற்காலத்தில் இச்சொல் உடலுறவை மட்டிலும் சுட்டுகின்றது என்று ஆசிரியர் கூறும் கருத்து காலத்தால் மருவி வழங்கப்படும் பொருண்மையாக அமைகிறது.

## களவு

களவு என்பது ஓர் இளைஞனுக்கும் ஒருபெண்ணுக்கும் ஏற்படக்கூடிய அடிப்படை ஒன்றான காதல் என்பதாகும். அனைத்து குமரப் பருவத்தினருக்கும் காதல் ஏற்படும். பலர் அதை வெளிப்படுத்துவர். சிலர் வெளிப்படுத்தாமல் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்வர். சங்ககாலத்திலும் அதைப்போலவே தலைவனும் தலைவியும் முன்பின் அறியாதவர்களாக இருப்பினும் தொல்காப்பியம் கூறும் 'பாலதாணையால்' (தொல் - களவு - 2) ஓரிடத்தில் காதல் கொள்கின்றனர். காதல் இன்பம் கொண்டு காதலை வெளிப்படுத்துவர். தலைவன் தலைவி சிலர் வெளிப்படுத்தாமல் பெற்றோர் பார்த்தவர்களை மணந்து கொள்வர். ஆகவே தலைவன் தலைவி தாமே உள்ளத்து உணர்வால் இணைவது களவு என்பது தெளிவாகிறது. கவிஞர் குயில் இருவரின் காதல் வாழ்வும் களவு வாழ்க்கையாக அமைகின்றது என்பதை ஆசிரியரின் காதலோ காதல் என்ற தலைப்பின் வழி அறியலாம்.

## கண்டதும் காதல்

இளமைப் பருவத்தில் ஓர் ஆடவன் தன் வாழ்க்கையில் எத்தனையோ பெண்களைப் பார்க்கின்றான். ஒருபெண்ணும் தன் வாழ்க்கையில் எத்தனையோ ஆண்களைப் பார்க்கின்றாள். எல்லோரிடமும் காதல் ஏற்படுவதில்லை. ஆனால் ஊழ்வினையே இவர்களுள் காதலுணர்வை ஏற்படுத்துகிறது என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

***"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்***
***ஒன்றி உயர்ந்த பால தாணையின்***
***ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப***
***மிக்கோ னாயினும் கடிவரை இன்றே"***

என்று தொல்காப்பியம் கூறுகிறது. இதனையே,

***"அதுவே,***
***தானே அவளே தமியர் காணக்***
***காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்"***

என்று இறையனார் களவியல் உரையும் விளக்குகிறது. இதனை ஆசிரியர் இலக்கண விதியாக மட்டுமன்று. தலைவிதி (ஊழ்வினை) என்று கூறியுள்ளார். இக்கருத்தையொட்டியே குயில்பாட்டில் "கண்டதும் காதல்" என்ற முறை கையாளப் பெற்றுள்ளது. குயிலின் முற்பிறப்பு வரலாறு இதனைச் சுட்டுகிறது. "குயிலி" என்ற பெயர் கொண்டகுயில், ஒருநாள் மாலைப் பொழுதில் தோழியர்களுடன் சோலையில் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, சேர இளவரசன் அதே சோலையில் குயிலியைக் காண நேரிடுகிறது. அச்சமயத்தில் இருவரும் காதல் கொண்டனர். மேலும், முற்பிறப்பில் 'குயிலி' என்ற பெண் குயிலாகவும், 'மாடன்' மாடாகவும், 'குரங்கன்' குரங்கனாகவும், 'காதல் இளவரசன்' கவிஞனாகவும் அடுத்த பிறவியில் உள்ளனர் என்பதை தெளிந்த ஞானமுடைய முனிவரின் மூலமாகக் குயில் கேட்டறிந்து கொண்டது. ஊழ்வினையின் தொடர்ச்சியே 'குயில்பாட்டு' என்ற காதல் காவியமாகும். சங்க இலக்கிய மரபினைக் கவிஞர் குயில்பாட்டில் கையண்டுள்ளார்.

***"யாயும் ஞாயும் யாரா கியரோ***
***எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்***
***யானும் நீயும் எவ்வழி அறிதும்***
***செம்புலப் பெயனீர் போல***
***அன்புடைநெஞ்சம் தாங்கலந் தனவே"(குறுந்தொகை-40)***

எவ்வித உறவும், நட்பும் இல்லாது இரண்டு உள்ளங்களும் இயல்பாகவே அன்பு நிரம்பியிருத்தல் என்பது பலப் பிறவிகளிலும் இவ்வன்பு தொடர்ந்து வருகின்றது என்பதனை உணர்த்துகின்றது. சிலப்பதிகார கதா நாயகர்களான கோவலனும் கண்ணகியும் முற்பிறப்பில் பரதன் நீலி என்ற பெயரில் வாழ்ந்ததாக காப்பியம்

எடுத்துரைக்கின்றது. ஆனால் இவ்விலக்கியமரபு எடுத்துரைக்கும் ஊழ்வினைப் பற்றிய (கண்டதும் காதல்) கருத்தானது சமகாலப் போக்கில் சிந்திக்கத்தக்க ஒன்றாக அமைகிறது.

## குறியிடம்

குயில்பாட்டு வெளிப்படையாக ஒரு காதல் காவியமாகவே அமைந்துள்ளதனால் அதில் அகத்துறைக்கென்று இலக்கணம் பேசும் கூறுகளையும் ந.சுப்புரெட்டியார் சுட்டிக்காட்டுகிறார். குயிலின் கதையைக் கேட்ட கவிஞருக்கு, குயில் மீது காதல் ஏற்படுகிறது. குயிலும் நான்காம் நாள் கவிஞரைச் சந்திக்க மாஞ்சோலைக்கு வரச்சொல்கிறது. நான்காம் நாள் மீண்டும் சந்தித்தல் என்பது 'குறியிடம்' என்ற இலக்கணம் பொருந்தி நிற்கிறது. காதல் வாழ்க்கையில் காதலர்கள் சந்திக்கும் இடம் 'குறியிடம்' என்று வழங்கப்பெறும். இது 'பகற்குறி' இரவுக்குறி என இருவகைப்படும்.

***"குறியெனப் படுவது இரவினும் பகலினும்***
***அறியக் கிளந்த ஆற்ற தென்ப"(தொல். களவு - 40)***

என்ற நூற்பாவிற்கிணங்க, கவிஞரும் மீண்டும் மீண்டும் அதே இடத்தில் குயிலைக் காணமுயன்று தேடுதல் அகத்துறையின் பார்ப்பட்டதாகும். களவுப் புணர்ச்சிக்குப் பிறகுமீண்டும் சந்திக்குமிடத்தைத் தலைவிசுட்டிக் கூறுதலே மரபாக உள்ளதை,

***"அவன் வரம் பிறத்தல் அறந்தனக் கின்மையின்***
***களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்***
***தான்செலற் குரியவழி யாக லான"(தொல். களவு - 29)***

என்ற நூற்பாவால் காமக்கூட்டம் தனிமையில் நிகழும் போது தலைவியே இடம் சுட்டி உணாத்துவதை அறியமுடிகிறது.

தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் சந்திக்கும் போது அவரவர்களுடன் வந்தவர்கள் தனித்தனியே பிரிந்து செல்வது இலக்கியத்தில் ஒருமரபாக உள்ளது. குயில்பாட்டில் இம்மரபு இடம்பெற்றிருப்பதையும் அறியலாம். கவிஞர் மாஞ்சோலையில் குயிலைச் சந்தித்துப் பேசும்பொழுது அங்கிருந்த பிற பறவைகளெல்லாம் பறந்தோடிச் சென்றுவிட்டன. இவர்கள் பேசிமுடிக்கும் நிலையில் பறந்து சென்ற பறவைகள் எல்லாம் மீண்டும் சோலைக்கு வந்து சேர்ந்து விடுகின்றன. இந்நிலை காதலன் -காதலி சந்திப்பில் தனியிடம் இன்றியமையாதது என்ற கருத்தைக் கவிஞர் அழகாகச் சுட்டிக்காட்டியுள்ளார். குறியிடம் என்பதும், தனியிடம் என்பதும் காதலர்களுக்கு எல்லாக் காலத்துக்கும் பொருந்தி வரும் என்பதை உணர்த்துகின்றது.

## தொகுப்புரை

- வள்ளலார் பக்திநிலையில் கூறிய மரபினைப் பாரதியார் காதல் நிலைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்டார்.

- காதலும் பக்தியும் இடம் மாறிச்சென்றாலும் சிந்திக்குமிடத்து ஒரே உணர்ச்சி தான் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கது.
- மனிதர்கள் இறைவனிடம்,பெரியோர்களிடம்,சகமனிதர்களிடம் மற்றும் பிறஉயிரினங்களிடமும் கொண்டிருக்கும் அன்பு - காதல் - இரக்கம் - பக்தி என்ற மகத்துவ நிலையானது தற்காலத்தில் அருகிக் கொண்டே வருகிறது. உண்மையான அன்பு நிலைகள் இந்த பூமியில் ஓரளவு உள்ளதனால்தான் இவ்வுலகம் இன்னும் இயங்கக் காரணமாகின்றது.
- கவிஞரின் காதலை முக்கோண வடிவக்காதலாக ஊழ்வினையோடு பொருத்தமுறக் கூறுவது தற்காலத்தில் கண்டதும் காதலாக அமைகின்றது. இதுவும் ஊழ்வினையோடு பொருந்துமா எனும் வினாவானது ஆய்விற்குட்பட்ட ஒன்றாக உள்ளது.

# 46. புரட்சிச் சிந்தனையும் புதுப் பார்வையும்

**சி. செந்தில் வடிவு**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர் - 641 029.*

இறைவன் படைப்பில் தோன்றிய ஒவ்வொரு உயிர்களும் தனித்துவமானது. அதில் கிடைத்தற்கரிய மானிடப் பிறவியின் செயல்பாடுகளும், அவற்றோடு பின்னிப் பிணைந்துள்ள உறவுகளும் இவ்வுலகில் முக்கியத்துவம் வாய்ந்தவை. அன்பு என்பது இவ்வுலகில் உயிர்கள் நிலைத்து வாழப் பயன்படும் ஆக்க சக்தியாகும். அறிவு என்பது இப்புவியில் உயிர்கள் நிலைபெறத் துணைபுரியும் இயக்க சக்தியாகும். ஆக்கத்திற்கும், இயக்கத்திற்கும் ஆதாரமாக விளங்கும் சிந்தனையின் வெளிப்பாடாகவும், சீர்மிகு கற்பனையின் புலப்பாடாகவும் திகழ்கின்ற பாரதியின் 'கண்ணன் பாட்டுத் திறன்' குறித்து முனைவர் ந.சுப்புரெட்டியார் கூறியுள்ள கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் மைய நோக்கமாக அமைகின்றது.

## கவியுள்ளம்

மனித உறவுகளின் பல்வேறு படிநிலைகளையும், அதன் முக்கியத்துவத்தையும் 'கண்ணன் பாட்டில்' மகாகவி பாரதி புலப்படுத்தியுள்ளார். கண்ணன் எனும் பாத்திரத்தை மையமாகக் கொண்டு தன் உள்ளக் கருத்துக்களை உரைத்துள்ளார். பாரதி கண்ணனைத் தாய், தந்தை, குரு, சீடன், குழந்தை, காதலன், காதலி என்பதாகப் பல்வேறு நிலைகளில் உவமித்துப் பாடியுள்ள போதிலும், எண்ணற்ற இடங்களில் கவிஞன் தன் மனதோடு பேசும் பாங்கிலேயே கவிதைகள் அமைந்துள்ளன. இதன் வாயிலாகப் படைப்பாளனின் சிந்தனைத் துளிகள் சமுதாயத்தைச் சென்றடைகின்றன.

இதனை வாசகன் படிக்கின்ற போதும், அதிலுள்ள கருத்துக்களைத் திறனாய்வு மற்றும் விமர்சனம் செய்கின்ற போதிலும் அக்கருத்துக்கள் மென்மேலும் வளர்ச்சி நிலையை அடைந்து வேறு ஒரு பரிணாமத்தைப் பெறுகின்றது. தமிழ் மீது மாறாக் காதலும், தீரா வேட்கையும் கொண்ட முனைவர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் கண்ணன் பாட்டில் உள்ள கவிநயங்களை தக்க உவமைகள், ஒப்பீடுகள், சான்றுகள் வாயிலாக நயமுற எடுத்தியம்பியுள்ளார். சிறந்த மதிநுட்பமும், அறிவியல் மீது அவர் கொண்டிருந்த ஈடுபாடும் ஆதாரங்கள் வாயிலாக இலக்கியங்களை அணுகும் முறைக்குச் சான்றாக அமைகின்றது.

பொருட்களை ஆய்விற்கு உட்படுத்தி அதன் விளைவை கண்டுணர்வது அறிவியலின் அடிப்படையாகும். அதுபோல இலக்கியங்களை ஆய்விற்கு உட்படுத்தும் போது துல்லிய நிலையும் அவ்விலக்கியத்திற்கான மற்றொரு படிநிலையும், கவியுள்ளத்தின் ஆழ்நிலையும் வெளிப்படுகின்றது. இதனால் படைப்பாளன் மற்றும் படைப்பு வழி உளவியலை நாம் உணர முடிகின்றது.

## கண்ணனின் பிறப்பு

பண்டைய காலத்தில் தமிழக நிலப்பகுதிகளைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு வகையாகப் பகுத்துள்ளனர். அவற்றில் முல்லை நிலத்திற்கு உரிய வழிபடு தெய்வமாகத் திருமால் இருந்துள்ளமையை,

***“மாயோன் மேய காடுறை உலகம்” (தொல்.)***

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறிய முடிகின்றது.

முல்லை நிலத்திற்குரிய கடவுள் திருமால் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் சேக்கிழார் பெருமானும்,

***“அங்கண் முல்லையின் தெய்வமென்று***
***அருந்தமிழ் உரைக்கும்***
***செங்கண்மால்”***

என்று திருமாலின் சிறப்பினை உரைக்கின்றார். இவ்வாறாகச் சங்க காலந்தொட்டே திருமால் வழிபாடானது நம் நாட்டில் காணப்பட்டு வந்திருப்பதை ந.சுப்புரெட்டியார் அவர்கள் உரிய சான்றுகளுடன் எடுத்தியம்பியுள்ளார். இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள உறவு நிலையை அறியும் முயற்சியின் வெளிப்பாடான ‘சம்பந்த ஞானம்’ என்னும் நிலை குறித்த விரிவான தத்துவப் பார்வையையும் இவர்தம் நூலின் வாயிலாக நாம் அறியமுடிகின்றது.

## ஆக்கத்தினை அளித்த தாய்நிலை

ஒரு தாய் - பிள்ளை உறவானது உதிரத்தால் உண்டாகி, உயிரில் கலந்த உன்னதமான பந்தமாகும். இந்தப் புனித உறவில் தாய் தன் குழந்தைக்குப் பாராட்டிச் சீராட்டிப் பாலூட்டி வளர்க்கும் நிலையை,

***“உண்ண உண்ணத் தெவிட்டாதே - அம்மை***
***உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்***
***வண்ணமுற வைத்தெனக்கே - என்றன்***
***வாயினிற்கொண் டூட்டுமோர் வண்மையுடையாள்”***

என்ற இக்கவிதையில் கூறியுள்ளார். இதே ஒரு நிலையை மாணிக்கவாசகப் பெருமானும்

***‘பால் நினைந்து ஊட்டும் தாய்’***

என்று தாயின் இயல்பினைத் தம் பாடலில் உணர்த்தியுள்ளார்.

கடவுளைத் தாயாகக் கருதும் பாரதி தாயை இவ்வுலகமாகக் கருதும் நிலையை,

***“கண்ணனெனும் பெயருடையாள், - என்னைக்***
***காட்டி நின்ற வான் எனுந்தன் கையிலணைத்து***
***மண்ணெனுந்தன் மடியில் வைத்தே - பல***
***மாயமுறுங் கதைசொல்லி மனங்களிப்பாள்”***

என்ற கவிதையில் கூறியுள்ளார்.

தாய் குழந்தையின் மனநிலைக்கு ஏற்பக் கதைகளை உரைக்கும் பாங்கானது,

***“இன்பமெனச் சில கதைகள் - எனக்***
***கேற்றமென்றும் வெற்றி யென்றும் சில கதைகள்***
***துன்பமெனச் சில கதைகள்”***

இவ்வாறு தாய் நிலையில் கண்ணனை வைத்துப் பாடியுள்ளார்.

இதில் தாய் - குழந்தையின் உளவியல் பாங்கு குறித்த புதுப்பார்வையினை ந.சுப்புரெட்டியார் கூறியுள்ளார்.

பாரதியின் பரந்து விரிந்த சிந்தனைக்குள் வானியலும் அடங்கியுள்ள என்பதை மெய்ப்பிக்கும் வகையில்,

***‘விண்டு ரைக்க அறிய அரிதாய்***
***விரிந்த வான வெளியென நின்றனை***
***அண்ட கோடிகள் வானில் அமைத்தன***
***இக்கவிதையானது அமைந்துள்ளது”***

குழந்தைக்குப் புவியின் எழிலைக் காட்டி வளர்க்கும் தாயின் இயல்பினை,

***‘கானத்து மலைகளுண்டு - எந்தக்***
***காலமுமொரிடம் விட்டு நகர்வதில்லை”***
***“நல்ல நல்ல நதிகளுண்டு - அவை***
***நாடெங்கும் ஓடி விளை யாடி வருங்காண்”***
***“ஓல்லெனுமப் பாட்டினிலே - அம்மை***
***ஓமெனும் பெயரென்றும் ஒலித்திடுங்காண்”***

இக்கவிதையில் கூறியுள்ளார். இதில் ‘ஓம்’ என்ற பெயர் ஒலித்திடும் என்கின்றார். இதில் ‘சமய ஞானம்’ என்பது புலப்படுகின்றது என்று ந.சுப்புரெட்டியார் கூறியுள்ளார்.

## அறிவினை அளித்த தந்தை

உயிர்களைப் பூமியில் படைத்துக் காக்கின்ற நற்தொழிலைச் செய்கின்ற கண்ணனைத் தந்தை எனும் நிலையில் வைத்துக் கவிஞர் பல்வேறு கவிதைகளை இயற்றியுள்ளார். கண்ணன் பல்வேறு சாத்திரங்கள் பேசிப் பொய்யாக வாழும் ‘பகுத்தறிவு’ இல்லாப் போலி மனிதர்களைச் சாடும் புரட்சிச் சிந்தனையானது,

*'நிறந்தனிற் கருமை கொண்டான்*
*நேயமுறக் களிப்பது பொன்னிறப் பெண்கள்*
*துறந்த நடைகளுடையான் - உங்கள்*
*சூனியப் பொய்ச் சாத்திரங்கள் கண்டு நகைப்பான்''*

என்ற கவிதை மூலம் வெளிப்படுகின்றது. இக்கருத்தினை உற்று நோக்கும் போது இச்சிந்தனையானது "பகுத்தறிவுப் பகலவனாக'' திகழும் தந்தை பெரியாரின் கொள்கைகளோடு ஒப்பிட்டு நோக்கத் தக்கதாக உள்ளது என்று ந.சுப்புரெட்டியார் கருதுகின்றார். இதுபோன்ற போலிச் சாத்திரங்களையும், மூடநம்பிக்கைகளையும் மறுத்து சமூகப் புரட்சி ஏற்படுத்தியதில் சித்தர்களுக்கும் ஒரு பெரும் பங்குள்ளது என்பது நாம் நினைவிற்கு கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

தம்மை நாடி வருபவர்களுக்கு ஆதரவு அளித்து, அன்புக் கரம் நீட்டும் தந்தையைப் போலக் கண்ணைப் பாவித்துக் கவிஞர் பாடியுள்ளார். இதனை,

*"என்புடை பட்ட பொழுதும் - நெஞ்சில்*
*ஏக்கமுறப் பொறுப்பவர் தம்மை உகப்பான்*
*இன்பத்தை எண்ணுபவர்க்கே - என்றும்*
*இன்பமிகத் தருவதில் இன்பமுடையான்''*

எனும் இவ்வடிகளில் உயிர்கள் மீது இரக்கம் காட்டும் தந்தையாகக் கண்ணனைக் கருதும் நிலையை அறியமுடிகின்றது.

## வசந்தம் அளிக்கும் பிள்ளைப் பருவம்

மழலைச் செல்வத்தின் மகிமையைக் கவிஞர்கள் பல்வேறு நிலையில் உணர்ந்து பாடியுள்ளனர். அதில் குறிப்பாக பாரதி மழலைச் செல்வத்தின் சிறப்பினை,

*"சின்னஞ் சிறுகிளியே - கண்ணம்மா!*
*செல்வக் களஞ்சியமே!*
*என்னைக் கலிதீர்த்தே - உலகில்*
*ஏற்றம் புரியவந்தாய்!''*

இதில் குழந்தைச் செல்வம் தான் உயரிய செல்வம் என்றும், குழந்தை வரம் பெற்ற அன்னையின் பூரிப்பு உணர்வையும் பெருமிதச் சுவையையும் அறியமுடிகின்றது. இதுபோல வள்ளுவரும் பிள்ளைச் செல்வத்தின் சிறப்பினை,

*"குழல்இனிது யாழ்இனிது என்பர் தம்மக்கள்*
*மழலைச் சொல் கேளாதவர்''*

எனும் குறட்பாவில் கூறியுள்ளார். மேலும் பிள்ளைப் பருவத்தின் சிறப்புகளைப் "பிள்ளைத் தமிழ்'' எனும் சிற்றிலக்கியத்திலும், வைணவ இலக்கியங்களில் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து எழுதப்படும் பாடல்களின் வாயிலாக உணரமுடிகின்றது.

குழந்தையின் இன்பம் எந்த அளவிற்குத் தாய்க்குச் சுகம் அளிக்கின்றதோ, அதே அளவிற்குக் குழந்தையின் வாட்டமும் தாய்க்குத் துக்கத்தை அளிக்கும் என்பதை,

***“உன் கண்ணில் நீர் வழிந்தால் - என்நெஞ்சில்***
***உதிரங் கொட்டுதடீ***
***என் கண்ணில் பாவையன்றோ? - கண்ணம்மா***
***என்னுயிர் நின்னதன்றோ?”***

என்ற அடிகளில் பாரதி உணர்த்தியுள்ளார். கண்ணன் செய்யும் குறும்புகள் அனைத்தும் மக்களுக்குக் கோபத்தை அளிக்காமல், இன்பத்தை அளிப்பதாக உள்ளது. மேலும் கண்ணனின் குறும்புகள் இரசனை மிக்கது என்பதை,

***“தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்***
***தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை”***
***“தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி***
***தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்..”***

இக்கவிதை அடிகளில் கூறியுள்ளார்.

## ஊக்கம் அளித்த தோழன்

நமக்குத் துன்பம் ஏற்படும் காலத்தில் உற்றத் தோழனாக இருந்து கண்ணன் நம்மைக் காக்கும் ‘சமய சஞ்சீவி’ யாகத் திகழ்கின்ற ஒரு நிலையை,

***“ஊனை வருத்திடும் நோய்வரும் போதினில்***
***உற்ற மருந்து சொல்வான், நெஞ்சம்***
***ஈனக் கவலைக ளெய்திடும் போதில்***
***இதஞ்சொல்லி மாற்றிடுவான்”***

என்னும் பாடலில் உணர்த்தியுள்ளார். மேலும் கண்ணன் - அர்ச்சுனன் நட்பு நிலை குறித்தும் பேசப்பட்டுள்ளது. கண்ணன் நன்மை செய்பவர்களுக்கு நல்ல தோழனாகவும், தீமை செய்பவர்களுக்கு அறியாமையை நீக்கி அறிவினை வழங்கும் இயல்புடையவனாக இருக்கின்றான் என்பதை,

***“பெண்மைக் குணமுடையான் - சில நேரத்தில்***
***பித்தர் குணமுடையான் - மிகத்***
***தண்மைக் குணமுடையான் - சில நேரம்***
***தழலின் குணமுடையான்”***
***“வேதமுணர்ந்த முனிவ ருணர்வினில்***
***மேவு பரம்பொருள் காண் - நல்ல***
***கீதை யுரைத்தெனை இன்புறச் செய்தவன்”***

என இருவேறு நிலைகளை இக்கவிதைகள் பிரதிபலிக்கின்றன. இவை தவிர வாழ்விற்கு ஏற்றம் அளிக்கும் குருநிலை, ஆசிர்வதிக்கும் தெய்வநிலை, அன்பை உணர்த்தும் காதல் நிலை போன்ற பல்வேறு

நிலைகளில் பாரதியார் கண்ணனைக் கண்டு தெளிந்துள்ளார். தூய பக்தியையும், உண்மை அன்பினையும் உணர்ந்த ஓர் உன்னத நிலையை பாரதி அடைந்துள்ளார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## முடிவாக

- பாரதியாரின் பாடல்களில் காணப்படும் கவிச்சுவையினையும், இலக்கிய நயத்தினையும் மக்களுக்கு விளக்கமுற எடுத்துரைக்கும் பொருட்டும், அதில் உட்பொதிந்துள்ள அரிய பல நுட்பமான கருத்துக்களுக்கு மென்மேலும் மெருகூட்டும் வகையில் ந.சுப்புரெட்டியாரின் ஆய்வுச் சிந்தனையானது அமைந்துள்ளது.
- பாரதியார் பாடல்களில் காணப்படும் கவிதைச் சுவையினை, வடமொழியில் உள்ள இரசக் கோட்பாட்டுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளமையால் ஆசிரியரின் பன்மொழிப் புலமையானது வெளிப்படுகின்றது.
- கண்ணன் பாட்டில் கண்ணனின் பிறப்பு முதலாகப் பல்வேறு இடங்களிலும் கண்ணனை நம்மோடு வாழ்கின்ற உறவினைப் போலக் கருதி எழுதப்பட்ட பாடல்களின் கருத்தாழத்தையும், உறவுகளின் உன்னதத்தையும், பக்திப் பரவச நிலையையும் கையாளும் இடங்களில் எல்லாம் பல்வேறு இலக்கியச் சான்றாதாரங்களை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளமையால் அவரின் பரந்துபட்ட அறிவாற்றலானது புலப்படுகின்றது.
- கவிஞன் தன் உள்ளக் கருத்தினைக் கவிதையில் உருவெடுத்து வார்த்தாலும், வார்த்த சிலையினை இரசிக்கும் ஞானத்தைத் தருவது அப்படைப்புகள் தொடர்பாக வெளிவந்துள்ள விமர்சனங்களும் திறனாய்வு நூல்களுமே ஆகும். படைப்பு தொடர்பாக எழும் வினாவே ஆய்வின் அடிப்படையாகும். ஆய்விற்கு உட்படுத்தப்படும் இலக்கியங்கள் மொழி வளர்ச்சிக்கு ஆதாரமாகும்.
- அவ்வகையில் தமிழ் மொழி மற்றும் இலக்கியங்கள் குறித்து பரந்து பட்ட ஆய்வினை மேற்கொண்ட ந.சுப்புரெட்டியாரின் 'தமிழ்க் கொடையானது' எக்காலத்திற்கும் 'மங்காப் புகழுடையது' என்றால் அது மிகையன்று.

## பார்வை நூல்கள்


1. கண்ணன் பாட்டு - பாரதியார்
2. கண்ணன் பாட்டுத்திறன் - டாக்டர் ந.சுப்புரெட்டியார்
3. தொல்காப்பியம் - உரையாசிரியர். தமிழண்ணல்

# 47. ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் கவிமணியின் திறனாயுந் திறன்

**அ. திலிப் ஏங்கல்ஸ்**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*சேர்க்காடு, வேலூர் - 632 115.*

## முன்னுரை

நாம் எதைப்படித்தாலும் அதனைத் திறனாய்ந்தே உணர்கின்றோம் சிறுவர்களிடம் கூட இத்திறனாய்வுப் பண்பு கருவிலே திருவுடையதாகக் காணப்படுகின்றது. கவிஞர்கள் அவ்வப்போதைய மனநிலைக்கேற்ப, அவ்வக்காலத்து சூழ்நிலைக்கேற்பப் பல்வேறுபட்ட உணர்ச்சிகளை உடையவர்களாக இருப்பர். இத்தகைய வேறுபட்ட உணர்ச்சிகளைக் கொண்டு தாம் மேற்கொண்ட பொருள்களின் அழகைக் கற்பனை செய்து பாடுவதினால் தான், அக்கவிதையில் புதுப்புதுக் காட்சிகளைக் காணமுடிகின்றது. பழைய பாஞ்சாலி சபதத்தையே பாரதி புது மெருகு கொடுத்துப் பாடியுள்ளதை இதற்கு எடுத்துகாட்டாகக் கூறலாம். புரட்சிக் கவிஞர் பாரதியின் பாடல்களைக் கவிமணி எவ்வாறு திறனாய்ந்துள்ளார் என்பதை ந.சுப்புரெட்டியார் எடுத்துக் காட்டுவதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## பாரதியைப் பற்றி

‘பாட்டுக்கொரு புலவர் பாரதி’ என்றும், ‘பாரதத்தாய் செய்த தவப்பயனாய் வந்த பாவலன் சுப்பிரமணிய பாரதி’ என்றும் பாரதியை அறிமுகப்படுத்துவார் நம் கவிமணி. பாவேந்தர் பாரதிதாசனார்,

***‘உய்வகை காட்டும் உயர்த மிழுக்குப்***
***புதுநெறி காட்டிய புலவன் பாரதி’***

என்று பேசுவார்.

பாரதியைப் பற்றியும், அவருடைய கவிதைகளைப் பற்றியும் பொதுவாகவும், அவர்தம் பாடல்களைப் பற்றிச் சிறப்பாகவும் ‘பாரதியும் பட்டிக்காட்டானும்’ என்ற தலைப்பில் திறனாய்ந்துள்ளார் கவிமணி. கவிதைத் திறனாய்வுக் கவிதையாலேயே திறனாய்ந்த அற்புதத் திறனாய்வுக் கவிதை இது. பின்னோர்க்கெல்லாம் ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்து என்றும் வழிகாட்டும் சிறந்த ஓர் இலக்கியமாகும்.

பட்டிக்காட்டான் ஒருவன் பட்டனம் போகின்றான். பாரதி பாடல்களைப் பண்ணோடு கேட்க அவனுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அதில் அவன் மனம் ஈடுபடுகின்றது. சில நாட்களில் அவன் ஊருக்குத் திரும்புகின்றான். அங்கே தன் நண்பர்களுக்கு அப்பாடல்களின் அருமை

பெருமைகளைத் தான் உணர்ந்த மட்டில் விவரித்துக் கூறுவதாகக் கவிமணி அவன் வாயில் மூலம் பேசுகிறார்.

***'உள்ளக் கருத்தையெல்லாம் உள்ளபடி யான்இந்த***
***வெள்ளைக் கவியில் விளிம்பினேன்'***

என்று ஒரு வெண்பாவில் தொடங்குகிறது கவிமணியின் திறனாய்வு.

***"பாட்டுக்கொரு புலவன் பாரதி, அடா? - அவன்***
***பாட்டைப் பண்ணோடொருவன் பாடினான், அடா!***
***கேட்டுக் கிறுகிறுத்துப் போனேன், அடா! - அந்தக்***
***கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய், அடா!"***

என்று பட்டிக்காட்டான் உளறுவதுதான் கவிமணியின் திறனாய்வு.

## பாடல்களில் தனிநோக்குத் திறனாய்வு

'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடல் தீவு ஒன்றில் ஏழைத் தொழிலாளர் குறிப்பாகப் பெண் தொழிலாளர் படும் பாட்டைக் கேட்டோர் கண்கள் கலங்கும்படியாகப் பாடியுள்ளார்.

***"பெண்ணென்று சொல்லிடுலோ-ஒரு***
***பேயும் இரங்கும் என்பார், தெய்வமே நினது***
***எண்ணம் இரங்காதோ? - அந்த***
***ஏழைகள் சொரியும் கண்ணீர்வெறும்***
***மண்ணிற் கலந்திடுமோ? - தெற்கு***
***மாகடலுக்கு நடுவினிலே, அங்கோர்***
***கண்ணற்ற தீவினிலே - தனிக்***
***காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றனர்"***

என்ற அடிகளை இசையேற்றிப் பாடும்போது பட்டிக்காட்டானின் நெஞ்சு உருகுகின்றது. கொதிக்கின்றது உடனே,

***"கரும்புத் தோட்டத்திலே - என்னும்கவி***
***காதைச் சுடுகுதடா!***
***இரும்பு நெஞ்சமுமே - நீராய்***
***இளகியோடுதடா!***

என்று அவன் உயர்ச்சிப் பாட்டாக வடிவம் கொள்கிறது. செந்தமிழ் நாடு என்னும் பாடலையும் அவன் செவி கேட்கின்றது. அதில் அவன் தன் மனம் முழுவதையும் பறிகொடுக்கின்றான்.

***"செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத்***
***தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்***
***தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு***
***சக்தி பிறக்கு மூச்சினிலே"***

பாரதியின் பாஞ்சாலி சபதம் இருபதாம் நூற்றாண்டில் உருவான ஓர் அற்புதக் காப்பியம். அத்தினபுரத்தின் வருணனையில் சோலைகள், வாவிகள், வேள்விச் சாலைகள், மந்திர கீதங்கள் முழங்கும் இடம்,

சாத்திர ஆராய்ச்சிக் கழகங்கள் இவை அற்புதமாகக் காட்டப்பட்டுள்ளன. பாண்டவர்கள் அத்தினபுரத்திற்கு வரும் வழியில் பார்த்தன் பாஞ்சாலிக்குப் பரிதியின் எழிலைக் காட்டும் பகுதி, சூதாட்ட வருணனைப் பகுதிகள் கதையினை நேரில் காண்பது போன்ற நிலையினை உருவாக்குகின்றன. இதனைப் பாடும் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றுப் பட்டிக்காட்டான்,

***“அன்னை பாஞ்சாலி - சபதம்***
***அறைதல் கேட்டேனடா!***
***முன்னைக் கதையெல்லாம் - கண்ணிண்***
***முன்நடந்த தடா!”***

என்று கூறுகின்றான். காவியத்தை உணர்ச்சியுடன் படிப்போர் காவியத்தில் காணப்பெறும் நிகழ்ச்சிகள் யாவும் படிக்கும்போதே படிமக் காட்சியாகக் காண முடிகின்றது.

வந்தே மாதரம் என்ற பாடல் நாட்டுப்பற்றைக் கிளர்ந்தெழச் செய்துவிடுகின்றது.

***“ஆயிரம் உண்டிங்கு ஜாதி - எனில்***
***அன்னியர் வந்து புகல்என்ன நீதி? - ஓர்***
***தாயின் வயிற்றில் பிறந்தோர் - தம்முள்***
***சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ?”***

என்று உணர்ச்சியோடு பாடும்போது உண்மையில் ஓர் அற்புதச் சக்தி நம்மில் தோன்றக் காண்கிறோம்.

சுதந்திரத்தின் பாட்டாகச் சுதந்திரத்தின் பெருமை, சுதந்திரப் பயிர், சுதந்திர தாகம், சுதந்திரப் பள்ளு, சுதந்திர தேவியின் துதி, விடுதலை என்ற பாடல்கள் அமைகின்றன. இந்தப் பாடல்களைப் படிக்கும்போது அல்லது பாடும்போது உள்ளம் துடிப்பதை அறிய முடிகின்றது.

***“முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்***
***மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்”***

அவர் சிந்தனையில் எழுகின்றன. விடுதலைப் பயிரும் அவர் மனத்தில் முகிழ்க்கின்றது. ஆங்கில ஆட்சியில் அடிமைதான் நம்மவர்க்கு புதிதேயன்றி விடுதலை, சுதந்திரம் புதிதன்று என்று அவர் மனம் எண்ணுகின்றது. இந்தியத் தாயைப் பாரத மாதாவை நோக்கிப் பேசுகின்றார்,

***“நின்பொருட்டு நின்னருளால் நின்னுரிமை யாம்கேட்டால்***
***என்பொருட்டு நீதான் இரங்கா திருப்பதுவோ?***
***இன்று புதிதாய் இரக்கின்றோ மோ? முன்னோர்***
***அன்றுகொடு வாழ்ந்த அருமையெல்லாம் ஓராயோ”?***

விடுதலையே - சுதந்திரம் - பாரதியின் தாரக மந்திரம். நாட்டுப்பற்றைப் போலவே இதுவும் ஒரு பாரதியம். நாட்டுப் பற்றிலிருந்து கிளைத்தெழுந்த ஒரு கொள்கை. ‘வந்தே மாதரம் ஒன்றே தாரக

மந்திரம்' என்பது இதன் உயிராய பண்பு. எனவே,

***'வீர சுதந்திரம் வேண்டிநின் றார்பின்னர்***
***வேறொன்று கொள்வாரோ? - என்றும்***
***ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்***
***அறிவைச் செலுத்து வாரோ?''***

என்று கேட்கின்றார் என்றும் விடுதலையே வேண்டி நிற்பார்.

## முடிவுரை

'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடல் தீவு ஒன்றில் ஏழைத் தொழிலாளர் குறிப்பாகப் பெண் தொழிலாளர் படும் பாட்டைக் கேட்டோர் கண்கள் கலங்கும்படியாகப் பாடியுள்ளதும், அத்தினபுரத்தின வருணனையில் சோலைகள், வாவிகள், வேள்விச் சாலைகள், மந்திர கீதங்கள் முழங்கும் இடம், சாத்திர ஆராய்ச்சிக் கழகங்கள் இவை அற்புதமாகக் காட்டப்பட்டுள்ளதும், வந்தே மாதரம் என்ற பாடல் நாட்டுப்பற்றைக் கிளர்ந்தெழச் செய்வதாக இருப்பதும், சுதந்திரத்தின் பெருமை, சுதந்திரப் பயிர், சுதந்திர தாகம், சுதந்திரப் பள்ளு, சுதந்திர தேவியின் துதி, போன்ற பாடல்கள் அனைத்தும் சுதந்திரத்தின் பாட்டாக பாடப்பட்டிருப்பதும் போன்ற வகைகளில் காணப்படும் கவிமணியின் திறனாயும் திறத்தை ந.சுப்புரெட்டியார் எடுத்துக் கூறியுள்ளதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

# 48. அருங்கலைக்கோனின் அறிவியல் நோக்கு

**கௌரி**
*ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை,*
*காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம்*
*திண்டுக்கல்.*

காலத் தொன்மையும் வளர் புதுமையும் கொண்ட உயர் தனிச் செம்மொழியான தமிழ் மொழி கல்லெழுத்தில் பிறந்து காகிதத்தில் வளர்ந்து கணினியில் மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றது. தமிழை மற்றோர் உயர் தளத்திற்கு அழைத்துச் சென்ற பெருமை அறிவியல் தமிழுக்கு உண்டு. தமிழர்கள் நாடு, எல்லை, கடற்பரப்பு முதலியன கடந்து அரிய சிந்தனைகளை அறிவியல் செல்வங்களைத் தமிழில் மணப்பரப்பினால் மொழி காலத்திற்கேற்ற வேகத்தில் பயணிக்கும் என்ற சிந்தனைகளை வித்திட்ட தமிழறிஞர் பெருமக்களுள் தலைசிறந்தவர் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் ஆவார். திருவள்ளுவரின் அறிவியல் சிந்தனைகளை ஆய்ந்து உரைக்கும் வகையில் படைத்தளித்த 'அறிவியல் நோக்கு' என்னும் கருத்துப்பேழையை மையமிட்டு இக்கட்டுரை ஆக்கம்பெற்றுள்ளது. வள்ளுவத்தின் அறிவியல் நுட்பத்தை ந.சுப்புரெட்டியார் வழி ஆய்ந்து உரைக்க இக்கட்டுரை முயற்சிக்கின்றது.

## ந.சுப்புரெட்டியார் படைப்புகள்

நாடறிந்த சிறந்த தமிழறிஞர் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள். அவர்தம் படைப்புகளில் தமிழ் இலக்கியப் பற்றும் தமிழ் மொழியின் பரவலாக்கமும் மேலோங்கிக் காணப்படுகின்றன. தமிழ் ஆசிரியராகவும் பல்கலைக்கழகப் பேராசிரியராகவும் அரும்பணியாற்றியவர். தமது வாழ்நாள் முழுமையும் தமிழ்ப்பணிக்காகவும் சீரிய சிந்தனை மிகு எழுத்துக்களுக்காகவும் அர்ப்பணித்தவர். 'அருங்கலைக்கோன்', 'ஸ்ரீசடகோபன் பொன்னடி' என்னும் பட்டங்களுக்குப் பெருமை சேர்த்தவர். மேலும் தமிழக அரசு பேராசிரியரின் படைப்புகளை நாட்டுடமையாக்கி, அவரைப் பெருமைப்படுத்தியுள்ளது. தமிழன்னைக்கு வழங்கிய பேராசிரியரின் சிறந்த படைப்புகளை உற்று நோக்கினால் அறிவியல் சிந்தனைகள் ஆழ்ந்து காணப்படும். தமிழ் இலக்கியங்களில் இழையோடி இருக்கும் அறிவியல் கருத்துக்களைப் பறைசாற்றும் வகையில் ரெட்டியாரின் படைப்புகள் உள்ளன. அப்படைப்புகளில் வள்ளுவரின் திறத்தை உயர்த்தும் நோக்கில், நுண்ணாய்வு நோக்குடன் இயற்றப்பட்ட படைப்பாய் 'வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்' என்னும் நூலாக்கம் பெற்றுள்ளது. அந்நூலில் பதின்மூன்றாவது படைப்பாய் 'அறிவியல்

நோக்கு’ என்னும் கட்டுரை திகழ்கிறது. வள்ளுவரின் அறிவியல் சிந்தனைகளை எடுத்துரைக்கும் வகையில் உருவாக்கப்பட்ட இப்படைப்பு, காலம் சார்ந்த அறிவியல் நுட்பத்தை இலக்கியத்தின் வாயிலாகவும் சமயத்தின் வாயிலகவும் விளக்குகின்றது.

## வள்ளுவர் காட்டும் காலம்

உலகின் தொன்மையும், வலிமையுமான மொழிகளுள் ஒன்று தமிழ், தமிழினத்தைத் தலைநிமிரச் செய்யும் உன்னதப் படைப்புகளுள் ஒன்று உலகப் பொதுமறை திருக்குறள். தமிழ் மொழியினை நிலமாகவும், தமிழ்ப் பண்பாட்டினை நீராகவும் கொண்டு மக்கட் சமுதாயத்தின் நன்மையை உளங்கொண்டு தோன்றிய பொது அறநூல் திருக்குறளாகும். திருவள்ளுவர் தெள்ளத்தெளிந்த கருத்துக்களை எவரும் ஏற்று உள்ளம் தெளிந்து வாழ்வில் கடைப்பிடித்து உய்த்திடுதற்கு உரிய வண்ணம் தமது திருக்குறள் நூலை வாழ்வியல் கருவூலமாக வழங்கியுள்ளார்.

தம்முடைய விலை மதிப்பற்ற ஆதாரங்களில் நேரமும் ஒன்றாகும். இழந்துவிட்டால் திரும்பப் பெற முடியாததும் நேரம் ஒன்றுதான். திருவள்ளுவர் **‘காலம் அறிதல்’** என்னும் அதிகாரத்தில் காலத்தைப் பற்றி விளக்கியுள்ளார். காலம் பற்றி ந.சுப்புரெட்டியார், ‘காலம் என்பது ஓர் அருவப் பொருள். கண்ணுக்குப் புலனாகாததும் ஏனைய புலன்களாலும் உணர முடியாததும் ஐம்பூதங்களில் ஒன்றாகிய ஆகாயம் போல் கண்ணுக்குப் புலனாகாததுமான ஒரு திரவியம். இதனை எந்த வித அளவு கருவிகளாலும் கூறுபடுத்த முடியாது’ என்று பொருளுரைக்கிறார். (ந.சுப்புரெட்டியார், வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள், அறிவியல் நோக்கு, ப.80)

காலத்தின் இயக்கம் பற்றியும் மக்களின் பயன்பாடு குறித்தும் வள்ளுவம் பல்வேறு கருத்துக்களை உலகிற்கு வழங்கியுள்ளது. உலகில் காலவெள்ளத்திலே, பற்பல மாறுதல்கள் உண்டாகின்றன. ஆனால் சிலர், எந்தக் காலத்தையும் எதிர்நோக்கும் வன்மையை அறிந்தவர்கள் உலகை வெல்வார்கள் என்கிறது வள்ளுவம்.

***“பகல் வெல்லும், கூகையைக் காக்கை, இகல்வெல்லும்***
***வேந்தர்க்கு வேண்டும் பொழுது” (குறள்.481)***

கூகை பலம் மிக்கது. அது காக்கையைத் தனியே கண்டாலும் கொன்றுவிடும். ஆனால் பகற்பொழுதில் கூகைக்குக் கண் தெரியாது. அந்தச் சமயம் பார்த்துக் காக்கைக் கூட்டம் கூகையைக் கண்டவிடத்து கொன்றுவிடும். காக்கைக்கும் கூகைக்கும் ஒரு வேறுபாடு உண்டு. கூகை தனித்து நின்று காக்கையிடம் போரிடும். ஆனால் காக்கையோ கூட்டமாகவே எங்கும் செல்லும். போரிடும். ஒருவரின் வெற்றி தோல்வியை முடிவு செய்வது அவரிடம் உள்ள களங்களும் கருவிகளும் மட்டுமல்ல, பொருத்தமான காலமும் ஆகும். எனவே பகையை வெல்ல நினைக்கும் வேந்தர் தகுந்த காலத்தையும் தெரிந்தெடுக்க வேண்டும்.

நாடாளும் மன்னன், நாட்டு மக்களின் எண்ணக் கிளர்ச்சிகளையும், வேற்றுநாட்டு மக்களின் மனவியல்புகளையும் நன்றாக ஆராய்ந்து அறிதல் வேண்டும். பல்வேறுபட்ட மக்களும், கருத்துக்களும் மல்கியுள்ள இந்த நிலையில்தான் நம் நாட்டை ஆள்பவர்கள் திட்டம்தீட்டிச் செயலாற்ற வேண்டியிருக்கிறது. காலம் மாறும் தன்மை கொண்டது என்பதை மனதில் கொண்டு, அதனை அறிவாகிய கயிற்றால் கட்ட வேண்டும். செல்வத்தைத் தீராமல் கட்டிப்போட்டுக் காக்கும் கயிறு ஒன்று உள்ளது, அதுதான் காலம் என்பதனை உணர்ந்து அதற்கேற்பச் செயல்பட வேண்டும்.

***"பருவத்தோடு ஒட்ட ஒழுகல், திருவினைத்***
***தீராமை ஆர்க்கும் கயிறு" (குறள்.482).***

எண்ணிய முடிதல் வேண்டும், நல்லவே எண்ணல் வேண்டும். ஒரு மனிதனுக்கு முடியாத காரியம் என்பது ஒன்று உலகில் இல்லை. ஒரு நிமிடத்திலுள்ள அறுபது நொடிகளையும் நம்மில் பலர் முழுவதுமாகப் பயன்படுத்துவது இல்லை. இவ்வாறு வீணாகும் நொடிகள் சேர்ந்து இழந்த நிமிடங்கள் ஆகின்றன. இழந்த நிமிடங்கள் சேர்ந்து இழந்த மணிகள் ஆகின்றன. இழந்த மணிகள் இழந்த நாள்களாகவும், நாள்கள் ஆண்டுகளாகவும், ஆண்டுகள் பயனற்ற வாழ்நாளாகவும் ஆகின்றன. அத்தகைய வாழ்நாளில் செய்து முடிக்கப்படாமல் பல விசயங்கள் நின்று விடுகின்றன. நம்மைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்திக்கொண்டு ஒவ்வொரு வேலைக்கும் அதன் முக்கியத்துவத்துக்கு ஏற்ப நேரம் ஒதுக்கி செயல்பட்டால் பல வேலைகளை நாம் முடிக்க முடியும். எந்த எந்தக் காரியங்களை எந்த எந்தக் கருவியால் எந்த எந்தக் காலத்தில் செய்து முடிக்க முடியும் என்பதை ஆராய்ந்து, தக்க காலத்தில் தக்க கருவியுடன் செய்தால் எந்தக் காரியத்தையும் செய்து முடிக்க முடியும்.

***"அருவினை என்ப உளவோ, கருவியான்***
***காலம் அறிந்து செயின்.'' (குறள்.483)***

கருவி இருப்பது ஒன்று மட்டுமே வெற்றிக்கு உத்திரவாதம் ஆகாது. தக்ககாலம் அறிந்து கருவிகொண்டு செயல்பட்டால், வெற்றிபெற முடியாத அரிய செயல் என்பது எதுவும் இல்லை.

காலங்கருதிச் செயல்பட்டால் ஞாலத்தையும் பெறலாம். திட்டமிட்டும் காலங்கருதியும் இருந்தால் கலங்காது கருதிய வழியே வெற்றி பெறமுடியும் என்பதை செய்யத் தகும் செயல்களை ஒருவன் ஏற்ற காலமும் தக்க இடமும் ஆராய்ந்து செய்தால் உலகத்தையேகூட வெற்றி கொள்ள முடியும். மேலும் குறி தப்பாது உலகைத் தம்வயமாக்கத் திட்டமிடுபவர். தம்மிடம் அனைத்துப் பலங்களும் இருப்பினும் அவற்றை மட்டும் கருத்தில் கொள்ளாமல் ஏற்ற காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பர். தோல்வி ஏற்படும்போதும் எரிகின்ற விளக்கைப் போல நடுக்கமுறாது, எழுதிய விளக்கைப் போல நிலை பெற்றிருக்க வேண்டும். மலைப் போலத் துன்பம் வந்தாலும் நிலை

கலங்காது நிற்கும் திறமை வேண்டும். மேலும் வாய்ப்புகள் கிடைப்பது அருமை. தக்ககாலத்திலே இதனைச் செய்து முடித்தல் வேண்டும் என்பதனை வள்ளுவர்,

***"எய்தற்கு அரியது இயைந்தக்கால், அந்நிலையே***
***செய்தற்கு அரிய செயல்" (குறள்.489).***

என்று காலத்தின் அருமையினை விளக்குகின்றார். காலமும், சூழ்நிலையும் யாருக்காகவும் காத்திருக்காது. எனவேதான் அவற்றை பெற்ற ஒருவர் உடனே செயலாற்ற வேண்டும். மனிதன் தனது ஆற்றல் அறிவு முதலியவற்றால் வேறு எந்த அரிய பொருளையும் உண்டாக்கிக் கொள்ளலாம். ஆனால் காலத்தை மட்டும்தான் வேண்டும் போது உண்டாக்கிக் கொள்ள அவனால் முடியாது. எனவே எதிர்பாராமல் தன்னை வந்து அடையும் காலத்தை நன்கு பயன்படுத்திச் செய்ய வேண்டிய அரும்பெரும் காரியங்களை எல்லாம் செய்து முடிக்க வேண்டும். காலம் அறிந்து கருத்துடன் காரியங்களைச் செய்தால் உலகத்தையே வென்றுவிடலாம் என்பது வள்ளுவரின் வாய்மொழி.

## கால அறிவியல்

காலம் அறிந்து கருத்துடன் காரியங்களைச் செய்தால் உலகத்தையே வென்றுவிடலாம் என்பது வள்ளுவரின் வாய்மொழி. எவ்வாறு காலம் வரும் வரையில் காத்திருப்பது என்று கேட்டால் கொக்கைப் போய்ப் பார் என்று கூறுகிறது திருக்குறள். எவருக்கும் நல்ல காலமும் கெட்ட காலமும் வருவது இயற்கை. கெட்ட காலம் என்று அறிவு வலியுறுத்துகின்ற போது பேசாது பொறுமையாக இருக்க வேண்டும். ஆனால் காலம் மாறிச் சாதகமாகும் போது, உடனே செயலில் இறங்கி வெற்றிபெற வேண்டும். அத்தகைய காலத்தைக் கணிக்கும் நுட்பத்தை வள்ளுவர்,

***"நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்***
***வாளாது உணர்வார் பெறின்" (குறள்.334)***

என்னும் குறிளில் தெளிவுற விளக்கியுள்ளார். இக்குறளில் பயின்று வரும் அறிவியல் நுட்பம் பற்றி ந.சுப்புரெட்டியார் புத்துரை வடிவில் விவாதித்துள்ளார். காலத்தைக் கணக்கிடும் முறையை ஆழ்வார்தம் பாசுரங்கள் வழியாகவும் விளக்குகிறார். அளவைகளான முகத்தல், நீட்டல் அளவைகள் போன்று காலத்தை அளக்கும் கருவி செயல்படாது. காலத்தைக் கணக்கிடும் கருவி என்பது அறிவியலின் மிக நுண்ணிய வளர்ச்சியின் வெளிப்பாடு. பிற அளவைகள் போன்று அளக்கவோ முகரவோ முடியாதது. காலத்தோடு இயைந்து செல்லும் கருவியாக, அரூபமாக அளப்பது என்கிறார். கால நுட்பத்தை, "பல்வேறு வடிவினவாகத் தோன்றக் கடவதாய், ஆதி அந்தம் அற்றதாய் இறைவனுடைய சரீரமாக அமைத்து (சரீர - சரீரபாவனை) இருப்பது கால தத்துவம்" என்று விளக்குகிறார். (ந.சுப்புரெட்டியார், வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள், அறிவியல் நோக்கு, பக்.81-82)

மனித வாழ்க்கையில் பல சிக்கல்களுக்குள் காரணமாக அமைவதும் காலம்தான். சிக்கல்களுக்குத் தீர்வாக அமைவதும் காலம்தான். நேரம் என்பது நமக்கு அன்றாடம் தேவைப்படும் ஓர் அரிய வளமாகும். நேரம் அதிகமாக இருந்தால் திட்டத்தைத் தெளிவாகத் தீட்டவும், பல்வேறு மாற்று வாய்ப்புகளை அலசித் தீர்வுகளைக் காணவும், அவற்றை மறுபடியும் மீளாய்வு செய்யவும், சிக்கல் தீர்வுக்கு நிதானமான, தரமான போக்கைக் கடைபிடிக்கவும் முடியும். காலம் காத்திருப்பவருக்கு மிக மெல்லவும், அஞ்சுபவருக்கு மிக விரைந்தும் துன்புற்றவருக்கு மிக நீண்டும், இன்புற்றவருக்கு மிக குறுகியும் செல்கிறது. சிறந்த நோக்கத்தைத் திட்டமிட்ட வழியில் நிறைவேற்ற வேண்டுமென்றால் நேரத்தைச் சேமிக்கும் வழிகளைக் கண்டு செயல்பட்டால் குறைந்த நேரத்தில் அதிக அளவில் பயன்பெற முடியும்.

நேரத்தைச் சேமிக்கும் வழிகளைக் கண்டு செயல்பட்டால் குறைந்த நேரத்தில் அதிக அளவில் பயன்பெற முடியும். நேரத்தைப் பயனாக்கும் எண்ணம், நேர நிர்வாகப் பயிற்சியை மேற்கொள்ளல், திட்டத்திற்குரிய கால அளவு, (நீண்ட, குறுகிய, நிகழ்) பணிகளைக் காலத்தோடு ஒப்பிட்டு முடிவு செய்தல் என இந்த வழிமுறைகளில் செயல்பட்டால் எப்படி பணியில், வாழ்க்கையில் வெற்றி பெறலாம். காலத்தை அளக்கும் முறை பற்றி, தற்கால அறிஞர்கள் கூறியதை விடவும் மிகவும் தெளிவாகத் திருக்குறள் எடுத்துரைத்துள்ளது என்பதை ந.சுப்புரெட்டியார் புலப்படுத்துகிறார்.

# 49. தலைநாள் கொண்ட கோலங்கள்

**முனைவர் இரா. ஜெகதீசன்**
*பேராசிரியர், தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*சேர்க்காடு, வேலூர் - 632115*

## முன்னுரை

வைணவ இலக்கியங்களில் ஆழங்கால்பட்ட பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்களின் வைணவ வியாக்கியானத்திற்கு பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் எழுதிய அஷ்ட பிரபந்தத்தில் ஒரு பாசுரமே ஒளிவிளக்காக அமைந்துள்ளது. இதனை எடுத்து உரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இறுதியாகச் சேர்க்கப்பட்டவை பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் அஸ்டபிரபந்தங்கள். இப்பிரபந்த பாசுரம் ஒன்றில், அண்டங்களின் அமைப்பையும், அவை விண்வெளியில் சுழலும் அற்புதத்தையும் மற்றொரு கோணத்தில் காண்கிறார். ஐயங்கார்,

***"ஞாலத்திகிரி முதுநீர்த் திகிரி***
***நடத்தும் அந்தக்***
***காலத்திகிரி முதலான யாவும்***
***கடல்க டந்த***
***நீலத்திகிரி அனையர், அரங்கார்***
***நிறைந்த செய்கைக்***
***கோலத்திகிரி தலைநா ளினில்***
***கொண்ட கோலங்களே"***

இப்பாசுரத்திலுள்ள திகிரிகளை முதலில் எவை எவை எனச்சுட்டி இப்பாடலின் இறுதியில் அரங்கர் இறைவனாகின்றார் என்று முடிக்கின்றார்.

## ஞாலத்திகிரி

பூமியின் சுற்றளவு 25000 மைல். இவ்வளவு பெரிய உடம்பைத் தூக்கிக் கொண்டு மனோ வேகத்தில் சுற்றிக் கொண்டுள்ளது பூமி. சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் உள்ள தூரம் ஒன்பது கோடி மைல். தான் சுற்றுவதும் அல்லாமல் சூரியனையும் சுற்று வழியில் சுற்றி வருகின்றது. பூமி இந்தச் சுற்று வழியின் சுற்றளவு 54 கோடி மைல். ஒரு முறை சுற்ற ஓராண்டாகின்றது. பூமியைப் போலவே பல அண்டங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியனும் அதன் பரிவாராமான செவ்வாய், புதன், முதலான கோள்களும் எட்டாத வெட்ட வெளியில் சுற்றிக் கொண்டுள்ளன. இதைப் போலவே எத்தனையோ சூரியன்கள் உடுக்கள் போல் காட்டிக் கொண்டு

வானவெளி சுற்றுவழியில் சுற்றிக் கொண்டேயுள்ளன. ஒரு கணக்குப்படி சுற்றுகின்றன. இவ்வாறு சலியாது சுற்றும் அண்டங்களும், பிரம்மாண்டங்களும், கவிஞர் மனக்கண்ணுக்கு உருளைகள் அல்லது சக்கரங்கள் போல் தோன்றுகின்றன. இந்த பேரண்ட சக்கரம் தான் 'ஞாலத்திகிரி' பூமிச் சுற்றும் போது அத்துடன் சூழ்ந்துள்ள காற்று மண்டலமும் சேர்ந்தே சுற்றுகின்றது என்பது அறியத்தக்கது.

## முதுநீர்த்திகிரி

ஒவ்வோர் அண்டத்துடன் அவ்வண்டத்தில் உள்ள பொருள்களும் உருமாறிச் சுற்றுகின்றன. எடுத்துக்காட்டாக கடல் நீர்- நீராவி- மேகம், மழை - ஆறு என்று மாறி கடலுடன் கலக்கின்றது. மீண்டும் ஆவி - மேகம் - மழை - ஆறு - கடல் என்று சக்கரம் சுழல்கின்றது இவ்வாறு கடல் நீர்ச் சுற்றுவதை 'முதுநீர்த்திகிரி' என்கின்றார் ஐயங்கார். (முதுநீர் - கடல்நீர்) இந்த சக்கரத்தைப் போலவே கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்று பருவச் சக்ரங்களும் பிறப்பு- இறப்பு- என்ற சக்கரங்களும் சுழன்று வருகின்றன.

## கோலத்திகிரி

இது கண்ணுக்கு தெரியாதச் சக்கரம். இதுவே ஞாலத்திகிரி, முதுநீர்த் திகிரி முதலியவற்றை இயக்கும் ஓர் அற்புதத் திகிரி. இதுவே மூலத்திகிரி ஒரு கடிகாரத்தில் உள்ள பல சக்கரங்களை வில்லோடு இணைத்துக் கொண்டும் சுற்றிக் கொண்டிருக்கும் மூலச் சக்கரம் போன்றது இது. கண்ணுக்குப் புலப்படாத இந்த காலத்திகிரி தான் இந்த உலகத்தில் பல்வேறு அற்பதங்களை நிகழ்த்துகின்றது. மிகப்பெரிய ஆலமரம் அடையாற்றில் உள்ளது போன்றது - ஒன்றைக் காண்கின்றோம். அதன் வயது 250 ஆண்டுகள் இருக்கலாம். 250 ஆண்டுகளுக்கு முன் அது ஒரு சிறு ஆல விதையில் ஒளிந்து கொண்டிருந்தது. காலச்சக்கரம் சுழன்று, சுழன்று விதையில் ஒளிந்து கொணடிருந்த ஆலமரத்தை மெல்ல மெல்ல இழுத்து வெளிக்கொணர்ந்து விட்டது. இந்த அகிலத்தில் நடைபெறும் நிகழச்சிகள் யாவும் காலச்சக்கரத்தின் சுழற்சியால் வெளிவந்ததே. ஆகவே நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டும் சூத்திரங்களாக இருப்பது காலமென்ற திகிரி எனலாம் இதனையே சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

***"ஞாலத்திகிரி முதுநீர்த் திகிரி***
***நடத்தும் அந்தக்***
***காலத்திகிரி முதலான யாவும்".***

என்று பாடினார்.

## நீலத்திகிரி

இவர் திருவரங்கத்தில் பள்ளிக் கொண்டிருக்கும் பெருமாள் பாற்கடலைக் கடந்த போது ஒரு நீலமலையை மத்தாக வைத்துக்

கடைந்தார் அவர். அந்த மத்தைப் போல நீலமேனி உடையவர் நம் அரங்கர். அரிதுயில் கொண்டிருக்கும் அரங்கர் ஒரு நியதி கோலத்தைப் போட வேண்டும் அதற்கு அடங்கிப் பேரண்ட உருளைகள் உருள வேண்டும் என்று தீர்மானித்ததார்.

## கோலத்திகிரி

இஃது அரங்கர் கையிலிருக்கும் சுதர்சனம் என்னும் அழகிய சக்கரம். அரவாழி ஆழ்வான் என்றும் இதனைச் சொல்லுவர். இஃது அவர் கையை விட்டுப் பாய்ந்த மரம் நடுபவர் முதலில் போடும் கோலப்புள்ளிகள் போல உலகப் படைப்புக் காலத்தில் புள்ளிகள் போட்டது. அந்தக் கோலத்தில் காலத்திகிரி பயபக்தியோடு உருண்டு சென்றது. காலத்திகிரியினின்றும் பிறந்து கடிகாரச் சக்கரங்கள் போல் அதோடு இணைந்து நிற்கும் ஞாலத்திகிரி, முதுநீர்த்திகிரி முதலிய திகிரிகளெல்லாம் நியதி தவறாமல் தொடர்ந்து சுழன்றன. இத்திகிரி தொடர்களைக் கற்பனையில் கண்டு உள்ளம் பூரிக்கின்றார் கவி. அந்தப் பூரிப்பில் தோன்றியதுதான் மேற்குறிப்பிட்ட கவிதை. கூர்தல் அறக்கொள்கை அய்யங்கார் சிந்தையில் - சிந்தனையில் ஓர் அற்புதக் கவிதையாக மலர்ந்த விட்டதைக் கண்டு வியப்பெய்துகின்றோம். அதைப் படித்து சுவைக்கின்றோம். மனத்தில் நினைத்து அசை போடுகின்றோம். இதுவே உலகப் படைப்பின் முறைமையைக் காட்டும் அற்புதக் கவிதையாகத் திகழ்கின்றது.

அண்டங்களின் ஒழுங்குமுறையை பாரதியார் முகர்ந்து தமது கவிதையில் வெளிப்படுத்துவதையும் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

***“விண்டு ரைக்க அரிய அரிதாய்
விரிந்த வான வெளியென - நின்றனை
அண்ட கோடிகள் வானில் அமைத்ததனை
அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை
மண்டலத்தை அணுஅணு வாக்கினால்
வருவ தெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைததனை
கோல மேநினைக் காளியென் றேத்துவேன்”***

அண்டங்களுக்கு இடையேயுள்ள தொலைவுகளையும் கற்பனையாகக் கணக்கிட்டுக் காட்டுகின்றார் பாரதியார். புறமுக ஆற்றல் என்ற இறைவனது ஆணையினால் இக்கோள்கள் ஒன்றையொன்று விலகாமல் சுற்றிக் கொண்டு உள்ளன. ஒவ்வொரு கோள்களுக்கு இடையிலும் ஆயிரக்கணக்கான மைல்கள் இடைவெளி இருப்பினும் அவ்விடைவெளியில் எறி மீன்களையும், வால்மீன்களையும் காண முடிகிறது என்று ந.சுப்புரெட்டியார் தன்னுடைய ஆழ்ந்த விண்வெளி ஆய்வினை விளக்குகின்றார்.

இதே செய்தியைத் திரிகூடராசப்பக் கவிராயர் ஒரு பம்பரம் கயிற்றின் துணையின்றி எவ்வாறு சுற்றுகின்றதோ அதைப் போல

இந்த அண்டங்கள் சுழலுகின்றன. அதனை குற்றாலத்து குறைகழல் ஈசன் செய்து கொண்டிருக்கிறார் என்று ஒப்பிட்டுக் காட்டுவதைக் காணமுடிகிறது.

***"சாட்டி நிற்கும் அண்டமெலாம்***
***சாட்டையிலாப் பம்பரம்போல்***
***ஆட்டு விக்கும் குற்றாலத்து***
***அண்ணலார்"***

## முடிவுரை

வைணவ பிரபந்தமாகிய அஷ்டபிரபந்த பாசுரத்தில் இருந்து ஓர் பாடலை அண்டங்களின் முறைமைகளைக் கூறுவதாக மிக நீண்ட விளக்கத்தைப் பேராசிரியர் ந. சுப்புரெட்டியர் அளித்திருப்பது வியக்கத்தக்கதாய் உள்ளது. ஞாலத்திகிரி, முதுநீர்த்திகிரி, காலத்திகிரி, நீலத்திகிரி, கோலத்திகிரி என பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் மிகச் சுருக்கமாக அண்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள நிலையில் பேராசிரியர் மிக நீண்ட விளக்கங்களை அறிவியல் பார்வையுடன் அளித்திருப்பது அவரது அறிவியல் சிந்தனைக்குச் சான்றாக விளங்குகிறது.

# 50. ந.சுப்புரெட்டியார் பார்வையில் பட்டினத்தடிகள்

**முனைவர் மு. நாகராஜன்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

பதினொராந் திருமுறையில் சில பிரபந்தங்களை அருளியுள்ள திருவெண் காட்டடிகளையும் **"பட்டினத்தார் பாடல் திரட்டு"** என்ற நூலில் காணப்பெறும் பனுவல்களைப் பாடிய அருளாளர் ஒருவரையும், வேறு சில பாடல்களைத் தந்த பெரியார் ஒருவரையும் பட்டினத்தார் என்றே தமிழுலகம் வழங்கி வருகிறது. தமிழ் கூறும் நல்லுகிற்குப் பட்டினத்தாரின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்த பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் அதனைத் தமது சீரிய முயற்சியின் வாயிலாக நூலாகப் பதிவாக்கம் செய்துள்ளமை சிறப்பிற்குரியது. தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்னும் நாமக்கல் கவிஞரின் பாடலுக்குத் தகுந்தாற்ப் போல் பட்டினத்தார் விளங்குகிறார். நிலையற்ற வாழ்விலே நிலையான இன்பத்தைப் பெறுவதற்கு நமக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்.

## அரிது

***பாரனைத்தும் பொய்யெனவே- பட்டினத்துப்***
***பிள்ளையைப் போல், ஆரும் துறத்தல் அரிது அரிது***

என்னும் பாடலில் இரண்டு செய்திகள் பதிவாக்கப்பட்டுள்ளது. பட்டினத்தாருக்குப் பிள்ளையார் என்ற திருநாமம் உண்டு. அவர் மிகப் பெருஞ்செல்வம் உடையவராயிருத்தல் இயல்பு. அவர் ஒரு கணத்தில் அச்செல்வத்தை வெறுத்துத் துறந்தவர் என்பது மேலுள்ள பாடல் அடிகளில் அறிய முடிகிறது. செல்வம் உடையவன் அதனைத் துறந்து வாழ்தல் என்பது நமக்கு மன அமைதியை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

***"..... சராசரம் அனைத்தும்***
***நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும் நீ***
***ஒன்றினும் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்"***

என்னும் பாட்டு அடிகட்கு முதற்காரணமும், நிமித்த காரணமும், முதல்வனே என்று கொள்ளும் விசிட்டாத்து வைதசி வாத்து வைதக் கொள்கைப்படி மயங்கிப் பொருள் கொள்ளலாகாது என்று காட்டிச் சைவ சித்தாந்தக் கொள்கைப்படி விளக்கம் கொடுத்துள்ள பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களின் புலமை நலம் பாராட்டத்தக்கது.

இவ்வரிகளில் அனைத்தும் இறைவனின் கருணையால் விளைகிறது என்பதை நமக்கு உணர்த்துகிறார் ஆசிரியர். நம்முடைய செய்கை என்பது உழைப்பே என்பதை உணர்ந்து இறைவனைச் சரணடையுங்கள்.

காமமும் பசியும் யானை முதலாக எறும்பீறாகவுள்ள யோனி, பேதம், அத்தனைக்கும் உள்ள உணர்வுகளில் காமம், உயிர்த்தொகுதி, இடையறவு படாமல் காக்கும் உணர்வு பசியோ உடலில் உயிர் நீட்டித்தலைச் செய்வது, விலங்கு முதலிய அஃறிணைகளுக்கு இவ்விரண்டும் உணர்வுகளாகவே இன்றளவும் நீடிக்கின்றன. மனிதன் காமம், பசி இரண்டிற்கும் நிறைவு காண்பதைக் கலையாகவே வளர்த்திருக்கிறான். இரண்டையும் துய்ப்பதில் வரையறை இல்லாதவனாக இருப்பதே பல சமுதாயச் சிக்கல்களுக்கும் காரணமாக உள்ளது என்பதைக் கூறுகிறார் ரெட்டியார்.

பட்டினத்தார், பட்டினத்தடிகள், பட்டினத்துப் பிள்ளையார், திருவெண்காடர் திருவெண்காட்டடிகள் என்றெல்லாம் வழங்கப் பெறும் இப்பெருமகனார் பூம்புகார் என்று வழங்கப்பெறும் காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் அவதரித்தவர். இலிங்கமாக மாறி இவர் திருக்கோயில் கொண்ட இடம் திருவொற்றியூர். இன்றும் சென்னை வாழ் நகரத்தார் தங்கள் இல்லத்தில் யாரேனும் சிவப்பேறு அடைந்தால் அவருக்குரிய எல்லாச் சடங்குகளும் திருவொற்றியூரில் செய்யப் பெற்று வருவது நடைமுறையில் இருந்து வருகிறது என்பதை இந்நூல் வழி அறிய முடிகிறது.

## பட்டினத்தார் புராணம்

பட்டினத்துப் பிள்ளையார் திருவெண்காட்டில் வாழ்ந்தார். சிவசருமர் என்ற சிவவேதியர் மணம் முடிக்கப் பொருள் இன்றி வருந்தினார். இறைவன் ஓர் இளம் பிள்ளையாக அவர் வசம் வந்து தம்மை விலைக்கு விற்றுப் பொன் பெற்று மணம் செய்து கொள்ளுமாறு பணித்தார். அப்பிள்ளையைத் திருவெண்காடர் ஆயிரம் பொன் கொடுத்து விலைக்கு பெற்றுச் சென்றார். இப்பிள்ளையைச் சொந்தப் பிள்ளையாகவே கருதி மருதவாணர் என்ற பெயரிட்டு வளர்த்து வந்தார். அப்பிள்ளை இறைவன் திருஉரு ஆதலால் திருவெண்காடர் இல்லத்தில் பல அற்புதங்களை நிகழ்த்தியது. அவற்றைக் கண்ட திருவெண்காடர் அப்பிள்ளையை இறைவன் வடிவமே என்று கருதி மிக்க பணிவுடன் வளர்த்து வந்தார். அவர் திருவெண்காடருக்கு உலக வாழ்க்கையின் பற்றை ஒழிப்பதற்காகச் செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. ஆகவே ஒரு நாள் மருதவாணர் காதற்ற ஊசியை நூலோடு சேர்த்து ஒரு பட்டுத் துணியில் பொதிந்து அதை ஒரு அழகானப் பெட்டியில் வைத்து முத்திரையிட்டு திருவெண்காடரிடம் கொடுக்கும்படித் தம் அன்னையாகிய பட்டினத்தார் மனைவியிடம் தந்து மறைந்தார்.

மருதவாணரைக் காணாத திருவெண்காடர் அவர் தந்த அப்பெட்டியைப் பெற்று அதனைத் திறந்து பார்க்க அதிலுள்ள காதற்ற

ஊசியும் நூலும் கண்ணில் பட அந்தக் கணமே அவரிடத்தில் பரஞானம் விளங்கப்பெறுகின்றது. வீடு, மனைவி முதலிய அனைத்தையும் துறந்தார். இவரிடம் அமைச்சராயிருந்த சேந்தனார் எவ்வளவோ சொல்லியும் பயன்படவில்லை. அவை விழலுக்கு இறைத்த நீர் போலாயிற்று. இங்ஙனம் துறந்த கோவணாண்டியான பட்டினத்தார் சுடுகாட்டில் சாம்பல் குவியலின் மீது அமர்ந்திருக்க அந்நாட்டரசன் இவரைக் கண்டு பணிந்து இத்துறவம் அடைந்து நீர் பெற்றது என்று என வினவ இவர் நீ நிற்க யாம் இருக்க என்று எளிதாக மறுமொழி பகன்றார்.

பட்னத்தடிகள் பல இடங்களில் பிச்சையேற்று உண்டு வரும் நாளில் இவர் செயல் தங்களுக்கு அவமானம் தருவதாகக் கருதிய அவருடைய உறவினர்கள் நஞ்சூட்டிய நெய்யப்பம் ஒன்றை இவர் தமக்கை மூலம் உண்ணக் கொடுத்தனர். உண்மையை உணர்ந்த அடிகள் தன் வினைத் தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்று சொல்லி அதனைக் கூரையில் செருகவே வீடும், ஊரும் தீப்பற்றி எரிந்து சாம்பலாயின.

## நிலையாமை

இறைவனை நினைத்து வழிபடாது தமது வயிறு வளர்த்தற் பொருட்டுப் பிற உயிர்கட்குத் தீங்கு செய்து வாழ்வோர் உலக நிலையாமையைச் சிறிதும் உணராதவர்களாவர். இதனை விளக்கும் போக்கில்

*“நஞ்சுமிழ் பருவாய் வெஞ்சின் மாசுணம்*
*தன் முதல் முருக்க நென்முதல் சூழ்ந்த*
*நீர்ச்சிறு பாம்பு தன் வாங்கெதிர் வந்த*
*தேரையை வவ்வி யாங்கி யாம் முன்*
*கருவிடை வந்த ஒரு நாள் தொடங்கி*
*மறவர் மறலி முறைபிறழ் பேழ்வாய்*
*அயில் தலை அன்ன வயிற்றிடைக் கிடந்தாங்கு*
*அருள்நனி இன்றி ஒரு வயிறு ஓம்பற்குப்*
*பல்லுயிர் செகுத்து வல்லிதின் அருந்தி*
*அயர்த்தனம் இருந்தும் போலும் பெயர்த்து நின்று*
*எண் தோள் வீசிக் கண்டோர் உருகத்*
*தொல் எயில் உடுத்த தில்லை மூதூர்*
*ஆடும் அம்பலக் கூத்தனைப்*
*பாடுதல் பரவுதல் பணிதலே இலமே”*
*(பட்டினத்தடிகள் ப.26)*

பட்டினத்தடிகளின் பாடலடிகள் உள்ளன.

நஞ்சு உமிழ் பெருநாகம் ஒன்றின் வாயில் சிக்கிய நிலையில் உள்ளது ஒரு நீர்ப்பாம்பு. இந்நீர்ப்பாம்பு தன் வாய்க்கெதிரில் வந்த தவளையைக் கவ்வுகின்றது. இந்நிலையை ஒத்துள்ளது நம்நிலை.

நாம் அன்னையின் கருவினின்று வெளிப்பட்ட நாள் தொட்டு கூற்றுவனது வாயில் அகப்பட்டுக் கிடக்கின்றோம் என்கிறார் பட்டினத்தடிகள்.

இறைவனாகிய மெய்ப்பொருளை உணர முற்பட்டு உயர்ந்த நான்முகன் முதலாக அறியாமையாகிய இருளொடு ஒற்றித்து நின்று யாக்கையுட்பட்டு வாழும் எல்லா உயிர்களும் உருவம், உணர்வு, பெருமை, ஆற்றல், செல்வம், வன்மை, செய்யும் தொழில் வகை ஆகியவற்றால் வேறுபட்டனவாகி வினைத்தொடர்பினின்றும் நீங்காது ஒன்றையொன்று ஒவ்வாதனவாய்க்கூடி நிற்பது இவ்வுலகத்தொகுதி. இதன் கண் வாழும் உயிர்களின் ஒழுகலாறுகள் நிலைபெற்ற பெருங்கடலுள் உயர்ந்து தோன்றும் அலைகளைப்போன்று இறைவனாகிய முழுமுதற் பொருளை ஆதாரமாகக் கொண்டு தோன்றி அப்பொருளிலே ஒடுங்கும் நிலைபெற்றது.

பிறவியைப் பழித்து செம்பொன் அம்பலவனை நினைமின் மனனே என்று உபதேசிப்பது சிறந்தது. அவனே எல்லாம் உணருங்கள்.

*“பிறந்தன இறக்கும் இறந்தன பிறக்கும்*
*தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்*
*பெருத்தன சிறுக்கும் சிறுத்தன பெருக்கும்*
*புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்*
*அருந்தின மலமாம் புனைந்த அழுக்காம்*
*உவப்பன வெறுப்பாம் வெறுப்பன உவப்பாம்”*
*(பட்டினத்தடிகள் ப.64)*

இவை பிறப்பின் இழிவினை எடுத்து ஓதுவன. மனித வாழ்வு தவம் என்கின்றனர் சிலர். ஆனால் சீனாவிலே குழந்தைப் பிறந்தால் அனைவரும் அழுவார்களாம். ஏனெனில் இப்பிறவியல் துன்பப்படப்போகிறாயே என்ற காரணமாம்.

## உடலின் நிலையாமை

*“நாறும் உடலை நரிப்பொதி*
*சோற்றினை நான் தினமும்*
*சோறும் கறியும் நிரப்பிய பாண்டத்தைத் தோகையர்தம்*
*கூறும் மலமும் இரத்தமும்*
*சோரும் குழியில் விழாது*
*ஏறும் படி அருள்வாய் இறை*
*வா கச்சி ஏகம்பனே”* *(பட்டினத்தடிகள் ப.75)*

என்று உடலின் இழிநிலையை எடுத்துக்காட்டுகிறார். அழியும் உடலை சிந்திக்காதீர்கள் வாழ்வது ஒரு முறை தான் நன்மை செய்யுங்கள்.

## பெண்களை இழிவுபடுத்துவது

*காது என்று மூக்கு என்று கண்என்று*
*காட்டி என்கண் எதிரே*
*மாது என்று சொல்லி வரும் மாயை*

***தன்னை மறலிவிட்ட***
***தூது என்று எண்ணாமல் சுகம் என்று***
***நாடும் இத் துர்ப்புத்தியை***
***ஏது என்று எடுத்துரைப்பேன் இறை***
***வா கச்சி ஏகம்பனே'' (பட்டினத்தடிகள் ப.80)***

பெண்களின் வாயிலாகவே மனித வாழ்வு வளமும் நிறைவும் பெறுகிறது. சிற்றின்பம் காரணமாக அவர்களை பயன்படுத்தும் ஆண்களை மிகவும் கடுமையாகச் சாடுகிறார்.

## நாறும் உடல் மீது மோகம்

உடலைப்பற்றி வேறொரு விதமாகவும் சிந்திக்கின்றார். நாறும் உடல் மீது மோகம் வைத்திருப்பது குறித்து,

***“சீயும் குருதிச் செழுநீர்***
***வழும்பும் செறிந்து எழுந்து***
***பாயும் புடைவை ஒன்றில்லாத***
***போது பகல் இரவாய்***
***ஈயும் எறும்பும் புகுகின்ற***
***யோனிக்கு இரவு பகல்***
***மாயும் மனிதரை மாயாமல்***
***வைக்க மருந்து இல்லையே'' (பட்டினத்தடிகள் ப.101)***

என்று தமது மன வேதனையை எடுத்துரைக்கின்றார். சமுதாயத்தை நல்வழியிலே செலுத்த வேண்டும் என்ற தமது கருத்தினை இப்பாடல் வாயிலாக நமக்கு எடுத்தியம்புகிறார் ரெட்டியார்.

## முடிவுரை

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்பதை உணர்ந்து கூறினான் புத்தன். நாம் அனைவரும் வாழ்க்கை என்னும் பயணத்தில் பயணிக்கின்றோம். இந்தப் பயணம் நீர் மேல் எழுதும் எழுத்துப் போன்றது என்பதை உணராமல் விடைபெறுகிறோம். நம்முடைய முன்னோர்கள் தாமரை இலையில் உள்ள நீரினைப் போன்று பற்றில்லாமல் வாழ்ந்து நமக்கு வழிகாட்டினார்கள். நாம் அவர்களுடைய உன்னதக் கருத்துக்களை உணர்ந்து கொள்ளாமல் துன்பத்தில் சிக்கி, நம்மைச் சார்ந்தவர்களையும் துன்பப்படுத்துகிறோம். வாழ்க்கை என்பது தவம். நமது வினையும் இறைவனின் அருளும் நம்மைச் செலுத்துகின்றன என்பதை உணருங்கள். செல்வச் சீமானாக வாழ்ந்த பட்டினத்தார் அதனைத் துறந்து பரஞானம் பெற்றார் என்பதை ரெட்டியார் கருத்துக்கள் வழி உணர முடிகிறது. இதனை அறிந்து நல்வழியில் நமது பயணத்தை இனியாவது தொடங்குவோம்.

## துணை நின்ற நூல்

1) பட்டினத்தடிகள்- டாக்டர் ந.சுப்புரெட்டியார், முதல் பதிப்பு மே 2003, கலைஞன் பதிப்பகம், 19 கண்ணதாசன் சாலை, சென்னை- 600 017

# 51. பிரபந்தத்தில் ஆழ்வார்களின் பக்தி

**மு. பாண்டிச்செல்வி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்' தென்னாட்டில் வைணவப் பெருமக்களால் பெரிதும் போற்றப்படும் சிறந்த பக்திப் பனுவல், இதன் கவிதைச் சுவையும், பக்திச் சுவையும், அழகும் நுகர்ந்து நுகர்ந்து இன்புறத்தக்கவை. தமிழ் மக்கள் அனைவருக்கும் பொதுவுடைமையாகக் கொள்ளுதற்குரிய பெருந்தகுதி வாய்ந்தது. பக்திப்பாடல் என்ற நூல் வகையில் இதனைப் போன்ற பெருமையுடைய நூல்கள் இலக்கிய உலகில் மிக மிகச் சிலவற்றைத் தான் கருதுதல் கூடும். ஆழ்வார் பெருமக்கள் பன்னிருவரால் அருளிச் செய்யப் பெற்ற பாசுரங்களின் தொகுப்பே இப்பிரபந்தம். **"அருமறை துணிந்த பொருள் முடிவை இன்சொல் அமுது ஒழுகின்ற தமிழினில்"** விளம்பி அருளியவர்கள் தாம் ஆழ்வார் பெருமக்கள்.

ஆழ்வார்கள் பெருமாளை எப்படி அநுபவித்தர்கள். அவ்வநுபவ ஆனந்தத்தை வெளியிடுவதற்கு எத்தகைய உயர்ந்த பாசுரங்களைப் பயன்படுத்தினார்கள் என்பதை பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் தாம் எழுதிய நூல்களில் குறிப்பிட்டுள்ளார். வைணவப் பெரியவர்களாகிய பன்னிரு ஆழ்வார்களும் பாடியத் திருப்பாசுரங்களை ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறுதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வைணவ சமயக் கருத்துக்கள்

வைணவ சம்பந்தமான சம்பிரதா, சாத்திர, தோத்திர நூல்களை ஆழ்ந்து கற்றவர்கள் தாம் இலக்கியங்களில் ஆங்காங்கு ஒளிவிட்டுத் திகழ்ந்து கொண்டிருக்கும் சமய சம்பிரதாயக் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக்காட்ட இயலும். அப்பெரும்பணியைச் செய்துள்ளார் பேராசிரியர்.

## ஆழ்வார் திருவாக்கு

ஞானம் என்பது உலகில் பலவிதம்ளூ அளவை நூல் (தருக்கம்) படித்து வாதங்கள் செய்யத் தேர்ச்சி பெற்றவனும் தன்னை ஞானி என நினைக்கின்றான். ஆயுர்வேதம், மந்திரம், தந்திரம் முதலியவற்றில் கை தேர்ந்தவனும் தன்னை ஞானி என நினைத்துக் கொள்ளுகின்றான். இப்படி ஒவ்வொரு தகுதி பெற்றவனும் தன்னை ஞானி என நினைத்துக்

கொண்டால் உண்மையான ஞானம் எது? உண்மையில் ஞானி என்பவன் எவன்? என்கின்ற வினாக்களுக்கு சாத்திரங்கள் கூறும் விடை எம்பெருமானை அறிகின்ற அறிவு ஒன்று தான் ஞானம் எனப்படும் என்பதே ஆகும்.

***". . . ஒண் தாமரையான் கேள்வன்***
***ஒருவனையே நோக்கும் உணர்வு"***
***(உணர்வு-ஞானம், நோக்கும்-சென்று பற்றும்)***

என்பது ஆழ்வார் திருவாக்கு. உண்மையில் இறைவனையாவது, அவன் சாயல் அல்லது உருவத்தையாவது அறிந்து கொள்வது அருமை. இவற்றை அறிய முயலும் போது அறிவு அறியாமையாகி விடுகின்றது.

***'அறிதோறும் அறியாமை கண்டற்றால்'***

என்று இன்பத்திற்குக் கூறும் கூற்று இறைவனை அறிவதற்கும் பொருந்தும்.

## நம்மாழ்வார் பாசுரம்

***"சென்று சேர்திரு வேங்கட மாமலை***
***ஒன்று மேதொழ நம்விளை ஓயுமே"***

என்ற நம்மாழ்வார் பாசுரம் இக்கருத்திற்கு அரண் செய்வதாக அமைகின்றது. அசித்தின் பெயரைச் சொன்னவுடனேயே எம்பெருமான் மனம் மகிழ்ந்து நமக்கு திருவருள் பாவிக்கும் பெருமை பேசப் பெறுகின்றது.

பெரும்பாலும் திருக்கோயில்கள் அமைந்திருக்கும் இடங்கள் இயற்கைச் சூழ்நிலையில் மிக அழகாக அமைந்திருக்கும். அதனால் கவிஞர்கள் அங்குள்ள கருப்பொருள்களை வைத்துக் கொண்டே அழகிய காட்சிகளைச் சித்தரித்துக் காட்டுவார். சித்தும் அசித்தும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்திருக்கும். இந்த உறவினைச் ஷசரீர-சரீரி பாவனை என்று போற்றுவர் வைணவப் பெருமக்கள் அசித்தும் எம் பெருமான் படைப்பதாலால், அதுவும் வழிபாட்டிற்குரியது.

அனைவரும் பேசும் இனிய நாமம்

***"பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் சொல்லி நின்று,***
***பின்னரும் பேசுவார் தமை உய்யவாங்கிப்***
***பிறப்பறுக்கும் பிரானிடம் வாசமாமலர்***
***நாறுவார் பொழில் சூழ்தரும்,***
***உலகுக் கெல்லாம் தேசமாய்த் திகழும் மலைத்***
***திருவேங்கடம் அடை நெஞ்சமே!"***
***(திருமங்கை ஆழ்வார்)***

எல்லோராலும் சொல்லத்தக்கதும் நாவுக்கு இனியதுமான அஷ்டாக்ஷ ரத்தை (ஓம் நமோ நாராயணாய) சதா ஜபிப்போரை, ஈடேறும்படி

ஏற்று அவர்களது பிறவிச் சங்கிலியை அறுக்கும் எம்பிரான் உறையுமிடம், பூக்கள் வாசனையைப் பரப்பும் தோட்டங்களால் சூழப்பட்டதும், எல்லா உலகங்களுக்கும் ஒளியாய் விளங்குவதுமான திருவேங்கடமாகும். அப்படிப்பட்ட திருமலையை, மனமே, நீ சென்று அடைவாயாக!

**“ஓம்”** எனும் ப்ரணவத்துடன் கூடிய **“நமோ நாராயணாய”** என்கிற திருமந்திரத்தை அடிக்கடி ஜபம் செய்யுங்கள்.

## திருமண விழாக் கோலம்

***“வாரணமாயிரம் சூழவலஞ் செய்து***
***நாரண நம்பி நடக்கின்றான் என்றெதில்***
***பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்***
***தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ!***
***நான் - ஆண்டாள் கண்ட கனவு - ஆண்டாள்***
***என் உயிர்த் தோழியே!”***

ஸ்ரீ மந்நாராயணன் ஆயிரம் யானைகள் சூழ்ந்து வர, வலமாக எழுந்தருளுகிறானென்று, எதிரே பொன்னாலான பூர்ண கும்பங்களை வைத்து நாடெங்கும் தோரணக் கம்பங்கள் நாட்டுவதாகக் கனவு கண்டேன். 1. கண்ணபிரான் அலங்காரப் பந்தரின் கீழ் எழுந்தருளிக்கவும், 2) துர்க்கை என்ற நாத்தனார் தனக்குக் கூறைப்புடவை உடுத்த நறுமணம் மிக்க மலர் சூட்டவும், 3) அந்தணர்கள் காப்புநாண் கட்டவும், 4) மதுரையார் மன்னன் பாதுகைகளைச் சாத்திக் கொண்டு பூமியதிர வரவும், 5) தன்னைக் கைத்தல் பற்றவும், 6) தீவலம் செய்யவும், 7) அம்மி மதிக்கவும், 8) கண்ணன் கையின்மேல் தன் கையை வைத்துப் பொரிகளை அள்ளித் தெளிக்கவும், 9)மங்கல வீதி வலம் வந்து மஞ்சனம் ஆட்டவும் கனாக் கண்டதாக ஆண்டாள் தோழியிடம் கூறுவதாக உள்ளது.

## பாணர்குல விளக்கு திருப்பாணாழ்வார்

பாணர் குல விளக்காக திகழ்ந்தவர் திருப்பாணாழ்வார் பாணர்கள் என்பவர் யாவர்? சங்க காலத்திலிருந்தே இசைபாடி மக்களுக்கு இசைய முதூட்டி வாழ்ந்து வருபவர்கள். சங்க இலக்கியத் தொகுப்பில் ஒன்றாகிய பத்துப்பாட்டில் உள்ள சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை என்ற இரு பாட்டுகளும் இவர்தம் வாழ்க்கையைச் சித்திரித்து காட்டுகின்றன. இவர்களுடைய வாழ்க்கை இலக்கியச் சிறப்பு பெற்றுத் திகழ்வதைக் கண்டு மகிழ்கின்றோம்.

பாணர் குலத்து திருப்பாபணாழ்வார் திருவரங்கம் அருகிலுள்ள காவேரியின் தென்கரையிலுள்ள ஒரு காலத்தில் சோழப் பேரரசின் தலைநகரமான உறையூரில் திருவவதரித்தவர். இப்பெருமக்கள் நற்கலைகளான ஆடல் பாடல்களில் வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள். இவரை வேதாந்த தேசிகர் “**பாண் பெருமாள்**” என்றே சிறப்பித்துப்

பேசுவர். ஓர் அந்தணப் பெருமகன் கழனியிலே நெற்பயிர்க் கதிர்களைக்கிடையே கிடந்த குழந்தையே இந்தப் பாண் பெருமாள். இக் குழந்தை திருமால் அருளால் தோன்றியதால், வளர்ந்த பிறகு இயற்கையிலேயே உலகப் பற்றற்று எம்பெருமானுடைய திருவடித் தாமரைகட்கு தம் மனத்தை ஈடுபடுத்திக் கொண்டது.

***"கரு அரங்கத் துள்கிடந்து***
***கைதொழுதேன்; கண்டேன்***
***திருவரங்க மேயான் திசை"***

என்று பொய்கையார் கூறுவது போல் திருவரங்கப் பெருமானே இவருக்குத் தாரக, போஷக, போக்கியமாக அமைந்து விட்டான். எழு ஞாயிறு இருளை ஓட்டுவது போல், இருள் சக்திகளான அஞ்ஞானம், அதர்மம் முதலியவற்றை ஈசுரவ சக்தி ஓட்டிக் கொண்டிருப்பதாக உணர்ந்தார் இப்பரம ஞானி.

## மூவர் ஏற்றிய மொழி விளக்கு

முதலாழ்வார்கள் மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து அந்தாதிகள் அருளிச் செய்த திருக்கோவலூரை நினைந்து,

***"பாவரும் தமிழால் பேர்பெறு பனுவல்***
***புரவலர் பாதிநாள் இரவில்***
***மூவரும் நெருக்கி மொழி விளக்கு ஏற்றி***
***முகுந்தனைத் தொழுத நன் னாடு"***
***(முகுந்தன் - திருமால்)***

இந்த மூவரும் யாவர்

1) பொய்கையாழ்வார்
2) பூதத்தாழ்வார்
3) பேயாழ்வார்

## பொய்கையாழ்வார்

காஞ்சி மாநகரில் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சந்நிதியின் வடபுறத்தில் உள்ள பொற்றாமரைப் பொய்கையில் பூத்ததொரு நற்றாமரை மலரில் ஐப்பசித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் திருவவதரித்தார். பொய்கையால் அவதரித்தது காரணமாகப் பொய்கையாழ்வார் என்று திருநாமம் பெற்றார்.

## பூதத்தாழ்வார்

திருக்கடல் மல்லையில் (மாமல்லபுரம்) குருக்கத்திப் பந்தரில் ஒரு குருக்கத்தி மலரில் ஐப்பசித் திங்கள் அவிட்ட நட்சத்திரத்தில் அவதரித்தார். எம்பெருமானின் திருக்குணங்களை அநுபவித்தே சத்தைப் பெற்றார் என்னும் காரணம் பற்றியே பூதத்தாழ்வார் என்று திருநாமம் ஆயிற்று.

## பேயாழ்வார்

திருவல்லிக்கேணி என்னும் திவ்விய தேசத்திற்குத் தெற்கிலுள்ள மயிலாப்பூரில் ஆதிகேசவப் பெருமாள் கோயில் திருக்கிணற்றில் உண்டானதொரு செவ்வல்லி மலரில் ஐப்பசித் திங்கள் சதய நட்சத்திரத்தில் திருமாலின் நந்தகம் என்ற வாளின் கூறாக அவதரித்தார். இவர் ஒப்புயர்வற்ற பக்தியையுடையவர்.

பார்ப்பவர்கள் கண்ணில் **'இவர் பேய் பிடித்தவர்'** என்னும்படி நெஞ்சழிந்து கண் சுழன்று அழுதும் சிரித்தும் தொழுதும் மகிழ்ந்து பாடியும் அலறியுமே பொழுது போக்கிக் கொண்டிருந்தமையால் பேயாழ்வார் என்ற திருநாமம் பெற்றார்.

ஒரு நாள் இருந்தவிடத்தில் மற்றொரு நாள் இராமல் ஓடித் திரியும் யோகியர்களாய் இருந்த இவர்கள் தம்மிலும் ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சாரம் செய்து கொண்டிருந்தவர்கள் இம் மூவரையும் ஓரிடத்தில் சேர்த்து ஆட்கொண்டு இவர்கள் முகமாக உலகத்தை உய்விக்க வேண்டும் என்ற எண்ணம் எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் உண்டாயிற்று. இந்த எண்ணம் நிறைவேறிய இடம் திருக்கோவலூரில் மிருகண்டு என்பாரின் திரு மாளிகையில் உள்ள இடைகழி என்பதை நாம் அறிதல் வேண்டும்.

திருக்கோவலூர் நிகழ்ச்சிக்குப் பிறகு இவ்வாழ்வார்கள் மூவரும் திருப்பதிகள் தோறும் சென்று மங்களாசாசனம் செய்து யோகபலத்தால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இம்மண்ணுலகில் வாழ்ந்திருந்து வையகத்தினை வாழ்வித்தனர் என்பது வைணவர்களின் நம்பிக்கையாகும்.

துன்பம் நீங்க பாமாலை சூடினேன்

***"வையம் தகளியா வார்கடலே நெய்யாக***<br>
***வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய***<br>
***சுடராழியானடிக்கே சூட்டினேன் சொல்மாலை***<br>
***இடராழி நீங்குகவே என்று"***<br>
***பொய்கை ஆழ்வார் முதல் திருவந்தாதி***

பூமியை அகலாமாகவும், அதைச் சுற்றியுள்ள கடலே நெய்யாகவும், வெப்பக் கிரணங்களை வீசும் சூரியனே தீச்சுடராகவும், அழகிய ஒளிவீசும் சுதர்சனத்தைத் தரித்திருக்கும் பெருமானது திருப்பாதங்களில் பாமாலையாக சமர்ப்பித்தேன். பகவானின் சேவைக்கு கடல் போல் ஏற்படும் துன்பங்கள் நீங்க அருள்புரிய வேண்டும்.

## சரணாகதி (பூதத்தாழ்வார்)

***"பணிந்தேன் திருமேனி; பைங்கமலம் கையால்***<br>
***அணிந்தேனுன் சேவடிமே லன்பாய் - துணிந்தேன்***<br>
***புரிந்தேத்தி உன்னை புகலிடம் பார்த் தாங்கே***<br>
***இருந்தேத்தி வாழு மிது பூதத்தாழ்வார்."***

திருமாலே! உனது திருமேனியை சேவித்தேன். உனது ‘சிவந்த திருப்பாதங்களின்’ மீது அழகிய தாமரைப் பூக்களை அன்புடன் கையால் சமர்ப்பித்தேன். நீ பள்ளிகொண்ட இடமான திருப்பாற்கடலை நோக்கி, அதுவே நான் தஞ்சமடையும் இடமாக எண்ணிப் போற்றி வாழ உறுதி கொண்டுள்ளேன்.

## சகல நன்மையும் உண்டாகும் (பேயாழ்வார்)

*“தேசும் திறலும் திருவும் உருவமும்*
*மாசில் முடிப்பிறப்பும் மற்றவையும் - பேசில்*
*வயலம்புரிந்த வான் சங்கம் கொண்டான் பேரோத*
*நலம்புரிந்த சென்றடையும் நன்கு” (2291)*

## மூன்றாம் திருவந்தாதி

*“வலப்பகத்தில் சுழித்திருக்கும் சிறந்த சங்கான*
*பாஞ்சன்னியத்தை ஏந்தியுள்ள எம்பெருமானின்*
*திருநாமங்களைச் சொல்வோருக்கு, தேஜஸும்,*
*திறமையும், செல்வமும், அழகும், மாசற்ற*
*குலத்தில் ஜனனமும், மற்ற நன்மைகளும்*
*தாமே ஆசைபட்டு நல்ல விதத்தில் வந்தடையும்”*

## ஒப்பு நோக்கு

*“நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே*
*தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே*
*சென்மமும் மரணமும் இன்றித் தீருமே இம்மையை*
*‘இராம என் றிரண்டே’ முத்தினால்” (கம்பராமாயணம்)*

## தொகுப்புரை

இப்பன்னிரண்டு ஆழ்வார்களிலே முதலாழ்வார்கள் மூவரும் திருமழிசையாழ்வாரும் பரத்துமாகிய ஸ்ரீ மந்நாராயணனிடத்திலேயே ஈடுபாடு கொண்டவர்கள். பெரியாழ்வாரும், ஆண்டாளும் கிருஷ்ணாவதாரத்தில் மிக ஈடுபாடு கொண்டவர்கள். குலசேகராழ்வார் இராமவதாரத்தை மிகவும் அனுபவிக்கிறார். திருமங்கையாழ்வார், பகவான் அர்ச்சாவதார ரூபியாக எழுந்தருளியிருக்கின்ற திவ்யதேசங்களிலே மிகவும் ஈடுபாடு கொண்டவராக ஆறு பிரபந்தங்களை அருளிடச் செய்திருக்கிறார். திருப்பாணழ்வாரும், தொண்டரடிப் பொடி ஆழ்வாரும் **“அனந்த சயனனாக”** பகவான் பள்ளி கொண்டிருக்கும் திருவரங்கத்தில் மட்டுமே வெகு ஈடுபாடு கொண்டு அரங்கனின் மேல் திவ்யப் பிரபந்தங்களை அருளிச் செய்திருக்கிறார்கள். ஆழ்வார்களின் இந்தப் பாசுரங்கள் மக்களைப் பக்தி நெறியில் திளைக்கச் செய்து மக்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகும் என்பதில் ஐயமில்லை.

# 52. ந.சுப்புரெட்டியாரின் திறனாய்வுத் திறன்

**கீ.சு. தமிழரசி**
*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*சேர்க்காடு வேலூர் - 632 115.*

## முன்னுரை

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம், என்பது நம் நாட்டில் வழங்கி வரும் ஒரு பழமொழி. ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு முதுமொழி. மக்களிடையே இறைவழிபாட்டை நினைவுறுத்திக் கொண்டே இருக்கும் ஓர் ஆற்றல் நிலையம். நாவுக்கரசரும் இதுபற்றி ஒரு தேவாரம் பாடியுள்ளார்.

***திருக்கோவில் இல்லாத திருவி லூரும்***
***திருவெண்ணி அணியாத திருவி லூரும்***
***பருக்கோடிப் பத்திமையால் பாடா வூரும்***
***பாங்கினொடு பலதலங்கள் இல்லாத வூரும்***

வைணவத்தில் ஒரு திவ்விய தேசம் வைணவ தத்துவங்களின் நிலைக்களனாகத் திகழ்கின்றது என்பர். அவ்வூரிலுள்ள நல்லார் சித்து, ஆறு, குளம். சோலை முதலியன அடங்கியுள்ள இயற்கைச் சூழலை இரசித்து எம்பெருமான் எழுந்தருளியுள்ள இடம் ஈசுவரன் என்பவற்றை நினைவுறுத்தும் நிலையாக இருப்பதாகக் கூறுவர். தமிழன்னை செய்த தவப்பயனின் காரணமாகத் தோன்றிய ந.சுப்புரெட்டியார் நுணங்கிய கேள்வியறிவுடையவராகவும், பல துறை வல்லுனராகவும் விளங்கினார். ந.சுப்புரெட்டியாரின் தமிழ்ப் பணிகள் பல. அவற்றுள் கவிமணியின் பாடல்களைப் பற்றிய அவரின் திறனாய்வினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## கோவில் வழிபாடு

கோவில் வழிபாடு பற்றி எட்டுப் பாடல்கள் பாடியுள்ளார்.

***"கோவில் முழுதுங் கண்டேன் - உயர்***
***கோபுரம் ஏறிக் கண்டேன்***
***தேவாதி தேவனையான் - தோழி!***
***தேடியும் கண்டிலனே"***

இதனையொட்டி தெப்பக்குளம், தேரோடு வீதி, சிற்பச்சிலை, சித்தி வேலை, பொன்னும் மணியும், பூமாலை, தூபமிடுதல், தீபம் சுற்றுதல், தில்லைப்பதி, சிற்றம்பலம் முதலியவற்றைக் கண்டதாகக் கூறி எய்ப்பினில் வைப்பாம் இறைவனைத் தான் காணவில்லை என்பார்.

காணாமைக்குரிய காரணத்தையும் அவனைக் காணும் முறையையும் விளக்குவார்.

***"உள்ளத்தின் உள்ளான் அடி! - அது நீ***
***உணர வேண்டும், அடி!***
***உள்ளத்தில் காண்பாய்எனில் - கோயில்***
***உள்ளேயும் காண்பாய், அடி!"***

என்ற பாடலடிகளில் இவற்றின் விளக்கத்தைக் காணலாம்.

சிறுவயது முதற்கொண்டே கவிமணி தெய்வ பக்தி மிக்கவராகத் திகழ்ந்தார். ஒன்பது வயதிலேயே இவருக்கு சிவதீட்சை செய்யப்பெற்றது. திருநெல்வேலியில் வாழ்ந்து வந்த உமையொருபாக தீட்சிதர் இதனைச் செய்து வைத்தார். அச்சமயத்தில் வாழ்த்தாக அவர்மீது ஒரு வெண்பா பாடியதை,

***"வேறும் ஒருதுணையான் வேண்டுவனோ வேணுவனம்***
***தேரும் உமையோர்பாகத் தேசிகனே - கூறும்எனக்கு***
***எய்யாப் பிறவி இருள்அகல நீஅளித்த***
***பொய்யா விளக்கிருக்கும் போது"***

என்னும் வெண்பா மூலம் அறிய முடிகிறது.

## முருகன் மீது கொண்ட பக்தி

சுடலை முத்துப் பிள்ளையவர்கள் வேண்டுகோளுக்கிணங்க செந்தில் முருகன் மீது பாடியனவாக மூன்று பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று,

***"தண்டைன போதுமையா! தூங்கமுடி யாதையா!***
***கொண்டபிணி நீங்க அருள் கூறையா! - கண்டுனது***
***வாசலில் வந்து வணங்கவலி இல்லையாஐயா!***
***ஈசனே! சேந்திலிறை வா!"***

என்ற இப்பாடல் அப்போது ஆஸ்துமா நோயால் பீடிக்கப் பெற்றிருந்த நிலையைக் காட்டுவது, கவிமணியை இரட்டைப் பிணிபோல் பீடித்திருந்தவை ஆஸ்துமாவும் எக்ஸிமாவும். நோய் சதா சொரிந்து கொண்டிருக்கும் நிலையை உண்டாக்கும். முருகன் மீது சிரங்கு பற்றி நகைச்சுவையாக நான்கு பாடல்களைப் பாடியுள்ளளார். இந்தப் பாடல்கள் சோகம் கலந்த நகைச்சுவையுடன் மிளிர்கின்றன.

***"முத்து பவழம் முழுவயிரம் மாணிக்கம்***
***புத்தியொளி வீசு பதக்கமெலாம் - சித்தன்***
***சிரங்கப்ப ராயன் சிறியேன் எனக்குத்***
***தரங்கண்டு தந்த தனம்"***

என்ற பாடல் வரி மூலம் அவர் சோகம் கலந்த நகைச்சுவையுடன் இருப்பதைக் காணமுடிகிறது.

## இரட்சிகர்

சமயப்பொறை சமரசநிலை ஆகிய இவை தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள். தமிழ்ப் பண்பாட்டின் உருவமான கவிமணி இயேசு பெருமானைப் பற்றியும் பாடியுள்ளார். இப்பாடல்கள் முப்பதும் தெய்வத் தமிழில் அடங்கும். இப்பாடல்கள் சுருக்கமாக அப்பெருமான் வரலாற்றையும் அவர் மண்பதைக்கு உரைத்தச் செய்தியையும் குறிப்பிடுகின்றன.

***"பூமியை ஆளுதற்கு - தேவ***
***புத்திரன் வந்துதித்தான்***
***சேமம் பிறக்குமென - யூதர்***
***சிந்தை களித்திருந்தார்"***

என்ற பாடல் வரிகளின் மூலம் கவிமணியின் சமய சகிப்புத் தன்மையை அறியமுடிகிறது.

## ஆசியசோதி

இந்நூல் ஆங்கில மொழியில் எட்வின் ஆர்னால்டு என்பவர் Light bf 's யை என்னும் பெயரில் வெளியிட்ட நூலின் தமிழ் வடிவமே ஆகும். இதனை மொழிபெயர்ப்பு என்று சொல்லுவது பெயரளவில்தான். ஆனால், இதனை ஒரு நூதனப்படைப்பு என்றே சொல்ல வேண்டும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நம் நாட்டில் தோன்றிய புத்தப் பெருமானின் வரலாற்றைக் கூறும் ஓர் அற்புதமான படைப்பு இது. புத்தப் பெருமானை,

***"பூரண ஞானம் பொலிந்த நன்னாடு***
***புத்த பிரானருள் பொங்கிய நாடு***
***பாரத நாடு பழம்பெரும் நாடு"***

என்று பாடிப் பாராட்டியுள்ளார் பாரதியார். இவருடைய பெருமையை சீனா, ஜப்பான் பர்மா, சயாம், இலங்கை முதலிய வெளிநாடுகள் வரைச் சென்று பரவியுள்ளது. இன்றைய உலகில் புத்த சமயத்தை தழுவியவர்கள் அறுபது கோடிக்கு மேல் உள்ளனர். இந்திய அரசியல் சட்டத்தைப் படைத்த டாக்டர் அம்பேத்கர் கூட இச்சமயத்தின்பால் ஈர்க்கப்பெற்று அதனைத் தழுவினார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஆசிய ஜோதியைப் பன்முறைப் பயின்று அதில் ஆழங்கால்பட்டு அனுபவித்தவன் அடியேன் புத்த கயைக்குச் சென்று வரும் பேரு ஏற்பட்டது (அக்டோபர் 1968) இருபத்தி இரண்டு குவளயத்தில் அருள் மாரி பொழியும் ஐயன் புத்த பிரான் ஞான ஒளி பெற்ற இடத்திற்கு வந்ததும் என்னை அறியாமல் புத்துணர்ச்சி என் பால் எழுந்தது. கூச்சல், குழப்பம், கேளிக்கை, முதலான நிகழ்ச்சிகள் என்றும் இல்லாத அமைதியான இடத்தை முதன் முதலாக இங்கு தான் கண்டேன். ஒரு சிலர் அங்கும், இங்கும் நடமாடினாலும் அவர்கள் நடையிலும், பேச்சிலும் அமைதி காண முடிகிறது. அமைதியான சூழ்நிலை தியானத்திற்கு

ஏற்ற இடமாகத் திகழ்ந்தது. இந்த இடத்தில் போதி மரத்தடியில் ஞான ஒளிகண்ட புத்த பிரான் 'ஆசிய ஜோதியாக' மலர்ந்து வரலாற்று நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக என் மனத்தில் விரைந்து குமிழிட்டு எழுந்தன. நானும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் புத்தபிரான் வாழ்ந்த காலத்திற்குத் தள்ளப்பெற்றேன். மானசீகமாக பாவனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினேன். புத்தர் அவதரித்தச் செய்திகள், மக்கள் அள்ளூறும் காரணத்தை அறிய காடு, மலை முதலிய இடங்களிலெல்லாம், வரலாறுகள் எல்லாம் என் மனக் காட்சியில் புலனாயின.

## புத்தரும் சுஜாதையும்

இத்தலைப்பில் உள்ள பாடல்களை என் மனம் அசை போட்டது. புத்தர் சுஜாதை படைத்த உணவை உண்டு உடல் வலியுற்றதினையும் சிந்தை முற்றும் தெளிந்த நிலையினையும் உடையவராகி,

***"வாடா மலர்கள் மலர்ந்து சொரியும்***
***போதி விருட்சம் பொலிபூங் காவினை***
***நாடிச் சென்றனன் ஞானம் பெறவே"***

என்ற செய்தியையும் என் மனம் சிந்தித்தது. அப்போது நானும் என் மனைவியும் போதி மரத்தின் அடியில் நின்று கொண்டிருந்ததை நினைந்துப் பார்த்தேன்.

சுஜாதை தவம் செய்துப் பெற்ற மகன் இறந்து விடுகின்றான். இந்நிலையில் மீண்டும் அவளிடம் வந்த புத்தர் பெருமானை நோக்கித் தன் மகனை உயிர்ப்பிக்குமாறு வேண்டுகின்றாள். அவர் அவளுக்கு அறிவுரை பகர்ந்து 'பிறப்புளதேல் இறப்புமுண்டு' என்ற உண்மையை போதிக்கும் காட்சி என் மனத்திரையில் காணப்படுகின்றது. இப்பகுதியில் உள்ள பாடல்கள் உள்ளத்தை உருக்குபவையாக உள்ளன.

## முடிவுரை

தமிழின் துறைதோறும் தன் ஆய்வுப் பார்வையை ஆழச் செலுத்தி ஆழ்ந்தகன்ற கொள்கைச் சான்றோராக விளங்கியப் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் பல துறைச் சான்றோராக இருந்தாலும் திறனாய்வுக் கலையில் தனக்கெனச் சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றிருந்தார். அவற்றுள் கவிமணியின் பக்திப் பாடல்களைப் பற்றி அவர் திறனாய்ந்துள்ளதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

# 53. ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் கவி(ன்)மணி



**முனைவர் வி. வசுமதி**
*இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)*
*உடுமலை*

கவின்மிகு கவிதைக்கு இலக்கணம் கூறுபவர், இயற்கையுடன் இணைந்தவர், மேம்பாட்டினை உலகிற்கு உணர்த்தியவர், சிறந்த நகைச்சுவையாளர் - எனப் பன்முக வடிவம் கொண்டதால் கவிமணியை கவி(ன்)மணி என்றே அழைக்க ஏற்புடையவர் ஆவார். இவர்தம் படைப்புக்களில் அழகு மிஞ்சும், வார்த்தைகள் வர்ணஜாலமிடும்

***"உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்***
***ஊற்றெடுப்பது கவதை***
***தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை***
***தெரிந்துரைப்பது கவிதை"***

என்ற பாடலடிகள் கவிதை இலக்கணத்திற்கு அனைவராலும் எடுத்தாளப்படும் மேற்கோள் ஆகும். நாமக்கல்லாரோ, 'தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை, தினமும் கேட்டல் என் செவிப் பெருமை' என கவிமணியைப் போற்றுகிறார்.

இத்தகு பன்முக படைப்பாளியின் வரலாற்றை ஆய்தல் எளிதன்று. ஆனால் அதே அளவு பன்முக ஆற்றல் கொண்ட பேராசிரியர். ந.சுப்புரெட்டியார் அவர்கள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் வாழ்க்கையை நட்புடன் வெளிப்படுத்தியுள்ளார். இதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## பணியுமாம் என்றும் பெருமை

தாழ்படிதல் என்பதும், கீழ்படிதல் என்பதும் ஒருபொருள்படுவன. ஆனால் ந.சுப்புரெட்டியார் அவர்களின் தாழ்பணிவானது மேன்மையானதாகும். இப்பணிவினை இவரது தம்பிரான் தோழன் நூலின் நூன்முகப் பகுதியில் 'திருத்தலப் பயணம் மேற்கொள்வதற்கு ஓய்வூதியம் கூட பெறமுடியாத நிலையில் (40 ஆண்டு உழைப்பு) பொருளாதார வசதி இல்லை. அப்படி ஏற்பட்டாலும் பயணம் செய்வதற்கு உடல் நிலையும் சரிப்பட்டு வராது என்ற நிலையும் தோன்றியுள்ளது. மேலும் பூசலார் நாயனார் மானசீகமாக எழுப்பிய திருக்கோயிலும் நினைவுக்கு வந்தது. சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் காட்டியுள்ள வழியைக் கடைப்பிடித்துக் கொண்டு அவருடன் மேற்கொண்ட கற்பனைப் பயணத்தின் விளைவாக இந்நூல்

உருவானது.' என்று உள்ளது உள்ளபடியாக குறிப்பிட்டமை ஈண்டு நோக்கத்தக்கது. ந.சுப்புரெட்டியார் அவர்களின் பணிவைத்தரும் உண்மையை இதன்வழி உணரலாகிறது.

## கவிமணி பற்றி ந.சுப்புரெட்டியார்

'ஒப்புமை தோன்ற செப்புவது உவமை' என்பது இலக்கணம். தன்னைப் பற்றி மற்றவர் கூறும்போதும், மற்றவரைப் பற்றி நாம் கூறும்போதும் தகுதிப்படல் என்பது கட்டாயம் வேண்டும். அத்தகு தகுதியை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களும் ந.சுப்புரெட்டியார் அவர்களும் பெற்று மிளிர்கின்றனர்.

தேசிக விநாயகம் பிள்ளை எனும் பெயரைக் கொண்ட கவிமணி அவர்கள் 1876 - ம் ஆண்டு குமரி மாவட்டம் - நாகர்கோவில் வட்டம் - சுசீந்திரம் நகரில் உள்ள தேரூர் எனுமிடத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் சிவதாணு பிள்ளை - ஆதிலட்சுமி அம்மையார். பொதுவாக ஒரு கவிஞனை அடையாளம் காட்டும்போது அன்னாரது பெற்றோரின் பெயரை மட்டும் குறிப்பிடுவது மரபு. ஆனால் ந.சுப்புரெட்டியார் அவர்களோ கவிஞனை மேன்மைப்படுத்த பெற்றோரையும் உயர்த்திக் காட்டுகிறார். கவிமணியின் தந்தை சிவதாணு பிள்ளை அவர்கள் அவ்வூரில் முதன்முதலில் ஆங்கிலம் பயின்ற பெருமையைப் பதிவு செய்கிறார். மேலும் தாயார் ஆதிலட்சுமி அம்மையாரைப் பற்றி குறிப்பிடுகையில் அன்னாரின் மூன்று தலைமுறைகளின் பெயரைச் சுட்டிச் செல்கிறார். அதாவது மாணிக்கவாசகம் பிள்ளையின் மகன் மூத்தபிள்ளை. அந்த மூத்தபிள்ளையின் மகளே ஆதிலட்சுமி என்கிறார். மூத்தபிள்ளை என்பார் சிறந்த தமிழ்ப்புலவர் என்பதனையும் மறக்காமல் சுட்டிச் செல்கிறார் ந.சுப்புரெட்டியார் அவர்கள். ஒரு நல்ல கவிஞனுக்கு தன் வழித்தோன்றல்களே ஆதாரம் என்பதனை நிறுவிடவே ந.சுப்புரெட்டியார் அவர்கள் தலைமுறைகளின் சிறப்புக்களையும் கூறி கவிமணியை ஈண்டு பெருமைப்படுத்துகிறார்.

## கவிமணியின் இளமைப்பருவம் பற்றி ந.சுப்புரெட்டியார்

ஒரு குழந்தையின் வளர்ப்புமுறையானது கட்டிடம் எழுப்புவது போன்றது. அடித்தளமிடல், சுவர் எழுப்பல், மேள்தளம் அமைத்தல் என்ற முறையில் இது அமையும். ஒரு மாணாக்கர்க்கு முதல்நிலை சரியாக அமைந்தால் மட்டுமே அடுத்த நிலையில் உறுதியுடன் நிற்க முடியும். அவ்வழி கவிமணி அவர்களின் இளமைப் பருவத்தில் சரியானதொரு கல்வியைப் பெற்றுள்ளார் என்றாலும் தன் முன்னோரின் வழிவகையாகவே கல்வியறிவைத் தெள்ளத் தெளிவாக பெற்றுள்ளார் என்பது ந.சுப்புரெட்டியார் அவர்களின் கூற்று.

கருவிலே திருவுடையார் என்பதற்கேற்ப கவிமணி அவர்கள் இளமையில் கல்வியார்வமுடையவராகவே வலம் வந்தார். அதனான் குகன் என்பாரிடம் தன் முதல்நிலைக் கல்வியை முடித்த கவிமணி

அவர்கள் அடுத்தநிலை கல்வியை திருவாவடுதுறை ஆதின கர்த்தா சாந்தலிங்கத் தம்பிரானிடம் கற்றார். ந.சுப்புரெட்டியார் அவர்கள் கூறும் இக்கூற்றை நிரூபிக்கும் முகமாக பெரும் புள்ளிகள் - என்ற நூலின் முன்னுரையில் குகன் என்பார் 'சாந்தலிங்க தம்பிரானினிடம் தண்ணீரில் மிதந்து வந்த காகிதக் கப்பலினைப் பிரித்துப் படித்தார். அதில் எழுதியிருந்த முத்து முத்தான எழுத்தில் எழுதியிருந்த கவிதைகளைக் கண்டு அதிசயித்தார். அக்கரையில் காகிதக் கப்பல் விட்டுக் கொண்டிருந்த விநாயகம் பிள்ளையை அழைத்து முறையாகக் கல்வி கற்றுக் கொடுத்தார்' எனக் கூறியிருப்பது பொருத்தமாகிறது. மேலும் திருநெல்வேலி உமையொருபாகன் குருக்களிடம் சிவதீட்சையும் பெறுகிறார் கவிமணி. தான் பெற்ற சிவானுபவத்தை

***'ஈசனிரங்கி அடியவருக் கினியகாட்சியளித் திருநாள்***
***ஈசனார் யாவுமறந்து ஈசனடியே கண்டிருப்பர்***
***ஈசனடியைக் கண்டவர்பின் என்றும்மௌனம்***
***கொண்டிருப்பர்***
***ஈசனடி காணாதவரே எங்கும்மூழ்கி அலைந்திடுவர்'***

என்ற பாடலின் வழி காண முடிகிறது.

## பணி அனுபவம்

ஒரு தனிமனிதனின் அடையாளமானது அவன் தனது பெயருக்கு முன்னிருக்கும் முதலெழுத்தைவிடவும், தன் பெயருக்குப் பின்னிருக்கும் பட்டங்களைவிடவும், தன் பெயருக்கு கீழே இருக்கும் பணியே ஆகும். அவ்வகையில் கவிமணியும் தன்னை அடையாளப்படுத்தும் ஆசிரியைப் பணியில் அமர்கிறார். முதற்கண் கோட்டாறு மெட்ரிகுலேசன் பள்ளியில் தொடங்குகிறார். மேற்படி படிக்க உறுதியுடன் முதுகலை படிப்பைத் தொடர, குடும்ப சூழலில் அது எட்டாக்கனியானது. எனினும் கவிமணி தனது படிப்பின் தன்மையை மாற்றாது வாசிப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறார். அவர் விரும்பி படித்தவை ஆங்கில புத்தகங்களே - என்பது ந.சுப்புரெட்டியாரின் கூற்று. இதனை 'கவிமணிக்கு படிப்பில் ஆர்வம் அதிகம். ஆங்கில கல்வியில் அதிக நாட்டம் உடையவர். எனவே ஆங்கில புத்தகங்களையும், கவிதைகளையும் அதிகம் விரும்பிப் படித்தார்' என்று கூறுவதிலிருந்து அறியமுடிகிறது. புல மொழிகளைப் படித்ததால் நல்லதொரு கவிஞனான பாரதியைப் போன்று கவிமணியும் சிறந்த கவிஞனாக மிளிர்கிறார் - என்ற நிலையை ந.சுப்புரெட்டியார் நிலை நாட்டுகிறார்.

திருவனந்தபுரத்தில் ஆசிரியப்பணி தேர்ச்சி தேர்வில் வெற்றிபெற்று ஆங்குள்ள மகளிர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியின் துணையாசிரியரானார். தொடர்ந்து திருவனந்தபுரம் அரசர் மகளிர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகவும், மற்றும் திருவனந்தபுரம் அரசர் மகளிர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகவும் பணியாற்றிய பெருமை கவிமணி அவர்களுக்கு உண்டு. தனது 55-ம் வயதில் ஓய்வு

பெற்ற இவர் தனது இறுதிக் காலத்தில் தன் மனைவியின் ஊருக்கே (புத்தேரி) சென்று சேர்கிறார்.

கவிமணி அவர்கள் 1901-ம் ஆண்டு கோட்டாறு பள்ளியில் தொடங்கிய ஆசிரியப் பணி 1931-ம் ஆண்டு நிறைவு பெற்றது. 36 ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றிய பெருந்தகை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். ஆங்கு ந.சுப்புரெட்டியார் அவர்கள் கவிமணியின் இறுதிக் காலத்தில் அவருடன் உரையாற்றியதை இங்கு பதிவு செய்துள்ளார். "1948-ல் நான் ஒரு சமயம் என் தோழமைகளுடன் கன்னியாகுமரி சுற்றுலா சென்ற பொழுது புத்தேரியில் வீற்றிருந்த கவிமணி அவர்களின் இல்லத்திற்குச் சென்றேன். 30 நிமிடங்கள் கவிமணியுடனான உரையாடல் என்றும் எனக்கு மறவாதவை" என்று நினைவு கூர்தல் நலம்.

## கவிமணியும் ந.சுப்புரெட்டியாரும்

***"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கண்***
***இடுக்கண் களைவதாம் நட்பு"***

என்பது வள்ளுவம். அவ்வழியில் இருவரும் நட்புள்ளம் கொண்டதால்தான் கவிமணி அவர்களின் இல்வாழ்வைப் பற்றி அதிகமாகக் குறிப்பிடவில்லை ந.சுப்புரெட்டியார் அவர்கள். துன்பங்கள் நிறைந்த தனது நண்பனுடைய இல்லறத்தை வெளிப்படுத்தாமலும் அதேநேரம் மேலோட்டமாகவும் அதனைச் சொல்வது ந.சுப்புரெட்டியாரின் படைப்பாளுமையாகிறது.

கவிமணி அவர்களின் இல்லக்கிழத்தியாரின் திருநாமம் உமையம்மை. அன்னார்க்குப் பிள்ளைப்பேறு வாய்க்கவில்லை என்பது வருத்தத்திற்குறியது. இதனான் வழி ந.சுப்புரெட்டியார் அன்னாரது இல்லச் சிறப்பைக் கூறாது விட்டிருக்கலாம். தன் நண்பனின் குறையை வெளிக் காட்டிட மாட்டாதவன் சிறந்த நண்பன் - என்பதற்கு உதாரணமாக செயல்பட்டவர் ந.சுப்புரெட்டியார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் வட்டாரத்தில் மனைவியை 'குட்டி' என அழைக்கும் வழக்கு இருந்தாலும் கவிமணி அவர்கள் தன் மனைவியை 'தாயி' என அழைத்துள்ளார். தனக்கு மகவு இல்லை எனினும் தனது அக்காள் மகனை (சிவதானு) வளர்த்த பெருந்தகை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். இச்செய்தியினை ந.சுப்புரெட்டியார் ஒருபோதும் தன் பார்வையில் காட்டிடவில்லை. இது கவிமணி அவர்கள் மீது ந.சுப்புரெட்டியார் வைத்திருந்த சிறந்த நட்பினை அடையாளப்படுத்துகிறது.

## பட்டியலிடும் பாராட்டுக்களும் கட்டுக்கடங்காத இலக்கியங்களும்

கவிமணியின் நிறைகளை மட்டும் பட்டியலிடும் ந.சுப்புரெட்டியார்

அன்னாரின் விருதுகளைப் பட்டியலிட மறக்கவில்லை. **“யதார்த்தவாதி”** என்ற புனை பெயரில் கவிமணி உலா வந்நதையும் விட்டுவைக்காது இயம்பியுள்ளார் ந.சுப்புரெட்டியார். தேரூரில் உள்ள அழகம்மை மீது பாடப்பட்ட அழகம்மை ஆசிரிய விருத்தம் முதல் உமர்கய்யாம் பாடல்கள் மொழிபெயர்ப்பு வரை செம்மைப்படுத்திக் காட்டிச் செல்கிறார் ந.சுப்புரெட்டியார். சுசீந்திர மாலை என்ற நூல் கவிமணியின் கண் இருந்தபோது அக்கையெழுத்துப்பிரதி காணாது போய்விட்டது. இருப்பினும் தனக்கு நினைவுள்ள பாடல்களை மீண்டும் எழுதி அதனை ‘மலரும் மாலையும்’ நூலில் இணைத்துள்ளதையும் குறிப்பிட்டுச் செல்கிறார் ந.சுப்புரெட்டியார்.

## முடிபு

‘இவரது உண்மையுள்ளம், உண்மை பாடல்களின் மூலமாய் உண்மை வித்துக்களைக் கற்பவர் மனத்தில் விதைத்து, உண்மைப் பயிரைச் செழித்தோங்கச் செய்கிறது. இவர் பாடல்களில் காணும் தெளிவும் இனிமையும், இவரது உள்ளத்திலேயுள்ள தெளிவு, இனிமை முதலயை சிறந்த இயல்புகளின் நிழற்படமே ஆகும்’ என்பார் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை. அதற்கிணங்க இனிமையான பாடல்களை தமிழ் இலக்கிய உலகிற்கு கொடுத்து நிற்பவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். அன்னாரைத் தன் எழுத்துக்கள் வழி மெருகேற்றியவர் ந.சுப்புரெட்டியார். கவிமணியை ந.சுப்புரெட்டியார் கவின்மணியாகவே பார்த்துள்ளமையே முடிபாம்.

# 54. ந. சுப்புரெட்டியார் பார்வையில் தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

**முனைவர் செ. ஆறுச்சாமி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*கற்பகம் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர்.*

## முன்னுரை

தற்காலத் தமிழ் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் ந.சுப்புரெட்டியார். திறனாய்வு, சமயம், அறிவியல், ஆராய்ச்சி, வாழ்க்கை வரலாறு எனப் பல துறைகளில் தடம் பதித்தவர். அவருடைய நூல்களில் 'தமிழில் அறிவியல் அன்றும் இன்றும்' என்ற நூலில் கூறும் அறிவியல் கருத்துக்கள் குறித்து இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகிறது.

## நூல் அறிமுகம்

'தமிழில் அறிவியல் அன்றும் இன்றும்' என்னும் இவரது நூல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடாகும். 186 பக்கங்கள் கொண்ட இந்நூலில்,

1. தமிழில் அறிவியல் - அன்று
2. தமிழில் அறிவியல் - இன்று
3. துணைநூற் பட்டியல்
4. சொல்லகராதி

ஆகிய உட்தலைப்புக்களில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

## ந. சுப்புரெட்டியார் பார்வையில் தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

அறிவியல் என்பது இன்று உருவானதல்ல. அது பண்டைக்காலம் தொட்டே உலகில் உள்ளது. இதற்குச் சான்றாக, தமிழ் இலக்கியங்களில் பல பாடல்களைக் கூறலாம். ஆசிரியர் அது குறித்த செய்திகளைப் பல தலைப்புக்களில் இந்நூலில் விளக்கியுள்ளார். அந்தச் செய்திகளைக் கொண்டு தற்கால அறிவியலை ஒப்பிட்டுப் பார்ப்பதாக இந்நூல் அமைந்துள்ளது. தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள அறிவியல் செய்திகள் குறித்து அவர் கூறும் கருத்துக்களை இங்குக் காணலாம்.

## தமிழ் இலக்கியங்களில் அறிவியல்

தமிழ் இலக்கியங்களில் இக்கால அறிவியலின் கூறுகளான கல்வியியல், அறிவியலறிஞர்கள், வான இயல், இயற்பியல், வேதியில், உளவியல், உயிரியல், மருத்துவ இயல், கணித இயல், வேளாண்மையியல் ஆகியவை குறித்த செய்திகள் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பது குறித்து, 1. கல்வியியல் 2. அறிவியல் அறிஞர்கள் 3. வான இயல் 4. பொறியியல் 5. உளவியல் 6. உயிரியல் 7. கணித இயல் 8. வேளாண்மை இயல் ஆகிய தலைப்புக்களில் காணலாம்.

## 1. கல்வியியல்

ஆசிரியர் மாணவர்க்குக் கற்பிக்கும் முறை, மாணவர்கள் ஆசிரியர்களிடம் பழகும் முறை, ஆசிரியர் இயல்பு, மாணாக்கர் இயல்பு போன்ற செய்திகளைத் தொல்காப்பியம், நன்னூல் போன்ற நூல்களில் காணலாம்.

***''ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்
பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஊரையில்
திகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்''***

என்று நச்சினார்க்கினியார் தொல்காப்பிய உரையில் கூறுகிறார். நன்னூலாரும்,

***''ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
காலமும் இடமும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன்
உளங்கொளக்
கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப''***

என்கிறார். ''காலமும் இடமும்'' என்பதை இக்காலத்தார் ''தகுந்த சூழ்நிலை'' (Proper environment) என்கின்றனர். ''உரைக்கப்படும் பொருள் ''உள்ளத்தமைத்தல்'' என்பது ''பாட ஆயத்தத்தை''(Lesson Planning) குறிக்கும். ''கொள்வோன் கொள்வகை அறிந்து'' என்பது ''மனத்தைத் தயாரித்தல்'' (Preparation) என்பதாகும். இரு நூற்பாக்களும் கூறுவது என்னவென்றால் மாணாக்கர்கள் கொள்ளும் வகை அறிந்து அதற்கேற்ப ஆசிரியர் கற்பித்தல் வேண்டும் என்பதாகும்.

## 2. அறிவியல் அறிஞர்கள்

பண்டைத் தமிழர்கள் இன்றிருப்பது போல அறிவியல் துறைகளைத் தனிதத்தனிக் கலைகளாக வளர்த்து வந்திருந்தனர். பண்டைக் காலத்தில் அறிவியல் அறிஞர்கள் பலர் இருந்தனர் என்பதை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்பவரின் பாடல் மூலம் அறியலாம்.

***"செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்***
***பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்***
***வளிதிரிதரு திசையும்***
***வறிது நிலைஇய காயமும் என்றிவை***
***சென்றளந் தறிந்தோர் போல என்றும்***
***இனைத்தென் போரும் உளரே"***

என்கிறார் அவர். "செஞ்ஞாயிற்றின் விதியும் அஞ்ஞாயிற்றினது இயக்கமும் அவ்வியக்கத்தால் சூழுப்பட்ட பார்வட்டமும் காற்றியங்கும் திக்கும் ஓராதரவுமின்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் என்று சொல்லப்பட்ட இவற்றை ஆண்டாண்டுப் போய் அளந்தறிந்தவர்களைப் போல நாளும் இத்துணையளவை உடையனவென்று சொல்லும் கல்வியை உடையோரும் உளர்" என்கிறது இப்பாடல்.

## 3. வான இயல்

பண்டையோர் வான இயலில் அறிவுடையவர்களாக விளங்கினர் என்பதை சங்கப் பாடல்கள் மூலம் அறியலாம்.

***"மதிசேர் நாள்மீன் போல்"***

என்னும் புறப்பாட்டில் "திங்களைச் சேர்ந்த நாளாகிய மீனையொப்ப" என்று பொருள் கூறப்படுகிறது. விண்ணில் மதி செல்லும் வழியாகிய வட்டத்தை இருபத்தேழு பிரிவுகளாகப் பிரித்திருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

***"வெள்ளித் தென்புலத் துறைய விளைய்***
***பள்ளம் வாடிய பயனில் காலை"***

எனும் புறநானூற்றுப் பாடலில், "மழைக்கோளாகிய வெள்ளி தெற்கே விலகியிருப்பது மழை இல்லாமைக்கு அறிகுறியாகும்" என்கிறது.

***"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்***
***விரிகதிர் வெள்ளித் தென்புலம் படரினும்"***

எனும் சிலப்பதிகாரப் பாடலும்,

***"வசையில் புகழ் வயங்கு வெண்மீன்***
***திசைதிரிந்து தெற்கேகினும்"***

என்ற பட்டினப்பாலை அடிகளும் பண்டைத் தமிழ் மக்கள் கோள்களின் நிலையிலிருந்து மழை முதலியவற்றை அறியும் புலமையுடையவராயிருந்தனர் என்பதை அறிய துணைசெய்கின்றன.

## 4. பொறியியல்

அக்காலத்தில் பொறிகளால் இயங்கிய ஊர்திகள் இயற்றப் பெற்றன என்பது அறியமுடிகிறது. யூகி தான் செல்ல ஓர் இயந்திர ஊர்தியைப் பயன்படுத்தியதாகக் குறிப்பு கிடைக்கின்றது. இந்த ஊர்தி ஞாயிற்றின் தேர் விண்வெளியில் இயங்குவது போன்று வேகத்துடன் இயங்கக் கூடியது. குதிரை முதலியன பூட்டப்பெறாமல் இயந்திரத்தினாலேயே இயங்கும் தன்மை கொண்டது. ஊர்தியை விரும்பும்போது பூட்டிக் கொள்ளவும், வேண்டாதபோது உறுப்புறுப்புக்களாகப் பிரித்துக் கொள்ளவும் முடியும். அவ்வாறு செய்வதற்குப் பயிற்சி பெற்றவர்கள் இருந்தனர். யூகி என்பான் புட்பக நகரத்தை அடைந்ததும் தான் சென்ற ஆணி வையத்தைப் பிரித்து, பிறர் அறியா வகையில் பாதுகாப்பாக மறைத்து வைத்தான் என்று பெருங்கதையில் கூறப்படும் செய்தியின் வாயிலாக அக்காலத்திலேயே பொறியியல் அறிவு பெற்றவர்கள் இருந்திருந்ததை அறியமுடிகிறது. இதுபோன்ற தொழில் நுட்பமிக்க புட்பக விமானங்கள் பற்றிய குறிப்பு சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காப்பியங்களிலும் கூறப்படுகின்றன.

> ***“அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்***
> ***கணுமுற்றி நின்ற கரும்புளே காட்டி”***
> ***“அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி***
> ***குறுகத் தறித்த குறள்”***
> ***“சாணிலும் உளன்ஓர் தண்மை***
> ***அணுவினைச் சதகூறு இட்ட***
> ***கோணிலும் உளன்”***

என்ற பாடல்கள் அணு பற்றிய கருத்துக்களைக் கூறுவதாக உள்ளன.

## 5. உளவியல்

ஒரு பொருளைப் பற்றி ஓயாது நினைக்கின்ற முதிர்ச்சி, நினைக்கப்பெற்றப் பொருளின் உருவம் போலியாகக் கண்ணுக்கெதிரில் தோன்றுவது போன்ற பரமை உருவெளித் தோற்றம் (Hallucination) எனப்படும். இதனை இலக்கியங்களில் மானதக் காட்சி என்கின்றனர். திருமங்கையாழ்வார் தன் திருநெடுந்தொகையில் தன்னை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும் உருவகித்துப் பாடும் பாடல்களில் இந்த நிலையை அனுபவிப்பதை அறியமுடிகிறது. நாயகி இரவில் எம்பெருமானை நினைத்தபடி உறக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறாள். அவள் மனக் கண் முன்னே,

> ***“மின்இலங்கு திருவுருவும், பெரிய தோளும்***
> ***கரிமுனித்த கைத்தலமும், கண்ணும், வாயும்***
> ***தன்அலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே***
> ***தாழ்ந்துஇலங்கு மகரம்சேர் குழையும் காட்டி”***

என்று பெருமானின் தோற்றம் காண்பதாய்க் கூறப்படுவது

உருவெளித்தோற்றம் எனும் உளவியல் நிலையாகும். சூர்ப்பணகையினால் சீதையின் அழகை விரிவாகக் கேட்டறிந்த இராவணன் சீதையை இடைவிடாது நினைத்த காரணத்தால் ஒரு பெண்ணுருவம் அவனுக்கு உருவெளித் தோற்றமாகக் காணப்பட்டது. அதுபோல் இராமனது அழகில் ஈடுபட்டு அவனை அடைய வேண்டும் என்று எண்ணிய சூர்ப்பணகையின் மனக்கண் முன் ஓர் ஆணுருவம் உருவெளித் தோற்றமாகக் காணப்பட்டது. இவை உளவியல் நிலைகளாகும்.

## 6. உயிரியல்

விஷ்ணுவின் பத்து அவதாரங்களைப்படி வளர்ச்சிக் கொள்கைக்கு எடுத்துக்காட்டாக அறிவியல் அறிஞர்கள் கூறுவர். அதுபோல இரட்டைப் பிறவிகள், ஒரே பிரசவத்தில் பல பிள்ளைகள் போன்ற நிலைகளைப் பண்டைய நாட்களிலும் காணலாம். புராணத்தில் குசேலனுக்கு இருபத்தேழு பிள்ளைகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. மகாபாரதத்தில் பீஷ்மனைக் கொல்ல சபதமெடுக்கும் அம்பாலிகை எனும் கன்னி, அதற்காகவே ஆணாய் மாறி சிகண்டியாகிறாள். அதுபோல பாண்டவர்கள் வனவாசத்தின் போது மறைந்து வாழ வேண்டிய காலகட்டத்தில் அருச்சுனன் “பிருஹன்னளை” என்ற பெண்ணாக மாறுகிறான். இவ்வாறு பால்மாற்றங்கள் நடந்திருந்ததை அறியமுடிகிறது. அதுபோல கம்சனால் ஆபத்து ஏற்படும் நிலையிலிருந்த தேவகியின் ஏழாவது கருவானது காப்பாற்றப்படும் பொருட்டு வாசுதேவனின் மற்றொரு மனைவியான உரோகினியின் கருவுக்கு மாற்றப்படுவது கருமாற்ற நிகழ்வுக்கு உதாரணமாகக் கூறப்படுகிறது.

## 7. கணித இயல்

மிகப் பெரும் சேனையின் அளவைக் குறிக்க “வெள்ளம்” என்ற எண்ணைக் குறிப்பதை கம்பராமாயணத்தில் காணமுடிகிறது. “இச்சேனையின் அளவு ஆயிரம் வெள்ளம் என உரைப்பர் பித்தர்” என்பது அக்கூற்று. தொன்றுதொட்டு வழங்கிய எண்களைக் குறித்து பிங்கலந்தை நிகண்டு,

***“ஏகம் எண்மடங்கு கொண்டது கோடி***
***கோடி எண்மடங்கு கொண்டது சங்கம்***
***சங்கம் எண்மடங்கு கொண்டது விந்தம்***
***விந்தம் எண்மடங்கு கொண்டது குமுதம்***
***குமுதம் எண்மடங்கு கொண்டது பதுமம்***
***பதுமம் எண்மடங்கு கொண்டது நாடு***
***நாடு எண்மடங்கு கொண்டது சமுத்திரம்***
***சமுத்திரம் எண்மடங்கு கொண்டது வெள்ளம்”***

என்கிறது.

## 8. வேளாண்மை இயல்

வேளாண்மை பற்றிய செய்திகளும் இலக்கியங்களில் காணப்படுகின்றன. திருக்குறளின் ''உழவு'' என்ற அதிகாரத்தில் இக்கால உழவர்களின் நிலையை அறிய முடிகிறது.

''***தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்***
***வேண்டாது சாலப் படும்***''

நன்கு உழுது அடிக்கடிப் புரட்டப்படும்போது ஆற்றலின் மூலமாக வெய்யோன் ஒளியால் வெப்பத்தைப் பெற்று நிலமங்கை ஆற்றலைப் பெறுகிறாள். அதுபோல எரு இடுதலும், நீர் பாய்ச்சுதலும், காவல் காத்தலும் விவசாயத்தின் முக்கிய நிலைகளாகும் என்பதை,

''***ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்***
***நீரினும் நன்றதன் காப்பு***''

என்கிறார்.

## முடிவுரை

இலக்கியங்களில் அறிவியல் குறித்து கூறப்படும் செய்திகள் பண்டைய காலத்து மக்கள் அறிவியல் அறிவில் சிறந்திருந்ததை பறைசாற்றுகின்றன. இது குறித்த விளக்கத்தை இந்நூல் வழியாகத் தந்த ஆசிரியரின் பணி மகத்தானதாகும்.

# 55. ந. சுப்புரெட்டியாரின் திணைமயக்கத்தில் மயக்கநிலை

**முனைவர் ந. இரஞ்சன்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029*

## தொடக்கவுரை

***"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்ப தறிவு" (குறள்)***

இலக்கியம், இலக்கணம், பக்தி, மெய்ப்பொருள் எனப் பல்துறை அறிவு கொண்டவராகத் திகழ்வதோடு, அத்துறைகள் சார்ந்த பல்வேறு நூல்களைப் படைத்துத் தமிழர்களுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்தவர் ந. சுப்புரெட்டியார். இவர் தொடாத துறைகளே இல்லை என்றுகூடக் கூறலாம். அந்த அளவிற்கு அவருடைய நூல்களில் எண்ணற்ற பதிவுகள் காணக் கிடைக்கின்றன. அகத்திணைக் கொள்கைகள் என்னும் அவருடைய நூலில் திணைமயக்கம் குறித்தும் பேசியுள்ளார். அந்தத் திணைமயக்கம் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## திணை

திணைமயக்கம் என்பது இங்கு அகத்திணை மயக்கத்தைக் குறிக்கிறது. அகத்திணையுள் கைக்கிளை, பெருந்திணை இரண்டுக்கும் நிலம் இல்லை. அதனால் இவை இரண்டும் மற்ற ஐந்து அகத்திணைக்குள் கலந்து நிற்கும். அதனால்தான் அவ்விரண்டு அகத்திணைகள் பற்றி இங்கு ஆராயப்படவில்லை. திணைமயக்கத்தைப் பார்க்கும் முன்பு, திணை என்ற சொல்லுக்குரிய பொருளைப் பார்த்தல் அவசியமாகிறது.

திணை என்ற சொல்லுக்கு ஒழுக்கம் என்ற ஒரு பொருளை மட்டும் எடுத்துக் கொள்வதால் தான் மயக்கநிலை ஏற்படுகிறது. நம் மொழியில் ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் மட்டும்தான் இருக்கிறது என்று கொள்வதில்லை. ஏனெனில் ஒரு பொருட் பன்மொழிகள் தமிழில் நிறைந்து காணப்படுகின்றன. தொல்காப்பிய இடையியல் மற்றும் உரியியல் இதற்குச் சான்றாக அமைந்துள்ளன. 'திணை என்பதற்கு நிலம்; குலம்; இடம்; வீடு; ஒழுக்கம்' என்றெல்லாம் மு.சண்முகம் பிள்ளை தம்முடைய அகரமுதலியுள் பொருள் சுட்டியுள்ளார். 'திண்ணிதான நிலத்தையே முதலில் திணை என்னும் சொல் குறித்தது. பிறகு இச்சொல் அந்நிலத்தில் பிறந்த குலத்தினரை, குடியினரைக் குறிக்கலாயிற்று. அதன்பின் அம்மக்களின் ஒழுக்கத்தையும்

இச்சொல் குறித்தது' என்று வரலாற்றுநிலையில் பொருள் கூறியுள்ளது வாழ்வியற் களஞ்சியம். இவற்றைக் கொண்டு பார்க்கும்போது திணை என்பதற்கு நிலம் என்ற பொருளே முதன்மை பெறுகிறது என்பதை அறியலாம். அதற்கு அடுத்த நிலையில்தான் ஒழுக்கம் என்ற பொருள் காணப்படுகிறது.

## திணைமயக்கம்

திணைமயக்கம் குறித்து ந. சுப்புரெட்டியார், ஒரு நிலத்தில் இரண்டு ஒழுக்கம் தம்முள் மயங்கி வரும். ஆயின், இரண்டு நிலம் ஒரோவொழுக்கத்தின்கண் மயங்கி வருதல் இல்லை. முதற்பொருளில் ஒரு திணைக்குரிய காலம் பிறிதொரு திணையுடன் கலந்து நிற்றல் உண்டு. அடியிற்காணும் எடுத்துக்காட்டுகளால் இதனைத் தெளியலாம் (ப.32) என்று கூறுகிறார். அதற்குரிய சான்றாக, 'புலிகொல் பெண்பால் பூவரிக் குருளை' (ப.33) என்று தொடங்கும் பாடலைச் சுட்டியுள்ளார். 'இது கருப்பொருளாலும் முதற்பொருளாலும் குறிஞ்சி, ஆயின் புணர்ச்சி நிகழவேண்டிய இடத்து ஊடல் நிகழ்ந்தது. ஆகவே இது குறிஞ்சிக்கண் மருதம் ஆகும்' (ப.33) என்று கூறுகிறார். உரிப்பொருள் மயங்கும் என்று கூறி அதற்குரிய சான்று காட்டாமல், அடுத்துக் கூறிய காலம் மயங்கியதற்கு மட்டும் சான்று காட்டியுள்ள நிலையை அறியமுடிகிறது.

***"திணைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே***
***நிலனொருங் குமயங்குதல் இல்லென மொழிப"***
***(தொல்., பொருள்.,12:1-2)***

எனத் தொல்காப்பியர் திணைமயக்கம் குறித்துக் கூறியுள்ளார். இதில் சொல்லப்பட்ட திணை என்ற சொல்லுக்கு நிலம் என்று பொருள் கொள்ள முடியாது. ஏனெனில் நிலம் மயங்குவதை நீக்க வேண்டாம் என்று முதலடியில் கூறிவிட்டு, அடுத்த அடியிலேயே நிலம் மயங்குதல் இல்லை என்று முன்பின் முரணாகத் தொல்காப்பியர் சுட்டியிருக்க மாட்டார் என்பது திண்ணம். அப்படி என்றால் ஒழுக்கம் என்று கொள்ளலாமா? என்ற ஐயம் எழுகிறது. தொல்காப்பியர் ஒழுக்கம் என்பதைக் குறிப்பதற்கே உரிப்பொருள் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார். திணை என்ற சொல் ஒழுக்கத்தைத்தான் குறிக்கிறது என்று கொள்ளமுடியாமைக்கு மற்றொரு காரணமும் உண்டு. தொல்காப்பியரைப் பொருத்த மட்டில் தம்முடைய வைப்பு முறையினை விளக்கும்போது வரிசை மாறாமல் விளக்கிச் செல்வார். திணைமயக்கத்தை விளக்கும்போது முதலில் முதற்பொருள் அடுத்துக் கருப்பொருள் இறுதியாக உரிப்பொருள் என்ற நிலையில்தான் சொல்லியிருப்பார். அதைத் தவிர்த்து முதலில் உரிப்பொருள் பிறகு முதற்பொருள் இறுதியில் கருப்பொருள் என்று சுட்டியிருக்க மாட்டார் என்பது தெளிவு.

இந்த நிலையில் இங்குச் சுட்டப்பட்ட 'திணை' என்ற சொல் முப்பொருளையும் குறித்தே வந்துள்ளது எனலாம். ஏனெனில் குறிஞ்சித் திணை என்றால் குறிஞ்சி என்றொரு நிலத்தை மட்டும் குறிப்பதில்லை.

அந்நிலத்தின் முதல், கரு, உரி என்ற முப்பொருளையுமே அச்சொல் தன்னகத்தே கொண்டுள்ளது. சான்றாக 'ஊர் சிரித்தது' என்பதிலுள்ள ஊர் என்ற சொல்லானது ஊரில் உள்ள மக்களைக் குறிப்பதற்காக வந்ததைப்போலத் திணை என்ற சொல் திணைக்குரிய முப்பொருளையும் குறித்து வந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

இரண்டாவது அடியில் நிலம் மயங்காது என்று சொல்வதன் மூலம் வந்தது கொண்டு வராதது உணர்தல் என்ற உத்தியைக் கொண்டு பொழுது மயங்கும் என்தைக் கொள்ளலாம். கருப்பொருள், உரிப்பொருள் மயக்கம் குறித்து ஒரே நூற்பாவில் பதிவு செய்கிறார் தொல்காப்பியர்.

***"உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே"***

என்பதே அந்த நூற்பா. இந்த நூற்பாவை ந. சுப்புரெட்டியார் பின்வருமாறு விளக்குகிறார்.

"ஐந்து திணைகளும் தம் முதல், கருப்பொருளில் மயங்கி வரலாம் எனக் கொள்ள வேண்டியவர்களாகின்றோம். ஆயின், உரிப்பொருளைப் பாடற்பொருளாக விளக்கும்போது இரண்டு திணைகளுக்குரிய உரிப்பொருள்கள் கலந்து ஒரு பாட்டில் வரமுடியாது. எனவே இரண்டு உரிப்பொருள்கள் தம்முள் மயங்கி வரும் என்றல் பொருந்தாது. ஆயின் முதலும் கருவும் ஒரு திணைக்குரியனவாகவும், உரிப்பொருள் பிறிதொரு திணைக்குரியதாகவும் அமையலாம்'' (ப.34) என்று கூறுகிறார். இவரே திணை மயக்கம் குறித்துப் பேசும்போது முதலிலே ஒரு நிலத்தின்கண் இரண்டு ஒழுக்கம் தம்முள் மயங்கிவரும்'' (ப.32) என்று கூறியுள்ளமை முன்னரே சுட்டிக்காட்டப்பட்டது. மேலும்

***"அன்னாய் வாழிவேண் டன்னைஎன் தோழி<br>பசந்தனள் பெரிதெனச் சிவந்த கண்ணை"***

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலின் மயக்கத்தைப் பற்றிப் பேசும்போது, "இது பூத்தரு புணர்ச்சியால் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. இது பாலையில் குறிஞ்சி, கருப்பொருளால் பாலை, ஒழுக்கத்தால் குறிஞ்சி, இதில் உரிப்பொருளோடு உரிப்பொருள் மயங்கிற்று'' (ப.33) என்று கூறுகின்றார். அவரே சொல்கிறார் இது கருப்பொருளால் பாலை, ஒழுக்கத்தால் குறிஞ்சி என்று அப்படி இருக்கும்போது இங்கு உரிப்பொருளோடு உரிப்பொருள் எங்கு? எப்படி மயங்கி வந்தது? எந்த உரிப்பொருளோடு எந்த உரிப்பொருள் மயங்கி வந்தது? என்னும் வினாக்களுக்கான விடையை அவர் சுட்டிக் காட்டாமலேயே தம்முடைய கருத்தைப் பதிவு செய்துள்ளமை நோக்கத்தக்கது.

## உரிப்பொருள்கள் எவை?

ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய உரிப்பொருள் ஒன்று மட்டுமே என்ற எண்ணம்தான் இந்தச் சிக்கலுக்கான காரணம் எனலாம். ஏனெனில் குறிஞ்சிப் பாடலில் குறிஞ்சிக்கான புணர்தல் இல்லையென்றவுடன்

அப்பாடலில் உரிப்பொருள் சுட்டப்படவில்லை என்று நினைக்கக்கூடாது. குறிஞ்சிக்கான உரிப்பொருள் புணர்தல் மட்டுமன்று; புணர்தலுக்குரிய காரணம் ஏதேனும் இருப்பின் அதுவும் குறிஞ்சிக்குரிய உரிப்பொருள்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சிக்குரிய உரிப்பொருள் என்று காலந்தோறும் கூறிவந்தாலும் நாம் புணர்தல் என்ற ஒரு நிலையை மட்டும் மனதினில் கொண்டு பாடலை ஆராய்ந்து வருவதால் ஏற்படுகின்ற குழப்பம் இந்த மயக்கநிலைக்குக் காரணம் எனலாம். தொல்காப்பியரும் இதனைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

***"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்***
***ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை***
***தேருங் காலை திணைக்குறிப் பொருளே"***
***(தொல்., 960)***

அதாவது உரிப்பொருளாவன புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் இவ்வைந்து மட்டுமன்றி அவற்றிக்கான நிமித்தங்களும் அவ்வவ் திணைக்குரிய உரிப்பொருளில் அடங்கும் என்கிறார் தொல்காப்பியர். அந்த நிமித்தங்களை வெளிப்படையாகக் காணமுடியாது என்பதை உணர்ந்ததால்தான் 'தேருங்காலை' (ஆராய்ந்து பார்த்தல்) என்ற சொற்றொடரை உருவாக்கியுள்ளார் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

## நிலம் மயங்குமா?

"சிதர்சினை தூங்கும் அற்சிர அறைநாள்" என்று தொடங்கும் சங்கப் பாடலைச் சான்று காட்டி ந. சுப்புரெட்டியார் பின்வருமாறு கூறியுள்ளார். 'இது பருவ வரவின்கண், வற்புறுத்துந் தோழிக்குத் தலைவி கூறியது. இதில் முல்லையுள் முன்பனி வந்தது. நிலமும் கருவும் மயங்கிற்று' (ப.34).

கருப்பொருள் மயங்கும் சரி. ஆனால் நிலமும் மயங்கி வந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் நிலம் மயங்குமா? மயங்காதா? என்பதைத் தெளிவாகவே 'நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப' என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அப்படி இருந்தும் நிலம் மயங்கி வந்துள்ளது என்று ந. சுப்புரெட்டியார் குறிப்பிட்டுள்ளமை வருத்தத்திற்குறியதாய் இருக்கிறது. உரிப்பொருள் மயங்கும் என்று முதலில் கூறியவர், இறுதியில் உரிப்பொருள் மயங்காது என்கிறார். அவரே நிலம் மயங்காது என்றவர் பிறகு நிலம் மயங்கிற்று என்று கூறுகிறார். இவற்றைக் கொண்டு திணைமயக்கம் குறித்து அவருக்கு இருக்கும் மயக்கநிலையை அறிந்துகொள்ள முடிகிறது.

## திணையைக் கண்டறிதல்

ஒரு பாடல் எந்தத் திணை என்பதைக் கண்டறியும் முறையையும் தொல்காப்பியர் சுட்டத் தவறவில்லை.

*“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே*
*நுவலுங் காலை முறைசிறந் தனவே*
*பாடலுட் பயின்றவை நாடுங் காலை”*

ஒரு செய்யுளில் காணப்படும் முதற்பொருளைக் கண்டு திணையைக் கண்டு பிடிக்கலாம். முதற்பொருள் மயங்கி வந்தாலோ வராமலே போனாலோ கருப்பொருளைக் கொண்டு கண்டு கொள்ளலாம். கருப்பொருளும் மயங்கியோ, வராமலோ போனால் உரிப்பொருளைக் கொண்டு கண்டு கொள்ளலாம். முதலில் எளிதாகத் தெரியும் முதற்பொருளையும் அடுத்தடுத்துக் கடினமாகத் தெரியும் பொருட்களையும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

ந. சுப்புரெட்டியார் இந்த நூற்பாவைக் கொண்டு, திணைப்பாகு பாட்டில் முதற்சிறப்பு முதற்பொருளுக்கும் அடுத்த சிறப்பும் கருப்பொருளுக்கும் அதற்கடுத்த சிறப்பே உரிப்பொருளுக்கும் தரப்பெறுகின்றன் என்பது ஈண்டு அறியத்தக்கதொன்று (ப.34) என்று கூறுகிறார். மேலும் ‘ஒரு திணைக்கு நிலமே மாறுதல் இல்லாத முதன்மையான கூறு ஆகின்றது. இதனாலேயே நிலம் முதற்பொருளாகக் கொள்ளப்பட்டது என்பது அறியப்படும் (ப.34) என்றும் சுட்டியுள்ளார்.

ந. சுப்புரெட்டியார் பொறுத்தமட்டில் முதலில் கூறுவதுதான் சிறப்பு. அல்லது சிறப்பானதைத்தான் தொல்காப்பியர் முதலில் கூறியுள்ளார் என்பதில் உறுதியாக இருக்கிறார் ஆசிரியர். இங்கு அவர் கூறியுள்ள இரண்டில் முதலாவது முதற்பொருளே சிறப்புடையது என்ற அவருடைய கருத்தை மீளாய்வு செய்ய வேண்டியுள்ளது. முப்பொருளில் உரிப்பொருள்தான் எல்லாப் பாடல்களிலும் இருக்க வேண்டும். முதற்பொருளோ கருப்பொருளோ இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஏனெனில் திணையைக் கண்டு பிடிக்க முதலும் கருவும் இல்லாத நிலையில் உரிப்பொருளே கைக்கொடுக்கும். அதனால் உரிப்பொருளே சிறப்பு வாய்ந்தது எனலாம்.

இரண்டாவது நிலையில் நிலமே மாறாததால்தான் நிலம் முதற்பொருளில் வைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறியதைப் பார்ப்போம். முப்பொருளில் நிலம் மாறாது உரிப்பொருளும் மாறாது. அப்படிப்பார்க்கையில் முதற்பொருளாக நிலமும் ஒழுக்கமும் அல்லவா இருக்க வேண்டும். ஏன் ஒழுக்கத்தை முதற்பொருளில் சேர்க்கவில்லை என்ற கேள்வி எழுகிறதல்லவா? தொல்காப்பியத்தில் முதலில் சொல்லப்பட்டதுதான் சிறப்பு என்றால் தொல்காப்பியத்திலுள்ள சொல்லதிகாரம், பொருளதிகாரம் இரண்டும் சிறப்பில்லை என்ற நிலைக்குப் போய்விடும் என்பதை ந. சுப்புரெட்டியார் மறந்தார் போலும். ஏனெனில் தொல்காப்பியம் தோன்றியதன் அடிப்படையே செய்யுளைப் படைப்பதற்காகத்தான். எழுத்தையும் சொல்லையும் கொண்டு செய்யுளை எப்படிப் படைக்க வேண்டும் என்பதை உணர்த்தவே தொல்காப்பியம் இயற்றப்பட்டது. இந்த நிலையை உணராமல் முதலில் இருக்கின்ற

காரணத்தால் எழுத்ததிகாரமே சிறப்பு என்று எண்ணுவது பொருந்தாது என்பதை அறியமுடிகிறது.

## முடிவுரை

- தொல்காப்பியத்தைப் பொறுத்தவரையில் முதலில் சொல்வதுதான் சிறப்பு என்றோ இறுதியில் சொல்வதுதான் சிறப்பு என்றோ கொள்ளக்கூடாது. சூழ்நிலையைக் கொண்டே எதையும் முடிவு செய்தல் நலம் பயக்கும்.
- தொல்காப்பியர் சுட்டிய திணைமயக்கத்தில் ந. சுப்புரெட்டியாருக்கு இருக்கும் மயக்கநிலை தெளிவாக இங்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
- நிலமும் மயங்காது உரிப்பொருளும் மயங்காது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.
- முன்னுக்குப் பின் முரணாகக் கூறும் ந. சுப்புரெட்டியாரின் நிலையும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.
- உரிப்பொருளாக புணர்தல், உள்ளிட்டவை மட்டும் கொள்ளாமல் அவற்றின் நிமித்தங்களையும் செய்யுளில் கண்டறிந்து பார்த்தால் உரிப்பொருள் மயக்கம் நடைபெறாத நிலையை உணர்ந்து கொள்ளலாம்.

## துணைநூற் பட்டியல்


1. அகத்திணைக் கொள்கைகள் - ந. சுப்புரெட்டியார்
2. தொல்காப்பியம் - தொல்காப்பியர்
3. திருக்குறள்
4. தமிழ் - தமிழ் அகரமுதலி
5. வாழ்வியற் களஞ்சியம்.

# 56. ந.சுப்புரெட்டியாரின் "தமிழ்க்கடல் இராய.சொ"



**திருமதி. சு. பாத்திமா**
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்,*
*அரசுக் கல்லூரி, சித்தூர்,*
*பாலக்காடு, கேரளா.*

## முன்னுரை

கற்பனையைக் கலக்காமல் உள்ளதை உள்ளவாறே ஒருவரது வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைச் சுவையுற கூறுவது ஒரு கலையாகும். பேரா.ந.சுப்புரெட்டியார் பெரும் மரபுக்கவிஞர் இராய.சொக்கலிங்கத்தின் நூற்றாண்டு விழாவின் போது அவரைப் போற்றிப் பேசிய சொற்பொழிவின் கட்டுரை வடிவே 'தமிழ்க்கடல் இராய.சொ'. இக்கட்டுரைப் புகழ்பெற்ற அன்னாரது வாழ்க்கையையும் தமிழ்த்தொண்டையும் உணர்த்துவதுடன் அவரது காலத்தில் அரசியல் துறையிலும் கலைத்துறையிலும் இலக்கியத்துறையிலும் புகழ்பெற்று வாழ்ந்து வந்த பிற சான்றோர்களது வாழ்க்கைக் குறிப்புகளையும் அறியச் செய்கிறது. அறிவியல், இலக்கியம், கல்வி பயிற்றும் முறை, கல்வி உளவியல், திறனாய்வு, பயண இலக்கியம், சமயம், தத்துவம் எனப் பலத்துறைகளிலுமாக 130 ற்கும் மேற்பட்ட நூல்களை எழுதிப் புகழ்பெற்ற பன்முகப்படைப்பாளியான பேரா.ந.சுப்புரெட்டியாரால் பெருங்கவிஞர் இராய.சொ. வின் படைப்பு நுட்பத்தை அன்போடும் அனுபவத்தோடும் அணுகி வழங்கிய ஓர் இலக்கியச் சுரங்கமே இந்நூல் என்பதை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்காகும்.

## பன்முகப்படைப்பாளி பேரா.ந.சுப்புரெட்டியார்

பெரும் நூல்கள் பல படைத்துப் பேரும் புகழும் பெற்ற பேரா.ந.சுப்புரெட்டியார் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராக வாழ்வைத் தொடங்கி பல்கலைக்கழகப் பேராசிரியராக உயர்ந்தவர். இந்திய மொழிகளில் முதன்முதலில் தோன்றிய தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராக விளங்கியவர். அறிவியல் நூல்களைப் பழகு தமிழில் தமிழ் இலக்கிய உலகிற்கு வழங்கிய அறிவியல் கொடைஞர். தமிழ் பயிற்றும் முறை, கல்வி உளவியல், கவிதை அனுபவம் முதலிய அரிய பெரிய நூல்களை உருவாக்கிய பெரும் சாதனையாளர். இவரது நூல்கள் வெறும் செய்திகளைத் தரும் களஞ்சியம் மட்டுமல்ல ஆராய்ச்சி நுண்கூறுகளை உடைய கருவூலங்களாகத் திகழ்பவை. இத்தகைய பெருமைகளுக் கெல்லாம் உரிய பெருமானார் அவர் காலத்து வாழ்ந்து வந்த புகழ்

பெற்ற கவிஞர் இராய.சொக்கலிங்கனாரின் அனைத்து இலக்கியச் சாதனைகளையும் திட்ப நுட்பத்துடன் ஆராய்ந்து அவரது இலக்கிய பணிகளை மதிப்பீடு செய்து எழுதிய நூலே 'தமிழ்க்கடல் இராய. சொ' இந்நூல் இராய. சொ. வின் அனைத்து இலக்கியப்பணிகளையும் ஆழ்ந்து ஆராய்ந்து வெளிக்கொணரும் ஆய்வேடாகத் திகழ்கிறது எனலாம். இதில் இராய. சொ. வின் வரலாற்றை, பெரியோர் கேண்மை, பதிப்பித்த நூல்கள், விளக்க நூல்கள், தொகுப்பு நூல்கள், படைப்பு நூல்கள், ஆய்வு நூல்கள், உரைநடைப் படைப்புகள், திருத்தலப் பயணம் என்று எட்டு பகுதிகளாக அமைத்துக் கொண்டு பேசுகிறார்.

## பெரியோர் கேண்மை

இப்பகுதியில்,

***"ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை***
***இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே"***

என்ற அதிவீரராம பாண்டியனின் கூற்றுக்கு இணங்க பேரா.ந.சுப்புரெட்டியாருக்கு இராய. சொ. வின் நட்பு கிடைத்தது என்பதைக் காண்கிறோம். அவர்களது சந்திப்பின் போது நடந்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து இப்பகுதியில் விளக்கியுள்ளார். பேரா.ந.சுப்புரெட்டியார் இந்து மதாபிமான சங்கத்து நிர்வாக சபை உறுப்பினராக இருந்தபோது காரைக்குடி நகராண்மைத்தலைவராகவும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் உறுப்பினராகவும் செயற்குழு உறுப்பினராகவும் இருந்த இராய.சொ. அங்கு நடத்திய கூட்டத்தைப் பற்றிக் கூறும் போது 'இராய.சொ கூட்டம் நடத்தி பதிவு செய்யும் முறையே எங்கும் காணமுடியாதச் சிறப்புத்தன்மைக் கொண்டது. சரியான நேரத்தில் கூட்டத்தை தொடங்கிவிடுவார். வந்த உறுப்பினர்கள் கையெழுத்து இட்டவுடன் கூட்டம் ஆரம்பிக்கும். தீர்மானங்களை உடனுக்குடன் பதிவு செய்வார். பதிவு செய்தபிறகு யாரேனும் உறுப்பினர்கள் வந்தால் எழுதிய தீர்மானங்களுக்குக் கீழே கையெழுத்திடச்செய்வார். மீண்டும் கூட்டம் தொடங்கும் தீர்மானங்கள் பதிவு செய்யப்படும். அதற்குப்பிறகும் வரக்கூடியவர்களை அதனை அடுத்து கையெழுத்திடச் செய்வார். இவ்வாறு செய்வதனால் இந்த நிகழ்ச்சிப் பதிவேட்டை நோக்கினால் தாமதமாக வந்தவர்கள் யார் யார் என்பதை அறிந்து கொள்ளலாம்.' என்று கூறியமைக்கொண்டு இராய.சொ திட்டமிட்டு மிக நேர்த்தியாகச் செயல்களைச் செய்யக்கூடியவர் என்பதை உணர்கின்றோம்.

மற்றுமோர் நிகழ்ச்சியாக இராய. சொ. வின் தலைமையில் நடந்த கம்பராமாயண ஆராய்ச்சி, வில்லிபாரதம் ஆராய்ச்சி முதலானவற்றை நினைவு கூர்ந்துரைக்கின்றார் பேரா.ந.சுப்புரெட்டியார். சனிக்கிழமைதோறும் சிற்றூண்டிக்குப் பிறகு மகளிர் இல்லத்தில் இரண்டாண்டு நடைபெற்ற கம்பராமாயண ஆராய்ச்சி நடைபெறும். கம்பராமாயணத்திலிருந்து நல்ல பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்து வெளியிட வேண்டும் என்று சொ.முருகப்பன் விரும்பியதன் பேரில் இவ்வாராய்ச்சி நடைபெற்றது என்பதை அறிகின்றோம். அதில்

பேரா.ந.சுப்புரெட்டியார், க.தேசிகன், தமிழாசிரியர் பூ.அமிர்தலிங்கன், இராய.சொ முதலானவர்கள் கலந்து கொண்டனர். இராய.சொ. தான் இதன் தலைவர். க. தேசிகன் பாடல்களை இசையேற்றி அற்புதமாக இசைக்க, கூடியிருப்போர் அதன் குறை நிறைகளைப்பற்றி பேசுவர். இராய.சொ. முடிவு சொன்னவுடன் அப்பாடல் நீக்கப்படும் அல்லது வைத்துக் கொள்ளப்படும். இத்தகைய நாட்கள் எனது வாழ்வில் என்றும் பசுமையாக நிற்பவை என்று தமக்குக் கிடைத்த பெறற்கரிய அனுபவத்தை பேரா.ந.சுப்புரெட்டியார் இந்நூலில் பகிர்ந்து கொள்கிறார். இராய.சொ. வின் இலக்கிய ஆர்வத்தைக் கண்டு இந்து மதாபிமான சங்கம் அவருக்கு மணிவிழா எடுத்து தமிழ்க்கடல் என்றப் பட்டத்தையும் வழங்கி பெருமைப்படுத்தியது. மேலும் இவர் காரைக்குடி பெருமாள் கோயிலுக்கு அறங்காவலராகப் பொறுப்பிலிருந்து மகா நோன்பு விழாவை மிகச்சிறப்பாக நடத்தினார் என்றச் செய்தியையும் அறிகின்றோம்.

## பதிப்பித்த நூல்கள்

பேரா.ந.சுப்புரெட்டியார் இராய.சொ. நூல்களைப் பதிப்பிக்கும் பணியிலும் முனைப்புடன் செயலாற்றியிருந்தார் என்பதை அவர் பதிப்பித்த வருணகுலாதித்தன் மடல், சோணசைல மாலை, அருணாசலப் புராணம், திருவிளையாடல் புராணம், பெரியபுராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம், சுந்தர பாண்டியம் போன்ற நூல்களின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். பேரா.ந.சுப்புரெட்டியார் இராய.சொ நூல்களை பதிப்பித்தார் என்று வெறுமனே கூறிச் செல்லாது அதன் சிறப்புக்களையும் சுவையான பகுதிகளையும் எடுத்துரைத்து விளக்கியுள்ளார். இது நமக்கு இராய. சொ. பதிப்பித்த நூல்களைப் பற்றி கூடுதலாக அறியச்செய்வதுடன் பார்வை நூலாகவும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

## விளக்க நூல்கள்

உலக இலக்கிய வரலாற்றில் செய்யுள் வடிவமே முதன்முதலாகத் தோன்றியது என்பதை யாவரும் அறிவோம். தாள் அச்சு இயந்திரம் முதலானவை தோன்றுவதற்கு முன்னர் புலவர்கள் ஓலைச் சுவடியிலேயே எழுதியிருந்தனர். உரைநடை இலக்கியங்கள் தோன்றியதும் புனையப்பட்ட செய்யுள்களுக்கு உரையாசிரியர்கள் உரை எழுதத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து அவற்றிற்குச் சுருக்கமும் செறிவும் நிறைந்த விளக்க நூல்களும் தோன்றலாயின. அவ்வகையில் திருக்குறளுக்கு பரிமேலழகர் எழுதிய உரை நூலுக்கும் அதிவீரராம பாண்டியரால் இயற்றப்பட்ட திருக்கருவை பதிற்றுப்பத்தந்தாதி என்னும் நூலுக்கும் இராய.சொ. விளக்க நூல் இயற்றியமையை பேரா.ந.சுப்புரெட்டியார் இப்பகுதியில் விளக்கியுள்ளார்.

'ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்' என்பதால், பேராசிரியர் கூறியவற்றுள் ஒன்றை எடுத்துரைக்கலாம். 'திருக்குறளின் இன்பத்துப்பாலில் களவியலின் முதல் தலைப்பு 'தகை அணங்கு உறுத்தல்' என்பதாகும். இதன் பொருள் எளிதில் விளங்குவதற்கு இத் தொடரை 'அணங்கு தகை உறுத்தல்' என்று மாற்றிப் பொருள்கொண்டால் எளிதில் விளங்கும் என்று இராய. சொ. விளக்கியதைக் கூறலாம். மேலும் அணங்கு என்றால் பெண், தகை என்றால் அழகு, உறுத்தல் என்றால் வருத்துதல் என்பதனால் மங்கையின் அழகு வருத்தும் முறையையும் யாரை வருத்துகிறது? என்பதையும் ஏன் வருத்துகிறது? என்பதையும் இத்தொடர் உணர்த்தி நிற்கின்றது என்று விளக்குவதனைக் கூறலாம். மேலும் 'வள்ளுவர் பெருமான் தம் காமத்துப்பாலை ஒரு நாடகம் போல் ஆக்கியுள்ளார். செய்திகளைக்கூறும் தலைவி, தோழி, தலைவன் முதலியோரும் நாடக வழக்காகப் படைக்கப் பெற்றவர்கள் என்பதை நினைவிலிருத்திக் கொண்டு அனுபவிக்க வேண்டும். கவிஞர் பெருமான் திருக்குறளின் மற்றப் பகுதிகளைத் தற்கூற்றாக அமைத்தது போல் காமத்துப்பாலை அமைக்கவில்லை. இப்பகுதியில் வரும் கூற்றுகள் யாவும் பிறர் வாயிலாக வெளிப்படுபவை. இவை யாவும் அகத்துறைகளாக வெளிப்படுகின்றன.' (தமிழ்க்கடல் இராய.சொ, ப:67) என மிக எளிமையுடன் விளக்கும் பாங்கினைக் காணலாம்.

## தொகுப்பு நூல்கள்

பேரா.ந.சுப்புரெட்டியார் இராய சொ. நூல்களைத் தொகுத்து வழங்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தார் என்பதை நினைவு கூர்ந்துரைக்கின்றார். 'தமிழ்க்கடல் இராய.சொ. வாழ்வில் தொகுப்பு நூல்கள் பெரும் பங்கு பெறுகின்றன. செட்டிநாட்டுப் பகுதியில் செல்வர்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணம், மணிவிழா முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுது வருகை புரிபவர்கட்கு நூல்களை அன்பளிப்பாக வழங்கும் மரபு இருந்து வருகின்றது. அந்தந்த நிகழ்ச்சிக்கு ஏற்பப் பொருத்தமான நூல்களைத் தொகுத்து அச்சிட்டுத் தரும் பொறுப்பு தமிழ்க்கடலிடம் தான் இருக்கும். இத்தகைய நூல்களின் தொகுப்பு இருபத்து ஒன்று உள்ளன.' (பக்:98-99) என்று இராய. சொ தொகுத்த நூல்களைப் பற்றி விளக்கிக் கூறுகிறார் பேரா.ந.சுப்புரெட்டியார். இராய.சொ. தொகுத்தவற்றுள் மிக அற்புதமான நூல் 'தேனும் அமுதும்' ஆகும். மேலும் காதற்பாட்டு, மாதவ மாலை, அண்ணாமலை மாலை, தில்லைத் திருநடம், நால்வர் வணக்க மாலை, திருக்கானப்பேர் பாமாலை, இராகவன் இசை மாலை, இறைவர் அறுவர் வணக்கம், மீனாட்சி திருமணம், சீதை திருமணம், திருவாசகத் தேன், ஆழ்வார் அமுது, பிள்ளைப்பாட்டு, திருமணப்பாட்டு, தெய்வப் பாமாலை, அங்கங்களின் பயன், தேவாரமணி, முருகன் பாமாலை, பாவைப்பாட்டு போன்ற நூல்களையும் சலிக்காது தொகுத்து வழங்கிய செம்மல் இராய.சொ. என்ற செய்திகளை அதன் சிறப்பான

பகுதிகளையெல்லாம் எடுத்துரைத்து விளக்கிக் கூறியுள்ளமை இலக்கிய வரலாற்றை படிக்கும் உணர்வைத் தருகிறது.

## படைப்பு நூல்கள்

பேரா.ந.சுப்புரெட்டியார் இராய.சொ வின் பன்முகத்திறனையும் எடுத்துரைத்ததைப் போன்று அவரது படைப்புத்திறனையும் விளக்கியுள்ளார். காங்கிரஸ் கட்சியில் ஈடுபாடுடைய இராய.சொ. இயற்றிய அத்துணை நூல்களும் காந்திய நேசம் மிளிர்வதாக இருந்தது. இவர் இயற்றிய காந்தியும் வள்ளுவரும், காந்திப் பிள்ளைத்தமிழ், காந்திக்கவிதை முதலானவற்றின் மூலம் அவரது படைப்புத்திறன் பாங்குற வெளிப்படுகின்றது. காந்தியடிகளைத் தம் தெய்வமாகவும் தம்மை அடிகளின் அடியவனாகவும் வைத்துப் பாடுவதனால் தேவார திவ்யபிரபந்தம் போன்று அவை அமைந்திருக்கின்றது என்று பேரா.ந.சுப்புரெட்டியார் எடுத்துரைத்துள்ளார்.

## ஆய்வு நூல்கள்

காரைக்குடி வாழ்வில் பேரா.ந.சுப்புரெட்டியாருக்குத் தொடர்பு கிடைத்த அரும்பெரும் பெரியவர்கள் மூவர். அவர்கள் கம்பன் அடிப்பொடி சா.கணேசன், சொ.முருகப்பா, இராய.சொ. முதலானவர்களாவர். இம்மூவரும் ஆராய்ச்சி அறிவு நாட்டம் கொண்டவர்கள். இயல்பாகவே பேரா.ந.சுப்புரெட்டியாருக்கும் இந்த நாட்டம் இருந்ததால் அது மேலும் வளர்ந்தது. இராய.சொ ஆய்வு செய்த நூல்கள் ‘கம்பனும் சிவனும்’ ‘வில்லியும் சிவனும்’ என்பதாகும். இராய.சொ தமது ஆய்வு நூலில் ‘இராமகாதையில் சிவன் மொழியாக வந்தப் பாடல் யாதுமில்லை என்பது தவறு. நான்கு பாடல்கள் உள்ளன’ என்று ஆய்வு முடிவினை கூறியதோடு விட்டுவிட்டார். ஆனால் பேரா.ந.சுப்புரெட்டியார் அப்பாடல்களைத் தேடிப்பிடித்து தமிழ்க்கடலிடம் காட்ட அவர் வியந்தார் என்ற செய்தியை அறியும் போது பேரா.ந.சுப்புரெட்டியாரின் இலக்கியத் திறனாய்வின் நுண்ணறிவு வெளிப்படுகிறது.

## உரைநடைப் படைப்புகள்

***“தொன்மைதானே***
***உரையொடு புணர்ந்த யாப்பின் மேற்றே”***

என்ற தொல்காப்பியரின் குறிப்பின்படி உரைநடைத் தோன்றி வளர்ந்தமையை இலக்கிய உலகு நன்கறியும். மறைமலையடிகள், வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், சோமசுந்தரர் முதலானோர் பழஞ்சொற்களைக் கையாண்டு பழந்தமிழ் இலக்கிய நடையில் ஆய்வு நூல்கள் எழுதினர். அவற்றை எல்லோரும் கற்றுணர இயலாத சூழல் நிலவியிருந்த வேளையில் தான் இராய.சொ உரைநடை நூல்கள் எழுத முற்பட்டார். இவர் ‘இன்பம் எது?’, ‘குற்றால வளம்’, ‘காவேரி’ போன்ற உரைநடை நூல்களைப் படைத்தார்.

## திருத்தலப் பயணம்

பேரா.ந.சுப்புரெட்டியார் இராய.சொ.வின் திருத்தலப் பயணத்தையும் இந்நூலில் நினைவு கூர்ந்துள்ளார்.

*"மூர்த்திதலம் தீர்த்தம்*
*முறையாய்த் தொடங்கினாற்கோர்*
*வார்த்தை சொலச் சற்குருவும்*
*வாய்க்கும் பராபரமே"*

என்று திருத்தலப் பயணத்தைப் பற்றி தாயுமானவரைப் போல கூறவேண்டுமானால், திருத்தலப் பயணம் மேற்கொள்வது இன்றியமையாதது என்பதை இராய.சொ. நன்குணர்ந்திருந்தார் என்பதை பேரா.ந.சுப்புரெட்டியார் அவர் தம் திருத்தலப் பயண அனுபவங்களை இந்நூலில் நம்மோடு பகிர்ந்துக் கொள்கிறார். இத்தகையப் பயணம் செய்வோர் ஒருவித பக்தி நிலையை அனுபவிப்பதோடு சைவ, வைணவ தத்துவத்திலும் ஆழங்கால் படுவர் என்று விளக்கியுரைக்கின்றார்.

## முடிவுரை

இவ்வாறு பேரா.ந.சுப்புரெட்டியார் இராய.சொ. வுடன் நெருங்கி பழகிய பதினாறு வருட அனுபவங்களையும் அவரது தொடர்பினால் கிடைத்த இலக்கிய அறிவையும் ஆற்றலையும் எண்ணி எண்ணி மகிழும் பாங்கினை நூல் முழுவதும் காண்கின்றோம். ஒரு பெரும் புலவரின் படைப்பு நுட்பத்தை, திறனாய்வுத் திறனை, பெரும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் எவ்வாறு கூர்ந்து கவனித்து தன் அறிவைப் பெருக்கி நூல்கள் பல கண்ட மாமேதை ஆனார் என்பதையும் இந்நூல் உணர்த்துகின்றது. இவற்றிலிருந்து தொல்காப்பியர் கூறும் கோடன் மரபை அடியொற்றி புகழ் உச்சியைத் தொட்டவர் பேரா.ந.சுப்புரெட்டியார் என்பதை அறிகின்றோம்.

# 57. வாழும் கவிஞர்கள் : ந. சுப்பு ரெட்டியார் பார்வை

**இர. ஜோதிமீனா**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*அரசு கலைக் கல்லூரி*
*கோயமுத்தூர்- 641 018*

ந.சுப்புரெட்டியார் சிறந்த தமிழறிஞர், மிகச் சிறந்த வைணவப் பற்றாளர். ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்றவர். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக 1960 முதல் 77 வரை பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூாயில் கவிச்செம்மல் டாக்டர். நெ.முத்துக் கணேசன் தம் பெயரில் அமைத்துள்ள, தமிழ் அறக்கட்டளைச் சொற்பொழிவை 1998 பிப்ரவரியில் நடத்தினர். இவ் அறக்கட்ளைச் சொற்பொழிவிற்காக, ந.சுப்புரெட்டியார் அவர்கள் வாழும் கவிஞர்கள் பதினாறு பேரின் கவிதைகளைச் சிறப்பாக ஆய்வு செய்துள்ளார். மரபுக் கவிஞர் முடியரசனில் தொடங்கி புதுக்கவிஞர் வைரமுத்து வரை இதில் இடம் பெற்றுள்ளனர். இவர்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையாகும்.

ந.சுப்புரெட்டியார் கவிதை என்பதைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். "கவிதை என்பது காணும் பொருள்களை வருணிப்பதில் இல்லை. அப்பொருள்களைக் காணுங்கால் அவனிடம் எழும் மனநிலையில் உள்ளது. அதே மனநிலைக்கு ஒரு வடிவம் கொடுத்து அழகிய சொற்களால் ஓவியமாக அமைப்பதே கவிதையாகும். கவிதையைப் படிக்கும் நம்மிடத்திலும் அதே மனநிலையை உண்டாக்க வல்லது கவிதை" (வாழும் கவிஞர்கள், ப.12) என்கிறார். இவ்வாறாக கவிதைக்கு உயிர்ப்பும், சுவையும் கொடுத்து படைத்துள்ளவர் கவிதையே காலத்தால் அழியாது நிலைத்து நிற்கும். மரபுக் கவிதையாயினும் புதுக்கவிதையாயினும் மக்களுக்கு ஒரு கருத்தைத் தம் கவிதைகளின் மூலம் உணர்த்துகின்றனர் கவிஞர்கள்.

## கவிஞர் முடியரசன்

பாரதி, பாவேந்தர் வழிவந்த இவர் பழந்தமிழ் இலக்கிய இலக்கண மரபை மீறாதவர். ஆற்றுக்கு கரையில்லை யென்றால் ஊர் பாழ்பட்டு விடும். இலக்கணம் இன்றி படைக்கப்படும் கவிதையால் மொழி பாழ்பட்டு விடும் என்கிறார் கவிஞர். இவர் கவிதைக்குள் இடம்பெறாத பொருளே இல்லை எனலாம். தமிழ் மொழி, இயற்கை, கடல், நிலவு, வானம், பெண்கள், தொழிலாளி, சான்றோர்கள் என்று இவரது எல்லை விரிந்து கொண்டே செல்கிறது. இவரது கவிதைகள் பல்வேறு இதழ்களில் வெளிவந்துள்ளது. கவிதைகளை நூலாக்குவதில் சிறிதும்

விருப்பமில்லாதவர். 1954-55ஆம் ஆண்டுகளில் பேராசிரியர் தமிழண்ணல், முடியரசன் எழுதியது, இதழ்களில் வெளி வந்த கவிதைகளை 'முடியரசன் கவிதைகள்' என்ற பெயரில் தொகுத்துள்ளார்

'முகிலிடை நிலா' என்ற தலைப்பில் ஒரு கவிதை : வடமொழியால் தமிழ் மொழிக்குக் கலங்கம் ஏற்பட்டிருக்கிறது. மேகத்தால் நிலா மறைவதும் பின்னர் சீரிப்பாய்ந்து மேலெழுந்து வருவது போல தமிழும் வேற்றுமொழியின்றித் தூயத் தமிழால் உயர்த்தெழும் என்பதில் கவிஞருக்குள் காணப்படும் தனித்தமிழ் பற்று விளங்கும்.

இயற்கையைத் தாய் என்று வர்ணித்துப்பாடும் பாடல் அற்புதமானது. உழைப்பைப் போற்றும் உத்தம கவிஞர் 'தொழிலாளி' என்ற தலைப்பில் எழுதிய கவிதை குறிப்பிடத்தக்கது. தொழிலாளர்கள்மீது இரக்கமும் முதலாளிகளின் மீது சீற்றமும் கொண்டுள்ளார் கவிஞர். பொதுவுடைமை பற்றுடையவர், பெண் அனங்காகிய 'பூங்கொடி' என்ற பெயரில் எழுதிய காவியம் இவரது படைப்பிற்குத் தக்க சான்றாகும் என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

## டாக்டர் வா.செ.குழந்தைசாமி (குலோத்துங்கன்)

பொறியியல் அறிஞரும் நீர்வளத்துறைப் பேராசிரியருமான இவர் குலோத்துங்கன் எனும் புனைபெயரில் ஐந்து கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். அறிவியல் துறை தமிழில் வளர்ச்சி பெற வேண்டும் என்ற முற்போக்குச் சிந்தனையுடையவர். இவர் ஒரு தமிழ்ப் பாவலன் இல்லை என்றாலும் இவரது கவிதைகள் யாப்பு மாறாத அறுசீர் எண்சீர் விருத்தம் கொண்டவையாகும்.

***"பாவலன் அல்லன் நாள் பாவலனாகி விடும்
ஆவலும் இல்லேன் அறிவியற் கலைகளில்
வல்லமை எய்தவும் வளர்தமிழ் வழியதைச்
சொல்லவும் விழைந்த தொண்டன் யான்"***

என்கிறார். வெற்றுத் தமிழ்ப் பெருமை பேசும் தமிழர்களை, அரசியல்வாதிகளை இவர் தம் கவிதைகளில் சாடுகிறார். இவர் தம் கவிதைகளில் வெளிப்படையாக எழுதியதை ந.சுப்புரெட்டியார் மனம் திறந்து பாராட்டுகிறார்.

பழந்தமிழர் அறிவியல் வளர்ச்சி பெறாத அக்காலத்தில் ஏழுகடலில் கலம் செலுத்தி வணிகம் செய்து பெருமை சேர்த்தனர். இன்று சமூகத்தில் சாதி என்ற புற்றுநோய் வளர்ந்து சமூகத்தைச் சீரழிக்கிறது என்கிறார். பெண்மையைப் போற்றும் வகையில்,

***"பெண்மை எனப்படும் காவியம் - புவி
பேணும் வலிமையான பெட்டகம்"***

என்கிறார். இவரது கவிதைகளில் மனித நேயம், சமூக சீர்திருத்தம், அறிவியல் சிந்தனை போன்றவை காணப்படுகின்றன. 'யாதும் ஊரே' என்ற சங்கப் பாடலை முன்வைத்து இவர்,

***"மானிடர் எம் மினத்தர்***
***மண்ணெலாம் மெமது தேயம்"***

என்று கூறுவார். "குலோத்துங்கன் கவிதைகள் பிற கவிஞர்களின் படைப்புகளில் சற்று வேறுபட்டவை. அனைத்தும் பொது நோக்கில் படைக்கப்பட்டவை. அறிவியல் பார்வையில் அமைந்தவை" (மேலது, ப.153) என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

## டாக்டர் இரா.திருமுருகன்

இசைத் தமிழறிஞரும் பாவலருமான இரா.திருமுருகன் சிந்துப் பாடல்களில் யாப்பிலக்கணம் கண்டவர். இவரது கவிதைகள் ஓட்டைப் புல்லாங்குழல், பன்னீர் மழை என்ற இரண்டு தொகுகளில் வெளி வந்துள்ளன. இவர் பாடல்களில் தமிழுணர்வு மேலோங்கி காணப்படும்.

***"இனித்திடும் மாண்பின் தனித் தமிழ் திகழ்வுற***
***குறிஞ்சித் தேனே கோவலர் குழலே***
***நிழல் மலி மருதே நெய்தல் மலரே***
***இயலே இசையே எழில் ஆர் நடமே"***

நால்வகை நிலமும் அன்பும் அறமும் தமிழ் நிலத்துக்குரிய தனிச்சிறப்புகள் என்கிறார்.

இரா. திருமுருகனாரின் அளவில்லாத் தமிழ்ப் பற்றின் காரணமாகப் போலித் தமிழ்ப் புலவர்களைக் கடிந்து கொள்கிறார். எல்லோரிடமும் இணக்கத்துடன் வாழ்வதே நல்நெறி என்கிறார். ஒற்றுமையால் எல்லாம் கைகூடும் என்ற கருத்தை இவரது பாடலில் காணலாம். 'கைகோத்தால்' என்ற தலைப்பில் 'தனிமரங்கள் கை கோத்தால் தோப்பாகும்' இவை கவிஞரின் ஆழ்ந்த சிந்தனை. பல்வேறு சான்றோர்களை இவர் பாடியுள்ளார். ஔவையார், பாரதியார், காந்தி, பாலவ நேரு, வாணிதாசன், பி.என்.இராசமாணிக்கனார் என்று இன்னும் பலரைக் குறித்துப் பாடியுள்ளார். தமிழுக்கு ஏற்றம் தரும் வகையில் நிகழ்ச்சிகள் எங்கு நடைபெற்றலும் அங்குச் சென்று மகிழ்வுடன் பாடுவார்.

இவர்தம் பாடல்கள் மனப்பக்குவ முதிர்ச்சிக்கேற்பவும் அறிவு முதிர்ச்சிக் கேற்பவும் தரத்தாலும், தனித்துவத்தாலும் உயர்ந்து விளங்குகின்றன என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

## கவிஞர் ஆ. பழநி

செட்டி நாட்டுக் கவிஞர்களில் ஒருவராகத் திகழ்ந்த இவர் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் பணியாற்றினார். மரபு வழிக் கவிஞர். கவிதை உலகின் கற்றுக்குட்டி, முற்போக்கு சிந்தனையுடையவர். இவரது கவிதைகளில் பகுத்தறிவு சிந்தனைகள் காணப்படுகின்றன. 'திருக்குறள் என் காதலி' என்ற கவிதை படிப்பவர் உள்ளத்தில் இன்பத்தை ஏற்படுத்தும். 'வள்ளுவர் செய் திருக்குறளாம் இனிய பெண்ணை வளர்க்கின்ற நூலகமாம்' என்பதில் இவரது கவித்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

***"கல்வியும் செல்வம் என்றால்***
***அதற்குள்ளும் கறுப்புச் செல்வம்"***

என்று இன்று கல்வியில் ஊழல் பணம்தான் ஆதிக்கம் செலுத்துவதைச் சுட்டிக் காட்டுகிறார்.

காந்தியைப் பற்றி ஒரு கவிதை 'காந்தியார் இன்று வந்தால்' காந்தியின் கொள்கைகள் இன்று புதைக்கப்பட்டு விட்டன. அவர் வகுத்த திட்டங்கள் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன என்கிறார். 'காந்திபேர் வாழவைத்துக் காந்தியத்தைக் கொன்று விட்டார்' என்று காந்தியத்தைக் கொன்று விட்டதைச் சுட்டிக் காட்டுகிறார். இவரது கவிதைகள் தமிழ்ப்பற்று, காந்தியப்பற்று கொண்டவை, சொல்நயமும், பொருள் நயமும் கொண்டுள்ளதாக ந.சுப்புரெட்டியார் குறிப்பிடுகிறார்.

## டாக்டர். சவகர்லால்

மரபுக் கவிஞர் 'பொற்கிழி கவிஞர்' எனப் பாராட்டப் பெற்றவர். இவரது கவிதைகள் பல்வேறு இதழ்கள், மலர்கள், கவியரங்குகளில் இடம் பெற்றுள்ளன. எனினும் நூலாக்கம் பெறவில்லை. ஒரே ஒரு கவிதைத் தொகுப்பு மட்டுமே வெளிவந்துள்ளது. இதில் முருகன் வழிபாடு முதலில் இடம் பெறுகிறது. வள்ளுவர், கம்பர் போன்றவர்களையும் காந்தி, பாரதி, பாரதிதாசன், கவிமணி போன்றவர்களையும் பாடியுள்ளார். வள்ளுவரைப் பற்றிய பாடல் வரிகள்,

***"சகல அரசும் நாட்டெல்லை***
***தனையும் கடந்தாய் விண்ணிடிக்கும்***
***இதயத் தளவில் உயர்ந்திட்டாய்" (ப.212) என்கிறார்.***

பாவேந்தரைக் கவிக்குயிலே என்று அழைக்கிறார். தமிழ்நாட்டில் இயற்கையழகிருக்கும் மட்டும் தனியழகின் சிறப்பாக நிற்பாய் என்று பாவேந்தரைப் பாடுகிறார். இயற்கையை பாட இவரும் தவறவில்லை. இயற்கையின் அழகை 'அழகு', 'எழிலைக் கண்டேன்' என்ற இரு தலைப்புகளில் பாடுகிறார். ஆங்கிலக் கவிஞர் வொர்ட்ஸ் வொர்த்துக்கு இணையாக இவரது கவிதைகள் விளங்குவதாக ந.சுப்புரெட்டியார் பாராட்டுகிறார்.

***"தென்றலிலே சதிராடும் வண்டு வந்து***
***தீண்டையிலே குதியோடும் மான்கள் வந்து***
***நின்றவுடன் தலையாட்டும், மயில்கள் சற்று***
***நடந்தவுடன் நகை காட்டும்" என்கிறார்.***

இன்றைய அரசியலின் அவலத்தைச் சுட்டிக்காட்டி 'மறுபடியும் நீ வருவாய்' என்று காந்தியடிகளைத் திரும்ப அழைக்கிறார். அரசியல் வாழ்வில் தூய்மை, நேர்மை, அறத்தொடு வாழ்ந்தாய் நீ, மறுபடியும் மக்களைக் காக்க, மக்களுக்குப் பாடம் சொல்ல வருவாயா? என்று காந்தியை அழைக்கிறார்.

இன்றைய சமூகத்தில் சாதிகள் என்ற பெயரில் நடக்கும் ஆணவக் கொலைகள் இவற்றைக் களைய பாரதியையும் கவிஞர் அழைக்கிறார். காந்தி, பாரதி வாழ்ந்த முன்னைய சமூகம் இன்று இல்லை. கவிஞரின் சிந்தனை ஆழ்ந்த பொருளுடையது. இவரது கவிதைகள் அமுத சுரபி, தேனமுது, தமிழ்ப்பணி போன்ற இதழ்களில் வெளிவந்துள்ளன. கவிஞரின் அனைத்துக் கவிதைகளும் நூலாக்கம் பெற்றால் கவிஞரின் புகழ் உயர்வடையும் என்கிறார் ந.சுப்புரெட்டியார்.

## கவிஞர் குழ. கதிரேசன்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் வாரிசு போல் விளங்கும் செட்டிநாட்டுக் குழந்தைக் கவிஞர். பதினைந்திற்கும் மேற்பட்ட கவிதை நூல்கள் எழுதியுள்ளார். 'நெருப்புக் கொட்டளம்' என்ற கவிதை நூல் இங்கு இடம் பெறுகிறது. இவரது கவிதைகள் பேச்சுத் தமிழிலும் இலக்கியத் தமிழிலும் அமைந்தவை.

***"உலகம் போற்றும் உயர்ந்த தமிழே***
***ஐம்பெருங் காப்பிய அணிகலன் பூண்டு***
***அன்னைத் தமிழ் நீ நடந்தாயே - பல்***
***ஆயிரம் ஆண்டையும் கடந்தாயே"***

என்று அன்னைத் தமிழை இவர் பாடுகிறார்.

இவரது கவிதைகளில் சமுதாயச் சிந்தனை, இயற்கை, சுற்றுச் சூழல் சீர்கேடுகள் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. வரதட்சணைக் கொடுமை, போதை, புகை, மது போன்ற தீய பழக்க வழக்கங்களைச் சுட்டிக் காட்டி இளைஞர்களை நல்வழிப் படுத்துபவையாக இவரது கவிதைகள் அமைகின்றன. 'நம்மால் முடியும்' என்ற தலைப்பில் இவர் எழுதிய கவிதை,

***"இந் நிலை மாற அனைவரும் கூடி***
***எடுக்கணும் சபதம் ஒரு மனதாக***
***நோய் வரும் முன் அதை விழிப்புடன் இருந்தே***
***தடுத்திடவேனும் பெருந்திரளாக!"***

என்கிறார்.

மேற்கூறிய அனைத்துக் கவிஞர்களும் தமிழுக்கும், தமிழ் நலனுக்கும் ஆக்கம் சேர்க்கும் முறையில் கவிதைகள் படைத்துள்ளார்.

மேலும் பல கவிஞர்கள் பற்றிச் ந.சுப்புரெட்டியார் திறனாய்ந்து தெளிகிறார். இக்கவிஞர்கள் அனைவரும் பௌதிக உடல் அழிந்தாலும் கவிதை உலகில் நெடுங்காலம் இவர்கள் வாழ்வார்கள். 'வாழும் கவிஞர்கள்' என்று இவர் தலைப்பு தந்தது சாலப் பொருந்தும்.

# 58. ந. சுப்புரெட்டியார் தமிழ் இலக்கியங்களில் காட்டும் நீதி



**முனைவர் ம. கீதா**
*தமிழ்த்துறைத்தலைவர்*
*ஸ்ரீஇராமலிங்க சௌடாம்பிகை கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 109.*

மானிட வாழ்க்கை அற்புதமானது, பெறற்கரிய மனித வாழ்க்கையைப் பெற்ற மனிதன், தான் பெற்ற இன்பத்தையும், துன்பத்தையும், வாழ்க்கை வழிகளையும், பிறரும் அறிந்து வாழவேண்டும் என்று தொகுத்து வைத்த தொகுப்பே இலக்கியங்கியங்களாகும். தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் அறநெறிகளையும், பண்பு நலன்களையும், ஒழுக்கவிதிகளையும், நிலைப்பேறுடைய குறிக்கோள்களையும் வேறுவேறு வடிவங்களில் நேரடியாகவோ, உள்ளீடாகவோ வலியுறுத்திக் கொண்டே வந்துள்ளன. அந்த வகையில் பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் 'தமிழ் இலக்கியங்களில் அறம்-நீதி-முறைமை' என்ற நூலில் 'நீதியை' பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறம், நீதி - ஓர் விளக்கம்

அறம் என்பது 'கையறம், கருமம், நீர்மை, நூற்பயன் நான்கினொன்று, பெரியோரியல் பினொன்று' என்றும் நீதி என்பது 'நியாயம், முறைமை, மெய்' என்றும் தமிழ் மொழி அகராதியில் நா. கதிரைவேற் பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அறம், நீதி என்ற சொற்கள் ஒரே பொருள் பயப்பன போலவும், அவை வேறு வேறு பொருள்களைத் தெரிவிப்பன போலவும், தோன்றுகின்றன. ஆனால் நுணுகி ஆராய்ந்தால் அறம் என்பது தருமசாத்திரங்களில் கூறப்படும் உண்மை என்பதும், நீதி என்பது நீதி சாத்திரங்களில் கூறப்படும் உண்மை என்பதும் தெளிவாகும். தரும சாத்திரங்களில் கூறப்படும் உண்மைகள் என்றும் மாறாதவை; நீதி சாத்திரங்களில் கூறப்படும் உண்மைகள் காலத்திற்குக் காலம் மாறக் கூடியவை தரும சாத்திரங்களை இந்திய அரசியல் அமைப்புக்கும் (Constitution of India) நீதி சாத்திரங்களை அவ்வப்போது தேவைக்கும் நடைமுறைக்கும் ஏற்ப, சட்டமன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களுக்கும் சான்றாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தரும சாத்திரத்தில் உண்மைகள் மாறாதவை. இருப்பினும் இந்திய அரசியல் அமைப்பிலும் பல திருத்தங்கள் வந்து விட்டதென்றும்,

இந்தத் திருத்தங்களுக்கு ஏற்ப பல சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றதென்றும், மேலும் இந்தச் சட்டங்கள் மக்கள் நலனைக் கருத்தில் கொள்ளாமல், ஆளுங்கட்சிகளின் நோக்கங்களுக்கு ஏற்ப இயற்றப்பெற்று வருவதுதான் அறத்திற்கு மாறாக நடக்கும் வேதனைக்குரிய நிகழ்வாகக் கூறியுள்ளார். ஆனால் இன்றைய நம்நாட்டு மக்களின் நிலையும் இதுதான் என்பதை நாம் மறுக்க முடியாது. சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும். அறத்திற்கும் நீதிக்கும் உள்ள வேற்றுமையைச் சுட்டிக் காட்டியுள்ள திறம் நம்மை வியக்க வைக்கின்றது.

## மனித வாழ்க்கை முறை

பழங்கால மனிதன் காடு மேடுகளில் விலங்குகளைப் போல சுற்றித் திரிந்தான். இப்படி ஓடிக்கொண்டிருந்த மனிதனை நில் என்று சொன்னது நிலம். நிலத்தைப் பண்படுத்தி பயிர்த்தொழில் செய்து வாழ்க்கையை நடத்தி வந்தனர். வேளாண்மைத் தொழிலுக்கு நீர் அவசியம் என்பதை உணர்ந்திருந்தனர்.

***"நீரின்றி அமையாது உலகம்"*** ***(குறள். 20)***

என்ற வள்ளுவர் கருத்தும் இந்த உண்மையை வலியுறுத்துகின்றது. இத்தகைய நீர் வளத்தால் நெல் முதலிய பல்வேறு உணவுப்பொருட்களை உற்பத்தி செய்து செம்மையாக வாழ்ந்து வந்தனர். இருப்பினும் பல்வேறு இடையூறுகளைச் சந்திக்க நேர்ந்தது. பகைவரும், வலிமிக்க விலங்குணர்ச்சியாளரும், களவுத்துறை பயின்றோரும் சேமித்து வைத்த பொருட்களைத் திருடியும், சூறையாடியும், துன்பத்தை ஏற்படுத்தினர். கொடிய விலங்குக் கூட்டங்களும் பயிர் வகைகளைக் கெடுத்தும், அழித்தும் இடையூறுகளை விளைவித்து வந்தன. இத்துன்பங்களிலிருந்து விடுதலைபெற ஒரு தனித் தலைவனைத் தேர்ந்தெடுக்க எண்ணினர். உடலாற்றல், அறிவாற்றல், காத்தற்பண்பு முதலியவற்றால் மேம்பட்டு நிற்கும் வீர வினைஞனை வேண்டினர். இத்தகுதிகள் அமைந்தவன்தான் தமக்கு தக்க 'காவலன்' ஆவான் எனக் கருதினர். இங்ஙனம் மக்களைக் காக்கும் அந்தக் காவலன் தான் அரசனாவான். இப்படித்தான் உலகில் எல்லாப் பகுதிகளிலுமுள்ள அரச பரம்பரை தோன்றியிருக்க வேண்டும் என்று இவர் கூறுவதிலிருந்தும், இலக்கியங்கள் வழியும் நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

## செங்கோல்

முடி, செங்கோல், முரசு, குடை - இவை அரசர்க்குச் சிறந்த அடையாளங்களாகும். ஒருபாற்கோடாது செவ்விய கோல் போலிருத்தலின் அரசனால் செய்யப்படும் தன்மை 'செங்கோண்மை' எனப்பட்டது. மக்கள் காவலன் அரசன் என்பதை மோசிக்கீரனார்,

***"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே***
***மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்***

*அதனால் யான்உயிர் என்பது அறிகை*
*வேல்மிகு தானை வேந்தர்க் கடனே" (புறம், 186)*

என்ற பாடலின் மூலம் குறிப்பிட்டுள்ளார். இப்பாடல் சங்க கால அரசியலின் அடிப்படைக் கருத்தை எடுத்துரைக்கின்றது. உலகில் நலனுக்கு நெல் உயிரன்று; நீர் உயிரன்று; மன்னனின் ஆட்சிநெறிதான் உயிர் இதனை உணர்ந்து செயல்படுவதுதான் மன்னனின் கடமையாகும்.

நாட்டில் உள்ள குடிகள் (Citizens) உடலைப் போன்றவர்கள் அவர்களின் உயிராய்ப் பொருந்தி இயங்க வேண்டியது மன்னனின் கடமையாகும்.

ஐரோப்பா போன்ற நாடுகளில் மன்னன் இறைவனின் அவதாரமாகவே கருதப்பெற்று வந்திருக்கிறான். அக்கருத்தடங்கிய கோட்பாடு (Ideas of Divine Right Theory) இறையுரிமைக் கோட்பாடு என வழங்கப்பெற்றது. இந்து அரசியல் கொள்கையில் (Hindu Political Theroy) மன்னன் இறைவனாகக் கருதப் பெற்றான். "எண்திசை காக்கும் தெய்வங்களின் தன்மைகள் ஓர் உருவாகப் பெற்றவன்தான் அரசன்" என்று மனுதர்ம சாஸ்திரம் குறிப்பிடுகின்றது.

செங்கோலாட்சி செய்யும் மன்னனை வள்ளுவர் இறைவனுக்கு நிகராக வைத்துப் பேசுகின்றார்.

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப் படும்" (குறள். 388)*

இதில்முறை என்பது அறநூலும் நீதிநூலும் நுவலும் நெறி என்று பரிமேலழகர் விளக்கம் கூறியுள்ளார். இதே கருத்தைப் புறநானூற்றுப் புலவரும், சிந்தாமணியில் திருத்தக்க தேவரும், பெரியபுராணத்தில் சேக்கிழாரும், நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் பூதத்தாழ்வரும் கூறியுள்ளார்கள். இக்கருத்துக்களை ஆய்ந்து நோக்கும்போது அரசனை இறைவனாகக் கருதும் நிலை நமக்கு நன்கு புலப்படுகின்றது. இன்றுகூட உயர்நீதி மன்றங்களில் நீதிபதிகள் தம் அறையிலிருந்து (Chambers) நீதி வழங்கும் இடத்திற்குச் (Court) செல்லும் போதும், அறைக்குத் திரும்பும்போதும் வெள்ளியிலான தடித்த கோலொன்றைத் தாங்கிய வண்ணம் ஓர் ஆள் அவர் முன்னே செல்வதைக் காணலாம். இது நீதி வழங்குவதற்கு அடையாளம். இன்று நீதிபதிகள் முன் தாங்கிச் செல்வதுபோல் ஒருகோல் பண்டைய காலத்தில் அரசர்கள் முன் தாங்கிச் செல்லும் வழக்கம் இருந்தது என்பதை புறநானூற்றுப் பாடல்கள் வழி அறியலாம்.

*'அறம் துஞ்சும் செங்கோல்' (புறம், 20)*
*'அறம் புரிந்த தன்ன செங்கோல் நாட்டம்' (புறம் 35)*
*'மெலிவில் செங்கோல் நீ புறங் காப்ப' (புறம். 42)*
*'நமரெனக் கோல் கோடாது' (புறம், 55)*
*'அறவோர் புகழ்ந்த ஆகோலன்' (புறம் 21)*

என்னும் பல்வேறு வரிகளில் செங்கோலின் பண்புகள் பற்றிய குறிப்புக்களைக் காண முடிகின்றது.

'செங்கோல்' அரசனின் செந்நெறித்தாய பண்பினை விளக்கிக் கொண்டிருக்கும் ஓர் சிறந்த அடையாளம் என்பதும் செங்கோலைப் பற்றிய செய்திகள் சங்க காலத்திலும், இன்றும் ஆசிரியர் கண்டு ஆராய்ந்து ஒப்பிட்டுக் கூறும் விதம் 'செங்கோல்' கட்டாயமாக இருந்தது என்பதும் நமக்கு நன்கு புலனாகின்றது.

## நீதி வழங்கும் முறை

திருவள்ளுவர் காலத்திலும் அவர் காலத்திற்கு முன்பும் பின்பும் முடியாட்சியே நடைமுறையிலிருந்தது. இந்தக் காலங்களில் நீதி வழங்குவதற்கு அறங்கூறு அவையங்களும் இருந்தன என்பதற்கு இலக்கியச் சான்றுகள் பல உள்ளன. அரசன் நீதி வழங்கினும் அறநூல்களின் அடிப்படையைக் கொண்டே வழங்கினான் என்பதை அறிய முடிகின்றது. மூவேந்தர்களும் சிறந்த முறையில் நீதி வழங்கினார்கள் என்பதை தக்க மேற்கோள்களுடன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

நீதி வழங்கும் முறை பற்றிய தெளிவான கருத்தைத் திருக்குறளில் காண முடிகின்றது. நேர்மையாக ஆட்சிபுரிதல் என்பது நாம் நினைப்பதுப் போல் அவ்வளவு எளிதல்ல. குடிகளைக் காப்பாற்ற முறை செய்யும்போது அவர்களில் சிலரிடத்தில் குற்றம் காணும்போது தண்டிக்க வேண்டும். குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்காமல் பலமக்களைக் காப்பாற்ற முடியாது. புத்தர் கொள்கை நடைமுறை ஆட்சிக்கு ஒத்துவராது. அறத்துப்பாலில் அன்புடைமையில் தனக்குத் துன்பம் இழைத்தவர்களுக்குத் தீமை செய்யாதிருப்பதே தலையாய அறிவு என்றும் தீவினையச்சத்தில் 'மறந்தும் பிறன் கேடு சூழற்க' என்னும் கூறியவை ஆட்சி முறைக்குத் துணை புரியாது.

தண்டனை வழங்கும் முறைகளில் கொலை தண்டனையும் ஒன்று. மிகப் பொல்லாத குற்றவாளிகளுக்குக் கொலை தண்டனை வழங்கி ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கருதும்போது 'கொல்லாமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்கள் நீதி வழங்குவோருக்குப் பயன் படுவதில்லை. தனிப்பட்டவன் தன் வாழ்க்கை கெடுவதானாலும் பிறருக்குத் தீமை விளைவிக்காமல் வாழவேண்டும் என்பதை அறமாகக் காட்டும் வள்ளுவர், ஆனால் அதே மனிதன் பொது வாழ்க்கையில் பலரைக் காக்கும் கடமையில் உள்ளபோது, பொது வாழ்க்கை கெடுவதானாலும் பிறருக்குத் துன்பம் இழைத்தல் ஆகாது என்று கருதுவது அறியாமை என்றும் இது கடமை செய்வதில் தவறிய குற்றமாகக் குறிப்பிடுகின்றார். ஆகவே பொது வாழ்க்கை கெடாமல் சீர்பட வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டுமென்றும் அது பழியும், பாவமும் ஆகாதென்றும் அதுதான் தலைவனின் தலையாயக்

கடமையாகும் கொலை தண்டனை விதிப்பதும் அவ்வாறு அவன்கடமையாகும். அது பயிரைக் காப்பாற்றக் களையைப் பிடுங்கி எறியும் உழவனுடைய தொழில் போன்றது என்பதை,

***'குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்***
***வழுவன்று வேந்தன் தொழில்' (குறள். 549)***
***'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்***
***களைகட் டதனொடு நேர்' (குறள். 550)***

இக்குறள்களின் மூலம் தண்டனை வழங்குவதில் அவர் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கட்கும், நீதி வழங்கும் பொறுப்பில் உள்ளர்களுக்கும் உள்ள கடமையாகக் குறிப்பிடுகின்றார்.

கொலை தண்டனையை இப்போது பல நாடுகள் ஒழித்து வருகின்றன. கொலை தண்டனையால் ஒருவன் வாழ்வை ஒழிக்கலாமேயன்றி அவனைத் திருத்த முடியாத காரணத்தினால், பல ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து திருத்த முயல்வதே அரசின் கடமையாக உச்சநீதி மன்ற நடுவர்கள் கூறுகின்றனர். கொலை தண்டனை நாகரிகம் இல்லாத பழங்காலத்தில் ஏற்பட்டது என்றும், இது இன்றைய மக்களின் நாகரிக உணர்ச்சிக்கே மாறுபட்டது என்றும் காரணங்கள் கூறுவர். ஆனால், இதற்கு நேர் மாறாகக் கருதும் அறிஞர்களும் நம் நாட்டிலும், மேல் நாட்டிலும் உண்டு. அவர்களுள் உலகப்பெரும் புகழ் பெற்ற எச்.ஜி.வெல்ஸ் என்பவரைச் சான்றாகக் கூறலாம். குற்றவாளிகளில் திருந்தக் கூடியவர்கள் சிலர் என்றும், திருத்த முடியாதவர்கள் பலர் என்றும், திருத்த முடியாதவர்களை எத்தனை ஆண்டுகள் சிறையில் வைத்துக் காத்தாலும் 'கொடிறும் பேதையும் கொண்டது விடா' என்பதற்கேற்ப பயன்படாது என்று கூறுகின்றார். இவர்களை வறுமையாலும், வேறு சூழ்நிலையாலும் திருடின இளங்குற்றவாளிகளுக்குரிய பள்ளிகளில் சேர்த்து அவர்களைத் திருத்துவதுபோல இந்தக் குற்றவாளிகளைத் திருத்தலாம் என்று கருதுவது சிறிதும் பொருந்தாது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் டில்லி மாநகரில் ஓர் இளம் பெண்ணைக் கற்பழித்துக் கொன்ற பில்லாவும் அவன் நண்பன் ரங்காவும் மற்றும் அதுபோலவே அண்மையில் சென்னை விருகம்பாக்கத்தில் ஒரே குடும்பத்திலுள்ள பலரை அதே குடும்பத்திலுள்ள ஒருவர் கொன்றாரே அவரும் திருந்துவார்கள் என்று நினைப்பது சிறிதும் பொருந்தாது. இத்தகைய சமூக விரோதிகளை விட்டு வைப்பதால் சமூகத்திற்கு மேலும் தீமை விளையுமேயன்றி நன்மை ஏற்படாது என்பதை தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தண்டனை குறையக் குறையக் குற்றங்கள் அதிகரிப்பதாகவும், வயலில் களை எடுத்துப் பைங்கூழைக் காப்பது போல் கொலையிற் கொடியாரையும் சமூகத்திலிருந்து நிரந்திரமாகவே அகற்றிவிட வேண்டும் என்ற வள்ளுவரின் கருத்து நடைமுறைக்கு உகந்ததாகவும்

பொருத்தமுடையதாகவும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

ஒருவரை நீண்டகாலம் சிறையில் வைத்திருந்தால் அவரிடம் எஞ்சியுள்ள மக்கட்பண்பும் கெட்டு விடுகின்றனது. அத்துடன் அவர்களைக் காவல் காக்கும் அலுவலரின் பண்பும் கெட நேர்கிறது என்றும் ஒரு கருத்து நிலவி வருகிறது. இக்கருத்துப்படி அவர்களைச் சிறையில் வைத்து அவர்களுடைய மனதை முற்றிலும் பாழ்படுத்தி அவர்களின் உயிரைக் காப்பதைவிட அவர்களின் உயிரைப் போக்கி விடுவதே சிறந்தது என்றும் கூறப்படுகிறது. இக் கருத்திற்கு வள்ளுவர் கருத்து அரண் செய்வதுபோல் அமைகின்றது.

கொலை தண்டனைக் கூடாது என்றும், சிற் சில இடங்களில் அது தேவை என்றும் இரு வேறு கருத்துக்கள் கூறும் ஆசிரியர் மேனாட்டு அறிஞர் வாய்மொழிப்படி திருந்தத்தக்கவர், திருந்ாதவர் என இரு பகுப்புடைய கொலைஞருள் பிற்பகுதியினருக்குக் கொலை தண்டனை சாலும் என்று கூறிய ஆசிரியர், அண்மைக் காலத்தில் நிகழ்ந்த இருபெருங் கொலைக் குற்றங்களைச் சுட்டிக் காட்டி விளக்கிக் கூறும் விதம் நடைமுறை வாழ்க்கை நிலையையும் அவரது யதார்த்த போக்கையும் நமக்குத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

அரசன் அறநூல்களின் வழிநின்று நீதி வழங்கினான் என்றும் அறத்திற்கும் நீதிக்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாகச் சுட்டிக் காட்டி, ஆரம்பகால மனித வாழ்க்கையிலிருந்து அரச பரம்பரை எவ்வாறு தோன்றியது என்பதைக் குறிப்பிட்டுள்ளார். அரசன் முடியாட்சி காலத்தில் மக்களை எவ்வாறு காத்தான் என்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளார். கொலை தண்டனை குறித்து நடைமுறை வாழ்க்கை நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டி விளக்கியுள்ள திறத்தையும், அக்கால நீதி முறையோடு இக்கால நீதிமுறையை ஒப்புமைப் படுத்திக் காட்டியுள்ள சிறப்பையும் நாம் நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது.

# 59. தொல்காப்பியம் காட்டும் திருமண முறைகளும் இல்லறவொழுக்கமும்

**ஆ. நித்யா**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029*

## முன்னுரை

***"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்***
***தெய்வத்துள் வைக்கப்படும்" (குறள். 50)***

என்ற வள்ளுவத்திற்கு இலக்கணமாய்ச் சிறப்புற்றவர் ந.சுப்புரெட்டியார். படைப்பிலக்கியவாதிகளில் தனக்கெனத் தனிமுத்திரையைப் பெற்றுத் திகழ்பவர், பெரும் ஆய்வாளர், பல விருதுகள் பெற்ற இலக்கியவாதி, பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டவர். தன் பேச்சாலும் எழுத்தாலும் முத்திரை பதித்த வித்தகர். பஞ்சமில்லாச் சொல்லாற்றலுக்குச் சொந்தக்காரர், தமிழுக்குச் சிறிதளவேனும் உதவ வேண்டும் என்கின்ற பேராசையாலும், தமிழார்வத்தினாலும் தனது தமிழ் ஆசையை வளர்த்து அது செயலாகப் பொலிவு பெற உதவியவர். தமிழ் நாட்டின் ஒப்பற்ற தமிழ் எழுத்தாளர். பல எழுத்தாளரை உருவாக்கிய ஞானமேதை ந. சுப்புரெட்டியாராவார். ஆசிரியர் அவ்வப்போது எழுதிய 34 கட்டுரைகளைத் தொகுத்து 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை' என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். இந்நூலில் 'தொல்காப்பியம் காட்டும் திருமண முறைகளும் இல்லறவொழுக்கமும்' என்ற தலைப்பில் ந. சுப்பு ரெட்டியாரின் கருத்துக்களை மீளப்பார்வை செய்யப்படுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## திருமண முறைகள்

தலைவியுடன் தலைவன் களவுக் கூட்டம் கூடி வந்தவன். அவளை விரைவில் திருமணம் புரிய இருமுறைகள் காணப்படுகிறது. அவை களவு வெளிப்படுவதற்கு முன் வரைதல், களவு வெளிப்பட்டபின் வரைதல் என்பவையாகும். இதனை,

***"வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று***
***ஆயிரண் டென்ப வரை தலாறே"(களவியல், நூற். 50)***

என்ற நூற்பாவால் அறியலாம். களவு வெளிப்படுவதற்கு முன் வரைதல் எனப்படுவது தலைமகள் அறத்தொடு நிற்கும் முன் தலைவியை உடன்கொண்டு தன் ஊரில் மணந்து கொள்ளுதலாகும். தலைவன்

தலைவியை மணம்புரிய அவளின் உறவினரிடையே வேண்டுவான், அவர்கள் பரியம் கேட்பார்கள். அதை நிறைவேற்ற தலைவன் தலைவியை விட்டுப் பிரிவான். இப்பிரிவு வரைப் பொருட்பிரிவு எனப்படும். பிரிந்து சென்ற தலைவன் பொருள் ஈட்டி தன் சுற்றத்தோடு கூடி தலைவியை மணம் புரிவான். இப்பிரிவால் தலைவனிடம் பொருள் வயிற் பிரிதலும், வேந்தர்க் குற்றுழிப்பிரிதலும், காவற்பிரிதலும் நிகழும். தலைவியின் தமர் தலைவியின் இருப்பையறிந்து தலைவனை நெருங்கி அவனைத் திருமணம் புரிந்து கொள்ள வேண்டுவர். அவ்வேண்டு கோளுக்குத் தலைவன் உடன்பட்டால் அவன் தலைவியின் ஊரையடைந்து அவளை வதுவை புரிந்து வாழ்வுறுவன். தலைவியை ஒருவரும் அறியாமல் உடன் அழைத்துச் சென்று, அவள் சுற்றத்தார் கொடுத்தலின்றியே மணம் செய்து கோடல் என்பது முற்காலத்தில் அறநெறியாகவே கருதப்பட்டது.

***"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே***
***புணர்ந்துடேன் போகிய காலையான"***
***(கற்பியல், நூற்.,2)***

அதேபோல் தொல்காப்பியர் திருமணம் செய்து கொடுக்காமலேயே தலைவனும் தலைவியும் விரும்பித் திருமணம் செய்து கொள்ளுதலும் உண்டு. உடன்போக்கு மேற்கொண்ட இடத்தில் நிகழும் என்கிறார். ஆயினும்,

***"மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்"***
***(செய்யுளியல், நூற்.,179)***

என்ற நூற்பாவால் தொல்காப்பியர் தலைவனும் தலைவியும் அன்பிற் கலந்து பழகும் களவொழுக்கம் வெளிபட்டுத் தெரிய வரும்போது, சுற்றத்தார்களால் மணம் முடித்துத் தரப்படுகிறது. இன்று இத்தகைய முறை தமிழர்களிடையே பெருவழக்கமாக அமைந்துள்ளது என்கிறார் ந. சுப்பு ரெட்டியார்.

## கற்பு

தலைவியின் மேல் அன்பு கொண்ட தலைமகன் அவளின் பெற்றோர்களின் அனுமதிப் பெற்று பலரறிய மணந்து கொண்டு வாழும் மனை வாழ்க்கையே கற்பு எனப்படுகிறது.

***"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்***
***கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்***
***கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"***
***(கற்பியல், நூற்., 1)***

ஒத்த அன்புடைய தலைவனும், தலைவியும் நல்லூழின் புணர்ச்சியால் தலைமகளின் பெற்றோரின் உடன்பாட்டில் திருமணம் செய்து கொள்கின்றனர். உலகத்தார் முன்னிலையில் ஒருவரையொருவர் பிரியாது வாழ்வதற்குரிய உள்ளத்துறுதியை அனைவர் முன் வெளிப்படுத்துகின்றதை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

## கற்பு - விளக்கம்

கணவனை விடச் சிறந்த தெய்வம் உலகத்தில் இல்லை என்றும், அவனை வழிபடும் நெறியையும், தலைமகளுக்கு பெற்றோர்கள் கற்பிக்கின்றனர். அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், விருந்தினர் அவர்களிடம் நடந்து கொள்ளும் முறையைத் தலைமகளுக்கு தலைமகன் கற்பிக்கிறான். இதனைத் தொல்காப்பியர்,

***"அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்***
***அந்தமில் சிறப்பில் பிறர் பிறர் திறத்தினும்***
***ஒழுக்கங் காட்டிய குறிப்பினும்" (கற்பியல், நூற்.5)***

என்று குறிப்பிடுகிறார். அதே போல் தன் கணவனுடன் ஊடல் கொண்டிருந்தாலும் விருந்தினர் வந்தால் வரவேற்று உபசரிப்பதன் மூலம் தன் சினத்தை மறைத்துக் கொள்வாள் தலைமகள் என்று நற்றிணை விளக்குகிறது.

***"அட்டிலோனே அம்மா அரிவை***
***எமக்கே வருகதில் விருந்தே" (நற்., பா.120)***

என்ற தலைவியின் அமைதியை வியந்து தலைவன் பாடியுள்ளான். இல்வாழ்க்கை என்பது துன்பம் அடைந்தவர்களுக்கு ஒன்றை உதவும் அறவாழ்க்கையாக இருத்தல் வேண்டும் என்று கலித்தொகை வலியுறுத்துகிறது.

***"ஆற்றல் என்பது ஒன்று அலர்ந்தவர்க்குதவுதல்"***
***(கலி., பா.133)***

தம்மை நாடி வந்தவர்களின் பசித்துயரை போக்க வேண்டும் அதுவே மிகச் சிறந்த அறமாகும்.

## திருமண நிகழ்ச்சிகள்

தலைவன் தனது சுற்றத்தாரோடு தலைவியின் வீட்டை அடைவான். தலைவியின் சுற்றத்தாரும், எதிர்முரசொலித்துத் தலைவன் சுற்றத்தாரை வரவேற்பர். இதனை ஒரு துறைப் பொருளாகவே கூறுவர். மணிவாசகப் பெருமான்,

***"பூரண பொற்குடம் வைக்க மணி முத்தம்***
***பொன்பொதிந்து***
***தோரண நீடுக தூரியம் ஆர்க்கதொன்***
***மாலயற் குங்***
***காரணன் ஏரணி கண்ணுத லோன்கடல்***
***தில்லையன்ன***
***வாரண வும்முலை மன்றலென் நேன்கு***
***மணமுரசே" (திருக்கோவை, 296)***

இப்பாடலின் மூலம் தலைமகனின் சுற்றத்தாரை இனிது வரவேற்று, அனைவரும் ஓரழகிய கூடத்தில் அமர்ந்து திருமண நிகழ்ச்சியைச்

செயல்படுத்துவர். திருமண நாளும் நாழிகையும் நெருங்க தலைவியின் இல்லம் ஓரழகிய திருமணக் கூடமாக அமைந்து இனிதாய்த் திகழும் மணமுரசுகள் பலவாய் நின்று ஓயாது ஒலிக்கும். மணமக்கள் இருவரையும் திருமணக் கூடத்தில் வந்து அமர்த்துவர். மூத்தோர் அனைவரும் உறுபெருந் துணையாய் நின்ற இறைவனை நினைத்து வழுத்துவர். மணமக்களை நெஞ்சார வாழ்த்துவர். இம்மணவினைக் காலத்தைப் பற்றி தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

மழை, மிகுகுளிர், மிகுபனி இல்லாத காலமே மணவினைக்கு ஏற்றது. ஏனெனில் உழவர்கட்கு அக்காலத்தில் ஓய்வு கிடைக்கும். இக்காலங்களில் அவர்களின் பொருளதார நிலையும் மேம்பட்டுக் காணப்படும். திருமணம் பெரும்பாலும் வளர்பிறையிலே நடைபெறும். எனவே வளர்பிறையாகிய முன்பனிக் காலமே மணவினைக்கு ஏற்ற காலம் என்கிற தொல்காப்பியரின் கருத்தை ந. சுப்புரெட்டியார் வெளிப்படுத்துகிறார்.

## இல்லறவொழுக்கம்

தலைவனும் தலைவியும் பலர் அறிய பெரியோர் முன் திருமணம் புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்துதல் இல்லறவொழுக்கமாகும். தொல்காப்பியத்தில் கற்பு என்பது இல்லறம் என்ற பொருளிலே அமைகின்றது என்கிறார் ஆசிரியர். கற்பு என்பதற்கு,

***“மகளிர் மாந்தர்மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி”***

என்று இளம்பூரணரும், தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதொரு மேற்கோள் என்று நச்சினார்க்கினியரும் கூறுவர். மணவினை நிறைவேற்றிய பின் கற்பு ஐந்து கூறுகளுள் அடங்கும். அவை மலிவு, புலவி, ஊடல், உணர்வு, பிரிவு என்பனவாகும். மலிவு எனப்படுவது மகிழ்ச்சி, களவு முற்றி கற்பு வாழ்க்கையை மேற்கொள்ளத் தொடங்கிய தலைவனும் தலைவியும் இன்புற்று வாழ்தல், தம் களவு காலச் செயல்களை எண்ணி மகிழ்வதை தொல்காப்பியர்,

***“கரணத்தின் அமைந்து முடிந்த காலை<br>நெஞ்சுதனை அவிழ்ந்த புணர்ச்சி”(கற்பியல்,நூற்பா.5)***

என்னும் நூற்பாவில் திருமண நிகழ்வுகள் முடிந்த பின் தலைவன் உரிமையோடு தலைவியிடம் அவளின் உயர்வெண்ணங்களைக் கூறி மகிழ்வதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இம்மலிவுக் காலத்தைப் பற்றிய செய்திகளைக் குறுந்தொகை பதிவு செய்துள்ளது.

***“விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்<br>அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்<br>இரண்டும் தூக்கிற் பொன்போல் மேனி<br>மாணவரி அல்குல் குறுமகள்***

***தோள்மாறு படூஉம் வைகலோ டெமக்கே''***
***(குறுந்தொகை, ப.101)***

இப்பாடல் தலைவியுடன் இல்லறம் நடத்தும் தலைவன் அத்தலைவியினால் வரும் இன்பத்தைப் பற்றி உயர்வாக தோழிக்குக் கூறுவதாக அமைந்துள்ளதை உணரலாம். தலைவி தம் களவுக் காலத்தில் தலைவனை விட்டுப் பிரிந்த துயரை எண்ணிக் கலங்கி இனி இப்பிறவியில் பிரிதல் இருத்தலாகாது என்கிறாள். தலைவன் தலைவியின் மேம்பட்ட குணத்தை எண்ணி வியக்கிறான். தலைவிக்கு இல்லறத்தில் உயிராகப் போற்றப்பட வேண்டிய விருந்தோம்பல் மாண்பை விளக்குகிறான். தலைவியின் இல்லறம் நடத்தும் திறனைத் தோழி கண்டு செவிலி மூலம் நற்றாய்க்குக் கூறப்படுவதாக மலிவு நிலையில் அமைந்துள்ள கருத்துக்களைத் தெளிவாகப் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

புலவி, ஊடல், உணர்வு இவை மூன்றும் ஒன்றோடு ஒன்று பிரிக்க முடியாத பொருண்மையாகும்.

***'புலவி அண்மைக் காலத்தது; ஊடல் அதனின்***
***மிக்கது' (கற்பியல், நூற்., 15)***

என்றும், 'ஊடலை அளவறிந்து நீக்குதல்' (திருக்குறள், 1109) என்பவையே கற்பின் சிறந்த பகுதியாகும் என்கிறார்கள். தலைவன், தலைவியின் உள்ளத்தைப் படம் பிடித்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

புலவி என்பது மனவேறுபாடு; பொய்ச் சினம் என்ற பொருள்படும். தலைவன், தலைவியிடம் புலவி ஏற்படும்பொழுது அவர்களை இணைக்கும் வாயிலாகப் பன்னிருவர் காணப்படுகின்றனர். அவர்கள் தோழி, செவிலித்தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, ஏவலாளர், விருந்தினர், உற்றார் விறலி, அறிவர், கண்டோர் ஆகியோர் தூதுவராகச் செயல்படுவர். இவர்கள் தலைவன் தலைவியின் புலவியை நீக்கி இன்புறச் செய்யுவர். தலைவியின் சினத்தை தவிர்க்க தலைவன் அவளை நெருங்கி பணிதலும் உண்டு.

***"காமக் கடப்பினுள் பணிந்த கிளவி***
***காணுங் காலைக் கிழவோற் குரித்தே***
***வழிபடு கிழமை யவட்கிய லான''(கற்பியல், நூ.19)***

இப்புலவியின் இறுதியில் தலைவனை அன்போடு இடித்துக் கூறி, அவனைத் தழுவுதலே தலைவிக்கு முறையாகும் என்பதை,

***"தாய்போல் கழறித் தழிஇக் கோடல்***
***ஆய்மனைக் கிழத்திக்கும் உதென மொழிப***
***கவவொடு மயங்கி காலை யான'' (கற்பியல், நூ. 32)***

என்று தொல்காப்பியம் சுட்டுகிறது.

தலைவன் பரத்தையிற் பிரிந்து கூற்தொழு முதல் தன் ஊரின் கண்ணேயல்லது வேற்று நாட்டு ஊர்களில் ஆகாது என இறையனார்

களவியல் கூறுகிறது. தலைவி பூப்பெய்திய செய்தியைத் தலைவன் அறிந்த பதினான்கு நாட்களில் தலைவியை அடைகின்ற செய்தியைப் பற்றியும், வாயில்களால் உணர்த்தப்பெற்ற தலைவன் தன் இல்லத்தை அடைவதைப் பற்றியும் ந.சுப்புரெட்டியார் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

## நிறைவாக

ந.சுப்புரெட்டியார் அவர்களின் நடை எளிமையானது. தெளிவானது. கலவைச் சொற்றொடரோ, கூட்டுச் சொற்றொடரோ இல்லாது. தம் கருத்தை மிகத் தெளிவாக இந்நூலில் அமைத்துள்ளார். தொல்காப்பியம் மட்டுமல்லாமல் பல நூல்களிலிருந்தும் சான்றுகளைக் காட்டியுள்ளர். மக்களுக்குத் திருமண முறையைப் பற்றியும், அதற்கு முன் களவுநிலை செயல்பாட்டினையும், திருமண ஏற்பாடுகள், சான்றோர்களின் செயல், இல்லற வாழ்க்கை, கற்பு, விருந்தோம்பல் போன்ற பல நிலைகளை இன்றைய வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் தெளிவான மொழி நடையில் ந. சுப்புரெட்டியார் படைத்துள்ள திறன் போற்றத் தக்கதாகும்.

உணர்வே வாழ்வாய், அறமே குறியாய் வாழ்ந்த சங்கச் சான்றோர்களைப் பற்றி உணர்த்தியுள்ளார். மக்கள் செம்மை வாழ்வு வாழ்ந்து பண்பாட்டின் பாதுகாவலராக விளங்கியதையும், தன்னலமற்ற வாழ்க்கையை மேற்கொண்டதையும் திருமணத்தில் பின்பற்றிய நெறிமுறைகளையும் தொல்காப்பிய வழியில் ஆசிரியர் ந.சுப்புரெட்டியார் விளக்கியுள்ளார்.

## துணைநின்ற நூல்கள்

1. இரா. மோகன், சிற்பியின் கட்டுரைகள்.
2. நற்றிணை.
3. கலித்தொகை.
4. திருக்கோவையார்.
5. தொல்காப்பியம்.

# 60. பன்முக நோக்கில் 'என் அமெரிக்கப் பயணம்'

**முனைவர் க. பழனிவேல்**
*உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர்*
*தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

***"ஊழையும் உப்பக்கம் காண்பார் உலைவின்றித்***
***தாழாது உஞற்று பவர்" - குறள். 620***

என்ற குறளுக்குத் தகையவாய் வாழ்ந்தோரில் குறிப்பிடத்தக்கவர் ந. சுப்புரெட்டியார் என்பதைத் தமிழுலகம் அறிந்து வைத்துள்ளது திண்மை. அண்ணார் பல்வேறு வகைப்பட்ட நூல்களைத் தமிழுலகிற்குத் தந்து சென்றிருப்பது தமிழர்கள் செய்த பேறாகும். அவர் ஒவ்வொன்றையும் அணுகுகின்ற பார்வை நுட்பமானது என்பதை அவரது நூல்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் அமெரிக்கா இன்று உலக அரங்கில் மதிப்புமிக்க நாடாக விளங்கிவரும் வேளையில், அங்குச் சுற்றுலா சென்று வந்த தமது அனுபவத்தை எழுத்து வழியாக அவர் பகிர்ந்து கொண்டுள்ள விதமும், கையாண்டுள்ள உத்திமுறைகளும், எடுத்துரைப்புக்கான காரண - காரியங்களும் "என் அமெரிக்கப் பயணம்" என்ற இந்நூலைக் கட்டுரைக்கான களமாக்கத் தூண்டின.

## கவன ஈர்ப்பு

நூலின் தொடக்கத்திலேயே குறிப்பிடத்தக்க நிழற்படங்களையும், அவை சார்ந்த குறிப்புகளையும் கொடுத்துப் படிக்கின்ற வாசகர் மனத்தை ஈர்த்து விடுகிறார். மேலும் நூலின் உட்பகுதியில் சில இடங்கள் குறித்து விளக்கிச் செல்லுமிடத்தும் முகப்பில் கொடுக்கப்பட்டுள்ள நிழற்படங்களைக் கண்டறிய குறிப்புகளை அளித்து படிப்போரது ஆர்வத்தைத் தூண்டி விடுகிறார். அவ்வாறு நூலைப் படிக்கும் வாசகனிடத்து ஒரு நிழற்படத்தைச் சாதாரணமாகப் பார்த்தற்கும் பின்னர் அதுகுறித்து முழுமையான தகவல்களை அறிந்துகொண்டு அந்நிழற்படத்தைப் பார்ப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளதை உணரும்படி செய்கிறார்.

சில ஆங்கில வார்த்தைகளைத் தமிழில் உரைத்துப் பின்னர் அடிக்குறிப்பில் அதற்கான ஆங்கில வார்த்தையைக் கொடுத்திருக்கும் முறை படிப்பவர்களிடத்து மயத்தைத் தணிப்பதோடு நூலோடு ஒன்றித் தொடர்ந்து வாசிக்க துணைசெய்கிறார்.

## காரண - காரியம்

தாம் சுற்றுலா சென்று வந்ததைப் பலரும் பெருமைபட பேசிப் பார்த்திருப்போம். ஆனால் இவ்வாசிரியர் எவ்விடத்திலும் பெருமை பேசியதாகப் பதிவுகள் இல்லை. பிறகெதற்கு அமெரிக்கா பற்றியும் அதன் மாநிலங்கள், இடங்கள், சிறப்புகள் பற்றி நமக்கு உரைக்க வேண்டும் என்ற வினாவைக் கருத்தில் கொண்டு படிக்கையில் சில இடங்களில் இந்நூலின் வழியாக ஆசிரியர் விடை பகன்று செல்வதை அனுமானிக்க முடிகிறது.

இந்நூலில் அவர் முக்கியமாகக் குறிப்பிடும் நாடுகள் இரண்டு. ஒன்று தான் சுற்றுலா சென்றுள்ள அமெரிக்கா. இரண்டாவது தனது தாய்நாடான இந்தியா. ஒன்று வளர்ச்சியடைந்த நாடு. மற்றொன்று வளர்ந்து கொண்டிருக்கும் நாடு. அமெரிக்காப் பற்றி உரைக்கின்ற போது பல இடங்களில் இந்தியாவோடு ஒப்பிட்டு விளக்குகிறார். இரண்டு நாட்டிற்கும் வெவ்வேறான பெருமைகளும் சிறப்புகளும் உள்ளன. இதனடிப்படையில் இந்நூல்வழியாக இந்திய மக்களுக்கு அவர் அறிவுறுத்துவதாக ஆய்வாளர் கருதுவது, அமெரிக்காப் போன்று இந்தியா வளர்ச்சிபெற வேண்டும் அதற்கு அரசோடு இணைந்து மக்களும் நன்கு இயங்க வேண்டும் அத்தகு வளர்நிலையை அடைய பல இடர்பாடுகளை எதிர்கொள்ளவும், சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்ளவும் நாம் பழக்கப்படுத்திக் கொள்ள தயாராக வேண்டும் என்பதாக எண்ணத் தோன்றுகிறது. மேலும் அவரது ஒப்பீடுகளின் வழியாக இந்தியா எந்தெந்த துறைகளில் வளர்ச்சியடைய வேண்டும் என்பதையும், பழம்பெருமையிலும் ஒற்றுமையிலும் பண்பாட்டிலும் அமெரிக்காவைக் காட்டிலும் இந்தியா சிறந்தது என்பதையும் சான்றுகளோடு விளக்கியுள்ளார்.

வீடுகள் பற்றி உரைக்கும்போது வீட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு ஔவையாரின் பாடலைச் சான்று காட்டிய திறம், வீட்டின் தோற்ற அமைப்பினை மட்டும் கூறிச் செல்லாமல் அவற்றின் அமைப்புமுறைக்கான காரண - காரியத்தை விளக்கிச் செல்லும் திறம் அவரது கூர்ந்த நோக்கை எடுத்துக்காட்டுகிறது.

***“பொதுவான செய்திகள் - வழியாக”***

அந்நாட்டில் எரிவாயு, மின்சாரம், வீட்டுவரி உள்ளிட்டவற்றிலுள்ள வசதிகளை வளர்ச்சிநிலையாகச் சுட்டிகாட்டியதோடு நில்லாமல் குடும்ப அமைப்பினையும் பிள்ளைகளின் வளர்ப்பு, கல்வி நிலைகளைச் சுட்டிக்காட்டி அவ்விடத்தில் இந்தியாவின் நிலையை உயர்த்திக் காட்டும் நிலை அவரது தாய்நாட்டுப்பற்றுக்குச் சிறந்த சான்றாகும். மேலும் அந்நாட்டில் வெளிவருகின்ற பத்திரிக்கைகளை மட்டும் குறிப்பிடாமல் இந்தியா பற்றி வெளிவருகின்ற செய்தித்தாள்கள் எவையெவை என்றும் குறிப்பிட்டுள்ளது மேற்கூறிய கருத்தினை வலுப்படுத்தும்.

அமெரிக்கப் பெண்மணியின் துப்புரவுப் பணி குறித்து பதிவு

செய்கின்றபோது நாயன்மார்களின் தொண்டோடு ஒப்பிட்டு விளக்கும் நிலை படிப்பவர் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் உத்தியாகும்.

## எள்ளல் நடை

தேசபக்தி குறித்து விளக்க வந்தவிடத்து, இல்லங்களில் தேசியக்கொடி பறக்கவிடுவதற்கான காரணத்தைக் கூறி, இறுதியில் 'இ.்.து அமெரிக்காவில் தேசபக்தியின் நிலை' என்று எள்ளல் தன்மையுடன் நிறைவு செய்கையில் அமெரிக்காவின் தேசபக்தி உயர்ந்ததா இல்லையா என்பதை வாசகரின் நிலைப்பாட்டிற்கே விட்டுவிடுவது அவரது திறமைக்குச் சான்றாகும்.

சாலைவிதிகளை மீறிச் செல்லுபர்களின் செயல்பாடுகளை உரைக்குமிடத்து நடப்பு நிகழ்வுகளோடு இணைத்து எள்ளல் தன்மை வெளிப்பட சமூக அவலத்தைத் தொட்டுக்காட்டிச் செல்கிறார்.

## சிறந்த தகவலாளி

அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற தலைப்பின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள செய்திகள் உண்மையிலேயே அமெரிக்கா பற்றி அறிந்து கொள்ளத் துடிக்கும் இன்றைய இளைஞர்களுக்கான ஒரு வரப்பிரசாதம் என்றே குறிப்பிடலாம். அமெரிக்காவின் நில அமைப்புமுறை, இயற்கையழகு, மாநில வாரியாக வரிசைபடுத்திக் கொடுத்துள்ளார். அத்தோடு அவ்வவ் மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்கள், பகுதிகள், கட்டடங்கள், சிறப்புகள் ஆகியவற்றை தெளிவாக விளக்கியுள்ளார். இதிலிருந்தே அமெரிக்கா குறித்த அவரது பதிவுகள் படிப்போர் மனதில் நீங்கா இடம்பெற்றுவிடுவதை உணரமுடிகிறது.

ஐக்கிய நாடுகள் என்ற தலைப்பில் இவர் தந்துள்ள செய்திகளைப் படித்தால் மானிடர்களின் உலகியலறிவு விரிவுபடும் என்பது உறுதி. ஐக்கிய நாடுகள் சபை குறித்த விளக்கங்கள், அதன் தோற்றச்சூழல், நோக்கம், உறுப்புநாடுகள், செயற்பாடுகள், விதிமுறைகள், விதிமுறை மாற்றங்கள் போன்றவற்றைச் சுருக்கமாகவும் நேர்த்தியாகவும் விளக்கிச் செல்கிறார்.

## பண்பட்ட அறிவு

நியூயார்க், நியுஜெர்ஸி, டெக்சாஸ் மற்றும் ஃபிலடெல்ஃபியாவிலுள்ள பல்வேறு பூங்காக்கள் பற்றி எடுத்துக்கூறுமிடத்து அங்குள்ள மலர்களின் அழகையும் பொய்கைகளின் குளிர்ச்சியினையும் பசுமையான தோற்றத்தையும் நம் கண்முன் படிமக் காட்சியாய் விவரிக்கிறார். மேலும் விளையாட்டுத்திடல்கள், அங்கு விளையாடும் குழந்தைகளின் குதூகலம், அறிஞர்களின் சிலைகள், அருங்காட்சியகம் போன்றவைக் குறித்த செய்திகளைப் படிப்போருக்கு ஆர்வத்தைக் கூட்டும்வகையில் உரைத்துச் செல்கிறார். இவற்றையெல்லாம் எடுத்துக்கூறுவதன் நோக்கம் அங்குள்ள மக்கள் எவ்வித அழுத்தமுமின்றி வாழ்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவும் வாழ்க்கை என்பது

மகிழ்ச்சியாக அனுபவிப்பதற்காகத்தான் என்பதையும் அவரவர் உய்த்துணரும்படி உரைக்கிறார்.

அமெரிக்காவின் குறிப்பிடத்தக்க அந்நான்கு மாநிலங்கள் குறித்த செய்திகளை இந்நூலின்வழியாகப் பகிர்ந்து கொண்டே வந்துள்ளார். அதில் திருக்கோயில்கள், அவற்றில் அவர் நிகழத்திய உரைகள் குறித்த விளக்கங்கள், இலக்கியத் தொகுப்புகள், தத்துவ விளக்கங்கள், அவற்றிற்கு வலுசேர்க்கும் இலக்கியச் சான்றுகள், நயாகரா அருவியின் பெருமை, தாய்நாட்டுப்பற்றை விளக்கும் உரையாடல்கள், தமிழ்ச்சங்கம் குறித்த செய்தியில் ஆரம்பித்து அப்படியே விரியும் சைவ, வைணவ தத்துவார்த்தங்கள் ஆகியவை அவரது பண்பட்ட அறிவுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

## வியப்பிற்குரிய வாஷிங்க்டன்

அமெரிக்கத் தலைநகரில் உள்ளவை என்னும் பகுதியில் வாஷிங்க்டன்(டி.சி.) பற்றியும் தலைநகரிலுள்ள முக்கியமான இடங்கள் பற்றியும் அவற்றைக் கண்டுகளிக்க எவ்வளவு மெனக்கெட வேண்டியுள்ளது என்பதையும் தெளிவாக உரைத்துச் செல்கிறார். வாஷிங்க்டன் நகரம் வரலாற்றுச் சிறப்புகள் பலவற்றைத் தன்னுள் கொண்டுள்ளதையும் அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை வைத்தே அதன் சிறப்பினையும் நமக்கு உணர்த்திவிடுகிறார். நிறைய இடங்களின் விவரங்களைப் பெயரோடு விளக்கிய அவர் ஏனோ பணம் அச்சடிக்கும் இடத்தின் பெயரினை மட்டும் உரைக்காமல் செல்கிறார். அதேவேளையில் நம் நாட்டில் பணம் அச்சாகும் இடம் நாசிக் என்பதை அங்குச் சுட்டிச் செல்லும் அவர் ஏன் அமெரிக்காவில் பணம் அச்சடிக்கும் இடத்தின் பெயரினை மட்டும் உரைக்காமல் செல்கிறார் என்கிற வினா மனதில் எழுவதைத் தவிர்க்க இயலவில்லை.

## உள்ளக்கிடக்கை

தனது மகன் தன்னுடனே அமெரிக்காவில் தங்கிவிடுமாறு வேண்டுகோள் வைத்ததையும் அதனை ஏற்க இயலாத தனது நிலைப்பாட்டினை அவர் விளக்கிச் செல்லுகின்ற நிலையும் படிப்போருக்கு உணர்ச்சிப் பெருக்கைத் தூண்டக் கூடிய இடமாகும். வளர்ச்சியடைந்த அமெரிக்காவின் புகழைப் பல இடங்களில் ஆசிரியர் உயர்த்திக் காட்டுகிறார். எனினும் அமெரிக்காப் போன்ற வளர்ந்த நாடுகளில் பல வசதி வாய்ப்புகள் இருப்பினும் நம் இந்தியாவில் அதிலுங் குறிப்பாகத் தமிழ்நாட்டில் வசிக்கையில் கிடைக்கின்ற அன்பும் நிறைவும் உலகில் வேறெங்கினும் கிட்டாது என்ற தம் உள்ளக்கிடக்கையை பசுமரத்தாணியாய்ப் பதித்து செல்கிறார்.

## நிறைவாக

- ந. சுப்புரெட்டியாரின் ‘என் அமெரிக்கப் பயணம்’ எனும் இந்நூல் ஒரு பயண இலக்கியம் மட்டுமன்று.

- அமெரிக்காவின் வரலாறு, சிறப்புமிக்க கட்டடங்களின் வரலாறு இன்னபிற வரலாறுகளை எடுத்துரைக்கும் வரலாற்று அருங்காட்சியகம்.
- அரசு, அரசியலமைப்பு, செயற்பாடுகள் என அரசியல் சாசனம்.
- பண்பாடு, கலச்சாரத்தைப் பறைசாற்றும் பண்பாட்டுக் கருவூலமாகும்.
- அமெரிக்காவின் இயற்கையழகை அள்ளியெடுத்து வந்து கொட்டும் காட்சிப்பேழை.
- சுற்றுலா செல்பவர்களுக்குத் தேவையான முழுத்தகவல்களையும் தருகின்ற சுற்றுலாக் கையேடு
- மானிடர்களின் செயல்களைக் காரண - காரியத்தோடு எடுத்துக்கூறி ஒப்பீட்டாய்கின்ற திறனாய்வு நூல்.
- உளவியல், சமுதாயப் பார்வை கொண்ட சமூக அறிவியல் நூல்.
- வியத்தகு நிகழ்வுகளையும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்ற பொழுதுபோக்கு அம்சம் கொண்ட நூல்.
- பல்வேறு செய்திகளைச் சுவைபட தொகுத்து வழங்கும் கதம்ப நூல்.

# 61. ந.சுப்புரெட்டியார் பார்வையில் சகோதரத்துவம்

**இரா. வாணிபிரபா**
*ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

உடன்பிறப்பு இல்லா உடம்பு பாழ் என்பது ஆன்றோர் வாக்கு. இராமனுக்குத் தம்பியர் பலர். உடன் பிறந்தோர் மூவர். உடன் பிறக்காவிட்டாலும் அன்புத் தளையால் பிணிக்கப்பட்டுக் கூடச் சேர்ந்தோர் மூவர். தனக்கு ஆறு தம்பியர் இருக்கின்றனர் என்பதை இராமனே காவியத்தில் பலமுறை கூறுகின்றான்.

## வீடணன் கூற்று

இலங்கைச் செல்வத்தை அடைவதற்கு அடையாளமாக இலக்குவன் வீடணனுக்கு முடி சூட்டுவதற்கு முன்பே அவன் இராமனை வணங்கி, 'தீமையும், வஞ்சனையும் உருவெடுத்தாற் போன்ற இராவணனுக்குத் தம்பியாகப் பிறந்த தொடர்பு முதலில் அறும்படி செய்தல் வேண்டும். அதன் பிறகு பரதனுக்குச் சூட்டிய அதே கீரீடத்தையே தனக்கும் ஆட்டி அருள் புரிய வேண்டும்' என்று வீடணன் கூறுவதன் மூலம் இராமன் முதலானோர் மேல் அவன் கொண்ட சகோதரப் பாசம் புலப்படுகின்றது.

## இராமன் உறுதி கூறுதல்

இராமன், 'நாங்கள் காட்டிற்கு வந்த பிறகு குகனுடைய நட்பினால் நாங்கள் ஐவரானோம். பிறகு சுக்ரிவன் வந்து சேர அறுவராக ஆனோம். இப்போது நீயும் எனக்குத் தம்பியாகி எழுவராகிவிட்டோம். என்னைக் காட்டுக்கு அனுப்பியதால் உம்தந்தை அதிகப் புத்திரர்களை அடைந்து விட்டான்' என்கிறான்.

***"குகனொடும் ஐவர் ஆனேம்;***
  ***முன்புபின் குன்று சூழ்வான்***
***மகனொடும் அறுவர் ஆனேம்;***
  ***எம்முறை அன்பின் வந்த***
***அகன் அமர் காதல் ஐய!***
  ***நின்னொடும் எழுவர் ஆனேம்!***
***புகல் அரும் கானம் தந்து***
  ***புதல்வரால் பொலிந்தான் உந்தை"***

என்று காவிய வரிகளில் இராமன் கூறும்போது ‘எந்தை’ என்று கூறாமல் ‘உந்தை’ என்று கூறியாதல் வீடணனைத் தன் தம்பியாக அங்கீகரித்ததை வற்புறுத்துவதற்காகவே என்று ரெட்டியார் கூறுகிறார்.

## கூடி வாழும் தம்பியர் பெருமை

“கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” வறுமையிலும் செல்வத்திலும் சேர்ந்து வாழும் சகோதரர்கள் எவ்வித பகைக்கும் அஞ்ச வேண்டியதில்லை என்பது அனுபவத்தில் நாம் காணும் உண்மை. நல்ல தம்பியர் கூடப் பிறந்தாலும், சேர்ந்த தம்பியர் சான்றோராக அமைந்து விட்டதாலும் இராமன் தன் வாழ்க்கையில் பல பகைகளையும் எளிதாகச் சமாளித்துக் கொள்கிறான்.

## பரதனின் சகோதர பாசம்

***“தாயுரை கொண்டு தாதை***
***உதவிய தரணி தன்னைத்***
***தீவனை என்ன நீத்துச்***
***சிந்தனை முகத்தில் தேக்கி”***

சென்ற பரதனை ஆயிரம் இராமர்களும் அவனுக்கு ஒப்பாகார் என்று குகனால் பாராட்டப் பெற்ற பரதனை தம்பியாகப் பெற்றதால் மந்தரையின் சூழ்ச்சியால் நேரிடவிருந்த பலதுன்பங்களும் விலகிப் போகின்றன. இராமன் பெயரை வைத்துக் கொண்டு நாட்டை ஆண்டு வந்ததால் பதினான்கு ஆண்டுகளிலும் நாட்டில் யாதொரு குழப்பங்களும் உண்டாகவில்லை.

## இலக்குவன் பெருமை

இராமனைப் பிரியாதான் ஆகிய இலக்குவனைத் தம்பியாகப் பெற்றதினால் இராமன் எவ்வித பகைக்கும் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லாமல் போகின்றது என்று பரதனும் இலக்குவனைப் பாராட்டுகிறான். அன்பே வடிவாக உடைய பரதன் இலக்குவனை,

***“யான் ஏன்றும் முடிவு இலாத***
***துன்பத்துக்கு ஏது வானேன்***
***அவன் அது துடைக்க நின்றான்”***

என்று பாராட்டுகிறான்.

சுக்ரீவன் நட்பாலும், வீடணனுடைய சேர்கையாலும் சிறைப்பட்ட செல்வியின் இருப்பிடத்தை அறிவதிலும் அவளை மீட்பதிலும் பல ஆதரவுகள் கிடைக்கின்றன. இலக்குவன் தனது வாழ்விலும், தாழ்விலும் தன்னை நிழல்போலத் தொடர்ந்து வந்ததாலும் இராமன் முன்பு எவ்விதப் பகையும் எதிர்த்து நிற்கவில்லை என்பதை இராமனே பலமுறை பாராட்டியுள்ளார்.

யாவருக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கிய இந்திரசித்து அனுமன் முன்னதாக மாயா சீதையை வெம்பு வீழ்த்திவிட்டு, அயோத்தி மீது

சென்று அங்குள்ளவரைக் கொல்லப் போவதாகப் போக்குக் காட்டி விட்டு நிகும்பலை யாகத்துக்குப் போகின்றான். நிகும்பலை யாகம் வெற்றியுடன் முடிந்தால் தான் இராம இலட்சுமணர்களை எளிதில் வெல்ல முடியும் என்று எண்ணியே இவ்வாறு செய்தான் இந்திரசித்து. இதனை வீடணன் மூலம் இராமன் அறிந்து இலக்குவனையும் யாகத்தைச் சிதைத்து வருமாறு அனுப்புகின்றான்.

> ***"எண்ணாயிரம் கோடி இராவணரும்***
> ***வீண்ணாடரும் வேறுல கத்கெவரும்***
> ***நண்ணா ஒரு மூவரும் நண்ணிடினும்"***

இலக்குவன் முன்பு நிற்க முடியாது என்பதை இராமன் அறிந்து தான் நிகும்பலை வேள்வியை அழித்து இந்திரசித்தையும் கொன்று வரும்படி அவனை அனுப்புகின்றான்.

## இராமனின் தந்தை உள்ளம்

இலக்குவன் தான் புறப்படுவதற்கு முன்னதாகக் கண்ணீர்த் துளிகளுடன் வருந்தி நின்ற இராமனை வணங்கிய இலக்குவன், வஞ்சகனாகிய இந்திரசித்தன் தலையைக் கொண்டு வருவதாகச் சபதம் செய்து செல்கிறான்.

> ***"தான்பிரி கின்றி லாத***
> ***தம்பிவெம் கடுப்பிற் செல்லா***
> ***ஊன்பிரி கின்றி லாத***
> ***உயிரென"***

இராமன் நிற்கிறான். வேள்வி காத்தற் பொருட்டு விசுவாமித்திரருடன் இராமன் சென்றபோது தசரதன் அடைந்த நிலையை இராமன் இலக்குவனைக் கண்டு அடைகின்றான். இந்நிலை இராமனின் தந்தை அன்பை வெளிப்படுத்துவதாக சுப்புரெட்டியார் கூறுகிறார்.

பல விதமான மாயப்போர் புரிந்த இந்திரசித்தன் தலையை அறுத்து இலக்குவன் பாத காணிக்கையாக வைத்து இராமனை வணங்குகின்றான். இராமன் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகின்றான். வெற்றித் திருமகள் தழுவிய தம்பியின் பொற்றோளாகிய மலையினை நோக்குகின்றான்.

> ***"வம்பு செறிந்த மலர்க்கோயில்***
> ***மறையோன் படைத்த மாநிலத்தில்***
> ***தம்பி புடையான் பகையஞ்சான்***
> ***என்னும் மாற்றம் தந்தனையால்"***

என்று இலக்குவனைப் பாராட்டுகின்றான். 'தாமரை மலரை வாழ்விடமாகக் கொண்ட நான்முகன் உண்டாக்கிய இவ்வுலகத்தில் தம்பியை உடையவன் எந்தவிதமான பகைக்கும் அஞ்ச வேண்டியதில்லை' என்று புகழ்கின்றான்.

இராமன் காடாளச் சென்றபோது எல்லாவித திறமையும் உடைய இலக்குவன் இராமனைக் காப்பதற்காக உடன் சென்றது இராமனது நற்பேறு என்று சொல்ல வேண்டும். ஒரு தாய் வயிற்றில் பிறக்காவிட்டாலும் சிறு வயது முதலே இராம இலக்குவனர்கள் விடாது பொருந்திய நூல் இழை போல ஒருவரை ஒருவர் பிரியாது இருந்து வந்தனர். இதை நன்கு அறிந்த தசரதன் தருவனத்துள் தான் இயற்றும் தவ வேள்வியைக் காப்பதற்கு, 'நின் சிறுவர் நால்வரினும், கரிய செம்மல் ஒருவனைத் தந்திடு' என்று விசுவாமித்திர முனிவர் கேட்டபோது கூட இராமனுடன் இலக்குவனையும் சேர்த்தே தருகின்றான்.

சிற்றன்னைதான் இராமனைக் காட்டிற்குப் போகுமாறு செய்தாள் என்ற செய்தியைக் கேட்டவுடன் இலக்குவன் மூட்டாத காலக்கடைத்தீ எனக்கோபம் கொள்கின்றான். தனு வேந்தித் தெருவில் நின்று கொண்டு 'யானே. இராமனுக்கு மௌலி கவிக்கப் போகின்றேன். தடுப்பவர் வந்து தடுக்கட்டும்' என்று போர் முழக்கமும் புரிகின்றான். கனன்று பொங்கும் ஆறாக்கனல் போன்ற இலக்குவனிடம் அஞ்சன மேகம் போன்ற இராமன் **'பொறு பொறு'** என்று மாறாத் தனிச்சொல் துளிமாரி வழங்கிக் கொண்டு வருகின்றான். எல்லாம் விதிவழிதான் நடை பெறும் என்று அவனுக்கு எடுத்துக் கூறி, 'உன் விருப்பத்திற்கு மாறாக நடப்பவர் பெற்ற தாயும் தந்தையும் ஆவர் என்றால் நீ கோபிப்பது சரியன்று' என்று எடுத்துக்காட்டு கின்றான். அன்பும் கோபமும் கலந்து நிறைந்து ததும்பும் நிலையிலுள்ள இலக்குவன்,

***''நல்தா தையும் நீ; தனிநாயகன் நீ; வயிற்றில்***
***பெற்றாயுய் நீயே; பிறர் இல்லை''***

என்று சிறப்பும்மையுடனும் தேற்றேகாரத்துடனும் பதில் கூறுகின்றான். இராமன்தான் தனக்குத் தாயும் தந்தையும் தலைவனும் என்று சொல்கின்றான். தன் அண்ணனிடம் அவன் கொண்டுள்ள அன்பு இங்ஙனம் பீறிட்டுக் கொண்டு வெளிப்படுகின்றது.

இங்ஙனம், அன்பும் பக்தியும் சாமர்த்தியமும் தியாக உள்ளமும் உடைய இலக்குவனைத் தம்பியாகப் பெற்ற இராமன் எதற்காகப் பகைக்கு அஞ்ச வேண்டும்? 'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்' என்ற பழமொழிக்கு இலக்குவன் அல்லவா இன்றளவும் இலக்காக நிற்கின்றான். இவ்வுலகம் அழியும் வரை அவன்தானே சான்றாக நின்று ஏனைய தம்பிமார்களுக்கு வழிகாட்டப் போகின்றான்.

# 62. ந.சுப்புரெட்டியாரின் உணர்ச்சியின் தத்துவம்

**முனைவர். மு. ருக்மணி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

ஒரு ஜீவநதியின் தொடர்ச்சியைப் போல் இலக்கியத்தின் பயணமும் தொடர்ச்சியானது. கவிதையின் வரலாற்றின் தேக்கங்கள் மறைந்து காலத்தின் எதிரொலியாய்ப் புதுக்குரல்களையும் கேட்க முடிகின்றது. புதிய பாதைகள், புதிய பயணங்கள், புதியபார்வைகள் கவிதைகளிலும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ந.சுப்புரெட்டியர்க்கு கவிதையைப் பற்றிய திடமான சிந்தனை இருந்தது என்பதை அவரது கவிதையனுபவம் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. 'கவிதைக்குப் பல அம்சங்கள் உண்டு. ஆனால் அவைகளின் கூட்டுறவு மட்டும் கவிதையை உண்டாக்கி விடாது. கவிதையின் முக்கிய பாகம் அதன் ஜீவசக்தி. கவிதை மனிதனின் உணர்ச்சியால் பிறந்த உண்மை. உள்ளப்பாற்கடலில் பிறந்த அமிர்தகலசம். மனித உள்ளம் யதார்த்த உலகத்துடன் ஒன்றுபட்டோ பிரிந்தோ கண்ட கனவு. அது உள்ள நெகிழ்ச்சியிலே உணர்ச்சி வசப்பட்டு வேகத்துடன் வெளிப்படுகிறது அது தான் கவிதை'. கவிதையின் அனுபவத்தைச் சொற்களால் வரையறைப்படுத்தி அளந்து காட்ட இயலாது.

உடலும் உள்ளமும் நன்னிலையில் உறவு கொண்டிருந்தால் தான் நல்லுணர்ச்சிகள் தோன்றி கவிதையை அனுபவிப்பதற்குத் துணைசெய்யும் உணர்ச்சிகளின் திரட்சியே பற்றுக்கள். பற்றுக்களே நம்மைக் கவிதைகளைப் படிக்கத் தூண்டுபவை. உணர்ச்சிகளே மீப்பண்புகளுக்கும் காரணமாக இருப்பவை. நாம் கவிதையைப் படித்துத் துய்ப்பது தூண்டல்-துலங்கல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. வெளியுலகிலுள்ள பொருள்கள் நம் புலன்களைத் தூண்டுவதால்தான் நாம் செய்திகளை அறிந்து கொள்கின்றோம். இதைத் தவிர நமக்குக் கருத்து நிலைச் செயல்களாலும் தூண்டல்கள் ஏற்படுகின்றன. ஒரு கவிதையைப் படிக்கும்பொழுது இவ்வகைத் தூண்டல்களே நமக்கு ஒருவித கிளர்ச்சியைத் தரும். வாழ்க்கையனுபவத்தில் இவ்வுணர்ச்சிகள் ஏற்படுங்கால் இத்தகைய உடல் மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பது உளவியல் காட்டும் உண்மை. வெகுளிச்சுவை, அவலச்சுவை, மருட்கைச் சுவை போன்ற சுவைகள் உள்ள கவிதைகளைப் படிக்கும்பொழுது அவற்றால் பெறும் செய்திகள் பெரும் மூளையில் பல்வேறு எண்ணக் கோவைகளை எழுப்பி

மேற்குறிப்பிட்ட நிலைமைகளை உண்டாக்குகின்றன என்று ஊகம் செய்யலாம். இதனால் தான் கவிதையிலுள்ள கவிஞனின் உணர்ச்சிகள் நம்மிடமும் எழுகின்றன. உண்மையான கவிதையனுபவமும் நம்மிடம் உண்டாகின்றது.

## படைப்பாளி

கவிஞர்களுடைய குறிப்பிடத்தகுந்த பண்பு அவர்கள் கொண்டுள்ள வியப்புமிகு சொல்லாட்சியேயாகும். அவர்கள் எவ்வளவு சொற்களை அறிந்து வைத்துள்ளனர் என்பதைவிட அவர்கள் அச்சொற்களைக் கையாளும் முறைதான் அவர்களைக் கவிஞர்களாக உயர்த்துகிறது. எனவே படைப்பாளன் தான் கூற வந்த செய்தியான உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் முறையே உத்தி எனப்படும். இவருடைய கவிதையனுபவம் எனும் நூலில் நாம் அதை அறிய முடிகின்றது.

## உளவியல்பார்வை

பிறந்தது முதல் இறப்பது வரை மனிதர்கள் உலகத்தில் வாழ்கின்றனர். உலகம் எனும் இப்பிரபஞ்சம் பெருவெளி ஒரு புறமிருக்க மனிதருள் இயங்கும் உலகங்களை உளவியலாளர் சுட்டிக் காட்டுவர்.

***தனக்கே தனக்கான மனஉலகு (Psychological world)***
***தானாகப் புனைந்து கொள்ளும் புனைவுலகு (Mythological world)***
***சில பிராயங்களில் உருவாக்கிக் கொள்ளும் கனவுலகு (Dream world)***
***தான் வாழும் சமூகங்கள் புறவுலகு (Social world)***

என்பன. மனிதர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வினாடியும் தனக்கேயான மனவுலகிலும் தான் வாழ் சமூகஞ்சார் புறவுலகிலும் ஏக காலத்தில் வாழ்வதில் எதிர்கொள்ளும் முரண்களின் வெளிப்பாடுகளே கோபம், எரிச்சல், வெறுமை, பொருளற்றதன்மை, குற்றஉறுத்தல் என்பன. நெருக்கடிகள் அளவிற்கு அதிகமாகும் போது மனநிலைச் சிதைவிற்கும் ஆளாக நேர்கிறது. இந்நிலை நேரா வண்ணம் ஒருங்கமைப்பதில் இலக்கியப்படைப்புகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

கனவுலகு தற்காலிகமானது. வாழ்வின் சில பிராயங்களில் தோன்றி மறைவது புனைவுலகு சிலரால் மட்டுமே அரிதாக உருவாக்கப்படுவது மனவுலகு அகப்புறஉலகு புறவுலகு எல்லோருள்ளும் எல்லாக் காலங்களிலும் இருப்பது. இப்பொருண்மையில் ந.சுப்புரெட்டியாரின் கவிதையனுபவத்தில் உணர்ச்சிகள் ததும்புகின்றன.

## உடலும் உள்ளமும்

உடலுக்கும் உள்ளத்திற்கும் உள்ள உறவுபற்றிய பிரச்சனை நீண்ட காலமாகவே இருந்து வருகின்றது. எனினும் அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்க முறையில் அறிவியல் அடிப்படையில் இப்பிரச்சனைக்கு இன்னும் தீர்வு காணப்பெறவில்லை. உடல்வேறு

உள்ளம்வேறு என்று சாதாரண மக்கள் எண்ணினாலும் இரண்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை எவரும் மறுக்க முடியாது. உடல் காய்ச்சலால் பீடிக்கப் பெற்றிருக்கும் பொழுது நம்மால் நன்கு சிந்திக்க முடிகிறதில்லை. சுரப்பிகளில் ஊறும் சாறுகள் தக்க முறையில் அமையாவிடில் உடல்நிலை பாதிக்கப்பெற்று உள்ளமும் மீப்பண்புகளும் மாறுகின்றன.

உள்ளம் உடல்மேல் எங்ஙனம் ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதைச் சிறிது பார்ப்பபோம். ஒருவர் அச்சத்தினால் உடலைக்கொண்டு செய்யும் செயல்களைச் சாதாரணமாக அவரால் செய்ய இயலாது என்பது யாவரும் அறிந்தது.(உ.ம்)ஒருவரை ஒரு நாய் அல்லது காளை விரட்டும் பொழுது சாதாரணமாக அவரால் தாண்டமுடியாத குட்டிச் சுவரையும் அவர் தாண்டிக் குதித்து ஓடுகின்றார் சில சமயம் அச்சம் ஒருவருடைய உடல் வன்மையை மிகவும் குறைத்து அவரை எவ்விதச் செயலும் ஆற்றமுடியாதபடி செய்து விடுவதுண்டு. மனத்திண்மையால் சிலர் செயற்கரிய செயல்களையும் நிறைவேற்றுகின்றனர். பொறுக்க முடியாத துன்பங்களையும் சகித்துக் கொள்ளுகின்றனர். மகிழ்ச்சியான செய்தியைக் கேட்டதும் பசி தோன்றாது போகின்றது. துக்கமான செய்தி வந்தால் உள்ளம் தளர்ந்து போகின்றது உணவை உற்சாகத்துடன் உண்டால் செரிமான நீர்கள் நன்கு ஊறுகின்றன. சினமும் அச்சமும் செரித்தலைத் தடுத்து விடுகின்றன.

மேலான அறிவுடைய விலங்குகள் நன்கு வளர்ந்து தேர்ச்சி பெற்ற மூளையைப் பெற்றிருக்கின்றன. மீனைவிடப் பறவையும் பறவையை விட எலியும் எலியைவிட நாயும் நாயைவிடக் குரங்கும் குரங்கைவிட மனிதனும் படிப்படியே நன்கு வளர்ந்த மூளைகளையும் அறிதிறனையும் பெற்றிருக்கக் காண்கின்றோம். இவற்றிலிருந்தும் உடலுக்கும் உள்ளத்திற்கும் உள்ள உறவினை அறிந்து கொள்ளலாம். உடலும் உள்ளமும் நல்ல முறையில் உறவு கொண்டிருக்கும் பொழுதுதான் நல்ல மனநிலை நிலவும் பொழுதுதான் கவிதைகளைச் சிறந்த முறையில் சுவைத்தல் இயலும். அனுபவிக்க முடியும்.

## அறிதலின் அடிப்படை

உடலின் ஒரு பகுதி பிறிதொரு பகுதியுடன் தொடர்பு கொள்வதற்கும் உடலிலுள்ள எல்லாப் பகுதிகளும் வெளியுலகச் செய்திகளையறிந்து துணைசெய்கின்றது. சுருங்கக் கூறின் நரம்புமண்டலம் அறிதலின் அடிப்படையாக அமைகின்றது. புறவுலகத் தகவல்களையும் அகவுலகச் செய்திகளையும் அறிந்துகொள்வதற்கும் பயன்படும். உளச்செயல் மூளையுடன் தொடர்புடையது ஏன்? நரம்பு மண்டலம் முழுவதுடனும் தொடர்பு கொண்டது என்றுகூடக் கூறலாம். நரம்புமண்டலம் வெளிநரம்பு மண்டலம் நடுநரம்புமண்டலம் தன்னாட்சி மண்டலம் என மூன்று வகை உண்டு நரம்புநுண்மம் நரப்பம் கூடல்வாய் நரம்புத்துடிப்பு புலனுணர்நரப்பம் உட்செல்நரம்புகள் கட்டளைநரம்புகள்

வெளிச்செல் நரம்புகள் இணைக்கும் நரம்புகள் நடுநரம்புமண்டலம் முதுகுநடுநரம்பு கூடல்வாய் இடைமூளை பெருமூளை புறணி ஆழப் பிளவுகள் மடிப்புகள் நெற்றிப்பிரிவு மண்டைப்பக்கப்பிரிவு பொட்டுப்பிரிவு பிடரிப்பிரிவு இயைபுநரம்புகள் பெருமூளையே நனவுக்கு இருப்பிடம். இதில் மேல்மையம் கீழ்மையம் என இரண்டு உண்டு. தன்னாட்சி நரம்பு மண்டலத்தில் நரம்பணுத் திரள்களாகப் பார்க்கமுடிகிறது. இதில் பரிவு நரம்புமண்டலம் துணைப் பரிவு நரம்பு மண்டலம் என இரண்டு உண்டு. இவை தான் அனைத்து வேலைகளையும் செய்கிறது.

மேற்கூறியவற்றால் ஒவ்வோர் உள நிகழ்ச்சிக்கும் தூண்டலே மூலம் என்றும் அந்நிகழ்ச்சிக்கு ஒரு பண்பு உண்டடென்றும் விளைவுகள் உளவென்றும் தெரிகின்றன. விளைவுகள் செயலாகவும் இருக்கலாம்: செயலுக்கேற்ற பொருத்தப்பாடாகவும் அமையலாம். அந்த நிகழ்ச்சியின் பண்பு சிலசமயம் அகக்காட்சிக்கு எட்டக் கூடியதாகவும் இருக்கலாம்.சில நிகழ்ச்சிகள் உணரக்கூடியனவாகவும் உணரபெறக் கூடியனவாகவும் உள்ளன. சில உணரப் பெறக் கூடியவனாக இல்லை. ஏன் சில நிகழ்ச்சிகள் நனவு நிலையிலும் சில நனவிலி நிலையிலும் உள்ளன என்பது இன்னும் தீராத புதிராகவே இருக்கின்றது. தூண்டல் மறிவினை -உள்தூண்டல் என்பர். கருத்து நிலைச் செயலில் தான் சூழ்நிலையில் இங்குமங்கும் சென்று திரிந்தும் பொருள்களைக் கையாண்டும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டும் துலங்குகின்றான். அவன் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு அதனைத் தன் விருப்பப்படி இயக்குகின்றான். ஆனால் மனிதனிடமும் ஓரளவு சில உயர் உயிரினங்களிடையேயும் கருத்துநிலைச்செயல் என்ற ஒன்று நடைபெறுகிறது.இவ்வாறு கருத்து நிலையில் செய்யப்பெறும் செயல்கள் எண்ணற்றவை. மொழி இதற்குப் பெருந்துணை புரிகின்றது. சிந்தனைக்குரிய செய்தியைத் திரட்டுவதற்குச் சில சமயம் மொழி சிந்தனைக்குத் தடையாகவும் அமைதல் கூடும். அலங்காரச் சொற்றொடர் நம்மைத் தவறான கருத்திற்குக் கொண்டுசெலுத்தும். அல்லது பொருள் புரியாமலேயே புரிந்ததாக எண்ணும்படி செய்துவிடும். இதன் காரணமாகவே வெற்றெனத் தொடுத்தலைச் சிலர் கவிதையாக எண்ணுகின்றனர். சொற்பொழிவினை- கருத்துப் பொழிவாகக் கொண்டு மயங்குகின்றனர். இக்கருத்துநிலைச் செயல்களால் ஏற்படும் தூண்டல்களே கவிதையனுபவத்திற்கு முதற்காரணமாக அமைகின்றன.

## உணர்தலின் அடிப்படை

மேல்தலைச் சுரப்பி அடித்தலைச் சுரப்பிகள் புரிசைச்சுரப்பிகள் கழுத்துக்குழைச் சுரப்பி மாங்காய்ச்சுரப்பிகள் சூற்பைகள் அல்லது விரைகள் தெளிவான தனிப்பட்ட சில கணைப் பகுதிகள் ஆகிய தூம்பிலாச் சுரப்பிகள் எண்டோகிரீன் மண்டலத்திலமைந்தவை. மேல்தலைச் சுரப்பி குழைச்சுரப்பி தூம்பிலாச் சுரப்பிகள் அடித்தலைச் சுரப்பி புறணி என உண்டு. புரிசைச்சுரப்பி - இது கழுத்தின் அடிப்பகுதியில் குரல் வளைக்கு முன்புறமாகக் காறை எலும்பிற்கு

மேற்புறத்தில் அமைந்துள்ளது. சரியாக இயங்காமல் போனால் உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் சரியான முறையில் நடைபெறுவதில்லை. இதனால் மந்த நிலை ஏற்படும். இந்நோய் ‘மைக்ஸோடெமா’ என வழங்கப்படும். இந்நோயாளர்களின் உடல் தோல் உப்பியும் தசைகளும் மூளையும் சரியாகச் செயல்படாமல் போய்விடும். இச் சுரப்பியின் சாரத்தை வாய் மூலம் உட்கொண்டே இப்பயனைக் காண்கின்றனர்.

புரிசைச் சுரப்பி சுரக்கும் தன்மையை தைராக்ஸின் என்றும் வேதியல் முறையில் பகுத்து ஆராய்ந்ததில் அது கரி நீரியம் உயரியம் நைட்ரொஜென் ஆகியவற்றுடன் அயோடினையும் கொண்டுள்ளது என்பதை அறிந்தனர். இது முக்கியமாக வளர்சிதை மாற்றத்தைத் தூண்டவது. இதற்கு ‘முன்கழுத்துக் கழலை’ என்று கூறுவர். துணைப்புரிசைச் சுரப்பிகள் உடலில் கால்சியம் பாஸ்வரம் ஆகிய இரண்டின் அளவினையும் பயனையும் கட்டுப்படுத்துகின்றன. பாராதார்மோன் அதிகமாக உற்பத்தினால் அது குருதியிலுள்ள கால்சிய அளவுகளை அதிகரிக்கச் செய்கின்றது. இதனால் என்புக்கூட்டிலுள்ள உப்பு சற்று கரைகின்றது. துணைப்புரிசைச் சுரப்பிகளுள் ஒன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் கட்டி உண்டானால் இந்நிலை ஏற்படுகிறது. எண்டோகிரீன் சுரப்பிகள் தாம் ஆளுமையின் அடிப்படையான உயிரியல் கூறுகள் என்று கூறுவதே மிகவும் பொருத்தமாகும். கவிதையைப் படித்துச் சுவைப்பதில் ஓரளவு இந்த ஆளுமை பங்குகொள்ளுகின்றது. உணர்ச்சிகள் முதலியவற்றை நன்னிலையில் கட்டுப்படுத்திய ஒரு நிலைதானே ஆளுமை.

## உணர்ச்சியும் உள்ளக்கிளர்ச்சியும்

உணர்ச்சி என்பது நனவு நிலையில் நம்முடைய செயல்கள் யாவற்றையும் பாதித்து நிற்கும் பொதுவான நிலை தான். உள்ளத்தில் உண்டாகும் இன்ப துன்ப மாறி மாறி வரக்கூடியது. உ.ம் இனிப்புப் பண்டங்களை உண்ணும் பொழுது இன்பம் உண்டாகின்றது. ஆனால் அதை அதிகம் உண்பதால் நாளடைவில் துன்பமே விளைகின்றது. ஆமணக்கு எண்ணெய் பருகுங்கால் துன்பம் ஏற்படுகின்றது. ஆனால் நாளடைவில் உடலுக்கு நன்மையை உண்டாகின்றது.

## முடிவுரை

ஒருவர் ஓர் உள்ளக்கிளர்ச்சிக்குப் பொருத்தமான உடற்கோலத்தை மேற்கொள்ளவிட்டால் அவர் அந்த உள்ளக்கிளர்ச்சி அனுபவத்தைப்பெற முடிகின்றதில்லை. இத்தகைய அனுபவம் ஏற்பட்டால் தான் உணர்ச்சியை நம்மால் பெற முடியும்.

# 63. ந.சுப்புரெட்டியார் “சைவ சமய விளக்கு” நூலில் சித்தாந்தக் கூறுகள்

**வே. அம்சவேணி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*அங்கப்பா கலை அறிவியல் கல்லூரி*
*சீராபாளையம்,*
*கோயம்புத்தூர் - 641 105.*

## முன்னுரை

பல ஆண்டுகளுக்கு முன்பு நம் நாடும் மொழியும் எப்படி இருந்தது. இங்கு வாழ்ந்த மக்கள், அவர்கள் பின்பற்றிய சமயங்கள் ஆகியவற்றைப் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகியவற்றில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட பொருள்களில் சைவ சமயத்தின் பிரதான சின்னமாக விளங்கும் லிங்கமும் ஒன்றாகும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். ஹரப்பா நாகரிகம் கிறிஸ்த்து பிறப்பதற்கு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பேயிருந்த ஒன்று என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இதிலிருந்து சைவ சமயத்தின் தொன்மையை அறிந்து தெளிந்து கொள்ள முடிகிறது.

சைவ சமயத்தைப் பற்றி வடமொழியில் விளக்கமாகக் கூறும் நூல்கள் ஆகமங்கள். இவற்றை இருபத்தெட்டு என்று கணக்கிட்டுள்ளனர். ஆகமங்கள் சைவ சமயத்தைப் பற்றியும் சமயச் சடங்குகள் பற்றியும் உச்சரிக்க வேண்டிய மந்திரங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கின்றன என சைவப் பெரியோர்கள் கூறுகின்றனர். சைவ சமயத்தின் தொன்மையும், மாண்பும் வடமொழியில் மிகுதியாக கூறப்பட்டுள்ளது என ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

## சைவ சித்தாந்தம்

சைவ சித்தாந்தத்தின் முடிந்த முடிபுகள் பதி (பரமான்மா), பசு (சீவான்மா), பாசம் (தளை) ஆகியவை ஆகும். இவை தமிழில் முறையே இறை, உயிர், தளை என்றும் கூறப்பட்டுள்ளது. சைவ சித்தாந்தம் கடவுளைப் பற்றி கூறும் கருத்துக்களை இரண்டாகப் பிரித்து, முதல் பிரிவில் கடவுள் உண்டு என்பதை மெய்ப்பித்தும், இரண்டாவது பிரிவில் கடவுளுக்குரிய குணங்களையும் இயல்புகளையும் விளக்குவதாக சைவ சமய விளக்கு நூலின் ஆசிரியர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் கூறுகின்றார்.

‘கடவுள் உண்டு’ என்று காரணம் காட்டி மெய்ப்பிப்பது ‘சுபக்கம்’ என்றும், கடவுள் இல்லை என்று வாதிப்போரின் வாதங்களை மறுத்துப்

பேசுவது 'பரபக்கம்' என்றும் கூறப்படும். உலகினைத் தோற்றுவித்ததற்குக் கர்த்தா ஒன்று இன்றியமையாதது தான் என்றும், அதுவே கடவுள் என்றும் கூறி, உலகம் ஆகிய காரியத்திற்கு மாயை முதல் காரணம், கடவுள் ஆற்றல் துணைக் காரணம், கடவுள் நிமித்த காரணம் என்று இந்நூலின் ஆசிரியர் கூறுகின்றார். இச்செய்தியின் மூலமாக உலகினைத் தோற்றுவிப்பதற்கும் அவ்வுலகத்தினை இயக்குவதற்கும் ஓர் ஆற்றல் தேவைப்படுகிறது. அவ்வாற்றலே இறையாற்றலாகும். சைவ சமயம் தொன்று தொட்டே கூறிவருவது யாதெனில் இறைவன் உலகத்தோடு ஒன்றாய், வேறாய், உடனாய் இருக்கின்றான் என்பதே ஆகும்.

## சைவ சித்தாந்தத்தில் முப்பொருள்

சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் மூன்றும் தனித்தனிப் பொருள்களாகும். இந்த மூன்று பொருட்களுக்கும் எந்நாளிலும் தோற்றமும் இல்லை; முடிவும் இல்லை; தோற்றம், முடிவு அற்ற பொருள் 'அநாதி' யாகும். அதாவது 'ஆதி' இல்லாதது. ஆதி இல்லையாதலின் அந்தமும் இல்லை. இதனைத் திருமூலர்,

***"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றின்***
***பதியினைப் போற்பசு பாசம் அநாதி"***
***(திருமந்திரம், தந்திரம் உபதேசம்-3)***

என்று விளக்கியுள்ளார். எனவே பதியாகிய கடவுள் என்று உண்டோ, அன்றே பசுவாகிய உயிரும் உண்டு; அன்றே அவ்வுயிர்களைப் பிணித்துள்ள பாசம் உண்டு என்பது சைவ சித்தாந்தத்தின் மிகச் சிறந்த கருத்தாகும்.

இவற்றில் பதிப் பொருள் ஒன்றேயாகும். 'பசு' என்பதில் ஒன்றுமில்லை என்றும் பாசம் என்பதில் மூன்று வகையாகவும் கூறியுள்ளனர். அவை ஆணவம், கன்மம், மாயை என்று ஆசிரியர் கூறியுள்ளதைத் தெளிந்து கொள்ள முடிகிறது. இவை உயிரைக் கட்டுப் படுத்துதல் பற்றிப் பாசம் எனப்படுதல் போல உயிர்களின் தூய்மையைக் கெடுத்து நிற்றலாலும், பிறகு அகற்றப் படுதலாலும் 'மலம்' எனவும் வழங்கப் பெறுவர். மலம் என்பதை அழுக்கு என்றும் இவற்றையே மும்மலங்கள் என்றும் ஆசிரியர் விளக்கியுள்ளார். மேலும் பதி, பசு, பாசம் என்ற மூன்று பொருள்களும் தோற்றமும் அழிவும் இல்லாதது என்பதையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

## மூன்று வகை நூல்கள்

'சைவ சமய விளக்கு' - இந்நூலின் ஆசிரியரும் பேராசிரியருமான ந.சுப்புரெட்டியார் அவர்கள் ஞானநூல்கள் என்று எத்தனையோ அளவின்றிக் கிடக்கின்றன அவற்றில் முடிவாக மூன்று வகையாகப் பிரித்துக் கூறியுள்ளார்கள். 1) முதல் நூல்கள், 2) வழி நூல்கள், 3) சார்பு நூல்கள் என்பவையேயாகும்.

1. முதல் நூல்கள் : வேதம், ஆகமம், பொதுமறை (திருக்குறள்) திருமுறை என்பவை முதல் நூல்களாகும்.
2. வழி நூல்கள் : ஸ்மிருதிகள், புராணங்கள், அறுபத்து நான்கு கலைகள், உபாகமங்கள், பண்டைத் தமிழ் இலக்கியங்கள், அறநூல்கள், தலபுராணங்கள் என்பவை வழி நூல்களாகின்றன.
3. சார்பு நூல்கள் : சிட்சை, கற்பம், சோதிடம், வியாகரணம், இயல், இசை, நாடகம், முத்தமிழ்களின் இலக்கண நூல்கள், உந்தி, களிறு முதலிய மெய் நூல்கள் என்பவை சார்பு நூல்களில் அடங்கும் என்றும், இவற்றில் ஏதேனும் ஒரு வகையில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை விளக்குதலையே நோக்கமாக உடையன என்றும் ஆசிரியர் கூறுவதன் மூலமாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

***"முதல்வழி சார்பென நூல் மூன்றாகும்"***

நன்னூல், பாயிரம் என்று இலக்கண நூலார் கூறியுள்ளனர்.

இந்த நூல்களைக் கற்று அதன்வழி நின்று பயன்பெறுபவர்களை இரு திறத்தினர் என்று ஆசிரியர் கூறியுள்ளார். அவற்றில்,

1. அறத்தின் பெருமையை உணர்த்தி அதன் வழியில் நின்று இம்மை, மறுமை இன்பங்களை அடைபவர்கள் ஒரு நிலையினர்.
2. இறைவனது அருளின் பெருமையை உணர்ந்து அதன் வழியொழுகி வீட்டின்பத்தினைப் பெறுவார் மற்றொரு நிலையினர்.

இவர்களை முறையே 'உலகர்' எனவும், சத்தி நிபாதர் எனவும் வழங்கப் பெறுவர்.

உலகர் பொருட்டுச் செய்யப் பெற்ற நூல் அறநூல் எனப்படும். இது பொது நூலாகும்.

சத்தி நிபாதர் பொருட்டுச் செய்யப் பெற்றது 'அருள் நூல்' எனப்படும். இது சிறப்பு நூல்.

***"ஆரணநூல் பொதுசைவம்; அருஞ்சிறப்பு நூலாம்***
***நீதியினால் உலகாக்கும் சத்திநிபா தாக்கும்***
***நிகழ்த்தியது" (சிவஞான சித்தியார்,8-15)***

## திருமுறை வழிபாடுகள்

பண்டை நாட்களில் திருமுறைகளை நம் முன்னோர் சிவத்துவம் வெளிப்பட்டுத் திகழும் சிறந்த அருள் நூல்களாகக் கொண்டு வழிபட்டுள்ளனர். சிவ பூசையின் ஒரு சிறந்த அங்கமாகவே இத்திருமுறை வழிபாடுகள் முன்னுள்ள பெருமக்களால் மேற்கொள்ளப்பட்டு வந்ததென்று அறிந்து கொள்ள முடிகிறது.

திருமுறைகள் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு முடிய அமைந்த காலத்தில் தான் தோன்றின என்பதை சைவப் பெரியோர்கள் கூறியுள்ளனர். பன்னிரு திருமுறைகளில்

ஏறக்குறைய பதினெண்ணாயிரம் திருப்பாடல்கள் காணப்படுவதாகக் கூறியுள்ளனர். (பன்னிருதிருமுறை வரலாறு)

## பூசை முறைகள்

சிவ பூசை, அடியார் பூசை, குரு பூசை ஆகிய வழிபாடுகளுக்கு எத்துணை பயன் உண்டோ அத்துணைப் பயன் இத்திருமுறை வழிபாட்டிற்கும் பாடல்களைப் படிப்பதாலும் உண்டென்று கூறியுள்ளனர். பெரியோர், சைவப் பெரியோர்கள் அருளிச்செய்த நூல்கள் அனைத்தும் உயர்ந்த ஞான நூல்களாகத் திகழ்கின்றன. இத்தகைய சைவத் திருமுறைகள் பன்னிரண்டையும் சிறப்புடன் ஓதிப் பயன் பெறுதல் வேண்டும் என்று கூறியுள்ளனர்.

## ஞான பூசை

சைவத் திருமுறைகள் பன்னிரண்டையும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஒதலும், பிறரை ஓதும்படி செய்தலும், பிறர் சொல்லத் தாம் கேட்டலும், பிறரைக் கேட்கும்படி தூண்டுதலும், ஞான நூல்களாகிய இவற்றின் பொருள் நலன்களை இடைவிடாது சிந்தித்தலும் என ஐந்து வகையாலும் பயின்று வழிபடுதல் வேண்டும் என்று உணர்த்தியுள்ளனர் பெரியோர்,

***"ஞானத்தால் தொழுவோர்கள் தொழக்கண்டு,***
***ஞானத்தால் உனைநானும் தொழுவேன்"***
***(தேவாரம், 5, 91:3)***

என்று சிவஞானம் பெற்ற பெரியோர்கள் அருளிய இத்திருமுறைகளைச் சாதனமாகக் கொண்டு எல்லாம் வல்ல இறைவனை வழிபட்டுப் போற்றும் முறையே "ஞான பூசை" எனப் பாராட்டப் பெறுகின்றது. இதனை,

***"ஞான நூல்தனை யோதல்; ஓது வித்தல்***
***நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், நன்கு***
***ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்***
***இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை"***
***(சிவஞான சித்தியார்-8-23)***

திருமுறைகளை அருளியவர்கள் அனைவரும் நிறைமொழி மாந்தர்கள். இவர்கள் வரலாற்றினால் திருமுறைகள் யாவும் மறை மொழிகளாகிய தமிழ் மந்திரங்கள் என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது. மந்திரம் என்பதை தம்மைப் பயில்வாரைப் போற்றிக் காப்பது என்னும் பொருளுடையது என்று நம் பெரியோர்கள் கூறியுள்ளனர். மேன்மைமிகு சைவத்திருமுறைகளை அன்பினால் ஓதியுணரும் இயல்பை உடையவர்களுக்கு, இவ்வுலக வாழ்வில் நேரும் எல்லாத் துன்பங்களும் நீங்கி எல்லாவித நலன்களையும் பெற்று இன்பம் பெறுவோம் என்று ஆன்றோர்கள் கூறியுள்ளதும் அவர்கள் அனுபவித்த உணர்வும் ஆகும் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## முடிவுரை

'சைவ சமய விளக்கு' நூலில் பதி, பசு, பாசம் பற்றி சைவப் பெரியோர்கள் கூறிய செய்திகளை அறிந்து கொள்ள முடிந்தது. மேலும் பன்னிரு திருமுறைகளின் சிறப்பையும் அவற்றை உருவாக்கிய சைவப் பெரியோர்களின் பக்திச் சிறப்பையும் அவர்கள் இறைவனை உணர்ந்து கொள்ள மேற்கொண்ட வழி முறைகளையும் அறிந்து இறையருளைப் பெறல் வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. மக்களுக்கு மன அமைதியை நல்குவது இறையருளோடு கூடிய சமய வாழ்க்கையாகும் என்பதை உணர்ந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

## மேற்பார்வை நூல்கள்


1. சைவ சமய விளக்கு - பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்
2. இந்திய தத்துவஞானம் - கி. லட்சுமணன் M.A., Dip. Ed.,

# 64. ந. சுப்புரெட்டியார் பார்வையில் கவிதைப் படைப்பாக்கம்

**முனைவர் ச. அரிச்சந்திரன்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

உயிரினங்களில் கிடைத்தற்கரிய பிறவி மனிதப்பிறவி. இப்பிறவியை இவ்வுலகில் பயனுள்ள வகையில் பயன்படுத்தி தாம் வாழ்ந்தமைக்கான அடையாளத்தைப் பிறருக்குப் பாடமாக்கி விட்டுச் சென்றவர்கள் சிலரே. அவர்களும் விரல் விட்டு எண்ணத்தக்க வகையிலேயே உள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ந. சுப்புரெட்டியார். உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகத் தமது பணியைத் தொடங்கி திருப்பதித் திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தமிழ் மொழியில் இலக்கணம், இலக்கியம், மருத்துவம், வாழ்வியல் போன்றவற்றில் பல்வேறு நூல்களைப் படைத்தவர். பொன்னம்பல அடிகளார் கூறுவதைப் போல,

*தமிழைக் கற்பவர் சிலர்: கற்ற வழி நிற்பவர் சிலரில் சிலர்! கற்றவழி நின்றதோடு, நானிலத்தை நல்வழிப்படுத்த சமூகம் மேம்பாடடைய வழிகாட்டுவோர் வெகுசிலர்! தமிழால் தரணியில் உயர்பீடத்தில் நிற்பவர் பலர்! தமக்காய்த் தமிழை விற்பவர் பலர்! தமக்கெனத் தமிழைப் பயன்படுத்தி, மலரின் மகரந்தத்தில் தேனை நுகர்ந்து மரப்பொதியில் மனித சமூகத்திற்குச் சேர்த்து வைக்கின்ற தேனீயைப் போலத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு உழைக்கும் நற்றமிழறிஞர் ந. சுப்புரெட்டியார் எனப் பேராசிரியரின் தமிழ்பணியைப் போற்றியுரைப்பார்.*

சுப்புரெட்டியார் தமிழன்னைக்கு யாத்தளித்த நூல்களில் குறிப்பிடத்தக்க நூல்கள் கவிதை குறித்த நூல்கள். கவிதை என்பது எவ்வாறு அமைய வேண்டும் என்பதைச் சுப்புரெட்டியார் தனது நூல்களில் சுட்டிக்காட்டியுள்ளார். எழுதுவதெல்லாம் கவிதையாகி விடாது. எவ்வகைக் கவிதையாக இருப்பினும் அவை அடிப்படையில் சில கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அவை ஒரு முழுமையான கவிதையாக உருப்பெருகிறது. சுப்புரெட்டியார் கூறும் கவிதைக்கான சில அடிப்படைக் கூறுகள் தற்காலக் கவிதைகளில் எங்ஙனம் பொருந்தியுள்ளது என்பதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## கவிஞன்

காலத்தையும் வாழ்வையும் சித்தரிக்கும் மேதைகள். இயற்கையோடு இயைபு காண்பவர்கள் இயற்கையின் கூத்தினைப் படம் பிடித்துக் காட்டுபவர்கள். தான் காணும் காட்சியை அப்படியே பிறருக்கு எடுத்துக் கூறுவதில் கைதேர்ந்தவர்கள். கவிஞன் தான் காணும் காட்சிகளை மிகவும் வலிந்து ஒன்று சேர்ப்பதில்லை. கவிஞன் மனதில் அவை இயல்பாகவே ஒன்று சேர்ந்து புதிய வடிவங்களைக் கொடுக்கின்றன. நாமும் இத்தகைய காட்சிகளைப் பல சந்தர்ப்பங்களில் காணத்தான் செய்கிறோம். ஆனால் அவை நம் மனதில் யாதொரு மாற்றத்தையும் உண்டாக்குவதில்லை. கவிஞன் மனத்தில் இக்காட்சிக்குரிய செயல்கள் ஒன்று சேர்ந்து அக்காட்சிகளை மயிர்கூச்செறிக்க வல்லவனாகவும் உயிர்ப்புள்ளவனாகவும் செய்துவிடுகின்றன என்கிறார் சுப்புரெட்டியார். உடனடியாக நாம் காணும் காட்சி பல்லாண்டுகளானாலும் அப்போதுதான் காண்பதைப் போன்ற எண்ணத்தை தோற்றுவிக்க வல்லமை படைத்தவர்கள் கவிஞர்கள். தற்காலத்தில் படைக்கப்படும் பல்வேறு கவிதைகளில் இவற்றினை நாம் காணமுடிகிறது.

## கவிதை

கவிதை குறித்துக் கவிமணி அவர்கள் கூறும்போது,

***"உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெளிந்து ரைப்பது கவிதை"***

என்கிறார். உள்ளத்திலே உருவெடுக்கும் கவிதை எப்படிப்பட்டதாக அமைய வேண்டும். அக்கவிதை படிப்பவர்களின் மனதிலே எத்தகைய எண்ணத்தை உருவாக்குவதாக அமைய வேண்டும் என்பதைச் சுப்புரெட்டியார் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

## சிறைப்பட்ட உள்ளம்

காணுங் காட்சிகளைக் கவிதைகளில் பாய்ச்சி அலங்கரித்தார்கள் அன்றைத் தமிழ்க் கவிஞர்கள். சங்கப் பாடல்கள் முதல் தற்காலக் கவிதைகள் வரை இதனைக் காண முடிகிறது. தாம் செல்லும் வழிகளிலே காணும் காட்சிகளைக் கவிதைகளாகக் கொண்டு வருவதில் கவிஞர்கள் கைதேர்ந்தவர்கள். அன்றை நாட்களில் தெருக்களில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று நாகரீக வளர்ச்சியின் காரணமாக நாட்டியக்கலை நாடகக் கலைகளாக வளர்ந்து விட்டது.

சாதாரணமாகத் தெருக்களில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பல்வேறு மக்கள் பார்க்கின்றனர். அனுபவிக்கின்றனர் அந்நிகழ்ச்சி முடிவடைந்தவுடன் கலைந்து சென்று விடுகின்றனர். ஆனால் ஒரு

கவிஞன் மட்டும் உடலளவில் அவ்விடத்தை விட்டுச் சென்றாலும் அவனது உள்ளம் அங்கேயே நடந்த நிகழ்விலே சிறைப்பட்டுக் கவிதையாக உருவெடுக்கிறது.

கவிஞர் பா. விஜய்யின் என்கிராமம் எனும் கவிதையில் கவிஞர் காணும் தமது கிராமம் குறித்து,

*"எங்கள் வாழ்க்கை*
*பூப்பூத்த வேர்ப்பகுதி*
*இந்திய வரைபடத்தில்*
*தெரியாத ஒரு புள்ளி*
*ஆடுமேய்ந்த புல்தரையில்*
*ஓடுவேய்ந்த ஒரே ஒரு பள்ளி*
*ஒட்டிய வயிறு மாதிரி*
*ஒடுங்கிக் கிடக்கின்ற ஓடை*
*ஓட்டைச் சட்டை போட்ட*
*ஓட்டு வீடுகள்*
*பஞ்சு மிட்டாய் போல் படபடக்கும்*
*பனை மர வரிசைகள்*
*அரைஞாண் கயிற்றில்*
*கால் சட்டையை*
*இறுக்கிக் கொண்டோடும்*
*சிறார்கள்......"*

எனத் தனது கிராமத்தில் தான் கண்ட காட்சிகளில் தனது உள்ளம் சிறைப்பட்டதை கவிதையாக எடுத்துரைப்பதை, அக்கவிதையை வாசிக்கும் போது நாம் அறியமுடிகிறது.

## கவிதைக்குரிய பொருள்

பாடுவோரின் அனுபவத்திற்கேற்ப எல்லாம் கவிதைக்குரிய பொருளாக அமையலாம். உலகம் தோன்றிய நாள்தொட்டு இன்று வரையிலுள்ள பழம்பொருளான இருசுடர், விண்மீன், கருமுகில், மலை, காடு, ஆறு, கடல், மான், முயல், கிளி, மயில், குழந்தை முதலியவை கவிதைப் பொருளாக அமைந்துள்ளன. அங்ஙனமே காதல், வீரம், இன்பம், துன்பம் போன்றவையும் பாட்டில் அமைகின்றன. சங்கக் கவிதை முதல் தற்காலக் கவிதை வரை இவை பாடுபொருளாகப் பாடப்பட்டு வருகின்றன.

## கவிதை மனநிலை

கவிதை என்பது காணும் பொருள்களை வருணிப்பதில் இல்லை. அப்பொருள்களைக் காணுங்கால் அவனிடம் எழும் மனநிலையில் அது உள்ளது. அதே மனநிலைக்கு ஒரு வடிவம் கொடுத்து அழகிய சொற்களால் ஓவியமாக அமைப்பதே கவிதையாகும். கவிதையைப் படிக்கும் நம்மிடத்திலும் அதே மனநிலையை உண்டாக்க வல்லது கவிதை.

உண்மையான கவிதையில் உயிர் இருக்கும். மட்ட ரகமான செய்யுளில் உயிர் இருக்காது. சவம் போல் கிடக்கும். உறங்கும் மனிதனையும் சவத்தையும் கண்டு பிடிப்பதைப் போலத்தான் கவிதையின் மூச்சை நாம் உணர வேண்டும் என கவிதைக்கான மனநிலை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை சுப்புரெட்டியார் எடுத்துரைக்கிறார். சுப்புரெட்டியார் கூறுவதைப்போல தற்கால கவிஞர் சுகிர்தராணியின் அம்மா எனும் கவிதை அதைப் படிப்போரின் மனதில் அம்மா குறித்த நினைவுகளை ஞாபகத்திற்குக் கொண்டு வருவதாக உள்ளது. அக்கவிதையில்,

***"எத்தனை விசாலமான மனதுனக்கு***
***தரையில் வெயில் உறைந்திருக்கும்***
***மதியப் பொழுதுகளைக் கடந்து***
***கள்ளிப்பழம் பறித்துத் தருவாய்***
***பழச் சாயமேறிய உதடுகளால்***
***உனக்கு சிவந்த முத்தங்களைத் தருவேன்...."***

எனத் தொடர்ந்து சொல்லும் அக்கவிதை ஒரு தாய் தனது சிரமத்தையும் பொருட்படுத்தாமல் தனது குழந்தைகளுக்காகவே தனது வாழ்வை அர்பணித்துப் பாடுபடும் தாய்ப்பாசம் குறித்த நினைவுகளை ஞாபகத்திற்குக் கொண்டு வரும் என்பதில் ஐயமில்லை.

## கற்பனை

காலத்தையும் வாழ்வையும் இணைப்பவர்கள் கவிஞர்கள். கவிதையின் பிற பண்புகளுக்கு அடிப்படையாக அமைவது கற்பனை. உணர்ச்சியின் நிலைக்களனாக எழுதப்பெறும் எல்லாவகை இலக்கியங்களுக்குமே கற்பனையாற்றல் மிகமிக அவசியம். கற்பனையின் தத்துவம் அறிவுக்கு எட்டாதது. சொற்களால் உணர்த்த முடியாதது. அதன் பலன்களை மட்டிலும் கொண்டே அது அறியப்படுவதொன்றாகும். எனும் இரஸ்கின் என்ற மேனாட்டுத் திறனாய்வாளரின் கருத்தைக் கோடிட்டுக் காட்டுகிறார் சுப்புரெட்டியார். கற்பனை என்பது புலன்களை நேரே ஒரு பொருளை அனுபவிக்காத காலத்திலும் அந்தப் பொருள்களை நினைவிற்குக் கொண்டு வந்து அப்பொருளிடத்து மீண்டும் அனுவத்தை ஏற்ற வல்ல ஒரு வகை ஆற்றல் உள்ளதாய் இருக்க வேண்டும் என்கிறார்.

சுப்புரெட்டியார் குறிப்பிடும் இத்தகைய கற்பனையைக் கவிஞர் பா. விஜய்யின் தாஜ்மஹால் எனும் கவிதையில் காண முடிகிறது. இக்கவிதையில்,

***"அது காதல் உறங்கும்***
***ஆடாத் தொட்டில்***
***17 ஆண்டுகளாய்***
***ஷாஜஹான் சிந்திய***
***கண்ணீரீன் மொத்தம் - இது***

***வெள்ளை நிறத்தில்***
***வழிகின்ற ரத்தம்***
***ஒரு பெண்ணுக்காக***
***ஆண் சுமந்த கர்ப்பம்***
***வெள்ளை இதயம்.....”***

என்ற கவிதை சுப்புரெட்டியார் கூறும் கற்பனை கூறோடு விளங்குவதை அறிய முடிகிறது.

கவிதை படைப்பதற்கு இயற்கையை நேசிக்கும் ஆற்றலும், கற்பனைத் திறனும் அவசியம். அத்தோடு கூடவே அக்கவிதையை வாசிக்கும் வாசகனுக்கு ஒருமித்த உணர்வினையும் ஏற்படுத்த வேண்டும். மேலும் தாம் காணும் காட்சியில் ஆழமாக ஊறித் திளைக்கும் பாங்கும் அவசியம் என்பதைப் பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார். சுப்புரெட்டியார் கூறும் இக்கருத்துக்கள் தற்காலக் கவிதைகளில் இடம் பெற்றுள்ளவற்றை மேற்காண்பவற்றின் வழி அறிய முடிகிறது.

# 65. ந. சுப்புரெட்டியார் பார்வையில் 'அர்ச்சிராகதி'

**முனைவர் ஆ. சரவணன்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029*

## முன்னுரை

ஒரு ஜீவான்மாவானது இவ்வுலகை விட்டு நீங்கியதும், ஏற்கனவே செய்துள்ள பாவ புண்ணியங்களுக்குச் சேர நரகத்தையோ, சுவர்க்கத்தையோ மீண்டும் பிறப்பையோ, பரம பதத்தையோ அடைகிறது. இந்த ஜீவாத்மா நகரத்திற்குச் செல்லும் வழிக்கு 'யாமயகதி' என்றும், சுவர்க்கத்திற்குச் செல்லும் வழிக்கு 'தூமகதி' என்றும், பரமபதத்திற்குச் செல்லும் வழிக்கு 'அர்ச்சிராகதி' என்றும் பெயர்கள் கூறப்படுகின்றன.

'அர்ச்சி' என்ற வடமொழிச் சொல்லிற்கு சூரியன் என்று பொருள். பரமபத்திற்குச் செல்லும் வழியில் முதலில் ஜீவாத்மா கடக்க வேண்டியது சூரியனாகிய வாசலை. ஆகையால் இவ்வழி அர்ச்சிராகதி என்று வழங்கப் பெறுகிறது. அவ்வகையில் டாக்டர் ந.சுப்புரெட்டியாரின் 'அர்ச்சிராகதி' எனும் நூல் குறித்து இவ்வாய்வு அமைகிறது.

## அர்ச்சிராகதிக்குரிய முதல் நிலை

திருமகள் கேள்வனான சர்வேசுவரனுக்கு நித்திய விபூதி (பரமபதம்), லீலாவிபூதி (இப்பூவுலகம்) என்ற இரு விபூதிகள் அடிமையாக இருக்கும். அவற்றுள் பெரிய பிராட்டியாரும் எம்பெருமானும் களித்து வாழ்கின்ற நித்திய விபூதியிலுள்ளவர்கள் அவனுடைய இச்சைக்கு இசைந்து நடப்பர். ஆனால் இந்த லீலாவிபூதியிலுள்ளவர்கள் அவனது சங்கற்பத்தை அநுசரித்து அறிவிலராய் அவனை அகல்வதற்கு காரணமானவற்றையே செய்து கொண்டிருப்பார். "இரண்டாகப் பிளந்து விழுந்தாலும் விழுவனேயொழிய இவ்வாறு வணங்கமாட்டேன். இஃது என் உடன்பிறந்த குற்றம். அவரவர் சுபாவம் மீற முடியாதன்றோ" என்றும், "நானே ஈசுவரன்; நானே போகங்களை அனுபவிப்பவன்; சுகமுடையவனும் நானே" என்றும் இருப்பவர்கள் லீலா விபூதியிலுள்ளவர்கள்.

"சீவனுடைய மரண காலத்தில் அடியவனோடு கூடியவர்கட்கு, இந்திரியம் மனத்தோடு சேர்ந்து, மனம் பிராணனோடு சேர்ந்து, பிராணன் சம்பந்தித்து, இவன் பூதசூக்கும விசிஷ்டனாய் பரமான்மாவின் பக்கலிலே சேர்வான்" வெகுதூரம் நடந்தால் பசி தாகங்களால் மயக்கமடைந்த சீவனுக்குத் தாமரைக் கண்ணனின் திருநாம

சங்கீர்த்தனமாகின்ற அமுதமே கட்டமுதமாகும் என்று கூறுவதால், நித்ய விபூதிகள் இறை நாமத்தைப் பாடி இறைவனிடம் நிலைபெறுவர்கள்; அர்ச்சிராகதி அடைவார்கள் என்பதனை விளக்குகிறார்.

## அர்ச்சிராகதி அடைவதற்கான இரண்டாம் நிலை

அர்ச்சிராகதி தேவதைகளில் அக்கினி சிறிது தூரம் வழி நடத்துகின்றான். அடுத்து அஹஸ், சுக்கிலபட்ச, உத்ராயண, வருஷ, வாயு தேவதைகள் முறையே வழி நடத்துகின்றனர். இவர்கள் பதங்களைக் கடந்து தொடர்ந்து சூரிய மண்டலத்துள் புக்கு, அதாவது ஷஷமன்னும் கதிரோன் மண்டலத்தின் நல்நடுவுள் அன்னது ஓர் இல்லியின் ஊடுபோய் நிலைபெற்ற மிக்க வெப்பமுள்ள கிரணங்களையுடையவனான சூரிய மண்டலத்தின் நட்ட நடுவே வாய்கொண்டு வருணிக்க முடியாத நுண்ணிய துவாரத்தின் வழியே சென்று, பொன்மயமாய் நுழைகின்றான். நீர்க்கடவுளான வருணனும், தேவர்களின் தலைவனான இந்திரனும், முக்தராகப் போகுமவர்ளை எல்லா முறைகளாலும் புகழ்மாலை சூட்டுவார்கள், சுரர்கள், அசுரர்கள் கந்தவர்வர்கள், இராக்ககதர்கள் இவர்களின் உலகங்களையும் கடந்து செல்கின்றான்.

அநேகமாயிரம் கொடிகளாலும், முத்து மாலைகளாலும், மேற்கட்டிகளாலும் அலங்கரிக்கப்பட்ட திவ்விய விமானத்தைப் பெரிய திருவடி கொண்டு வர, அதில் இவனை ஏற்றித் தோத்திரம் கொண்டு போவார்கள் என்கிறார்.

எம்பெருமானே! உனது திருவடிகளைக் கிடைக்கப் பெற்றேன்; திருவாய்மொழி பாடுகையாகின்ற கைங்கரியத்தை உவப்புடன் செய்து உன் திருவடிகளை அணுகினவனானேன். இவ்வநுபமே தினந்தோறும் இருக்க வேண்டும் என்பது விருப்பம் என்பார்; "என்முடிவு காணாதே என்னுள் கலந்தானை, சொல் முடிவு காணேன் நான் சொல்லுவதென்? சொல்லீர் எனது தாழ்வை கணிசியாமல் என்னுடன் கலவி செய்தவனான என் பெருமானை நான் சொல்லி முடிக்கும் வகையறியேன்ளூ என்னவென்று சொல்லலாம்? நீங்களே சொல்லலாம் என்பார். "ஓம் நமோநாராயணாய" என்பார்.

## இறைவனின் தோற்றப் பொலிவு

கல்யாண குணங்களுக்கு அந்தம் இல்லாத அனந்தம் உவமான பூமியாக இருக்கையால் சேஷனாக சிங்காசனத்தில் சைத்தியம், மார்த்தவம், சௌரப்பியம் முதலிய குணங்களுக்கு கொள்கலனாக விளங்கும் திருவனந்தாழ்வானாகிய படுக்கையிலே கிடக்கின்றான்.

"தெருவெல்லாம் காவி கமழ" தெருவுகள்தோறும் செங்கழுநீர் மணக்கின்ற என்றபடியே கண்டவிடமெங்கும் புறப்பட்டு வெள்ளமிடுகின்ற திருமேனியாலே வைகுண்டம் எங்கும் வாசனை மயமாக்கி ஆலங்கட்டியை விட்டெறிந்தாற்போலே உடம்பெங்கும் வவ்வலிடும்படி குளிர்ந்து அரைக்கணமாறில் நித்திய முத்திரை ஒரு

நீர்ச்சாவியாக்குகின்ற கடாட்சம் விருஷ்டிகளாலே திவ்விய கோஷ்டியைத்தளிரும் முறியுமாக்கி காம்ய மாதுர்யாத்ய நவதிக குணகண பூஷிதங்களாய் அதிமனோகர திவ்வியபாவ கர்ப்பங்களாய், பூ அலர்ந்தாற் போலேயிருக்கின்ற திருமுகத்தை எல்லாப் பக்கங்களிலும் செவ்வி பொறுத்துவனான லீலாலாபங்களாலே சூரிகளுடைய இருதயங்களை உசுப்பித்துக் கொண்டு, உபயவிபூதியையும் வீற்றிருக்கின்ற பலத்தாலே வெற்றி கொண்டு விளங்குகின்றான். இதற்கு “பொன்னுருவான்”, “சோதி வெள்ளத்தினுள்ளே”, “கரிய கோலத்திருவுருவையும்” என்ற திவ்விய பிரபந்த வரிகள் சான்றாகின்றன.

## ஆத்மா பரமாத்மாவைக் காணுதல்

சுயநலம் விரும்பி எவரிடமும் பரபிரம்மம் பேசுவதில்லை, எல்லாப் பொருள்களையும் உடையவனாகையாலே தன்னைப் பிரிந்து நெடுநாள் தரைக்கிடந்த இழவுதீர, மடியில் வைத்து, பரதாழ்வானையும் அக்ரூரனையும் அணைத்தாற் போல அணைத்து, குங்குமம் அணிந்த மெல்லிய முலைகளையுடைய ஈரான மங்கையரின் பருத்த தோள்களுடன் அணைவதனால் உண்டாகும் இன்பக் கடலில் மூழ்கிக்கிடந்தேன் என்று மறுமொழி கூறுவான்.

தமக்கு மெய்யே ஆர்த்தி விளைந்ததை விண்ணப்பம் செய்யும் போக்கில் தாம் அநாதிகாலம் சம்சாரத்தில் உழன்றுபடியையும் பலயோனிகளிலும் பிறந்து வருந்தினபடியையும், அர்த்த காமங்களை விரும்பி போந்தப்படியையும், இத்திரியங்கட்கு வசப்பட்டு ஒழிந்தபடியையும், இப்போது மேல் வரக்கடவதான நரக வேதனையை நினைத்து அஞ்சுகிறபடியையும் பரக்க விண்ணப்பம் செய்து, என்னுடைய குற்றம் ஒன்றையும் பாராமல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாத படியான சம்பந்தத்தையே நோக்கி, பிராட்டியினால் ஏற்றுக் கொள்ளப் பட்டவனாயிருக்கிறபடியையும் திருவுள்ளம் பற்றி அடியேனை ஏற்றுக்கொள்ள அருளவேண்டும் என்று இறைவனின் திருவடிகளில் விழுந்து கதறுகின்றார்.

“நின் அடைந்தேன் - திருவிண்ணகர் மேயவனே” என கதறுகிற படியைக் காணலாம். சுழித்து ஓடுகின்ற சுபர்சோதி வெள்ளம் என்னும் படியான பரமபதத்திலே ஆனந்த வளர்ச்சியாக இருக்கப்பெற்று இருப்பான்.

“சுழிபட்டோடும் சுடர்சோதி வெள்ளத்து இன்புற்றிருந்து” என திருவாய்மொழியும் பகர்வதைக் காணலாம்.

## பரமபதசோபனம்

மோட்சமாகிய மேல் மாடத்திற்குச் செல்லும் வழிப்படிகளாகும். “வானேறும் வழிப்படிகள்” என்பது பிள்ளை லோகாச்சார்யர் திருவாக்கு.

சீவனுடைய உடல் ஐந்து பூதங்களாலகியது. அவனது முதுகின்

மேற்புறத்தில் தூண்போன்ற மூன்று எலும்புகள் ஒன்று கூடி நிற்கின்றன. அவை ''திரில் தூணம்'' என்ற பெயரால் வழங்கப்பெறும். மரண காலத்தில் ஈசுவரன் அவற்றைக் கடந்து அங்கிருந்து ஐந்து பூதங்களின் சூக்குமமான கூறினை எடுத்து அதில் சீவனைச் சேர்க்கின்றான். இங்ஙனம் கடைதலே ''திரிஸ்துணை ஹோபம்'' எனப்படும். இவ்வாறு கடையும்போது சீவனுக்கு மிக்க வேதனை உண்டாகும். இந்த வேதனை நீங்குவதற்காக அந்த சீவனை ஈசுவரன் அணைத்துக் கொள்கின்றான்.

## ஆழ்வார் பாசுரங்களில் அர்ச்சிராகதி

வீடுபேற்றுப் பற்றிய குறிப்புகளும் அர்ச்சிராகதி பற்றிய குறிப்புகளும் ஆழ்வார் பாசுரங்களில் காணப் பெறுகின்றன.

***''இருளகற்றும் எறிகதிரோன் மண்டலத்தூடு***
***ஏற்றி வைத்துஏணி வாங்கி***
***அருள்கொடுத்திட்டு அடியவரை ஆட்கொள்வான்''***

என பெரியாழ்வார் பாசுரம் கூறுகிறது.

திருமங்கையாழ்வாரின் சிறிய திருமடலில் பரகால நாயகி இந்நிலவுலகில் வாழ்கின்ற மனிதர்களால் சொல்லப்படுகின்ற புருஷார்தங்கள் தர்மம், பொருள், காமம் என்ற மூன்றேயாகும். இவற்றுள் முக்கியமான காம புருஷார்த்தத்தைப் பெற்றவர்கட்கு மற்ற இரண்டு புருஷார்த்தங்களும் எளிதில் பெறக்கூடியவை.

வேதங்களில் வீடுபேறும் சேர்த்துக் கூறப்படுவதை எடுத்துரைக்கின்றார். இதனை பொய்யானது என்றும் அஃது உண்மையெனில்,

***''மண்ணும் கடுங்கதிரோன் மண்டலத்தின்***
***அன்னதோர் இல்லியின் ஊடுபோய் வீடென்றும்***
***தொன்னெறிக்கண் சென்றாரைச் சொல்லுமின்கள்***
***சொல்லாதே''***

எனும் பாசுரத்தின் மூலம் அறியலாம்.

## முடிவுரை

அர்ச்சிராகதி என்னும் நூல் ந. சுப்புரெட்டியார் அவர்களின் ஆழ்ந்த வைணவ தத்துவத்திற்குச் சான்றாக அமைகிறது.

மூன்று கதிகளில் 'அர்ச்சிராகதி' இறைவனோடு இரண்டற கலக்கும் தன்மையை எடுத்துரைப்பதாக அமைகிறது.

அவரவர் செய்யும் இன்பத்துன்பங்களின் அடிப்படையிலேயே இஃது அமைகிறது.

அர்ச்சிராகதி அடைவதே சீவாத்மாவின் குறிக்கோளாக அமையும். ஆழ்வார்களும் இது குறித்து தம்பரசுரங்களில் எடுத்தியம்பியுள்ளமை காணமுடிகிறது.

# 66. அர்த்த பஞ்சக ஞானம்

**முனைவர். நா. கீதா**
*கௌரவ விரிவுரையாளர்*
*தமிழ்த் துறை*
*பாரதியார் பல்கலைக் கழகம்*
*கோயம்புத்தூர் - 641 046*

'சிலப்பதிகாரம்', 'மணிமேகலை' என்றவை இரட்டைக் காப்பியங்கள். இவை ஒரே காலத்தில் இரண்டு பெரிய நல்லிசைப் புலவர்களால் இயற்றப்பட்டது. இவற்றைப் போலவே ஒரே காலத்தில் (1993-1994) பிள்ளை உலக ஆசிரியர் அருளிய மணிப் பிரவாள நடையிலுள்ள 'நவவிதசம்பந்தம்' 'அர்த்தப் பஞ்சகம்' என்ற இரண்டு இரகசியங்கட்கும் பேராசிரியர் ரெட்டியார் அவர்களால் விளக்கம் எழுதப் பெற்று வெளியிடப்பெற்றன. ஆசிரியம், இலக்கியம், திறனாய்வு, சமயம், தத்துவம், அறிவியல், ஆராய்ச்சி, வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு என்று படைப்புலகில் தனித்துவம் பெற்று விளங்கும் ரெட்டியார் அவர்களின் 'அர்த்த பஞ்சகம்' வேதாந்தத்தையும், சித்தாந்தத்தையும் தெளிவுபடுத்தும் ஞானமார்க்கத்தை விளக்கிச் செல்கிறது.

ஓர் ஆற்றங்கரை. அந்தக் கரையில் படகோட்டி ஒருவன் வழிப்போக்கர்களை இக்கரையிலிருந்து அக்கரைக்கும் கடத்தி அந்த வருவாயைக் கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்தான். ஒரு சமயம் 'கற்றறி வித்தகன்' என்று தன்னைக் கருதிக் கொண்டு அகந்தையுடன் இருக்கும் ஒருவனுக்கு இக்கரையிலிருந்து அக்கரைக்குப் போகும் வாய்ப்பு நேர்ந்தது. அறிஞன் படகில் ஏறிக்கொண்டான். இருவருக்கும் இடையே கீழ்கண்டவாறு உரையாடல் நிகழ்ந்தது.

அறிஞன் : படகுக்காரனை நோக்கி 'நீ பகவத் கீதை படித்திருக்கிறாயா?' என்கின்றான்.

படகோட்டி : 'சுவாமி! அதெல்லாம் எங்களுக்குத் தெரியதாது. அந்தப் பக்கத்தில் தலைவைத்துக் கூடப்படுப்பதில்லை.' என்கின்றான்.

அறிஞன் : 'அப்படியானால் உன் வாழ்க்கையில் பாதி வீணாகிவிட்டது' என்கின்றான்.

அறிஞன் : 'உனக்கு வேதம், உபநிடதங்கள் தெரியுமா?' என்கின்றான்.

படகுக்காரன் : 'சுவாமி! இவையெல்லாம் என் வாழ்க்கைக்குப் பயன்படாதவை. ஆகவே, இவைபற்றித் தெரிந்துக்கொள்ள எனக்குச் சிறிதும் ஆசை இல்லை' என்கிறான்.

அறிஞன் : 'அப்படியானால் உன் வாழ்க்கையில் இன்னும் கால்பங்கு வீணாகிவிட்டது' என்கின்றான்.

சிறிது நேரம் சென்றதும். படகுக்காரன் அறிஞனை நோக்கி, ஐயா! உமக்கு நீந்தத் தெரியுமா? என்றான். அறிஞன் தனக்குத் தெரியாது என்றான். 'அப்படியானால் உங்களது வாழ்க்கை முழுவதும் வீணாகி விட்டது. ஏனெனில், படகு ஓட்டை ஆகிவிட்டது. இன்னும் சிறிது நீர் வேகமாகப் புகுந்து படகு மூழ்கிவிடும். இத்தனைக் கலைகளைக் கற்றதாக நினைத்துக் கொண்டு இருக்கும் தாங்கள் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் நீச்சல் கலையைக் கல்லாததால் உங்கள் வாழ்க்கை முழுதும் வீணாகி விட்டதே!' என்று கூறிவிட்டுப் படகுக்காரன் ஆற்றில் குதித்து நீந்தத் தொடங்கிவிட்டான்.

அந்தக் 'கற்றறிவித்தகனைப்' போல வேதங்கள், உபநிடதங்கள் முதலிய அனைத்துக் கலைகளைக் கற்றாலும் ஒருவன் ஈடேற இயலாது. அந்தக் கலைகளுக்கு எல்லாம் உயிர் போன்றது '**அர்த்த பஞ்சக ஞானம்**'. இந்த ஞானம் பெற்றவனே பிறவிப்பெருங்கடலை நீந்த இயலும்.

**அர்த்த பஞ்சகம் :** '**சம்சாரியான சேதநன் தத்துவ ஞானம் பிறந்து உய்யும்போது தோன்றுவது அர்த்த பஞ்சக ஞானம்**'. இது, (1) ஈசுவரனது இயல்பு, (2) ஆன்மாவின் இயல்பு, (3) ஆன்மா அடையும் பயன், (4) அப்பயனை அடைவதற்குரிய வழிகள் (5) அப்பயனை அடைவதற்குத் தடையாய் உள்ளவைகள் ஆகும். இவற்றில் ஒவ்வொரு பொருளும் **ஐந்து** வகைப்பட்டிருக்கும்.

1. **ஈஸ்வரனின் இயல்பு** என்பது பரத்துவம், வியூகம், விபவம் (அவதாரங்கள்), அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என்னும் **ஐந்து.**
2. **ஆன்மாவின் இயல்பு** என்பது நித்தியர், முக்தர், பத்தர், கேவலர், முமுட்சுகள் என்று **ஐந்து.**
3. **ஆன்மா அடையும் பயன்** என்பது புருஷார்த்தம்: புருஷனால் (ஆன்மாவால்) அடையப்படுவது. அதுதான், அறம் (தர்மம்), பொருள் (அர்த்தம்), இன்பம் (காமம்), ஆன்மாநுபவம், பகவதநுபவம் என்று **ஐந்து.**
4. **ஆன்மா அப்பயனை அடைவதற்குரிய வழிகள்** என்பன கர்மம், ஞானம், பக்தி, பிரபத்தி, ஆசார்ய அபிமானம் என்று **ஐந்து.**
5. **அப்பயனை அடைதற்புரிய தடையாய் உள்ளவைகள்** என்பன சொரூப விரோதி, பரத்துவ விரோதி, புருஷார்த்த விரோதி, உபாய விரோதி, பிராப்தி விரோதி என்ற **ஐந்து.**

பராசரபட்டர் என்ற ஆசாரியப் பெருமகனார்,

***"மிக்க இறைநிலையும்***
***மெய்யாம் உயிர் நிலையும்***
***தக்க நெறியும்***

***தடையாகித் - தொக்கியும்***
***ஊழ்வினையும் வாழ்வினையும்***
***ஓதும் குருகையர்கோன்***
***யாழின இசை வேதத்து இயல்.''***
***(திருவாய்மொழி தனியவன்)***

என்று விளக்குவார். இதில் மிக்க இறைநிலை என்பது ஈசுவரனின் இயல்பு. (2) மெய்யாம் உயிர் நிலை என்பது, ஆன்ம சொரூபம், (3) தக்கநெறி என்பது உபாய சொரூபம், (4) தடையாகின்ற தொக்கியலும் ஊழ்வினையும் என்பது விரோதி சொரூபம், (5) வாழ்வினையும் என்பது வீடுபேற்றின் தன்மை. ஆக, இத்தனியன் அர்த்த பஞ்சகத்தைக் கூறுவதாகின்றது.

இறைவனே அறப் பெரிய முதல்வன். ஆன்மாவிற்குச் சொரூபம் அடியேன் என்பதே. சரணாகதி இறைவனைப் பெறுவதற்குரிய வழி. பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் ஆகிய இவையே விரோதிகள். 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வதுவே பரம புருஷார்த்தம்' என்னும் இவ்வைந்து பொருள்களுமே திருவாய்மொழியில் சொல்லப் பெறுகின்றன.

***ஈசுவரன்*** எல்லாக் குற்றங்கட்கும் எதிர்த்தட்டாய் இருப்பவன். அதாவது இருளுக்கு ஒளி போலவும், பாம்புக்குக் கருடன் போலவும் திகழ்பவன். அசித்தாகிய சுத்த சத்துவம், மிச்ர தத்துவம், சத்துவசூனியம் என்ற மூன்று பரிணாம ரூபமான வேறுபாட்டின் குறைகள் (விகார தோஷங்கள்) தட்டாதவன். பக்தருடைய அஞ்ஞான துக்கங்களுக்கும், முக்தருடைய சம்சார சம்பத்தத்திலிருந்து விடப்பெற்ற ஆகாரத்திற்கும், நித்தியருடைய அளவுபட்ட சொரூபத்துவ, பார தந்தியங்களாகின்ற தோஷங்களுக்கும் மாறாக இருப்பவன்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு வகைப் பொருள்களையும் உயிர்கட்குத் தந்து அவற்றின் புகலிடமாக இருப்பவன். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன்.

***“தனிமாப் புகழே னஞ்ஞான்றும்***
***நிற்கும் படியாய்த் தான்தோன்றி***
***முனிமாப் பிரம்ம முதல்வித்தாய்***
***உலகம் மூன்றும் முளைப்பித்த***
***தனிமாத் தெய்வம்'' (திருவாய் 8-10:7)***

என்று பேசுவர் நம்மாழ்வார். ஒரு பொருளுக்கு உளதாகக் கூறப்படும் குணமானது தன்னைப் பெற்றிருக்கும் பொருளுக்கு மற்றொரு பொருளைக் காட்டிலும் ஒரு வேற்றுமையைக் காட்டுவதால் அக்குணம் **விசேஷணம்** எனப்படும்.

***ஆன்மா*** ஞானத்தின் இடமாக 'சித்து' என்று அழைக்கப்படுகின்றது. இது அன்னமயம், பிராணமயம், மனோமயம் என்பவற்றிற்கு அப்பால்

இருப்பது. தேகம், இந்திரியங்கள், மனம், பிராணன், ஞானம் என்ற இவற்றிற்கு வேறுபட்டது. அறிவுமயமாக இருக்கும் இந்த ஆன்மா அறிவுக்கும் இருப்பிடமானது. இந்த அறிவு 'தர்ம பூத ஞானம்' என வழங்கப்பெறும். இதனால் ஆன்மா 'தர்மி பூத ஞானம்' என வழங்கப்பெறும். ஜீவாத்மா தன்னைத் தவிர வேறு எந்தப் பொருளையும் தன் தர்மபூத ஞானத்தால் மட்டுமே அறிய முடியும்.

***நித்தியர்*** என்பவர், சம்சார சம்பந்த உணர்வு இல்லாதவர்கள். வைகுந்தவாசிகள். அனந்தன், கருடன் (பெரிய திருவடி), சேனை போன்றோர்.

***முத்தர்*** என்பவர். பக்தி, பிரபத்தி இவற்றுள் ஒன்றை அநுட்டித்து மோட்சத்தைப் பெற்றவர்கள். பகவத அநுபவம், கைங்கரிய போகம் பெற்றவர்கள்.

**பத்தர்** என்பவர். மாயை, அஞ்ஞானம். புண்ணியம் பாவம் ஆகிய வினைகளால் சூழப்பெற்றவர்கள். வினைக்குத் தக்கபடி மாறி மாறித் தேவர்கள், மனித, விலங்கு, தாவர வடிவங்களைப் பெற்று துக்க பரம்பரைகளை அநுபவிக்கும் சம்சாரிகள்.

**கேவலர்** என்பவர், ஆன்மாநுபாவத்தையே பேறாகக் கொண்டு வாழ்பவர்கள். பகவதநுபவத்திற்குப் பொருந்தாததாயுள்ள உடலோடு ஒரு தனியான தேசத்தில் திரிபவர்கள். உலகின் புறப்பகுதிகளில் வாழ்பவர்கள்.

***முமுட்சுகள்*** என்பவர், மோட்சத்தில் விருப்பம் கொண்டவர்கள். உபாசகரும், பிரபந்நர்களும் இவ்வகையானவர்கள்.

***ஆன்மா அடையும் பயன்களாகக்*** குறிப்பிடப்படும் **தர்மம்** என்பது அறச் செயல்களாகும்.

***அர்த்தம்*** நியாய வழிகளில் பொருளைத் திரட்டுவது. **காமம்** என்பது ஆசையைக் குறிக்கும். இந்த ஆசை இவ்வுலகு சம்பந்தமுடையது (ஐஹலேளகிகம்), மறுஉலகு சம்பந்தமுடையது (பரலௌசிகம்) என இரு வகைப்படும். **ஆன்மாநுபவம்** ஆன்மாவை அநுபவித்தலாகும். இது கேவலர்களின் செயலைச் சேர்ந்தது. **பகவதநுபவம்** இந்த உலகில் இருக்கும் போதே எம் பெருமானை அநுபவித்தலாகும். இறையநுபவத்தைக் குறிப்பிடுவது.

***ஆன்மா பயனை அடையும் வழியான*** புருஷார்த்தத்தை அடைவதற்காகச் சொல்லப்படும் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தியோகம், ஆசாரியஅபிமானம் என்பனவற்றுள் முதல் மூன்று நிலைகள் பக்தி நெறியில் அடங்கும். **பேரன்பின் *முதிர்ச்சியே பக்தி*** எனப்படும்.

***கர்மயோகம் :*** சாத்திரங்களைப் பயின்ற அறிவினால் சடங்குகளையும், கடமைகளையும் தவறாது செய்தல்.

**ஞானயோகம்:** கர்மயோகத்தில் தூய்மையடைந்த ஆன்மா இந்நிலையில் தியானத்தில் ஆழ்ந்து யோகத்தில் ஈடுபட்டு இறைவனை உணர்வது.

**பக்தியோகம்:** ஞானயோகத்தின் அடுத்த நிலை. ஆன்மா தனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினை அறிகின்றது.

**பிரபத்தியோகம்:** இந்நெறி 'சரணாகதி', 'பரந்யாசம்,' 'பரசமர்பணம்' 'உபாயாநுஷ்டானம்' என்ற பெயர்களாலும் வழங்கப்பெறும்.

**ஆசாரியஅபிமானம்:** குரு கடாட்சத்தைப் பற்றியது. ஆசாரியர்வழி இறைவனை அடைவது.

**ஆன்மா இறையை அடையத் தடையாய் இருப்பவைகளான** சொரூப விரோதியானது, அகங்காரம் ஆகும். பரத்துவ விரோதியானது, இறைஆற்றலை பரிகசிப்பது. புருஷார்த்த விரோதியானது, உலக இச்சையிலேயே உழன்று இருத்தல். உபாய விரோதி என்பது, இறையை அடைவதற்கான உபாயங்கள் அரிய முயற்சியால் மட்டுமே சாதிக்க யுத்தமாயிருத்தலால் வரும் 'சங்காத்திரயம்' (ஐயங்கள்) ஆகும்.

இவற்றையெல்லாம் நீக்க மனிதன் பகுத்தறிவு உள்ளவனாக, தன்னையும் மற்றவர்களையும் வாழ்வித்து, உய்வித்து உயரும் வகையில் விரிவாக உரைக்கப்படுவதே விஷ்ணுவைப் பரதெய்வமாகக் கருதி வழிபடும் '**அர்த்த பஞ்சகம்**' எனப்பெறப்படுகிறது. அந்தந்த சம்பிரதாயங்களையும், தத்துவங்களையும் நன்கு அறிந்து அவற்றின்படி வழிபடுவோமேயானால், இறைவன் பதமாகிய முக்தி எளிதில் கட்டும் என்பதை அர்த்த பஞ்சகம் மெய்ப்பிக்கின்றது.

# 67. ந. சுப்பு ரெட்டியார் உணர்த்தும் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

**முனைவர் எஸ். குமரன்**
*பேராசிரியர்*
*இந்திய ஆய்வியல் துறை*
*மலாயாப் பல்கலைக்கழகம்*
*கோலாலும்பூர், மலேசியா.*

## முன்னுரை

தொல்காப்பியப் பொருளதிகாரம் இலக்கிய வரலாற்று அறிஞர்க்கும் திறனாய்வாளர்க்கும் ஒருங்கே பயன் நல்குவதாக உள்ளது. இத்தகைய சிறப்புடைய நூற்பகுதியைத் திறம்பட ஆராய்ந்து "தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை" என்னும் நூல் வடிவில் விளக்கியுள்ளார் தமிழ்ப் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தை ஆயுங்காலத்திலும் அவர்க்கு உளவியல், உயிரியல் முதலாய அறிவியல்துறைகள் மிகப் பயன்பட்டுள்ளன என்பதை இந்நூலில் காணலாம். "தமிழர்கள் காதலை மிகமிகத் தூய்மையானதாக வைத்துப் போற்றினர்" என்பதைப் பலவிடங்களிலும் தெளிவித்துள்ளார். பழங்கால அகப்புற மரபுகளை ஆங்காங்கே பொருத்தமுற விளக்கியுள்ளார். தமிழறிஞர் மு. வரதராசன் இந்நூலுக்கான அணிந்துரையில் இவ்வாறு கூறியுள்ளார்.

"தொல்காப்பியத்தின் பல நுட்பமான கருத்துகள் எவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் இவரது நூலில் தெளிவும் விளக்கமும் பெறுகின்றன. இவை படிப்போர் மனத்தில் பசுமரத்தாணியெனப் பதியும்பாங்கில் அமைந்துள்ளன. அகப்பொருள் இலக்கியங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளத் துணையாகவுள்ள முப்பொருள் பாகுபாடு, ஐந்திணை நெறி, பெருந்திணை, கைக்கிளை, ஐந்திணை உலகமாந்தர், அறத்தொடு நிற்றல், நாடக வழக்கு, உலகியல் வழக்கு முதலியவை பற்றிய கருத்துகளை இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம். சங்க இலக்கியங்களின் தனிச்சிறப்பாகவுள்ள உள்ளுறை, உவமம், இறைச்சிப்பொருள் இவரது கட்டுரைகளில் நல்ல விளக்கம் பெறுகின்றன. பாட்டிற்கு உயிர்நாடியாகவுள்ள மெய்ப்பாடு பற்றிய விளக்கம் நன்முறையில் அமைந்துள்ளது. மரபியல் பேராசிரியர் குறிப்பிட்டுள்ள மனஉணர்வு - பொறியுணர்வு உளவியல் அடிப்படையில் தெளிவாக விளக்கம் பெற்றுள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார். பு. ரா. புருடோத்தம நாயுடு தமது முன்னுரையில் ந. சுப்பு ரெட்டியாரின் தொல்காப்பிய ஈடுபாட்டினை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"தொல்காப்பியப் பொருளதிகாரம் வெறும் இலக்கியங்களுக்குக் கூறும் இலக்கணம் மட்டுமல்ல. அது தமிழர்களுடைய வாழ்க்கை

முறைக்கும் இலக்கணம் கூறும் ஓர் ஒப்பற்ற சமுதாய நூல் என்று சொல்லலாம். இப்பொருளதிகாரப் பிரிவினையை ஆயும்வேளை தொல்காப்பியருடைய பரந்த பார்வையும் ஆழ்ந்த கருத்தும் எளிதில் புலனாகும் என்றும், இவ்வதிகாரம் பண்டைத்தமிழர்களின் பழக்கவழக்கங்களையும் நூல் முறைகளையும் பிற சிறப்புகளையும் ஆராய்ந்து அறிவதற்கு ஒரு சிறந்த கருவி நூலாக இலங்குகிறது என்றும் சுப்புரெட்டியார் தெளிவுபடுத்துகின்றார்'' என்ற குறிப்புரை கவனிக்கத்தக்கது.

## தொல்காப்பியரின் வரம்பு

அறிவு நுட்பங்களுக்கெல்லாம் எட்டியவாறும் இவ்வுலகத்துப் பொருள்களை உறுப்பினாலும், தொழிலினாலும், பண்பினாலும் பாகுபடுத்தி நோக்கினால் அவை எல்லையற்று விரிந்து ஒருவித வரம்பினுள் அடங்காது போய்விடும். இவற்றை ஒரு வரையறைக்குள் அடக்கிப் பேசுவர் தொல்காப்பியர். அவர் உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் பயின்றுவரும் பொருள்களை மூவகையாகப் பிரித்துப் பேசுவர். அவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன. தமிழர்கள் பிரித்து வழங்கிய குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த இடமும்), முல்லை (காடும் காடு சார்ந்த இடமும்), மருதம் (வயலும் வயல் சார்ந்த இடமும்), நெய்தல் (கடலும் கடல் சார்ந்த இடமும்) ஆகிய நால்வகை நிலங்களைத் தொல்காப்பியர் காடுறை உலகம், மைவரை உலகம், தீம்புனல் உலகம் பெரும்புனல் உலகம் என்று குறிப்பிடுவர்.

## களவு

தொல்காப்பியர் சுட்டும் ''பால் வரைத் தெய்வம்'' என்ற ஊழின் துணையால், முன்பின் அறியாதவர்களாயினும் தலைவனும் தலைவியும் தனியிடத்தில் சந்தித்துக் காதல் கொள்ளுகின்றனர்; கலந்து இன்பந்துய்க்கின்றனர். இதனைக் 'களவு' என்று அகப்பொருள் இலக்கணம் கூறுவதோடு, இவ்வாறு களவு முறையில் காதல் புரிபவர்கள் பிறகு, பலரறிய மணம்புரிந்து வாழ்வதைக் 'கற்பு' என்றும் கூறுகிறது.

தமிழ் மக்களது களவுப்புணர்ச்சியைக் காந்தருவமாகத் தொல்காப்பியனார் கருதினார் என்பதை,

***''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு***
***அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்***
***காமக் கூட்டம் காணுங் காலை***
***மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்***
***துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே''***
***(களவியல், நூற்பா. 1)***

என்ற நூற்பா வழி தெளியலாம்.

கந்தருவ வழக்கில் மெய்யுறு புணர்ச்சி முதற்கண் தோன்றும். அதன் பயிற்சியால் உள்ளப்புணர்ச்சி நிலைபெற்று மரணிக்கும் வரையிலும் காதலர்கள் கூடி வாழ்தலும் உண்டு, இதனைத் தொல்காப்பியர் 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற் காமக் கூட்டம்' என்று கூறுவதைச் சுப்புரெட்டியார் வலியுறுத்துகின்றார்.

## கற்பு

கொடைக்குரி மரபினராக விளங்கும் காதலர்களைப் பெற்ற தந்தை, தாய், தனையர், ஆகியோர் இல்லாத சூழலில் சான்றோரையும் தெய்வத்தையும் கொள்வது வழக்கம் என்றும் கொடுப்பக் கொள்வது கற்பு என்று ஓதினமையால், அது கொடுக்குங்கால் களவு வெளிப்பட்ட வழியும் மெய்யுறு புணர்ச்சியின்றி உள்ளப்புணர்ச்சியான் உரிமை பூண்ட வழியும் கொள்ளப்பெறும் என்பதைத் தெளியவேண்டுமென சுப்புரெட்டியார் வலியுறுத்துகின்றார். களவுக் காலத்தில் தமரையறியாது தலைவி தலைவனுடன் சென்று அவன் ஊரில் மணந்துகொள்வதையும் கற்பென்று கொள்ளவேண்டுமென்பது தொல்காப்பியரின் கருத்து எனவும் தெளிவுபடுத்துகின்றார். கற்புக் குறித்து,

***"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்***
***கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்***
***கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"***
***(கற்பியல், நூற்பா 1)***

***"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே***
***புண்ர்ந்துடன் போகிய காலை யான"***
***(கற்பியல், நூற்பா 2)***

என்ற நூற்பாக்களில் தொல்காப்பியர் பகர்கிறார்.

## இல்லறவொழுக்கம்

கற்பு என்பதுதான் இல்லறவொழுக்கமாகும். தொல்காப்பியத்தில் 'கற்பு' என்று வரும் இடங்களையெல்லாம் ஆராயின் அது 'இல்லறம்' என்ற பொருளையே குறிப்பதாகும் எனச் சுப்புரெட்டியார் விளக்குகிறார். கற்பு அல்லது இல்லறவொழுக்கத்தைத் தொல்காப்பியர்,

***"மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்***
***இவைமுத லாகிய இயல்நெறி பிழையாது***
***மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்***
***பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே"***
***(செய்யுளி. நூற்பா 179 - இளம்.)***

எனக் கூறுகின்றார். கற்பு என்பதற்கு 'மகளிர்க்கு மாந்தர்மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி' என்று இளம்பூரணரும், 'தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதொரு மேற்கோள்' என்று நச்சினார்க்கினியரும் கூறுவர்.

## ஒத்திருக்க வேண்டிய பண்புகள்

தமிழர்கள் தெய்வ உணர்ச்சியாகக் காதலைப் போற்றி வளர்த்தனர். காதல் வயப்படும் தலைவன் தலைவியர் பத்து வகைப் பண்புகளில் ஒத்திருக்க வேண்டுமென்று தொல்காப்பியர் வலியறுத்துவதாகச் சுப்புரெட்டியார் தெளிவுபடுத்துகின்றார். ஒத்த பிறப்பும், ஒத்த ஒழுக்கமும், ஒத்த ஆண்மையும், ஒத்த வயதும், ஒத்த உருவும், ஒத்த அன்பும், ஒத்த நிறையும், ஒத்த அருளும், ஒத்த அறிவும், ஒத்த செல்வமும் என பத்துப் பண்புகளிலும் ஒத்தவர்களாக இருக்க வேண்டுமென்பது தொல்காப்பியர் கருத்து. இதனை,

***"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு***
***உருவு நிருத்த காம வாயில்***
***நிறையே அருளே உணர்வொடு திருவென***
***முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"***
***(மெய்ப். - நூற்பா 25 - இளம்.)***

என்ற நூற்பா தெளிவாக்குகின்றது.

## அகமும் புறமும்

சுப்புரெட்டியார் கூற்றுப்படி தொல்காப்பியர் முதலில் அகத்திணை இலக்கணங் கூறிப் பின்னர் அதற்கினமான புறத்திணை இலக்கணம் கூறுவார். ஆதலின் அவர் அப்புறத்திணை இலக்கணத்தில் பகுத்து எடுத்துக் காட்டும் கூறுபாடுகள் யாவும் அவர் தம் அகத்திணை இலக்கணக் கூறுபாடுகட்கு இனமுடையனவாகவே இருத்தல் வேண்டும். அகத்திணை இயல் கூறுகளை,

***"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்***
***முற்படக் கிளந்த எழுதிணை என்ப"***
***(அகத்திணை, நூற்பா 1)***

என்ற நூற்பாவழி தொல்காப்பியர் விளக்குகின்றார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என ஏழு அகத்திணைகட்கும் முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய ஏழு புறத்திணைகளை இனமக்கிக் காட்டுவார்.

## மெய்ப்பாடு

சுவைகளின் தோற்றத்தையும் தொகையினையும் தொல்காப்பியர்,

***"பண்னைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்***
***கண்ணிய புறனே நானான் கென்ப"***
***(மெய்ப். - நூற்பா 1 - இளம்.)***

என்று கூறுவர். மெய்ப்பாடு என்பன 'பண்ணை' என்பதன் வழியாகத் தோன்றும்; அவை முப்பத்திரண்டு பொருளாய் அவற்றாற் கருதப்பெறும் பொருட்பகுதி பதினாறாக அடங்கும் என்பது தொல்காப்பியர் கருத்தாகுமென சுப்புரெட்டியார் விளக்குகிறார்.

| சுவைகள் | | சுவை தோன்றும் நிலைக்களங்கள் (பொருள்கள்) |
|---|---|---|
| 1. | நகை | எள்ளல், இளமை, பேதைமை, மடன் |
| 2. | அழுகை | இளிவு, இழவு, அசைவு, வறுமை |
| 3. | இளிவரல் | மூப்பு, பிணி, வருத்தம், மென்மை |
| 4. | மருட்கை | புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் |
| 5. | அச்சம் | அணங்கு, விலங்கு, கள்வர், இறை |
| 6. | பெருமிதம் | கல்வி, தறுகண், இசைமை, கொடை |
| 7. | வெகுளி | உறுப்பறை, குடிகோள், அலை, கொலை |
| 8. | உவகை | செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு |

## செய்யுளின் வகை

தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுட்கே உரிய சில மரபுகளைக் குறிப்பிடுவதாகச் சுப்புரெட்டியார் சுட்டியுள்ளார். செய்யுள் அடிவரையறை உள்ளன, அடிவரையறை இல்லன என்று இரண்டு வகைப்படும். அடிவரயறை உள்ளன ஆசிரியர், வஞ்சி, வெண்பா, கலி என்ற பாக்களும்; தாழிசை, துறை, விருத்தம் என்ற பாவினங்களும் ஆகும். அடிவரையறை இல்லாதனவற்றை ஆறு வகைப்படும் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

***"எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்***
***அடிவரை யில்லன ஆறெனு மொழிப"***
***(செய்யுளியல், நூற்பா 157 - இளம்.)***

## முடிவுரை

ந. சுப்புரெட்டியார் கூற்றுப்படி 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை' என்னும் இந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் 'தொல்காப்பியம் - பொருளதிகாரம்' பயில்பவருக்கு ஒரு வழித்துணை விளக்கம்போல அமையும்; ஏனையோருக்கும் தொல்காப்பியத்தைப் பற்றிய கருத்துகளை எளிதாகப் பெறுவதற்குத் துணையாக இருக்கும். இந்நூலைப் பயில்வோர் 'கவிதை வாழ்க்கைக்காகவே அது நிலை பெற்றுள்ளது' என்று கவிதையைப் பற்றி ஹட்சன் என்ற மேனாட்டுத் திறனாய்வாளர் கூறிய கருத்து ஒல்காப் பெரும்புகழ் 'தொல்காப்பியம்' என்ற நூலுக்குப் பெரிதும் பொருந்துவதை நன்கு அறிவர்.

# 68. ந.சுப்புரெட்டியார் உள்ளத் தெருக்களில் உலா வரும் கவிதையனுபவம்

**முனைவர் த. பிரியா**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர் - 641 029.*

*தமிழறிஞர் ந.சுப்புரெட்டியார் அவர்களின் கவிதையனுபவம் என்ற நூல் கவிதையின் தாக்கம் இலக்கியத் துறையில் எப்படி ஒரு முக்கியப் புள்ளியாக இருக்கிறது என்பதை ஆர்வமாகக் உணரச்செய்கிறது. இந்த நூலில் கவிதையனுபவத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்துரைத்துக் கூறியிருக்கும் பாங்கு போற்றுதலுக்கு உரியது. காரணம் தனது சொற்றொடர்கள் மூலம் நம்முள்ளும் கவிதை பற்றிய புதிய புரிதலை ஏற்படுத்துகிறார் ஆசிரியர்.*

***முதற்பகுதி: உணர்ச்சியின் தத்துவம்***
*இரண்டாம் பகுதி: கவிதையின் தத்துவம்*
*மூன்றாம் பகுதி: கற்பித்தலின் தத்துவம்*

*கவிதையனுபவத்தை பெறுவதற்கு இம்மூன்று தத்துவங்களும் மிகவும் இன்றியமையாதவை என்பது இந்நூலாசிரியர் கருத்து.*

*கவிதையின் சுவையைப் புரிந்து கொள்ளுகின்ற விதத்தை ஆசிரியர், 'கவிதை இன்னது என்று ஓரளவு அறிந்து கொண்டு அதனைச் சுவைப்பது ஒருவகை. அதனை அறியாமலே சுவைப்பது மற்றொரு வகை பெறும் அனுபவம் ஒன்றேயாயினும் அவ்வனுபவத்தின் தரத்தில் வேறுபாடு இருக்கத்தான் செய்யும்' எனக் குறிப்பிடுகின்றார் (கவிதையனுபவம், ப. 17).*

*கவிதையைப் படிக்கின்ற போது உணர்க்கின்ற பொருள் அவர் அவர் சிந்தனையின் நீட்சியைப் பொறுத்து அமையும் என்று சொல்லி இருக்கும் போக்கு வரவேற்கத்தக்கது ஏற்றுக் கொள்ளவும் கூடியது.*

*உணர்ச்சியின் தத்துவம் பற்றி குறிப்பிடும் போது,*

*'உடலும் உள்ளமும் நன்னிலையில் உறவு கொண்டிருந்தால் தான் நல்லுணர்ச்சிகள் தோன்றிக் கவிதையை அனுபவிப்பதற்குத் துணைசெய்யும். உணர்ச்சிகளின் திரட்சியே பற்றுக்கள், பற்றுக்களே நம்மைக் கவிதைகளைப் படிக்கத் தூண்டுபவை. உணர்ச்சிகளே மீப்பண்புகளுக்கும் காரணமாக இருப்பவை. இவற்றின் காரணமாக நாம் பல்வேறு கவிதைகளைப் படிக்கின்றோம். அவற்றைப் படித்து அனுபவிப்பதற்கேற்ற மன நிலைகளையும் பெறுகின்றோம்'*

(கவிதையனுபவம், ப. 18). இத்தகைய உணர்ச்சிகள் உள்ளக்கிளர்ச்சிகள் ஆகியவை பற்றி இந்நூல் விரித்துப் பேசுகின்றது.

எந்த மொழியும் குறியீடுகளாலானது சொற்களே இக்குறியீடுகள் அச்சொற்களுக்குப் பொருள் உண்டு ஆகையால் இவை தூண்டலை எழுப்பும் அடையாளங்களாகின்றன. நம்முடைய கண்கள் அச்சிட்ட கவிதையின் சொற்களைப் பார்க்கின்றன. கவிதையை மனதிற்குள் வாசிக்கின்றோம், வாய்விட்டும் படிக்கின்றோம். கண்ணின் மூலமும், காதின் மூலமும் ஏற்படும் தூண்டல்கள் நம் மூளையை அடையும்போது கவிதையின் பொருள்களை அறிகின்றோம் நம் மனத்தில் பல்வேறு எண்ணங்கள் எழுகின்றன. இவை தம்மோடு தாமாகக் கலந்து தொகுதிகளாகிப் பிற எண்ணங்களுக்குக் குறியீடுகளாக அமைகின்றன.

இவ்வாறான கருத்துக்கள் கவிதையை இதுவரை எந்த ஒரு நோக்கமும் இல்லாமல் வாசித்துச் சென்ற நிலையில் இருந்து மாறுபட்டுப் பல புதிய பரிணாமத்தில் கவிதையை ரசிக்கச் செய்ய வைக்கின்ற உந்து சக்தியாக இருக்கிறது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வைக்கிறது.

## கவிதையின் தத்துவம்

ஏதோ ஒரு வகையான உண்மையை அடிப்படையாகக் கொண்டு செஞ்சொற்களால் உள்ளங் கவரும் முறையில் உயர்ந்த கவிதையை உண்டாக்குபவனே கவிஞன், இளங்கோ ஒரு கவிஞன், கம்பன் ஒரு கவிஞன், சேக்கிழார் ஒரு கவிஞன், உலகத்திற்கே மாபெரும் உண்மைகளை உணர்த்திய வள்ளுவன் ஒரு மாபெருங் கவிஞன், இவர்கள் இயற்றிய கவிதைகட்குத் தத்துவம் உண்டு.

இப்படி எல்லாக் கவிஞர்களின் படைப்புகளிலும் தத்துவங்கள் இருக்கும் என்பதை அவரின் ஆற்றல் மிக்க சொற்களில் வடித்துக் கூறுகிறார்.

எல்லாக் கவிஞர்களும் உள்ளதை உள்ளவாறு பாடுவதில்லை. அதற்குக் காரணம் கவிஞன் தான் காணும் உலகத்தைவிடச் சிறந்ததோர் உலகைப் படைக்க விழைகின்றான். ஆகவே அவனது கற்பனையும் சமூகநலத்தை முன்னிறுத்துவதால் உயர்வுபெறுகிறது.

கவிதையின் தத்துவத்தில் கவிதையின் இலக்கணம் கற்பனை, சொல்வளம், ஒலிநயம், யாப்புமுறை, அணிநலன், தொடைநயம், சுவைகள், கவிதை கூறும் உண்மை போன்ற பொருள்கள் அடங்கும் என்று கவிதையின் தத்துவத்திற்கு விளக்கம் கொடுத்து இருக்கிறார்.

நாம் வாசிக்கின்ற கவிதையை வாய்விட்டுப் படிக்கின்றபோது அந்த ஓசையும், அதற்கேற்ப உடலும் அசையும் போது படிக்கின்றவர்களும் கேட்பவர்களும் அந்தக் கவிதையை முழுமையாக உணரமுடியும் என்கிறார்.

'ஏட்டிலுள்ள கவிதையும் உணர்ச்சியின்றிப் படித்தால் கருத்தினைமட்டிலுமே உணர்த்தும் ஒருவர் பேசும் பொழுது மேற்கொள்ளும் முகக் குறிப்புக்கள், கையசைவுகள், ஒலிப்புக்களின் அழுத்தங்கள் முதலியவை சேர்ந்தால்தான் உணர்ச்சி நன்கு புலப்படும். கவிதையைப் பாடியவர் இத்தகைய குறிப்புக்களைப் பாடலில் விட்டுச் சொல்லவில்லை, விட்டுச் செல்லவும் முடியாது. கவிதையின் ஒலிநயத்தைத் துணைக் கொண்டால் கவிஞனின் உணர்ச்சியைப் பெற்றுவிடலாம். உணர்ச்சியின்றி ஒரு பாடலை அனுபவிக்க வேண்டும் என்று முயல்வது உப்போ, சர்க்கரையோயின்றி ஒரு பொருளைச் சுவைப்பது போன்றதாகும் என்று ந. சுப்புரெட்டியார் (ப.25) குறிப்பிடுகின்றார்.

இவரின் கூற்றை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் இதன் உண்மைத் தன்மை மிளிர்கிறது.

கவிதையனுபவம் என்ற இவரின் நூலில் இவர் எடுத்து விளக்கியுள்ள கவிஞர்களின் கவிதைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கூறமுடியவில்லை என்றாலும் கவிஞர்கள் மற்றும் கவிதைகளின் பெயர்களையாவது சிலவற்றைக் குறிப்பிட வேண்டும்.

| | |
|---|---|
| கவிமணி : பாரதியும் பட்டிக்காட்டானும் | 23 |
| ஆளுடையஅடிகள் அருள்மாலை | 7 |
| ஐந்திணைஐம்பது | 38 |
| கம்பராமாயணம் | |
| திருக்குறள் | |
| குறுந்தொகை | 73 |
| நளவெண்பா | 340 |
| நற்றிணை | 260 |
| சிலப்பதிகாரம், பதிகம் வரி | (55-58) |
| சீவகசிந்தாமணி | 1374 |
| மெய்ப்பாட்டியல் | 12 (இளம்பூரணம்) |
| திருக்குற்றாலக்குறவஞ்சி | 44 (கண்ணி -3) |
| திரு.வி.க. முருகன் அல்லது அழகு-பக்கம் | 18 |
| தேவாரம் - அடங்கன்முறைசெய் | 4941 |
| திருத்தொண்டர் புரணம்-திருத்தாட்டிகாண்ட | 106 |
| யாப்பருங்கலக்காரிகை 18இல் வந்தஉதாரணச் செய்யுள் | |
| குற்றாலக் குறவஞ்சி | 18 (5) |

இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. புத்தகம் முழுவதிலும் தகுந்த இடத்தில் வரிகளை மேற்கோள் காட்டி விளக்கம் கொடுத்துள்ள பாங்கு படிக்கின்றவர்களுக்கு ஆர்வத்தையும் பரந்துபட்ட எல்லாவகைக் கவிதையைப் பற்றிய புதிய வடிவிலான சிந்தனையையும் தூண்டுகின்ற வகையில் அமைந்து இருக்கின்றது என்பதுவே சாலப் பொருந்தும்.

***"கலையினால் திங்கள் போல***
***வளர்கின்ற காலத்தேயுன்***
***சிலையினால் அரியை வெல்லக்***
***காண்பதோர் தவரும் செய்தேன்;***
***தலையிலா யாக்கை காண***
***எத்தவம் செய்தேன்? அந்தோ!***
***நிலையிலா வாழ்வை இன்னும்***
***நினைவனோ நினைவி லாதேன்"(கம்பராமாயணம், பா.)***

இந்த வரிகள் மேகநாதன் இறந்துபட்ட ஞான்று அவன் உடலின்மீது வீழ்ந்து அவனைப் பெற்ற தாய் மண்டோதரி புலம்புவது போல் பாடியவை. கம்பருக்கு இந்த அனுபவம் இல்லை என்றாலும் கற்பனையால் மற்றவர்களும் அந்தத் துயரைப் படிக்கும் போது உணரும்படி செய்து இருக்கிறார். கவிஞன் கற்பனையில் பெற்ற அனுபவம் நம்முடைய அனுபவமாகி விடுகின்றது. கவிதைகளை நாம் மெய் மறந்து அனுபவிக்கின்றோம். இவ்வாறு கவிஞர்கள் காவியங்களிலும் கதைகளிலும் இல்லது, இனியது, நல்லது என்பவற்றைக் கற்பனைத் திறனால் மனம் ஏற்கும் வகையில் கவிதைகளைக் கவிஞர்கள் சொல்லியிருக்கும் பாங்கு அக்கவிதையைப் படிக்கும் போது நாமும் திளைக்கின்றோம் என்று போற்றி இருக்கிறார்.

## கற்பித்தலின் தத்துவம்

கற்பித்தலின் முறையைப் பற்றிக் குறிப்பிடும்போது தாய்மொழியாசிரியர்களுக்குப் பொறுப்பு நிறைய இருக்க வேண்டும் என்றும்,

'தாய்மொழியாசிரியர்கள் கவிதையை மாணாக்கர்கள் அறியும் முறையில் பயிற்றாது நுகரும் முறையில் பயிற்ற வேண்டும். உணரும் முறையில் கற்பிக்க வேண்டும் என்று (ப-41) ஆசிரியர்களுக்கு அறிவுரை கூறிவுள்ள செயல் போற்றுதல்களுக்கு உரியது.

பாடல்களைப் பயிற்றும் ஆசிரியர்கள் மாணாக்கர்களுக்கு மனப்பாடம் செய்வதின் தேவையையும் அந்த எண்ணத்தையும் தூண்டிவிட வேண்டும். அத்தகைய தூண்டல்களால் கவிதை இன்பத்தைப் பெறமுடியும் என்கிறார் நூலாசிரியர்.

கவிதையைப் படிப்பது வாழ்க்கையில் நேரிடும் பல அவலக் கவலைகளை மறப்பதற்கும், பொறுப்பதற்கும் மருந்தாக அமையும் என்ற உண்மையையும் கூறிச்செல்கிறார்.

வாழ்க்கை பற்றிய புரிதல்களைக் கவிஞர்கள் நாம் உணரும் வண்ணம் விளக்கவல்ல ஆற்றல் பெற்றவர்கள். பல நூற்றாண்டுகள் கழிந்த பிறகும் அவை நமக்குப் பல வாழ்வியல் முறைமைகளை எடுத்துரைத்துக் கொண்டேயிருக்கின்றன. கதிரியக்கப் பொருள்களிலிருந்து கதிர்கள் வெளிவருவதைப்போல் பல உண்மைகள்

அவற்றிடமிருந்து மானிட சமூகத்திற்கு வந்து கொண்டேயிருக்கின்றன.

***"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூம்***
***உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்***
***ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்***
***சூழ்வினைச் சிலம்பு காரணமாக" (ப.387)***

இப்படிச் சிலப்பதிகாரம் எடுத்துரைப்பது போல் ஏனைய காவியங்களிலும் இத்தகைய தன்மைகளைக் காணலாம் என்று கூறுகிறார்.

கம்பன், சேக்கிழார், திருத்தக்கதேவர், இளங்கோ போன்ற பல கவிஞர்களின் கவிச்சுவையைப் புதியவகையில் உணரச் செய்ய வைத்துள்ளது. இதுவரை கவிதைகளை ஏனோ தானோ என்று கற்ற நிலையில் இருந்து புதிய ஒரு தேடலில் உண்மை உணர்வு நிலையில் கற்கத் தூண்டி இருக்கிறது அய்யாவின் எழுத்துகள்.

## தொகுப்புரை

கவிதைப் பயணம் வெற்றிபெற வேண்டுமெனில் கலைஞனும் வாசகனும் ஒரே நேர்கோட்டில் சிந்திக்க வேண்டுமென்பதையும், கவிதையனுபவத்தால் இன்பத்தைக் கூட்டுவிக்க முடியும் என்பதையும் ந. சுப்புரெட்டியார் வலிமையாக முன்வைக்கின்றார்.

# 69. ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் ஐந்திணை நெறிகளும் இடந்தலைப்பாடும்

**மு. ஷாஜஹான்**
*ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் -641 029.*

## முன்னுரை

தமிழ்மொழியின் தலைசிறந்த இலக்கணம் தொல்காப்பியம்; தமிழ் மக்களது பேரறிவின் கருவூலமாக இன்றுவரை நின்று நிலவுகின்றது. இஃது ஆசிரியர் தொல்காப்பியரால் இயற்றப்பெற்றது. இன்று நமக்குக் கிடைத்துள்ள எல்லா நூல்களுக்கும் முற்பட்ட முழுத் தமிழ் நூல் இது. இவை எல்லாவற்றையும் விடத் தொன்மையினாலும் ஆழ்ந்த பொருளுடைமையினாலும் மேம்பட்டுத் திகழ்வது. பின்வந்த தமிழ் இலக்கண ஆசிரியர்க்கெல்லாம் ஒரு கலங்கரை விளக்கம் போலிருந்து அவர்கட்கு வழிகாட்டியாய் அமைவது. குமரியாறு தமிழ் நாட்டின் தெற்கு எல்லையாய்த் திகழ்ந்த காலத்திலேயே இந்நூல் தோன்றிவிட்டது. காக்கைப் பாடினியார், 'குமரித்தீம்புனல்' என்று குறிப்பிட்டுள்ளமை இதனை வலியுறுத்தும். இத்தனை மேன்மை பொருந்திய தொல்காப்பியம் காட்டும் ஐந்திணைகளின் நெறிகளையும் இடந்தலைப் பாட்டையும் சுப்புரெட்டியாரின் பார்வையில் ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## ஐந்திணை நெறியும் முப்பொருளும்

தலைவனும் தலைவியும் யாதொரு உள்ளக் குறிப்பும் முயற்சியுமின்றி ஒரு பொழிலகத்து எதிர்பட்டு மனமியைந்து கூடுவது தான் அன்புடைக் காமம். காம நிகழ்ச்சியின் கண் ஒத்த அன்பினராய்க் கூடுதல் நல்வினையான் அல்லது வாராது என்பது பண்டையோர் கொள்கை. தொல்காப்பியர் இதனை,

***"ஒன்றி உயர்ந்த பாலது ஆணை"***

என்று குறிப்பிடுவார். காந்தருவ மணத்தினைக் களவியல் உரைக்காரர் 'யாழோர் கூட்டம்' என்று கூறுவர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திணையாகப் பிரித்துப் பேசப்படுவதால் இதனை 'ஐந்திணை நெறி' என்று குறிப்பிடும் வழக்கமும் உண்டு. திணை என்ற சொல் ஒழுக்கத்திணைக் குறிக்கும். இந்த ஐந்து வகை ஒழுக்கங்களும் முதற்பொருள், கருப்பொருள், உருப்பொருள் என்ற மூன்று வகையான பொருள்களை உடையன. இவற்றுள் உரிப்

பொருள்தான் மிகவும் முக்கியமானது என்றும் காதல் நாடகத்தின் இயக்கம் இதுதான் என்றும் ந.சுப்புரெட்டியர் விளக்கம் தருகிறார்.

ஐந்திணை ஒழுக்கத்தில் தலைமக்களாக விளங்குபவர்கள் அறிவும் செல்வமும் உடைய நல்ல குலத்தில் பிறந்தவர்கள் இங்கு எக்கரணத்தாலும் இழிந்த மரபினரைக் காண்டல் அரிது. ஐந்திணை ஒழுக்கமாகிய புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பன எல்லா நிலத்து மக்களுக்கும் பொதுவான செயல்களே. என்றாலும் மலை நாட்டில் புணர்தல் நிகழ்வதாகக் கூறுவது இலக்கிய மரபு. இவ்வாறே பாலை நிலத்தில் பிரிதல் நிகழ்வதாகவும், காடு சார்ந்த இடத்தில் இருத்தல் நிகழ்வதாகவும், வயல் சூழ்ந்த நிலத்தில் ஊடல் நிகழ்வதாகவும், கடற்கரைப் பகுதியில் இரங்கல் நிகழ்வதாகவும் இலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது. இந்த முறையில் கூறினால் தான் சிறப்பு என்பதை எண்ணியே பண்டைய ஆசிரியர் ஒழுக்கத்தின் பெயர்களையே நிலத்திற்குக் கொடுத்தனர். ஐந்திணை என்பது ஐவகையான ஒழுக்கம். இவ்வைந்தும் மக்கள் கடைபிடித்து ஒழுகத்தக்கவை. இவ்வைந்து ஒழுக்கங்களையும், இவை இன்ன நிலத்திற்குரியவை என்பதை,

***"போக்கெல்லாம் பாலை; புணர்தல் நறுங்குறிஞ்சி***
***ஆக்கஞ்சேர் ஊடல் அணி மருதம்; - நோக்குங்கால்***
***இலலிருத்தல் முல்லை; இரங்கள் நறுநெய்தல்***
***சொல்லிருந்த நூலின் தொகை"***

என்ற பழம்பாடல் வழி அறியலாம். இவ்வாறு சீரும் சிறப்புடனும் வாழ்ந்த நம் முன்னோரின் வாழ்க்கை முறை அறிந்து இன்புறற்பாலது. இத்தகைய திண்ணிய அடிப்படையை எவ்வளவோ சூறாவளியும் பெருமழையும் பேரிடியும் தத்தம் முழுவலியும் கொண்டு தாக்கிய பின்பும் கூடத் தமிழ் நாகரிகம் என்றும் தனிப்பெருங் கட்டடம் இன்னும் அழிந்தொழிந்து சிதையாமல் நின்று நிலவுகின்றது.

உலகியலில் மேற்கூறிய முறைப்படி நிகழ்ச்சிகள் நடைபெறா; நூல்களில் அவை தெளிவாகக் காணப் பெறுவது போல உலக வழக்கில் காணப் பெறுவதில்லை. என்றாலும், இந்த ஐந்திணைக்குரிய நிகழ்ச்சிகளின்றி இவ்வுலகமும் இல்லை. ஆனால் இவை மாறி மாறிக் காணப்பெறும். இவ்வாறு மாறி மாறி வரும் நிகழ்ச்சிகளைக் கூறும் பாடல்கள் உலக வாழ்க்கையையொட்டி ஆக்கப் பெற்றன என்று கொள்ளல் வேண்டும். இதற்கும் தொல்காப்பியர் இலக்கணம் அமைத்துள்ளார்.

'திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே'. 'இஃது இல்லதெனப் படாது. உலகியலேயாம். உலகியலின்றேல். ஆகாயப் பூ நாறிற்றென்ற வழி அது சூடக் கருதுவாருமின்றி மயங்கக் கூறினாரென்று உலகம் இழிந்திடப் படுதலின் இதுவும் இழிந்திடல் படும். இச்செய்யுள் வழக்கினை நாடக வழக்கென மேற்கூறினார். எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலது, உள்ளோன்

தலைவனாக இல்லது புணர்தல் முதலாகப் புனைந்துரை வகையாற் கூறும் நாடக இலக்கணம் போல யாதானுமோரோ வழி ஒரு சாரர் மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லோர்க்கும் பொதுவாக்கி, இடமும் காலமும் நியமித்துச் செய்யுட் செய்தல் ஒப்புமை நோக்கச் செய்யப் பட்டதாகலின்' என்று நச்சினார்க்கினியர் கூறியிருப்பதை நாம் உணர்ந்தால் இவ்வைந்திணை நெறி விளங்கும். அன்றியும் 'இல்லாது, இனியது, நல்லது' என்று இறையனார் களவியல் உரைகாரர் கொண்டது போல் கொண்டாலும் தவறுடையதாகாது என்று கூறுகிறார் ந.சுப்புரெட்டியர்.

## இடந்தலைப்பாடு

தலைவன் தானே சென்று கூடுவது, பாங்கனாற் கூடுவது என்று இடந்தலைப்பாடு இருவகைப்படும் என்று கூறுவர் நச்சினார்க்கினியர். பேராசிரியரும், 'துணையின்றி நிகழும் களவு சிறப்புடைத்தலானும், 'பாங்கன் கழறும்' (இடித்துரைப்பன்) என்று அஞ்சி அவனை முந்துறத் தலைவன் மறைதொழுகுமாதலின் தன்னாற் கூடும் இடந்தலைப்பாடு நிகழ்ந்த பின்பே பாங்கனைத் துணையாக வேண்டுவன்' என்று கூறுகிறார். இவ்விடத்தில் இடந்தலைப்படுவோர் பெரும்பாலும் பாங்கனை இல்லாதாரும், பாங்கனை உடையரானாலும் நாணத்தைக் கடவாமல் அதன்கன் நிறையுடையாரும் அல்லது அப்பாங்கனிடத்துக் கூறினால் அவன் மறுத்துக் கூறுவானே என்றெண்ணும் அச்சமுடையாரும், பாங்கனுமிருந்து நாணமுமிலாரானவிடத்தும் வினைவழியே நிற்றல் வேண்டும் என்று நினைக்கும் நீரருமாகவே இருப்பர். இவரல்லாத ஏனையோர் பாங்கற் கூட்டம் பெறுவர்.

இறையனார் களவியலாரும் இவ்விடந்தலைப்பாடு இருவகைப்படும் என்றே கூறுவர்.

> ***"ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் தன்வயின்***
> ***பாங்க னோரிற் குறிதலைப் பெய்தலும்***
> ***பாங்கிலன் தமியோன் இடந்தலைப் படலுமென்று***
> ***ஆங்க இரண்டே தலைப்பெயல் மரபே"***
> ***(இறையனார் களவியலுரை)***

(ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன்- இயற்கைப் புணர்ச்சியின் பின் பிரிந்த தலைமகன்; பாங்கனோரிற் குறிதலைப் பெய்தல் - பாங்கனால் குறியிடத்துத் தலைப்பெய்தல்; பாங்கிலன் தமியோள் - பாங்கனை இன்றித் தனியவளாக இடந்தலைப்படல்- இடத்து எதிர்படுதல்) என்பது அவர் கூறும் நூற்பா. இதன் உரையாசிரியர், 'பாங்கற்கூட்டம் நிகழின் இடந்தலைப்பாடு நிகழாது; இடந்தலைப்பாடு நிகழின் பாங்கற் கூட்டம் நிகழாது; என்னை? அத்துணையாகத் தலைவி எளியள் அல்லள் ஆகலான்' என்று கூறுவர். மேலும் அவர் இந்நூற்பாவிற்குத் தடை விடைகளால் விளக்கும் முறை நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. மேற்கூறிய உரைப் பகுதியினைத் தொடர்ந்து அவர் கூறுவது, அஃதேயெனின் 'பாங்கிலன் தமியோர் இடந்தலைப்படலும்

பாங்கனோரிற் குறி தலைப் பெயலும்' என்று எழற்பாற்று இச்சூத்திரம். என்னை? இடந்தலைப்பாடு தெற்வப்புணர்ச்சியோடு ஒக்கும் ஆகலான்.

## முடிவுரை

ந.சுப்புரெட்டியார் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டு தமிழுலகம் உள்ளவரை நினைந்து நினைந்து போற்றத் தக்கதாகும். சங்க கால இலக்கிய முதல் நவீன இலக்கியம் வரை இலக்கணம் உட்பட அவர் எழுதாத துறையே இல்லை என்று சொல்லும் அளவுக்கு நூல்களைப் படைத்தருளி இருக்கிறார். இக்கட்டுரையின் வாயிலாக அவர்தம் இலக்கண ஆற்றலையும், உரையாசிரியர்களுக்கு இடையேயான வேறுபாட்டையும் இவர் தடக்க அடிப்படையில் ஆய்ந்துள்ளதைக் காண முடிகிறது. ஐந்திணை நெறிகளில் ஒவ்வொரு ஒழுக்கமும் ஒவ்வொரு திணையில் நிகழ்ந்தாலும் கூட எல்லா திணையிலும் எல்லா ஒழுக்கமும் நிகழும் என்பது சுட்டிக் காட்டத் தக்கதாகும்.

# 70. ந.சுப்புரெட்டியார் பார்வையில் பாஞ்சாலி சபத கதை மாந்தர்கள்

**இரா. மாலினி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*ஏ.ஜே.கே. கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 105.*

பாரதியாரின் முப்பெரும் காப்பியங்களுள் பாஞ்சாலி சபதம் இதிகாசக் கதையை மையப்படுத்தி எழுதப்பட்டதாகும். எளிய நடையில், சுருங்கிய சொற்களால் இக்கால மக்கள் புரிந்து கொள்வதற்கேற்ப படைத்திருப்பது பாரதியின் கவித்திறனை வெளிப்படுத்துகிறது. பாஞ்சாலி சபதத்தை ஆராய்ந்து 'பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு' என்ற நூலினை எழுதியுள்ளார் பேரா.ந.சுப்புரெட்டியார். இந்நூலின் வழி பாஞ்சாலி சபதக் கதை மாந்தர்கள் பற்றிப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை வெளிப்படச் செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

மொழியின் வளத்தை எடுத்துக் காட்டுவன அம்மொழியில் எழுதப்பட்ட காப்பியங்களாகும். அவ்வகையில் தமிழில் எழுதப்பட்ட காவியம் பாஞ்சாலி சபதம். துரியோதனன் சூழ்ச்சியால் பாண்டவர்களைச் சூதிற்கழைத்து, வஞ்சித்து, அவமானப்படுத்திய கதைப் பகுதியைக் காவியப் பொருளாக அமைத்து, பழைய கதைக்குப் புதிய வடிவம் தந்துள்ளார் பாரதியார். இது அவரின் காப்பியப் படைப்பிற்குக் கிடைக்கப் பெற்ற வெற்றி எனலாம். பாஞ்சாலியை மையப்படுத்தி அமைக்கப் பெற்ற இக்காவியம் இலக்கிய இன்பம் பயப்பனவாக அமைந்துள்ளது.

பாரதத்தின் சூதுப்போர் சருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது இக்காப்பியம். காப்பியப் பொருளைத் தேர்ந்தெடுத்த பின்னர் கதையில் நிகழும் நிகழ்வுகளைப் படிப்பவர் மனம் மகிழும் (கவரும்) வண்ணம் அமைப்பதில் கவிஞனின் திறம் வெளிப்படுகிறது. அவ்வகையில் பழைய கதையைப் புதிய காவியமாகப் புனைந்துள்ளதும், புத்துயிர் கொடுத்ததும் பாரதியின் கவித்திறனை வெளிப்படுத்துகிறது. கவிதையின் போக்கிற்கேற்ப கதை மாந்தர்களைப் பயன்படுத்துவதிலும் சிறந்தவர் பாரதி என்பதையும் காப்பியம் உணர்த்துகிறது. கதையில் வரும் நிகழ்வுகளின் உயர்வு காவிய மாந்தர்களினால் சிறப்படையக் கூடியதாக அமையும். பாரதத்தில் வரும் கதை மாந்தர்களுக்கு பாரதி புது மெருகூட்டியிருப்பது சிறப்புக்குரியதாகும் என்பதை பேராசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## காவியத்தலைவி திரௌபதி

பாஞ்சாலி சபதம் என்ற சிறு காவியத்தில் திரௌபதி காவியத் தலைவியாக அமைகிறாள். காவியத்தில் தெய்வமாகக் குறிக்கப் பெறாவிடினும், நாடெங்கும் திரௌபதியம்மன் வழிபாடு நடைபெறுவதைக் காண்கிறோம். இதன்மூலம் திரௌபதி மக்கள் மனத்தில் நிலைத்த பாத்திரமாக அமைகிறாள் என்பதை உணரமுடிகிறது. பாஞ்சாலி பணயப் பொருளாக வைக்கப் பெறுவதைக் காட்டும் போது,

*'ஓவியம் நிகர்த்தவளை - அருள்*

*ஒளியினைக் கற்பனைக் குயிரதனைத்*

*தேவியை, நிலத்திருவை 'எங்குந்*

*தேடினும் கிடைப்பருந் திரவியத்தை'(பாஞ்சாலி சபதம்- துகிலுரிதல் சருக்கம்- பாடல் எண்-39)*

என்று பாரதி பாஞ்சாலியை உயர்வாகக் குறிப்பிடுவதாகப் பேராசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். சூதில் வென்ற துரியோதனன் திரௌபதியை அழைத்துவர, தேர்ப்பாகனை அனுப்பி போது 'நல்லது நீசென்று செய்தி தெரிந்துவா' என்று கூறி அவனைத் திருப்பி அனுப்புகிறாள். அதில் திரௌபதியின் துணிவும், பிரச்சனைகளை அணுகும் மதிநுட்பத்தையும் வெளிப்படுத்துகிறார் பாரதி. இரண்டாம் முறை அழைத்த போது, 'பாண்டவர்கள் தோற்றபின் எனை வைத்திழக்கும் உரிமையில்லை, என்றும், கௌரவர் அவையில் அறம் கண்டவர் இல்லையா? சாத்திரம் செத்துவிட்டதா? என் மானம் அழிந்ததையும் காண்பார்களா? புவியாளும் வேந்தர்கள் அறத்தின் மாட்சியாகக் கொன்று குவிப்பார்களா? அதனை அறத்தில் சிறந்த அந்தணர்களும் கண்டு களிப்பார்களோ?' என்று கேட்டுவரப் பணித்தாள். தேர்ப்பாகன் திரும்பி வர துச்சாதனன் சென்று பாஞ்சாலியின் கூந்தலைப்பிடித்து இழுத்து வந்து சபையின் நடுவே விடுகிறான். அப்போது,

*'பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத் திரங்கள்!*
*பெண் பாவ மன்றோ பெரியவசை கொள்ளீரோ?'*
*(பாஞ்சாலி சபதம்- துகிலுரிதல் சருக்கம்-பாடல் எண்-67)*

என்று துணிவுடன் தந்த மறுமொழியும் தம் நெஞ்சத்தையும் உருக்கும் தன்மையுடையன. இக் காட்சியில் நெஞ்சத்துணிவு கொண்ட ஒரு புதுமைப் பெண்ணைக் காண முடிகிறது. மேலும், திரௌபதியை பராசக்தியாகக் காண்கிறார். இத்தகைய பாஞ்சாலி, சுதந்திர தேவியின் தரிசனத்தை எதிர் நோக்கி இருத்தல் போலவும் தோற்றமளிக்கின்றாள் என்பதாகவும் பேராசிரியர் தம் நூலில் பதிவு செய்துள்ளார்.

## எதிர்த்தலைவன் துரியோதனன்

பாஞ்சாலி சபதம் என்ற காவியத்தின் எதிர்த்தலைவனாகத் துரியோதனன் அமைகின்றான். காவியத்தில் அமையப்பெறும் தீய

செயல்களுக்கெல்லாம் இவனே கருவியாக, அமைந்திருப்பதால் துரியோதனனை எதிர்த்தலைவனாகக் கொள்வது பொருத்தமானதாகும். திருதிராட்டிரன் நல்ல அமைச்சரவையைக் கொண்டு நல்லாட்சி புரிய முயன்றாலும் அனைத்து செயல்களிலும் துரியோதனன் கை ஓங்கி நிற்கிறது.

துரியோதனன் தீய குணங்களின் இருப்பிடமாகத் திகழ்பவன் பொது மக்கள் மனத்தில் ‘வணங்காமுடி’ என்ற திருநாமத்தில் நிலைத்து வாழ்பவன். இவனைக் கவிஞர் ‘முடிபணிவறியான்’ என்று குறிப்பிடுகிறார். துரியோதனன் கயமைப் பண்புடையவனாக் காட்டுகிறார் பாரதி. எல்லா நலன்களும், பொற்குவையும் பெற்றவன் துரியோதனன் எனினும் பொறாமை அலைகளால் கட்டுண்டு கிடப்பதை பாரதி அழகுறக் காட்டுகிறார்.

துரியோதனன் உலகியலை நன்கு அறிந்தவன். பணபலத்தால் எதையும் சாதித்து விட முடியும் என்ற கொள்கையுடையவன். நெஞ்சுறுதி மிக்கவன் நினைத்த செயலை எவ்வாறேனும் முடியச் செலுத்தும் திறமை மிக்கவன் என்றும் காட்டுகிறார். மேலும் தனது மறத்தொழிலுக்கும் பொறாமைக்கும் ஓர் அரசியல் தத்துவத்தையே அடிப்படையாக வைத்துக் கொண்டு செயலாற்றுவதாகக் கவிஞர் அவனை அறிமுகம் செய்து வைக்கிறார்.

***‘வெல்வதெங் குலத்தொழி லாம் - எந்த***
***விதத்தினில் இசையினும் தவறிலை காண்***
***நல்வழி தீயவழி - என***
***நாமதிற் சோதனை செயத் தகுமோ?***
***செல்வழி யாயினுமே - பகை***
***தீர்த்திடல் சாலுமென் றனர்பெரியோர்’ (பாஞ்சாலி சபதம்- அழைப்புச் சருக்கம்- பாடல் எண்-101)***

என்று தன் அரசியல் கொள்கையைச் சிதற விடுகிறான். சகுனி நாட்டைப் பணயப் பொருளாக வைத்தாடுமாறு கூறும் பொழுது விதுரன் தடுத்து நிறுத்தி, அறிவுரை கூறுகின்றான். அதற்கு துரியோதனன் கூறும் மறுமொழியில் - நன்றி கெட்ட விதுரா - என்று மரியாதைக் குறைவாகப் பேசுவதும் சிறிய தந்தை என்றும் பாராமல், முக்கிய அமைச்சர் என்றும் மதிக்காமல் கேவலமாகப் பேசுவதிலிருந்து துரியோதனின் கீழ்த்தரமான பண்பினை வெளிப்படுத்துகிறார். துரியோதனன் பாஞ்சாலியை தன் தம்பியைக் கொண்டு , சபைக்கு இழுத்துவரச் செய்து, அவளை அவமானப்படுத்தியது கயமையின் வெளிப்பாடாகும். என்பதை தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## திருதிராட்டிரன்

வில்லிபாரதத்தில் திருதிராட்டிரனைத் தீயவனாகக் காட்டியுள்ளார். ‘விரகினுக்கோர் வீடு போல்வான்’ என்று வில்லிபாரதத்தில் குறிக்கப்பெற்றுள்ளான். ஆனால் பாரதியோ திருதிராட்டிரனை

நல்லவனாகப் படைத்துள்ளார். புறக் கண் இல்லாவிடினும் சிந்தித்து உணரும் அகக்கண் உண்டு என்றும், விதுரனின் அறிவுரையைக் கலந்து சிந்தித்து செயல்படுவான் என்றும் பாரதி குறிப்பிடுகிறார். மைந்தன் கொண்டுள்ள கருத்தை சகுனியின் வாயிலாக அறிகிறான் சினம் கொண்டு,

***'பிள்ளையை நாசம் புரியவே - ஒரு***
***பேயென நீ வந்து தோன்றினாய் - பெரு***
***வெள்ளத்தை புல்லொன் றெதிர்க்குமோ? (பாஞ்சாலி***
***சபதம்- அழைப்புச் சருக்கம்- பாடல் எண்-71)***

என்றும் கேட்கின்றான் இதன் வாயிலாகத் திருதிராட்டிரனின் நல்ல உள்ளத்தை வெளிப்படுத்தியுள்ளார் பாரதி.

மைந்தனுக்கு பலவாறு அறிவுரை கூறியும், அவனது மனஉறுதியை அசைக்க முடியாத நிலையில் அவனின் விருப்பத்திற்கு சம்மதம் தெரிவிக்கிறான் திருதிராட்டிரன். நடக்கவிருக்கும் அதர்மச் செயல்களை எண்ணி வருத்தப்படுகின்ற திருதிராட்டிரனையும் காட்டியுள்ளார் பாரதி.

பாண்டவர்களையும், பாஞ்சாலியையும் விருந்திற்கழைக்க விதுரனைத் தூது அனுப்புகிறான். விருந்து பற்றிக் கூறும் பேச்சினிடையில், 'சகுனி சொற் கேட்டே பேயெனும் பிள்ளை கருத்தினிற் கொண்ட தீச் செயல் இஃத்தொன்றையும் குறிப்பாற் செப்பிடுவாய்' என்று பணிக்கின்றான். அதன் மூலம் திருதிராட்டிரன் கொண்டிருந்த நல்ல பண்பையும், தன் தம்பி மக்கள் மீது கொண்டிருந்த அன்பையும் வெளிப்படுத்துகிறார். பாஞ்சாலி சபதத்தில் முக்கிய கதை மாந்தர்களுள் ஒருவனாகத் திருதிராட்டிரன் விளங்குவதாகப் பேராசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

## தருமன்

பாண்டவர் ஐவரில் மூத்தவன். 'அறத்தோன்றல்', 'ஞானக்கஞ்சுகன்' என்று போற்றப்பட்டவன். மேலும் 'நூல் வகை பல தேர்ந்து தெளிந்தோன். மெய்ய றிந்தவர் தம்முளுயர்ந்தோன்' என்றும் அறத்திற்கொரு உருவமாய் விளங்குகின்றான். மேலும் அவன் சூதாட்டத்தை மறுத்துப் பேசும் போது, தனக்கு கேடு வருவதைப் பற்றி கவலை கொள்ளாமல் உலக நீதியும், நாட்டு நீதியும், உண்மையும் சீரழியும் என்று எண்ணி வருந்தினான். நல்லரசையும் அதனை ஆட்சி செய்வோரை அழிப்பதும், நாட்டிற்கு ஏற்படும் நலிவுகளையும் எண்ணும் தருமன் கூற்றின் வாயிலாக நல்லாட்சி கொண்ட பாரதம் பிற நாட்டவரிடம் அடிமைப்பட்டு அல்லல்பட்டதை மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளார். அற உணர்வு மிக்க தருமன் 'சிறுமை பல செய்து சீரழிக்கும் சூதில் பங்கு கொள்ளலாமா?' என்ற எண்ணம் தோன்றுகிறது. 'வல்லுக் கழைத்திடில் மன்னர் மறுக்கக் கூடாது' என்ற பழைய வழக்கை சகுனி எடுத்துக்காட்டி வலுக்கட்டாயமாக சூதிற்கழைத்தான். அப்போது தருமன், கூற்றில் தருமத்தையும் மாற்றும்

வல்லமை விதிக்குண்டு என்பதை உணரவைப்பதாகப் பேராசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

எவ்வளவு அற உணர்வு மிக்கவனாயினும் தவறான வழியில் செல்ல நேர்ந்தால் அவ்வழி மாறாமல் போக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவான் என்பதற்கு தருமன் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றான். குடியும், காமமும் அப்பாதையிலிருந்து விலகமுடியாமல் செய்துவிடும். அதுபோல சூதும் அந்நெறியிலேயே கொண்டு செலுத்தும். 'இழத்தொறூஉங் காதலிக்கும் சூது' என்ற குறளுக்கேற்ப தருமனும் செல்வம், நாடு, தம்பியர், மனைவி மட்டுமின்றி தன்னையும் இழக்க நேரிடுகிறது.

பொறுமைக்கு எடுக்காட்டாக விளங்கும் தருமன். எல்லாவற்றையும் இழந்தபின்பும், தன் மனைவிக்கு பல அநீதிகள் இழைத்ததைக் கண்டும் தருமன் ஊமையன் போல் ஒன்றும் பேசாது இருந்திருக்கின்றான். 'தருமனும் மாற்றாங்கே தலை குனிந்து நின்றிட்டான்' என்று கவிஞர் குறிப்பிடுவார். பொறுமை உணர்வு இவனை ஒன்றும் பேசாமல் தடுத்து நிறுத்தி விடுகின்றது. இத்தகைய நற்பண்புகளைக் கொண்ட தருமன்,

> ***"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்***
> ***தன் தகுதியால் வென்றுவிடல்" (குறள்-153)***

என்று வள்ளுவர் கூறும் குறளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறான் என்பது பேராசிரியரின் கருத்தாகும்.

இக்கட்டுரையின் வாயிலாக பாஞ்சாலி சபத்தில் கதைமாந்தர்களை அறிமுகப்படுத்துவதிலும் காவியத்தின் வளர்ச்சியில் கதை மாந்தர்களில் பங்களிப்பும் சிறப்புற அமைந்துள்ளதைப் போராசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார். இவை போன்ற கதை மாந்தர்களைத் தம் காவியத்திற்கேற்ப சிறப்பாகச் சித்தரித்துள்ளார் பாரதி என்பதையும் தம் நூலில் விளக்கியுள்ளார்.

## பயன்பட்ட நூல்கள்


பாரதியார் கவிதைகள் - பாரதியார்.

பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு - பேரா. ந. சுப்புரெட்டியார்.

திருக்குறள் - பரிமேலழகர் உரை.

ஆய்வுக் கோவை (2001).

# 71. சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் - நூல் ஆய்வுரை

**முனைவர் இரா. மணிமேகலை**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முகவுரை

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் பல்வேறு பொருண்மைகளில் நூல்களாக வெளிவந்துள்ளன. சமயம், தத்துவம், இலக்கியம், சமூகவியல், அறிவியல், சிறுவர் இலக்கியம் போன்ற துறைகளில் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதித் தமிழ் ஆய்வுலகிற்குப் பெரும்பங்களிப்பினைச் செய்துள்ளார். தமிழில் வெளியாகியுள்ள நூல்களில் அன்னாரின் படைப்புகள் தனித்துவமான இடத்தைப் பெறுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை சமயம் தொடர்பான நூல்கள் என்றாலும் அனைத்துச் சமயங்களுக்கும் அடிப்படை ‘சமயங்கடந்த மெய்ப்பொருளே’ என்பதையே அவர் தம் தனிப்பண்பாகக் கொண்டுள்ளமையும் அவரது எழுத்துகளின் வழியே அறியலாகிறது. இக் கட்டுரை அன்னாரின் ‘சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்’ எனும் நூலிற்குரிய ஆய்வுரையை வழங்குவதாக அமைகிறது.

## மெய்யியல் அடித்தளம்

தமிழ் மக்களின் வாழ்வில் சிவமும் தமிழும் பிரிப்பின்றி இருந்துள்ளமை இலக்கியங்களின் வழி காணலாகின்றது. சிவம் என்னும் சொல்லின் அடிப்படைச் சொல்லாகச் செம்மை எனும் தமிழ்ச்சொல் விளங்குகிறது. சங்க நூல் தொடங்கித் தமிழ்ச் சமயத்தில் சைவம் செல்வாக்குடன் திகழ்ந்து வந்துள்ளது. தமிழில் மெய்யியல் தத்துவம் தொடக்க கால சங்க நூல்கள், காப்பியங்கள் ஆகியவற்றின் வழியே வளரலாயிற்று என்றாலும் தமிழ்ச் சைவ மெய்யியலின் அடிப்படை நூல்களாகப் பன்னிருதிருமுறைகளே அமைந்தன. மெய்யியல் என்பது உலகியல் வாழ்வுக்கு வேறான வறண்ட பாலை அல்ல என்ற கொள்கை வலுப்பெற்றது. சாதிமத வேறுபாடின்றித் தமிழ்ச் சைவம் என்ற பெருநிழலின் கீழ் அனைவரும் இணைந்து அறவாழ்வின் அடிப்படையில் இறையின்பத்தைத் துய்த்து வாழலாம் என்ற தெளிவினை உலகிற்கு வழங்கியது.

## சைவசித்தாந்தம்

இந்திய மெய்யியல் மரபில் தனக்கெனத் தனித்துவமான இடமும் பிறதரிசனங்களுக்கான அடித்தளமாகவும் விளங்குவது சைவசித்தாந்தம்

எனும் தென்னிந்திய தத்துவமாகும். சைவசித்தாந்தம் மூன்று உண்மைகளின் அடித்தளத்தில் எழுந்த தத்துவமாகும். அவை பதி, பசு, பாசம் என்பனவாகும். அதாவது இறைவன், உயிர், தளை எனும் முப்பொருள்களைக் குறிக்கும். இக்கொள்கைகளை விளக்க எழுந்த மெய்யியல் நூல்கள் பதினான்கு சாத்திர நூல்களாகும். பதிமூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய மெய்கண்டார் முதனூலாக மொழிந்த சிவஞானபோதம் சைவசமயத்தின் தத்துவக் கொள்கைகளை விளக்கும் இன்றியமையாத முதல் அடிப்படை நூலாகும்.

## நூல் அறிமுகம்

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் இந்நூலினை மெய்கண்டார் திருவடிக்குக் காணிக்கை ஆக்கியுள்ளமை போற்றத்தக்கது.

***"சாத்திர நெறியைத் தூவெனத் தள்ளித்***
***தன்முனைப்பு எனும்மது மாந்திப்***
***பூத்திரள் காவில் துழைமது கரம்போல்***
***புல்லிய பொறிவழி யோடி***
***மீத்திகழ் கின்ற மூவகைப் பசுக்கள்***
***வெறியெலாம் ஒடுங்கமுந் நான்கு***
***சூத்திரம் தன்னால் யாத்தமெய் கண்டார்***
***துணையடிக்கு உரியதுஇந் நூலே"***

என்று மிக அழகிய செய்யுளை நூலின் முகப்பில் தந்துள்ளார். 'புனிதம் எனும் அத்துவித மெய்கண்டநாதன் மெய்கண்ட தேவனின் பொன்னடிகட்கு' என்று சமர்ப்பணமும் செய்கிறார். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் நூலுக்குப் பதிப்புரை வழங்கியுள்ளனர். அதில் 'சைவசித்தாந்தத்தைப் பற்றிய விரிவான நூல் எழுதித் தர வேண்டுமென்று அருங்கலைக்கோன், கலைமாமணி பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்விரிவான நூலை அவர் எழுதித் தந்துள்ளார். வைணவம், சைவம் ஆகிய இரு சமயக் கருத்துகளையும் நன்கு கற்றுத் துறை போனவர் இரண்டிலும் ஆழங்கால்பட்டவர். இத்துறையில் இதுபோல் விரிவான நூல் இதுவரை வந்ததில்லை' என்று நூலின் தன்மையையும் பேராசிரியரின் திறமையையும் புகழ்ந்து எழுதியுள்ளார். இந்நூலுக்குரிய அணிந்துரையை சென்னைப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறையின் தலைவர் பேராசிரியர் டாக்டர் பெ. கிருஷ்ணன் அவர்கள் தந்துள்ளமை சாலப் பொருத்தமானதாகும். சைவ சமயக் கருத்துகளை மையப்படுத்தித் தமிழ் நூல்களை மட்டுமே ஆதாரங்களாகக் கொண்டு வரலாற்று நோக்கில் எழுதப்பட்ட 'முதல் ஆய்வு நூல் இது என்றால் மிகையாகாது' (மேலது) என்று உரைப்பதனால் நூல் வெளிவந்த ஆண்டாகிய இரண்டாயிரத்தில் சைவசித்தாந்த ஆய்வு நூல்களின் முன்னோடியாகத் திகழ்கிறது எனலாம்.

நூல்முகம் எனும் தலைப்பின் கீழ் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் 'இந்த நூல் சைவ சமயத்தைச் சார்ந்த மக்களுக்கும் சைவ சமயத்தைச் சாராத பிறருக்கும் கல்லூரி மாணவர்கட்கும் பயன்படக் கூடியது' என்று உரைக்கின்றார்.

## நூலின் உள்ளடக்கம்

சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் எனும் இந்நூல் எட்டுத் தலைப்புகளின் வழியே சித்தாந்தச் செய்திகளை விளக்கிச் செல்கிறது.

- சித்தாந்த சாத்திரங்கள்
- சந்தானாசாரியர்கள்
- தத்துவங்கள் 1 - பதி
- தத்துவங்கள் 2 - பசு
- தத்துவங்கள் 3 - பாசம்
- வீடுபேற்றுக்கு வழிகள்
- வீடுபேறு
- வழிபாட்டு முறைகள்

என்று சைவசித்தாந்த தத்துவத்தின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கி நன்கு விளக்கிச் செல்கிறது.

## சித்தாந்த சாத்திரங்கள்

சமயமும் தத்துவமும் இணைந்து செல்கின்ற தன்மையை இந்திய தரிசனங்களில் காணமுடிகிறது. மேற்கண்ட தலைப்பின் கீழ் சைவ சாத்திரங்களாகிய பதினான்கு நூல்கள் குறித்த தகவல்களை எந்தத் தரவுகளும் விடுபட்டு விடாமல் தருகின்றார்.

## சந்தானாசாரியர்கள்

முதல் தலைப்பிலே பதினான்கு நூல்களை அறிமுகம் செய்த ஆசிரியர் இத்தலைப்பில் அப்பதினான்கு நூல்களையும் இயற்றிய ஆசிரியர்களைக் குறித்த வரலாற்றினை வழங்குகிறார். வரலாற்றினைக் கூறும்போது அவர்கள் வாழ்வில் நிகழ்ந்த செய்திகளைச் செவி வழிச் செய்திகளோடு ஒப்பிட்டும் கூறுகிறார். சைவசந்தானக் குரவர்களின் வாழ்வு நிகழ்வுகளோடு ஒப்புமையுள்ள வைணவ அடியார்களின் வரலாறுகளையும் ஆங்காங்குச் சொல்லிச் செல்வது இவரது சிறப்பாகும்.

## தத்துவங்கள் (பதி,பசு,பாசம்)

மூன்று தலைப்புகளின் கீழ் சைவ சித்தாந்த அடிப்படைக் கோட்பாடுகளை விளக்குகிறார். சத்காரியவாதத்தை விளக்குவதற்கு எளிய எடுத்துக்காட்டுகளைக் கூறிப் புரியவைக்கின்றார்.

பன்னிருதிருமுறைகள், திருக்குறள், பதினான்கு சாத்திரங்களிலிருந்து மேற்கோள்களைக் காட்டுகிறார்.

## வீடுபேற்றுக்கு வழிகள்

தத்துவ விசாரணைகள் மனிதனுக்கு வாழ்வியலுக்கும் பேரின்பத்துக்கும் வழிகாட்ட வேண்டும். இம்மைக்கும் மறுமைக்கும் உரிய நெறிகளைக் காட்டுவதே உண்மையான மெய்யியல் பண்பாகும். நூல்கள் கூறுகின்ற வழிகளெல்லாம் நடைமுறையில் பயன்பாட்டுக்கு வருவனவாக இருத்தலும் வேண்டும். ஆதலால் ஆசிரியர் நூல் நுவலும் வழிகள், ஞானம் வருவதற்குரிய வழிகள், சிவபுண்ணியங்கள், வீடுபேற்றிற்கு வழி, தீக்கை வகைகள், சிவநெறி ஒழுக்கம் என்னும் உட்தலைப்புகளின் மூலம் அரிய விரிவான விளக்கம் தந்து தெளிவுபடுத்தியுள்ளமை போற்றத்தக்கதாகும்.

## தருக்கவியல் அணுகுமுறை

இரண்டாயிரம் ஆண்டுகால தத்துவ தரிசனங்களின் அறிவாராய்ச்சி, மெய்ப்பொருள், அறக்கோட்பாடு ஆகியவற்றின் பதிவுகளைத் தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டு உண்மைகள் மூன்று அவை இறை, உயிர், தளை என்ற நிச்சயத்தைத் தந்த தத்துவதரிசனம் சைவசித்தாந்தம் ஆகும். ஒன்றாய், உடனாய், வேறாய் எனும் மூன்று நிலைகளில் இறைவன் உயிர்களிடம் நிற்கின்ற நிலையை சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகியோர் தனிக் கொள்கையாக வகுத்து, அதுவாக மட்டுமே இறைவன் நிற்பதாய்க் கணித்தனர். அக்கொள்கையை விளக்க விரிந்த நூல்களை இயற்றினர். ஆனால் சைவசித்தாந்தத்தின் தலைமணியாகத் திகழும் சிவஞானபோதம் இம்மூன்று கொள்கைகளையும் உள்ளடக்கித் தெளிவான கோட்பாட்டினை உருவாக்கியது. மேலும் உயிர் பற்றிய ஆய்வுகளில் உள்ள குழப்பங்களைத் தடைவிடை முறையில் விளக்கி எது உயிர் எனும் வினாவிற்கு எவையெல்லாம் உயிராகாது என்று கூறுவது மிகச்சிறந்த தர்க்கவியல் விளக்கமாகும்.

'இருதிறன் அறிவுளது இரண்டல ஆன்மா' என்ற கோட்பாட்டைச் சித்தாந்த சைவம் உயிருக்கு வகுக்கின்றது. இதனை விளக்கும் பேராசிரியர் வேற்றுமை உருபுகளின் வழி வைத்து மிகத் தெளிவாக உயிரின் இயல்பைச் சுட்டுகிறார்.

1. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வைத்து நோக்கு போது சத்து, அசத்து என்னும் இரண்டு பொருளையும் அறியும் அறிவினையுடையது.
2. மூன்றாம் வேற்றுமையைப் பொருத்திக் காணில் இருதிறன்களாகிய சத்து அசத்துகளின் உதவியால் அறியும் அறிவினையுடையது.
3. ஏழாம் வேற்றுமைப் பொருளில் சிந்திக்கின் இருதிறன்களாகிய சத்து, அசத்து ஆகிய இரண்டின் கண்ணும் நின்று அறியும்

அறிவுடையது என்னும் பொருளைத் தெளியலாம். இவ்வெடுத்துக்காட்டுகளின் மூலம் உயிரானது சார்ந்ததன் வண்ணம் செயல்படக் கூடியது, அறிவித்தால் அறியக் கூடியது, சிற்றறிவு உடையது என்பதையும் பேராசிரியர் விளக்கிச் செல்கிறார்.

***"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு***
***இனத்தியல்ப தாகும் அறிவு"***

எனும் குறளை எடுத்துக்காட்டுவதும் சாலப்பொருத்தமேயாகும்.

வினைகளை உயிர் அனுபவிக்கும் முறைமை குறித்து விவரிக்கின்ற பகுதியில் அளப்பரிய கருணையால் இறைவன் உயிர்களுக்கு வினையை அருத்தி வைக்கின்ற அருமையை உருக்கமுடன் கூறுகிறார். அப்போது 'ஆருயிர்களின் மீது எல்லையற்ற கருணையுடைய இறைவன் ஆணவத்தின் ஆற்றல் கெடுத்தற்பொருட்டே வினையின் பயனை ஊட்டுவிக்கின்றான் என்பது சித்தாந்த உண்மை' என்கிறார். ஓர் உழவன் செய்த பயிர் தன் பயனைக் கொடுக்கும் காலத்தில் அ∴து அவனுக்கு உணவாய்ப் பயன்படுதலேயன்றி அடுத்த ஆண்டிற்கும் விதையாக அமைந்துவிடுவதைப் போலவே வினையானது நுகர்வினை, வருவினை, பழவினை என்று சக்கரம் போலச் சுழல்கிறது.

'ஆணவம்' என்ற அறியாமை நிலையைப் பல சமயங்கள் ஒப்புக் கொள்வதே இல்லை. ஏனெனில் அது எளிதாகக் காட்சியில் உணரக்கூடியது அல்ல. மாயை, கன்மம் குறித்த காட்சிகளை உணர்தல் என்பது இயலக்கூடியது. ஆனால் ஆணவம் உயிரின் அறிவை அணுத் தன்மைப் படுத்தித் தன் இருப்பையும் காட்டாமல் இருக்கக் கூடியது. அதனைப் பேராசிரியர் 'ஆணவம் இல்லாத பொருளன்று உள்ள பொருளே. அறிவுடைய பொருளாகிய உயிரை அறியாமையுடையதாகச் செய்வதே இதன் இயல்பாகும். அறிவே உயிரின் இயற்கை என்றும் அறியாமை அதற்கு ஆணவமலத்தின் சேர்க்கையாலாகிய செயற்கையே என்பதும் சித்தாந்த உண்மை' என்று தெள்ளத் தெளிவான விளக்கத்தைத் தருகிறார்.

பதி இலக்கணம் கூறும்போது உண்மை, பொது என்ற இருநிலைகளிலும் உயிர்களின் பொருட்டு அருள்புரிவதையும் எண்குணங்களையும், ஐந்தொழிலையும், திருமேனியின் வகைகளையும் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

இந்தியாவில் தோன்றிய சமயங்கள் முத்தொழிலை இறைவன் புரிவதைக் குறித்துப் பேசுவதைப் பரவலாகக் காணமுடிகிறது. ஆனால் சித்தாந்த சைவம் ஐந்தொழில் ஆற்றுதலே இறையின் பூரணப் பண்பு என்ற கொள்கையைக் கொண்டது. இறைவனது ஐந்தொழில்களைக் குறித்துப் பேராசிரியர் விளக்குமிடம் மிகச் சிறப்பு வாய்ந்தது.

- ◆ படைத்தல் என்பது 'அறிவில்லாத உலகினை அறிவுடைய ஆருயிர்கட்குத் துணையாகும் வகையில் அமைத்து இரண்டனையும் ஒன்றுபட பிணைத்து வைப்பதே படைத்தல்

தொழிலாகும்' என்று உயிர்களுக்காக உலகைப் படைத்தல் எனும் நிலையை விவரிக்கிறார்.

- காத்தல் - 'வினை நீக்கத்திற்கு உரித்தாகிய வழியில் நின்று வினை நீக்கப் பெறுதலே காத்தலின் பயனாகிறது' என்கிறார். எனவே காத்தல் தொழில் என்பதற்கு உலகியலில் நாம் கொண்டிருக்கும் பொதுவான புரிதல் உடைகின்றது. ஏனெனில் 'காத்தல்' என்பதற்கு உடலினை, உயிரினை, உலகினைப் பாதுகாத்தல் என்ற புரிதலே பெரும்பாலான மக்களுக்கு உள்ளது. தத்துவ அடிப்படையில் அதனைக் கூர்ந்து நோக்கும் போது உண்மை புலனாகின்றது. வினைகள் நீங்கும் காலம் வரை காக்கப்படுதல் ஆண்டவன் கட்டளையாக இருக்கின்றது.
- அழித்தல் என்பது 'பிறப்பு இறப்புகளில் உழலுகின்ற இளைப்பு நீங்குதலே அழித்தலின் பயனாகிறது' என்கிறார். இதன் மூலமாக உடல், கருவி, உலகம், அனுபவம் ஆகியவற்றைப் பிரித்து விடுதல்தான் 'அழித்தல்' என்னும் கருணை மிகு தத்துவம் என்பது புரிகிறது.
- மறைத்தல் என்பது தன்னைக் காட்டாது உலகின்பங்களைக் காட்டி மறைத்தல் என்றும் தன்னைக் காட்டி உயிர்களை மலங்களிலிருந்து எடுத்தல் என்றும் இருதிறப்படும். இவ்விடங்களில் மிக ஆழமான செய்திகளை எளிய முறையில் உணரவைத்தலினால் இந்நூலின் முதன்மை நோக்கம் நிறைவேறுகிறது எனலாம்.
- அருளல் என்பது மறைத்தலின் மற்றொரு நிலையாகிய இறைவன் தன்னைக் காட்டுதலே அருளாக மாறி ஆனந்தம் விளைவிக்கின்ற தன்மையை இன்ப அன்பு விளையுமாறு விவரிக்கின்றார்.

## முடிவுரை

'சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்' எனும் தலைப்பில் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் படைத்துள்ள இந்நூல் சைவ அருங்கலைக் களஞ்சியமாக விளங்குகிறது. இந்நூலானது தொல்காப்பியம், சங்கஇலக்கியம், திருக்குறள், பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் முதலாய நூல்களில் இருந்து கருத்துகளைப் பொருத்தமுற எடுத்தாண்டு ஆய்வுநெறிச் சுடராக வழிகாட்டி வாழ்விக்கின்றது.

# 72. பாரதி இயல் ஆய்வில் பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் பங்களிப்பு

**முனைவர் ச. கவிதா**
*தமிழ்இணைப்பேராசிரியர்,*
*கற்பகம் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர் - 641 021.*

***"நமக்குத் தொழில்கவிதை, நாட்டிற்கு உழைத்தல்***
***இமைப்பொழுதும் சோராது இருத்தல்"***

எனத் தமிழ் மொழியின் மேம்பாட்டிற்காகவும், தமிழ் நாட்டின் மேம்பாட்டிற்காகவும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் மகாகவி பாரதியார்.

***"புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்துத்***
***தமிழ் மொழியைப் புகழில் ஏற்றும்***
***கவியரசர் தமிழ் நாட்டுக்கு இல்லையெனும்***
***வசை என்னால் கழிந்ததன்றே"***

எனப் பெருமிதம் கொண்டவர் பாரதியார்.

அறிவியலில் ஆழங்கால் பட்டிருந்த பேராசிரியர் பாரதியாரின் கவிதைகள் மூலமாகத் தமிழ் மொழியின் பால் ஈர்ப்புக்கொண்டு அதனையே வாழ்விற்கான அடித்தளமாக இட்டார். பாரதியைப் போல 'என்னைத் திசைதிருப்பித் தமிழுக்கு வரச் செய்தவை இவர்தம் பாடல்களே' எனப் பெருமிதம் கொள்கிறார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார். தொல்காப்பியம், சேனாவரையம் என்பவற்றைப் போல பாரதி தனக்கென வகுத்துக்கொண்ட கொள்கைகளைப் பாரதீயம் என்றழைக்கின்றார். சிறுவயதிலிருந்தே தனது உள்ளங்கவர்ந்த மாபெரும் கவிஞரின் கவிதை அதிர்வலைகளால் தாக்குண்டு, பாரதீயம், கண்ணன் பாட்டுத்திறன், குயில் பாட்டு - ஒரு மதிப்பீடு, பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு ஆகிய நூல்களைப் படைத்துள்ளார். தனது எண்ணம், நினைவு, பேச்சு, சிந்தனை அனைத்தும் முண்டாசுக் கவிஞனின் கொள்கைகளே வியாபித்திருக்க, புதுவையிலிருந்து விடுக்கப்பட்ட அறக்கட்டளைச் சொற்பொழிவு அழைப்பும் புதுமைக் கவிஞனைப் பற்றியதாகவே இருந்தது. பாரதியால் தான் பெருமை பெறுவதற்காக நிகழ்த்திய பொழிவுகள், பாரதிக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்தன. அப்பொழிவுகளே இறுதியில் 'புதுவை(மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்' என நூல்வடிவம் பெற்றன. பாரதியின் கவிதைகளால் தான் தாக்குண்ட தன்மைகளை இந்நூலில் வடித்துக் காட்டுகின்றார் பேராசிரியர். அக்கருத்துக்கள் நிறப்பிரிகையாக இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்படுகின்றன.

## பாட்டுக்கொரு புலவன் பாரதி

பாமரமக்களும் இலக்கியத்தை அனுபவிக்கும் வகையில் முதன்முதலில் பாடல்கள் பாடியவர் பாரதி. அப்பாடல்களை, தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், பலவகைப் பாடல்கள், தனிப் பாடல்கள், சுய சரிதை, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, வசன கவிதை எனப் பத்து வகையாகப் பகுத்துப் பார்க்கின்றார் பேராசிரியர். பாரதி இயற்றிய தேசிய கீதங்கள் பொருட் சுவையிலும், இசைச் சுவையிலும் இணையற்றவை. அவை பிற மொழி தேசிய கீதங்களை விடவும் எந்த வகையிலும் குறைந்தவை அல்ல என்பதை நிறுவுகின்றார் பேராசிரியர். பாரதி பாடிய 53 தேசிய கீதங்களில் சிலவற்றைச் சான்றுகாட்டி, அதன் இசை அமுதை, ஓசை நயத்தை விளக்கிக் கூறுகின்றார் பேராசிரியர்.

***'வந்தே மாதரத்தைப்- பாடவே***
***வாய்திறந்தவுடன்***
***சந்தேகமில்லை - ஒருபுது***
***சக்திதோன்றுதடா'***

என வந்தே மாதரம் கவிதையின் மாண்பை எடுத்துக் கூறுகின்றார். மேலும், 'எந்தையும் தாயும்', 'மன்னும் இமயமலை', 'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி' ஆகிய பாடல்களில் காணலாகும் இசைச் சுவையை எடுத்துக்கூறி, இவை ஆங்கில மொழியில் காணலாகும் தேசிய கீதத்தினும் மிகவும் மேம்பட்டவை என்பதை நிறுவுகின்றார்.

ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால் பட்டதன் விளைவாகத் தோத்திரப் பாடல்களில் கண்ணனுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார் பாரதியார் என்பது பேராசிரியரின் முடிவாகும். பாதியார் பாடிய 25 வேதாந்தப் பாடல்களும் அநுபூதி நிலையை எளிய தமிழில் எடுத்தியம்புபவை என்பதை, 'நான்' எனும் தலைப்பிலான 7 பாடலும், கீதையையும் (இயல்-10), நம்மாழ்வாரின் திருவாய்மொழியையும் (5.8) நினைவுட்டுவன என விளக்கிக் கூறுகின்றார் பேராசிரியர்.

புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு உள்ளிட்ட 11 பாடல்களையும் பலவகைப் பாடல்கள் எனும் பிரிவினுள் காண்கின்றார் பேராசிரியர். வோர்ட்ஸ் வொர்த்தை நினைவுகூரும் இயற்கைப் புனைவுப் பாடல்களும், பெரியோர்களைப் போற்றிக்கூறும் பாடல்களுமாக உள்ள பாரதியின் 24 பாடல்களைத் தனிப்பாடல்கள் எனப் பகுத்துக் காணும் பேராசிரியர், உ.வே.சாமிநாத ஐயருக்கு மகாமகோபாத்தியாயர் என்ற பட்டம் வழங்கப்பட்ட போது, 'கும்பமுனி எனத்தோன்றும் சாமிநாதப்புலவன்' என அவருக்கு மகுடம் சூட்டி மகிழ்கின்றார். 'கனவு', 'பாரதி அறுபத்தாறு' ஆகிய பாடல்கள் சுயசரிதைப் பாடல்கள் எனப் பகுக்கின்றார். கண்ணன் பாட்டு எனும் தலைப்பிலான 23 பாடல்களும் பெரியாழ்வாரின் பாசுரங்களில் ஈடுபட்டுப் பாடியவை என்பதை விளக்குகின்றார். பாஞ்சாலிசபதமும், குயில்பாட்டும் பாரதியின்

கைவண்ணத்தையும், கல்விச் செருக்கையும், கற்பனை வளத்தையும், அணிநலத்தையும் எடுத்துக்கூறுவன. மேலும் கவிதை ஆற்றலையும், இசை ஆற்றலையும் உடைய, காவிய முறையில் படைக்கப்பட்ட அழகான சொல்லோவியங்கள் இவை என்பதையும் சான்றுகளுடன் நிறுவுகின்றார் பேராசிரியர்.

## நாடு மொழி பற்றாளர்

பாரதியார் வாழ்ந்த காலத்தில் நாட்டுப்பற்று, தாய்மொழிப்பற்று, பெண் விடுதலை, சமுதாய முன்னேற்றம், விடுதலை வேட்கை, புதுமை நாட்டம் ஆகியவற்றிற்கான தேவை ஏற்பட்டது. இத்தளங்களில் தனக்கென ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு பாடியவர் பாரதியார். இக்கொள்கைகளின் அடிப்படையிலேயே இவற்றைப் பாரதீயம் எனப் போற்றி மகிழ்கின்றார் பேராசிரியர் சுப்புரெட்டியார். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற மரபுவழி வந்த பாரதியின் தொலைநோக்குப் பார்வையில் பாரதநாடு முழுமையும் தமிழ்வழங்கும் மண்ணாகத் தென்பட்டது, பாரதபூமி பாரதத் தாயாகத் தென்பட்டாள். அவையே கவிதைப் பொருளாயின.

***'எந்தையும் தாயும் மகிழ்ந்து குழாவி இருந்ததும் இந்நாடே'***

எனவும்,

***'தாயின் மணிக்கொடி பாரீர்,***
***அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திடவாரீர்'***

எனவும், மக்களை ஒன்றுதிரட்டியவர் பாரதியார். அடிமைத் தளையை அகற்றுவதற்குப் பாரதத்தின் ஒற்றுமையே இன்றியமையாதது என்பதை வலியுறுத்தும் பாரதியார், அவ்வொற்றுமை கவிதையை இளமைப்பருவத்தில் கவிதையாக்குவதே மேல் எனப் பாப்பா பாட்டுக்களில் அதனை கவிதையாகுக்கின்றார். பாரதியின் பாடல்கள் தமிழர்களிடம் அகன்ற நோக்கை, விரிந்த பார்வையை உண்டாக்கின என்பதைச் சான்றுடன் விளக்குகின்றார் பேராசிரியர்.

உயர்ந்த சிந்தனையை உடைய பாடல்கள் உலக மொழிகள் யாவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகப் பொதுச்சொத்தாகத் திகழவேண்டும் என்ற தனது கொள்கையை நிலைநிறுத்தும் பேராசிரியர், பாரதியின் பாடல்கள் அனைத்தையும் உலக மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும். குறிப்பாக, 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற தேச பக்திப் பாடலை அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்த்து அதன் இசையை ஏற்றம்பெறச் செய்தல் வேண்டும். மத்திய அரசு இதில் முயற்சியெடுத்துச் செயற்படுதல் வேண்டும் என்ற தனது அவாவினைப் பேராசிரியர் புதுமைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் என்ற நூலில் வெளியிடுகின்றார்.

***'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்***
***வாழிய பாரத மணித்திரு நாடு'***

என மொழியையும், இனத்தையும், நாட்டையும் இணைத்துப் பாடும் கொள்கையாகிய பாரதியத்திற்குச் சான்றுகாட்டி, பாரதியின் மொழிப்பற்றினையும் விளக்குகின்றார் பேராசிரியர்.

## கல்விச் சிந்தனையாளர்

வழிபாட்டிற்குக் கோயில்கள் இன்றியமையாததைப் போல, அறிவை வளர்ப்பதற்குக் கல்வி நிலையங்கள் இன்றியமையாதன என்பது கவிஞரின் எண்ணம். முன்னோர்கள் தேடிவைத்த அறிவுச் செல்வத்தை இளைஞர்கள் நாடிப் பயன்பெற வேண்டும். அதன் மூலமாக, இளைஞர்கள் தம்மையும் வளர்த்து, நாட்டையும் வளர்க்க வேண்டும் என்பது கவிஞரின் தீராத ஆசையாகும் என்பதைப் பேராசிரியர் இங்குச் சான்றுகளோடு நிறுவுகின்றார்.

ஏழ்மையினால் ஒருவன் கல்வியைப் பெறாது இருந்திடல் கூடாது என்பதற்காக,

***‘அன்ன யாவினும் புண்ணியம் கோடி***
***ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்’***

எனப்பாடும் பாரதியார், அப்பொழுது தான் ‘கல்வியிற் சிறந்த தமிழ்நாடு’ என்ற பழம்பெருமையை உண்மையென நிறுவுதல் இயலும் எனக் கூறுகின்றார். பண்பட்ட வயல் பயனளிப்பதைப் போல, குழந்தைகளைக் கல்வி கற்றலில் ஈடுபத்தினால்தான் பண்பட்ட சமுதாயத்தைப் பெற இயலும் என்பதனாலேயே, ‘காலை எழுந்தவுடன் படிப்பு’ எனப் பாடுகின்றார். மாணவர்களுக்கு ஒரு கல்வித்திட்டத்தையே வகுத்துத் தரும் பாரதியார் ஆங்கிலக் கல்வியைக் கடிந்து கவிதைகள் இயற்றியது சற்று மிகையாகவே உள்ளது என்கின்றார் பேராசிரியர். அனைத்துக் கலைகளையும் உள்வாங்கும் தன்மையுடையது தமிழ்மொழி, எனவே தமிழ்மொழியில் இல்லாத பிறமொழியில் காணலாகும் கலைகளை மொழிபெயர்த்து அமைத்திடல் வேண்டும் என்பதை,

***‘சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்***
***செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்’***

எனவும்,

***‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்***
***தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்’***

எனவும் கூறும் பாரதியின் விருப்பத்தினை எடுத்துக்கூறி, அவர் ஒரு சிறந்த கல்வியாளர் என நிறுவுகின்றார் பேராசிரியர்.

## வைணவச் செல்வர்

பாரதியின் கண்ணன் பாட்டு, தோத்திரப் பாடல்கள் 14 ஆகிய இவற்றில், பாரதி ஒரு வைணவச் செல்வர் என்பதற்குச் சான்று பகர்கின்றார் பேராசிரியர். ‘இறைவனுக்கும் மக்களுக்குமான உறவை அறிந்துகொள்வதை ‘சம்பந்த ஞானம்’ என வைணவ சித்தாந்தங்கள்

கூறுகின்றன' என நெல்லையப்ப பிள்ளை குறிப்பிடுகின்றார். எம்பெருமானைத் தாய், தந்தை, குரு, தெய்வம் எனக் காணும் நிலையை ஆழ்வார் பாசுரங்களில் காணலாம். இதனை அடியொற்றியே, கண்ணனை தாயாக, தந்தையாக, காதலனாக, காதலியாக, சற்குருவாக, தெய்வமாக, தோழனாக, சேவகனாகப் பாவித்துக் கண்ணன் பாட்டினை அமைத்துள்ளார் என விளக்கமாக ஒவ்வொரு தலைப்பினையும் நூலில் விளக்கிக் கூறுகின்றார் பேராசிரியர்.

## சக்தி தாசர்

அனைத்தையும் சக்தியின் வடிவமாகக் காண்பவர் பாரதியார். பொருட்களின் சிறப்பு நிலை சொரூ இலக்கணம் எனவும், பொருட்களின் இயல்பு நிலை தடத்த இலக்கணம் என்றும் கூறப்படும். தடத்த நிலை சக்தியாகவும், சொரூப நிலை சிவமாகவும் இருக்கும், எல்லாப் பொருள்களிலும் இவ்விரு நிலைகளும் வியாபித்திருத்தலே, அம்மையப்பனாய், மாதொரு பாகனாய், சிவமும் சக்தியுமாய்க் காட்சியளிக்கின்றன எனப் பாரதியின் சக்தி குறித்த கொள்கைக்கு விளக்கமளித்து, 'துன்பமில்லாத நிலையே சக்தி, தூக்கமில்லாக் கண் விழிப்பே சக்தி' எனப் பாரதியின் பாடல்களைச் எடுத்துக்காட்டி எங்கெங்கு காணினும் சக்தியடா என்ற பாரதியின் கொள்கையை விளக்குகிறார் பேராசிரியர்.

## சமரச நோக்கர்

எல்லாக் கடவுள்களும் ஒரே பரம்பொருள் என்ற உணர்வை அடிநாதமாகக் கொண்டவர் பாரதியார். பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திசூடி ஆகியவற்றின் காப்புப் பாடல் பரம்பொருள் வாழ்த்தாக அமைந்துள்ளதைக் காணலாம். 'ஆத்திசூடி இளம்பிறை அணிந்து மோனத்திருக்கும் முழுவெண் மேனியான்' எனத்தொடங்கும் பாடல் அனைத்துத் தெய்வங்களும் ஒரே பரம்பொருள் என்பதை உணர்த்தும் அவரது கொள்கைக்குச் சான்றாக உள்ளது என்பதை விளக்குகின்றார் பேராசிரியர்.

இங்ஙனம் புதுவை(மை)க் கவிஞர் பாரதியார், பாட்டுக்கொரு புலவர், நாடு மொழி பற்றாளர், சிறந்த கல்வியாளர், வைணவச் செல்வர், சக்தி தாசர், சமரச நோக்கர், புதுக்கவிதை நாயகர் என்பனவற்றை நிறுவுவதாக இந்நூல் அமைந்துள்ளது.

# 73. ந. சுப்புரெட்டியாரின் மெய்யியல் பார்வை

**முனைவர் கு. முத்துக்குமார்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர் - 641 029.*

மாந்த இனம் தம்மை நெறிப்படுத்த தமக்கான பண்பாட்டுக் கோட்பாடுகளை உருவாக்க முயன்றதன் அடையாளமாகச் சமயங்களைக் காண முடியும். ஒவ்வொரு இனமும் தான் வாழ்ந்த நிலத்தை முதன்மையாக் கொண்டு தனக்கான ஒழுக்கங்களை வகுத்தன. தமிழர்களும் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையைத் திணைகளாகப் பகுத்துச் செம்மைப்படுத்தி உலக நாகரிகத்திற்கு முன்னோடியானர்கள். மனிதன் தனது தேடலை இவ்வுலகில் மட்டுமல்லாமல் இம்மைக்கும் மறுமைக்குமெனத் தேடலாகக் கொண்ட போது சமயங்கள் தோன்றின. மக்கள் வாழ்வியலிலிருந்து தனக்கான மெய்யியலை அடையாளம் கண்டு தனது வாழ்க்கை மூலமாகவும், படைப்புகள் மூலமாகவும் வெளிப்படுத்தினர். நம்பிக்கைகளின் அடிப்படையிலும், இடம் பெயர்ந்து சூழலை எதிர் கொண்ட நிலைப்பாட்டிலும், அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்தினாலும் சமயங்கள் உருவாக்கப்பட்டன. மனிதனின் பார்வையை விடுத்து அண்டத்தின் இயக்கத்திற்கும், மனித வாழ்வின் இயக்கத்திற்கும் உள்ள உறவைத் தேடுவதற்குச் சமயங்கள் தேவைப்பட்டன. இவ்வாறான சூழலில் சுப்புரெட்டியார் தனது ஆய்வுக் கட்டுரைகள், வழியாக உலக மெய்யியலை முன் வைத்து மதத்தை மையமாக்கிச் சுழலும் இம் மனித வாழ்வை அவரவர் பார்வைகளிலிருந்து வெளிப்படுத்தும் விதத்தை இக்கட்டுரை ஆராய்கிறது.

சுப்புரெட்டியார் தனது நூற்றுக்கும் மேற்பட்ட படைப்புகளில் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள் எனப் பல்வேறு பட்ட பரிமாணத்துடன் இவரின் தேடல் தொடர்கின்றது என்பதை நாம் உணர முடியும். இயல்பாகவே அவர் அறிவியல் மாணவர் என்பதால் அனைத்தையும் அறிவியல் பார்வையில் பார்த்ததோடு மட்டுமல்லாமல் திறனாய்வு என்பதும் வரலாறு என்பதும் அறிவியலோடு நெருக்கமானதாக இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். சமயம் சார்ந்த கருத்துகள் மனிதனைச் சிந்திக்க வைக்க வேண்டுமே ஒழிய சமயக் கருத்துக்களை முடிந்த முடிபாகக் கொள்ள வேண்டியதில்லை என்பதை மெய்ப்பிக்கிறார். மனித இனத்தில் எழுந்த இலக்கியங்களையும், சமயங்களையும் அறிவியல் பார்வைக்குட்படுத்தி மெய்யியலை வெளிக் கொணர்கிறார்.

தமிழ்ச் சூழலில் வடமொழி இலக்கியங்களும் மெய்யியலும் ஆதிக்கம் செலுத்தியதையும், தமிழ் மெய்யியல் எவ்வாறு தன்னை வேறுபடுத்திக் கொண்டது என்பதையும் பேராசிரியர் தனது ஒவ்வொரு படைப்பிலும் வெளிப்படுத்துகிறார். மாந்த வாழ்வின் அடிப்படையில் ஆதி மனிதனின் கூட்டு வாழ்க்கை, அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு ஆகியவைகளை வேளாண்மை மூலம் நிறைவு செய்து கொண்டாலும் அறிவியல் போக்கில் தனது உயிரியல், மருத்துவம், கணிதம், வானியல், போக்குவரத்து முறைகள் என வளர்ந்ததற்கு மெய்யியலைக் காரணமாக எடுத்துக் காட்டுகிறார். தமிழிலக்கியங்களிலிருந்து கவிதை வடிவில் பொதிந்து வைக்கப்பட்ட மெய்யியல் கருத்துகள் பல நூற்றாண்டு கழிந்த பின்னரும் அக்கவிதைகளை வாசிக்கும் போது நமக்கு எடுத்துரைக்கும் மெய்யியலாளர்களாகவே உள்ளன என்று கூறும் சுப்புரெட்டியார் கதிரியக்கப் பொருள்களிலிருந்து தொடர்ந்து கதிர்கள் வெளிவருவதைப் போல இலக்கியங்களிலிருந்தும் நமக்கான மெய்யியல் உணர்வுகள் வெளிப்பட்டுக் கொண்டே வருகின்றன என்று மெய்யியலுக்கும் அறிவியல் பார்வை வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். சமயத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது மக்கள் அன்றாட வாழ்க்கையை ஒழுங்குடன் நடத்துவதற்கு அமைத்துக் கொண்ட நன்னெறிகளின் தொகுதியே சமயம் என்று வழங்கப் பெறுவதாகக் கொள்ளலாம் என்கிறார்.

தத்துவம் என்ற சொல்லைப் பயன்படுத்தும் ஆசிரியர் அதன் பொருளை ‘அதன் தன்மை’ என்று கொண்டு ‘அது’ என்ற சுட்டுப் பெயர் சமயங்களின் பொருள் தன்மைகளை ஆராய்ந்து மெய்ம்மையினை நிலை நாட்டும் அறிவுக்கலை தான் மெய்யியல் அல்லது தத்துவம் என்று விளக்குகிறார். இதற்கு திருவள்ளுவர் சுட்டிய மெய்ப்பொருள் என்ற சொல் தான் மெய்யியலைக் குறிப்பதாக நாம் கொள்ளலாம். மெய்ப்பொருள் என்றும் உள்பொருள் என்றும் கொண்டு மெய்யியலாளர்களைச் சமயக்கணக்கர் என்று சாத்தனார் குறிப்பிடுவதையும் நினைவு கூரத்தக்கதாகச் சுட்டுகிறார்.

மெய்ப்பொருள் என்பது உண்மை காண்பதற்குக் கருவியாய்ப் பயன்படும் அளவை இலக்கணத்தையும் அளவைகளால் துருவிக் கண்ட உண்மைப் பொருளையும் உணர்த்துகின்றது எனக் கொள்ள முடியும். இந்த மெய்ப்பொருளைத் தேடல் என்பது ந. சுப்புரெட்டியார் உலகாயத்திலிருந்து படிப்படியாகத் தேடி அவருக்கான மெய்ப்பொருளை அடைகிறார். மெய்ப்பொருளிலிருந்து சமயங்களும், சமயங்களிலிருந்து மெய்ப்பொருள் தேடலும் மனித சமூகத்தில் தொடர்ந்து நிகழ்ந்திருக்கின்றன என்பதை ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் நமக்கு வெளிப்படுத்துகின்றன.

## சமயங்கள்

மனிதனின் தேடல் உலகம், ஆன்மா, கடவுள் என்ற

முப்பொருள்களைப் பற்றியதாக இருந்தது. இதில் உலகம் என்பதில் தோற்றம், உயிர்கள், பரிணாம வளர்ச்சிகள், மாற்றங்கள் என்று அறிவியலாகக் காட்சிப் பொருளாய்ச் சிந்தனைகள் தோன்றின. இதனை உலகாயுதம் எனலாம். ஆன்மா, இறைவன், நம்பிக்கைகள், கோட்பாடுகள் என்று தேடல்கள் பிற்காலத்தில் சமயக் கோட்பாடுகளாக வளர்ந்தன என்று கூற முடியும். சமயங்கள் என்பன ஆன்மா, இறைவன் இரண்டையும் இணைத்து வழிபாட்டுச் சடங்குகளையும், முறைகளையும் அமைத்துக்கொண்ட முறைகளாகும் என்று ந. சுப்புரெட்டியார் கூறுவது குறிப்பிடத்தக்கது.

இந்திய நிலப் பரப்பில் சமயங்கள் என்பது பல கடவுள்கள் கொண்ட நடைமுறை வழிபாட்டு முறைகளாக உள்ளன. எல்லாச் சமயங்களும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டு இருப்பினும் உருவில் சிவன், திருமால், பிரம்மா, முருகன், கலைமகள், திருமகள், விநாயகர் போன்ற உருவ வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. இதற்கு ந. சுப்புரெட்டியார் 'ஒரு நாமம், ஓருருவம் இல்லாத கடவுளுக்கு ஆயிரம் திருநாமங்கள்' என்ற மாணிக்கவாசகரின் கூற்றைச் சொல்லி உறுதிப் படுத்துகின்றார்.

பல கடவுள்கள், வழிபாடுகள், பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்து காணப்படினும் இறைவன் ஒருவனே என்ற கருத்தும் பல கடவுள்கள் உள்ளனர் என்ற நம்பிக்கைகளிலிருந்து வளர்ந்து ஒரு கடவுள் என்று நினைக்குமாறு இறுதியில் முதற்பொருள் ஒன்றே என்ற கருத்திற்கு வருவதாகக் கூறுகிறார். திருமூலர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், தாயுமானவர், பாரதியார் போன்ற பேரறிஞர்களும் இக்கருத்தை எளிய மக்களுக்கும் சேரும்படிச் செய்துள்ளனர்.

## உலகாயுதம்

இப்பிரபஞ்சம் ஐந்து பெரும் பூதங்களால் ஆனது. இதைத் தொல்காப்பியம்,

> ***"நிலம் தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்***
> ***கலந்த மயக்கம் உலகம்....."***

என்ற நூற்பாவில் நிலம், நீர், தீ, வளி, வெளி (ஆகாயம்) என்று இவ்வைந்தும் கலந்த மயக்கம் தான் உலகம் (உலகில் உள்ள பொருள்கள்) என்று விளக்குகிறார்.

நமது இந்திய நாட்டில் தோன்றி வளர்ந்த சமய நெறிகளை மூன்றாக வகுக்கிறார் ந.சுப்புரெட்டியார்.

1. ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்துவெளி மக்களின் சமய நெறி.
2. வேத நெறிகள் அல்லது வைதிக நெறிகள்.
3. வேதங்களைப் புறக்கணித்த நெறிகள்.

இவற்றுக்குப் பின்னால் தோன்றிய மக்களின் வழிபாட்டு நெறிகள் இயற்கை வழிபாடு, தாய்த் தெய்வ வழிபாடு, திணைத் தெய்வ வழிபாடு, குல தெய்வ வழிபாடு இவைகளிலிருந்து சிலவற்றைப் பின்னர் வந்த ஆரியர்கள் உட்செரிந்து வேத நெறிகளின்படி சடங்குகளையும் அமைத்துக் கொண்டனர். வேத நெறி கரும மார்க்கத்தோடு, உபநிடத நெறி, ஞான மார்க்கத்தையும் வலியுறுத்துகின்றன என்ற ரெட்டியாரின் கருத்து உபநிடங்கள் ஆரியல்லாதாரின் சிந்தனைகள் கொண்டவை என்ற டாக்டர் பாஹம் கருத்துக்கு முரணாக உள்ளது. இருப்பினும் வைதிக நெறிக்கு எதிரானதாக, புறக்கணித்த புரட்சி நெறிகளாக உலகாயுதம் (சாருவாகம்), ஆசிவகம், பௌத்தம் போன்றவை வளம் பெற்றன என்ற வரலாற்றையும் இவற்றைப் புறச் சமய நெறிகள் என்றும் உரைக்கிறார்.

வேதங்களைச் சார்ந்த நெறிகளாக சாங்கியம், வைசேடிகம், நியாயம், யோகம், மீமாம்சை, வேதாந்தம், சித்தாந்தம் ஆகியவற்றிற்குப் புரணாக உலகாயுதம், ஆசிவகம், சமணம், பௌத்தம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு முன்னவை நம்பிக்கை மீதும், பின்னவை தரவு, அறிவு ஆகியன மீதும் நிற்கின்றன. கடவுள் என்ற ஒரு மாபெரும் ஆற்றல் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து ஆட்டி வைக்கின்றது என்ற நம்பிக்கை அடிப்படையில் அனைத்து சமயங்களும் விளங்குகின்றன. ஆனால் இப் பிரபஞ்சத்தில் காணும் ஒவ்வொரு பொருளையும் தனித் தனியாக அணுகி அவற்றின் அமைப்பு, இயக்கம் அவற்றினிடையே காணப் பெறும் தொடர்பு ஆகியவற்றின் தரவுகளைத் திரட்டி ஆராய்ந்து முடிவு தேடுவது அறிவியல் சார்ந்த சமயங்கள், வைதிக சமயங்கள் இறைவன் உலகினைப் படைத்தான் என்ற கொள்கையை ஒப்புக் கொள்கின்றன. புறச் சமயங்கள் இக் கருத்தை ஒப்புக் கொள்ளாமல் உலகத் தோற்றமும் வளர்ச்சியும் அணுக் கொள்கையின் அடிப்படையில் தான் நடைபெறுகின்றன என்கின்றன.

மெய்யியலாளர்கள் கூறிய அணுவியல் கொள்கையும் பின்னர் அறிவியலாளர்கள் கூறிய அணுக் கொள்கையோடு பொருந்தி வருவதாகக் கூறும் ந.சுப்புரெட்டியார் அறிவியலாளர்கள் ஆய்வுகள் மூலம் கண்டவற்றைச் சமய அறிஞர்கள் தங்களது ஞானத்தால், உள் உணர்வுகளால் கண்டுள்ளனர் என்கிறார். அண்டங்களின் அமைப்பு சூரிய மண்டலம், கோள்கள், சந்திரன் போன்ற கோள்களைக் கண்டு அவற்றின் மூலம் வானியல் அறிவோடு சோதிடக் கலைக்கு உள்ள தொடர்பையும் வழிபாட்டுக் கோயில்களிலும் நவக்கிரகங்கள் என்ற பெயரில் இடம் பெற்றதையும் தொடர்பு படுத்துகிறார்.

உலகச் சமயங்களை அறிவியல் பார்வையில் கண்ட ந. சுப்புரெட்டியார் அவரின் சம காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்குக் காரணமான பெரியாருடைய கோட்பாடுகளையும் ஆய்வுக்குட் படுத்துகிறார். தமிழிலக்கிய வரலாற்றில் பகுத்தறிவுக்

கொள்கைகளை சித்தர்கள் விதைத்தனர் என்றாலும் பாமர மக்களிடம் அக் கருத்துக்கள் வலிமையாகப் பரப்பியவர் ஈ.வெ.ரா.பெரியார். பெரியாரின் பகுத்தறிவுக் கோட்பாடுகள் எளிய மக்களிடையே அவர்களின் மூடப் பழக்க வழக்கங்களைக் கேள்விக்குட் படுத்திச் சிந்திக்க வைத்தது. பெரியார் ஈ.வெ.ரா.வின் சிந்தனைகளில் முதலிடம் வகிக்கும் கடவுள் மறுப்புக் கொள்கையைத் தீவிரப்படுத்தியதற்கான களத்தைச் சுப்புரெட்டியார் தெளிவு படுத்தியள்ளார். 'மனிதனை இழிவு படுத்துவதற்கும் பகுத்தறிவு அற்ற தன்மைக்கும் கடவுள் நம்பிக்கை காரணமாக அமைவதால் அதை ஒழித்துக் கட்ட வேண்டும். கடவுள் மேல் எங்களுக்கு எவ்வித கோபமும் இல்லை' என்ற வரிகளின் மூலம் மனித சமுதாய உயர்வே இதன் அடிப்படை என்பதை ந. சுப்புரெட்டியார் நிறுவுகிறார்.

சமயங்கள் என்ற நிலையில் மதமானது இன்று ஒருவரையொருவர் ஏய்க்கப் பயன்படுகிறதே அன்றி தொல்லையில்லா நிம்மதியான வாழ்வு வாழ உதவுவதாக இல்லை. போலி வாழ்க்கைக்காரர்களுக்குத் திரையாகவே மதமும் பத்திரிக்கையும் உதவுகின்றன என்ற பெரியார் சிந்தனையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

பிறப்பில் இருந்து சமூக வேறுபாடுகளைக் கற்பிக்கும் சமயங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற பெரியாரின் கருத்தை ஆழப் பதிய வேண்டும் என்று கூறுகிறார். பெரியாரின் சமூகக் கொள்கை, சமூக நீதி, மொழிப் பற்று, ஆட்சி அதிகாரம் போன்றவற்றில் சமயவாதிகள் சுரண்டுவதை எதிர்த்து, பெரியாரிய சிந்தனைகள் மனித விடுதலையை முன் வைப்பதாக ந.சுப்புரெட்டியார் நிறுவுகிறார். தீண்டாமை, சாதி ஒழிப்பு, வருணாச்சிரமம் போன்றவற்றைப் பற்றிப் பெரியார் கருத்துக்களைக் கூறும் ந. சுப்புரெட்டியார் தெளிந்த பார்வையோடு விவரிக்கிறார். நம் நாட்டிற்கு அவசியம் செய்ய வேண்டியவை மூன்று,

1. மூட நம்பிக்கை ஒழிய வேண்டும்.
2. அறிவுக்குச் சுதந்திரமும் விடுதலையும் ஏற்பட்டு அது வளர்ச்சி பெற வேண்டும்.
3. சுய மரியாதை உணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பவையாகும்.

பெரியாருடைய கொள்கைளைக் கேள்விகளாகக் கேட்டு பதிலை சமூகத்திடையே வைக்கிறார் ந.சுப்புரெட்டியார். மனிதாபிமானமே தந்தைப் பெரியாரின் மூச்சும் பேச்சுமாக இருந்தன என்று கூறுகிறார். மனித குல முன்னேற்றத்தில் இராமானுசரும், தந்தைப் பெரியாரும் விரிந்து பரந்த நோக்கத்தையுடையவர்கள். திருவரங்கத்தில் முன்னவர் ஆத்திகர்; பின்னவர் நாத்திகர் கடவுளைக் கனவிலும் கருதாதவர். மனித குல மேம்பாட்டில் இருவரும் ஒத்த கருத்தையுடையவர்கள். மேலும் இராமானுசர், இராமலிங்க அடிகள், தாயுமான அடிகள், இராமகிருஷ்ண பரமஹம்சர், நாவுக்கரசர், மணிவாசகர் ஆகியோருடன்

பெரியார் ஈ.வெ.ரா அவர்களும் சேர்கின்றார் என்று இவர்களுடைய வாழ்க்கையோடு ஒப்பிட்டு நிறுவுகிறார்.

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் படைப்புகளில் அவரின் ஆழங்கால்பட்ட அறிவு மற்றும் தேடல் ஆகியவற்றில் அவரின் மெய்யியல் என்பதைத் தொடர்ச்சியாக எந்தவொரு கோட்பாடாக இருப்பினும் அதைத் தமிழ்ச் சமூகத்திற்கானதாக நிறுவ முயன்றிருக்கிறார். பிறப்பில் சைவராக இருப்பினும் நாளடைவில் வைணவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தும் அனைத்துச் சமயக் கோட்பாடுகளைக் கற்றுத் தெளிந்து அவற்றில் வைணவ நெறியைத் தேடுவதும் அதோடு தொடர்புபடுத்துவதுமாக அவரது படைப்புகளைக் காண முடியும். பெரியாரின் சிந்தனைகளைப் பற்றிப் படைக்கும் போதும் அவரது வைணவக் கோட்பாடுகளை இராமானுசர் துணை கொண்டு ஏற்கிறார். பெரியாரை இராமானுசரின் மறுபிறப்பு என்றும் கூறுகிறார்.

## பயன்பட்ட நூல்கள்


1. Collected papers, professor Dr. N.Subbureddiar, Thriumala Thriupati Devasthanams, Thirupathi - 1985.
2. அணுக்கரு பௌதிகம், ந.சுப்புரெட்டியார், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-1966.
3. தந்தைப் பெரியார் சிந்தனைகள், டாக்டர் ந.சுப்புரெட்டியார், யாழ் வெளியீடு, சென்னை-2001.
4. அறிவியல் நோக்கில் இலக்கியம் சமயம் தத்துவம், பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-2001.

# 74. ந. சுப்புரெட்டியாரின் கவிதைச் சிந்தனைகள்

**வெ. மைதிலி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029*

இலக்கியத்தைக் காலத்தின் கண்ணாடி என்று கூறுவர். சமகால நிகழ்வுகளைக் காட்சிப் படுத்துவது அதன் பணியாக அமைகின்றது. ஒவ்வொரு இலக்கியப் படைப்பாளியும் சமூகத்தோடு இணைந்தவன். சமூகத்தின் ஒவ்வொரு அசைவுகளும் அக்கவிஞனையும் பாதிக்கின்றன. அந்தப் பாதிப்பு அவனுடைய படைப்புகளில் வெளிப்படுத்தப் படுகின்றன. அவ்வகையில் இலக்கியத்தில் காலங்காலமாக ஏற்பட்டு வருகின்ற வளர்ச்சி மாற்றங்களை எடுத்துரைப்பதே புதுக்கவிதை ஆகும்.

கரடு முரடான ஒரு மரத்தில் இளம் தளிர் போலவும் மனித உடலின் மிக மென்மையான உறுப்புகளில் ஒன்றாகிய இதயம் போலவும், நீண்ட காலம் பண்பட்டு வளர்ந்த இசை மரபின் வண்ணம் போலவும் இலக்கியக் கலையின் மிகப் பண்பட்ட ஒரு வடிவமாகக் கவிதை விளங்குகின்றது.

## கவிதைக் கலை - ஒரு சமூக விஞ்ஞானம்

புதுக்கவிதை வாழ்வின் பிரமையை உடைத்து உண்மையைச் சொல்லி வாழ்வை அர்த்தமாக்க முயன்றுள்ளது. கவிஞர்கள் சமூகக் கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுகின்றனர். மனிதநேயத்தோடு மனிதன் நடந்து கொள்ளத் தூண்டும் வகையில் மனித நேயமும் புதுக்கவிதைகளில் பாடுபொருளாக்கப் பட்டுள்ளது. இக்கவிதைக் கலை கூட ஒரு சமூக விஞ்ஞானம் ஆகும். இந்த சமூக விஞ்ஞானத்தை அணு அணுவாக ரசித்து சுவைத்து அனுபவித்து தோண்ட, தோண்டப் புதையல் கிடைப்பதைப்போல, அரிய படைப்பாளிகளின் படைப்புகளை ஆய்வு செய்து புதிய புதிய செய்திகளை வெளிக்கொண்டு வந்து வாழும் கவிஞர்கள் மற்றும் காலமும் கவிஞர்களும் என்று உணவிற்கு உப்பு போல, தமிழ் கூறும் நல்லுலகிற்கு ந. சுப்புரெட்டியார் படைப்புகள் தவிர்க்க முடியாதவைகளாக விளங்குகின்றன.

தமிழ் தழைக்கும் பணியில் தளராது பாடுபடும் ந.சுப்புரெட்டியார் வாழும் கவிஞர்களின் கவிதைகளைத் திறனாய்வு செய்ய வேண்டுமென்ற என் நெடுநாளைய உணர்வுக்கு எற்ப திறனாய்வு நோக்கில் வாழும் கவிஞர்களின் கவிதைகள் என்ற பொருளில் மரபுக் கவிதை, புதுக்கவிதை என்பதாகப் பிரித்துக் கொண்டு கவிஞர்களின்

படைப்புகளைத் திரட்டி அவற்றில் உள்ள அள்ள அள்ளக் குறையாத அற்புதங்களைக் கண்டு களித்து தான் இன்புற்றதை உலகின்புறச் செய்யவிரும்பி 'வாழும் கவிஞர்' என்ற நூலைப் படைத்தளித்துள்ளார்.

எண்பத்தியாறு அகவையிலும் அங்கங்கே கலைகள் தேரும் அறிவன்போல் சுறுசுறுப்பாக விளங்கும் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் நாடறிந்த சிறந்த தமிழறிஞர் வீறு தமிழ் வித்தகர். பல நூல்கள் எழுதி எழுதித் தமிழன்னையை அலங்கரிக்கும் அருங்கலைக்கோன். நம்மாழ்வாராம் சடகோபர் பொன்னடியே சரணம் என எண்ணும் நற்றமிழ்ச் சான்றோர். எளிமையும் இனிமையும் கொண்ட ஏந்தல்.

## கவிதை மனநிலை

கவிதை என்பது காணும் பொருள்களை வருணிப்பதில் இல்லை. அப்பொருள்களைக் காணும்போது அவனிடம் எழும் மனநிலையில் அது உள்ளது. அதே மனநிலைக்கு ஒரு வடிவம் கொடுத்து அழகிய சொற்களால் ஓவியமாக அமைப்பதே கவிதையாகும் என்று கவிதைக்குப் புது விளக்கமளிக்கிறார். அதே நோக்கில் அவர் குமரகுருபரரின் பாடலைப் பார்க்கிறார்.

***"சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்<br>சினப்புலியும் மடப்பினையும் திளைத்திருக்கும் ஒருபால்<br>வெங்கரடி மரையினொடும் விளையரிடும் ஒருபால்<br>விடஅரவும் மடமயிலும் விருந்தயமும் ஒருபால்"***

இப்பாடலில் அங்கு இருப்பதைவிட இருக்க வேண்டியவற்றைக் கூறுகிறார் கவிஞர். கற்பனையில் அவர் காணும் காட்சியை நாம் காணும்பொழுது நாம் எல்லையற்ற இன்பத்தில் ஈடுபடுகின்றோம் எனக் கவிஞர் மனநிலையையும் தாண்டி ஒரு புதிய கண்ணோட்டத்தில் இயற்கைக்கும் மாறான அன்பு நிறைந்த சமூகம் வேண்டும் என்ற நோக்கில் இப்பாடலைப் பார்க்கிறார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்.

மேலும் அவர் உண்மையான கவிதைகளில் உயிர் இருக்கும் மட்டரகமான செய்யுளில் உயிர் இருக்காது. சவம் போல் கிடக்கும், உறங்கும் மனிதனையும் சவத்தையும் கண்டு பிடிப்பதைப் போலத்தான் கவிதையின் மூச்சை நாம் உணர வேண்டும் என்று கூறுகிறார்.

அதோடு மட்டுமல்லாது கவிதை அல்லது பாட்டு இன்னதென்பது இலக்கண விதிபோல் ஒரு வரையறைக்குள் அடக்கிக் கூற இயலாது போயினும் பாட்டு இன்னதென்பதை ஓரளவு மனத்தால் உணர முடிகின்றது. "உணர்ச்சி, கற்பனை, ஒலி நயம், அணிநலன்கள், தொடைநயம், சுவைகள் முதலியவை அமையச் செந்தமிழ்ச் சொற்களால் நல்ல வடிவத்துடன் அமைவதே கவிதை அல்லது பாட்டு ஆகும்" என்று சொல்லுகிறார். அணிநலன்கள் பாட்டில் அமையினும் அமையலாம் அமையாதும் போகலாம். அவை அமைய வேண்டும் என்ற நிபந்தனை ஒன்றும் இல்லை ஆனால் கவிதை வாழ்க்கையை உண்மைகளை

மன்பதைக்கு என்றும் தோன்றாத் துணையாக நிற்கும் உண்மைகளை மட்டுமே உட்கிடக்கையாகக் கொண்டு நிற்க வேண்டும். அப்படியாயின் அவை முந்திரிக் கொட்டைபோல் நீட்டிக் கொண்டு இருக்க வேண்டும் என்பது பொருளன்று. அவை பாவிகமாகக் கவிஞனுடைய மனோபாவனையாக அமைதல் சாலச் சிறப்புடையது என்பதனையே சுட்டிக்காட்டுகிறார்.

## கவிதை உணர்த்தும் உண்மை

கவிதையின் தலைமைப் பண்பு, அஃது உணர்த்தும் உண்மையில்தான் உள்ளது. செய்தி கூறாத கவிதை வெற்றெனத் தொடுத்தலாகும். உயிரில்லாத சடம் போன்றது.

***“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்***
***அல்லது செய்தல் ஓம்புமின்”***

என்று புறநானூறின் கூற்றுக்கு ஏற்ப அனைவருக்கும் இன்றிமையாத உண்மை போன்றவை கவிதையில் அமைதல் வேண்டும். மரபுக் கவிதையாயினும் இன்றையக் கவிஞர்கள் ஏதோ ஒரு கருத்தைக் கவிதைகள் மூலம் மக்களுக்கு உணர்த்துகின்றனர். இந்த நோக்கத்தை முக்கியமானதாகக் கொண்டே கவிதைகளைப் படைக்கின்றனர் என்பது அவரின் ஆழமான கருத்தாக அமைகின்றது.

## கவிதையின் மதிப்பீடு

ஒருவரின் கவிதைகளை மதிப்பிடவேண்டுமானால் இரு நோக்கில் ஆய்ந்து மதிப்பிடலாம். அவை உருவம் உள்ளடக்கம் என்பனவாம்.

1. உருவம் : இதில் கற்பனை, சொல்லாட்சி, ஒலிநயம், உருவகம், யாப்பனமதி, அணிநலம், சுவை முதலியன அடங்கும்.
2. உள்ளடக்கம் : கவிதைகள் நுவலும் கருத்து இதில் கவிஞரின் பல்வேறு கொள்கைகள், வாழும் சமுதாயம் பற்றிய குறிப்புகள், அரசியல் முதலியவை அடங்கும்.

இந்த அம்சங்கள் அனைத்தையுமே கொண்டு எல்லாக் கவிதைகளும் விளங்கும் என்று நினைத்தல் தவறு. இவற்றுள் ஒருசில அமைந்திருப்பினும் சாலும், ஒன்றிரண்டு நலன்கள் சிறப்புடன் அமைந்திருப்பினும் கவிதை உணர்த்தும் செய்தி மிகவும் முக்கியம். அதுவின்றேல் கவிதைகள் கவிதைகள் ஆகா எனக் கவிதையின் மதிப்பீடு குறித்து வரையறுக்கிறார். தமிழைக் கற்பவர் சிலர் கற்றவழி நிற்பவர் சிலரின் சிலர்! கற்றவழி நின்றதோடு, நானிலத்தை நல்வழிப்படுத்த சமூகம் மேம்பாடடைய வழிகாட்டுவோர் வெகுசிலர்! தமிழரால் தரணியில் உயர் பீடத்தில் நிற்பவர் பலர்! தமக்காய்த் தமிழை விற்பவர் பலர்! தமக்கெனத் தமிழைப் பயன்படுத்தி மலரின் மகரந்தத்தில் தேனை நுகர்ந்து, மரப்பொதியில் மனித சமூகத்திற்குச் சேர்த்து வைக்கின்ற தேனீயைப் போலத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு உழைக்கும் நற்றமிழ் அறிஞர் ந. சுப்புரெட்டியார். இவர் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பெட்டகம்.

# 75. ந.சுப்புரெட்டியார் காட்டும் திருக்கோயில் தத்துவம்

**முனைவர் சு. சதீஷ்குமார்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி,*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

தமிழர்களின் அருள்நெறிக் கருவூலங்களாகவும் கலைச் சின்னங்களாகவும் திகழ்வன கோயில்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிவபெருமான், முருகன், திருமால் உள்ளிட்ட கடவுள்களுக்குக் கோயில்கள் இருந்ததைச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. கோயில்கள் ஆகம அடிப்படையில் கட்டப்படுகின்றன. கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், நந்தி மண்டபம், கொடிமரம், பலிபீடம், கோபுர வாயில், திருச்சுற்று மாளிகை ஆகிய அங்கங்களை உள்ளடக்கியதாகக் கோயில்கள் கட்டப்படும். இவை அனைத்தும் தத்துவ அடிப்படையில் அமைந்தனவாகும். திருக்கோவில் தத்துவம் குறித்து பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் 'சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்' என்ற நூலில் 'வழிபாட்டு முறைகள்' எனும் தலைப்பின் கீழ் 'ஆலய வழிபாடு' என்ற உட்தலைப்பில் எடுத்துரைத்துள்ள கருத்துகளை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## கோபுரம்

திருக்கோயில்களில் கோபுரங்களை அமைக்கும் வழக்கம் பண்டைய காலத்தில் இல்லை. கோபுரம் என்ற கட்டுமான அமைப்பு பிற்காலச் சோழர் காலத்தில் உருவானது. ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணி வாழ்த்தில்,

> ***"கோயில் முன்னேழ் நிலை கொண்ட தோர் கோபுர***
> ***வாயில் வகுத்த பிரான் மகன் வாழியே"***
> ***(தக்கயாகப்பரணி, 809)***

என்று சோழர்கள் கோபுரங்கள் கட்டிய திறத்தைப் போற்றிப் பாடியுள்ளார். அதனைத் தொடர்ந்து விசயநகரப் பேரரசு காலத்தில்தான் கோபுரங்கள் மிகுதியாகக் கட்டப்பட்டன. கிருட்டிண தேவராயர் காலத்தில் இப்பணி பெருமளவில் வளர்ச்சியுற்றது. ஆதலால் இக்கோபுரம் 'இராயகோபுரம்' என்று அழைக்கப்பெற்று, பின்னர் 'இராசகோபுரம்' என மருவியது. கோபுரம் 'தூலலிங்கம்' என்று அழைக்கப்பெறுகின்றது. தொலைவில் தெரியும் கோபுரத்தை இறைவனாகக் கருதி வழிபட வேண்டும். கோபுரத்தை வழிபட்டு

அதன் பின்பே உள்ளே நுழைதல் வேண்டும். இவ்வழக்கம் தொன்றுதொட்டு நிலவி வருவதை,

***“கங்கை வார்சடையார் கபாலீச் சரத் தணைந்து***
***துங்க நீள்சுடர்க் கோபுரந் தொழுது புக்கருளி”***
***(பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணம், பா. 1077)***

***“வலஞ்சுழிப் பெருமான் மகிழ் கோயில் வந்தெய்திப்***
***பொலங் கொள் நீள்சுடர்க் கோபுரம் இறைஞ்சியுட்***
***புகுந்தார்” (மேலது, பா. 380)***

எனும் தெய்வச் சேக்கிழார் மொழிகளால் இனிதுணர முடிகின்றது.

இராசகோபுரத்தில் தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் உருவங்கள் அமைக்கப்படுவதற்கான காரணத்தை, “இராசகோபுரத்திற்கு அருகில் வந்து அதன் அமைப்பை உற்று நோக்கினால் அதிசயிக்கத்தக்க பல உண்மைகள் புலனாகும். கணக்கற்ற வடிவங்களை அங்குக் காணலாம். விதவிதமான வாழ்க்கை முறைகளை அவை விளக்குவனவாக அமைகின்றன. தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், பறவைகள், ஏனைய சிற்றுயிர்கள் அங்கு இடம்பெற்று இந்த அகிலத்திற்குக் குறியீடாக அமைகின்றன” (சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், ப. 376) என்று ந. சுப்புரெட்டியர் குறிப்பிட்டுள்ளார்.

கோபுரத்தில் காணப்படும் உருவங்கள் குறித்து இவர் தரும் விளக்கம் இயல்பாக உள்ளது. நன்மை, தீமை ஆகிய இரண்டும் இயற்கையானது. அறிவுத்திறமும் பக்தி நெறியும் உடையவர்கள் அல்லதை விடுத்து நல்லதை நாடிச் செல்ல வேண்டும் என்பதைக் கோபுரச் சிற்பங்கள் உணர்த்துகின்றன என்பதை, “இராசகோபுரத்தில் அருவருக்கத்தக்க சில வடிவங்களும் அமைந்திருப்பதைக் காணலாம். நாகரிகமான சில வடிவங்களும் அமைந்திருப்பதைக் காணலாம். நாகரிகமான பண்புகளுக்கு இவை அறிகுறிகள் ஆகா. மனத்தில் மேலான கருத்துக்களைத் தோற்றுவிப்பதற்கும் இவை துணைபுரியா. இந்த அமைப்புக்குக் காரணமும் உண்டு. இயற்கையின் நடைமுறை புறச் சின்னம் அல்லவா? நாகரிகம் அநாகரிகம் ஆகிய இரண்டும் இயற்கையில் இடம் பெற்றுள்ளனவன்றோ? பாராட்டத்தக்க பெருவாழ்வும் பழிக்கத்தக்க சிற்றியல்பும் சிறுசெயல்களும் இயற்கையில் இடம்பெற்றுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டவே இந்தக் கோபுரம் அமைந்துள்ளது என்பது அறியப்படும்” (சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், ப.376) என்று உணர்த்துகின்றார்.

## கோபுர வாயில்கள்

உபானம் முதல் ஸ்தூபி வரையிலான நுழைவாயில் கட்டடமே கோபுரமாகும். அது உபபீடம், அதிஷ்டானம், வேதிகை, பித்தி, பிரஸ்தரம், சாலை, கூடு, கிரீவம், சிகரம், ஸ்தூபி எனப் பல்வேறு அங்கங்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு அங்கமும் பல்வேறு உபாங்கங்களைக்

கொண்டிருக்கும். கோபுரங்களைப் பதினாறு நிலை வரையில் அமைக்கலாம் என மயமதம் எனும் ஆகமநூல் குறிப்பிடுகின்றது. இராச கோபுர வாயில் 'மகாதுவாரம்' என்று அழைக்கப்படும். வாயிலுக்கு மேல் அமைக்கப் பெற்றுள்ள நிலைகள் ஒவ்வொன்றிலும் வாயில்கள் எனப்பெறும் துவாரங்கள் அமைந்திருக்கும். கோபுரத்தின் நிலைகளில் பல வாயில்கள் இருப்பினும் உள்ளே சென்று இறைவனை வழிபட உதவுவது 'மகாதுவாரம்' எனும் வாயில் ஆகும்.

இத்தகைய வாயில்கள் குறித்து பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் தரும் தத்துவ விளக்கம் பாமரர்களுக்கும் புரியும் வகையில் எளிமையாக அமைந்துள்ளது. "இராச கோபுரத்தின் வாயில்கள் பொதுவாக ஒற்றைப்படையில்தான் அமைந்திருக்கும். இத்தகைய வாயில்கள் தத்துவத்திற்கு விளக்கமாகவும் அமைந்துள்ளன. மூன்று வாயில்கள் உள்ள கோபுரம் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்ற மூன்று அவத்தைகளைக் குறிக்கின்றன. ஐந்து வாயில்கள் உள்ள கோபுரம் ஐம்பொறிகட்குக் குறியீடாக அமைந்துள்ளது. ஏழு வாயில்கள் உள்ள கோபுரத்தில் மனம், புத்தி என்னும் இரண்டு தத்துவங்கள் சேர்க்கப்பெறுகின்றன. ஒன்பது உள்ள இடத்து சித்தம், அகங்காரம் என்னும் மேலும் இரண்டு தத்துவங்கள் சேர்கின்றன. இங்ஙனம் நமது உடல் அமைப்பில் உள்ள வெவ்வேறு தத்துவங்களுக்குக் கோபுர வாயில்கள் சின்னங்களாக அமைந்துள்ளன என்பது ஈண்டு அறியப்படும்.

மேற்குறிப்பிட்ட வாயில்களுள் தரைமட்டத்திலுள்ள ஒருவாயில்தான் கோயிலினுள் செல்வதற்கு உதவுகின்றது. ஏனைய வாயில்கள் அமைக்கப்பெற்றிருந்தும் அவை ஆலயத்தினுள் புகுவதற்குப் பயன்படுவதில்லை. இதன்மூலம் நமக்கு ஒரு கருத்து புகட்டப்பெறுகின்றது. அக் கருத்து யாது? புறக்கரணங்களும் அந்தக்கரணங்கள் பலவும் நம்மிடம் இருப்பினும் இறைவன் நாட்டம் கொள்ளும்போது மனம் என்ற ஒரு கரணமே நமக்குப் பயன்படுகின்றது. ஏனைய கரணங்களையெல்லாம் அவ்அவற்றின் நிலையிலே வைத்து விட்டு மனம் இறைவனை நாடி உள்முகமாகப் போக வேண்டும் என்பது கோட்பாடு. ஐம்பொறிகளைக் கொண்டும் மனம், புத்தி முதலியவற்றைக் கொண்டும் புற உலகை அறிகின்றோம். புற உலகை அறிகின்ற செயலை அப்படியே நிறுத்தி வைத்துவிட்டு மனத்தைத் துணையாகக் கொண்டு பரம்பொருளினிடத்து உள்முகமாகப் பயணம் போகவேண்டும் என்னும் கோட்பாட்டை இராச கோபுர வாயிலினுள் செல்லும் நுழைவு விளக்கிக் காட்டுகின்றது" (மேலது, பக். 376-377).

தத்துவங்களை உணராத சாதாரண மக்களும் மனத்தைத் தூய்மையுடன் வைத்துக் கொள்வதே இறைவனை அடைவதற்கான வழி என்பதை பேராசிரியரின் மேற்கண்ட வரிகளைப் படிக்கும் போது தெளிவாக உணரமுடியும். மனக்கோயில் கட்டிய பூசலார் நாயனாரை ஈண்டு நினைவு கூர்வதன் மூலம் ந. சுப்புரெட்டியாரின் கருத்து முற்றிலும் உண்மையானது என்பது புலனாகின்றது.

## கருவறை

திருக்கோவில்களில் மூலவர் திருமேனி எழுந்தருளியிருக்கும் இடம் கருவறையாகும். கர்ப்பக்கிரகம், மூலஸ்தானம், உண்ணாழி ஆகிய பெயர்களும் கருவறைக்கு வழங்கப்படுகின்றது. இது அனைத்து உலகங்களையும் படைத்ததற்குக் காரணமான மூலப்பிரகிருதியின் இடமாகும். பேராசிரியர் ந. சுப்புரெட்டியார், "நமது உடலமைப்பின் புறச் சின்னமாக அமைந்துள்ளது கருவறை. கருவி கரணங்களை ஒடுக்கி மனத்தை உள்முகமாகத் திருப்பினால் உண்டாகும் அநுபவத்திற்குச் சின்னமாக அமைந்திருப்பது கருவறையாகும்" (சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், ப.380) என்று கருவறைக்கு விளக்கம் தருகிறார்.

இருள் சூழ்ந்திருக்கும் கருவறையில் வழிபாட்டின் போது மணி ஒலிக்கப்படும். பல்வேறு தீப ஆராதனைகள் நடைபெறும். அந்த ஒளியில் இறைவனின் திருமேனியைக் காணலாம். இந்த அனுபவத்தை மெய்யன்பர்கள் அகத்தினுள்ளே அடைய முடியும் என்று உறுதிபட ந. சுப்புரெட்டியர் உரைப்பதை, "மனத்தினுள் சிந்தையைச் செலுத்தும் ஆன்மசாதகன் (பக்தன்) கார் இருளையே தன்னுள் காண்கின்றான். அயினும், மனத்தை உள்முகத்தில் வைத்திருக்கப் பழக வேண்டும் (இதுவே தியானம் என்பது). இந்தப் பழக்கம் உறுதிப்பட நெடுங்காலம் ஆகும். பழகுபவனுக்கு ஓர் அற்புதமான அநுபவமும் கிட்டும். தனது உள்ளத்தினுள்ளே ஒருவித இனிய ஓசையைக் கேட்பான், புகை போன்றும், மின்மினிப் பூச்சிகளின் நடமாட்டம் போன்றும் சில காட்சிகள் தன்னுள் தென்படுவதைக் காண்பான். ஒலி ஒளி அகிய இரண்டும் மனத்தில் உதிப்பது சாதகன் தன் சாதனையில் முன்னேறி வருவதன் அறிகுறியாகும். இறுதியில் மனத்தின் அஞ்ஞானத் திரை நீங்குவதை அறிகின்றான். ஞான ஒளியின் தரிசனம் கிட்டுவதை உணர்கின்றான். அந்த ஞானமும் ஆன்ம சொரூபமும் ஒன்றேயாகும். இங்ஙனம் மனத்தகத்து உண்டாகின்ற ஆன்ம தரிசனத்துக்குப் புறச்சின்னமாக அமைந்திருப்பதே இந்த ஆலய தரிசனம்" (மேலது, பக். 380,381) என்பதனால் அறியமுடிகின்றது.

## வலம் வருதல்

திருக்கோயிலை வலம் வந்து வழிபடும் மரபு தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. இதனை,

***'புத்தேளிர் கோட்டம் வலஞ்செய்து'***
***(கலித்தொகை, பா. 82)***
***'கடவுட் கடிநகர் தோறும் இவனை***
***வலம்கொளீஇ வாவெனச் சென்றாய்' (மேலது, பா.104)***

என்ற பாடலடிகளால் அறியமுடிகின்றது. திருவையாற்றில் மகளிர் முழவதிர ஆடிக் கொண்டு திருக்கோயிலை வலம்வந்ததை சம்பந்தப் பிள்ளையார் காட்சிப்படுத்தியுள்ளார். அரன்கோவில் வலம் வந்து

பூக்கொண்டு வழிபாடு செய்யாத போது பலனில்லை என்று அப்பரடிகள் பாடுகிறார்.

திருக்கோயில்களில் உள்ள பிரகாரங்களை வலம் வந்து இறைவனை வழிபட வேண்டும் என்பது வழிபாட்டு முறையாரும். இவ்வாறு வலம் வருதல் குறித்து, "கோயிலினுள் இருக்கும் பிராகாரங்கள் மூன்று, ஐந்து, ஏழாகக் காணப்படுகின்றன. மூன்று பிராகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம் என்ற மூன்று கோசங்களையும் உணர்த்துகின்றன. ஐந்து பிரகாரங்கள் இவற்றோடு விஞ்ஞானமயம், ஆனந்தமயம் எனும் கோசங்களைக் குறிக்கின்றன. ஏழு பிரகாரங்கள் இவற்றோடு ஸ்தூல, சூட்சுமங்களை விளக்குகின்றன. பலமுறை பிரகாரங்களைச் சுற்றி வலம் வருவது கோசங்களைக் கடந்து இறைவன் விளங்குகிறான் என்பதை நினைப்பூட்டுகிறது" என ஆறுமுக நாவலர் தத்துவ விளக்கம் தந்துள்ளார் (இந்துமத இணைப்பு விளக்கம், ப. 46).

வலம் வருதல் என்னும் சொல்லிற்கு வலப்புறமாகச் சுற்றி வருதல் என்பது பொருள்.

***'இடமுறை மும்முறை வலமுறை வாரா'***
***(மணிமேகலை, பீடிகைகண்டு பிறப்புணர்ந்த காதை, அ.எ. 5)***

என்ற அடியில் அமைந்த 'வலமுறை வாரா' என்பதற்கு ந. மு. வேங்கடசாமி நாட்டார் "இடமாக விருந்து மும்முறை வலமாக வந்து" என்று உரையெழுதியுள்ளார். இதனால், இடப்புறம் தொடங்கி வலப்புறமாகச் சுற்றி வருதலே வலம் வருதல் என்பது புலனாகின்றது. ந. சுப்புரெட்டியார், "திருக்கோயிலைச் சுற்றி வலம் வருங்கால் உள்ளிருக்கும் இறைவன் தன் வலப்புறம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுகின்றான் பக்தன். இதுவே வலம் வருதல் என்பதன் பொருள்" (சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம், பக். 377,378) என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் தரும் விளக்கம் வலம் வருதலின் அறிவியல் உண்மையையும் பயனையும் விளக்கும் வகையில் உள்ளது.

"இது பிராணாயாமத்தின் சின்னமாகும். ஒழுங்குபட்ட மேலான மனம் பிராணாயாமத்திற்குத் தகுதியுடையதாகின்றது. மனத்தகத்து உண்டாகும் மாறுதலுக்கு ஏற்ப சுவாசிக்கின்ற காற்றில் வேறுபாடு உண்டாகின்றது. கீழான மனப்பான்மையுடையவர்க்கு சுவாசத்தின் போக்குவரவு அல்லது பிராணாயாமம் முறையாக நிகழ்கின்றது. தங்கு தடையின்றி அமைதியாக வலம் வரும்போது பிராணாயாமமும் ஒழுங்காக நிகழ்ந்து விடுகின்றது. சூக்குமமாக உடலின்கண் நிகழும் நிகழ்ச்சி பிராணாயாமம் என்பதும், வலம் வருதல் என்னும் உடலின் தூலமான செயல் அதன் புறச்சின்னமாக அமைகின்றது என்பதும் தெரிந்து தெளியத் தக்கவை" (மேலது, ப. 379) என்னும் கூற்றால் பிராணாயாமத்திற்கும் வலம் வருதலுக்கும் இடையேயுள்ள தொடர்பை ந. சுப்புரெட்டியார் உணர்த்திச் செல்கின்றார்.

## முடிவுரை

மனித உடலின் புறச்சின்னமாக விளங்கும் திருக்கோயில் குறித்த தத்துவங்கள் ஆகம நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் நுணுக்கமாக ஆராய்ந்து அனைவரும் உணரும் எளிய நடையில் ந. சுப்புரெட்டியார் எடுத்துரைத்துள்ளார். மனத்தை ஒருமுகப்படுத்தி உலகியல் இன்பங்களைப் புறந்தள்ளி மேலான பரம்பொருளைச் சிந்தனை செய்தால், அப்பரம்பொருள் நம் உள்ளத்தை இடமாகக் கொண்டு அமர்வான். அதற்குத் துணைசெய்யும் வகையில் ஆன்ம ஈடேற்றத்திற்குரிய வாயிலாகத் திருக்கோயில்கள் அமைந்துள்ளன என்ற உண்மையைத் திறம்பட மொழிந்துள்ளார்.

# 76. ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் முறைமை

**முனைவர் ஜோ. சரவணன்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*அரசு கலைக் கல்லூரி,*
*உதகமண்டலம்.*

தமிழ் இலக்கிய உலகில் ஒரு குறிப்பிட்ட படைப்பாளிகளின் எழுத்துக்கள் காலம் கடந்தும் வாசிக்கப்படுவதுடன், நிலைபேற்றுத் தன்மையைப் பெற்றுத் திகழ்கின்றன. ஒவ்வொரு தனிச்சொல்லும் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றவாறு பொருள்களைச் சுட்டுகின்றன. அவ்வகையில் முறைமை என்னும் சொல்லைக் கையாண்டுள்ள சுப்புரெட்டியாரின் தனித்தன்மையைப் புலப்படுத்திக் காட்ட இக்கட்டுரை முயற்சிக்கின்றது.

தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் ‘இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்’ என்ற நூற்பா (எண்.80) ‘முறைமை’ என்ற சொல் உறவுமுறை என்ற பொருளில் வந்துள்ளது. ‘ஆண்மை அடுத்த’ என்ற நூற்பாவிலும் (எண்.62) முறைமை-முறை, உறவு முறை என்ற பொருளில்தான் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் காணப்பெறுகின்றது.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ‘மேலோர் முறைமை’ என்று தொடங்கும் நூற்பாவில் (எண்.31) முறைமை-தன்மை என்ற பொருளிலும், ‘அன்னை என்னை’ என்று தொடங்கும் நூற்பாவில் (எண்.242) முறைமை-வழக்கு, நெறி முறை என்ற பொருள்களிலும் ‘கற்பும் காமமும்’ (எண்.150) என்று தொடங்கும் நூற்பாவில்,

***“முகம்புகல் முறைமையில் கிழவோர்க் குரைத்தல்”***

என்ற அடியில் முறைமை-தன்மை என்ற பொருளிலும் வந்துள்ளதைக் காணலாம் என்கிறார் சுப்புரெட்டியார்.

இச்சொல் எட்டுத்தொகை பரிபாடலில் “முனித்துறை முதல்வியர் முறைமை காட்ட” (82) என்ற அடியில் முறைமை-நோற்கும் முறைமை, நோன்பு செய்யும் முறை என்ற பொருள்களில் அமைந்துள்ளதாகவும், புறநானூற்றில் “முறைமைநின் புகழும் அன்றே மறம்மிக்கு” (புறம்., பா.10) என்ற அடியில் முறைமை-முறைமை செய்தல், நீதி வழங்தல் என்ற பொருள்களில் வந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளமை அவருடைய சங்க இலக்கியப் புலமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

## கம்பன் காட்டும் முறைமை

"ஒருவனுக்குக் கொடுத்த பொருளை வேறொருவனுக்குக் கொடுத்தல் முறையாகாது" என்பது அறநூல்விதி. இப்படியிருக்க, மன்னவன் இராமனுக்குக் கொடுத்த அரசுச் சுமையைக் கைகேயிக்கு எவ்வாறு கொடுக்கலாம்? இந்தக் கொடையில் மூத்தவனுக்கு உரியதை இளையவனுக்குக் கொடுத்தலும், முன்னதாக ஒருவனுக்குக் கொடுத்ததை மீட்டும் மற்றொருவனுக்குக் கொடுத்தலும் ஆகிய இரண்டு முறைகேடுகள் இச்செயலில் அடங்கியுள்ளன. ஒருகால் மன்னர்க்கு ஒருவகை அறம், மற்றவர்க்கு மற்றொரு வகை அறம் உண்டு போலும் என்கின்றனர் என்ற கருத்தை ஆசிரியர் முன்வைக்கின்றார்.

மேலும், 'மூத்தவனிடம் குறை - குற்றம் - ஏதேனும் இருந்தால் இளையவன் உலகையாளலாம்' என்பது அறநூல் வழக்கு (Succession right) மூத்தமகனோ, 'தன்னேரில்லாத தலைமகன்' அத்துடன்,

***"புனைய மாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க***
***நினையல் வேண்டும்நான் நின்வயிற் பெறுவது***
***ஈதென்றான்" (மந்திர,. பா.71)***

என்றதனை நோக்கி முன்னே கொடுத்த பொருள் என்கின்றனர். நினைத்தலும் சொல்லலும் செய்தலோடொக்குமாதலால், கொடுக்க நினைத்ததனையும் சொன்னதனையும் 'கொடுத்து' என்கின்றனர். 'இராமனுக்கு அரசுப்பொறுப்பு கொடுத்தால் வாய்மை பிழைக்கும்' என்ற கைகேயிக்கு மாறாக, 'பரதனுக்குக் கொடுத்தால் வாய்மை பிழையாதோ?' என்கின்றனர். 'வேண்டும் போது இரண்டு வரங்கள் தருவேன்' என்று தசரதன் முன்பு சொல்லியிருந்தாலும் அரசுப் பொறுப்பை இராமனுக்குக் கொடுப்பதாகச் சொல்லிவிட்ட பிறகு அதைக் கைகேயி கேட்டால் 'அரசுப் பொறுப்பு எற்கெனவே கொடுக்கப் பட்டதாயிற்றே?' என்பது நகரத்தவரின் உட்கோள், இப்படி முடியாட்சி காலத்திலேயே மக்களிடையே குடியாட்சி முறை அரும்பத் தொடங்கி விடுகின்றது என்பதை இக்காவியத்தில் காணலாம் என்ற கருத்தைச் சுப்புரெட்டியார் பதிவாக்கியுள்ளார். நகர்நீங்கு படலத்தில் இடம்பெற்றுள்ள,

***"நிறைமக வுடையவர் நெறிசெல் ஐம்பொறி***
***குறைமக குதையினும் கொடுப்ப ராம்உயிர்***
***முறைமகன் வனம்புக மொழியைக் காக்கின்ற***
***இறைமகன் திருமனம் இரும்பென் றார்சிலர்"***

என்ற பாடலையும்,

***"புக்குறை விடநல்கிப் பூசனை முறைபேணித்***
***தக்கன கனியாயுந் தந்துரை தருமன்பால்***
***தொக்கநன் முறைகூறித் தூயவன் உயிர்போலும்***
***மக்களின் அருளூற்றான் மைந்தரும் மகிழ்வுற்றார்"***

என்ற பாடலையும் சான்றாகக் காட்டி பரத்துவாச முனிவன், இராம இலக்குமணர்களை உபசரித்ததைக் காட்டும் இடங்களில் இச்சொற்கள் அமைந்துள்ள பாங்கினைப் புலப்படுத்துகின்றார்.

தயரதன் இறந்துபோன தயரதனின் உடலைத் தைலத்தில் இட்டுப் பாதுகாக்க வேண்டிய தருணம் ஏற்படுகின்றது. தந்தைக்கு மகன் செய்ய வேண்டிய ஈமச்சடங்குகளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது கம்பன் முறைமை என்ற சொல்லைக் கையாள்கின்றார்.

***"தந்தை தன்வயின் தருமம் யாவையும்***
***முந்து நூலுளோர் முறைமையின் முற்றினான்"***

என்ற பாடல் ஈமக்கடன் முடிந்த பின்னர் பரதன் தன் திருமாளிகையை அடைந்து பத்து நாட்கள் வரை செய்ய வேண்டிய சடங்குகளை (தசாஹம்) முடித்த விவரத்தைக் கூறுகின்றது.

இப்பாடலில் சாத்திர நூலில் கூறியுள்ள முறைப்படி என்ற பொருளில் முறைமையின என்றசொல் அமைந்திருப்பதை சுப்புரெட்டியார் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பரதன் காட்டும் முறைமை

கானகத்தில் அரசர் முதலியோர் சூழ்ந்திருக்க, பரதன் கொண்டிருந்த விரத வேடத்தைக் குறித்து பரதனை இராமன் வினாவும்போது பரதன் தன் கருத்தை ஆறு பாடல்களில் தெரிவிக்கின்றான். அவற்றுள் ஒரு பாடல் இது,

***"நிறையின் நீங்கிய மகளிர் நீர்மையும்,***
***போறையின் நீங்கிய தவமும், பொங்கருள்***
***துறையின் நீங்கிய அறமும், தொல்லையோர்***
***முறையின் நீங்கிய அரசின் முந்துமோ?"***

என்பதாகும். இப்பாடலில் கற்பு நெறியின்றும் விலகிய மகளிரின் குணம், பொறுமையினின்று நீங்கிய தவ ஒழுக்கம், கருணை வழியினின்று விலகிய தருமம் - இவை யாவற்றினும் 'தொல்லையோர் முறையின் 'நீங்கிய அரசு மிகக் கொடியது' என்கின்றான் பரதன். மூத்தவர்க் குரித்து அரசு எனும் முறைமையின் தவறிய அரசியல் தான் கொள்ளத்தக்கதன்று என்று உணர்த்துகின்றான். இந்தக் காரணத்திற்காக இளங்கோ அரச பதவியை வெறுத்து, துறவறம் பூண்டு 'இளங்கோ அடிகள்' ஆயினர். இங்குப் பரதன் 'தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கி' (குகப்படலம், பா.35) ஆயிரம் இராமர்களைவிட உயர்ந்தவனாகின்றான் என்ற கருத்தை எடுத்துரைத்துக் கம்பன் சொல்லைக் கையாள்வதில் தனித்திறனுடையவன் என்பதை உறுதிப்படுத்துகின்றார் ஆசிரியர்.

பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த இராமன் பரதனது கொள்கையைத்தவறு என்று ஏழு பாடல்களால் காட்டுவான். அவற்றுள்,

***"முறையும் வாய்மையும் முயலும் நீதியும்***
***மறையும் மேன்மையோடு அறனும் ஆதியாம்***
***துறையுள் யாவையும் சுருதி நூல்விடா***
***இறைவன் ஏவலால் இயைவ காணவா"***
***(திருவடிசூட்டு, பா.105)***

என்ற இப்பாடலைக் குறிப்பிட்டுக் காட்டும் ஆசிரியர், அறம், நீதி, முறைமை என்ற மூன்று கருத்துக்களும் அமைந்து உள்ளமை கண்டு மகிழத்தக்கது. முறை(மை)-நல்லொழுக்கம் என்ற பொருளிலும், நீதி-நியாயம் என்ற பொருளிலும் அறன், தருமம் என்ற பொருளிலும் அமைந்துள்ளன. முறை(மை), நீதி, அறம் ஆகியவை நிலை நிற்பதன் பொருட்டு இறைவன் இருத்தல் இன்றியமையாதது என்று காட்டுவான் இராமன். திருக்குறள் 'இறைமாட்சி' யில் "உலக பாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின் 'இறை' என்றார். "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்று பெரியாரும் பணித்தார் என்று பரிமேலழகர் உரைத்ததையும் 'இறை' என்பதற்குக் கொள்ளல் பொருத்தமுடையது என்ற கருத்தை அழுத்தமாகவும் பதிவுசெய்துள்ளார்.

இராமன்-பரதன் பேச்சிடையே வசிட்டன் குறுக்கிட்டு முந்தையோர் முறைமை ஆறு பாடல்களால் எடுத்துக்காட்டித் தன்ஆணையால் அரசுப் பொறுப்பை அங்கீகரிக்குமாறு வேண்டுகின்றான். இதற்கு இராமன் மூன்று கவிகளால் மறுமொழி தருகின்றான். வசிட்டன் வாயடைத்துப் போக, பரதன் தன் முடிவைக் கூறும்,

***"முனிவனும் உரைப்பதோர் முறைமை கண்டிலம்***
***இனியென இருந்தனன்; இளைய மைந்தனும்***
***அனையதேல் ஆள்பவர் ஆள்க நாடுநான்***
***பனிபடர் காடுடன் படர்தல் மெய்யென்றான்"***
***(திருவடிசூட்டு, பா.129)***

என்ற பாடலைச் சான்றுகாட்டி இந்தப் பாடலில் முறைமை - நீதி என்ற பொருளில் வந்துள்ளது. இராமன் கூறிய நியாயத்தைக் கேட்ட வசிட்டன், 'இனி இதற்கு மாறாகச் சொல்வதொரு நீதியைக் காணோம்' என்று வாளா இருந்தான் என்கின்றான் கவிஞன் எனக் காட்டியதோடு மட்டுமன்றிச் சொற்பொருள் விளக்கத்தை அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுச் சொல்லும் வழக்கத்தையும் நூலாசிரியர் கடைப்பிடிக்கின்றார்.

முனிவன் - வசிட்ட முனிவன்; முறைமை - நீதி; இளைய மைந்தன்-பரதன்; பனிபடர் - பனிமிக்க; மெய் - உண்மை என்றவாறு சொற்பொருள் விளக்கத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

## மெய்யும் பொய்யும்

இராமனைக் காட்டிற்கு அனுப்பும் கைகேயியின் சொல்வன்மையை,

***"ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீபோய்த்***
***தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்***
***கொண்டு***
***பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணிய நதிகள் ஆடி***
***ஏழிரண் டாண்டின் வாஎன்று ஏவினன் அரசன்"***
***(கைகேயி சூழ்வினை, பா.107)***

என்ற பாடலில் உணரமுடிகின்றது. தாயின் ஆணைக்கு அடிபணிந்த இராமன்,

***"மன்னவன் பணியன் றாகில் நும்பணி மறுப்ப னோஎன்***
***பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற***
***தன்றோ?***
***என்னிதின் உறுதி அப்பால் இப்பணி தலைமேற்***
***கொண்டேன்***
***மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும்***
***கொண்டேன்" (கைகேயி சூழ்வினை, பா.107)***

எனச் சொல்லி கைகேயினையும் தசரதனையும் வணங்கி விட்டு அவளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு கோசலையின் திருமாளிகை வருகின்றான். 'கோசலை கோயில் புக்கான்' என்கின்றார் கவிஞர். நீராடாமல் தலையில் கிரீடம் சூட்டிக் கொள்ளாமல் வந்த இராமனை நோக்கிக் கோசலை (சக்கரவர்த்தி) நினைத்தது என்? இடையூறு உண்டோ நெடுமுடி புனைதற்கு? (அயோத்தி- நகர்நீங்கு, 3) என்று வினவ, அதற்கு இராமன்,

***"செங்கை கூப்பி நின் காதல் திருமகன்***
***பங்க மில்குணத் தெம்பி பரதனே***
***துங்க மாமுடி சூடுகின்றான்"***

என்று மறுமொழி உரைத்தான். இதனை மகிழ்ச்சி பொங்கக் கூறுகின்றான்! இதன் பிறகு அன்னை கோசலை கூறும் மொழியில்தான் 'முறைமை' என்ற சொல் வருகின்றது.

***"முறைமை யன்றுஎன்பது ஒன்றுண்டு அல்லது***
***நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லனால்***
***குறைவி லன்எனக் கூறினள் நால்வர்க்கும்***
***மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்"***
***(மேற்படி 19)***

என்ற இப்பாடலில் தன்மகனுக்குக் கிடைக்க வேண்டிய அரச பதவி கிடைக்காமல் போன துன்பத்தை மறைத்துக் கொண்டு கோசலை பேசுவது அவளது தூய்மையான உள்ளத்தைக் காட்டுகின்றது. இங்கு 'முறைமை' என்பது 'அரசநீதி', 'மரபுமுறை' என்ற பொருள்களில் வந்துள்ளது. 'மூத்தவன் இருக்க இளையவன் அரசு ஆளுதல் இராச நீதி அன்று என்கின்ற ஒரு குறைமாத்திரம் உண்டு என்பதல்லாமல் எல்லா விதத்திலும் பரதன் ஆளத் தகுதி பெற்றவன். நின்னினும்

நல்லன்' என்று கூறுகின்றாள்.இந்த அரசநீதிதான் (Principal of Succession) வழிவழியாக நம்நாட்டில் வழங்கி வருவது. 'மூத்தவன் குணக் கேடனாக இருந்தாலன்றி மற்றைப் போது மூத்தவனுக்கே முடிசூட்டுதல் அரச முறை ஆயிற்றே' என்று சுட்டிக் காட்டுகின்றாள் கோசலை.

மேலும் இந்தச் சொல், 'முறைமையின் எய்தினர்' (அயோத்தி, மந்திரப்., பா.14) என்ற இடத்தில் 'அரச மண்டபத்திற்குச் செல்ல வேண்டிய முறைப்படி' என்ற பொருளில் வந்துள்ளது; அதாவது 'நடைமுறை' என்ற பொருளில் வந்துள்ளதாகக் கருதலாம்.

***"முறைதெரிந் தொருவகை முடிய நோக்குறின்"***
***(ஆறுசெல், பா.9)***

என்ற இடத்தில் (பரதனை உலகாளுமாறு வசிட்டன் சொல்லும் இடம்) 'முறை' என்பதற்கு 'வழிமுறை' என்றும், 'அரசநீதி' என்றும் பொருள் காணமுடிகின்றது. 'முறை' 'முறைமை' என்ற சொற்கள் பரியாயமாகவே வழங்குவதையும் இலக்கியங்களில் காணலாம் என்ற கருத்தை எடுத்துரைக்கின்றார் ஆசிரியர்.

## தொகுப்புரை

முறைமை என்னும் சொல் காப்பியங்களில் எடுத்தாளப் பட்டுள்ளதை சுப்புரெட்டியார் தெளிவாக்கிச் செல்லும்போது கம்பராமாயணத்தில் பல்வேறு இடங்களில் இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ள பாங்கினை முன்வைப்பதோடு காலங்காலமாகப் பின்பற்றப் பட்டு வரும் ஒரு பழக்கத்தையோ அல்லது தொடர்நிகழ்வையோ முறை எனச் சுட்டலாம் என்ற கருத்தை வலியுறுத்துகின்றார்.

# 77. ந.சுப்புரெட்டியார் காட்டும் புறங்கொடாப் போர்வீரன்

**திருமதி சே. அமலி லூசியா**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*டாக்டர் எஸ்.என்.எஸ். இராஜலட்சுமி கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர்.*

கம்பன் கண்ட காப்பிய மாந்தர் பல்திறத்தினர்; பல்வேறு வடிவினர்; குணத்தினர்; கொள்கையினர்; தரத்தினர்; திறவினர்; சொல்லின் செல்வரையும் சூழ்ச்சியில் வல்லாரையும் உருவாக்கினான். ஆறநெறிச் செம்மலையும் மறவழி வேந்தனையும் வடித்தான். மாசுமாதையும் படம்பிடித்தான்ஹூ மேனியோடுள்ளமுங் கோடிய கூனியையும் படைத்தான். அவ்வவர்க்கு ஏற்றவாறு சிறப்புப் பெயர்களையும் அடைமொழிகளையும் தந்து சிறக்கச் செய்தான். பண்டைத் தமிழரின் போர்முறையில் இறுதியில் வென்றாலும் தோற்றாலும் புறங்காட்டி ஓடாதிருப்பதே சிறந்த வீரமாகக் கருதப்பெற்றது. இவ்வாறு புறங்காட்டி ஓடாது வெற்றி காணும் வீரனுக்கு வீரக்கழல் அணிவித்து மன்னனும் மற்றோரும் போற்றுவதே மரபு என்பதை “வயவரேத்திய ஓடாக் கழல் நிலை” என்று தொல்காப்பியரும் புறத்திணை இயலில் குறிப்பிடுகின்றார். இத்தகு வீரத்தின் விளைநிலமாகத் திகழ்ந்த இராவணனின் பெருமைகளையும், பிறர்மனை நோக்கிய சிறுமையையும் சுப்புரெட்டியார் எவ்வாறு படம்பிடித்துக் காட்டுகின்றார் என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்க முற்படுகின்றது.

## இராவணன் : எழுச்சியும் வீழ்ச்சியும்

வீரத்தமிழ் மரபின்படி இராமனிடம் தோற்ற இராவணன் ஓடாப் பூங்கழல் பூண்ட வீரனாகக் காட்சி தருகின்றான். உலகெல்லாம் வென்ற ஒப்பற்ற வீரனாகிய இராவணன் இறைவனின் ஓருருவராகக் கருதப்பெற்ற இராமனிடம் தோற்றதிலும் பெருமையுண்டு.

***“கான முயலெய்த அம்பினில் யானை***
***பிழைத்தவே லேந்தன் இனிது”***

என்ற குறளின் கருத்திற்கு ஏற்ப, போரின் முடிவால் புகழ் விளக்கமுற்றுப் போரின் சிறப்பிலும் தன்னைப் பெறுவோரின் உயர்விலும் புகழ் பெற்றவன் இராவணன். கம்பனின் கவிச்சிறப்பில் சாயாத சிகரமாக நின்று தவலிமை, படை வலிமை, போர் வலிமை போன்ற முத்திறனும் பெற்ற பொருநனாகக் காட்டப்படுகின்றான் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்டுகின்றார் ந.சுப்புரெட்டியார்.

இராமனின் காலன் போன்ற அம்பு இலட்சம் அரக்கருடைய கொடிய தலைகளை அறுத்து முடித்தமையால் பலகோடி வீரர்களும் அழிந்து போக, மீந்து நின்ற தேர் ஒன்றோடு இராவணன் ஒருவன் மட்டும் தனித்து நின்றான்.

***"மின்னும் பல்மணி மவுலிமேல் ஒரு கணைவிட்டான்;***
***அன்ன காய் கதிர் இரவிமேல் பாய்ந்த போர் அனுமன்***
***என்னல் ஆயது ஓர் விசையினின் சென்று, அவன் தலையில்***
***பொன்னின் மாணி மகுடத்தைப் புணரியில் வீழ்த்த"***
***(முதற்போர்புரி படலம், பா.7260)***

இராவணன் மகுடம் கடலில் வீழ்ந்ததற்கு மேருவின் சிகரம் கடலில் வீழ்ந்ததென உவமையாக்குகின்றார். தோல்வியை அறியாத வலியோனாகிய இராவணன் கண நேரத்தில் தன் மணி மகுடங்களை இழந்து 'எல் இமைத்து ஒரு மதியமும் ஞாயிறும் இழந்த அல்லும் ஒத்தனன் பகலும் ஒத்தனன்' (பா.7263) என விளங்கினான். மணிமுடியோடு செருக்கனைத்தும் இழந்ததனால் கீழ்நோக்கிய பார்வையினையும் தலையையும், ஒளியிழந்த முகத்தையும், தொங்கவிட்ட கைகளையும், தொங்கும் ஆலமரமென மேனியையும், அறத்தினை மீறிய தீயோர்களின் செயல் இப்படித்தான் முடியும் என்று உலகில் உள்ளோர் கூறுமளவு தன் நிறம் கரிந்த தோற்றத்தையும் கொண்டவனாகிய இராவணனை நோக்கிய இராமன், "அறநெறியினால் அல்லாமல், பாவ நெறியினால் அரிய போர்களில் வெல்லுதல் தேவர்களுக்கும் இயலாததாகும் என்பதை உள்ளத்தில் நிறுத்துவாய். நீ இப்போது இறப்பாய் ஆனால் நிராயுதபாணியாக நிற்கும் அவலம் கண்டு இரங்கி உன்னைக் கொல்வதனை நான் நினைக்கவில்லை" என்றுரைத்து பேராண்மையின் திலகமாகின்றான் இராமபிரான் என்ற சுப்புரெட்டியாரின் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

சீதையை விடுதலை செய்து, உனது தம்பியாகிய வீடணனுக்கு அரசுரிமையைக் கொடுத்து அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பாயானால் உன்தலை மிஞ்சும்; இல்லையெனில் உன்னிடம் மீதமுள்ள அனைத்துப் படைகளையும் திரட்டிக்கொண்டு மீண்டும் என்னிடம் போர்செய் வா என்றும் இராமன் அறிவுரைகளைக் கூறுகின்றான் என்பதற்கு ஆசிரியர் பின்வரும் பாடலைச் சான்றுகாட்டுகின்றார்.

***"ஆள் ஐயா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த***
***பூளை ஆயின கண்டனை; 'இன்று போய், போர்க்கு***
***நாளை வா' என நல்கினன் - நாகு இளங்கமுகின்***
***வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்"***
***(முதற்போர் புரி படலம், பா.7271)***

உயர்ந்த கமுகின் மேல் அஞ்சாது வாளைமீன் தாவி மோதும் எனக் கோசல நாட்டில் நில, நீர்வளம் குறிப்பினும், அந்நாட்டு அஃறிணைப் பொருள்களே அத்தன்மையினை உடையனவாயின், அந்நாட்டுத்

தலைவன் அஞ்சுவானோ? ஏன்னும் குறிப்புப் பொருளையும் கொண்டு நின்றது. "நாகிளங்முகின் வாளை தாவுறும் கோசல நாடுடை வள்ளல்" என்னும் தொடர் இராவணன் ஒருகால் நல்லுணர்வுற்று சீதையைத் தந்து சரண்புகுவான் எனில் இலங்கை அரசினைப் பெருமான், முன்பே வீடணனுக்குத் தந்துவிட்ட நிலையில், அயோத்தி நரகத்தை இராவணனுக்குத் தருங்கருத்தை இராமன் கொண்டிருந்தான் என்னும் கருத்தில் கம்பர் குறிப்பிட்டதாக உரையாசிரியர்கள் கட்டுமிடம் நோக்கத்தக்கது என்ற திறனாய்வுரை சுவைத்து மகிழத்தக்கது.

உழுகின்ற கொழு முகத்தில் உதிக்கின்ற கதிரொளி போல் தொழுந்தகைய நன்னலத்துப் பெண்ணரசியாம் சீதை மீதுகொண்ட காதல் நோயால் தோற்ற இராவணன் சீதை தோன்றிய பூதலம் என்னும் கங்கை தன்னையே நோக்கிய நயம் குறிப்பிடத்தக்கது. பிறவற்றை நோக்காது ஒன்றையே நோக்கினான் இராணவன் என்ற கருத்து அவனுடைய மனக்குழப்பத்தையும் தோல்வியால் அடைந்த நாணத்தையும் விளக்கி நிற்கின்றது. கொற்றவையின் வெற்றி நோக்கால் இதுவரை முக்கணான் முதலினோரைப் புக்க போரெல்லாம் வென்று நின்ற இராவணன் தாயினும் தொழத்தக்காள் மேல் தங்கிய காதல் நோயாலும், இராமன் முனிவாலும் அவ்வெற்றி நோக்கை இழந்து விடுகின்றான்.

குனிந்த தலையோடும் துவண்டு உடலோடும் தன் அரண்மனையைச் சென்றடைந்த இராவணன் போர்க்களத்தில் நிகழ்ந்தவற்றை மாலியவானிடம் தெரிவிக்கின்றான். பங்கம் வந்ததுற்றது அன்றி பழியும் வந்துற்றது என்று சொல்லி வருந்தி இலக்குவனின் வில்லாற்றல், அனுமனின் போர்த்திறம் இராமனின் அம்பின் சீர்மை ஆகியவற்றை எடுத்துரைத்தான். இராமனின் திருமேனியழகையும் பெரும்போர் வீரத்தையும் சீதை கண்டிருத்தலால் போய் இனித் தெரிவது என்னே என்று சொல்லி 'அவளுக்கேற்றவன் அவனே' என்ற உள்ளுணர்வை உணர்ந்தவன் ஆகின்றான்.

***"வாசவன், மாயன், மற்றை மலருளோன், மழுவாள் அங்கை***
***ஈசன் என்று இனைய தன்மை இனிவரும் இவரால் அன்றி***
***நாசம் வந்து உற்றபோதும் நல்லது ஓர் பகையைப் பெற்றேன்;***
***பூசல் வண்டு உறையும் தாராய்! இது இங்குப் புகுந்தது என்றான்" (கும்பகர்ணன் வதைப்படலம், பா.7302)***

பகைவனைப் பற்றித் தெரிந்து கொண்டுள்ள இராவணன் நாசம் வந்துற்றபோது நல்லதோர் பகையைப் பெற்றேன் என்கின்றான். பகைவனை மனம் திறந்து பாராட்டும் நற்பண்பு இராவணனின்பால் இருந்ததைக் கம்பர் பல இடங்களில் சுட்டிச் செல்கின்றார் என்ற பரந்துபட்ட தன் காப்பியப்புலமையை சுப்புரெட்டியார் உணர்த்துகின்றார்.

முதற்போரில் தோல்வியுற்றதால் இராம இலக்குவரது போர்வலிமை அறிந்து உணர்ந்து மனம் மாறி மாலியவானிடம் பேசிய இராவணன், மகோதரனால் மீண்டும் பழைய அழிவு நிலைக்கே தள்ளப்படுகின்றான். இதனை, 'இறுதியே இயைவது ஆனால் இடை ஒன்றால் தடை உண்டாமோ?' எனக் காட்டுகின்றார். இராவணனின் ஏவலால் வீரர்கள் கும்பகர்ணனைத் துயில் எழுப்ப, தன்முன்னர் நின்று கும்பகர்ணனை நோக்கி,

***"வானரப் பெருந் தானையர், மானிடர்***
***கோ நகர்ப் புறம் சுற்றினர்ளு கொற்றமும்***
***ஏனை உற்றனர்; நீ அவர் இன் உயிர்***
***போனகத் தொழில் முற்றுதி, போய் என்றான்"***
***(கும்பகர்ணன் வதைப் படலம் : பா. 7349)***

தான் அப்பெரும் படைகளுடன் போரிட்டுத் தோற்றுவிட்டேன் என்பதைக் கூறாமல் அவர்களுடைய உயிரைப் போக்குவாய் எனக்கட்டளையிடுகின்றான். கற்பின் கனலியாகிய சீதையை விட்டு விடுமாறு முன்னரே கூறியபோதும் கேட்காத தன் அண்ணனிடம், வேறு இனி வீடும் இல்லை என்றும், அறம்பல செய்து தவமும் செல்வமும் வலிமையும் பெற்ற நீ அறம் அல்லது செய்து அழிகின்றாய் என்றும்; இராமனின்பால் பெருவிருப்பம் கொண்டுள்ள உன் தம்பியாகிய வீடணனுடன் நட்புப்பூணுதலே உயிர்பிழைக்க ஒரே வழி என்றும் அறிவுரை கூறுகின்றான்.

பகைவர் வலியறியாமை, தன்வலி வியத்தல், அறிவுரை கூறுவதை ஏற்காமை ஆகிய இராவணனது மனப் பண்புகள் அவன் அழிவுக்குக் காரணங்களாகின்றன. கும்பகர்ணனின் அறிவுரையை ஏற்காது சினங்கொண்ட இராவணன்,

***"மானிடர் இருவரை வணங்கி, மற்றும் அக்***
***கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு, உய்தொழில்***
***ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்;***
***யான் அது புரிகிலேன்; எழுக போக! என்றான்"***
***(கும்பகர்ணன் வதைப்படலம், பா.7362)***

என்றவாறு புகழை விரும்பாமல் வாழ்வை விரும்பும் நீயும் உன் தம்பியும் என் முன்னால் நிற்க வேண்டாம் என்று சினந்து பேசுகின்றான். இராவணன் அனைத்து நாட்டமும் நீரும் குருதியும் தேக்கப் பிற உறவினர் இரங்கி ஏங்கக் கும்பகர்ணன் வாயிலை அடைந்தான் எனக்காட்டுமிடத்து, பின்வரும் செயலுக்கு முன்னறிவிப்புச் செய்வது போல் தெரிகின்றது என்று காப்பியக் கதைப்போக்கின் தன்மையை ஆசிரியர் தெளிவாக்குகின்றார்.

போர்க்களத்தில் இறங்கும் முன் கும்பகர்ணனை இராமனிடம் சென்று சேர்க்கக் கருதிய வீடணனை நோக்கி, "நானும் இராவணனும் இலங்கையும் அழிவது உறுதி; ஆனால் நீ அறத்தின் வடிவமாகிய இராமனிடம் அடைக்கலம் அடைந்து விட்டாய் ஆதலால் அறத்தின்

பக்கமே நில். அவ்வறமே உன்னைக் காத்து இலங்கை அரசையும் உனக்களிக்கும்” என்று சொல்லி மறுத்து விடுகின்றான். சுக்கிரீவன், அனுமன், இலக்குவன் ஆகியோரோடு போரிட்டு இறுதியில் இராமனின் கை அம்புக்கு இரையாகி மாண்டு போகின்றான். தன் சகோதரன் அறமல்லாத செயலைச் செய்தபோது வலிமையாக அச்செயலைத் தடுத்து நிறுத்தவும் முடியவில்லை; வீடணனைப் போல அண்ணனைத் துறந்து வெளிவரவும் முடியவில்லை; இறுதியில் செஞ்சோற்றுக் கடனுக்காகத் தன்னையே இழந்து மறைந்து போகின்றான் கும்பகர்ணன் என்ற ஆசிரியரின் கருத்து நோக்கத்தக்கது.

## காமமும் வீரமும் - எதிர்நிலை நோக்கு

மாயா சனகப் படலத்தில் காம உணர்ச்சியோடு வந்த வீரம் குன்றி மானம் குறைபட நிற்கும் இராவணனின் காதில் போரில் வீரமும் மானமும் இழுக்கா மாவீரனின் மரணம் விழுந்தது. காம விருப்பமும், சோக மரணமும் அடுத்தடுத்து ஒரே நேரத்தில் நிகழுமாறு அமைத்துச் செல்கின்றான் கம்பநாடன். “திறம் திறம் ஆக நின்ற கவிப்பெருங் கடலைச் சிந்தி, இறந்தனன் நும்பி; அம்பின் கொன்றனன் இராமன்” (7706) என்னும் உரை கேட்டு பாரொடும் பொருந்தி நின்ற மாமரம் வேரொடு பறித்து வீழ்வது போல வீழ்ந்தான். கும்பகர்ணன் தனக்காக இறந்தான் என்பதைக் கேட்டு தம்பியோ, தும்பியோ, நம்பியோ, எம்பியோ என்று புலம்பி அரற்றிப் பாசத்தால் துடித்தான்.

இராவணனின் துயரத்தைக் கண்ட அவன் மகன் அதிகாயன் மானமும் சீற்றமும் மிக்கெழத் தான் சென்று பகை வென்று வருவதாகக் கூறி, “உன் தம்பியைக் கொன்ற இராமனுக்கு அவன் தம்பியைக் கொன்று அவலத்தை உண்டாக்குவேன்” என்று வஞ்சினம் கூறி அரக்கர் பெரும்படை சூழ போருக்குச் செல்கின்றான். இலக்குவனின் பிரம்மாத்திரத்தினால் அதிகாயன் வீரமரணம் புகுந்துள இறையும் போதா ஆக்கிய போரின் ஐயா! ஆதிகாயன் முதல்வர் ஆய கோக்குலக் குமரர் எல்லாம் கொடுத்தனர் ஆவி என்று இராவணனுக்கு அறிவிக்கப்பட்டது.

> ***“ஏங்கிய விம்மல் மானம், இரங்கிய இரக்கம் வீரம்,***
> ***ஓங்கிய வெகுளி துன்பம் என்று இவை ஒன்றற்குஒன்று***
> ***தாங்கிய தரங்கம் ஆகக் கரையினைத் தள்ளித் தள்ளி,***
> ***வாங்கிய கடல்போல் நின்றான் - அருவிநீர் வழங்கு***
> ***கண்ணான்” (அதிகாயன் வதைப் படலம், பா.7988)***

பெண் என்ற பெயர் கொண்ட பொருள்களை எல்லாம் பிளந்து அழிப்பேன் என்று நினைப்பான்; புண்ணில் தீப்புகுந்தது போலமான உணர்வில் மனம் புழுங்குவான்; தனக்குத் துன்பம் வருகிற போது பெண்ணாசையை மறுத்தலும் வெறுத்தலும் செய்யும் இராவணன் பிறகு அதை மறந்தவனாகிக் காமப்பித்துக் கொண்டு செயல்படுகின்றான். அதிகாயனின் இழப்பானது இலங்கை நாட்டிற்கு,

இராமன் காடேகிய போது உலகம் அடைந்த துன்பத்தைப் போன்றிருந்தது. அங்குத் தோன்றிய அழுகுரலோசை முழுமதி நாளின் கடல் ஓசையை ஒத்திருந்ததாகக் காட்டுகின்றார் கம்பர் என்று சுட்டிச்செல்கின்றார் ஆசிரியர்

## தொகுப்புரை

தான் கற்றுணர்ந்த நூலறிவைத் தடையின்றி எழுதிச்செல்லும் பாங்கில் சுப்புரெட்டியார் மடைதிறந்த வெள்ளம் என்றுதான் சொல்ல வேண்டும். கம்பராமாயணத்திலும், ஆழ்வார் பாசுரங்களிலும் அவருக்கிருந்த மிக்கபுலமைத்திறத்தையும், ஈடுபாட்டையும், அவற்றிற்கிடையே பண்பாட்டைக் கட்டிக்காக்க வேண்டும் என்ற பெருவிருப்பத்தையும் அறியமுடிகின்றது. கம்பரை முழுமையாக வாசிக்க இயலாதவர்கள் சுப்புரெட்டியார் திறனாய்வு நூல்களை வாசித்துச்சுவையை அனுபவிக்க முன்வந்தால் கம்பனின் எண்ணத்தை முழுமையாக அறிந்து கொள்ள முடியும் என்று சொன்னால் அது மிகையாகாது.

# 78. ந.சுப்புரெட்டியாரின் அறிவியல் தமிழ் - பொதுப்பார்வை

**முனைவர் பொருநை. க. மாரியப்பன்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை*
*திராவிடப்பல்கலைக்கழகம்*
*குப்பம் - 517 425*
*சித்தூர் மாவட்டம், ஆந்திரப் பிரதேசம்*

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறிவியல் கருத்துக்களை அறிவியல் நோக்கில் ஆராய்ந்தவர் சுப்புரெட்டியார். ‘அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியம் சமயம் தத்துவம்’ என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவினைச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. ந. சுப்புரெட்டியாரின் அறிவியல் தமிழ் குறித்த செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

## அறிவியல் வகைப்பாடு

வானியல், சோதிடம், வானவியல், பொறியியல், உயிரியல் மருத்துவம், கணிதம், ஊடகம் என்ற பிரிவின்கீழ் சுப்புரெட்டியாரின் அறிவியல் வகைப்பாட்டைப் பிரிக்கலாம்.

## வானநூல் துறை

சங்க இலக்கியங்களின் வழியாக வானநூல் கருத்துக்களை விளக்கியுள்ளார். கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் பெரும்பாணாற்றுப்படை வரிகளைக் கொண்டு கோள்களின் இயக்கத்தால் இயற்கை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதை சுட்டிக்காட்டுகிறார். அதற்கான வரிகள் கீழே,

***“மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி***
***மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து***
***ஆனா விருப்பிற் றானின் றூட்டி***
***மங்கும் வானத்துத் திங்கள் எங்கும்”.***

பொதுவாக விடிவெள்ளி தெற்கே தோன்றினால் மழைப் பெய்யாது என்ற நம்பிக்கை மக்களிடம் உண்டு. இந்த நம்பிக்கையைப் புறநானூற்றுப் பாடல் வழிக் காட்டியுள்ளார்.

***"வெள்ளி தென்புலத் துறைய விளைவயல்***
***பள்ளம் வாடிய பயனில் காலை"***

குறிப்பிடுகிறது. இதைப் போலவே சிலப்பதிகாரத்திலும்,

***"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றியும்***
***விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்"***

என்ற வரிகள் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். கரியவன் என்றால் சனி, கரியவன் புகைதல் என்றால் இடபம், சிம்மம், மீனம் போன்ற கோள்களோடு மாறுபடுதலாகும். சனி தனக்குப் பகையாகிய சிம்மராசியில் புகுந்தால் உலகிற்குப் பெருந்தீங்கு ஏற்படும் என்ற உண்மையை இவ்விடத்தில் யோசித்துப்பார்க்கலாம்.

## சோதிடம்

சோதிடத்தை அறிவியல் என்பவர்களும் உண்டு. அறிவியல் இல்லை என்று சொல்பவர்களும் உண்டு. சுப்புரெட்டியார் சோதிடத்தை அறிவியல் வகைப்பாட்டிற்குள் வைக்கிறார்.

புறப்பொருள் வெண்பாமலை சோதிடத்தை, 'விளைவெல்லாம் கண்ணியுரைப்பான் கணி' என்கிறது. புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் ஒரு சோதிடராகத் திகழ்ந்தவர். இவர் ஒருநாள் வானத்தில் ஒரு விண்மீன் தீப்பறக்கக் காற்றில் கீழே வீழ்ந்ததைக் கண்டார். கார்த்திகை, அனுஷம், உத்தரம், மிருகசீரிடம் முதலிய விண்மீன்களின் நிலையினைக் கணித்தார்.

எரிமீன் நிகழ்ச்சிக்குப் பின்னர் ஏழாம் நாளில் அரசன் இறப்பான் என்று உணர்ந்தார். அந்த மன்னனோ புலவரை ஆதரிப்பவன். கோச்சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஆவான். புலவர் பெரிதும் கவலை அடைந்தார். புலவர் கணித்ததைப் போலவே ஏழாம் நாள் மன்னன் உயிர் துறந்தான். இதற்கு அடையாளமாக யானைகள் துதிக்கையை நீட்டி தூங்கின. முரசுகள் கிழிந்தன. வெண்கொற்றக் குடை சாய்ந்தது. குதிரைகள் சடமாய் கிடந்தன. இந்நிகழ்வுகள் மன்னனின் இறுதி முடிவைக் காட்டின. இதனை,

***"ஆடிய அழல்சேர் குட்டத்து***
***ஆரிருள் அரை இரவின்***
***முடப்பனையத்து வேர்முதலாக்***
***குடைக்குளத்துக் கயம்காயப்***
***ஒரு மீன் விழுந்தென்றால் விசும்பினானே***
***அதுகண்டு யாமும் பிறரும் பல்வேறு இரவலர்***
***பறையிசை அருவி நன்னாட்டு பொருநன்"***

என்றபாடல் உணர்த்துகிறது. மேற்காணும் பாடலில் அழல்சேர் குட்டம் என்பது கார்த்திகை நாள். கார்த்திகையின் அதிதேவதை அக்னி. ஆடு முதல் மீன் என்பது மேஷம் முதல் மீனம் வரையுள்ள பன்னிரெண்டு இராசிகளைக் குறிக்கும். அசுவினி முதல் ரேவதி வரை உள்ளவை

இருபத்தேழு நட்சத்திரங்கள் ஆகும். இதனைப் பற்றி இப்பாடல் வலியுறுத்தியுள்ளது.

## பிரபஞ்சம் குறித்த சிந்தனை

பிரபஞ்சம் பற்றிய அறிவியல் சிந்தனையைத் தமிழ் இலக்கியங்களின் துணை கொண்டு சுப்புரெட்டியார் விளக்கியுள்ளார். வெட்டவெளியும் அண்டங்களும் சேர்ந்ததே பிரபஞ்சம் ஆகும். விண்மீன் மண்டலங்களும் வால்நட்சத்திரங்களும் விண்கற்களும் கணக்கில் அடங்காதவை. அவை சூரிய மண்டலத்தைச் சுற்றி வருகின்றன. இதன் தோற்றம் குறித்த செய்திகளை அறிவியலாளர்கள் ஆராய்ந்து வெளியிட்டுள்ளனர்.

***“அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்***
***அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி***
***ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்***
***நூற்றொரு கோடியின் மேற்பட்டு விரிந்தன”***

என்ற பாடல் வரிகளைக் கொண்டு பிரபஞ்சக் கருத்துக்களை முன்வைக்கிறார். நெருப்புக்கோளமாக வாயு நிலையில் இருப்பது சூரியன். அதனிலிருந்து சிதறி வந்து குளிர்ந்து இறுகி இருப்பது சந்திரன். அண்டம் என்பது உருண்டை அல்லது முட்டை வடிவில் இருப்பது. இந்தப் பேரண்டம் எண்ணற்ற கோளங்களைக் கொண்டது அவற்றை முழுமையாகத் தெரிந்து கொள்ள இயலாது. இந்தக் கோளக்காட்சியை மாணிக்கவாசகர்,

***“இல் நுழை கதிரின் துண்அணுப் புரைய***
***சிறிய ஆகப் பெரியோன் தெரியின்”***

என்கிறார். கோளங்கள் வானத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன. சிறிய அணுவிற்கும் பெரிய அண்டத்திற்கும் அமைப்பு ஒன்றே ஆகும். வீட்டினுள் காற்றில் மிதந்து கொண்டிருக்கும் தூசியைப் போன்றவை பூமி, சந்திரன், சூரியன் போன்ற கோள்களாகும். தூசிகள் நமக்கு அற்பானவையாகத் தோன்றுவது போல் சிவனுக்கு அண்ட கோளங்கள் அற்பமானவை. சிவனைப் பற்றிய பேருணர்வு நமக்கு ஏற்படும்போது நம் உடலைப் பற்றியோ, இந்த நிலவுலகத்தைப் பற்றியோ நமக்கு எவ்விதக் கவலையும் தோன்றாது. இப்படி திருவாசகத்தைக் கொண்டு அண்டத்தின் தன்மைகளை சுப்புரெட்டியார் விளக்கியுள்ளார்.

## பாரதியின் அறிவியல் சிந்தனை பற்றிய சுப்புரெட்டியார் கருத்து

பாரதியாரின் பாடல்களைக் கொண்டு அறிவியல் கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார் சுப்புரெட்டியார். - பாரதியாரின் பாடல் கண்ணன் காண்டீபனுக்குக் காட்டிய விசுவரூப தரிசனம் போல், பரவெளியில் உள்ள அண்டகோளங்களை ஒருங்கே காட்டுகின்றது. இந்த அண்ட கோளங்களின் அமைப்பை,

*"விண்டு ரைக்க அறிய அரியதாய்*
*விரிந்த வான வெளியென நின்றனை*
*அண்ட கோடிகள் வானில் அமைந்தனை*
*அவற்றில எண்ணற்ற வேகம் சமைத்தனை"*
*"மண்ட லத்தை அணுஅணு ஆக்கினால்*
*வருவ தெத்தனை அத்தனை யோசனை*
*கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை*
*கோல மே! நினைக் காளியென் றேத்துவேன்"*

என்று விளக்குவதுடன் அவற்றிடையே உள்ள தொலைவுகளையும் கற்பனை மூலம் கணக்கிட்டுக் காட்டுவார். ஒரு மண்டலத்தைப் பொடியாக்கி, அந்தப் பொடிகளையும் அணுக்களாக்கினால் வரும் தொகை எவ்வளவோ அவ்வளவு தூரத்தில் பல்வேறு அண்டங்களையும் இயங்கச் செய்கின்றார். இத்தகைய கோலத்தை அமைத்த இறைவனைக் 'காளிதேவியாகக்' காண்கிறார். 'சக்திதாசன்' என்றும் தன்னைக் கூறிக்கொள்கிறார். கவிஞர் புறமுக ஆற்றல் என்ற இறைவனது ஆணையால் இக்கோள்கள், அண்டங்கள், வழிவிலகாமல் சுற்றி வருகின்றன. ஒவ்வொரு கோள்களுக்கு இடையிலும் பல்லாயிரக்கணக்கான மைல் இடைவெளிகள் உள்ளன. இந்த இடைவெளியில் தான் சில சமயம் வால்மீன்களையும் எரிமீன்களையும் காண்கின்றோம் என்கிறார் சுப்புரெட்டியார்.

## பொறியியல்

இக்காலத்தில் தனித்ததொரு அறிவியல் துறையாக வளர்ந்து வரும் பொறியியல் அறிவு குறித்த சிந்தனைகள் தமிழ் இலக்கியங்களில் பரவலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை சுப்புரெட்டியர் எடுத்துக்காட்டியுள்ளார். சீவக சிந்தாமணியில் விசயை ஏறிச் சென்ற மயிற்பொறியும், பெருங்கதையில் சுட்டப்பெறும் யூகியால் செய்யப்பட்ட எந்திர யானையும், புறநானூற்றுப் பாடலில் இடம் பெறும் 'வலவன் ஏவா வான ஊர்தியும்' போன்ற இதற்குச் சான்றுகள் என்கிறார்.

கம்பராமாயணத்தில் காட்டப்பெறும் புட்பக விமானம், விமானம் பற்றிய கற்பனையானது இலக்கியத்தில் பதிவு செய்ப்பட்டதற்குப் சான்றாகும். பொறியியல் அறிவு இன்றைய கட்டிடக் கலைகளிலும் சிற்பக்கலைகளிலும் சிறப்பாகப் பயன்படுத்துவதைப் போலவே அன்றைய அணை கட்டுதல், கோயில் கட்டுதல் முதலானவற்றிலும் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று சுப்புரெட்டியார் கருதுகிறார்.

இதனை, 'திருச்சிக்கு அருகேயுள்ள காவிரி நதியின் குறுக்கே கட்டப்பெற்றுள்ள கல்லணை கரியாற்பெருவளத்தான் காலத்தில் கட்டப்பெற்றதாய்க் கூறுகின்றார். தஞ்சைப் பெரிய கோயிலின் மாபெரும் கோபுரமும், கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள கோபுரமும் முறையே இரண்டாம் இராசராசன் காலத்திலும் அவன் திருக்குமரன் இரண்டாம் இராசேந்திரன் காலத்திலும் கட்டப்பெற்றனவாய் வரலாற்றால்

அறிகின்றோம். இவற்றால் பொறியியலும் சிற்பக்கலையும் அற்புதமாய் வளர்ச்சி பெற்றுள்ள நிலைகளைக் காண்முடிகின்றது. அவை சுட்டப்பெற்ற தொழில் நுட்ப நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லை' என அவர் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது. இன்று கட்டப்படும் பெரும் மாளிகைகளுக்கு அடிப்படையாக இவை முன் ஆதாரங்களாக விளங்குகின்றன. கம்ப இராமாயணத்தில் இலங்கை மாநகரில் பல்லடுக்கு மாளிகைகள் இருந்தன என்பதற்கு யுத்தகாண்டத்தில் ஊர்தேடு படலத்தில் ஒரு பாடல் சான்றளிக்கிறது. அப்பாடல்,

***"மெச்சபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியில்என்***
***இச்சையினுள் சென்மா எடுக்கவா - மச்சாகூர்***
***மாகோலா சிங்காவா மாராமா ராமாரார***
***மாகோபா லாமா லாய்"***

இயற்கையாகப் பொன்னால் செய்யப்பெற்ற மணிகள் பதிக்கப்பெற்றுள்ள மேகமண்டலத்திலும் மேலாக உயர்ந்து திங்கள் மண்டலத்தையும் எட்டும் மாடமாளிகைகள் இப்பாடலில் குறிக்கப் பெறுகின்றன. அக்காலத்துக் கட்டடக்கலை பற்றிய பொறியியல் அறிவை இதனால் அறியமுடிகின்றது. இவ்வாறு பொறியியல் அறிவும் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றிருப்பதை சுப்புரெட்டியர் தம் கருத்தை வெளியிட்டுள்ளார்.

## உயிரியல்

தமிழ் இலக்கியங்களில் உயிரியல் சிந்தனைகள் மிகுதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு வெளிப்படுத்தும் சிந்தனை இன்று குறைந்துவிட்டது. முதன் முதலில் இதனை இனங்கண்டவர் சுப்புரெட்டியார்.

டார்வினின் 'கூர்தலறக் கோட்பாடு' என்னும் உயிரியல் கொள்கை, உயிர்களின் தோற்றம், வளர்ச்சி குறித்ததாகும். இக்கொள்கையில் அறிவியல் அறிஞர்களிடம் ஒருமித்த கருத்து வெளிப்பாடு இல்லை. ஆயினும் இக்கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். மாணிக்கவாசகரின் திருவாசகம் சிவபுராணத்தில் இக்கோட்பாடு குறித்த சிந்தனை பயின்று வருவதை சுப்புரெட்டியார் குறிப்பிட்டுள்ளார்.

***"புல்லாகிப் பூடாய்ப் புழவாய் மரமாகிப்***
***பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்***
***கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்***
***வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்***
***செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்***
***எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்"***

என்ற பாடலைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வானியல்

வானியல் சார்ந்த அறிவியல் சிந்தனைகளும் தமிழ்

இலக்கியங்களில் பதிவுச் செய்யப்பட்டுள்ளன. இதனையும் சுப்புரெட்டியார் கூறியுள்ளார்.

உயர செல்லச் செல்லக் காற்று எடையற்று எளிதாக இருக்கும் என்பது இன்றைய விண்வெளி ஆராய்ச்சியால் பெறப்படும் அறிவியல் உண்மை. கடல்மட்ட அளவில் இருப்பது மைல் உயரத்தில் (1/1000) ஆயிரத்தில் ஒரு பங்காகிவிடுகின்றது என்பது விண்வெளி ஆராய்ச்சி முடிவாகும். இலங்கையிலுள்ள மாடமாளிகைகள் உயர்ந்து வானுலகை எட்டும்படியாக உள்ளன. மேருமலையும் வருத்தக் கூடிய பேராற்றல் கொண்ட காற்று அந்த உயரத்தில் தென்றலாக வீசுவதாகக் கம்பர் பாடுகிறார். மிக்க வலிமை உடைய காற்று கடவுளும் இராவணனிடம் கொண்ட அச்சத்தால் தென்றலாக வீசுவதாகக் கம்பன் பாடிய கற்பனையில் இந்த வானியல் உண்மை புலப்படுகின்றது.

***நாகா லயங்களொடு நாகர்உல கும்தம்***
***பாகார் மருங்குதுயில் என்னஉயர் பண்ப***
***ஆகாயம் அஞ்சஅகன் மேருவை அணுக்கும்***
***மாகால் வழங்குகிற சிறுதென்றல்வரு கின்ற***

என்ற பாடலால் அறியலாம்.

## முடிவுரை

மருத்துவம், கணிதம், காந்த சிகிச்சை முறை, ஊடகங்கள் என்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் சுப்புரெட்டியர் தன் நூல்களில் எழுதியும் விளக்கியும் உள்ளார். அதனைக் கூற புகின் பக்க எல்லை மிகும். தமிழ் வளர்த்த சான்றோர்களில் எண்ணத் தக்கவர் சுப்புரெட்டியார் அவரின் அனைத்துப் படைப்புகளையும் தமிழ் உலகத்தார் படித்துப் பயன்பெற வேண்டும். இதுவே நம் கடப்பாடு ஆகும்.

# 79. ந.சுப்புரெட்டியாரின் பாண்டி நாட்டுத் திருப்பதிகள் : ஒரு மீள்பார்வை

**முனைவர் சு. ஞானப்பூங்கோதை**
*இணைப்பேராசிரியர்*
*தவத்திரு சாந்தலிங்க அழகளார் கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 010.*

பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் மணிவிழா வெளியீடு (1977) 'பாண்டிநாட்டுத் திருப்பதிகள்' எனும் நூலாகும். இந்நூல் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திவ்விய தேசங்களுள் தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டில் உள்ள பதினெட்டுத் திவ்விய தேசங்களைக் குறித்ததாக அமைவது.

***மூர்த்தி தலம் தீர்த்தம்***
***முறையால் தொடங்கினார்க்கோர்***
***வார்த்தை சொலச் சற்குருவும்***
***வாய்க்கும் பராபரமே***

எனும் தாயுமானவர் வாக்கிற்கேற்ப, ந.சுப்புரெட்டியார் எம்பெருமான் எழுந்தருளியுள்ள திவ்விய தேசங்களைச் சென்று கண்டுகளித்தவர், அவர் நம்மையும் தமது எழுத்தாற்றலால் தம்மோடு அழைத்துச் சென்று திவ்விய தரிசனம் காணச் செய்ய வைக்கிறார்.

பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டு ஆகும் கீதையில் 18 அத்தியாயங்கள் 18 யோகங்களைச் சொல்கிறது. அதுபோன்று 18 தலங்களுக்கும் 18 கட்டுரைகளை ஆசிரியர் படைத்துள்ளார். திருமந்திரத்தின் சொல்லை பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம். அர்ச்சை என்ற எம்பெருமானின் ஐந்து நிலைகளை விளக்கிச் சொல்கிறது இந்நூல். மேலும் வைணவ நூல்களில் ஆழங்கால்பட்டவர் என்பதையும், அவருடைய அனுபவத்தையும் ஒவ்வொரு எழுத்தும் சொல்லும் உணர்த்துகின்றன.

ஆழ்வார்களின் பக்தியுணர்ச்சி, அவர்களது இறையனுபவம், அவர்களது பாசுரங்களின் சொல்வளம், அகப்பொருள் துறைகள் ஆகியவற்றை இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது.

ஒவ்வொரு திருத்தலத்தின் பெயர்க்காரணம், புராண வரலாறு, பாசுரங்கள் வாயிலாக இயற்கை வளம், கோயில் அமைப்பு, அமைந்துள்ள இடம், செல்லும் நிலை, மங்களாசாசனம் செய்த ஆழ்வார்கள், கோயிலில் வழிபடும்முறை, அத்தலத்துடன்

தொடர்புடைய ஆழ்வார்கள். அவர்களது பாசுரங்கள், பாடும் முறைமை, ஆசிரியர் கண்ட புதிய பொருள்முறை, பெரிய வாச்சான்பிள்ளையின் வியாக்கியானம், கல்வெட்டுச் செய்திகள், வைணவ தத்துவம், அகத்துறைச் செய்திகள் ஆகியவற்றை விரிவாக நூல் எங்கும் காணலாம். அவற்றுள் ஒருசிலவற்றை மட்டும் எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

பாண்டிநாட்டுத் திருப்பதிகளுள் முதல் தலம் திருக்கோட்டியூர். திருக்கோட்டியூர் என்று கூறினாலே வைணவ பரமாச்சாரியார் இராமாநுசரின் கருணை நினைவில் வரும். மக்களிடம் வேறுபாடு காணாது கோயிலின் மதில்மீதிருந்து 'திருமந்திரத்தை' 'நலம் தரும் சொல்லை' வாரி வழங்கிய வள்ளல். நரசிங்கரின் திருமுன்புதான் திருக்கோட்டியூர் நம்பி இராமானுசருக்குத் திருமந்திரத்தின் பொருளை உபதேசித்ததாக வரலாறு. இராமாநுசரின் செயற்கருஞ்செயலை எண்ணி பேராசிரியர் பயணத்தைத் தொடங்குகிறார்.

## பெயர்க்காரணம்

திருக்கோட்டியூர் மணிமுத்தாற்றின் கரையில் கதம்பமுனிவரின் புண்ணிய ஆசிரமமாக இருந்தது. இங்கு இரணியனை அழிப்பதற்கு மும்மூர்த்திகளும் தேவர்களும் கூட்டமாகக் கோஷ்ட்டியாகச் சேர்ந்து ஆலோசனை செய்த இடம் ஆதலால் கோட்டியூர் எனப்பட்டது. ஆனால் ந.சுப்புரெட்டியார் வேறு பெயர்க்காரணத்தை உரைக்கின்றார்.

## பொருள் காணும்முறை

திருக்கோட்டியூர் என்பதைத் திருக்கு+ஓட்டி+ஊர் எனப்பிரித்தும், 'பிறவியில் செய்த வினைகளை+நீக்கும் எம்பெருமான் + கோயில் கொண்டுள்ள தலம்' என்று நம் மனம் எண்ணிப் பொருள் காண்கிறது. மேலும், கோட்டம்-கோயில், கோயிலையும் விமானத்தையும் கொண்ட ஊர் என்று பொருள் கொள்ளவும் முயல்கின்றது. இன்னும் கோஷ்டி+கூட்டம் வித்துவான்கள் கூட்டம் நிறைந்திருக்கும் ஊர் என்று மூன்று வகையான பொருள் காணவும் முற்படுகிறார்.

## புராண வரலாறு

இயற்கை வளங்களை ஆழ்வார் பாசுரங்கள் வழி எடுத்துரைக்கும் புராண வரலாற்றுச் செய்திகளையும் பதிவு செய்கின்றார். புருவரன் எனும் அரசன் கங்கை நீராடச் செல்லுகையில் கதம்பமுனிவர் ஆசிரமத்தில் இறங்கி முனிவரை வணங்கினான். முனிவரது விருப்பப்படி இத்தலத்தில் அந்தணர் குடியிருப்பை (அக்கிரகாரம்) ஏற்படுத்தினான். கங்கைக் கரையிலிருந்த 1500 பாகவதர்களை அழைத்துக் கொண்டு வந்து நகர் அமைத்து அவர்களைக் குடியேறச் செய்தான் என்ற வரலாற்றினை எழுதுகிறார்.

## வைணவர்கள் சிறப்பு

இங்ஙனம் நிறுவப்பெற்ற ஊரில் உள்ள வீடுகளில் வாழும்

வைணவர்கள் பயனில்சொல் பாராட்டுவதில்லை. நாள்தோறும் வைணவர்கட்கும் அடியார்கட்கும் செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் உத்தமசீலர்கள். நான்மறைகளைத் தவறாது ஓதிக்கொண்டு காலம் போக்குபவர்கள் என்று பெரியாழ்வார் கருத்தினைக் காட்டாகக் குறிப்பிடுகின்றார். மேலும். இவர்கள் உடல், பொருள், உயிர் ஆகியவற்றால் பாகவத கைங்கரியத்தை மேற்கொண்டவர்கள். ஐந்து மாபெரும் வேள்விகளை விடாது மேற்கொள்வர், எம்பெருமான் திருக்குணங்களில் ஆழற்கால்பட்டும் விழா எடுத்தும் இரவு பகலென ஓயாது ஆடியும் பாடியும் மகிழ்ந்து பொழுது போக்குபவர்கள் என்று வைணவர்கள் செயல்களை எடுத்துக்காட்டுகின்றார்.

## திருக்கோயில் அளவு

திருக்கோட்டியூர் திருக்கோயில் நெடுந்தொலைவு வரை காணக்கூடிய திருக்கோபுரத்துடனும் அட்டாங்க விமானத்துடனும் திகழ்கிறது. கோயில் பெரியது, கீழ்மேல் நீளம் 472 அடி, தென்வடல் 270 அடி, இராசகோபுரம் உயரம் 85 அடி. இதன் அடிவாரம் கீழ்மேல் 40 அடி, தென்வடல் 50 அடி, திருவாசல் 10அடி, கோயிலின் முதன்மையான பகுதி அட்டாங்கவிமானமே. இதன் உயரம் 96 அடி. உச்சியில் உள்ள தங்கக் கலசம் 5 அடி உயரம் 7அடி சுற்றளவு கொண்டது. தஞ்சைக் கோபுரத்தைப் போன்று விமானத்தின் நிழலும் தரையில் விழுவதில்லை.

## அட்டாங்க விமான அமைப்பு

மூலைக்கு இரண்டாக நான்கு மூலைகளிலும் எட்டு விமானங்கள் அமைந்ததால் அட்டாங்க விமானம் எனப்படும். ஒன்றன்மீது ஒன்றாக மூன்று தளங்களையுடைய இந்த விமானத்தின் மேல்தளத்தில் திசைக்கொன்றாக எட்டுத் திசைகளிலும் எட்டு விமானங்கள் இருப்பதைக் காணலாம். எட்டு விமானங்களும் திருமந்திரத்தின் எட்டெழுத்துக்கள் போலவும், விமானத்தின் மூன்று தளங்களும் திருமந்திரத்தின் மூன்று பதங்கள் போலவும், மூன்றெழுத்துக்களுடன் கூடிய பிரணவம் போலவும் அமைந்திருப்பதாக ஐதிகம் என்ற கருத்தினைச் சுட்டிச் செல்கின்றார்.

திருக்கோட்டியூர் திருக்கோயில் மூன்று தளங்களிலும் எம்பெருமான் நின்றும் கிடந்தும் இருந்தும் திருக்கோலங்களில் எழுந்தருளியிருக்கும் காட்சியினை விரிவாக எடுத்துரைக்கின்றார். மேலும் மூன்று புறச்சுவர்களிலும் நித்தியசூரிகள், ஆழ்வார்கள், பத்து அவதாரங்க்ள ஆகியவற்றின் ஓவியங்கள் வரையப் பெற்றுள்ளன. இத்தளத்தின் முன்வாசலில் இத்தலத்தில் உடல் நீப்பவரின் ஆன்மா முக்தியடையும் நிலைகள் விரிவாக ஓவியங்களால் விளக்கப் பெற்றுள்ளன. மேலும் நரசிங்கமூர்த்தி இரணியனுடன் போரிடும் கோலமும் கொல்லும் கோலமும் கொண்ட கோர உருவங்கள் அச்சம் தரத்தக்கன என்பதால் வெளிச்சுற்றில் வைக்கப்பட்டுள்ள செய்தியினை

ஆசிரியர் குறிப்பிடுகின்றார். பெரியாழ்வாரின் பிள்ளைத்தமிழ் என்ற இலக்கிய வித்து முதன்முதலில் தோன்றிய திருத்தலமாகும் இது.

## திருக்கோளூர் திருத்தலம்

திருஅயோத்தியில் வரகவியாழ்வார் திருக்கோளூர் இறைவனைத் திசை நோக்கித் தொழக் கருதியவர் தென்திசை நோக்கினார். வானளாவிய பேரொளி கண்டு வியப்படைந்தார். மூன்று நாட்களும் தொடர்ந்து தான் கண்ட பேரொளியை அருகில் சென்று பார்த்துத் தெளிய எண்ணினார். அப்பெருஞ்சோதியைக் குறியாகக் கொண்டு நெடுவழியைக் கடந்து ஆழ்வார் திருநகரியை அடைந்தார். யோக நிலையில் உள்ள நம்மாழ்வாரின் திருமேனியே பேரொளியாகத் திகழ்ந்தது என்று அறிந்து வியந்தார்.

வியந்து நின்ற மதுரகவியார் திருமேனிக்குக் கட்புலன் உண்டோ? என்று சோதிக்க ஒரு சிறுகல்லை எடுத்துத் திருமேனியின் முன்னிலையில் போட்டார். ஒலிகேட்ட நம்மாழ்வார் திருக்கண்களை விழித்துப் பார்த்தார். வாய்ப்புலனும் உண்டோ? என்று எண்ணி 'செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்?' என்று வினவ நம்மாழ்வார். 'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்று அருளினார். அதுமுதல் நம்மாழ்வாரை ஞானகுருவாக மதுரகவியாழ்வார் ஏற்றுக்கொண்டார். பகவத் பக்தியைவிடப் பாகவத பக்தியையே சிறப்பாகக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்த செயலைக் குறிப்பிடுகின்றார் பேராசிரியர். ஒவ்வொரு தலத்துடன் தொடர்பு கொண்டுள்ள ஆழ்வார்களையும் அங்கு நடந்துள்ள நிகழ்வுகளையும் விளக்கிச் செல்கின்றார்.

## எம்பெருமான் திருப்பெயர்கள்

எம்பெருமான் ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு நிறத்தை மேற்கொள்வான் என்பது சாத்திரப் பிரமாணம். அவன் கிருதயுகத்தில் உள்ளவர்கள் சத்துவகுணம் நிறைந்தவர்களாகவும் தூய்மையான நிறத்தை உகக்குபவர்களாக இருப்பதால் பால் போன்ற வெண்ணிறத்தைக் கொள்வான். எனவே அவன் 'வெள்ளியான், எனப்பட்டான். கலியுகத்தில் எந்நிறம் கொண்டாலும் ஈடுபடுவாரின்மையால் இயற்கையான கரியநிறத்தைப் பெற்றதால் 'கரியான்' எனப்படுவான். துவார யுகத்தில் எம்பெருமான் பசுமைநிறம் கொண்டதால் 'மணிநிறவண்ணன்' என்று பெயர் பெறுவான் என ஆழ்வார் குறிப்பிட்டதைச் சிந்தித்த நிலையில் இறைவனைச் சேவிக்கின்றார் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார்.

## இயற்கையின் அதிசயம்

சீவைகுந்தத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஆண்டிற்கு இருமுறை சூரியன் வழிபாடு செய்கின்றான். சித்திரைத் திங்கள் ஆறாம் நாளும் ஐப்பசித் திங்கள் ஆறாம் நாளும் செங்கதிரவனின் ஒளிக்கதிர்கள்

கோபுரவாயில் மண்டபங்கள் கடந்து இறைவனின் திருமேனியைத் தடவிப் பொன்னிறமாக்குகின்றன. இத்தகு சிறப்பு இத்தலத்தைத் தவிர வேறிடங்களில் காண முடியாது என்பதை நூலாசிரியர் அறிவிக்கின்றார்.

## திருக்குளந்தை மாயக்கூத்தன்

திருக்குளந்தையின் எம்பெருமானின் திருநாமம் ஆசிரியர்க்குப் பல்வேறு கோணங்களில் சிந்திக்க வைக்கின்றது. ஒருநோக்கில் ஒரு குருவி பிணைத்த பிணைபோல மாயப்பிணையொன்று பிணைத்து அதிலே எல்லோரையும் மயக்கி இப்படியொரு கூத்துக் காண்பவன் என்று பொருள். மற்றொரு நோக்கில் சங்கல்பம் எனும் மாயையினால் திருவவதாரங்கள் செய்து அவற்றில் குடக்கூத்து, மரக்கால்கூத்து, குரவைக்கூத்து என்று பலவகைக் கூத்துக்களைச் செய்து தனது செய்கைகளால் நம்மை மனம் குழைந்து அவனுடன் ஈடுபடச் செய்பவன் என்று பொருள் காண்கிறார். இதுபோன்று மாயக்கூத்திற்கு நான்கு நிலைகளில் பொருள் கண்டு நெஞ்சினாலும் நினைக்கவொண்ணாத பெருமான் திருக்கூத்தில் உள்ளத்தைப் பறிகொடுக்கிறார்.

## அகச்செய்தி

ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து கொண்டு எம்பெருமானை அனுபவிக்கும்பொழுது தாய், தோழி, மகள் என்ற இம்மூவரில் ஒருவரின் தன்மையைத் தாம் அடைந்து கூற்றுகள் நிகழ்த்துவர். அதற்குத் தத்துவமும் உண்டு. சீவைகுந்தத்துத்தேவனை விரும்பிய தலைவியின் இளமை கண்டு செவிலி இரங்குதல் துறையில் அமைந்த பாடல் கருத்தினை எடுத்து விளக்குகின்றார். களவொழுக்கத்தால் கூடிப் பிரிந்த தலைமகள். தலைவனது பிரிவாற்றாது பசலை பெற்று மெலிவடைகிறாள். தலைவியோ எம்பெருமானின் திருத்துழாய் மாலையைச் சூடுவது, அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்களின் பெயர்களைச் சொல்லி மகிழ்வது முதலான செயல்களால் ஆற்றியிருக்க முயல்கிறாள். மிக்க இளம்பருவத்தாளான இவளுக்குப் பருவம் நிரம்பியவர்க்கு வருவது போன்ற தன்மை ஏன் வந்தது? என்று எண்ணுகிறாள் செவிலி. தலைவி போன்று எம்பெருமான் மீது தனக்கும் காதல் ஏற்பட்டது போன்ற பாவனையுடன் இறைவனை வணங்குகிறேன் என்கிறார் பேராசிரியர்.

## திருவானமாமலை

திருவானமாமலை தோத்தரிநாதனுக்கு நாள்தோறும் நடைபெறும் எண்ணெய்க் காப்புத் திருமஞ்சனம் இத்தலத்தின் சிறப்பாகும். ஆறுபடி நல்லெண்ணெயுடன் சிறிதளவு சந்தன எண்ணெய்ச் சேர்த்துக் காப்பு நடைபெறுகிறது. திருமஞ்சனம் செய்யப் பெற்ற எண்ணெயை ஓரிடத்துச் சேகரித்து எண்ணெய்க்கிணற்றில் விடுகின்றனர். கால்படி நல்லெண்ணெய் கொணர்ந்தால் இக்கிணற்றில் ஊற்றிவிட்டு கிணற்றிலிருந்து கால்படி எண்ணெய் எடுத்துக் கொள்ளலாம். இந்த எண்ணெய் தீராத சருமநோய் குட்டம் முதலானவற்றைத் தீர்க்கிறது.

இந்த எண்ணெயின் பெருமையை அகத்தியர் அவருடைய மருத்துவமுறையில் குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

பாண்டிய மன்னன் ஒருவன் வானவன்மாதேவி எனும் சேரகுலப்பெண்ணை மணந்து 'வானவன்' எனும் பட்டம் பெற்றான். அவன் திருக்கோயிலை எடுத்தமையால் வானமாமலை என்று பெயர் பெற்றது என்று வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிடுகின்றார்.

## கல்வெட்டுகள்

சீவைகுந்தத்துத் திவ்வியதேசத்தில் 6 கல்வெட்டுகள் உள்ளன. ஒரு கல்வெட்டு தேவர் பிரான்நாதருக்குக் கோவேரி மேல் கொண்டான் வல்ல நாட்டில் 5 மா அளவு நிலம் இறையிலியாகத் தந்தது சுட்டுகிறது. வைகுந்தத் தாயாரைப் பிரதிட்டை செய்தது பல்லவராயர். சடாவர்மன் குலசேகரர், கோனாடு கொண்ட சுந்தர பாண்டியத் தேவர் முதலியோர் செய்த திருப்பணிகளும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளதைச் சுட்டுகிறார்.

## தொகுப்புரை

பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டனுள் ஒருசிலவற்றைச் சுட்டிச் செல்வதுடன் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் நுண்மாண்நுழைபுலத்திற்கு ஒவ்வொரு உட்தலைப்பிலும் சில குறிப்புகளை எடுத்துக்காட்டுவதாய் இக்கட்டுரை விளங்குகிறது.

# 80. ந.சுப்புரெட்டியார் காட்டும் திருநாம மகிமையும் திருவடிச் சிறப்பும்



**முனைவர் க. முருகேசன்**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர்-641 029.*

கோடானுகோடி எண்ணிக்கையில் பிறப்பெடுத்துள்ள உயிர்களுக்கும் அவ்வுயிர்களின் தலைவனாகிய இறைவனுக்கும் இடையிலான உறவானது அநாதிகாலந்தொட்டுத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அறிதல், தெளிதல், உணர்தல் ஆகிய மூன்றில் உணர்தலாகிய உணர்வானது தன்னிடம் தொடர்புடையாரிடத்தில்தான் தோன்றுவது இயல்பு. ஒருவரிடத்து உணர்ச்சி தோன்ற வேண்டுமாயின் அவரிடத்துப் பலகாலும் பழகி, அப்பழக்கத்தினால் ஈடுபாடு தோன்றியிருந்தால் மட்டும் சாத்தியம். இத்தகு இலக்கணத்தை நன்கறிந்த இறையடியார்கள் இறைவனை உணர்ந்து கொண்ட தன்மையை ‘கண்ணால் யானும் கண்டேன் காண்க’ (திருமுறை., *83,58*) என்றும் ‘கரந்ததோர் உருவே, களித்தனன் உன்னைக் கண்ணுறக் கண்டு கொண்டு இன்றே’ (திருமுறை., *8:22,6*) என்றும் மணிவாசகர் பாடுவதைக் கொண்டு, குறிகுணம் ஒன்றும் இல்லாத, கற்பனை கடந்து நிற்கும் அவனைக் கருத்தால் காணக் கண்கள் கருவிகளாகின்றன. ‘கார்முகில் போல் வண்ணன் என் கண்ணனை நான் கண்டேனே’ (நாலாயிர, *2280*) என்று ஆழ்வார் உணர்ந்து கொண்ட காட்சி பிம்பம் கற்போரின் உள்ளத்தில் பதியும் வகையில் கம்பராமாயணத்தில் பாசுரங்களில் காணத்தகும் எம்பெருமானின் திருவடிப்பெருமையை ந.சுப்புரெட்டியார் எடுத்துரைத்துள்ள பாங்கினை உணர்த்திக்காட்ட இக்கட்டுரை முற்படுகின்றது.

## திருவருளும் திருவடிப்பெருமையும்

வண்டுகள் நெருங்கிப்பாடும் வயல்கள் சூழ்ந்த திருமண்டங்குடி எனும் பதியில் அவதரித்த தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச்செய்த திருமாலைப் பாசுரங்களில் எட்டெழுத்து மந்திரத்தின் மேன்மை சுட்டப்பட்டுள்ளது. இந்திரலோகத்தை ஆட்சி செய்யக்கூடிய இன்பம் கிடைத்தாலும் அதனை விரும்பமாட்டேன் எனவும், பச்சை நிறமுடைய மலை போன்ற திருமேனியும், பவளம் போன்ற செந்நிற அதரங்களும், செந்தாமரை போன்ற கண்களும் கொண்ட எம்பெருமானின் திருநாமத்தினை உச்சரிக்கும் பேற்றையே எப்போதும் விரும்புவேன் என்றும் பாடும் தன்மையை விளக்குவதற்காக ந.சுப்புரெட்டியார்

திருமாலையில் இடம்பெறும் கீழ்க்கண்ட பாடலைச் சான்று காட்டுகின்றார்.

***"காவலில் புலனைவைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து***
***நாவலிட்டு உழிதருகின்றோம் தமன் தமன் தலைகள் மீதே***
***மூவுலகு உண்டுமிழ்ந்த முதல்வா! நின் நாமம் கற்ற***
***ஆவலில் புடைமை கண்டாய் அரங்கமா நகருளானே!"***
***(திருமாலை, பா.1)***

என்ற பாசுரத்தில் ஆணவம் நீங்கப் பெறுவதற்கும் எமனை எதிர்த்து நிற்பதற்கும், எமதூதர்களின் தலைமீது கூத்தாடுவதற்கும் இறைநாமம் துணைசெய்வதாக ஆழ்வார் பாடுகின்றார். 'நற்றுணையாவது நாதன்நாமம் நமச்சிவாயவே' என்று அடியார் பாடுவதைக் கருத்தில் கொள்ளலாம். இறைநாமம் உச்சரிக்கும் இடங்களில் முழுமையான இறையாற்றல் நிறைந்திருப்பதுடன், பாவங்கள் தொலைந்து போகும். நன்மையையும் செல்வத்தையும் குறையின்றி வழங்கி, பாவத்தையும் துன்பத்தையும் பழுதறப் போக்கி, மீண்டும் மீண்டும் இம்மண்ணில் பிறப்பெடுத்தலாகிய வினை கழியப்போக்கி இறைநாமம் காத்தருளும்.

இறைநாமம் கேட்டவுடனேயே தன்னை மறந்து, பெற்றோரை மறந்து, ஊரையும் பெயரையும் மறந்து, தனது ஆச்சாரத்தை மறந்து இறைவனுக்கே பித்தனாகித் தாழ்படியும் அடியார்களின் பெருமை பாசுரங்களில் பரக்கப் பேசப்படுவதாகக் காட்டுமிடங்களிலெல்லாம் நூலாசிரியரின் வைணவ இலக்கியப்புலமை தெள்ளிதின் புலனாகின்றது.

ந.சுப்புரெட்டியார் தன்னுடைய நூல்களில் பெரும்பாலும் திருமங்கையாழ்வார் பாசுரங்களை மிகுதியாக எடுத்தாண்டுள்ளார். அவ்வகையில்,

***"குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்***
***படுதுயராயின வெல்லாம்***
***நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்***
***அருளொடு பெருநில மளிக்கும்***
***வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற***
***தாயினு மாயின செய்யும்***
***நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்***
***நாராயண வென்னும் நாமம்"***
***(பெரிய திருமொழி : 956-9)***

என்று திருமங்கையாழ்வார் திருநாமமகிமை பாடும் சிறப்பினைக் காட்டுகின்றார். இவ்வுலகில் களங்கமில்லாத தூய அன்பாகிய தாயின் பரிவை விட மேலான நலத்தைக் கொடுப்பது இறைநாமம்தான் என்று ஆணித்தரமாக உறுதி பகர்கின்றார். இறைவனை வாயால் துதித்துப் பாடி மனதினால் சிந்தித்தால் வினைகள் கழிவதுடன் துன்பங்கள்

தீயினில் தூசாகும் என்று ஆண்டாள் உரைப்பதைத் துணைமைச் சான்றாகக் கையாள்கின்றார்.

பாவக்கடலில் ஊழிக்காலந்தொட்டு ஊறிக்கிடந்த தீயவனாகிய ‘கத்திரபந்து’ என்பவன் மூன்றெழுத்து மந்திரமாகிய ‘கோவிந்தா’ என்னும் திருநாமத்தை உபதேசமாகப் பெற்று உரைத்ததால் மேலான பரமபதத்தைப் பெற்றுய்ந்த செய்தியை ஆழ்வார் குறிப்பிடுகின்றார். இவ்வுலக மக்கள் இழிந்த பிறவிகளில் அகப்பட்டு வருந்துவதிலிருந்து விடுபடுவதற்கு எட்டெழுத்து மந்திரமும், மூன்றெழுத்து மந்திரமும் வழிகாட்டி நிற்கும் என்றும், அடியார்களின் மீது அளவில்லாத அருள் வழங்கக்கூடிய திருவரங்கனைத் தன் இறைவனாகப் பெற்று வழிபடுவதே மேலான புண்ணியம் என்றும் இப்பாசுரம் உணர்த்துகின்றது என்ற ஆசிரியரின் விளக்கம் மனங்கொள்ளத்தக்கது.

***“நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க***
***நரகமே சுவர்க்கமாகும் நாமங்கள் உடைய நம்பி”***

என்ற அடிகளில் இறைநாமம் கேட்டவர்கள் மட்டுமல்ல அத்தீயவர்கள் திரண்டிருந்த நரகமே சொர்க்கமாக மாற்றிவிடும் ஆற்றலும், இப்பெருமையை அறியாதவர்கள் நல்லவர்களாக இருந்தும்கூட நற்கதி அடையமுடியாமல் போனதைக் கண்டு அதற்காகத் தான் வருந்துவதாகவும் ‘பொறியில்வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்து ஒழியுமன்றே’ என்று பாடுகின்றார்.

## பரம்பொருள் ஏற்றம் போற்றுதல்

கம்பநாடன் பேரறிவு பெற்ற பெருங்கவிஞன். ஆதலால் அவன் தான் கண்ட தத்துவ தரிசனங்களையெல்லாம் நன்றாக வடித்தெடுத்துச் சொற்களால் கவிதைகளாகப் புனைந்து நமக்குத் தருகின்றான்; சிறந்த வாழ்க்கைத் தத்துவங்களையும் உணர்த்துகின்றான். “மெய்யறிவு பெற்றிருந்தால்தான் சிறந்த கவிஞனாகத் திகழ முடியும்”. No man was ever a great poet without being at the same time a profound philosopher என்று கோலரிட்ஜ் என்ற ஆங்கில அறிஞன் கூறும் கூற்றினைக் கம்பன் கையாண்டுள்ள பாங்கினை விளக்க வந்த ந.சுப்புரெட்டியார் பிரகலாதன் வாய்மொழியாக, “கவிகளாகுவர் காண்பவர் மெய்ப்பொருள்” (யுத்த., இரணியன் வதை, பா.32) என்ற வாசகத்தைச் சுட்டுகின்றார். கம்பன்தான் இயற்றிய காவியத்தில் இராமனைப் பரம்பொருளாகவே கருதுவான். இக்கருத்தினை அவன் பல இடங்களில் தன் கூற்றாகவும், பிற கதைமாந்தர்களின் வாய்மொழியாகவும் காட்டுவதை,

***“ஒருபகல் உலகெலாம் உதரத்து உட்பொதிந்து***
***அருமறைக் குணர்வரும், அவனை அஞ்சனக்***
***கருமுகில் கொழுந்தொழில் காட்டும் சோதியைத்***
***திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை”***
***(கம்ப., திருவவதாரம், பா.150)***

என்ற பாடலைக் கொண்டு மெய்ப்பிக்கின்றார் நூலாசிரியர்.

அண்டங்களையெல்லாம் தன் வயிற்றில் அடக்கி வைத்துக்கொண்டு இருக்கும் திருமாலைக் கோசலை மகனாகப் பெற்றாள் என்பது கவிஞன் நமக்குக் காட்டும் குறிப்பாகும். இதனையே குலமுறை கிளத்துப் படலத்திலும்,

*"எழுதரிய திருமேனிக்*
*கருங்கடலைச் செங்கனிவாய்க்*
*கவுசலைஎன் பாள்பயந்தாள்"(கம்ப., குலமுறை, பா.20)*

என்று விசுவாமித்திரர் வாக்காகக் கூறுவான். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் முதற்காரணமாகிய இறைவன், இவ்வுலகையே உடலாகக் கொண்டவன் என்பதை உணர்த்துவதற்காகக் கம்பர்,

*"வானின்று இழிந்து வரம்பிகந்த*
*மாபூ தத்தின் வைப்பெங்கும்*
*ஊனும் உயிரும் உணர்வுபோல்*
*உள்ளும் புறனும் உளன்" (கம்ப., அயோத்தி.,காப்பு)*

என்ற பாடலைப் பாடியுள்ளதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இதனை வைணவ தத்துவம் சரீர-சரீரி பாவனை (திருவாய் 24:10) என்று பேசும். இத்தகைய கடவுளை அருமறைகளாலும் அந்தணர்களாலும் நான்முகன் முதலிய தேவர்களாலும் அறிய முடியாது என்பதை ஆரண்ய காண்டத்தின் காப்புச் செய்யுளால் உணர்த்துவான். "புலன் ஐந்திற்கும் சொலப் படான் உணர்வின் மூர்த்தி" என்ற நம்மாழ்வாரின் கருத்திற்கு இ்.து இயைத்திருத்தல் உணரத்தக்கது என்கின்றார் ந.சுப்புரெட்டியார்

ஒவ்வொரு சமயமும் கடவுளை ஒவ்வொரு விதமாகக் கூறும். ஒவ்வொரு சமயத்தினரின் மனப்பான்மைக்கு ஏற்றவாறு 'கடவுள்' என்ற பொருள் விரிந்து விளக்கம் தந்து நிற்கும். இதனைக் கம்பன் தன் கூற்றாக,

*"மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந் திரத்தை முற்றும்*
*தம்மையே தமக்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே*
*இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தென இராமன் என்னும்*
*செம்மைசேர் நாமம் தன்னை"(கம்ப.,வாலிவதை, பா.74)*

என்று இராமநாமத்தின் பெருமையைப் பெருமிதத்துடன் பேசுவான். இங்ஙனம் தற்கூற்றாக இராமனே பரம்பொருள் என்று காட்டும் இடங்கள் பல உண்டு என்கிறார் ஆசிரியர்.

தும்புருத்தன் என்ற திருநாமம் கொண்ட உம்பருலகத்துக் கந்தருவன் குபேரனது சாபத்தால் அரக்கப் பிறவியை அடைந்தவன்

இராமனால் சாபம் நீக்கி இராமனைப் பதினான்கு பாடல்களால் தோத்திரம் செய்கின்றான். இந்தப் பாடல்களில் 'பரம் பொருள் காட்சி' காட்டப் பெறுகின்றது.

***"வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தனநின்***
***பாதங்கள் இவையென்னில் படிவங்கள் எப்படியோ?***
***ஓதங்கொள் கடல்அன்றி ஒன்றினோடு ஒன்றுஒவ்வா***
***பூதங்கள் தொறும்உறைந்தால் அவைஉன்னைப்***
***பொறுக்குமோ"(கம்ப., விராதன்வதை, பா.48)***

என்ற பாடல் பரம்பொருளின் மேன்மையைப் பாடுவதாகக் குறிப்பிட்டுப் பின்வருமாறு விளக்கிச் செல்கின்றார்.

"அருமறைகள் யாவும் அச்சுதனின் திருவடிப் பெருமையையே பேசுவனவாதலால் 'வேதங்கள் அறைகின்ற' என்கின்றான். வேதங்கள் அறைகின்ற பாதங்கள் என்று சேர்த்துப் பொருள் காணல் வேண்டும். நின்பாதங்கள் உலகெங்கும் விரிந்தன என்றது எம்பெருமான் திரிவிக்கிரமாவதாரத்தை ஏறிட்டுக் கொண்டு இப்பூமியை ஓரடியால் அளந்தபோது, அத்திருவடி உலகெங்கும் விரிந்ததை உட்கொண்டு கூறியதாகும். உலகெங்கும் விரிந்தன என்பதால் எம் பெருமானின் 'வியாபகத் தன்மையைக்" கூறியதாகும். 'படிவங்கள் எப்படியோ?' என்றதால் எம்பெருமானின் திருமேனி-திவ்வியமங்கள விக்கிரகம் - இத்தன்மைத்து என்று உத்தேசித்து அறிய முடியாது என்பது பெறப்படுகின்றது. அவன் மனம், மொழி, மெய்களுக்கு எட்டாதவன் என்பது குறிப்பு. 'ஓதங்கொள் கடல் அன்றி' என்பதனால் எம்பெருமானின் 'வியூக நிலை' சுட்டப்பெறுகின்றது. இன்னும் இது தனியே எடுத்துக் கூறப் பெற்றதால், திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது கண் வளர்தலும், பிரளயகாலத்துப் பெருங்கடலில் ஆலிலையில் பள்ளி கொள்ளுதலுமாகிய சிறப்புத் தன்மையைக் காட்டுவனவாகும் எனலாம். பூதங்கள் என்பவை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் (பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்) ஆகியவை. இவை ஒன்றினோடு ஒன்று ஒவ்வா? நிலம் நிலையாயிருத்தலும் கந்தம் உடையதாதலும், குளிர்ந்த உணர்வுடையதாதலும் குறிக்கப் பெறுகின்றது. நெருப்பு-மேல் நோக்கி எரிதலும் சுடும் உணர்ச்சி உடையதாதலும் சுட்டப் பெறுகின்றது. காற்று-பத்துத் திக்குகளிலும் வீசுதலும், உருவமின்றி உணர்வூட்டுதலும் உணர்த்தப் பெறுகின்றது. விசும்பு - எங்கும் பரவியிருத்தலும் சப்த குணமுடையதாதலும் காட்டப் பெறுகின்றது. இவ்வாறு தன்மை வேறுபாடுகள் உடையதாதல் பற்றி 'ஒன்றினோடு ஒன்று ஒவ்வா' என்று சுட்டப்பெற்றன. 'கடல் நீருள்ளான்' என்றவாறு ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றன் வடிவமான கடலில் மாத்திரமேயன்றி ஏனைய பூதங்களிலும் நீ உறைந்தால், "அவை உன்னைப் பொறுக்க வல்லன்" என்பதானால் அவற்றையும் நீ தாங்குகின்றாய் என்பது தோன்றுவதை அறியலாம். 'பூதம்' என்ற சொல்லாற்றலால் விநோதமாகக் காட்டப்பெறும் சடைபூதங்களிலும் புகுந்த மனிதனே அவற்றைத் தாங்கிச்

செலுத்துதல் போல, ஐம் பெரும்பூதங்களிலும் உறைகின்ற நீயே அவற்றைத் தாங்குகின்றாய் என்பது தோன்றுவதைக் காணலாம். 'பூதங்கள் தோறும் உறைந்தால்' என்றதனால் 'அந்தர்யாமித்துவம்' தோன்றுதலும், 'அவை உன்னைப் பொறுக்குமோ' என்றதனால் அனைத்திற்கும் ஆதாரமாதலும் சர்வசக்தித்துவமும் தெரிவிக்கப் பெற்றன என்பதையும் அறிய முடிகின்றது என்ற நீண்ட விளக்கம் நூலாசிரியரின் வைணவ இலக்கியப் புலமையைப் பறைசாற்றுகின்றது. இந்திரன் வாக்காக இராமன் பரம்பொருள் என்று காட்டப் பெறுகின்றான்.

***"தோய்ந்தும் பொருளனைந்தும் தோயாது நின்ற***
***சுடரே தொடக்கறுத்தோர் சுற்றமே பற்றி,***
***நீந்த அரிய நெடுங்கருணைக் கெல்லா***
***நிலையமே! வேத நெறிமுறையின் நேடி***
***ஆய்ந்த உணர்வின் உணர்வே! பகையால்***
***அலைப்புண்டு அடியேம் அடிபோற்ற அந்நாள்***
***ஈந்த வரம்உதவ எய்தினையே! எந்தாய்!***
***இருநிலத்த வோநின் இணையடித் தாமரையாம்"***
***(ஆரணிய - சரபங்கன் பிறப்பு, 27)***

என்ற பாடலுக்கு விளக்கம் கூறும் ந.சுப்புரெட்டியார்,

"எல்லாப் பொருள்களிலும் அந்தர்யாமியாய் எம் பெருமான் கலந்திருத்தலால் 'தோய்ந்தும் பொருளனைத்தும்'' என்கின்றான். அங்ஙனம் கலந்திருக்கும்போதும் அந்தப் பொருள்களின் குணங்கள், குற்றங்கள் எம்பெருமானைத் தொடுவதில்லை. சித்து (உயிர்), அசித்து (உடல்) இவை இரண்டினுள்ளும் அந்தர்யாமியாய் உள்ளான் இறைவன். உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் இப்படித் தோய்ந்தே உள்ளான். எப்படி உள்ளான்? - 'உடல் மிசை உயிர் எனக் கரந்துள்ளான்' (திருவாய் 1-1:7) என்று ஆழ்வார் கூறுவதுபோல். நம் உள்ளத்தில் எம்பெருமான் இருப்பினும் நாம் செய்யும் நல்வினை தீவினைகள் அவனுடன் சம்பந்தப்படுவதில்லை. 'கர்மங்கள் என்னைத் தீண்டோ' (கீதை 4:14) என்பது கண்ணன் கூற்று. முற்றத் துறந்த முனிவர்களின் சுற்றமாக இருப்பவன். இதனைத் 'தொடக்கறுத்தோர் சுற்றமே' என்று குறிப்பிடுகின்றான். எம்பெருமான் கருணை வடிவானவன்; கருணாகரன்; கருணாநிதி; இதனைக் கருத்தில் கொண்டு 'நெடுங்கருணைக்கெல்லாம் நிலையமே' என்கின்றான். எம்பெருமான் தத்துவ ஞானத்தால் அறியப்படுவானாதலால் 'நேர்ந்த நெறிமுறையின் நேடி-ஆய்ந்த உணர்வின் உணர்வே' என்கின்றான். எம்பெருமானுக்கும் (பரமான்மா) சீவான்மாவுக்கும் சொல்லப்பெறும் உறவுகளில் 'தந்தை' தனயன் உறவு - ஒன்றாதலால் 'எந்தாய்' என்கின்றான். தேவர்கள் மேரு மலையிலிருந்து திருப்பாற்கடலில் திருப்பள்ளி கொண்டிருக்கும் பரமனைப் பிரார்த்திக்க காலத்தை நினைந்து 'அந்நாள்' என்கின்றான். 'தசரதன் மதலையாய் வருதும்', 'வருந்தல் வஞ்சகர்தந்தலை அறுத்து இடர்தணிப்பேன்' என்பன போன்ற உறுதி மொழிகளை நினைந்து தந்த வரம் உதவ

எய்தினையே' என்கின்றான். 'நின்னுடைய இணைத்தாமரை அடிகள் அரிய நிலத்தில் பொறுக்கத் தக்கனவோ?' என்று இரங்கிப் போற்றுகின்றான். இப்பாடல்களால் எம்பெருமானின் அந்தர்யாமித்துவம், எம்பெருமான் தத்துவ ஞானத்தால் அறியப்படுபவன், ஆன்மாக்களின் வேண்டுகோளின்படி அல்லல்களைத் தீர்க்கும் பொருட்டு அவதாரம் எடுப்பவன் என்ற பரம்பொருளின் தன்மைகள் காட்டப்பெறுகின்றன" எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும் கவுந்தன் துதியாக வருகின்ற,

***"மூலமே இல்லா முதல்வனே நீளடுத்த***
***கோலமே யாவர்க்கும் தெரிவரிய கொள்கைத்தான்***
***ஆலமோ? ஆலின் அடைவோ? அடைக்கிடந்த***
***பாலனோ? ஆதிப் பரமனோ? பகராயே"(மேற்படி, 43)***

என்ற பாடலை ஆசிரியர் சுட்டிக்காட்டி, 'மூலமே இல்லா முதல்வனே' என்பதால் எம்பெருமானுக்கு முந்திய வேறொரு காரணப் பொருள் இல்லாத முழுமுதற் கடவுள் என்பதும் எல்லாப் பொருள்களும் எம்பெருமானிடமிருந்து தோன்றியவையேயன்றி எம்பெருமான் எவற்றினின்றும் தோன்றாதவன் என்பதும் பெறப்படுகின்றது என்கிறார்.

## தொகுப்புரை

கம்பராமாயணத்தில் நூலாசிரியருக்கு இருந்த பெருவிருப்பத்தையும், ஆழ்வார் பாசுரங்களில் அவர் ஆழங்காற்பட்டுள்ள தன்மையையும் நன்கு அறிய முடிகின்றது. தெளிந்த நடையோட்டமும், காப்பியப் பாடல்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தனித்தன்மை உடைய விளக்கங்களும் மீண்டும் மீண்டும் படித்துச் சுவைக்கத் தூண்டுவதாக அமைந்துள்ளன.




**First Paper:** *என்ன ஆச்சரியம்?* **"Enna Aacharyam !" [1949]**

# ஓர் அறிமுகம்

**பேராசிரியர்**

# ந சுப்பு ரெட்டியார்



Books Published : **135 + 1**
Papers Published : **200** [Tamil 173 + English 27]
Endowments established: **10**
Endowment Lectures : **12**
Awards received: **8**
Prizes won : **14**
Titles conferred : **8**

## Masterpieces:

**1) Tamil Payitrum Murai [1957]**
**2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis ] [1977]**
**3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]**
**4) Vainava Selvam [1995]**

## Financial Aid for publishing the Books:

a ) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

***Research on Professor's Books***

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)



பேராசிரியரின் 135 நூல்களில், தெரிவு செய்யப்பெற்ற
100 நூல்கள் (முழுமையாக)
**http://tinyurl.com/nsr100collections**
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]

# India Book of Records

# CERTIFICATE

## CENTENARY CELEBRATIONS OF PROF DR. N SUBBU REDDIAR

**Prof Dr S Ramalingam (born on 13 Oct 1949) Organizing Secretary, Na Subbu Reddiar 100 Educational Trust, Chennai, Tamil Nadu, has conceived, designed and meticulously executed 108 Centenary Events throughout Tamil Nadu during the Centenary Year (2015-2016) of Prof. Dr. N Subbu Reddiar who served the cause of education for 65 years andwritten 135 books in various fields (100 books after retirement).**

Biswaroop Roy Chowdhury
Chief Editor
India Book of Records

Date: March 19, 2018

*India Book of Records is registered with the Government of India with RNI no. HARENG/2010/32259.*

*India Book of Records is affiliated to Asia Book of Records and follows Asian Protocol of Records (APRs) as per the consensus arrived at the meeting of the Chief Editors of National Record Books, Ho Chi Minh City, Vietnam.*

ISBN: 978-81-938927-8-7

9 788193 892787 >

